# காரணீகம்




## கலாசார விழா சிறப்பு மலர் -2009

பிரதேச கலாசார பேரவை
பிரதேச செயலகம்
காரைதீவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காரைதீவு பிரதேச கலாசார விழா

# 2009

# காரணீகம்

## சிறப்பு மலர்

20 - 08 - 2009

பிரதேச கலாசார பேரவை
பிரதேச செயலகம்
காரைதீவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் விபரம்


| | |
|---|---|
| தலைப்பு | : காரணீகம் |
| வெளியீடு | : கலாசாரப் பேரவை |
| முகவரி | : பிரதேச செயலகம், காரைதீவு |
| பதிப்புரிமை | : பிரதேச செயலகம், காரைதீவு |
| முதற் பதிப்பு | : 20.08.2009 |
| பக்கங்கள் | : 223 + xvi |
| அச்சகம் | : நிதுஸ் பதிப்பகம், காரைதீவு<br>0672250631, 0776051793 |


# BOOK DETAIL


| | |
|---|---|
| Title | : Kaaraneegam |
| Publication | : Cultural Forum |
| Address | : Divisional Secretariat,Karaitivu |
| Copy right | : Divisional Secretariat, Karaitivu |
| First Edition | : 20.08.2009 |
| Pages | : 223 + xvi |
| Printer | : Nethus printers, Karaitivu<br>0672250631, 0776051793 |


இந்நூலில் இடம் பெறும் ஆக்கங்கள் அனைத்துக்கும் ஆக்கியோரே பொறுப்பாவர்

\- மலர்க்குழு -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலரின் இதழ்கள்


| | |
|---|---|
| 1. தமிழ்மொழி வாழ்த்து | i |
| 2. கலாசார விழாக் கீதம் | ii |
| 3. நல்லாசிகள் - வாழ்த்துச் செய்திகள் | iii - xiv |
| 4. கலாசார பேரவை | xv - xvi |
| 5. சுவாமி விபுலானந்த அடிகளாரின் வாழ்க்கைக் குறிப்பு | 01 |
| 6. காரைதீவு நிருவாக அலுவலகங்களின் பரிணாம வளர்ச்சி | 03 |
| 7. பிரதேச செயலகத்தினால் நிறைவேற்றப்படும்........... | 09 |
| 8. சுவாமி நடராஜானந்தா அவர்களின்............... | 15 |
| 9. காரைதீவு பிரதேச ஆட்புலம் - நிருவாக வரலாறு | 16 |
| 10.காரைதீவு பிரதேசத்தில் அபிவிருத்தியும்........ | 20 |
| 11.பண்பை வாழ வைத்த மரபு வழிக் கலாசாரம் | 38 |
| 12.கல்விப் புலத்தில் காரேறுமூதூர் | 40 |
| 13.தமிழ் மகளைப் போற்றி பாடுவோம் | 58 |
| 14.புலம் பெயர்ந்து வாழும் தமிழர்களின் பண்பாடு | 59 |
| 15.வைகாசி குளிர்ச்சி சடங்கு பற்றிய.............. | 63 |
| 16.கடமை | 67 |
| 17.காரைதீவு பிரதேச சடங்குகளும் மரபுகளும் | 73 |
| 18.சித்தானைக்குட்டி சுவாமிகளது வாழ்க்கைச் சுருக்கம் | 80 |
| 19.தமிழ் மொழி வளர்ச்சியிலே............ | 82 |
| 20.கலங்கரை விளக்கம் | 87 |
| 21.விஞ்ஞானத்தை தமிழில்.............. | 88 |
| 22.காரைதீவுப் பிரதேசத்தில் நாட்டுப்புறக் கலை | 94 |
| 23.சீதனம் - கவிதை | 100 |
| 24.காரைதீவின் விவசாயப் பாரம்பரியம் | 101 |
| 25.இசைக் கலையின் ஆதிக்கம்............. | 107 |
| 26.விபுலானந்தர் எப்போது பிறந்தார்? | 110 |
| 27.இணையமும் பிரதேச வளர்ச்சி....... | 134 |
| 28.காரைதீவு விளையாட்டுத் துறை............... | 139 |
| 29.பிரதேச இஸ்லாமிய பண்புகளும் பாரம்பரியங்களும் | 142 |
| 30.தேசம் பூக்கும் நட்சத்திரங்கள் | 146 |
| 31.காரைதீவுப் பிரதேசத்தில் மீன்பிடி.............. | 147 |
| 32.மதுப்பழக்கத்தில்.................. | 149 |
| 33.ஊடகத்துறையில் காரைதீவு | 152 |
| 34.போதையை வெறுப்போம் வாழ்வில் | 155 |
| 35.காரைதீவில் அனர்த்தங்கள் | 156 |
| 36.பாரம்பரிய திருவிழா ஊர்வலம் | 161 |
| 37.பிரதேச சித்த வைத்திய பாரம்பரியம் | 162 |
| 38.காரைதீவு பிரதேசத்தில் இசை வளர்ச்சி | 164 |
| 39.காரைதீவு ஆலயங்களின் வரலாறு | 171 |
| 40.காரைதீவு கல்விக் கூடங்களின் வரலாறு | 194 |
| 41.காரைதீவுப் பிரதேச வைத்தியசாலை | 210 |
| 42.காரைதீவு அஞ்சல் அலுவலகம் | 212 |
| 43.சுவாமி விபுலானந்தர் பணிமன்றம் | 214 |
| 44.இ.கி.மி.சாரதா மகளிர் இல்லம் | 216 |
| 45.மக்கள் வங்கி | 221 |
| 46.நன்றி நவிலல் | 223 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மொழி வாழ்த்து

இராகம் - மாண்டு            தாளம் - ஆதி

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ் மொழி
வாழிய வாழியவே!
வான மளந்த தனைத்தும் அளந்திடு
வண்மொழி வாழியவே!

ஏழ்கடல் வைப்பினும் தன்மணம் வீசி
இசை கொண்டு வாழியவே!
எங்கள் தமிழ் மொழி எங்கள் தமிழ் மொழி
என்றென்றும் வாழியவே!

சூழ்கலி நீங்கத் தமிழ் மொழி ஓங்கத்
துலங்குக வையகமே!
தொல்லை வினைதரு தொல்லை யகன்று
சுடர்க தமிழ் நாடே!

வாழ்க தமிழ் மொழி வாழ்க தமிழ் மொழி
வாழ்க தமிழ் மொழியே!
வானம் அறிந்த தனைத்தும் அறிந்து
வளர் மொழி வாழியவே!

- பாரதியார் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலாசார விழாக் கீதம்

ஆக்கம்: கலாபூசணம் இரா.கிருஷ்ணபிள்ளை
இசை வடிவம்: திருமதி. புவனேஸ்வரி ஜயகணேஸ்
இராகம் : வலஜி தாளம் : ஏகம்

வாழ்க தமிழரும் வாசமாய் முஸ்லீமும்
வாழ்க என்றும் வளமுடன் வாழியவே
வீழ்க வேற்றுமை விளங்குக ஒற்றுமை
சூழ்க இன்பம் சுடர்வீச வாழியவே

இந்து கிஸ்தவம் இஸ்லாமும் இணைந்து
சிந்து பாடிடும் பிரதேச செயலகம்
முந்தி இருந்து முதன்மை பெற்றிட
வந்து இறையும் வாழ்த்திட வேண்டுமே

ஊரும் உயர்த்தும் கலைஞரும் மக்களும்
பேரும் விளங்க பெருவிழா எடுத்து
வேரும் அறிந்திட விருதுகள் வழங்கும்
காரைதீவு பிரதேச செயலகம் வாழியவே

உன்னத டாக்டரும் உயர் பொறியியலாளரும்
மாண்புறு ஆசானும் முகாமைத்துவாளரும் உழவரும்
அன்பான கொத்தரும் மீனவரும் தச்சரும்
நன்றாகத் தாதியரும் நலமோங்க வாழ்த்துவோம்

கோலாட்டம், கொம்பு, வசந்தன், கும்மி
கரகாட்டம், நாட்டுக்கூத்து, காவடி அனைத்தும்
தரமாகத் தந்திடும் தாயகப் பூமியை
வரமாகப் பெற்றதை வாயார வாழ்த்துவோம்

மண்ணில் மலரும் மாளிகைக் காட்டையும்
பண்பில் உயரும் மாவடிப் பள்ளியையும்
கண்ணில் கல்வியை காக்கும் காரைதீவையும்
எண்ணி இதயம் இனிதாய் வாழ்த்துவோம்

அயராத உழைப்பும் ஆட்சித் திறமையும்
தயாரான திட்டமும் திறமையுள்ள தலைமையும்
உரமாகக் கொண்ட உயர்வான காரைதீவு
பிரதேச செயலகம் பெருமையுற வாழ்த்திடுவோம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சுவாமிகளிடமிருந்து நல்லாசிகள்

காரைதீவு பிரதேச செயலக கலாசார பேரவையானது நடாத்தவிருக்கும் கலாசார விழாவும், அதனையொட்டி இடம் பெறும் மலர் வெளியீடும் பாராட்டத்தக்க நிகழ்வுகளாகும்.

இத்தகைய நிகழ்வுகள் மக்களின் கலை, கலாசாரம் விழிப்புற்று விளங்க தூண்டுகோலாய் அமையும். ஒரு சமுதாயத்தின் பெருமையை எடுத்துக் கூறும் முக்கிய அடையாளங்களாக விளங்குவது அச்சமுதாயத்தின் கலாசார விழுமியங்களாகும்.

கலாசாரமும், பண்பாடும் ஓர் சமூகத்தின் அத்திபாரமாக விளங்குவதுடன் அவையே ஒரு சமூகத்தின் அந்தஸ்தினை எடுத்தியம்பும் அடையாளமாகவும் விளங்குகின்றன. நமது சமூகத்தின் கலாசாரம் உறுதியான ஆன்மீக விழுமியங்களை அடிப்படையாகக் கொண்டதாகும். அத்தகைய விழுமியங்கள் இது போன்ற விழாக்களின் மூலமே பரந்த அளவில் வலியுறுத்தப்படுகின்றன.

பிரதேசத்தின் வரலாறு, கோயில்கள் பற்றிய ஆய்வு, நாட்டாரியல், பாடசாலை மாணவர்களது ஆக்கங்கள் மற்றும் பிரதேச கலைஞர்களது சிறுகதை, கவிதை போன்ற பல்வேறு புதிய கலை, பண்பாட்டம்சங்களை இந்நூல் தாங்கி வெளிவருவது சிறப்பம்சமாகும்.

கலாசாரபேரவையின் கலாசார விழாவும், மலர் வெளியீடும் சிறப்புற நடந்தேறவும். இந்நிகழ்வுகளோடு தொடர்புடைய அனைவருக்கும் சகல நலன்களும் பெருகவும் பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ண தேவரின் பேரருள் வேண்டிப் பிரார்த்தித்து ஆசி கூறுகின்றோம்.

இறைபணியில்,
சுவாமி
அஜராத்மானந்தா
இராமகிருஷ்ண மிஷன்
மட்டக்களப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆசிச் செய்தி

காரைதீவு பிரதேச செயலகமும், அதனோடிணைந்த கலாசாரப் பேரவையும், பிரதேச கலாசார விழுமியங்களையும், பிரதேசத் தகவல்களையும் ஆவணப்படுத்தும் வகையில் 'கலாசார விழாவில்' வெளியிடும் இந்நூலுக்கு ஆசிச் செய்தி வழங்குவதில் பேருவகையடைகின்றேன்.

ஆண்டாண்டு காலம் தமிழ், முஸ்லிம் மக்கள் மிகவும் நெருங்கிய தொடர்புடன் வாழ்ந்து வந்த, வருகின்ற இரு பிரதேசமாக காரைதீவு பிரதேச செயலகப் பிரதேசம் மிளிர்கின்றன. இரு சமூகங்களை பிரதிநிதித்துவப்படுத்தி இயங்கும் ஒரு பிரதேச செயலகம் குறுகிய காலப் பகுதிக்குள் ஒரு சமூகங்களினதும் நன்மதிப்பையும், மரியாதையையும் பெற்றிருக்கின்றது. அந்த வகையில் முன்னுதாரணமிக்க ஒரு பிரதேச செயலகம் என காரைதீவு பிரதேச செயலகத்தை அச்சமின்றி நாம் குறிப்பிடலாம்.

சுனாமியின் பின்னரான அபிவிருத்தித் திட்டங்களையும், மீள்கட்டுமான செயற்பாடுகளையும் நடைமுறைப்படுத்தியதில்கூட பாரபட்சமற்ற முறையிலும், தமிழ், முஸ்லிம் உறவுகளை மேலும் கட்டியெழுப்பும் வகையிலும் நீதியாகவும், நேர்மையாகவும் திறமையுடன் செயலாற்றிய காரைதீவு பிரதேச செயலாளர் திரு.எஸ்.இராமகிருஷ்ணன் ஐயா, உதவிப் பிரதேச செயலாளர், மற்றும் கடமையாற்றும் அனைத்து ஊழியர்களும் இங்கு பாராட்டிக் கௌரவிக்கப்பட வேண்டியவர்கள்.

அனைவரது முறைப்பாடுகளையும் அழகிய முறையில் அணுகி, மனம்கோணாது விளக்கங்கள் தந்து பரிகாரம் காணும் பிரதேச செயலாளரைக் குறிப்பாக மக்கள் என்றுமே மறக்க முடியாது.

இவ்வாறு பிரதேச மக்களின் நன்மதிப்பைப் பெற்றுத் திகழ்கின்ற காரைதீவு பிரதேச செயலகம் பிரதேச கலாசார விழுமியங்களையும் கவனத்திற்கொண்டு கலாசார விழாவொன்றினை ஏற்பாடு செய்துள்ளமை போற்றப்பட வேண்டியது. இவ்விழா சிறப்புற நடைபெற்று சமூக, பொருளாதார அபிவிருத்திகளிலும் ஒரு புதிய அத்தியாயத்தை ஆரம்பிக்க எல்லோருக்கும் பொதுவான இறைவன் அருள்பாலிப்பானாக.

மௌலவி.அபூபக்கர் கலிலுல் ரஹ்மான்
அந்நூர் ஜும்மா பள்ளிவாசல்
மாளிகைக்காடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பிரதேச செயலரின் செய்தி

எமது அலுவலகம் ஆரம்ப நாட்களில் இருந்து எத்தனையோ சேவைகள் திட்டங்கள், விளையாட்டுப்போட்டிகள் சமூகப்பணிகள் எனப் பல துறைகளிலும் சாதனையுடன் கூடிய பெறுபேறுகளை பெற்று வந்த போதும் கலாச்சாரம் சம்பந்தமான ஒரு விழாவினை எடுக்கமுடியாமல் போனது துரதிஷ்டவசமானதே.

தற்போது எமது நீண்டபயணத்தின் முயற்சிகள் கைகூடிவந்த மனநிறைவோடும், மகிழ்சியோடும் இந்த முகவுரையை முன்வைக்கவிரும்புகிறேன். கலாசாரவிழாவானது ஆரம்பகாலத்தில் அதற்கான ஒரு உத்தியோகத்தர் இல்லாத காரணத்தாலும் பின்னர் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை யுத்தம், சுனாமி போன்ற அனர்த்தங்கள் காரணமாகவும் கைகூடாமல் போனதற்கான காரணங்கள் இருந்தன,

ஆயினும் அவ்வப்போது இப்பிரதேச கலைஞர்கள், புத்திஜிவிகள் போன்றோரை அழைத்து இவ்விழாவினை நடாத்த வேண்டிய அவசியத்தை உணர்த்தியபோதும் மேலே கூறப்பட்ட காரணங்களால் அவை கைகூடவில்லை. இந்த வருடம் மாவட்ட மட்டத்தில் நடத்தப்பட்ட கலாசார விழாவானது, எந்தவகையிலாவது இவ்விழாவினை நடாத்த வேண்டும் என்ற ஒரு உந்து சக்தியை எமக்கு உருவாக்கியது.

அன்று தொடக்கம் இந்த விழாவிற்கான ஆரம்ப முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு பல வேலைப்பழுக்களுக்கு மத்தியிலும் அலுவலக உத்தியோகத்தர்களின் கூட்டத்தில் இவ்விழாவை இம்முறை நடாத்த வேண்டும் என்ற பிரேரனை முன்வைக்கப்பட்டு நிறைவேறியது.அன்றிலிருந்து அதற்கான குழுக்கள் அமைக்கப்பட்டு அலுவலக உத்தியோகத்தர்களும் எமது பிரதேச கலைஞர்கள் மற்றும் ஆர்வலர்கள் சேர்ந்த ஒரு கூட்டுக்குழுவாக அது விஸ்தரிக்கப்பட்டு தனது கடமைகளை அது செவ்வனே செய்து இன்று அதனுடைய அறுவடையை செய்யவேண்டிய நேரத்தில் உள்ளோம்.

கலசார நிகழ்வுகளுக்கு அப்பாலும் சென்று எமது பிரதேச வரலாறு மற்றும் அதனோடு இணைந்த சடங்குகள் மரபுகள், விழுமியங்கள் போன்றவற்றையும் உள்ளடக்கும் விதத்தில் வரலாற்றுப்பதிவாக ஒரு நூலை வெளியிடுவது என்ற எமது முயற்சி இன்று கைகூடியுள்ளது. இதனை இவ்வாறு வெளியிடுவதற்கு இருந்த நிதி மற்றும் மலருக்கான ஆக்கங்கள் அவற்றை உள்வாங்கி ஒழுங்கு படுத்தல் போன்ற வேலைகளில் இருந்த கஷ்டங்கள் எல்லாம் எமது உதவிப்பிரதேச செயலாளர் சி.ஜெகராஜன், மற்றும் மலர்குழு உறுப்பினர்கள் கலாச்சார உத்தியோகத்தர், முகாமைத்துவ உதவியாளர் போன்றவர்களின் அர்ப்பணிப்புடனான சேவையால் மலைபோல வந்த பிரச்சனைகள் பனிபோல மறைந்ததை அனுபவபூர்வமாக உணரமுடிந்தது.

எமது மண்ணின் கலைஞர்களை கௌரவிப்பதில் நாங்கள் பலத்த சவால்களை எதிர்நோக்கவேண்டியிருந்தது. ஒவ்வொருதுறையிலும் பலர் இருந்ததினாலும் இது முதல் விழாவாக இருக்கின்ற காரணத்தாலும் அவர்களது நிகழ்கால சேவை மற்றும் வயது போன்ற பல பிரமாண அடிப்படை அளவுகோல்களை பயன்படுத்தி 17 பேரை தெரிவுசெய்தோம் மேலும் எமது பிரதேசத்துக்கு சேவைசெய்த இன்னும் 17 பேரை கிராமசேவகர் பிரிவு ரீதியாகவும் தேர்வு செய்து கௌரவிக்க ஏற்பாடு செய்துள்ளோம். எமது பாரம்பரிய கலைகளான நாட்டுக்கூத்து நவீன நாட்டுக்கூத்து, பரதம், கிராமிய நடனம், வில்லுப்பாட்டு, பாரம்பரிய இசை, நவீன இசை, போன்ற நிகழ்வுகளை விழாவில் அரங்கேற்றவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

எங்களது எல்லா முயற்சிகளிலும் எங்களோடு தோளோடு தோள்கொடுத்து உதவிய கலாசார பேரவை உறுப்பினர்கள், அலுவலக உத்தியோகத்தர்கள், பணஉதவி நல்கிய அன்பு நெஞ்சங்கள் எல்லோர்க்கும் நன்றி தெரிவித்துக்கொள்வதோடு அவர்களுக்கு இறைவன் நல்ல வாழ்வையும் சுகத்தையும் வழங்க பிரார்த்தித்து இவ்வுரையை நிறைவு செய்கின்றேன்.

செ.இராமகிருஷ்ணன் (M.A)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச் செய்தி



முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்தர், சுவாமி நடராஜானந்தர் போன்றோர் அவதரித்த மண் முத்தமிழும், செறிந்து, பரந்து விரிந்து செழிப்புறும் புண்ணிய பூமி, கற்பின் கனலாம் கண்ணகித்தாய் எழுந்தருளி அருள்பாலிக்கும் ஊர், நற்றமிழ்ப் பண்டிதர்கள், பிறந்து, வாழ்ந்து, தமிழைத் தரணியெங்கும் பரப்பிக் கொண்டிருக்கின்ற, கிழக்கிலங்கையில் புகழ் பூத்த இடம், என்றெல்லாம் புகழ்பெற்ற காரைதீவில் சாஹித்திய பெருவிழா நடைபெற இருப்பது கண்டு மட்டில்லா மகிழ்ச்சியடைந்தேன்.

மருதமும், நெய்தலும் கலந்து, உழவுத்தொழிலும், மீன்பிடித்தொழிலும் சிறப்புற்றோங்கும் காரைதீவிலே மக்களை ஒருங்கிணைத்து காரைதீவு பிரதேச செயலகம் இவ்விழாவினையொட்டி வெளியிட இருக்கும் சாஹித்திய விழாச் சிறப்பு மலருக்கு ஆசியுரை வழங்குவதில் பெருமைப்படுவதுடன் இம்மண்ணில் அவதரித்த முத்தமிழ் வித்தகருக்குச் செய்யும் பெருங்கைங்கரியம் என்பது எனது அபிப்பிராயமாகும்.

இயல், இசை, நாடகம் எனும் முத்தமிழுடன் பல்வேறு இலக்கிய கர்த்தாக்களும் இவ்விழாவின் போது சிறப்பிக்கப்படயிருப்பதும் சாஹித்திய விழாவின் மற்றும் ஓர் சிறப்பம்சமாகும்.

இப்பெருவிழா தமிழ் உணர்வையும் அறிவையும் நம்முன்னோர்களின் இலக்கிய உணர்வுகளையும் மக்கள் மனங்களில் பரப்பி தெளிவான மனோபலத்தை அளிக்க வேண்டும் என வாழ்த்துவதுடன் சாஹித்திய பெருவிழா இனிதே நடந்து நிறைவுபெற எனது நல்லாசிகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இனியபாரதி
(கு.புஸ்பகுமார்)
மேன்மை தங்கிய ஜனாதிபதி
அவர்களின் அம்பாறை மாவட்ட
இணைப்பாளர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அரசாங்க அதிபரின் வாழ்த்துச் செய்தி



அம்பாறை மாவட்டத்தின் காரைதீவு பிரதேச செயலகத்தினால் நடாத்தப்படும் பிரதேச சாஹித்திய விழா 2009க்கான வாழ்த்துச் செய்தியை வெளியிடுவதில் பேருவகையடைகின்றேன்.

மானிடவர்க்கம் பல்வேறு ஆற்றல்களையும், திறமைகளையும் கொண்டுள்ளது. அவைகள் அவ்வப்போது புடம்போடப்படுகின்ற களமாகவும், புத்துணர்ச்சி பெறுகின்ற மேடையாகவும் இச்சாஹித்திய விழாவைக் காண்கின்றேன்.

நீண்ட காலமாக மானிடவர்க்கம் புரிந்த கண்ணியமான சேவைகளை கௌரவப்படுத்துகின்ற ஊடகமாகவும் இப்பெருவிழாவைக் காண்கின்றேன். அவர்களைக் கௌரவப்படுத்துகின்ற அதேவேளை எதிர்கால கலைகலாசார திறமையாளர்களையும், படைப்பாளிகளையும் உருவாக்கி விடப்படுகின்றது.

காரைதீவுப் பிரதேசம் சுவாமி விபுலானந்த அடிகளால் உலகிற்கு எடுத்துக்காட்டப்பட்ட பிரதேசம். கலைவளமும், நிலவளமும் ஒருங்கே அமையப்பெற்று இரு இனங்கள் ஒன்றாக வாழும் அற்புதமான அமைதிப்பூமி அது.

இப்பிரதேசத்தின் மூத்த நிருவாக அதிகாரி திரு.எஸ்.இராமகிருஷ்ணனின் திறமைக்கும், அனுபவத்திற்கும் இச்சாஹித்திய விழா ஒரு நற்சாட்சியாகும்.

இங்கு வாழும் மக்கள் இனவன்முறை, மற்றும் சுனாமியால் பூரணமாக பாதிக்கப்பட்டவர்கள். உடல், உள ரீதியாக பாதிக்கப்பட்டவர்களுக்கு இப்படியான சாஹித்திய விழாக்கள் மகிழ்ச்சியைப் பெற்றுக் கொடுப்பதுடன், இன உறவுக்கும் பாலம் அமைக்கும் என்பதில் சந்தேகமில்லை. எனவே, இவ்விழா சீரும், சிறப்புடனும் நடைபெற ஆசிக்கின்றேன்.

சுனில் கன்னங்கர,
அரசாங்க அதிபர்,
அம்பாறை மாவட்டம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மேலதிக அரசாங்க அதிபரின் வாழ்த்துச் செய்தி

ஒரு நல்ல சமூகத்தை உருவாக்குவதற்காக சாஹித்தியங்களை வளர்ப்பது அனைத்து மனித சமூகங்களுக்கும் முக்கியமானதாகும். அவ்வாறான படைப்பாளிகளை சாஹித்திய விழாக்களின் ஊடாக அடையாளம் காண்பதுடன் அவர்களுடைய படைப்பாற்றலை அனைத்து சமூகங்களுக்கும் தெரியப்படுத்துவதற்கு அரிய சந்தர்ப்பம் இதனூடாக கிடைக்கின்றது.

இதற்கு முன்னோடியாக மாவட்டத்தின் முதுப்பெரும் பிரதேசமான காரைதீவில் தமிழ், முஸ்லிம் சமூங்கள் ஒன்றிணைந்து இப்பெருவிழாவை எடுப்பது காலத்தின் கட்டாய தேவையாகும். இது இன்றைய காலகட்டத்தில் மிகவும் பெறுமதிமிக்கதாக அமையும் என்பதில் சந்தேகமில்லை.

இது அவ்வவ் இனங்களுக்குள் இருக்கின்ற கலாசார, சமூக, பொருளாதார மற்றும் சமய, சமூகத்தன்மைகளை ஒன்றுபடுத்தி தேசிய ஒற்றுமைக்கு வழிகாட்டக்கூடியதாக அமையுமென நம்புகின்றேன்.

இவ்வாறான அரியபெறுமதிமிக்க விழாவை நடாத்தும் பிரதேச செயலாளர் திரு.எஸ்.இராமகிருஷ்ணன் அவர்களை வாழ்த்துவதோடு, இம்மலருக்கு ஆசி தெரிவிப் பதிலும் பேருவகையடைகின்றேன்.

கலை என்பது வாழ்க்கை, வாழ்வது ஒரு கலை இத்தகைய கலையின் வெளிப்பாடாக இவ்விழாக்கள் கொண்டாடப்படுவதுடன் படைப்பாளிகள் கௌரவிக்கப்படுவதும் வரலாற்று நிகழ்வுகள் எனலாம். இவ்விழா சிறப்புற அமைய வாழ்த்துகின்றேன்.

ஜே.எஸ்.டி.எம்.அசங்க அபேவர்த்தன.
மேலதிக அரசாங்க அதிபர்,
அம்பாறை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பாராளுமன்ற உறுப்பினரின் வாழ்த்துச் செய்தி

இம்மண்ணில் முதன்முறையாக நடைபெறுகின்ற சாஹித்தியவிழா மலருக்கு இவ்வூரில் பிறந்தவன் என்ற வகையில் வாழ்த்துச் செய்தியை வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

வித்தகர் விபுலானந்த அடிகளாரால் உலகறிந்த காரைதீவு கிராமத்தில் இரு இனங்களும் சகோதர வஞ்சையோடு ஒற்றுமையாக வாழ்கின்ற கல்வியூராகும்.

கற்றறிந்தவர்கள் நிறைந்த இம்மண்ணில் படைப்பாளிகளைக் கௌரவிக்கவும், கலைகளை ஊக்குவிக்கவும் எடுக்கின்ற கன்னி சாஹித்தியவிழா நடைபெறுவது மிகவும் பொருத்தமானதே.

அவ்வகையில் இம்முதலாவது சாஹித்திய விழாவானது எனக்கு மட்டுமன்றி இப்பிரதேச மக்கள் மனங்களிலும் வரலாற்று நிகழ்வாகப்பதியும் வாய்ப்புண்டு.

காரைதீவின் மூத்த நிருவாகி எனது நண்பர் திரு.எஸ்.இராமகிருஷ்ணன் *(D.S)* அவர்கள் எடுத்த முயற்சிகளுக்கு பாராட்டு கூறுவதோடு. இவ்விழா சிறப்பாக நடைபெற வாழ்த்துக் கூறுகின்றேன்.

**கனகசபை பத்மநாதன்,**
கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்
திகாமடுல்ல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச் செய்தி

காரைதீவின் வரலாற்றில் தடம் பதிக்கும் கன்னி கலாசார விழாவிற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பேருவகை அடைகின்றேன்.

பன்னெடுங்காலமாக தன் தனித்துவத்தை இழந்து நிற்கும் இனக்குழுமம் தன் இன அடையாளத்தை வெளிக்காட்டும் வகையில் தமது கலை, கலாசார பாரம்பரியங்கள், விழுமியங்கள் காலவோட்டத்தில் மறைந்து மடியாது புத்துயிர்ப்பு பெற இக்கலாசார விழாவை நடாத்துகிறது.

எம்முன்னோர்கள் பேணி வளர்த்த கலைகளை எதிர்கால சந்ததிக்காக அழியாது பாதுகாத்து புதிய பரம்பரையிடம் கையளிப்பது எமது கடமையென உணர்ந்து கலைச்சமூகம் இவ்விழாவை எடுப்பது குறித்து வாழ்த்துகின்றேன்.

இதற்கு அப்பால் இம்மண்ணில் கலைகலாசார பாரம்பரியங்களை ஆவணமாக்கும் "காரணீகம்" சிறப்பு நூல் வெளியீடு இவ்விழாவிற்கு அணி சேர்க்கிறது. மேலும், இவற்றுக்கு தம்மை அர்ப்பணித்த சான்றோர் கௌரவிக்கப்படுவதும் சிறப்பம்சமாகும்.

காரைதீவு ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க ஊர். அந்த புனித மண்ணின் கன்னி கலாசார விழா சிறப்புற வாழ்த்துகின்றேன்.

**வீ.கிருஷ்ணமூர்த்தி,**
தேசிய நல்லிணக்க அமைச்சின்
அம்பாறை மாவட்ட இணைப்பாளரும்,
காரைதீவு பிரதேச சபையின் உப தவிசாளரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பிரதேச சபை தவிசாளரின் வாழ்த்துச் செய்தி

காரைதீவுப் பிரதேச செயலக கலாசார பேரவையும், ஊர்மக்களும் இணைந்து நடாத்தும் கலாசார சாஹித்திய விழா – 2009 மலருக்கு வாழ்த்து செய்தி வழங்குவதில் பேருவகையடைகின்றேன்.

காரைதீவின் இரு கண்களாக பிரதேச செயலகமும், பிரதேச சபையும் விளங்குகின்றன. அதில் பிரதேச சபையின் கன்னித் தவிசாளர் என்ற வகையில் இங்குநடை பெறும் கன்னி சாஹித்திய விழாவிற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதென்பது மட்டில்லா மகிழ்ச்சியளிக்கிறது.


காரேறு மூதூர் என அழைக்கப்படும் காரைதீவு தாய் மண் கலைவளமும், கல்விவளமும் நிறைந்த ஊர். இங்கு கலாசார பாரம்பரிய கலைப்பண்பாட்டு விழுமியங்களுக்குக் குறைவில்லை.

வித்தகன் விபுலானந்த அடிகளாரை ஈன்ற இப்புண்ணிய பூமியில் கலை, கலாசாரத்திற்கும், சமூக சேவைக்கும் தங்களை அர்ப்பணித்த பெருமக்கள் பாராட்டப்படுவது உண்மையில் பாராட்டுக்குரியது. அதுமட்டுமல்ல, காரைதீவின் வரலாற்றைத் தாங்கும் இவ்வரலாற்று ஆவணம் காலத்தால் அழியாதது.


எனவே. தமிழன்னையை நினைந்தவனாக கலாசார விழா சிறக்க வாழ்த்துகின்றேன்

நடராசா ஜீவராஜா.
கௌரவ தவிசாளர்
பிரதேச சபை
காரைதீவு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கலாசாரப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி



காரைதீவு பிரதேச செயலகமும், கலாசாரப் பேரவையும் இணைந்து நடாத்த இருக்கும் கலாசார விழாவும், நூல் வெளியீடும் சிறக்க எனது நல்வாழ்த்துக்களை இதயசுத்தியுடன் தெரிவித்துக் கொள்வதுடன்,

'விபுலானந்தர்' எனும் முத்தமிழ் வித்தகர் பிறந்த தமிழ் மணம் கமழும் மேன்மை கொண்ட கிராமத்தில் இருந்து வெளிவர இருக்கும் நூலானது நிச்சயம் தமிழ் புரவலர்களதும், அறிஞர்களதும், கலைஞர்களதும் தமிழ் தாகத்தையும், பசியையும் தணிக்கும் என்பது எமது எதிர்பார்ப்பு.

சொல்லிலடங்கா புகழ்பூத்து பிரசவிக்கும் உங்களது விழாவும், ஆக்கச் செயற் பாடுகளும், ஆவண அம்சங்களும் சிறப்புடன் விளைவுபெற அதற்கு உறுதுணையாக நின்றுழைத்த அனைத்து கலை உள்ளங்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்வதில் பெரு மகிழ்வடைகின்றேன்.

உங்கள் எண்ணம் உயர்வு பெறுக.

டீ.டப்ளியு.யு.வெலிகல,
பணிப்பாளர்,
பண்பாட்டலுவல்கள் திணைக்களம்,
கல்வி அமைச்சு,
கிழக்கு மாகாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விழா இணைப்பாளரின் இதயத்திலிருந்து...

செம்மையான வரலாற்றையும் சிறந்த கலசார விழுமியங்களையும் கொண்ட காரைதீவு மண்ணிலே, பிரதேசத்திற்கான கலாசார விழா நடாத்தப்படாதமையானது நீண்ட காலமாக ஒரு குறையாக இருந்து வந்துள்ளது.

இந்நிலையிலே காரைதீவுப் பிரதேச கலாசாரப் பேரவையானது பிரதேச நன்மக்களின் பேராதரவுடன் இக்குறையினை நிவர்த்திக்கின்ற வகையிலே கலாசாரப் பெருவிழா ஒன்றினை நடாத்தக் காலம் கைகூடிய வேளையிலே உதவிப்பிரதேச செயலாளர் என்ற வகையில் விழா ஒருங்கமைத்தலிலே ஈடுபட எனக்குக் கிடைத்த சந்தர்ப்பத்திற்காக எல்லோருக்கும் பொதுவான இறைவனுக்கும் எனது வணக்கங்கள்.

இவ்விழா ஒருங்கமைப்பில் பெரும்பான்மைப் பணிகளை என்னை நம்பி ஒப்படைத்த எனது பேரன்பிற்கும் மரியாதைக்குமுரிய எமது பிரதேச செயலாளர் திரு.செ.இராமகிருஷ்ணன் அவர்களிற்கு இத்தருணத்தில் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதுடன் இப்பணியினை மேற்கொள்ளும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் வேலைப்பழுக்களின் மத்தியிலும் ஆர்வமுடனும் மிகுந்த அக்கறையுடனும் ஆலோசனைகளையும் பிரச்சினைகளிற்கான தகுந்த தீர்வினையும் பெற்றுத்தந்தமைக்காக விசேட நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மேலும், இக்கன்னி விழாவினையொட்டி ஒரு நினைவு மலரினை வெளியிட முடிவு செய்யப்பட்டு அப்பணியினை மேற்கொள்ளப் பொருத்தமான மலர்க்குழு இணைப்பாளராகத் திரு.வி.ரி.சகாதேவராஜா,உதவிக் கல்விப்பணிப்பாளர் தேர்ந்தெடுக்கப்பட்ட கணம்முதல் நூலாக்கப் பணியினைத் தனது சொந்தப்பணியாகச் செய்து முடித்தமைக்காக அவருக்கும் அவருடன் உழைத்த குழுவினருக்கும் பிரதேச செயலகத்தின் சார்பில் எனது மனமார்ந்த நன்றிகளினை தெரிவிக்கக் கடமைப்பட்டவனாகின்றேன்.

காரைதீவுச் சமூகத்தில் மேம்பட்டு மண்ணிற்குப் பெருமையீட்டித் தந்தவர்களையும் கிராம மட்டங்களில் பல்வேறு சமூகப்பணிகளைச் செய்து வருகின்ற பெருமக்களையும் மண்ணின் சார்பில் கௌரவிப்பதன் மூலம் இவ்விழாவிற்குப் பெருமை சேர்த்துள்ளதுடன் இப்பணியினை எதிர்காலத்திலும் செய்ய உத்தேசித்துள்ளோம். அந்தவகையில் அத்தகைய பெருமைபெற்றோரைத் தேர்ந்தெடுப்பதில் எமக்கு ஒத்துழைப்பு வழங்கிய தெரிவுக்குவினருக்கு இந்த நேரத்தில் எனது நன்றிகளினைக் காணிக்கையாக்குகின்றேன. தவிரவும் விழாவிற்குத் தேவையான நிதியினைத் திரட்டித் தந்த நிதிக்குழுவினருக்கும் அவர்கள் நாடிய போது நிதிவழங்கிய அத்தனை அன்பு நெஞ்சங்களுக்கும் எமது நன்றிகள் உரித்தாகட்டும்.

இவை தவிரவும் விழாவினை ஒருங்கிணைக்க உதவிய விழாக்குழுவினர்கள் கல்விமான்கள்,கலைஞர்கள் மாணவ மாணவியர்,நிதுஸ் அச்சகத்தார்,பிரதேச செயலக சணச அங்கத்தவர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் எமது மனங்களிக்கும் நன்றிகள்.

ஒரு கலாசார விழாவினை ஒருங்கிணைத்தல் என்பது மிகுந்த சிரமங்கள் நிறைந்தது என்ற போதிலும் எமது பிரதேச செயலக ஊழியர்களும் பிரதேச கலாசாரசபை அங்கத்தவர்களும தந்த நல்லாதரவு இப்பணியினைத் திறம்பட மேற்கொள்ள உந்து சக்தியாக எமக்குத் திகழ்நதது. உங்கள் நல்லாதரவினை தொடர்ந்தும் எதிர்பார்த்து நன்றிகளுடன்

சி.ஜெகராஜன்
விழா இணைப்பாளர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மலர்க்குழு இணைப்பாளரின் அகத்திலிருந்து..

இவ் வித்திய மண்ணில் முதல்முறையாக நடைபெறுகின்ற கலாசார விழாவையொட்டி மலருகின்ற வரலாற்று ஆவண நூலுக்கு இணைப்பாளராகவிருந்து இச்செய்தியை வழங்குவதில் பேருவகையடைகின்றேன்.

வரலாறு என்பது ஒரு நாட்டின் அல்லது சமுதாயத்தின் கடந்த கால பாரம்பரியத்தினை எடுத்துக்காட்டி இன்றைய வாழ்க்கைப் போக்கினை வளம்படுத்த உதவுவதோடு வருங்காலசந்ததியினரின் எண்ணக்கோலங்களை வளம்படுத்த உதவும். எனவே ஒவ்வொரு சமுதாயத்தினதும் வரலாற்றினை ஆவணப்படுத்துதல் மிக அவசியமாகும். வரலாறு இல்லாத சமுதாயம் நாடோடிச் சமுதாயத்திற்கு ஒப்பானதாகும்.

காரைதீவுக்கென தனித்துவமான வரலாறு உண்டு. முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளார் உலகில் காரைதீவுக்கென தனி முகவரியைப் பெற்றுத் தந்தவர். காவற்தெய்வமாம் கற்புக்கரசி கண்ணகை அம்பாளின் அருட்கடாட்சமும் காரையூரின் தனிச்சிறப்பை எடுத்துக்காட்டுகிறதெனலாம்.

இம் மலர் கன்னி கலாசார விழாவையொட்டிய மலராக இருந்தபோதிலும் காரைதீவின் நீண்டகால வரலாற்றுத் தேவையொன்றை ஓரளாவது ஆவணப்படுத்துகின்ற நூலாக இது அமைவது அகத்திற்கு ஆனந்தமளிக்கிறது. எமது அன்புக்குரிய பிரதேச செயலாளர் திரு.எஸ்.இராமகிருஸ்ணன் உதவி பிரதேச செயலாளர் திரு.சிவ.ஜெகராஜன் ஆகியோரின் வழிகாட்டலில் மலர்க்குழு அமைக்கப்பட்டு மலரமைக்கும் பணிகள் இறையருளால் நடந்தேறியது.

இம்மலரில் காரைதீவின் வரலாற்றுடன் கூடிய துறைசார்ந்த பல காத்திரமான கட்டுரைகள், கவிதைகள், ஆய்வுக்கட்டுரைகள், காரைதீவிலுள்ள ஆலயங்கள், பாடசாலைகள், அரச பொது நிறுவனங்கள் வரலாற்றுப் படங்கள் பாராட்டுப் பெறுவோரின் சுயவிபரங்கள் கலாசாரபேரவை மற்றும் பிரதேச செயலக குழாம் போன்ற பல அம்சங்கள் சிறப்பம்சமாக அமைகின்றன.

இம்மலரை தொகுப்பதில் பிரதேச செயலாளர் மற்றும் உதவி பிரதேச செயலாளர் மலர்க்குழு உறுப்பினர்கள் வாழ்த்துரை வழங்கியோர் ஆக்கவியலாளர்கள் பாராட்டுப்பெறுவோர் போன்றோர் எனக்களித்த ஆக்கமும் ஊக்கமும் ஒத்துழைப்பும் ஆதரவும் பூரணமாக்க உதவிற்று என இவ்வண் கூறமுடியும்.

காரைதீவின் வரலாற்றில் முதல்தடவையாக வெளிவருகின்ற நூல் என்பதால் சில விடயங்கள் அடங்காமலிருக்கலாம் அல்லது பூரணமில்லாமலுமிருக்கலாம். எவ்வாறாயினும் இயன்றவரை சேகரிக்கப்பட்ட தகவல்களை சரிபார்த்து எதிர்கால தலைமுறையினருக்காக சமர்ப்பிக்கிறோம்.

எனவே இம்மலரினை உங்கள் உரிமமாகக் கருதி குணம்நாடி குற்றம்நாடி மிகைநாடி மிக்ககொள்ளல் ஆவிர்களாக.

வி.ரி.சகாதேவராஜா (M.Ed)
மலர்க்குழு இணைப்பாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதேச செயலகம் காரைதீவு

## கலாசார பேரவை

| | | |
|---|---|---|
| தலைவர் | திரு.எஸ்.இராமகிருஷ்ணன் | பிரதேச செயலாளர் |
| செயலாளர் | திருமதி.ந.விக்னேஸ்வரன் | கலாசார உத்தியோகஸ்தர் |
| இணைப்பாளர் | திரு.எஸ்.ஜெகராஜன் | உதவி பிரதேச செயலாளர் |

**பேரவை உயர்பீட உறுப்பினர்கள்**

திரு.ஆர்.கிருஷ்ணபிள்ளை, திரு.வி.ரி.சகாதேவராஜா, திரு.பி.சிவானந்தன், ஜனாப்.ஏ.ஏ.நஜீம்.ஜனாப்.ஏ.எம்.எம்.அலியார், திருமதி.பாக்கியலெட்சுமி, திரு.எம்.ஜெயநாதன், திரு.எஸ்.நாகராஜா, திரு.எஸ்.இராமநாதன், திரு.வி.சிதம்பரப்பிள்ளை, திரு.ம.தேவதாசன், திரு.த.கோபாலன், திரு.இ.கோபாலசிங்கம்,

### இலக்கிய விழா செயற்பாட்டுக்குழு - 2009

### மலரக் குழு

01. திரு.வி.ரி.சகாதேவராஜா (இணைப்பாளர்)
02. திரு.எஸ்.நாகராஜா
03. திரு.இரா.கிருஸ்ணபிள்ளை
04. திரு.ரி.உருத்திரன்
05. ஜனாப்.எம்.ரி.எம்.நயீம்
06. திருமதி.சத்தியவதி சாந்தலிங்கம்
07. திரு.வி.சிவானந்தன்
08. திரு.எஸ்.இராமநாதன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கலைஞர் தெரிவுக் குழு:-

01. திரு.ஆர்.கிருஷ்ணபிள்ளை (இணைப்பாளர்)
02. திரு.எஸ்.ஜெயசுந்தரம்
03. ஜனாப்.எஸ்எம்.உவைஸ்
04. திரு.எம்.வரதராஜன்
05. திரு.ஆர்.ரமேஸ்
06. செல்வி.கே.சாரதாதேவி
07. திரு.ஆர்.கணேசமூர்த்தி
08. திரு.எஸ்.இராமநாதன்
09. திரு.எம்.ஜெயநாதன்
10. திரு.வி.ரி.சகாதேவராஜா
11. திரு.பி.சிவானந்தன்
12. திரு.வி.கோபாலசிங்கம்
13. திரு.வி.சிதம்பரப்பிள்ளை

## விழாக் குழு:-

01. திரு.பி.சிவானந்தன் (இணைப்பாளர்)
02. ஜனாப்.எம்.ஐ.எம்.முகர்றப்
03. திரு.என்.வரதராஜன்
04. திருமதி.சந்திரகலா சிவமகேஸ்வரன்
05. திரு.வி.ரி.சகாதேவராஜா
06. திரு.எஸ்.இராமநாதன்
07. திரு.கே.கிருஷ்ணபிள்ளை
08. திருமதி.புவனேஸ்வரி
09. திரு.சிதம்பரப்பிள்ளை
10. திரு.எம்.ஜெயநாதன்
11. திரு.இ.கோபாலசிங்கம்
12. திரு.இ. தவகுமார்

## நிதிக் குழு

01. ஜனாப்.ஏ.எம்.எம்.அலியார் (இணைப்பாளர்)
02. திரு.சி.சுந்தரலிங்கம்
03. திரு.எம்.உதயசூரியன்
04. திரு.எஸ்.நமசிவாயம்
05. திருமதி.இராஜநந்தினி உதயநாதன்
06. ஜனாப்.ஏ.ஏ.நஜீம்
07. திருமதி.விஜிதா தட்சிதானந்தம்
08. திருமதி.எஸ்தராணி சிறிகாந்தன்
09. திருமதி.செல்வரதி
10. திருமதி.சந்திரகுமாரி
11. கலாசார பேரவை உறுப்பினர்கள் 18 பேரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரதேச செயலாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலாச்சார பேரவை



முன்வரிசை இடம் இருந்து வலம்
திரு. பி. சிவானந்தன், திரு. ஆர். கிருஷ்ணபிள்ளை, திரு. எஸ். இராமகிருஷ்ணன்
திரு. எஸ். ஜெகராஜன், திரு. வீரி. சகாதேவராஜா, ஜனாப். ஏ. ஏ. நஜீம்
பின்வரிசை
ஜனாப். ஏ. எம். எம். அலியபர், திருமதி. ந. விக்னேஸ்வரன், திருமதி. பா. பரமலிங்கம், திரு. மா. ஜெகநாதன், திரு. எஸ். நாகராஜா,
திரு. எஸ். இராமநாதன், திரு. வீ. சிதம்பரப்பிள்ளை, திரு. ம. தேவதாசன், திரு. த. கோபாலன், திரு. இ. கோபாலசிங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மலர்க் குழு



முன் வரிசை இடம் இருந்து வலம்

திரு. ஆர். கிருஷ்ணப்பிள்ளை, திரு. எஸ். ஜெகராஜன் (ADS) திரு எஸ். இராமகிருஷ்ணன் (DS), திரு. வி .ரி. சகாதேவராஜா திரு. பீ. சிவானந்தன்

பின் வ. ரிசை

திரு. ரி. உருத்திரன், திரு. எஸ். நாகராஜா, திருமதி. ந. விக்னேஸ்வரன், திருமதி. ச. சாந்தலிங்கம், திருமதி. அ. விஜயகுமார், திரு. எஸ். இராமநாதன், ஜனாப். எம். ரி. எம். நயீம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைஞர் தெரிவுக் குழு



முன்வரிசை இடம் இருந்து வலம்

திரு.ஆர்.கிருஷ்ணபிள்ளை, திரு. பொ.பிசிவானந்தன், திரு.எஸ். இராமகிருஷ்ணன் (DS) திரு.எஸ்.ஜெகராஜன் (ADS) திரு.வீரி.சகாதேவராஜா

பின்வரிசை

திரு.இ.கோபாலசிங்கம், திரு.எஸ்.ஜெயசுந்தரம், திரு.ஆர்.ரமேஸ், திரு.எஸ்.இராமநாதன், திரு.வி.சிதம்பரப்பிள்ளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விழாக்குழு




முன்வரிசை இடம் இருந்து வலம்

திரு. ஆர். கிருஷ்ணபிள்ளை, திரு. பொ. பிசிவானந்தன், திரு. எஸ். இராமகிருஷ்ணன் (DS) திரு. எஸ். ஜெகராஜன் (ADS) திரு. வீ. சகாதேவராஜா

பின்வரிசை

திரு. இ. கோபாலசிங்கம், திரு. எஸ். இராமநாதன், திருமதி. பா. பரமலிங்கம் திருமதி. ச. சிவமகேஸ்வரன் திரு. வி. சிதம்பரப்பிள்ளை, திரு. இ. தவகுமார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிதிக்குழு



முன்வரிசை இடம் இருந்து வலம்

ஜனாப்.ஏ.ஏ.நஜீம், திரு.எஸ்.ஜெகராஜன் ADS, திரு.எஸ்.இராமகிருஷ்ணன் DS,திரு.சி.சுந்தரலிங்கம்,ஜனாப்.ஏ.எம்.எம்.அலியார் (இணைப்பாளர்)

பின் வரிசை

திருமதி.பு.செல்வேல்குமரன் திருமதி.சந்திரகுமாரி திருமதி.அ.செல்வரதி திருமதி.எ.சிறிகாந்தன்,திருமதி.இ.உதயநாதன்

திருமதி வி தட்சிதானந்தம் திரு.ஜீ.கேதீஸ்வரன் திரு.எம். பாக்கியராஜா திரு.எஸ்.புவனேசராஜா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரதேச கலாசார விழா - 2009 இல் கௌரவம் பெறும் சான்றோர்கள் விபரம் ஒரே பார்வையில்.....

| பெயர் | முகவரி | வழங்கப்படும் பட்டம் |
|---|---|---|
| திரு.இ.விநாயகமூர்த்தி | மத்திய வீதி, காரைதீவு - 05 | விபுல பூரணன் |
| திரு.செ.இராமகிருஷ்ணன் | மத்திய வீதி, காரைதீவு - 05 | விபுலமாமணி |
| திரு.இரா.கிருஷ்ணபிள்ளை | நடராஜானந்தா வீதி, காரைதீவு - 02 | |
| திரு.பொன்.சிவானந்தன் | தேசிகர் வீதி, காரைதீவு - 11 | |
| திரு.வி.ரி.சகாதேவராஜா | விபுலானந்தா வீதி, காரைதீவு – 01 | |
| திரு.சி.இராமநாதன் | மத்திய வீதி, காரைதீவு – 08 | விபுல மணி |
| திரு.எஸ்.நாகராஜா | சாரதா வீதி, காரைதீவு – 02 | |
| திருமதி.மோ.பத்மநாதன் | மார்க்கண்டு வீதி, காரைதீவு – 11 | |
| திருமதி.பு.ஜயகணேஸ் | மகாவித்தியாலய வீதி, காரைதீவு - 04 | |
| திருமதி.பா. பரமலிங்கம் | விவேகானந்தா வீதி, காரைதீவு - 01 | |
| திரு.இ.கோபாலசிங்கம் | தேசிகர் வீதி, காரைதீவு - 10 | |
| சிவஸ்ரீ.ச.மகேஸ்வரக்குருக்கள் | கண்ணகை அம்மன் ஆலயம்,காரைதீவு- 01 | |
| திரு.க.முருகேசு | திருமால்முக வீதி, காரைதீவு – 07 | |
| திரு.ஏ.எம்.றஷ்மி | இல:107, மாளிகாவீதி,மாளி.காடுமேற்கு | விபுலஇளவல் |
| திருமதி.அ. சசிக்குமார் | விபுலானந்தா வீதி, காரைதீவு - 01 | |
| செல்வி.எஸ்.சாலினி | மத்திய வீதி, காரைதீவு - 05 | |
| செல்வன்.த.விநாயகமூர்த்தி | தேசிகர் வீதி காரைதீவு-11 | |
| திரு.எஸ்.தங்கவேல் | விபுலானந்தா வீதி, காரைதீவு - 01 | விபுல நேசன் |
| திருமதி.க.கனகமலர் | நடராஜானந்தா வீதி, காரைதீவு - 02 | |
| திரு.ஆ.பூபாலரெட்ணம் | மகாவித்தியாலய வீதி, காரைதீவு - 03 | |
| திரு.செ.மணிமாறன் | மகாவித்தியாலய வீதி, காரைதீவு - 04 | |
| திரு.பொ.சிவயோகன் | ஆர்.கே.எம்.சிறுமியர் இல்லம், காரைதீவு-05 | |
| திரு.வே.கிருஷ்ணபிள்ளை | ஆர்.கே.எம் வீதி, காரைதீவு - 06 | |
| திரு.வெ.ஜெயநாதன் | விஷ்ணு கோயில் வீதி, காரைதீவு - 07 | |
| திரு.இ.தங்கராசா | மத்திய வீதி, காரைதீவு - 08 | |
| திரு.ஆ.கிருஷ்ணபிள்ளை | சி.க.வீதி, காரைதீவு – 05 | |
| திரு.சி.விஜயரெட்ணம் | முருகன் கோயில் வீதி, காரைதீவு -10 | |
| திரு.இ.குணசிங்கம் | முருகன் கோயில் வீதி, காரைதீவு -11 | |
| திரு.இ.வேல்நாயகம் | பிரதான வீதி, காரைதீவு-12 | |
| திரு.எம்.சி.ஆதம்பாவா | 107, மாளிகா வீதி, மாளிகைக்காடு மேற்கு | |
| திரு.எம்.எச்.நாசர் | 58, புதியதபாலகவீதி,மாளிகைக்காடுகிழக்கு | |
| திருமதி.சுலைகாஉம்மா | 85, ஜுனைட்வீதி, மாளிகைக்காடு கிழக்கு | |
| திரு.ஏ.எம்.சுல்தார் | 202, ஜலால்புரவீதி, மாவடிப்பள்ளி கிழக்கு | |
| திரு.எஸ்.எல்.இஷாக் | 68, கரீம் வீதி, மாவடிப்பள்ளி மேற்கு | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சுவாமி விபுலானந்த அடிகளாரின் வாழ்க்கைக் குறிப்பு

| | | |
|---|---|---|
| 1892 | - | மார்ச் 27ஆந் திகதி அடிகளாரின் அவதாரம். |
| இடம் | - | மட்டக்களப்பு காரைதீவு. |
| தந்தையார் | - | சின்னத்தம்பி சாமித்தம்பி விதானையார். |
| தாயார் | - | இராசகோபாலப்பிள்ளை கண்ணம்மை |
| பெயர் | - | மயில்வாகனன் |
| வித்தியாரம்பம் | - | நல்லரத்னம் குஞ்சித்தம்பி ஆசிரியர்கள் |
| 1904 | - | கல்முனை மெதடிஸ்த மிஷன் லீஸ் ஆங்கிலப்பாடசாலையிற் கல்வி. |
| 1906 | - | மட்டக்களப்பு மெதடிஸ்த மிஷன் மத்தியகல்லூரியிற் கல்வி. |
| 1906 | - | டிசம்பர் கேம்பிரிஜ் ஜுனியர் பரீட்சையிற் சித்தியடைந்தமை. |
| 1908 | - | மட்டக்களப்பு புனிதமிகேல் கல்லூரியிற் கல்வி. |
| 1908 | - | டிசம்பர் கேம்பிரிஜ் சீனியர் பரீட்சையிற் சித்தியடைந்தமை. |
| 1910 | - | மட்/புனித மிக்கேல் கல்லூரியில் ஆசிரியர். |
| 1911 | - | தாயாரின் மறைவைத் தொடர்ந்து கல்முனை கத்தோலிக்க மிஷன் பாடசாலையில் ஆசிரியர். |
| 1912 | - | கொழும்பு அரசினர் ஆசிரியர் கல்லூரியிற் பயிற்சி. |
| 1914 | - | புனித மிக்கேல் கல்லூரியில் ஆசிரியர். |
| 1916 | - | அரசினர் பொறியியற் கல்லூரியில் விஞ்ஞானம் கற்று 'விஞ்ஞான டிப்ளோமா என்னும் பட்டம் பெறுதல். மதுரை தமிழ்ச் சங்கப்பண்டிதர் பரீட்சையில் சித்தியடைந்து இலங்கையின் முதல் பண்டிதர் என்னும் பெருமையினைப் பெற்றமை. |
| 1917 | - | அரசினர் பொறியியற் கல்லூரியில் வேதிநூல் உதவி ஆசிரியர். |
| 1920 | - | யாழ்/புனித பத்திரிசியார் கல்லூரியில் வேதிநூல் ஆசிரியர். லண்டன் பல்கலைக்கழக விஞ்ஞான பட்டம் பெற்றமை. |
| 1921 | - | யாழ்/ஆரிய திராவிட பாஷாபி விருத்திச் சங்கத்தினை நிறுவுவதில் உதவி புரிந்தமை. |
| 1922 | - | யாழ்/மானிப்பாய் இந்துக் கல்லூரியின் அதிபர். துறவறத்தினை விளைந்து மயிலாப்பூர் இராமகிருஷ்ண மடத்தைச் சேந்தமை. துறவறப்பெயர் 'பிரபோத சைதன்னியர்', 'இராமகிருஷ்ண விஜயம்' 'வேதாந்தகேசரி' ஆகிய சஞ்சிகைகளின் ஆசிரியர்.பண்டிதமணி நவநீதகிருஷ்ண பாரதியாரால் இயற்றப்பட்டு மட்டக்களப்பு வித்துவான் பூபாலப்பிள்ளை அவர்களால் உரை விளக்கம் செய்யப்பட்ட 'உலகியல் விளக்கம்' என்னும் நூலினைப் பதிப்பித்தமை. |
| 1924 | - | ஞானோபதேசம் பெற்று சுவாமி சிவானந்தரால் 'விபுலானந்தர்'என்னும் பெயர் சூட்டப்பட்டமை. |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[illegible]2[illegible] - இ[illegible] [illegible] விவேகானந்த சபையினரால் நடாத்தப்பட்ட பாடசாலைகளின் மேற்பார்வையை ஏற்றமை. ஜூன் 08 தமிழ் தாத்தா உ.வே.சாமிநாதையர் அவர்களுக்கு மதுரைத் தமிழ்ச் சங்கத்தினரால் நடாத்தப்பட்ட பாராட்டு விழாவிலே இலங்கையின் பிரதிநிதியாகப் பங்குகொண்டமை. தமிழ்ச் சங்கத்திலே சொற்பொழிவு செய்தமை. ஓக்டோபர் 28இல் காரைதீவு சாரதா வித்தியாலயத்திற்கு அடிக்கல் நட்டமை. நவம்பர் 06இல்மட்/சிவானந்தாவித்தியாலயத்திற்கு அடிக்கல் நட்டமை. நவம்பர் 30இல் திருகோணமலை ஆங்கிலக் கல்லூரியின் புதுக்கட்டிட அடிக்கல் நட்டமை.

192[illegible] பெப்ரவரி யாழ்/வைத்தீஸ்வரர் வித்தியாலயம், விவேகானந்த வித்தியாயலம் ஆகியவற்றைப் பொறுப்பேற்றமை. மார்ச் கொழும்பில் விவேகானந்த வித்தியாலயம் தொடங்கி வைக்கப்பட்டமை. மார்ச் திருகோணமலை, மட்டக்களப்பு பகுதியின் கல்வி ஆலோசனைச்சபை உறுப்பினராக அரசினால் நியமிக்கப்பட்டமை. ஏப்ரல் கல்கத்தா வேலூரிலுள்ள இராமகிருஷ்ண தலைமை மடத்தில் நடைபெற்ற மகாநாட்டில் இலங்கைப் பிரதிநிதியாக பங்குகொண்டமை. ஜூன் யாழ்/வைத்தீஸ்வரர் வித்தியாலயத்தில் அனாதைச் சிறுவர்களுக்கான மாணவர் இல்லத்தை ஆரம்பித்தமை. மதங்க சூளாமணி என்னும் நாடகத்தமிழ் நூல் மதுரைத் தமிழ் சங்கத்தால் வெளியிடப்பட்டமை.

19[illegible] - ஏப்ரல் சிதம்பரத்தில் பல்கலைக்கழகம் நிறுவுவது தொடர்பான விசாரணைச் சபையின் முன்சாட்சி கூறியமை. ஆகஸ்ட் கண்டி சைவமகாசபை ஆண்டு விழாவிற்குத் தலைமை தாங்கியமை. நவம்பர் இலங்கைக்கு வருகை தந்திருந்த காந்தி அடிகளாரை மாணவர் மகாநாட்டுத் தலைவர் என்ற வகையில் வரவேற்றமை.

1929 - திருகோணமலை ஆங்கிலக் கல்லூரியின அதிபர், சிவானந்தா வித்தியாலயத்தின் திறப்பு விழாவை நடாத்தி வைத்தமை.

1930 - யாழ்/ஆரியத்திராவிட பாஷா விருத்திச்சங்கப்பரீட்சகர். இராமகிருஷ்ண பாடசாலைகளைப் பரிபாலிக்கும் பொறுப்பேற்றமை.

1931 - ஜனவரி அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழ் பேராசிரியர்.

1934 - கரந்தைத்தமிழ் சங்க ஆண்டு விழாவிற்குத் தலைமை தாங்சியமை.

1935 - சென்னை பல்கலைக்கழக தமிழ் ஆராச்சிக்குழு உறுப்பினர்.

1936 - பெப்ரவரி 22 – 29 சென்னைப் பல்கலைக்கழகப் பட்டிமன்றத்திலே 'யாழ்ப்பாணன்', 'தமிழிசை', 'சிலப்பதிகார அரங்கேற்றுக் காதை', '07ஆம் நூற்றாண்டிலும் அதற்கு பின்னரும் இருந்த தமிழிசை', 'பழந்தமிழகத்துச்சிற்பாசிரியர்கள்', 'பரிசனவேதி' என்னும்பொருள்களில் தொடர்ச்சியானசொற்பொழிவுகள்.

1937 - டிசம்பர் சென்னைமாகாண தமிழ்ச் சங்கத்தின் ஆதரவில் பச்சையப்பன் கல்லூரியில் நடைபெற்ற கலைச்சொல்லாக்க மகாநாட்டுக்குத் தலைமை தாங்கியமை.

1938 - மேற்படி தமிழ்ச்சங்கம் 'கலைச்சொற்கள்' என்னும் அகராதி நூலினை வெளியிடுதல்.

1940 மாயாவதி ஆச்சிரமத்திலிருந்து 'பிரபுத்தபாரத' என்னும்இராமகிருஷ்ண சங்க ஆங்கில சஞ்சிகையை வெளியிடுதல்.

1947 இலங்கைப் பல்கலைக்கழகத் தமிழ் பேராசிரியர் பதவி. ஜூன் 05, 06 திருக்கொள்ளம் பூதூரில் கரந்தைத் தமிழ்ச்சங்க வெளியீடான 'யாழ் நூல்' அரங்கேற்றப்பட்டமை. ஜூலை 19 வீடுபேறு அடைந்தமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# காரைதீவு நிர்வாக அலுவலகங்களின் பரிணாம வளர்ச்சி

**எஸ்.இராமகிருஷ்ணன்,** M.A.(Pub.Adm)
**S.L.A.S. - I.**

இலங்கையில் கிராம சபை அறிமுகப்படுத்தப்பட்ட காலம் முதல் காரைதீவுக் கிராமத்துக்கென ஒரு கிராம சபை இருந்து வந்துள்ளது. பின்னர் கிராமசபை முறை ஒழிக்கப்பட்டு மாவட்ட அபிவிருத்திச்சபை உருவாகிய போது அம்பாரை மாவட்ட சபையின் உபஅலுவலகமாக காரைதீவு கிராமசபை பிரிவு இயங்கி வந்தது.

காரைதீவில் சுற்றுலா உதவி அரசாங்க அதிபா பிரிவு 1973ஆம் ஆண்டு தொடக்கம் இருந்து வந்துள்ளது. பின்னர் 1985ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் தொடக்கம் அது மேலதிக உதவி அரச அதிபர் அலுவலகமாக தரமுயர்த்தப்பட்டு நிரந்தர அலுவலகர்களுடன் இயங்கி வந்தது.

இது பூரணமான உதவி அரச அதிபர் அலுவலகமாக 1988.01.01 முதல் 1988.01.28ஆந் திகதிய வர்த்தமானி அறிவித்தல் மூலம் பிரகடனப்படுத்தப்பட்டது)

பிரதேச சபைகள் சட்டம் 15/1987, 1987.04.16ஆந் திகதி கொண்டுவரப்பட்டது. அது ஒவ்வொரு உதவி அரச அதிபர் பிரிவும் ஒரு பிரதேச சபைப்பிரிவாக உருவாக்கப்பட வேண்டும் எனவும், அதன் எல்லைகள் இயலுமானவரை உதவிஅரசஅதிபர் அலுவலகத்தின் எல்லைகளாகவே இருக்க வேண்டுமெனவும் பிரதேச சபைகள் 1988.01.01 முதல் இயங்க வேண்டும் எனவும் கூறியது.

காரைதீவு உதவி அரச அதிபர் பிரிவாக 1988.01.01 முதல் தரமுயர்த்தப்பட்ட போதும் பிரதேச சபைகள் 1988.01.01 முதல் இயங்க ஆரம்பித்த போதும் அதனை அமைப்பதற்கான கணக்கெடுப்புகள் 1987இல் நடைபெற்றதால் காரைதீவிற்கென தனியான பிரதேச சபை உருவாக்கப்படாமல் நிந்தவூர் பிரதேச சபையுடன் இணைந்ததாக பிரகடனப்படுத்தப்பட்டது.

காரைதீவிற்கென தனியான பிரதேச சபை உருவாக்க மந்திரி சபைக்கூட்டத்தில் அனுமதி வழங்கப்பட்டதாக அப்போதைய கௌரவ அமைச்சர் பி.தயாரெத்தின அவர்கள் 1993.06.16ஆந் திகதிய கடிதமூலம் தந்திருந்தார் பின்னர் இது தவறுதலானது என கூறியிருந்தார்.

* வர்த்தமானி பிரதிகள் மறுபக்கங்களில்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1172/8 - 2001 පෙබරවාරි 20 වැනි අඟහරුවාදා - 2001.02.20

1172/8 ஆம் இலக்கம் - 2001 ஆம் ஆண்டு பெப்ருவரி மாதம் 20 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**1992 ஆம் ஆண்டின் 58 ஆம் இலக்க அதிகாரமளித்தல் (பிரதேச செயலாளர்கள்) சட்டம்**

2 ஆம் பிரிவின் கீழான கட்டளை

1992 ஆம் ஆண்டின் 58 ஆம் இலக்க அதிகாரமளித்தல் (பிரதேச செயலாளர்கள்) கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவினால் எனக்கு உரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், நிருவாக மறுசீரமைப்பு அமைச்சர் ரிச்சர்ட் பத்திரண ஆகிய நான், இந்தக் கட்டளையின் மூலம் களுத்துறை மாவட்டத்திற்காக அந்த நிருவாக மாவட்டத்தின் ஒரு பிரிவின் பொருட்டு மூன்று (03) பிரதேச செயலாளர் பிரிவுகளைத் தாபிக்கிறேன். மேலும் அந்த ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவுகளினதும் பெயர்கள் இந்த அட்டவணையின் I ஆம் நிரலில் காட்டப்படுவதுடன் அந்த ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவுகளும் அந்த அட்டவணையின் II ஆம் நிரலில் நேரொத்த குறிப்பில் காட்டப்படுகின்ற கிராம உத்தியோகத்தர் பிரிவுகளைக் கொண்டிருக்கும். அந்த ஒவ்வொரு பிரதேசச் செயலாளர் பிரிவினதும் எல்லைகள் அவ்வட்டவணையின் III ஆம் நிரலுக்கு நேரொத்த குறிப்பில் காட்டப்பட்டுள்ளவாறு இருத்தல் வேண்டும். ஒவ்வொரு பிரதேசச் செயலாளர் பிரிவு தொடர்பாக அக்கட்டளைச் சட்டத்தின் 3, 4, 5, 6, 7 ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகள் நடைமுறைப்படுத்தும் திகதி, அவ்வட்டவணையில் IV ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ளன.

ரிச்சர்ட் பத்திரண,
பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள்,
நிருவாக மறுசீரமைப்பு அமைச்சர்.

பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள்,
நிருவாக மறுசீரமைப்பு அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07.
2001, சனவரி 31.

அட்டவணை

மாவட்டம் : களுத்துறை

| நிரல் I<br>பிரதேசச் செயலாளர் பிரிவின் பெயர் | நிரல் II<br>பிரதேசச் செயலாளர் பிரிவின் கிராம அலுவலர் பிரிவு | நிரல் III<br>பிரதேசச் செயலாளர் பிரிவின் நிர்வாக எல்லைகள் | நிரல் IV<br>நடைமுறைப் படுத்தல் திகதி |
|---|---|---|---|
| பாலிந்தநுவர | 834 - பெல்லன | வடக்கு : வலல்லாவிட்டயும் அயகம பிரதேசச் செயலாளர் காரியாலய எல்லைகள் | 1998.09.14 |
| | 834 ஏ - பெல்லன கிழக்கு | | |
| | 834 பீ - கப்புகம | | |
| | 834 சீ - விஹாரகம | மேற்கு : வலல்லாவிட்டயும் அகலவத்த பிரதேசச் செயலாளர் காரியாலய எல்லைகள் | |
| | 834 டீ - யக்குபிட்டிய | | |
| | 835 - லட்பந்துர | | |
| | 835 ஏ - இலுக்பாத்த | கிழக்கு : கலவானையும் அயகம பிரதேசச் செயலாளர் காரியாலய எல்லைகள் | |
| | 835 பீ - லட்பந்துர கிழக்கு | | |
| | 835 சீ - மஹாரகஹதெனிய | | |
| | 836 - பெலந்த | தெற்கு : தவலம பிரதேசச் செயலாளர் காரியாலயம் | |
| | 836 ஏ - மோரபிட்டிய | | |
| | 836 பீ - கெலிகந்த | | |
| | 836 சீ - கப்புகெதர | | |
| | 836 டீ - அத்வெல்தொட்ட | | |
| | 836 இ - பெலன்க மேற்கு | | |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| நிரல் I<br>பிரதேச செயலகப் பிரிவின் பெயர் | நிரல் II<br>பிரதேச செயலகப் பிரிவின் கிராம அலுவலர் பிரிவு | | நிரல் III<br>பிரதேச செயலகப் பிரிவின் நிர்வாக எல்லைகள் | நிரல் IV<br>நடைமுறைப் படுத்தும் திகதி |
|---|---|---|---|---|
| உகனை<br>(தொடர்) | | | குளத்துடன் இணையும் இடத்திலிருந்து வந்து [illegible] சந்திக்கும் [illegible] [illegible] அணைக்கட்டு வரை செல்கிறது.<br><br>மேற்கு : அணைக்கட்டிலிருந்து ஒரு நேரான கோடு [illegible] நீர்த்தேக்கம் வரை சென்று நீர்த்தேக்கத்தின் [illegible] [illegible] [illegible] கோடு வழியாக [illegible] வரை சென்று [illegible] மத்திய கோடு வழியே சென்று [illegible] [illegible] மத்திய கோட்டின் வடக்கு (வடதிசைக்கு) சென்று [illegible] [illegible] மத்திய புள்ளிக்கு வருகிறது. | 1992.07.16 |
| காரைதீவு | 41 - காரைதீவு | 01 | வடக்கு : சாய்ந்தமருது மாளிகைக்காடு எல்லை வீதி. கிழக்கு கடலில் இருந்து மேற்கு நோக்கி நேராக [illegible] வீதியை ஊடறுத்து வெட்டை ஆறு வரை<br><br>கிழக்கு : கடல்<br>தெற்கு : வெட்டுவாய்க்கால்<br>மேற்கு : வெட்டை ஆறு. | 1997.06.26 |
| | 42 - காரைதீவு | 02 | | |
| | 42 ஏ - காரைதீவு | 03 | | |
| | 42 பீ - காரைதீவு | 04 | | |
| | 42 சி - காரைதீவு | 05 | | |
| | 44 ஏ - காரைதீவு | 06 | | |
| | 43 - காரைதீவு | 07 | | |
| | 43 பீ - காரைதீவு | 08 | | |
| | 43 சி - காரைதீவு | 09 | | |
| | 43 ஏ - காரைதீவு | 10 | | |
| | 43 ஈ - காரைதீவு | 11 | | |
| | 43 எ - காரைதீவு | 12 | | |
| | 44 ஏ - மாளிகைக்காடு கிழக்கு | | | |
| | 44 - மாளிகைக்காடு மேற்கு | | | |
| | 44 பீ - மாளிகைக்காடு மத்தி | | | |
| | 43 - மாவடிப்பள்ளி கிழக்கு | | | |
| | 43அ - மாவடிப்பள்ளி மேற்கு | | | |
| அட்டாளைச்சேனை | ஒலு./33 - அட்டாளைச்சேனை | 01 | வடக்கு : வீரயடி அணைக்கட்டில் இருந்து தொடங்கி வீரயடி ஆறு, காவி ஓடை ஆறு மத்திய பிரதேச [illegible] ஆற்று முகத்துவாரத்தின் மத்திய புள்ளி வரை<br><br>கிழக்கு : வீரயடி ஆற்று முகத்துவாரத்தின் மத்திய புள்ளியிலிருந்து கடற்கரை ஓரமாக தென்திசை நோக்கிச் சென்று [illegible] [illegible] முகத்துவாரத்தின் மத்திய புள்ளி வரை<br><br>தெற்கு : [illegible] வரும் [illegible] மத்திய [illegible] சென்று [illegible] சந்தித்து மத்திய [illegible] தெற்கு, தென்மேற்கு, மேற்கு, தென்மேற்கு திசைகளுக்குச் சென்று [illegible] வரை<br><br>மேற்கு : மேற்குறிப்பிட்ட இடத்தில் இருந்து வடமேற்கு, வடக்கு, வடமேற்கு திசைகளாகச் சென்று [illegible] [illegible] வந்து வடதிசை வழியாகச் சென்று வடகிழக்கு திசை [illegible] [illegible] [illegible] [illegible] வந்து மத்திய [illegible] [illegible] | 1993.10.06 |
| | ஒலு./31 - அட்டாளைச்சேனை | 02 | | |
| | ஒலு./30அ - அட்டாளைச்சேனை | 03 | | |
| | ஒலு./30 - அட்டாளைச்சேனை | 04 | | |
| | ஒலு./30பீ - அட்டாளைச்சேனை | 05 | | |
| | ஒலு./30சி - அட்டாளைச்சேனை | 06 | | |
| | ஒலு./30/1 - அட்டாளைச்சேனை | 07 | | |
| | ஒலு./30/2 - அட்டாளைச்சேனை | 08 | | |
| | ஒலு./31அ - அட்டாளைச்சேனை | 09 | | |
| | ஒலு./31பீ - அட்டாளைச்சேனை | 10 | | |
| | ஒலு./31ஏ - அட்டாளைச்சேனை | 11 | | |
| | ஒலு./31ஏ1 - அட்டாளைச்சேனை | 12 | | |
| | ஒலு./30பீ - அட்டாளைச்சேனை | 13 | | |
| | ஒலு./30அ - அட்டாளைச்சேனை | 14 | | |
| | ஒலு./30ஏ1 - அட்டாளைச்சேனை | 15 | | |
| | ஒலு./30/32 - அட்டாளைச்சேனை | 16 | | |
| | ஒலு./30/33 - அட்டாளைச்சேனை | 17 | | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரைதீவு உதவி அரச அதிபர் அலுவலகம் 1999.06.26 முதல் பிரதேச செயலகமாக தரமுயர்த்தப்பட்டது.

1421/26ம் [illegible] - 2005ம் [illegible]

33 A

IV (අ) වැනි කොටස - ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ අති විශෙෂ ගැසට් පත්‍රය - 2005.12.01

பகுதி IV (ஆ) - இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை - அதி விசேஷமானது - 2005.12.01

கட்டளையின் அட்டவணையிலுள்ள I ஆம் பாகத்தையும் II ஆம் வெளியிடப்பட்ட நிந்தவூர் பிரதேச சபைகள் தொடர்பான பாகத்தையும் நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக முறையே பின்வரும் அட்டவணையின் I ஆம் பாகத்தையும், II ஆம் பாகத்தையும் பதிலீடு செய்வதன் மூலம் குறித்த கட்டளையை 2006, ஏப்பிறல் மாதம் 15 ஆம் திகதி தொடக்கம் பயனுறும் வகையில் திருத்தியமைக்கின்றேன்.

ஜனக பண்டார தென்னக்கோன்,
மாகாண சபைகள் உள்ளூராட்சி அமைச்சர்.

கொழும்பு,
2005, நவெம்பர் 30.

அட்டவணை

பாகம் I

பின்வரும் கிராம சேவகர் பிரிவுகளை உள்ளடக்கிய காணி இடப்பரப்பு :

(1) நிந்தவூர் - 1, (2) நிந்தவூர் - 2, (3) நிந்தவூர் - 3, (4) நிந்தவூர் - 4, (5) நிந்தவூர் - 5, (6) நிந்தவூர் - 6, (7) நிந்தவூர் - 7, (8) நிந்தவூர் - 8, (9) நிந்தவூர் - 9, (10) நிந்தவூர் - 10, (11) நிந்தவூர் - 11, (12) நிந்தவூர் - 12, (13) நிந்தவூர் - 13, (14) நிந்தவூர் - 14, (15) நிந்தவூர் - 15, (16) நிந்தவூர் - 16, (17) நிந்தவூர் - 17, (18) நிந்தவூர் - 18, (19) நிந்தவூர் - 19, (20) நிந்தவூர் - 20, (21) நிந்தவூர் - 21, (22) நிந்தவூர் - 22, (23) நிந்தவூர் - 23, (24) நிந்தவூர் - 24, (25) நிந்தவூர் - 25.

பாகம் II

நிந்தவூர் பிரதேச சபையின் நிர்வாக எல்லைகள் :

வடக்கு - வெட்டு வாய்க்கால் சந்தியில், வெட்டு வாய்க்கால் ஊடாக, வடக்கு - வட்டை ஆறு ஊடாக ஓர் புள்ளியில் ஆரம்பித்து, கடலைச் சந்திக்கும் வரை (காரை தீவு பிரதேச செயலாளர் பிரிவின் தெற்கு எல்லை).

கிழக்கு : கடலை இறுதியாகக் குறிப்பிட்ட புள்ளியிலிருந்து ஆரம்பித்து கடற்கரை ஊடாகக், களியோடை ஆறு கடலில் சந்திக்கும் இடம்வரை.

தெற்கு : இறுதியாகக் குறிப்பிட்ட களியோடை ஆறு கடலில் சந்திக்கும் இடத்திலிருந்து ஆரம்பித்து, களியோடை ஆறு ஊடாக, மண்ணம்வட்டை வீதி களியோடை ஆறைச் சந்திக்கும் சந்தி வரை (அட்டாளைச் சேனை பிரதேச செயலாளர் பிரிவின் வடக்கு எல்லை.)

மேற்கு : இறுதியாகக் குறிப்பிட்ட இடத்தில் ஆரம்பித்து, மயிந்தடிடலை ஊடறுத்துச் செல்லும் மண்ணம்வட்டை வீதி ஊடாக, முல்லைப்பிட்டி வீதியை அடைந்து பின் கிறலல் ஆறு ஊடாக (சந்திக்கு அண்மையில் விழும்) வட எல்லையின் ஆரம்பத்தில் குறிப்பிட்ட புள்ளியைச் சென்றடைகிறது.

12-357/23

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டம்

கட்டளை

1999 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க பிரதேச சபைகள் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தியமைக்கப்பட்ட 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 2ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவினாலும், 4 ஆம் பிரிவினாலும், 6 ஆம் பிரிவினாலும் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக் கொண்டு, மாகாண சபைகள் உள்ளூராட்சி அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன் ஆகிய நான், இக்கட்டளை மூலம்-

(1) இதற்கான அட்டவணையின் பாகம் I இல் குறித்துரைக்கப்பட்டுள்ள இடப்பரப்பை அச்சட்டத்தின் நோக்கங்களுக்கென பிரதேச சபை இடப்பரப்பொன்றாக வெளிப்படுத்துகின்றேன்.

(2) அந்த அட்டவணையின் பாகம் II இல் காட்டப்பட்டுள்ள எல்லைகளை, அப்பிரதேச சபை இடப்பரப்பின் நிர்வாக எல்லைகளாக வரையறுக்கின்றேன்.

9-G 006372



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிந்தவூர் பிரதேச சபையின் ஆரம்ப கூட்டத்தில் காரைதீவிற்கென தனியான பிரதேச சபை அமைக்கப்பட வேண்டுமென தீர்மானமொன்று நிறைவேற்றப்பட்டது. தனது பிரதேசத்துடன் இணைந்துள்ள ஒரு பகுதியை தனியாகப்பிரித்து வழங்க வேண்டுமென தீர்மானம் நிறைவேற்றப்பட்டதானது, இரு பிரதேச மக்களின் நல்லெண்ண வெளிப்பாட்டை காட்டியது.

காரைதீவிற்கென தனியான பிரதேச சபை உருவாக்கப்படல் வேண்டுமென்ற நீண்டநாள் கோரிக்கைக்கு இணங்க அதற்கென ஒரு குழு உருவாக்கப்பட்டு பொதுமக்களின் கருத்துக்களை தெரிவிற்கும்படி 2001.08.15ஆந் திகதிய பத்திரிகைகளில் வடக்கு கிழக்கு மாகாண உள்ளூராட்சி உதவி ஆணையாளரினால் அறிவித்தல் விடுக்கப்பட்டது.

34 A IV (අ) වැනි කොටස - ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය - අති විශේෂ - 2005.12.01
பகுதி IV (அ) - இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை - அதி விசேடமானது - 2005.12.01

(3) இக்கட்டளையின் (1)ஆம் பந்தியின் கீழ் வெளியிடப்பட்ட பிரதேச சபை இடப்பரப்புக்கென ஒரு பிரதேச சபையை அமைத்துருவாக்கி, அத்தகைய சபைக்குப் பின்வரும் பெயரைக் குறித்தொதுக்குகின்றேன்.

"காரைதீவு பிரதேச சபை"

(4) காரைதீவு பிரதேச சபையானது தவிசாளர், உப தவிசாளரையும் தெரிந்தெடுக்கப்பட்ட ஏனைய மூன்று உறுப்பினர்களையும் கொண்டிருத்தல் வேண்டுமென விதித்துரைக்கின்றேன்.

(5) காரைதீவு பிரதேச சபையின் பதவிக்காலம் ஆரம்பமாகவேண்டிய திகதியாக 2006 ஏப்பிரல் மாதம் பதினைந்தாம் திகதியைக் குறித்துரைக்கின்றேன்.

ஜனக பண்டார தென்னக்கோன்,
மாகாண சபைகள் உள்ளூராட்சி அமைச்சர்.

2005, நவெம்பர் 30.
கொழும்பு.

அட்டவணை

பாகம் I

பின்வரும் கிராம சேவகர் பிரிவுகளை உள்ளடக்கிய காணி இடப்பரப்பு :-

(1) காரைதீவு - 1, (2) காரைதீவு - 2, (3) காரைதீவு - 3, (4) காரைதீவு - 4, (5) காரைதீவு - 5, (6) காரைதீவு - 6, (7) காரைதீவு - 7, (8) காரைதீவு - 8, (9) காரைதீவு - 9, (10) காரைதீவு - 10, (11) காரைதீவு - 11, (12) காரைதீவு - 12, (13) மாளிகைக்காடு (மேற்கு), (14) மாளிகைக்காடு (மத்தி), (15) மாளிகைக்காடு (கிழக்கு), (16) மாவடிப்பள்ளி (கிழக்கு), (17) மாவடிப்பள்ளி (மேற்கு).

பாகம் II

காரைதீவு பிரதேச சபையின் நிர்வாக எல்லைகள்:

வடக்கு : வட்டி ஆற்றினூடாக ஒரு புள்ளியில் ஆரம்பித்து, வட்டி ஆறு வழியே (வட்டி ஆற்றினூடாக ஒரு புள்ளியிலேயாவது வட்டி ஆறை சந்திக்கும்வரை எல்லை வீதியை ஊடறுத்து வரையப்பட்ட நேர் கோட்டைக் குறிக்கும்.) கல்முனை - அக்கரைப்பற்று பிரதான வீதியூடாக சாய்ந்தமருது - மாளிகைக்காடு சந்தியை அடைந்து, பின் அங்கிருந்து மேலே குறிப்பிட்ட வீதியின் மத்திய கோட்டின் வழியே கடல் வரையுமாகும்.

கிழக்கு : கடல்.

தெற்கு : வெட்டுவாய்க்கால் கடலைச் சந்திக்கும் இடத்தின் புள்ளியிலிருந்து ஆரம்பித்து, வெட்டு வாய்க்கால் ஊடாக, வெட்டுவாய்க்கால் வட்டை ஆற்றைச் சந்திக்கும் இடம் வரை சென்றடையும்.

மேற்கு : மேலே இறுதியாகக் குறிப்பிட்ட புள்ளியிலிருந்து ஆரம்பித்து வட்டைஆறு ஊடாக வடக்கில் குறிப்பிட்ட வட்டை ஆறு ஊடாக ஆரம்ப புள்ளியைச் சென்றடையும்.

12-357/84

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்குழு எல்லைகள் சம்மந்தமாக பிரச்சினை இருப்பதாக கூறி மேலும் விளக்கமளிக்குமாறு கேட்டது. அப்போது பிரதேச செயலாளர் திரு.எஸ்.இராமகிருஷ்ணன் எமது எல்லைகள் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டு நிலஅளவை அதிபதியால் வரையப்பட்ட படங்கள் உள்ளது என கூறி அவற்றை சமர்ப்பித்தார். மேலும் அவர் தனது சாட்சியத்தில் 1985ஆம் ஆண்டு முதல் இந்த அலுவலகத்தில் தொடர்ச்சியாக வேலை செய்து வருவதால் இந்தப் பிரிவின் எல்லைகள் சம்பந்தமாக தனக்கு பூரண அறிவு உண்டு எனவும் எல்லைகளின் வடக்குப் பக்கத்தில் சிறு பிரச்சினை வந்தது உண்மை என்றும் அப்போது மாவட்ட அபிவிருத்திக் குழுவின் தலைவரும் கௌரவ அமைச்சருமான காலஞ்சென்ற மர்ஹூம் எம்.எச்.எம் அஷ்ரப் அவர்கள் இது சம்மந்தமாக ஒரு கலந்துரையாடல் செய்து, அதில் கல்முனைத் தொகுதிக்குரிய எல்லைகள் கல்முனை பிரதேச செயலகப்பிரிவிற்கும் பொத்துவில் தொகுதிக்குரிய எல்லைகள் காரைதீவு பிரதேச செயலகப் பிரிவிற்கும் உரியதென தீர்ப்பு வழங்கி அது எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டதையும் தெரிவித்தார்.

அதனை அரச அதிபருக்கும் அறிவித்து அவரும் அதனை ஏற்றுக்கொண்டு பிரதேச செயலகத்தின் எல்லைகளை வர்த்தமானியில் வெளியிட்டதையும் குழுவின் கவனத்துக்கு கொண்டுவந்தார். அத்துடன் வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கான எல்லைகள் அடங்கிய ஆவணத்தில் அரச அதிபரும், தானும் ஒப்பமிட்டுள்ளதையும் குழுவிடம் சமர்ப்பித்தார். மேலும் பிரதேச சபைக்கான கட்டிடம், நூலகம் ஆளணியினர் உள்ளதால் உடனடியாகவே பிரதேச சபையை ஸ்தாபிக்க முடியும் என்பதை எடுத்துரைத்தார்.

குழு, விசாரணையில் திருப்தி அடைந்து தனது சிபார்சுகளை கொழும்புக்கு அனுப்பியது. குழுவில் அம்பாரை அரச அதிபர், உள்ளூராட்சி ஆணையாளர், நிலஅளவை அத்தியட்சகர் ஆகியோர் அடங்கியிருந்தனர்.

தேர்தலில் தெரிவு செய்யப்பட்ட ஒரு சபை இருந்த காரணத்தால் அவர்களின் காலம முடிவடைந்த பின்னர் தான் புதிய பிரதேச சபையை பிரகடனப்படுத்தப்பட முடியுமென கொழும்பு உள்ளூராட்சி ஆணையாளர் தெரிவித்திருந்தார்.

அங்கத்தவர்களின் காலம் முடிந்த பின்னர் தேர்தலுக்கான ஆயத்தங்கள் செய[illegible] விசேட ஆணையாளர்களைக் கொண்டு நிர்வாகம் செய்யப்பட்டது. பின்னர் 200[illegible] ஆண்டு தேர்தல் நடத்த முடிவு செய்யப்பட்ட வேளையில் காரைதீவிற்கான பிரதேச சபை பிரகடனப்படுத்தப்பட்டு வர்த்தமானி அறிவித்தல் 2005.12.01இல் வெளியிடப்பட்டது.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதேச செயலகத்தினால் நிறைவேற்றப்படும் பணிகள்

முதலில் பிரதேச செயலகம் ஆரம்ப காலத்தில் எவ்வாறு அழைக்கப்பட்டது பின்னர் எவ்வாறு அது மாற்றமடைந்து, தற்போதைய நிலையை அடைந்தது என்பதைப் பார்ப்போம்.

1. பிரிவு காரியாதிகாரி காரியாலயம்.
(Divisional Revenue Officer's Office) D.R.O.'S office

2. உதவி அரச அதிபர் அலுவலகம்
(Asst. Government Agents Office) A.G.A'S office

3. மேலதிக அரச அதிபர் அலுவலகம்.
(Addl.Government Agents Office) Addl.G.A'S office

4. பிரதேச செயலகம்
(Divisional Secretariat) D.S office

மேலே காட்டப்பட்டவாறு ஆரம்பத்தில் வரியை அறவிடுவதற்கான ஒரு அலுவலகமாக ஆரம்பித்து பின்னர் தனது கருமத்தை, அபிவிருத்தியை நோக்கமாக கொண்டு செயற்படும் அலுவலகமாக மாறியுள்ளது.

இவ்வலுலகத்திற்கு அரச அதிபருக்கில்லாத (அல்லது முன்னர் அவரால் ஆற்றப்பட்ட கருமங்கள்) பல அதிகாரங்கள் உண்டு. காலஞ்சென்ற ஜனாதிபதி கௌரவ ஆர்.பிரேமதாச காலத்தில் முக்கிய இடம் வழங்கப்பட்டு இருந்தது. தற்போது உள்ள வேலைகளை விட கல்வி, கூட்டுறவு, சுகாதாரம் போன்ற பல விடயங்கள் பிரதேச செயலகம் மூலம் நிறைவேற்றும் வகையில் அதன் அதிகாரம் அதிகரிக்கப்பட இருந்தது. தற்போது மத்திய மற்றும் மாகாண சபைக்குரிய வேலைகள் பலவும் இங்கு நிறைவேற்றப்படுகின்றன.

இங்கு ஆற்றப்படும் காரியங்களில் சிலவற்றைப் பார்ப்போம்.

1. பிறப்பு, இறப்பு, திருமணப்பதிவுகள் :-

ஒரு மனிதன் பிறந்தால் அவனது பிறப்பு பதியப்பட வேண்டும், அவ்வாறே அவன் திருமணம் செய்தால் அதுவும் பதியப்படவேண்டும். அவன் மரணம் அடையும் போது அதுவும் பதிவு செய்யப்படல் வேண்டும். இவையாவும் பதியப்பட்டு தேவையான நேரத்தில் அதன் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதிகள் இவ்வலுவலகத்தால் வழங்கப்படும்.

மேலும் உரிய நேரத்தில் இப் பதிவுகள் மேற்கொள்ளப்படாவிட்டால் காலங்கடந்த பிறப்பு, இறப்பு, திருமணப்பதிவுகள் விசாரணையின் பின்னர் செய்யப்படுகின்றன. அத்துடன் விவாக முறிவு சம்பந்தமான பதிவுகளும் மேற்கொள்ளப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவரது பெயரை மாற்ற வேண்டுமானாலும் அதற்கான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு விசாரணைகளின் பின்னர் பெயர் மாற்றம் செய்யப்படுகின்றது. மற்றும் பதிவுகளிலுள்ள வேறு தகவல்களிலும் திருத்தங்கள் செய்யப்படுவதுண்டு.

1. அடையாள அட்டை :-

இலங்கையில் மாத்திரமல்ல உலகின் பல நாடுகளிலும் அடையாள அட்டை முறை தற்போது மிகவும் அவசியமான ஒன்றாக உள்ளது. இலங்கையிலுள்ள ஒவ்வொரு வயது வந்தவரும் அடையாள அட்டையை வைத்திருப்பது கட்டாயமாகும். இது பலவித தேவைகளுக்கும் பயன்படுகின்றது. பாதுகாப்பு பிரச்சனை, தேர்தல்களில் வாக்களித்தல், வங்கிகளில் பண நடவடிக்கை, தொழில் கொடுப்பனவுகளைப் பெறல், பரீட்சைகள் போன்றவற்றிற்க்கு இது கட்டாயமாகும். 20 வயதிற்கு உட்பட்டவர்கள் முதல் முதலாக விண்ணப்பிக்கும் போது இலகுவாக இதனைப் பெறமுடியும். தொலைந்த அடையாள அட்டை பெறுவதாக இருந்தால் சிறிது சிரமப்பட வேண்டும். பழுதடைந்த அடையாள அட்டையை புதுப்பித்து பெறமுடியும்.

2. கடவுச் சீட்டு :-

எமது நாட்டை விட்டு வேறு நாடுகளுற்கு செல்ல வேண்டியிருந்தால் கடவுச்சீட்டு அவசியம். இது சகல நாடுகளுக்கு உரியது, மத்திய கிழக்கு நாடுகளுக்கு உரியது என இரு வகையில் வழங்கப்படுகின்றது. இந்தக்கடவுச்சீட்டில் மாற்றங்கள், புதுப்பித்தல் என்பனவும் இவ் அலுவலகம் மூலம் செய்யப்படுகின்றது.

3. சமூக சேவை விடயங்கள் :-

(அ) சமூகத்தில் பின்தங்கியவர்களுக்கு கொடுப்பனவு வழங்குவது.

(ஆ) மற்றும் குஷ்டரோகம், கசரோகம், தலசீமா போன்ற நோய்களுக்கு வழங்குவது.

(இ) ஊனம் உடையவர்களுக்கான கொடுப்பனவுகள் மற்றும் அவர்களுக்கான உபகரணங்கள் வழங்குவது.

(ஈ) தற்செயல் நிவாரணங்கள் (வெள்ளம், வரட்சி, வீட்டுச் சேதம்) என்பனவும் வழங்கப்படுகின்றது.

(உ) இப்பிரிவில் உள்ள தொண்டர் நிறுவனங்களை பதிவு செய்தல்.

4. ஓய்வூதியம் :-

அரசாங்கத்தில் வேலை செய்து இளைப்பாறியவர்களுக்கான மொத்த கொடுப்பனவு மற்றும் அவர்களுக்கான மாதாந்த கொடுப்பனவுகள் அவர்கள் மரணம் அடையும் போது அவர்களில் தங்கியிருப்பவர்களுக்கான கொடுப்பனவுகள் என்பன இவ் அலுவலகத்தில் செய்யப்படுகின்றன.

5. வாகன அனுமதிப்பத்திரம் :-

இப்பிரிவுக்குரிய கார், லொறி, பஸ், மோட்டார் சைக்கிள், உழவுயந்திரம் போன்ற வாகனங்களுக்கான வருடாந்த அனுமதிப்பத்திரம் இவ்வலுவலகத்தால் வழங்கப்படுகிறது.

6. வியாபார நிறுவனப் பதிவுகள் :-

இப்பிரிவுக்குரிய கடைகள், தொழிற்சாலைகள் ஒப்பந்த நிறுவனங்கள் ஆகியவை புதிதாக ஆரம்பிக்கப்படும் போது அதற்கான அனுமதி வழங்குவதும் மற்றும் மதுபான சாலைகள் திறத்தல், நகை அடவுபிடிக்கும் நிலையங்கள் போன்றவற்றுக்கான அனுமதிப்பத்திரம் வழங்கல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**7. காணி சம்பந்தமான வேலைகள் :-**

பிரிவில் உள்ள அரச காணிகளை இனங்காண்பது, அவற்றுக்கன பதிவுகள், அனுமதிப் பத்திரங்கள் வழங்குவது, அவற்றில் உள்ள பிணக்குகளை தீர்ப்பது, காணியற்றவர்களை இனம்கண்டு குடியிருப்பு விவசாய தேவைகளுக்கு காணிகளை வழங்குவது, வேறு அபிவிருத்திவேலைகளுக்கு, பாடசாலைகள், தொழிற்சாலைகள், வைத்தியசாலை போன்றவற்றிற்கு காணிகள் வழங்குவது.

அரச காணி இல்லாத போது தனியார் காணிகளை சுவிகரிப்பது.
அரச காணிகளை அடாத்தாக பிடித்தவர்களிடம் இருந்து அவற்றை மீளப்பெறுவது.
பிற நிறுவனங்களுக்காக காணிகளை சுவீகரித்தல் போன்ற வேலைகள்.

**1. வனப் பொருட்கள் சம்பந்தமான வேலைகள் :-**

அரச வளங்களை பாதுகாத்தல், மற்றும் வனங்களையும் பாதுகாத்தல், மரம் தறித்தல், அகற்றுதல் மரத்தொழிற்சாலைக்கான அனுமதிப்பத்திரம் தளபாட அனுமதிப்பத்திரம் மணல், கல், போன்றவற்றை அகழுதல், அகற்றுதல் சம்மந்தமான அனுமதிப்பத்திர வேலைகள்.

**2. அனர்த்த நிவாரண வேலைகள் :-**

புயல், சூறாவளி, வெள்ளம் நிலச்சரிவு யுத்தம், சுனாமி காட்டுவிலங்குகளால் ஏற்படும் அனர்த்தத்தின்போது உடனடியான நிவாரண வேலைகளும் பின்னர் மீள் குடியேற்றம் போன்ற பெரும் வேலைகளும் இவ்வலுவலகத்தால் செய்யப்படுகின்றன.

**3. வதிவிட மற்றும் நற்சான்றிதழ் வழங்கல் :-**

கிராமசேவை உத்தியோகத்தர் மூலம் இப்பிரிவிலுள்ள குடிமக்களின் வதிவிட மற்றும் நடத்தைபற்றிய சான்றிதழ் வழங்கல் மற்றும் ஜனாதிபதி நிதியம் போன்றவற்றில் இருந்து உதவி பெறுவதற்கான சான்றிதழ்கள் அறிக்கைகள் வழங்குதல் போன்ற வேலைகள். புலமைப்பரிசில், பல்கலைக்கழகம், தொழில்நுட்ப கல்லூரிக்கான உதவு தொகை விண்ணப்பங்கள் பற்றிய வேலைகள்.

**4. சமுர்த்தி வறுமை ஒழிப்பு :-**

பிரிவிலுள்ள வறியோரை சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மூலம் இனம் கண்டு அவர்களுக்கு நிவாரணங்கள் வழங்குதல். அவர்களை பொருளாதார ரீதியில் பலப்படுத்துவதற்கான திட்டங்கள் தீட்டுதல், சமுர்த்தி வங்கி மூலம் கடன் மற்றும் நிவாரணங்கள் வழங்குதல். எரிபொருள் மற்றும் வீடமைப்பு நிவாரணங்கள் வழங்குதல். உட்கட்டமைப்பு வேலைகளைச்செய்தல், சமுர்த்தி பயனாளிகளுக்கான பல நலனுதவித்திட்டங்கள், பிறப்பு, இறப்பு, திருமண நோய்க் கொடுப்பனவுகள்.

**5. அபிவிருத்தி திட்டமிடல் வேலைகள் :-**

(அ) பிரிவுக்கு தேவையான அபிவிருத்திட்டங்களை இனங்காண்பது அதற்கான வளங்களைத்தேடுவது, திட்டங்களை முன்நிலைப்படுத்துவது, உரிய அனுமதியினைப்பெறுவது மதிப்பீடுகள் தயாரிப்பது, வேலையை அமுல்படுத்துவது கொடுப்பனவுகள் செய்வது, மீள் மதிப்பீடு செய்வது, கண்காணிப்பது போன்ற பல வேலைகள்.

(ஆ) அரசாங்கத்தின் பிரதான வேவலைத்திட்டமான “கமநகும” “மகநகும” மற்றும் பன்முகப்படுத்தப்பட்ட நிதி, வேறு திணைக்கள நிதிகள் மூலமான வேலைகளை அமுல்ப்படுத்துவது. தரவுகள் சேகரிப்பது அவற்றைப் பாதுகாப்பது போன்ற வேலைகள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இ) பிரதேச ஒருங்கிணைப்பு (Divisional Coordinating Work) பிரிவுக்கான ஒருங்கிணைப்பு கூட்டங்களை நடாத்துதல் ஏனைய நிறுவனங்கள், திணைக்களங்களை கூட்டி பிரிவின் அபிவிருத்தி மற்றும் பிரச்சினைகளை திர்ப்பதற்கான உபாயங்கள் பற்றி கலந்துரையாடுவது திர்மானங்கள் எடுப்பது.

(ஈ) தொண்டர் நிறுவனங்களை ஒருங்கிணைப்பது, அவர்களது வேலைத் திட்டங்களைக்கண்காணிப்பது.

(உ) வாழ்வாதார உதவித்திட்டங்களை நடைமுறைப்படுத்துவது, அவற்றின் முன்னேற்றம், மீள்மதிப்பீடு போன்ற வேலைகள்.

1. கிராம அபிவிருத்தி வேலைகள் :-
(அ) கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் மூலம் கிராம அபிவிருத்தி, மாதர்கிராம அபிவிருத்தி சங்கங்கள் தாபித்தல் அபிவிருத்தி மற்றும் சிரமதான வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தல்.

(ஆ) தையல் பயிற்சி கைப்பனி விடயங்கள், தோட்ட வேலைகள் போன்றவற்றில் பெண்களுக்கான பயிற்சி வழங்குதல்.

(இ) அரச சார்பற்ற மற்றும் அரச உதவிகள் மூலம் சுழற்சி கடன் வழங்கலை மேற்கொண்டு கிராம மட்ட அபிவிருத்தியை மேற்கொள்ளல்.

2. சுற்றாடல் சூழல் பாதுகாப்பு :-
சுற்றாடல் பேணுதல், சுற்றாடல் உத்தியோகத்தர் மூலம் விழிப்புணர்ச்சிகளை ஏற்படுத்துதல்.

பிரதேச சபையுடன் இணைந்து சூழலை பாதுகாப்பதற்கான வேலைத்திட்டங்களை முன்னெடுத்தல்.

3. விளையாட்டு அபிவிருத்தி. :-
விளையாட்டு உத்தியோகத்தர் மூலம் விளையாட்டுக்கழகங்களை பதிவு செய்தல் விளையாட்டுப் போட்டிகளை நடத்துதல்.

4. இளைஞர் பெண்கள் அபிவிருத்தி :-
இளைஞர் சேவை உத்தியோகத்தர் மற்றும் பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர் மூலம் இளைஞர் நலவிடயங்களை பெண்கள் அபிவிருத்தி சம்பந்தமான வேலைகள்.

5. சிறுவர் பாதுகாப்பு :-
சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் மூலம், சிறுவர் துஷ்பிரயோகத்துக்கு எதிரான வேலைத்திட்டங்கள் மற்றும் அனாதரவான சிறுவர்கள் அபிவிருத்தி திட்டங்கள் நடைமுறைப்படுத்தல்.

6. விஞ்ஞான தொழில் நுட்ப விடயங்கள் :-
பிரிவில் நவீன தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்தும் முகமாக "விதாதா" நிறுவனத்தை தாபித்து புதிய நுட்பங்களை அறிமுகப்படுத்துதல் பயிற்சி அளித்தல் "நனசல" நிலயங்களை தாபித்து தொலைத் தொடர்பு துறையில் புதிய நுட்பங்களை விரிவுபடுத்தல்.

7. கலாசார வேலைகள் :-
எமது பிரிவில் உள்ள கலாச்சார முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் மற்றும் பொருட்களை இனங்காணுதல் அவற்றைப்பாதுகாத்தல் கலாச்சார உத்தியோகத்தரின் மூலம் பாரம்பரிய கலைகள் மற்றும் பண்பாடுகளை மேம்படுத்துவதற்கான


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலைத்திட்டங்களை முன்னெடுத்தல் கலாச்சார விழாக்களை நடத்துதல் கலைஞர்களை வாழ்துதல்.

1. வீடமைப்பு (சுனாமி, யுத்தம், மீனவர் ஏழை) மீள்குடியேற்றம் :-
வீடமைப்பு அதிகார சபை மூலம் ஏழைகளுக்குக்கான வீடமைப்பு உதவிகள் கடன்கள் வழங்குதல்.

சுனாமி யுத்தம் போன்றவற்றால் பாதிக்கப்பட்டவர்களுக்கான பாரிய வீடமைப்பு வேலைதிட்டங்களை அதற்கான நிறுவனங்களின் உதவியுடன் மேற்கொள்ளல். தேவையான இடத்து வேறு இடங்களில் (Re-Location) மீள் குடியேற்றுதல். மீனவர்களுக்கு வீடமைப்பு வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.

2. புடவை கைத்தொழில் நிலையங்கள் :-
புடவை கைத்தொழில் மத்திய நிலையம் மூலம் உள்ளூர் கைத்தறி, விசை தறி உற்பத்தியை மேம்படுத்தும் வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.

3. தொழில்பயிற்சி, தொழிலாளர் நலம் :-
தொழில்பயிற்சி உத்தியோகத்தர் மூலம் மத்திய கிழக்கு நாடுகளில் இருந்து வந்தோர் நலம் பேணுதல் மற்றும் தொழில் வங்கிகளை ஏற்படுத்தல், தொழில் தருனர்களை தொடர்பு படுத்தல் தரவுகளை சேகரித்தல்.

4. சமய பண்பாட்டு அலுவல்கள் :-
சமய நிலையங்களை பற்றிய தரவுகள் மற்றும் தேவையான நேரத்தில் அதற்கான உதவிகள், உரிய திணைக்களகங்களில் அவற்றை பதிவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளல், அவற்றின் அபிவிருத்தி வேலைகளுக்கு உதவுதல்.

5. புள்ளி விபரம் :-
புள்ளி விபர உத்தியோகத்தர் மற்றும் ஏனையவர்களின் உதவியுடன் பிரிவின் சகல தரவுகளையும் சேகரித்தல், குடிசனம், வீடுகள், கால்நடை விலங்குகள், பறவைகள், தொழில் நிலையங்கள் விவசாய அறுவடை போன்ற பல தரவுகளையும் திரட்டுதல்.


6. பிற விடயங்கள் :-
(அ) நெல் கொள்வனவு.
(ஆ) பசளை விநியோகம்.
(இ) மர நடுகை.
(ஈ) தேர்தல்.
(உ) மீன்பிடி
(ஊ) கூட்டுறவு, கூட்டுறவுச் சங்கங்கள்.
(எ) மத்தியஸ்த சபை (Mediation Board)
(ஏ) கடலோரப்பாதுகாப்பு (Coastal Conservation)
(ஒ) அரச விழாக்களை ஒழுங்குசெய்தல்.

போன்ற பல விடயங்களிலும் அது தொடர்பான கடமைகளிலும் ஈடுபடுதல்.


மேற்படி கடமைகளை ஆற்றும் போது பழைய காலங்களைப் போல் அன்றி,பிரகடன பட்டயத்தில் காட்டப்பட்டவாறு உரிய நேரத்தில் விரைவாக சேவைகள் மக்களை சென்றடைய ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. உடனடியாக செய்து முடிக்க முடியாத வேலைகள் சம்பந்தமாக மூன்று நாள் விதி இடைக்காலப் பதில் என்பன அனுப்பப்படுகின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காரைதீவுப் பிரதேச நிர்வாக எல்லைகளைக் காட்டும் வரைபடம்




## காரைதீவுப் பிரதேச வீதிகளினைக் காட்டும் வரைபடம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சுவாமி நடராஜானந்தர் அவர்களின் வாழ்க்கைச் சுருக்கம்

| | | |
|---|---|---|
| பிறப்பு | - | 1903 நவம்பர் 29ஆந் திகதி |
| இடம் | - | மட்டக்களப்பின் காரைதீவு. |
| தந்தை | - | கதிர்காமத்தம்பி விதானையார். |
| தாய் | - | மயிலம்மா. |
| இளமைப்பெயர் | - | சீனிவாசகம். |

1909 - ஆரம்பக்கல்வி:- காரைதீவு ஆண்கள் பாடசாலை,
கல்முனை அர்ச் மரியாள் கல்லூரி,
யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி.

1919 - கேம்பிரிச் சீனியர் பரீட்சையில் சித்தி பெற்றமை.
இலண்டன் மெட்ரிக்குலேசன் சித்தி பெற்றமை.

1920 - ஆங்கில ஆசிரியர் தராதரப்பத்திரத்தில் சித்தி பெற்றமை.
ஆசிரியர் பணியை ஏற்றமை.

1921 - திருமலை இந்துக்கல்லூரி, யாழ்/வைத்தீஸ்வராக்கல்லூரி, மட்/சிவானந்தா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் ஆசிரிய சேவை புரிந்தமை.

1930 - நீர்ப்பாசன பகுதியில் பொறியியல் உதவியாளர் பணி.

1932 - சுவாமி விபுலானந்தரின் நெருங்கிய உறவு கிடைத்தமை.

1935 - பதவிகளைத் துறந்து துறவு பூண ஆயத்தம்.

'நிர்வேத சைதன்யர்' எனும் பிரம்மச்சரியத்துடன் துறவறம் புகுந்து பயிற்சியை பெற்றமை.

1937 - பாரத நாட்டிலுள்ள இ.கி.சங்க ஸ்தாபனங்களில் கடமை புரிந்தமை.

1940 - 02ஆம் உலக மகாயுத்த காலத்தில் பாதிப்புற்றோருக்கு உதவுவதற்கு பர்மாவின் ரங்கூனில் சேவை.

1943 - கல்கத்தா இ.கி.மி தலைமைப்பீடத்தில் சுவாமி அகண்டானந்தரைக் குருவாகக் கொண்டு சன்னியாச தீட்சை பெற்றார. அப்போது சுவாமி 'நடராஜானந்தர்' எனும் திருநாமம் பெற்றார்.

1945 - இலங்கையிலுள்ள இ.கி.மி. பாடசாலைகளின் முகாமையாளராகப் பணியாற்றினார்.

1950 - 26 மிசன் பாடசாலைகளின் முகாமையாளராக மட்/இ.கி.மி மடாலயத்திலிருந்து கொண்டு சேவை.

1962 - அரசாங்கம் இ.கி.மிபாடசாலைகளை பொறுப்பேற்றும் ஆனைப்பந்தி மகளிர் இல்லம், கல்லடி உப்போடை சிறுவர் இல்லம், காரைதீவு சிறுமியர் இல்லம் ஆகிய 03 இல்லங்களும் பராமரித்து வந்தமை.

1967 - 1967.03.18, அதிகாலை 4.45 மணியளவில் பகவான் ஸ்ரீராமகிருஷ்ண பரமகம்சரின் திருவுருவப்படத்தை மார்பில் தாங்கிய வண்ணம் இறைவனடி சேர்ந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# காரைதீவுப் பிரதேச ஆட்புலம் - நிர்வாக வரலாறு

எஸ்.நாகராஜா
செயலாளர்
பிரதேசசபை ஆலயடிவேம்பு

இலங்கைத்தீவின் கிழக்கு மாகாணத் தலைநகர் மட்டக்களப்பு நகரின் தென்புறத்தில் 28 மைல் கல் (45 கி.மி) தொலைவில் அம்பாரை மாவட்டத்தில் அமைந்துள்ள காரைதீவு என்னும் ஊர்பற்றி இத்தீவிலுள்ள அனைவரும் நன்கறிவர். வரலாற்றுச்சிறப்பு மிக்க ஸ்ரீ கண்ணகை அம்மன் ஆலயம், ஸ்ரீ சித்தானைக்குட்டிச் சித்தர் சித்துக்கள் பல புரிந்து சமாதியடைந்த பூமி, மற்றும் உலகம் போற்றும் முத்தமிழ் வித்தகர் கிழக்கின் கல்விக் களஞ்சியம் விபுலானந்த அடிகள் பிறந்து வளர்ந்த கிராமம், அவ்வாறே சேவையின் சிகரமான சுவாமி நடராஜானந்தா அவர்களது பிறப்பிடம், பல கல்விமான்கள், கலைஞர்களின் பூர்வீக வாழிடம் என்பதால் இக்கிராமத்திற்கு தனியான சிறப்பும் பெருமையும் உண்டு.

இவ்வாறான இப்பூமிப்பிரதேசம் 1961ஆம் ஆண்டில் அம்பாரை மாவட்டம் தோற்றம் பெறுவதற்கு முன்னர் மட்டக்களப்பு மாவட்டத்திற்குச் சொந்தமான ஒரு பிரதேசமாக இருந்து தற்போதைய அம்பாரை மாவட்டமும் முன்னர் கரைவாகுப்பற்று, அக்கரைப்பற்று, பாணமைப்பற்று, சம்மாந்துறைப்பற்று, வேகம்பற்று என ஐந்து பெரும் பிரிவுகளைக் கொண்டதாக இருந்தது. அம்பாரை மாவட்டம் உருவாகிய பின்னர் கரைவாகுப் பற்று கரைவாகு, நிந்தவூர் என இரு பிரிவுகளாகவும் அக்கரைப்பற்று அட்டாளைச்சேனை, அக்கரைப்பற்று ஆலையடிவேம்பு, திருக்கோயில் என நான்கு பிரிவுகளாகவும், சம்மாந்துறைப்பற்று பிற்காலத்தில் சம்மாந்துறை, நாவிதன்வெளி, இறக்காமம் எனவும், பாணமைப் பற்று பொத்துவில், லகுகல என இரண்டாகவும் வேகம் பற்று உகனை,தமனை, அம்பாரை என மூன்றாகவும் பிரிந்தன. அத்துடன் மட்டக்களப்பு மாவட்டத்துடன் இணைந்திருந்த மகா ஓயா, பதியத்தலாவ என்னும் பிரிவுகளும் அம்பாரை மாவட்டத்துடன் இணைக்கப்பட்டது. மேலும் மகாவலிப்பிரதேசமான தெஹியத்த கண்டிய என்னும் பிரதேசமும் புதிய பிரதேச செயலகப் பிரிவாக அம்பாரையுடன் இணைக்கப்பட்டது.

சனத்தொகை அதிகரிப்பு காரணமாகப் பின்நாளில் கல்முனைப் பிரிவு கல்முனை, சாய்ந்தமருது எனப்பிரிவடைந்ததுடன் கல்முனைத் தமிழ் பிரிவும் தோற்றம் பெற்று இன்னமும் சரியான பூரண அந்தஸ்தைப்பெறாத பிரிவாக இயங்கி வருகின்றது.

ஆரம்பத்தில் கரைவாகுப்பற்றிலிருந்து 1971 ஆம் ஆண்டு நிந்தவூர் பிரிந்த போது காரைதீவுப் பிரதேசமும் நிந்தவூருடன் இணைத்துக்கொடுக்கப்பட்டது. இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து காரைதீவு பிரதேச மக்கள் தங்களை நிந்தவூருடன் இணைக்க வேண்டாமென அப்போதைய அமைச்சர் காலஞ்சென்ற கௌரவ.W.தகநாயக்கா அவர்களுக்கு எதிராகக் கறுப்புக் கொடி காட்டிப் பெரும் ஆர்ப்பாட்டம் செய்தனர்.

அவர்களது எதிர்ப்பிற்கு மத்தியிலும் காரைதீவுப் பிரதேசம் நிந்தவூர் பிரதேசத்துடன் இணைக்கப்பட்டு நிர்வாக நடவடிக்கைகள் நடைபெற்று வந்தன.அக்காலகட்டத்தில் பிரதேச சபை என்ற முறை இருக்கவில்லை. கிராமசபைகளே கிராம அபிவிருத்திகளை கவனித்து வந்தது. அப்போது காரைதீவிற்கும் நிந்தவூருக்கும் தனித்தனியான கிராம சபைகள் இயங்கி வந்தன. நிர்வாக ரீதியான வேலைகள் நிந்தவூருடன் இணைக்கப்பட்டபோதும் காரைதீவு மக்கள் தங்களுடைய பலநோக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட்டுறவுச்சங்கத்தை கரைவாகுப்பற்றுடனே வைத்துக்கொண்டனர். தனியார் நெற்காணிகளும் கரைவாகுப்பற்றுடனே பதியப்பட்டிருந்தன. காலஞ்செல்லச்செல்ல தங்களுக்கு என தனியான ஒரு பலநோக்கு கூட்டுறவுச்சங்கத்தினையும் கரைவாகுவிலிருந்து பிரித்து அமைத்துக்கொண்டனர். பின்னர் கமநல சேவைநிலையமும் காரைதீவிற்கென தனியாக தாபிக்கப்பட்டது.

காரைதீவுப்பிரதேசம் தமிழர்களையும், இந்துக்களையும் அதிகமாகக்கொண்ட ஒரு பிரதேசமாக காணப்பட்டாலும் இதன் வடமுனையில் முஸ்லிம் மக்கள் வாழும் மாளிகைக்காடு என்னும் கிராமத்தையும் மேற்குப்புறத்தே வயல்களுக்கு மத்தியில் அரசபண்ணையாக இருந்த முஸ்லிம் மக்கள் வாழும் மாவடிப்பள்ளி என்னும் கிராமத்தையும் உள்ளடக்கிய பிரதேசமாகும்.இப்பிரதேசம் பரப்பளவு ரீதியாக குறைந்திருந்தாலும் சனத்தொகை அடர்த்தி கூடியபிரதேசமாக விளங்குகின்றது. இதன்கிழக்கு கரையில் இருக்கின்ற கடல்வளமும்,மேற்கில் பரந்து விரிந்து பசுமை பரப்பிக்கொண்டிருக்கும் வயல்களும் இப்பிரதேசத்தின் செழிப்பிற்கு முக்கிய காரணிகளாகும்.

## சுற்றுலா அலுவலகமும் மேலதிக உதவி அரசாங்க அதிபர் அலுவலகமும்

காரைதீவிற்கென தனியான உதவி அரசாங்க அதிபர் அலுவலகம் தாபிக்கப்பட வேண்டும் என்ற மக்களின் தொடர்ச்சியான போராட்டத்தினால் நிந்தவூர் பிரிவு காரைதீவுப் பிரதேசத்திற்கென ஒரு சுற்றுலா அலுவலகத்தை காரைதீவு கிராமச்சங்க வளவில் சிறிது காலமாக நடத்திவந்தது. அது ஒரு பெயரளவிலான அலுவலகமாகவே காணப்பட்டதுடன் மக்களின் அன்றாட எக்கருமமும் அங்குநிறைவேற்றப்படவில்லை. பின்னர் அது இயங்காத நிலையில் நிந்தவூர் அலுவலகத்திலே மக்கள் தங்கள் கருமங்களை நிறைவேற்ற வேண்டிய நிலை இருந்தது.

1985ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் இப்பகுதியில் ஏற்பட்ட இன வன்செயல் காரணமாக மக்கள் வெளியில் நடமாடமுடியாத ஒரு சூழ்நிலை இருந்ததுடன் பெருமளவிலான உயிர்ச் சேதங்களும், உடமைகளுக்கான சேதங்களும் ஏற்பட்டிருந்தது. இந்த நிலையில் தான் நிந்தவூர் அலுவலகத்தின் மேலதிக உதவி அரசாங்க அதிபர் அலுவலகம் ஒன்று காரைதீவு கிராம சங்க வளவிலுள்ள நூலகக்கட்டடத்தின் ஒருபகுதியில் ஆரம்பிக்கப்பட்டது. 1985 ஏப்ரல் பிற்பகுதியில் அவ்வலுவலகத்தின் முதலாவது உத்தியோகத்தராக எழுதுவினைஞர் பொறுப்பை தற்போதைய பிரதேச செயலாளர் திரு.செ.இராமகிருஷ்ணன், பொறுப்பேற்றுக் கொண்டார். அதன் பின்னர் ஒரு அலுவலகப்பணியாளரான காலஞ்சென்ற திரு.க.வெற்றிவேல் அவர்கள் நியமிக்கப்பட்டார். அப்போதைய பொத்துவில் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினரும் மட்டக்களப்பு மாவட்ட அமைச்சருமான ரங்கநாயகி பத்மநாதன் அவர்களின் பெரு முயற்சியினால் இது நிரந்தரமான மேலதிக உதவி அரசாங்க அதிபர் அலுவலகமாக்கப்பட்டு எழுதுநர் சேவையைச்சேர்ந்த காலஞ்சென்ற திரு.அ.திருஞானசம்பந்தர் அவர்களும் அதன் பின் திரு.சி. அருட்சிவம் அவர்களும் திரு.ப.கிட்ணபிள்ளை அவர்களும் மேலதிக உதவி அரசாங்க அதிபரர்களாக நியமிக்கப்பட்டார்கள். அதன் பின்னர் சிறிது சிறிதாக கருமங்கள் இங்கு ஆரம்பிக்கப்பட்டன. குறிப்பாக புனர்வாழ்வு புனர் அமைப்பு வேலைகள் இங்கு செய்யப்பட்டன. திருமதி ரங்கநாயகி பத்மநாதன் அவர்களின் நிதி ஒதுக்கீட்டின் மூலம் ஒரு நிரந்தர கட்டடமும் அமைக்கப்பட்டது.

## உதவி அரச அதிபர் அலுவலகம்

கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் திருமதி.ரங்கநாயகி பத்மநாதன் அவர்களின் முயற்சியினாலும், வேண்டுதலின் பெயரிலும் முன்னைநாள் உள்நாட்டலுவல்கள் அமைச்சர் கௌரவ.கே.டபிள்யு.தேவநாயகம் அவர்களால் 1988ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் இந்த மேலதிக உதவி அரசாங்க அதிபர் அலுவலகம் பூரண அதிகாரம் கொண்ட உதவி அரசாங்க அதிபர் அலுவலகமாக தரமுயர்த்தப்பட்டு புதிய கட்டடத்தில் இயங்க ஆரம்பித்தது .



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயினும் பிரதேச சபை விடயத்தில் காரைதீவிற்கென தனியான பிரதேச சபை பிரிக்கப்படாமல் நிந்தவூர் பிரதேச சபையுடன் இணைந்த ஒரு பிரதேசமாக காரைதீவு உதவி அரசாங்க அதிபர் பிரிவு சேர்க்கப்பட்டு வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டிருந்தது. அதே நேரம் ஆலையடிவேம்புக்கு தனியான ஒரு பிரதேச சபை பிரித்து வழங்கப்பட்டிருந்தது. இதன் தாக்கம் அப்போது மக்களுக்கு தெரியவில்லை. இதனால் பிரதேச சபை விடயத்தில் அவர்கள் எவ்வித அழுத்தத்தையும் பிரயோகிக்கவில்லை. உதவி அரசாங்க அதிபர் அலுவலகம் படிப்படியாக வளர்ச்சி கண்டு ஆளணிகளைப் பெற்று சிறப்பாக இயங்கத்தொடங்கியது.அமைச்சு நிதி ஒதுக்கீட்டின் மூலம் உதவி அரச அதிபர் உத்தியோக பூர்வ வாசஸ்தலமும் அமைக்கப்பட்டு நிறைவு பெறும் நிலையில் இருந்தது.

காலத்துக்கு காலம் அரசினால் கொண்டு வரப்படும் நிருவாக மறுசீரமைப்புக்கு அமைவாக காலஞ்சென்ற முன்னாள் ஜனாதிபதி ஆர்.பிறேமதாச அவர்களின் புதிய சிந்தனைக்கு ஏற்ப சகல விடயங்களும் பிரதேச மட்டத்திற்கு பரவலாக்கப்பட்டு சேவைகளை மக்களின் காலடிக்கு கொண்டுசெல்லும் கொள்கைக்கு அமைய பிரதேச செயலகத்திட்டம் அறிமுகம் செய்யப்பட்டது. 1991ம் ஆண்டு ஒவ்வொரு பிரதேச சபைப்பிரிவும் (உதவி அரச அதிபர் பிரிவு அல்ல) பிரதேச செயலகமாகச் செயற்பட வேண்டும் என்ற சட்டம் கொண்டுவந்த போது காரைதீவிற்கென பிரதேச சபை இல்லாத காரணத்தால் காரைதீவுப்பிரதேசம் மீண்டும் நிந்தவூர் பிரதேசத்தின் ஒரு பகுதியாக நிந்தவூர் பிரதேச செயலகத்துடன் இணைக்கப்பட்டு காரைதீவு உதவி அரசாங்க அதிபர் பிரிவு நிந்தவூர் பிரதேச செயலகத்தின் ஒரு உப அலுவலகமாக்கப்பட்டது. அதாவது 1988ம் ஆண்டு தொடக்கம் 1991 வரை பூரண அதிகாரமுள்ள அலுவலகமாக இயங்கி வந்த காரைதீவு அலுவலகம் மறுபடியும் 1988ம் ஆண்டிற்கு முன்பு இருந்தவாறு மேலதிக உதவி அரசாங்க அதிபர் அலுவலகம் போன்று உதவிப் பிரதேச செயலகமாக இயங்கத்தொடங்கியது. இந்த நிகழ்வானது மக்கள் அனுபவித்து வந்த உரிமைகளை பறிப்பதற்கான ஒருவிடயமாக இருந்தபோதிலும் வடக்கு கிழக்கு மாகாண சபை தாபிக்கப்பட்ட பின்னர் அலுவலகத்திற்கான ஆளணியில் பெரும்பகுதியினர் மாகாண சபையினால் நியமிக்கப்பட்டதுடன் அவர்களுக்கான கொடுப்பனவுகள் யாவும் தனியான செலவு மதிப்பிட்டின் கீழ் ஒதுக்கப்பட்டிருந்ததும், காரைதீவு – நிந்தவூர் மக்களதும், உத்தியோகத்தர்களதும் நல்லெண்ணம் பரஸ்பர புரிந்துணர்வு காரணமாகவும் இப்பிரதேசத்திற்குரிய சகல வேலைகளும் அதாவது காணி வேலை, பிறப்பு, இறப்பு பதிவு வேலை வறுமை நிவாரண புனர்வாழ்வு, புனர்நிர்மான சமூர்த்தி, அடையாள அட்டை போன்ற பல வேலைகள் முழுமையாகவும் ஓய்வூதியம், அபிவிருத்தி வேலைகளின் பெரும்பகுதியும் இவ்வலுவலகத்தினாலே செய்யப்பட்டு வந்தன. இதனால் இதன் தாக்கம் இப்பிரதேச மக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தவில்லை.

இப்பிரதேசத்தில் 1985,1988 மற்றும் 1990 ஆகிய காலப்பகுதிகளில் ஏற்பட்ட பாரிய இன வன்முறைகளுக்கு மத்தியிலும் காரைதீவு – நிந்தவூர் மக்களது பரஸ்பர சமூக உறவின் மூலமும் 1991ம் ஆண்டு மே மாதம் பிரதேச செயலாளரான திரு.எஸ்.இராமகிருஷ்ணன் இலங்கை நிர்வாக சேவையைச்சேர்ந்த அலுவலராக நியமிக்கப்பட்டு ஏற்கனவே இனங்களுக்கிடையில் இருந்த கசப்புணர்வுகளை மாற்றி இரு சமூகத்தவர்களும் அன்னியோன்யமாகப் பழகும் நிலை உருவாக்கப்பட்டது. இதன் காரணமாக இங்கு பிரதேச செயலகம் அமைக்கப்பட வேண்டும் என்பதில் மக்கள் அதிக அக்கறை செலுத்தவில்லை.

விடயம் தெரிந்த சிலர் மாத்திரம் பிரதேச செயலகம் என்பது பல விடயங்களுக்கான திறவுகோல் என்பதை உணர்ந்து பிரதேச செயலகம் அமைக்கப்பட்டால் தான் கோட்டக்கல்வி அலுவலகம்,சுகாதார அலுவலகம்,பிரதேச சபை, விவசாய கால்நடை அபிவிருத்தி அலுவலகம் போன்ற பல முக்கிய அலுவலகங்களை இப்பிரதேசத்திலும் தாபிக்கமுடியும் என்பதால் இதில் தீவிர கவனம் செலுத்தினார்கள் மாவட்டத்தில் அப்போது இருந்த அரசியல் நிலை இனமுறுகல் நிலை போன்றவற்றிற்கு மத்தியிலும் எமது பிரிவின் இனங்களுக்கிடையில் இருந்த ஒற்றுமை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரிந்துணர்வு சிறந்த அணுகுமுறை போன்ற காரணங்கள் காரைதீவிற்கென தனியான பிரதேச செயலகம் அமைய வேண்டும் என்ற விழிப்புணர்வையும் ஆர்வத்தையும் மக்கள் மத்தியில் ஏற்படுத்த உறுதுணையாக இருந்தது. இதன் காரணமாக அமைச்சர் கௌரவ பி.தயாரத்னா அவர்கள் 16-06-1993ல் காரைதீவு பிரஜைகள் குழுச்செயலாளர்களுக்கு எழுதிய கடிதத்தில் (இணைப்பு – *II*) காரைதீவிற்கென பிரதேச சபை அமைக்க கடந்த மந்திரி சபைக்கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டதென அறிவித்திருந்தார். இவ்வாறு இருந்த போதிலும் இது தவறுதலாக அறிவிக்கப்பட்டு விட்டதென பின்னர் மறுத்திருந்தார்.

இவ்வாறான துர்ரதிஸ்ட நிலையிலும் கூட மக்களின் தொடர்சியான வற்புறுத்தலினால் பிரதேச செயலாளர் திரு.எஸ்.இராமகிருஷ்ணன் நேரடியாகவும் மற்றும் நண்பர்களான வெ.ஜெகநாதன், திரு.வி.ரி.சகாதேவராஜா, திரு.கே.கணேசமூர்த்தி ஆகியோருடனும் மேலும் பல முஸ்லிம் அன்பர்கள் மூலமாகவும் காலஞ்சென்ற அமைச்சர் முஸ்லிம் காங்ரசின் தாபகர் மர்ஹூம் எம்.எச்.எம்.அஷ்ரப் அவர்களை தொடர்ச்சியாகச்சந்தித்து எமது கோரிக்கைகளை வற்புறுத்தியதன் காரணமாகவும் அப்போதைய அரச அதிபர் திரு.ஏ.ஐ.விக்ரம, திரு.எம்.விக்ரமரத்தின போன்றவர்களின் சிபார்சின் மூலமும் 26-06-1999 முதல் நிரந்தர பூரண அந்தஸ்துள்ள பிரதேச செயலகம் உருவாகியது. இதனை மாண்பு மிகு அமைச்சர் மர்ஹூம் எம்.எச்.எம்.அஷ்ரப் அவர்களே திறந்து வைத்து புதிய கட்டடத்திற்கான நிதியையும் ஒதுக்கித்தந்தமை இப்பிரதேச மக்கள் என்றென்றும் நினைவில் அழியாது வைத்திருக்கவேண்டிய ஒரு நிகழ்வாகும்.

பிரதேச செயலகம் கிடைத்தது முதல் திரு எஸ்.இராமகிருஷ்ணன் தொடர்ச்சியாக இப்பிரதேசத்தின் பிரதேச செயலாளராக இருந்து வருகின்றார். அதற்கு முன்னரும் 1985 ஏப்ரல் மாதத்தில் இருந்து இன்றுவரை இங்கு இவர் தொடர்ச்சியாக கடமைபுரிவதற்கு இங்குள்ள தமிழ் முஸ்லிம், கிறிஸ்தவ மக்கள் அவருக்கு தரும் ஒத்துழைப்பே முக்கியமானதாகும். ஓவ்வொருமுறையும் இடமாற்றம் கிடைக்கும்போதும் அதை யாராவது அறிந்தால் அமைச்சர்களைப் பிடித்தும் நேரடியாகக் கடிதங்கள் எழுதியும் இதனை இரத்துச் செய்வதும் இம்மக்களின் வழமையாகும். ஒருமுறை கௌரவ அமைச்சர் பேரியல் அஷ்ரப் அவர்கள் இவரிடம் **"இந்த மக்களை அதுவும் முஸ்லிம் மக்களுக்கு என்ன கொடுத்து மயக்கி வைத்துள்ளீர்கள் அதை எனக்கும் சொல்லித்தாருங்கள்"** என்று அன்போடு கேட்க, அதற்கு அவர் "அமைச்சர்களான மர்ஹூம் எம்.எச்.எம்.அஷ்ரப், கௌரவ ஏ.எல்.எம் அதாவுல்லா, கௌரவ மயோன் முஸ்தபா போன்றோரும் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களும், இயக்கப்போராளிகளும், அரச படையினர் என சகலரும் என்னுடன் அன்பாகவே இருந்துள்ளனர். எனது மேலதிகாரிகளும் தன்னுடன் அன்பாகவே இருந்து வருகின்றனர் இதற்கு தனது அலுவலகத்தில் உள்ள உத்தியோகத்தர்களது பூரண ஒத்துழைப்பும் குழு உணர்வும் தான் பிரதான காரணமாகும்" என அவரிடம் கூறியதாக என்னிடம் தெரிவித்ததை இங்கு குறிப்பிட வேண்டும்.

சில நல்ல செயல்கள் நடைபெறும் சந்தர்ப்பங்களில் அதை சகித்துக்கொள்ளாதவர்களும் எம் மத்தியில் உள்ளார்கள் என்பதற்கு ஆதாரமாக இங்கும் சில சலசலப்புக்கள் எழுவதுண்டு. பிரதேச செயலகம் திறப்பதற்கான வேலைகள் நடைபெற்றுக்கொண்டிருந்த வேளையில் காரைதீவின் பெரும்பகுதியை அமைச்சர் அஷ்ரப்புக்கு விற்றுவிட்டார்கள் என்று கூட சிலர் ஊருக்குள் ஒரு பரபரப்பை ஏற்படுத்த முற்பட்டபோதும் அலுவலக உத்தியோகத்தர்களது விடா முயற்சியும், என்னதான் சோதனை வந்தாலும் எடுத்த காரியத்தை முடித்தே ஆகவேண்டும் என்ற மனோதிடமும் பொறுமையுமே இதனை செய்து முடிக்க உதவியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காரைதீவுப் பிரதேசத்தின் அபிவிருத்தியும் பிரதேச செயலகத்தின் பங்கும்



சி.ஜெகராஜன் (SLAS)
உதவி பிரதேச செயலாளர்

காரைதீவுப் பிரதேசமானது வளமான நீண்ட வரலாற்றினைக் கொண்ட ஒரு பகுதியாகும்.அனேக பிரதேசங்களின் அபிவிருத்திப் போக்கினைப் போலவே இப் பிரதேசமும் காலவோட்டத்துடன் பன்முக அபிவிருத்தியினைக் கண்டு வந்திருக்கின்றது. அபிவிருத்தி என்பதற்கு முன்பு இருந்த நிலையில் இருந்து விரும்பத்தகுந்ததான இன்னுமொரு முன்னேற்றமான நிலைக்கு மாறுகின்றமை என எளிய விளக்கம் ஒன்றினை நாம் கருத்திற் கொள்ள முடியும்.

இந்த வகையில் காரைதீவுப் பிரதேசம் பல்வேறு துறைகளிலும் விரும்பத்தகுந்த பல மாறுதல்களை கடந்த காலங்களில கண்டு வந்திருக்கின்றது. பிரதேச அபிவிருத்தி என்ற ரீதியில் நாம் கண்ணோட்டம் செலுத்தும் போது அப்பிரதேசத்தில் பல்வேறுபட்ட துறைகளிலும் ஏற்பட்டுள்ள மாற்றங்களை உன்னிப்பாக ஆராய்வது அவசியமாகின்றது. அவற்றிலும் பிரதானமாக உட்கட்டுமான அபிவிருத்திகள்,வாழ்வாதாரம் தொடர்பான அபிவிருத்திகள், மனிதவள அபிவிருத்திகள் என்பன மிகுந்த முக்கித்துவம் வாய்ந்தவைகளாகும்.

மேலும், இவ்வாறான துறைகள் சார்ந்த அபிவிருத்தியின் தன்மை, வேகம்,நிலைபேறு போன்றவைகள் இயல்பாகவே பிரதேசத்தில் காணப்படும் வளங்கள், அமைவிடம்,இனங்களின் பரம்பல், பிரதேச கலாசாரம், பிரதேச அரசியல் நிலைமை போன்ற இன்னோரன்ன பல விடயங்களுடன் பின்னிப் பிணைந்த தன்மை கொண்டது.ஆகவே காரைதீவு பிரதேசத்தின் வளர்ச்சிப் போக்குக் குறித்து ஆராய்ந்து ஒரு முழுமையான தெளிவான பார்வையினைப் பெறுவதென்பது ஒரு விரிவான விடயமாகும்.

எவ்வாறெனினும் இன்றைய நிலையில் இலங்கையின் நிர்வாகக் கட்டமைப்பு ரீதியில் பெரும்பகுதியான அபிவிருத்தி வேலைகள் பிரதேச செயலகங்களால் நடைமுறைப்படுத்தப்பட்டும், கண்காணிக்கப்பட்டும், ஒழுங்கமைக்கப்பட்டும் வருகின்றமையினால் அபிவிருத்தி தொடர்பான பிரதேச செயலகங்களின் பங்களிப்பினை ஆராய்வது பிரதேச அபிவிருத்தி குறித்து அறிந்து கொள்வதற்கான ஒரு சிறந்த மாதிரியாகவும்(*sample*) சுருக்கமான உபாயமாகவும் அமையும் என்பதனை ஏற்றுக்கொள்ள முடியும்.

காரைதீவு பிரதேச செயலகத்தின் பரிணாம வளர்ச்சியென்பது 1985 களில் ஆரம்பிக்கின்ற போதிலும் 1991 இல் அது ஒரு பிரதேச செயலகம் போன்று ஒரு இலங்கை நிர்வாக சேவை அலுவலரின் வழிகாட்டலின் கீழ் இயங்கத் தொடங்கிய காலத்திலிருந்து ((முழுமையான அதிகாரம் கொண்ட பிரதேச செயலகம் 1999 இல் வர்த்தமானி அறிவித்தல் மூலம் தோற்றுவிக்கப்பட்டது) பிரதேச அபிவிருத்தியானது தெள்ளத்தெளிவான இலக்குகளுடனும், ஒழுங்கமைப்புடனும், ஒருங்கிணைத்தலுடனும் வேகமடைந்துள்ளதனைக் காணக்கூடியதாகவுள்ளது.

ஏறத்தாழ 8.6 சதுர கி.மீ பரப்பளவினையும் 19700 அளவிலான மக்கள் தொகையினையும் 17 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளையும் கொண்ட காரைதீவு பிரதேசமானது இயற்கையில் கொண்டுள்ள நெற்காணிகள் ,கடல் வளம், உள்ளூர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீர்நிலைகள் (கரைச்சை, களப்பு) போன்ற வளங்கள் காரணமாக விவசாய மற்றும் மீன்பிடிக் கைத்தொழிலில் குறிப்பிடத்தக்க வளர்ச்சி நிலையில உள்ள பகுதியெனலாம்.

தவிரவும் இப்பகுதி கல்விமான்களுடன் கொண்டிருந்த நீண்டகாலத் தொடர்புகளினாலும் கல்வியின் பால் இப்பகுதி மக்கள் கொண்டிருந்த ஆர்வத்தினாலும் இன்று கல்வியில் மேம்பட்ட மக்கள் வாழும் பகுதியாகவும் சிறந்த தொழில் முயலுனர்கள் உருவாகத்தக்க பகுதியாகவும் இப்பிரதேசம் விளங்குகின்றது.

பெரும்பான்மையாக இந்துக்கள் மற்றும் முஸ்லிம்கள் ஆகிய தமிழ் பேசும் இனங்களினைக் கொண்ட இப்பிரதேசத்தில் 12 கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் முழுமையாகத் தமிழ்பேசும் இந்துக்களைக் கொண்டதாகவும் 5 பிரிவுகள் முஸ்லிம்கள் வாழ்கின்ற பகுதியாகவும் காணப்படுகின்றது. இத்தகைய பின்னணியினைக் கொண்ட காரைதீவு பிரதேச அபிவிருத்திப் பாதையானது அனைத்துப் பிரதேச மக்களினையும் இணைத்துக் கொண்டு ஐக்கியமான வகையில் முன்னேற வேண்டிய சவால்கள் மிகுந்த பாதையாக அமைந்துள்ள போதிலும் காரைதீவுப் பிரதேச செயலகமானது இப்பணியினை மிகுந்த சிறப்புடன் செய்து வருகின்றது.

மேற்குறித்த காரணிகளையும் பின்புலத்தையும் வைத்து அவதானிக்கும் போது இப் பிரதேசமானது நல்ல முறையில் அபிவிருத்தி செய்யப்படவேணடியது அவசியமானதென்பது தெளிவாக ஏற்றுக் கொள்ளத்தக்க ஒன்றாக உள்ள போதிலும் எல்லாப் பிரதேசங்களிலேயும் காணப்படுவது போல் இப்பகுதியிலும் அபிவிருத்தியின் பொதுவான பிரச்சினையான "வளங்களின் பற்றாக்குறை" காரணமாக பிரதேச அபிவிருத்தியானது எல்லைப்படுத்தப்பட்டுக் காணப்படுகின்றது.இத்தகைய வளங்களின் பற்றாக்குறைகளில் காரைதீவுப் பிரதேசத்தினைப் பொறுத்த வரையில் முதன்மையானதாகக் காணப்படுவது நிதிப்பற்றாக்குறையாகும்.

உண்மையான அபிவிருத்தியென்பது "நிலைபேறான அபிவிருத்தியாக" காணப்படல் வேண்டும் என இன்று அனைத்துத் தரப்பினராலும் ஏற்றுக் கொள்ளப்படுவதுடன் அது நல்லாட்சியின் பிரதானமான ஒரு இயல்பாகவும் பார்க்கப்படுகின்ற நிலை உள்ளது. இத்தகைய நிலைபேறான அபிவிருத்தி என்பது அரசாங்கம்,தனியார் மற்றும் சமூகம் ஆகியவை ஒன்றிணைந்து செயற்படும் போதே சாத்தியம் என்ற இன்றைய எண்ண மாற்றத்திற்கமைய இணைந்து செயற்படுகின்ற நிலைமை இன்று பல்வேறு செயற்பாடுகளிலும் காணப்படுகின்ற போதிலும் நிதியிடல் என்ற விடயம் இன்றும் பெருமளவில் அரசினை அண்டியதாகவேயுள்ளமை அபிவிருத்திக்கான முக்கியமான பிரச்சினையாக உள்ளது.

எவ்வாறெனினும் கடந்த 2004 ஆம் ஆண்டில் இடம்பெற்ற கொடூரமான சுனாமிப் பேரழிவின் பின்னராக சமூகம் சார்ந்த அமைப்புக்களின அபிவிருத்தி தொடர்பான பங்களிப்பு நிதியிடல் தொடர்பிலும் கணிசமான அளவிற்கு வளர்ந்துள்ளதென்பது உண்மையே.எனினும் ஒப்பீட்டளவில் அனேக பொருளாதார முறைமைகளைப் போன்று இங்கும் பாரிய அபிவிருத்தி முயற்சிகள் அரசு சார்ந்தவையாகவே அமைந்துள்ளன.

முன்னைய காலங்களில் அபிவிருத்தி என்பது உட்கட்டுமானங்களினை மாத்திரம் கொண்டு நோக்கப்படுகின்ற ஒரு சமூகநிலை காணப்பட்டது. ஆனால் இன்று அபிவிருத்தி என்ற பதமானது பன்முக பரிமாணம்(*Multi dimension*) கொண்டது என்பது சமூகத்தினால் உணரப்பட்டுள்ளமை நீண்டகால அபிவிருத்தி முயற்சிகளுக்கு கிடைத்த வெற்றியெனப்படலாம். இந்த வகையில் இங்கு ஏற்கனவே விபரிக்கப்பட்ட உட்கட்டுமான அபிவிருத்திகள், வாழ்வாதாரம் தொடர்பான அபிவிருத்திகள், மனிதவள அபிவிருத்திகள் தொடர்பில் இதுவரை காரைதீவுப் பிரதேச செயலகம் ஆற்றியுள்ள பணிகள் குறித்து இனிக்கவனம் செலுத்துவோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உட்கட்டமைப்பு அபிவிருத்தி

பிரதேச செயலகத்தினூடாக அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பாகப் பல்வேறுபட்ட வழிமுறைகள் மூலமாக அரசநிதியிடல் மேற்கொள்ளப்படுகின்றது. அவற்றில் பிரதானமானவைகளாக பின்வருவன காணப்படுகின்றன

1. பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டத்தின் மூலம் மக்கள் பிரதிநிதிகளால் (பாராளுமன்ற உறுப்பினர்களால்) மேற்கொள்ளப்படும் ஒதுக்கீடுகள்
2. தேசியரீதியில்/பிரதேச ரீதியில் அரசினால் செயற்படுத்தப்படும் திட்டங்கள் மூலமான நிதியிடல்கள்
3. அடையாளம் காணப்பட்ட ஒரு தேவைக்காக அரசினால் மேற்கொள்ளப்படும் திட்டங்கள்

இந்த வகையில் ஆரம்பகாலம் முதல் இப்பிரதேச செயலகமானது பல்வேறு தரப்பட்ட மக்கள் பிரதிநிதிகளினால் காலத்திற்குக்காலம் மேற்கொள்ளப்பட்ட பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட ஒதுக்கீடுகள் மூலம் உட்கட்டுமான அபிவிருத்திப் பணிகளை இடப்பட்ட இலக்குகளிற்கு அமைவாக மேற்கொண்டு வந்துள்ளது என்பதுடன் தற்போதைய தேசிய வேலைத்திட்டமான "மகிந்த சிந்தனை" க்கு அமைவாக கடந்த மூன்று ஆண்டுகளாக கமநெகும வேலைத்திட்டத்தினையும் 1996 களில் இருந்து சமுர்த்தி வறுமை ஒழிப்பு வேலைத்திட்டத்தினையும் மேற்கொண்டு வருகின்றது.

இவற்றிற்கு மேலதிகமாக சுனாமி அனர்த்த மீள் நிர்மாணம் மற்றும் யுத்த அனர்த்த மீள்நிர்மாணம் போன்ற அடையாளம் காணப்பட்ட தேவைகளிற்காக மேற்கொள்ளப்பட்டு வரும் நெக்டெப்(*NECCDEP*), நெகோட்(*NECORD*), நேர்ப்(*NEHRP*) போன்ற அரச அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்தப்படுவதிலும் காரைதீவுப் பிரதேச செயலகம் உதவி வருகின்றது.

தவிரவும் பல அரசசார்பற்ற நிறுவனங்களால் சுயநிதியிடல் மூலமும் வேறுநிறுவனங்களுடன் இணைந்த வகையிலும் மேற்கொள்ளப்படுகின்ற நடவடிக்கைகள் சிலவும் பிரதேசசெயலகத்தின் ஒருங்கிணைப்புடனும் வழிகாட்டுதல்களுடனும் மேற்கொள்ளப்படுகின்றன.

### 1. பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிதி

மக்கள் பிரதிநிதிகளினால் பல்வேறுபட்ட பொது அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காகவும் சமூக அமைப்புக்களின் இயலளவினை அதிகரிக்கும் நோக்குடனும் இத்தகைய ஒதுக்கீடுகள் பிரதேச செயலகங்களிற்கு வழங்கப்படுவதுடன் அவை அரசினால் அங்கீகரிக்கப்பட்ட தேவைகளிற்கு உபயோகப்படுத்தப்படுகின்றன.

அவ்வாறாகக் காரைதீவு பிரதேச செயலகத்திற்குக் கடந்த சில வருடங்களிற்கு வழங்கப்பட்ட ஒதுக்கீடுகளினதும் பயன்பாட்டினதும் பாகுபாடு கீழே அட்டவணை-01, வரைபு இல:01 ஆகியவற்றில் காட்டப்படுகின்றது. இதன் பிரகாரம் சமூக அமைப்புக்களினை வலுவூட்டல்,வீதிகளின் அபிவிருத்தி ஆகியவற்றின் பொருட்டு ஏறத்தாழ 50% நிதி பயன்படுத்தப்பட்டிருப்பதுடன் பாடசாலை விருத்தி கலாசார விருத்தி ஆகியவற்றிற்கு 25% மான ஒதுக்கீடு பயன்படுத்தப்பட்டிருக்கின்றது. குறித்த துறைகள் முக்கியமான துறைகள் ஆதலால் கூடிய நிதி ஒதுக்கீடு ஓரளவிற்கு நியாயமானதாக அமைகின்ற போதிலும் ஒட்டு மொத்த அபிவிருத்தி எனக் கருதும் போது பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டில் இன்னும் கவனிக்க வேண்டிய துறைகள் அனேகம் இருப்பது தெளிவாகின்றது.

மேலும் நிதி ஒதுக்கீட்டின் பெரும் பகுதி உட்கட்டுமான விருத்திக்குச் செலவிடப்பட்டுள்ளது.வாழ்வாதார விருத்தி நடவடிக்கைகளிற்கும் மனிதவள அபிவிருத்தி நடவடிக்கைகளிற்கும் முன்பாகவும் சமாந்தரமாகவும் உட்கட்டமைப்பு அபிவிருத்தி அவசியமான காரணத்தினால் இந் நடவடிக்கைகள் நியாயமானதாக உள்ள போதிலும் ஏனைய துறைகளில் இனி வரும் காலங்களில் அபிவிருத்தி முயற்சிகள் மேற்கொள்ளப்படல் வேண்டும் என்பதனை இந்நிலை உணர்த்துகின்றது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காரைதீவுப் பிரதேச செயலகத்தினால் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழாக மேற்கொள்ளப்பட்டுள்ள வேலைகளின் பாகுபாடு

| ஆண்டு | அரச நிறுவனம் | பொதுக் கிணறு | பொது இடங்கள் | மின்சாரம் | வீதிகள் | மதகுகள் | விளையாட்டு அரங்கு | பொது இடங்கள் | விளையாட்டு | நூலகங்கள் | மரநடுகை | ஆரம்பப் பாடசாலை | மீன்பிடி | பாடசாலைகள் | கலாசாரம் | வைத்திய சாலை | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1997 | 15 | 20 | 250 | 110 | 145 | 225 | 50 | 70 | 50 | 50 | 20 | | | | | | 1005 |
| 1998 | 150 | | | 230 | 480 | | | 125 | 70 | | 25 | 10 | 150 | | | | 1240 |
| 1999 | | 30 | 75 | 220 | 555 | | | | 50 | | | | 30 | | | | 960 |
| 2000 | | | | | | | | | | | | | | | | | |
| 2001 | | | 245 | 200 | 268 | | | | 40 | | | 10 | | 233 | 20 | | 1016 |
| 2002 | 367 | | | 40 | 175 | | | | 30 | | | | | 300 | 25 | | 937 |
| 2003 | | | 440 | 50 | 190 | | | | 30 | | | | 100 | 50 | 360 | | 1220 |
| 2004 | 100 | 50 | 100 | 80 | 65 | | | | | | | 105 | | 600 | 570 | 150 | 1820 |
| 2005 | | | 1150 | 40 | 475 | | | | | | | 150 | 100 | 80 | 525 | 150 | 2670 |
| 2006 | | | 1030 | | 800 | | | 150 | 260 | | | 105 | | 250 | 50 | | 2645 |
| 2007 | | | 130 | | 125 | | | 100 | 80 | | | 20 | | 145 | 200 | | 800 |
| 2008 | | | 1395 | 75 | 350 | | | | | | | 30 | | 250 | 760 | | 2860 |
| | 632 | 100 | 4815 | 1045 | 3628 | 225 | 50 | 445 | 610 | 50 | 45 | 430 | 380 | 1908 | 2510 | 300 | 17173 |

அட்டவணை 1




வரைபு - 1

## 2. தேசிய ரீதியிலான அரசின் திட்டங்கள்

### கமநெகும

அபிவிருத்தி தொடர்பாக அரசாங்கங்கள் காலத்திற்குக் காலம் பல்வேறுபட்ட திட்டங்களை நடாத்தி வந்துள்ளன. இவ்வகையில் தற்போது செயற்படுத்தப்பட்டு வருகின்ற திட்டங்களாக தற்போதைய அரசின் அபிவிருத்தி வேலைத்திட்டமான "மகிந்த சிந்தனை" வேலைத்திட்டங்களின் கீழான கமநெகும, மகநெகுமத் திட்டங்களினைக் குறிப்பிடலாம.இவற்றுள் கமநெகுமத் திட்டமானது கிராமிய எழுச்சியினைக் கருவாகக் கொண்டு 2007 ஆம் ஆண்டு முதல் பிரதேச செயலகங்களினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இத்திட்டத்தின் கீழாக காரைதீவுப் பிரதேச செயலகத்தினால் மேற்கொள்ளப்பட்ட/ உத்தேசிக்கப்பட்டுள்ள வேலைகளின் விபரங்கள் கீழ் வருமாறு:

*2007 ஆம் ஆண்டின் கமநெகும உட்கட்டமைப்புச் செயற்பாடுகள்*

| இல | திட்டத்தின் பெயர் | கி.சே. பிரிவு | தொகை |
|---|---|---|---|
| 01 | மாளிகைக்காடு கிழக்கு மையவாடி சுற்றுமதில் அமைத்தல் | மாளிகைக்காடு கிழக்கு | 96680.00 |
| 02 | அலியார் ஆதம்பாபா வடிகான் அமைத்தல் | மாளிகைக்காடு மேற்கு | 76590.00 |
| | | மொத்தம் | 173270.00 |

| இல | திட்டத்தின் பெயர் | கி.சே.பிரிவு | தொகை |
|---|---|---|---|
| 1 | விவேகானந்த வீதிக்கு கொங்கிறீட் இடல் | காரைதீவு-01 | 450,000.00 |
| 2 | கரைச்சை வீதியினை நிர்மாணித்தல் | காரைதீவு-02 | 550,000.00 |
| 3 | சித்தானைக்குட்டி வீதியினை அமைத்தல் | காரைதீவு-03 | 445,000.00 |
| 4 | புதிய விளையாட்டு மைதான வீதியினை நிர்மாணித்தல் | காரைதீவு-04 | 450,000.00 |
| 5 | மத்திய வீதிக்கான் வடிகான் அமைத்தல் | காரைதீவு-05 | 560,000.00 |
| 6 | பாரதி வீதிக்கான வடிகான் நிர்மாணித்தல் | காரைதீவு-06 | 484,629.00 |
| 7 | குளவெளி திருமால் வீதிக்கான வடிகான் அமைத்தல் | காரைதீவு-07 | 980,000.00 |
| 8 | திருமால் வீதிக்கான கொங்கிறீட் பாதை அமைத்தல் | காரைதீவு-07 | 450,000.00 |
| 9 | தேசிகர் 2ம் குறுக்கு வீதிக்குக் கொங்கிறீட் இடல் | காரைதீவு-08 | 440,000.00 |
| 10 | புதிய களப்பு வீதிக்குக் கொங்கிறீட் இடல் | காரைதீவு-09 | 450,000.00 |
| 11 | குமார வீதிக்குக் கொங்கிறீட் இடல் | காரைதீவு-10 | 450,000.00 |
| 12 | பழைய களப்பு வீதிக்குக் கொங்கிறீட் இடல் | காரைதீவு-11 | 496,104.00 |
| 13 | சண்முக வித்தியாலய வீதிக்குக் கொங்கிறீட் இடல் | காரைதீவு-12 | 540,000.00 |
| 14 | ஸம் ஸம் வீதிக்குக் கொங்கிறீட் இடல் | மாவடிப்பள்ளி கிழ. | 450,000.00 |
| 15 | நடராஜனந்த வீதிக்குக் கொங்கிறீட் இடல் | மாளிகை. மேற்கு | 540,000.00 |
| 16 | மத்திய வீதிக்கான் வடிகான் அமைத்தல் | மாவடிப்பள்ளி மே. | 530,000.00 |
| | மொத்தம் | | 8,265,733.00 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கமநெகும ஜாதிக சவியவின் கீழான 2008 ஆம் ஆண்டின் விசேட

| இல | திட்டத்தின் பெயர் | கி.சே.பிரிவு | தொகை |
|---|---|---|---|
| 1 | அலியார் அதமபாவா வீதிக்குக் கொங்கிறீட் இடுதல் | மா.காடு. மேற்கு | *1,200,000.00* |
| 2 | அல் ஹுசைன் பாடசாலை வீதிக்குக் கொங்கிறீட் இடுதல் | மா.காடு. மத்தி | *1,025,000.00* |
| 3 | ஆலிம் வீதிக்குக் கொங்கிறீட் இடுதல | மா.காடு கிழ | *200,000.00* |
| 4 | மீரா வீதிக்குக் கொங்கிறீட் இடுதல | மாவடி.கிழ | *400,000.00* |
| | மொத்தம் | | **2,825,000.00** |

***2009 ஆம் ஆண்டில் உத்தேசிக்கப்பட்டுள்ள செயற்பாடுகள்***

| இல | திட்டத்தின் பெயர் | கி.சே.பிரிவு | தொகை |
|---|---|---|---|
| 1 | கரைச்சை மேல் வீதிக்குக் கெங்கிறீட் இடல் | காரைதீவு-02 | *640,000.00* |
| 2 | கரைச்சை கீல் வீதிக்குக் கெங்கிறீட் இடல் | காரைதீவு-03 | *640,000.00* |
| 3 | புதிய மைதான வீதிக்குக் கொங்கிறீட் இடல் | காரைதீவு-04 | *640,000.00* |
| 4 | மத்திய வீதிக்கு வடிகான் அமைத்தல் | காரைதீவு-05 | *640,000.00* |
| 5 | தேசிகர் குறுக்கு வீதிக்குக் கொங்கிறீட் இடல் | காரைதீவு-08 | *640,000.00* |
| 6 | பழைய களப்பு வீதிக்குக் கொங்கிறீட் இடல | காரைதீவு-09 | *640,000.00* |
| 7 | குமார வீதிக்குக் கொங்கிறீட் இடல் | காரைதீவு-10 | *640,000.00* |
| 8 | முருகன் கோயில் வீதிக்குக் கொங்கிறீட் இடல் | காரைதீவு-12 | *640,000.00* |
| 9 | தையற்பயிற்சி நிலைய வீதிக்குக் கொங்கிறீட் இடல் | மா.காடு மே | *640,000.00* |
| 10 | பைசால் வீதிக்குக் கொங்கிறிட் இடல் | மா.காடு கிழ. | *640,000.00* |
| 11 | விபுலானந்த வீதிக்குக் கொங்கிறீட் இடல் | மா.காடு மே | *640,000.00* |
| | மொத்தம் | | **7,040,000.00** |

கமநெகுமத் திட்டத்தின் வேலைகள் பொதுமக்களின் தேவையை அறிந்து செய்யப்படும் நோக்கில் வேலைகளை அடையாளம் காணல் முதல் இறுதி வரை "மக்கள் சபைகள்" ஊடாக அல்லது மக்கள் பிரதிநிதிகள் மூலமாகச் செயற்படுத்தப்படுவது ஒரு சிறப்பான விடயம் எனலாம். இதன் மூலம் பங்கேற்கும் அபிவிருத்தி(*Participatory Development*), வெளிப்படைத்தன்மை(*Transparency*), கணக்களிதன்மை(*Accountability*) போன்ற இன்னோரன்ன நல்லாட்சியின் *(Good Governance)* அடிப்படைத் தன்மைகள் உறுதிப்படுத்தப்படுகின்றன.

நீண்ட காலமாக அரசின் சார்பான உட்கட்டமைப்பு அபிவிருத்தியென்பது மக்கள் பிரதிநிதிகளினால் வழங்கப்பட்ட பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிதியையே பெருமளவில் சார்ந்திருந்த நிலையில் பிரதேச செயலகத்தினூடாக செயற்படுத்தப்படும் கமநெகுமத் திட்டமானது மக்களிற்குத் தீர்மானிக்கும் அடையாளப்படுத்தும் நிலையை வழங்கிய திட்டங்களுள் பிரதானமானதெனலாம்.

மேலும் இத்திட்டத்தின் கீழ் பெரும்பான்மையான கிராமசேவகர் பிரிவுகள் அல்லது சிறு கிராமப்பிரிவுகளும் கவனம் பெறுவது சமத்துவமான பார்வைக்கு வழிவகுக்கின்ற போதிலும் மக்கள் பிரதிநிதிகளின் உற்சாகமான செயற்பாடுகளினால் குறித்த சில பகுதிகள் அதிக ஒதுக்கீட்டினைப் பெற்று அபிவிருத்தி அடைந்துள்ளது என்பது கவனிக்கத்தக்கது. எவ்வாறிருந்த போதிலும் ஏனைய பகுதிகளிலும் மக்கள் பிரதிநிதிகள் தங்கள் பார்வையைச் செலுத்துவதன் மூலம் ஒரு சீரான அபிவிருத்தியைப் பெற முடியும் என்பதனை இது எமக்குத் தெளிவாக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சமுர்த்தி வேலைத்திட்டம்**


இன்று அரசின் சமுர்த்தி வேலைத்திட்டமானது மக்களால் நன்கு அறியப்பட்ட வறுமை ஒழிப்பிற்கான திட்டமாக பிரதேச செயலகங்களினூடாக "சமுர்த்தி அபிவிருத்தி அதிகார சபை" எனும் அமைப்பின் கீழ் திறம்படச் செயற்பட்டுவருகின்றது. நாம் அனைவரும் அறிந்தது போல "வறுமை" என்பது பல முகங்களையும் பரிமாணங்களையும் கொண்ட விடயமாதலால் மிகச்சவாலான இவ்விடயத்தினைக் கையாள பல்வேறு துறை சார் அபிவிருத்தி உபாயங்களும் இத்திட்டதின் கீழாகக் கையாளப்படுகின்றது.

இவ்வகையில் சமுர்த்தித் திட்டத்தினூடாகப் பின்வரும் அட்டவணையில் நாட்டப்பட்டுள்ள உட்கட்டமைப்பு அபிவிருத்திப் பணிகள் காரைதீவுப் பிரதேசத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதில் வீதிகள், வீடமைப்பு வசதிகளினை ஏற்படுத்திக் கொடுத்தல் போன்றவற்றின் பொருட்டு அதிக நிதி பயன்படுத்தப்பட்டிருப்பதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. இவ் வகையில் வீதிகள் மற்றும் அதனோடிணைந்த மதகுகள், வடிகான்கள, பாலங்கள் போன்றவற்றிற்கு அதிகளவான நிதி அதாவது ரூபா. *8,106,870.00* (மொத்த ஒதுக்கீட்டின் 72% அளவிலான பங்கு) செலவிடப்பட்டுள்ளதுடன் அடுத்த படியான கூடியளவு நிதியான ரூபா.1,770,000.00(மொத்த ஒதுக்கீட்டின் 15% நிதி) வீடமைப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் பொருட்டு உபயோகிக்கப்பட்டுள்ளது.

இதர பொது வசதிகளின் அபிவிருத்திக்காகவும் வாழ்வாதாரத்துடன் தொடர்புபட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்திச் செயற்பாடுகளுக்காகவும் எஞ்சிய 13% நிதி உபயோகிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் வீடமைப்பு மற்றும் வாழ்வாதார விருத்திக்கான ஒதுக்கீடு ஒப்பீட்டளவில் தென்படுகின்ற போதிலும் இத்தகைய தேவைகளின் பொருட்டுக் கடன்கள் பெறுவதற்கான




வரைபு - 2


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**காரைதீவுப் பிரதேச செயலகப் பிரிவில் சமுர்த்தித் தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ள உட்கட்டமைப்பு அபிவிருத்தி வேலைகள்**

| ஆண்டு | கிணறு | வீதிகள் | மதகுகள் | வடிகான் | தடுப்புச் சுவர் | குடிநீர் வசதி | மலசல கூடங்கள் | வீடமைப்பு | பாலங்கள் | மீன்பிடி செயற்பாட்டு நிலையம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1999 | 60000 | 300500 | | 55000 | 120000 | | | | | | 535500 |
| 2000 | | 57570 | | 302400 | 168400 | | | 50000 | | 47520 | 625890 |
| 2001 | 25000 | | | 94000 | | | | | | | 119000 |
| 2002 | | | | | | | | 50000 | | | 50000 |
| 2003 | | | | 57000 | 60000 | | | 50000 | | | 167000 |
| 2004 | | 400000 | | 60000 | 60000 | | | | | 25000 | 545000 |
| 2005 | | 320400 | | | 135000 | | | 400000 | | | 855400 |
| 2006 | | 3265000 | 1445000 | 750000 | 35000 | 250000 | 343380 | 400000 | 1000000 | | 7488380 |
| 2007 | | | | | | | | 400000 | | | 400000 |
| 2008 | | | | | | | | 420000 | | | 420000 |
| **மொத்தம்** | **85000** | **4343470** | **1445000** | **1318400** | **578400** | **250000** | **343380** | **1770000** | **1000000** | **72520** | **11206170** |

அட்டவணை - 2



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1. அடையாளம் காணப்பட்ட தேவைகளுக்கான விசேட திட்டங்கள்

ஏற்கனவே கூறியது போல அடையாளம் காணப்பட்ட விசேட தேவைக்கான திட்டங்களாக தற்போது தேச நிர்மாண அமைச்சின் கீழ் செயற்படுத்தப்பட்டு வரும் நெக்டெப் (*NECCDEP*), நேர்ப் (*NEHRP*), நெகோட் (*NECORD*) போன்றவற்றினைக் குறிப்பிடலாம்.

கடந்த காலங்களில் இலங்கையின் வடக்குக் கிழக்குப் பகுதிகளில் யுத்த அவலத்தினால் சிதைவடைந்த பாகங்களை மீளக் கட்டியெழுப்பும் நோக்கத்துடன் இவ் வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்ட போதிலும் தெற்காசியாவில் 2004 இல் ஏற்பட்ட சுனாமிப் பேரலை அழிவினைத் தொடர்ந்து நோக்கம் விஸ்தரிக்கப்பட்டு இரு தொகுதிகளாக வேலைகள் மேற்கொள்ளப்பட்டன. இவ்வகையில்:

- ❖ யுத்த அழிவுகளை மீளக்கட்டியெழுப்புவதற்கான அபிவிருத்திப் பணிகள்
- ❖ சுனாமி அழிவுகளினை மீளக்கட்டியெழுப்புவதற்கான அபிவிருத்திப் பணிகள்(*TAARP*)

என இரு வகையான பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.இத்தகைய திட்டங்கள் மூலம் காரைதீவுப் பிரதேச செயலகப் பிரிவிலே மேற்கொள்ளப்பட்டுள்ள வேலைகளின் விபரம் கீழே காட்டப்பட்டுள்ளது.

### *நெக்டெப்( NECCDEP) திட்டத்தின் கீழாகச் செயற்படுத்தப்பட்டுள்ள பணிகள்*

*யுத்த பிரதேசத்தை மீள்கட்டியெழுப்பும் பணிகள்*

| இல | திட்ட விபரம் | கி.உ. பிரிவு | தொகை |
|---|---|---|---|
| | *நெக்டெப்-2005* | | |
| 1 | பாரதி வீதியில் பெட்டி அமைப்பிலான மதகுகள் அமைத்தல் | காரைதீவு-06 | *410,000.00* |
| 2 | பொதுக்கிணறு மற்றும் சுற்று வேலியினை புதுப்பிததல் | காரைதீவு-06 | *180,000.00* |
| 3 | 1ம் 2ம் 3ம் குறுக்கு வீதிகளிற்கான வடிகான் நிர்மாணம் | காரைதீவு-06 | *223,000.00* |
| 4 | மலசல கூடத்துடன் இணைந்த பல்தேவைக்கட்டிட நிர்மாணம் | காரைதீவு-06 | *2,391,000.00* |
| | உப மொத்தம் | | **3,204,000.00** |
| 6 | சனசமூக நிலைய கட்டிடம் மற்றும் பல்தேவைக்கட்டிட நிர்மாணம் | காரைதீவு-07 | *1,275,000.00* |
| 7 | இரு மதகுகளுடன் திருமால்வீதி புனரமைத்தல் | காரைதீவு-07 | *345,000.00* |
| 8 | திருமால் குறுக்கு வீதி நிர்மாண வேலைகள் | காரைதீவு-07 | *314,000.00* |
| 9 | வீ.சி வீதி , திருமால் குறுக்கு வீதி நிமாமாணம் | காரைதீவு-07 | *320,700.00* |
| | உப மொத்தம் | | **2,254,700.00** |
| 10 | களப்புக் குறுக்கு வீதி நிர்மாணம் | காரைதீவு-11 | *675,000.00* |
| 11 | கந்தசாமி கேதயில குறுக்கு வீத வடிகானமைத்தல் | காரைதீவு-11 | *19,000.00* |
| | உப மொத்தம் | | **694,000.00** |
| 12 | மாவடிப்பள்ளி வீதிகள் புதுப்பித்தல மற்றும் வடிகான்கள் | மா.பள்ளி கிழ | *897,000.00* |
| 13 | ஆதம் வீதியில் மதகுகள் அமைத்தல் | மா.பள்ளி கிழ | *48,000.00* |
| 14 | பாடசாலை விதியில் வடிகான் நர்மாணம் | மா.பள்ளி கிழ | *595,000.00* |
| 15 | பாடசாலை வீதியினை நிர்மாணித்தல் | மா.பள்ளி கிழ | *296,500.00* |
| 16 | மையவாடி வீதியினை நிர்மாணித்தல் | மா.பள்ளி கிழ | *185,000.00* |
| 17 | பல்தேவைக் கட்டிட நிர்மாணம் | மா.பள்ளி கிழ | *1,727,000.00* |
| | உப மொத்தம் | | **3,748,500.00** |
| | *நெக்டெப்-2006* | | |
| 18 | வடிகான் அமைத்தல் | காரைதீவு-01 | *780,000.00* |
| 19 | கண்ணகி,கோவலன் வீதிகளுக்கான வடிகான்கள் நிர்மாணம் | காரைதீவு-01 | *844,000.00* |
| 20 | மாதவி விதியினை மீள் நிர்மாணம் செய்தல் | காரைதீவு-01 | *75,500.00* |
| 21 | சனசமூக கட்டிடத்தினை நிர்மாணித்தல் | காரைதீவு-01 | *1,483,000.00* |
| 22 | கண்ணகி,கோவலன் வீதிகளுக்கான வேலைகள் | காரைதீவு-02 | *167,000.00* |
| | உப மொத்தம் | | **3,349,500.00** |
| | *நெக்டெப்-2008(2009 இல் நடைபெற உள்ளன)* | | |
| 23 | நந்தவனப் பிள்ளையார் கோயில் பின் வீதிக்கு கொங்கிறீற் இடல் | காரைதீவு-05 | *2,000,000.00* |
| 24 | ஆலிம் வீதிக்கு கொங்கிறீ இடல் | மாளி.காடு | *2,000,000.00* |
| | உப மொத்தம் | | **4,000,000.00** |
| | மொத்தம் | | **17,250,700.00** |

அட்டவணை - 3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுனாமி சேதங்களை மீளமைக்கும் பணிகள்

| இல | திட்ட விபரம் | கி.உ. பிரிவு | தொகை |
|---|---|---|---|
| | *நெக்டெப்-2005* | | |
| 1 | பாரதி வீதியில் பெட்டி அமைப்பிலான மதகுகள் அமைத்தல் | காரைதீவு-06 | *410,000.00* |
| 2 | பொதுக்கிணறு மற்றும் சுற்று வேலியினை புதுப்பித்தல் | காரைதீவு-06 | *180,000.00* |
| 3 | 1ம் 2ம் 3ம் குறுக்கு வீதிகளிற்கான வடிகான் நிர்மாணம் | காரைதீவு-06 | *223,000.00* |
| 4 | மலசல கூடத்துடன் இணைந்த பல்தேவைக்கட்டிட நிர்மாணம் | காரைதீவு-06 | *2,391,000.00* |
| | உப மொத்தம் | | **3,204,000.00** |
| 6 | சனசமூக நிலைய கட்டிடம் மற்றும் பல்தேவைக்கட்டிட நிர்மாணம் | காரைதீவு-07 | *1,275,000.00* |
| 7 | இரு மதகுகளுடன் திருமால்வீதி புனரமைத்தல் | காரைதீவு-07 | *345,000.00* |
| 8 | திருமால் குறுக்கு வீதி நிர்மாண வேலைகள் | காரைதீவு-07 | *314,000.00* |
| 9 | வீ.சி வீதி , திருமால் குறுக்கு வீதி நிமாணம் | காரைதீவு-07 | *320,700.00* |
| | உப மொத்தம் | | **2,254,700.00** |
| 10 | களப்புக் குறுக்கு வீதி நிர்மாணம் | காரைதீவு-11 | *675,000.00* |
| 11 | கந்தசாமி கேதயில குறுக்கு வீத வடிகானமைத்தல் | காரைதீவு-11 | *19,000.00* |
| | உப மொத்தம் | | **694,000.00** |
| 12 | மாவடிப்பள்ளி வீதிகள் புதுப்பித்தல மற்றும் வடிகான்கள் | மா.பள்ளி கிழ | *897,000.00* |
| 13 | ஆதம் வீதியில் மதகுகள் அமைத்தல் | மா.பள்ளி கிழ | *48,000.00* |
| 14 | பாடசாலை விதியில் வடிகான் நர்மாணம் | மா.பள்ளி கிழ | *595,000.00* |
| 15 | பாடசாலை வீதியினை நிர்மாணித்தல் | மா.பள்ளி கிழ | *296,500.00* |
| 16 | மையவாடி வீதியினை நிர்மாணித்தல் | மா.பள்ளி கிழ | *185,000.00* |
| 17 | பல்தேவைக் கட்டிட நிர்மாணம் | மா.பள்ளி கிழ | *1,727,000.00* |
| | உப மொத்தம் | | **3,748,500.00** |
| | *நெக்டெப்-2006* | | |
| 18 | வடிகான் அமைத்தல் | காரைதீவு-01 | *780,000.00* |
| 19 | கண்ணகி,கோவலன் வீதிகளுக்கான வடிகான்கள் நிர்மாணம் | காரைதீவு-01 | *844,000.00* |
| 20 | மாதவி விதியினை மீள் நிர்மாணம் செய்தல் | காரைதீவு-01 | *75,500.00* |
| 21 | சனசமூக கட்டிடத்தினை நிர்மாணித்தல் | காரைதீவு-01 | *1,483,000.00* |
| 22 | கண்ணகி,கோவலன் வீதிகளுக்கான வேலைகள் | காரைதீவு-02 | *167,000.00* |
| | உப மொத்தம் | | **3,349,500.00** |
| | *நெக்டெப்-2008(2009 இல் நடைபெற உள்ளன)* | | |
| 23 | நந்தவனப் பிள்ளையார் கோயில் பின் வீதிக்கு கொங்கிறீற் இடல் | காரைதீவு-05 | *2,000,000.00* |
| 24 | ஆலிம் வீதிக்கு கொங்கிறீ இடல் | மாளி.காடு | *2,000,000.00* |
| | உப மொத்தம் | | **4,000,000.00** |
| | மொத்தம் | | **17,250,700.00** |

அட்டவணை - 4

நெப்டெப் திட்டத்தின் கீழான கொத்தணி அடிப்படை வேலைகள்

| தொடர் இல. | திட்டத்தின் பெயர் | தொகை |
|---|---|---|
| 1 | பொருளாதார வளநிலைய நிர்மாணம் | *14,000,000.00* |

அட்டவணை - 5



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நேர்ப் திட்டத்தின் கீழான செயற்பாடுகள்

### யுத்த அழிவின் கீழான நிர்மாணங்கள்

**NEHRP திட்டத்தின் தொகுதி-02 இன்கீழான வேலைகள்**
**2006**

| இல | கி.உ. பிரிவு | பயனாளிகள் தொகை |
|---|---|---|
| 1 | காரைதீவு-01 | *15* |
| 2 | காரைதீவு-06 | *6* |
| 3 | காரைதீவு-07 | *15* |
| 4 | மாவடிப்பள்ளி | *14* |
| | **மொத்தம்** | **50** |

அட்டவணை - 6

**NEHRP திட்டத்தின் தொகுதி-03 இன்கீழான வேலைகள்**
**2007/2008**

| இல | கி.உ. பிரிவு | பயனாளிகள் தொகை |
|---|---|---|
| 1 | காரைதீவு-03 | *1* |
| 2 | காரைதீவு-10 | *7* |
| 3 | மாளிகைக்காடு மேற்கு | 13 |
| | **மொத்தம்** | **21** |

அட்டவணை - 7

**NEHRP திட்டத்தின் தொகுதி-04 இன்கீழான வேலைகள்**
2008/2009

| இல | கி.உ. பிரிவு | பயனாளிகள் தொகை |
|---|---|---|
| 1 | காரைதீவு-05 | *7* |
| 2 | காரைதீவு-11 | *17* |
| 3 | காரைதீவு-12 | *21* |
| 3 | மாளிகைக்காடு மேற்கு | 1 |
| | **மொத்தம்** | **46** |

யுத்த அழிவின் கீழான அலகுகளின் மொத்தத் தொகை-117 அலகுகள் அட்டவணை - 8

### சுனாமி உதவியின் கீழான நிர்மாணங்கள்

| | முழுச்சேத உதவி பெற்ற அலகுகள் | பகுதிச்சேத உதவி பெற்ற அலகுகள் | மொத்த அலகுகள் |
|---|---|---|---|
| | | | |
| *கட்டம்-01* | 414 | 796 | 1210 |
| | | | |
| *கட்டம்-02* | 1073 | 1 | 1074 |
| மொத்தம் | **1487** | **797** | **2284** |

அட்டவணை - 9



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நெகோட் (NECORD) திட்டத்தின் கீழாகச் செயற்படுத்தப்பட்டுள்ள பணிகள்

| தொடர் இல. | திட்டத்தின் பெயர் | தொகை |
|---|---|---|
| | *நெகோட் -1* | |
| 1 | மாளிகைக்காடு அல் ஹுசைன் விதிதியாலயத்தில 60'x25' அளவுள்ள இரண்டு மாடிக் கட்டட நிர்மாணம் | *1,313,200.00* |
| 2 | காரைதீவு விபுலானந்த மத்திய கல்லூரியில் நூலகத்துடன் இணைந்த 90' X25' அளவுள்ள இரண்டு மாடிக்கட்டிட நிர்மாணம் | *504,000.00* |
| 3 | காரைதீவுச் சுற்றயற்கூறு வைத்தியசாலைக்கு தரம-4 மருத்துவ உத்தியோகத்தர் விடுதி நிர்மாணம் | *1,477,900.00* |
| 4 | மாவடிப்பள்ளி ஜலால்புரம் முதலாம் குறுக்குத் தெரு வைத்தியசாலை வீதி, வைத்தியசாலைக் குறுகடகு வீதி ஆகியவற்றிற்கு மின்சாரம் வழங்குதல் | *577,000.00* |
| | *நெகோட் -2* | |
| 5 | மாவடிப்பள்ளிக் கிராமத்தின் உள்ளக வீதிகளை 3.03 கி.மீ தூரத்திற்கு மீள் நிர்மாணம் | *25,212,100.00* |
| | **TAARP** | |
| 6 | நூலகத்துடன் இணைந்த 90' X25' அளவுள்ள இரண்டு மாடிக்கட்டிட நிர்மாணம் | *8,125,900.00* |
| 7 | அல்-அஷ்ரப் வித்தியாலயத்தில் ஆசிரியர்களுக்கான மண்டபம் நிர்மாணித்தல் | *1,285,500.00* |
| 8 | காரைதீவுக் கடற்கரை வீதியினை கொங்கிரீட் இட்டு மீள நிர்மாணித்தல | *12,723,700.00* |
| | மொத்தம் | **51,219,300.00** |

அட்டவணை - 10

இவை தவிரவும் சுனாமியின் பின்பாகப் பல்வேறுபட்ட உள்நாட்டு, சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களும் பிரதேச செயலகத்தின் அனுசரணையுடன் உட்கட்டமைப்பு மீள்கட்டுமானங்களினை மேற்கொண்டிருந்தன என்பதுடன் பாதிக்கப்பட்ட காரைதீவுப் பிரதேசத்தினை கூடிய விரைவில் மீட்டெடுக்க முடிந்தமைக்கு இச் செயற்பாடுகள் பிரதான காரணிகளாக அமைந்திருந்தன.

அவ்வாறான கட்டுமானங்களில் சுனாமியினால் பாதிக்கப்பட்டவர்களுக்காக வீடுகளினை நிர்மாணித்தமை பிரதானமானதாகும்.இந்த வகையில் நிர்மாணிக்கப்பட்ட வீடுகள் பொதுவாக இரண்டு வகைகளாக அமைந்தன.

1. கொடையாளர்களால் பாதிக்கப்பட்டவர்களுக்காக அமைக்கப்பட்ட வீடுகள். *(Donor driven houses)*

2. வீட்டு உரிமையாளர்கள் சார்பாக அமைக்கப்பட்ட இணைநிதிய உதவி வீடுகள் *( Owner driven houses with co-finance arrangement)*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த அடிப்படையில் சுனாமியினால் பாதிக்கப்பட்டவர்களுக்காக அமைக்கப்பட்ட வீடுகளின் விபரம் கீழே காட்டப்பட்டுள்ளது.

| தொ.இல | நிறுவனத்தின் பெயர் | அலகுகள் | வீட்டின் தன்மை |
|---|---|---|---|
| 1 | பிரிட்ஸ்ரோ நிறுவனம்(*FRIDSRO)* | 66 வீடுகள் | இணை வீடுகள் *(Twin houses)* |
| 2 | எகெட்-கரிட்டாஸ்*(EHED-CARITAS)* | 75 வீடுகள் | தனி வீடுகள் *(Individual houses)* |

அட்டவணை - 11

**வீட்டு உரிமையாளர்கள் சார்பாக அமைக்கப்பட்ட இணைநிதிய உதவி வீடுகள்**

| உதவி நிறுவனத்தின் பெயா | படிமுறை-1 | படிமுறை-2 | மொத்தம் |
|---|---|---|---|
| **HDO** | 03 | 61 | 64 |
| **LEADS** | 48 | 87 | 135 |
| **SWOAD** | 15 | 16 | 31 |
| **GALWAY** | 112 | 55 | 167 |
| **SALVATION ARMY** | 27 | 61 | 88 |
| **EHED** | 33 | - | 33 |
| **SANASA** | - | 09 | 09 |
| **FRIDSRO** | | 34 | 34 |
| **UNHABITAT** | 19 | 281 | 300 |
| மொத்தம் | 257 | 604 | 861 |

அட்டவணை - 12

## *வாழ்வாதார அபிவிருத்தி:*

உட்கட்டமைப்பு அபிவிருத்திப் பணிகளைப் போன்றே மக்களின் வாழ்வாதாரத்தினை முன்னேற்றுவதன் பொருட்டும் அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் பல காரைதீவுப் பிரதேச செயலகத்தின் ஊடாகவும் அதன் அனுசரணையுடனும் செயற்பட்டு வருகின்றன.

இத்தகைய வாழ்வாதாரப் பணிகளில் குழுக்களிற்கும் தனி முயற்சியாளர்களிற்கும் சிறு கடன்களை வழங்கி வலுவூட்டல் பிரதானமான ஒன்றாகும். இந்த வகையில் பிரதேச செயலகத்தினுடாக வழங்கப்படும் சிறுகடன் சுழற்சிமுறைக் கடனானது பிரதானமாக பிரதேச செயலகத்தின் பின்வரும் பிரிவுகளினூடாக இடம் பெற்று வருகின்றன.

1. கிராம அபிவிருத்திப் பிரிவு
2. சமுர்த்திப் பிரிவு
3. மகளிர் விவகார பிரிவு
4. சமூக சேவைகள் பிரிவு
5. விதாதாப் பிரிவு.

### *கிராம அபிவிருத்திப் பிரிவு*

இவற்றுள் கிராம அபிவிருத்திப் பிரிவின் மேற்பார்வையின் கீழ் வழங்கப்படும் சிறுகடனுதவிகள் (*Micro credits*) கிராம சேவகர் பிரிவுகளில் செயற்படும் கிராம



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபிவிருத்திச் சங்கங்கள், மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்கள் என்பவைகளிற்குப் பல்வேறுபட்ட திட்டங்களின் ஊடாக கிடைத்த உதவித் தொகையினை வைத்து அல்லது கடனுதவிகளை வைத்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும் இப்பகுதியினைப் பொறுத்த வகையில் இத்தகைய சிறுகடன் திட்டமானது 1984 ஆம் ஆண்டளவில் முதன் முதலாக ஒரு அரச சார்பற்ற நிறுவனத்தின் உதவியுடன் கிராம அபிவருத்திப் பிரிவினாலேயே மேற்கொள்ளப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கதாகும். இவ்வகையில் காரைதீவு பிரதேச செயலகத்தின் கிராம அபிவிருத்தப் பிரிவினால் பராமரிக்கப்படும் சுழற்சி நிதியத்தின் மூலதன நிலை தற்பொழுது பின்வருமாறு காணப்படுகின்றது.

**காரைதீவுக் கிராம அபிவிருத்திப் பிரிவின் கீழான சிறுகடன் நிதிநிலை**

| ஆண்டு | நிதிமூலம் | சிறுகடனுதவித் தொகை | |
|---|---|---|---|
| | | கொடை | கடன் |
| 1984 | உலக தரிசனம் நிறுவனம் | 25,250.00 | |
| 1987 | உலக தரிசனம் நிறுவனம் | 45,500.00 | |
| 2007 | வடக்கு கிழக்கு கரையோர சமுதாய அபிவிருத்தித் திட்டம்(நெக்டெப்) | 1,200,000.00 | |
| 2008 | சரீரம் அமைப்பு | | 900,000.00 |
| | வடக்கு கிழக்கு கரையோர சமுதாய அபிவிருத்தித் திட்டம்(நெக்டெப்) | 5,200,000.00 | |
| 2009 | வடக்கு கிழக்கு கரையோர சமுதாய அபிவிருத்தித் திட்டம்(நெக்டெப்) | 800,000.00 | |
| | மொத்தம் | **7,270,750.00** | **900,000.00** |

அட்டவணை - 13

**சமுர்த்திப் பிரிவு**

குழுக்கள் அல்லது தனிநபர் ரீதியிலான கடனுதவிகள் என்பவைகள் சமுர்த்தித் திட்டத்தின் அடிப்படை அம்சமாகவும் வறுமை ஒழிப்பிற்கான உபாயமாகவும் இத் தேசிய திட்டத்தினால் ஆரம்ப காலம் முதல் மேற்கொள்ளப்படுகின்ற ஒரு நடவடிக்கையாகக் காணப்படுகின்றது.இன்றைய நிலையில் ஏறத்தாழ 2825 சமுர்த்திப் பயனுகரிகளையும் 487 சிறுகுழுக்களையும் 54 சங்கங்களையும் கொண்டு இயங்குகின்ற காரைதீவுப் பிரதேச செயலக சமுர்த்திப் பிரிவானது 01.12.2000 முதல காரைதீவு சமுர்த்தி வங்கியினையும் 01.04.2001 முதல் கரடித்தோட்டம் சமுர்த்தி வங்கியினையும் தாபித்து மக்களின் வாழ்வாதார அபிவிருத்திக்கு உதவி வருகின்றது.

இந்நிலையில் இவற்றிற்கு மேலதிகமாக ஒரு திட்டமிட்ட முறையில் வாழ்வாதார அபிவிருத்தியினை ஏற்படுத்தும் நோக்கில் ஒரு சுழற்சி நிதியினைத் தாபிக்கும் வகையில் சமுர்த்தி அதிகாரசபையும் தேச நிர்மாண அமைச்சும் இணைந்து நடவடிக்கைகளினை மேற்கொண்டுள்ளது. இதன் பிரகாரம் 2008 ஆம் ஆண்டு முதல் சுமார் ரூபா 3,055,000.00 தொகை சமுர்த்திப் பயனாளிகளுக்கான இலகு வட்டியுடன் கூடிய கடனாகத் தொழிற்படுகின்றது.

**மகளிர் விவகார பிரிவு**

மகளிர் விவகார அமைச்சின் கீழ் செயற்படும் காரைதீவு பிரதேச செயலகப் பிரதேச மகளிர் அபிவிருத்திச் சங்கங்கள் தமது சுய உதவித்திட்டத்தின் கீழ் வாழ்வாதாரக் கடனுதவித் திட்டங்களினைத் திறம்பட மேற்கொண்டு வருகின்றார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவ்வாறெனினும் ஏனைய நிறுவன அமைப்புக்களுடன் ஒப்பிடும் போது இச் சங்கங்களிற்கு வெளிநிதி உதவிகள் எவையும் இல்லாத நிலையில் செயற்படுவது மிகுந்த வரவேற்பிற்குரிய விடயம் என்ற போதிலும் எதிர்காலத்தில் இச்சங்கங்கள் ஏனைய அமைப்புக்களுடன் போட்டியிட ஏதுவாக வலுவூட்டப்படல் அவசியமானதாகும்.

### சமூக சேவைகள் பிரிவு

மாகாண மற்றும் மத்திய அரசுகளின் கீழாக இயங்கும் சமூக சேவைகள் பிரிவின் கீழாக நலிவுற்றோரின் வாழ்வாதார அபிவிருத்திக்கென சுய தொழில் வழிகாட்டல்கள், சுய தொழில் உதவித்தொகை போன்றன பிரதேச செயலகத்தின் கீழாக சிறிய அளவுகளில் மேற்கொள்ளப்படுகின்றன. பொதுவாக இவ்வுதவுகைகள் விசேடதேவை கொண்டோர் மீதும் முதியவர்கள் மீதும் பார்வையினைச் செலுத்துவது குறிப்பிடத்தக்க அம்சமாகும். இதுதவிரவும் பிரதேச ரீதியில் செயற்பட விரும்பும் தொண்டர் அமைப்புக்களைப் பதிவு செய்து கண்காணிப்பதன் ஊடாகவும் இப் பிரிவானது வாழ்வாதார அபிவிருத்திக்காக உழைக்க முயற்சிப்பவர்களையும் வலுவூட்டி வருகின்றது.

### விதாதாப் பிரிவு:

கிராமத்திற்குத் தொழினுட்பம் எனும் கருப்பொருளினை மையமாகக் கொண்டு பிரதேச செயலக ரீதியாக விஞ்ஞான தொழினுட்ப அமைச்சின் கீழாகச் செயற்பட்டு வரும் **"விதாதா"** மையங்களினூடாக **விதாதா சங்கங்கள்** கிராமசேவகர் பிரிவு மட்டங்களில் ஆரம்பிக்கப்பட்டு அதனூடாக தமது தொழிற்றுறையினை மேம்படுத்திக் கொள்ளப் பயிற்சிகளும் ஆலோசனைகளும் வழங்கப்படுவதுடன் இலகு கடன்களைப் பெற்றுக் கொள்ள ஆவன செய்வதன் மூலமும் மக்களின் வாழ்வாதார அபிவிருத்திக்கு பங்காற்றி வருகின்றது.

இவ்வாறாகக் காரைதீவுப் பிரதேச செயலகமானது எமது மக்களின் வாழ்வாதார முயற்சிகளிற்காக நேரடியான வகையில் பங்களிப்புச் செய்கின்றது. கடன் வழங்கலின் தொழில்படு தன்மைகாரணமாக இந்த நிதியின் செயற்பாடு என்பது ஈடுபடுத்தப்படும் தொகையிலும் பார்க்கப் பன்மடங்கானது(*Multiplier Action*) என்பது தெள்ளத் தெளிவானதாகும்.

இது தவிரவும் இன்றைய காலகட்டத்தில் குறிப்பாகச் சுனாமிக்குப் பின்னராகக் காரைதீவுப் பிரதேச செயலகத்தின் அனுசரணையின் கீழ் பல்வேறு அமைப்புக்கள் வாழ்வாதார அபிவிருத்தி வேலைகளில் ஈடுபட்டுவருகின்றன.இந்நிலையில் முயற்சிகளில் பல்லினப்பட்டு முயற்சிக்கும் பட்சத்தில் இந்நிதியினை நாம் நன்கு பயன்படுத்திக் கட்டியெழுப்பலாம் என்பது தெளிவான ஒன்றாகும்.

### மனிதவள அபிவிருத்தி

மனிதவளத்தினை அபிவிருத்தி செய்வதிலே பயிற்சிநெறிகள் இன்றியமையாதவைகளாகக் காணப்படுகின்றன. தொடர்ச்சியான பயிற்சியினைப் பெறுகின்ற போதே மனிதனின் ஆற்றல் பெருகி திறன் மிகுந்தவன் ஆகின்றான். அத்தகையதாகப் பெறுகின்ற பயிற்சியானது வகுப்பறைப் பயிற்சி, பயிற்சிப்பட்டறைகள், சேவைக்காலப்பயிற்சி தொழில் சார் பயிற்சி, எனப் பல்வகைத் தன்மையினதாக அமைகின்ற போதும் அடிப்படையில் பயிற்சி என்பது மனித வள விருத்திக்கு உன்னத சாதனமாகக் காணப்படுகின்றது.

இந்த வகையில் அரசாங்கத்தின் வேலையில்லாப் பிரச்சினைகளைக் கருத்திற் கொண்டு பிரதானமாகத் தொழிற்றுறை சார் பயிற்சி நெறிகளினை நடாத்துவதில் காரைதீவுப் பிரதேச செயலகமானது மிகுந்த அக்கறையுடன் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் பொருட்டு பல்வேறு அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களுடன் இணைந்து பல்வேறு வகையான தொழில் சார் பயிற்சி நிலையங்களைப் பிரதேச செயலகம் நீண்ட காலமாக நடாத்தி வருகின்றது. இவ்வகையில் பின்வரும் நிறுவனங்களைக் குறிப்பிட்டுச் சொல்ல முடியும்.

1. மாகாண கைத்தொழிற்றுறைத் திணைக்களத்தின் கீழான நெசவுப் பயிற்சி நிலையம்
2. மாகாண கிராமிய அபிவிருத்தித் திணைக்களத்தின் கீழான தையற்பயிற்சி நிலையம்
3. சமூக சேவைகள் அமைச்சின் கீழான தொழிற்பயிற்சி நிலையம்.
4. மீள்குடியேற்ற அமைச்சின் கீழான தையற்பயிற்சி நிலையம்
5. விஞ்ஞான தொழினுட்ப அமைச்சின் கீழான "விதாதா வள நிலையம்"

**மாகாண கைத்தொழிற்றுறைத் திணைக்களத்தின் கீழான நெசவுப் பயிற்சி நிலையம்**

காரைதீவுப் பிரதேசத்தில் மிக நீண்டகாலமாக இயங்கி வருகின்ற (ஏறத்தாழ 25 வருடங்களாக) ஒரு தொழில் சார் பயிற்சி நிலையமாக இதனைக் குறிப்பட முடியும். கைத்தறி நெசவு சம்பந்தமான பூரணமான ஒரு பயிற்சி நெறியினை வழங்கி வருகின்ற நிலையமாக காரைதீவு-08 ஆம் இந்நிலையம் நடாத்தப்பட்டு வருகின்றது. ஒரு சிறிய பயிற்சிக்காலக் ஊக்குவிப்புக் கொடுப்பனவு ஒவ்வொருவருக்கும் வழங்கப்பட்டு வருகின்ற போதிலும் பிரதேசத்தில் கைத்தொழழிற் பொருட்களுக்குக் உள்ளூர்ச் சந்தைகளில் கேள்வி குறைவடைந்தமை, உற்பத்திச் செலவு அதிகரிப்பு போன்ற இன்னோரன்ன காரணங்களால் இப்பயிற்சி நெறியில் கலந்து கொள்வோரின் அளவு கணிசமாகக் குறைவடைந்துள்ள போதிலும் பொருத்தமான வகையில் சில மாற்றங்களினை அதாவது தீர்மானமான சந்தையினை பயிற்சியின் பின் ஏற்படுத்திக் கொடுத்தல், இயந்திரமாக்கிய நெசவுப் பொறிகளுக்கான பயிற்சியினை மேலதிகமாகச் சேர்த்துக் கொள்ளல்,ஊக்குவிப்பினை மீளாய்வு செய்தல் போன்றன மூலம் எதிர்காலங்களில் மாற்றங்களை ஏற்படுத்த முடியும் என்பது உண்மையான விடயமாகும்.

**மாகாண கிராமிய அபிவிருத்தித் திணைக்களத்தின் கீழான தையற்பயிற்சி நிலையம்**

மாகாணக் கிராம அபிவிருத்தி நிலையத்தின் அனுசரணையுடன் காரைதீவுப் பிரதேச செயலகத்தினால் செயற்படுத்தப்படும் யுவதிகளுக்கான ஒரு பயிற்சி நெறியாக இந் நிலையத்தின் பயிற்சிகள் வடிவமைக்கப்பட்டுள்ளதுடன் அதற்கு மேலதிகமாக கைவேலைகள், பூவேலைகள் மற்றும் அலங்கார வேலைகளுக்குமான பயிற்சிகள் வழங்கப்படுவதனால் பல திறமையான சுயமுயற்சியாளர்களை உருவாக்குவதில் இந்நிலையம் சிறந்த சேவையினை ஆற்றிவருகின்றது.தவிரவும் பயிலுனர்களிற்கு ஒரு ஊக்கத் தொகையும் வழங்கப்படுகின்றமை இங்கு குறிப்பிடத்தக்க விடயமாகக் காணப்படுகின்றது.

தற்போது தைத்த ஆடைகளின் உற்பத்தி மற்றும் அலங்கார வேலைகளுக்கான கேள்வி என்பன அதிகரித்து வரும் நிலையில் இந்நிலையத்தின் சேவையானது இப் பிரதேச யுவதிகளுக்கு வரப்பிரசாதமாக அமைந்துள்ளது. எவ்வாறெனினும் காலமாற்றத்திற்கமைய ஒரு நிறுவனத்தினதும் பயிற்சிகளதும் தன்மை அவசியமானது என்ற ரீதியில் தொடர்ச்சியான முன்னேற்ற நடவடிக்கைகளை(*Continuous improvements*) மேற்கொண்டு இப்பகுதியின் அபிவிருத்திக்குத தொடர்ந்தும் இந்நிலையம் பங்காற்ற வேண்டும் என்பதே அனைவரதும் எதிர்பார்ப்பாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சமூக சேவைகள் அமைச்சின் கீழான தொழிற்பயிற்சி நிலையம்.**

சமூக சேவைகள் அமைச்சின் கீழ் காரைதீவுப் பிரதேச செயலகத்தின் கண்காணிப்பின் கீழாக 2006 ஆம் ஆண்டிலிருந்து இத் தொழிற்பயிற்சி நிலையம் திறம்படச் செயற்பட்டு வருவதுடன் மேசன் பயிற்சிநெறி, தச்சுவேலைக்கான பயிற்சிநெறி, மின்னிணைப்புப் பயிற்சிநெறி போன்ற பல்வேறு வகையான பயிற்சிகளை காலத்திற்கும் பிரதேசத்தின் தேவைக்குமேற்ப வடிவமைத்துச் செயற்படுத்துகின்றது.

இந்தப் பயிற்சிநெறிகள் 6 மாதப்பயிற்சி நெறியாக ஆண்டிற்கு இரண்டு தொகுதி மாணவர்களுக்குப் பயிற்சியினை வழங்கி வருவதுடன் அதன் பொருட்டு ஊக்குவிப்புக் கொடுப்பனவொன்றும் வழங்கப்பட்டு வருகின்றது.

**மீள்குடியேற்ற அமைச்சின் கீழான தையற்பயிற்சி நிலையம்**

மீள்குடியேற்ற மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சு யுத்தத்தினால் காரைதீவுப் பிரதேச செயலகத்தின் கண்காணிப்பின் கீழாகப் பாதிக்கப்பட்ட, நலிவடைந்த பெண்களிற்கென ஆறு மாதகாலப் பயிற்சிநெறியொன்றினை மாளிகைக்காட்டில் 2006 ஆண்டிலிருந்து நடாத்தி வருகின்றது. இப்பயிற்சி நெறியில் தையற்பயிற்சிக்கு மேலதிகமாக கைவினைப் பொருட்கள் மற்றும் அலங்கார வேலைகளுக்கான பயிற்சிகளும் வழங்கப்படுகின்றமை சிறப்பான ஒன்றாகும்.

மேலும் இப்பயிற்சி நெறியினைப் பூர்த்தி செய்கின்ற பெண்கள் உடனடியாகவே வருமானமீட்டத்தக்க உபாயம் ஒன்றினை ஏற்படத்திக் கொள்ளும் வகையில் பயிற்சிநெறி இறுதியில் குறித்த தையல் இயந்திரம் இலவசமாக அவர்களுக்கு வழங்கப்படுகின்றமை ஒரு வரப்பிரசாதமாக அமைகின்றது.

**விஞ்ஞான தொழினுட்ப அமைச்சின் கீழான "விதாதா வள நிலையம்"**

இங்கு ஏற்கனவே குறிப்பிட்டது போல விஞ்ஞான தொழினுட்ப அமைச்சானது "கிராமத்திற்குத் தொழினுட்பம்" என்ற கருப்பொருளுடன் விதாதா வளநிலையங்களைப் பிரதேச செயலகங்கள் தோறும் தாபித்து நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.இதன் மூலம் புதிய சிறந்த தொழினுட்பங்களை பொதுமக்களிடையே அறிமுகப்படுத்த ஆவனமேற்கொள்ளப்படுவதுடன் சிறிய நடுத்தர முயற்சியாளர்கள் தங்கள் தொழிற்றுறையினை மேம்படுத்திக் கொள்ள உதவுவதற்கும் புதிய சிறிய-நடுத்தர முயற்சியாளர்களினை உருவாக்கவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

பிரதேசத்தில் கிராமசேவகர் பிரிவு ரீதியாக விதாதா சங்கங்களை ஆரம்பிப்பதன் மூலம் அத்தகைய சிறிய நடுத்தர முயற்சியாளர்களுடன் நெருங்கிய தொடர்புகளினை வைத்துக் கொள்வதுடன் அவர்களது தொடர்ச்சியான முன்னேற்றத்திற்கு வழிவகுத்துப் பிரதேசத்தில் சிறந்த தொழில் முயலுனர்களினை உருவாக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

விதாதா வளநிலையங்களிற்கான நிலையப் பொறுப்பதிகாரியாக பிரதேச செயலகத்துடன் இணைக்கப்பட்டுள்ள விஞ்ஞான தொழினுட்ப உத்தியோகத்தர் ஒருவர் தொழிற்படுவதுடன் பிரதேசத்து மக்களின் தேவைக்கேற்ப இங்கு பயிற்சிநெறிகள் ஒழுங்கு படுத்தப்படுகின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறான பயிற்சிகள் ஆண்டு தோறும் இங்கு நடாத்தப்பட்டு வருகின்றன.இதன் போது பயிற்சியினை மாத்திரம் வழங்காது குறித்த தொழிற்றுறையினை அல்லது உற்பத்தியினைப் பதிவு செய்வதற்கான வழிகாட்டுதல்கள், இலகு கடன்களைப் பெற்றுக் கொள்வதற்கான வழிகாட்டுதல்கள் என்பன பெற்றுக் கொடுக்கப்படுவதனால் ஆர்வமுள்ள முயற்சியாளர்களுக்கு இவ்விதாதாவள நிலையங்கள் வரப்பிரசாதமாக அமைந்துள்ளன.

2006 ஆம் ஆண்டில் இந்நிலையம் அமைக்கப்பட்டதிலிருந்து யோகட் பயிற்சிநெறி, ஸ்கிரீன் பிரிண்டிங் பயிற்சிநெறி, பாண் தயாரிப்புப் பயிற்சிநெறி, தோல் பொருட்கள் தயாரித்தல் பயிற்சிநெறி போன்ற பல்வேறு கோணங்களிலுமான பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இன்று தொழிற்பயிற்சிக் கல்வியினை "தொழிற்பயிற்சிப் பல்கலைக்கழகங்களை" அமைப்பதனூடாக ஒரு பட்டப்படிப்புக்கான அங்கீகாரத்தினைப் பெறும்வகையில் அபிவிருத்தி செய்யவும் இதன் மூலம் தேசிய கைத்தொழிற்றுறையின் அபிவிருத்தியினை மேற்கொள்ளவும் அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொண்டு வரும் நிலையில் காரைதீவுப் பிரதேச செயலகமானது பல்வேறு நிறுவனங்களினதும் அனுசரணையுடன் பல தொழிற்பயிற்சி நிலையங்களைக் நிறுவி தொழிற்பயிற்சியினை விருத்தி செய்ய எடுக்கும் நடவடிக்கைகள் எதிர்காலத்தில் பல தொழற்றிறனாளர்களை உருவாக்க ஒரு பாதையாக அமையவுள்ளது என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

காரைதீவு பிரதேச செயலகத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ள,மேற்கொள்ளப்பட்டு வருகின்ற அபிவிருத்திச் செயற்பாடுகளை முழுமையாக நோக்கும் போது பிரதேச அபிவிருத்தியானது மிகச் சீரான வகையில் அடிப்படைத் துறைகள் அனைத்தையும் உள்ளடக்கியதாக அமைந்துள்ளமையினை அவதானிக்க முடிகின்றது என்பதுடன் சரியான இலக்குகளை கொண்டதாகவும் காணப்படுகின்றது.

இந்த வளர்ச்சி போக்கானது தொடர்ந்தேர்ச்சியாக சிறந்த முறையில் தொடர்வதற்கு மக்கள் பிரதிநிதிகளதும்,பொதுமக்களதும் நல்லாதரவு அவசியமானதாகும். மேலும், இனி நடைபெறுகின்ற அனைத்து அபிவிருத்தி நடவடிக்கைகளும் சூழல் நேய அபிவிருத்தி நடவடிக்கைகளாக அமைதல் தொடர்பில் நாம் அனைவரும் கவனம் செலுத்துதல் அவசியமானதாகும்.இந்த வகையில் இருக்கின்ற வளங்களைச் சரிவரப் பராமரித்தல் பாதுகாத்தல், காணிச் சீரகேடுகளினையும் சீரழிவினையும் தடுத்து நிறுத்துதல, நீர் வளங்களையும் இயற்கைச் சூழலையும் பாதுகாத்தல் என்ற இன்ன பிற நடவடிக்கைகளிற்கான சமூக நோக்கு அவசியமானதாகும்.

ஏற்கனவே கூறியது போல எதிர்கால சந்ததிகளும் உபயோகம் பெறத்தக்க ஒரு நிலையான அபிவிருத்திப்பாதைகளை எமது பிரதேச செயலகம் எம்மை வழி நடாத்த அனைவரும் ஒன்றிணைந்து பிரதேசத்தினைக் கட்டியெழுப்ப ஒன்றிணைவோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பண்பை வாழ வைத்த மரபுவழி கலாச்சாரம்

கவிஞன்.பொன் சிவானந்தன்

சித்திரை வருடமென்றால் தித்திக்கும் மனசும் நாவும்,
எத்தனை கொண்டாட்டங்கள் முத்திரை பதித்துமுள்ளோம்,
சத்தியத் தேரின் அச்சு தடம்புரண்டோடுதின்று,
பத்தியமான வாழ்வின் படிமத்துள் வாழ்ந்திருந்தோம்.

"வருஷக்காரனுக்கோர் பெட்டி" நிறையவே நெல்லுமள்ளி,
கருங்கதலிப் பழத்தின் சீப்பொன்றும், கொடிப்பூ, பாக்கு,
பருத்தியின் பஞ்சு, காசு, மஞ்சள், வெற்றிலை, பூணாரம்,
பொருந்தவே வைத்து பட்டால் மூடி "உள்வீட்டில்" வைப்பார்.

நிறைகுடம் நிமிர்ந்து நின்று நேர்வழி வாழச் சொல்லும்
அறையினை நிரப்பிக் குத்து விளக்கொளி உறவு சேர்க்கும்.
மறை முதல் சொல்லும் வாண்மை வந்து வீட்டுக்குள்ளேகுந்தும்
குறையெதும் இல்லா வாழ்வைக் கூப்பிட்டுப் புத்தாண்டேற்கும்.

புத்தாடை அணியுமுன்னர் மருத்து நீர் தேய்த்து மூழ்கி
அத்தனை பேரின் ஆடை அனைத்தையும் வாசல் "தென்னம்
பிள்ளை"க்கு அணிவித்தே நாம் எடுத்ததை உடுத்த நாட்கள்,
தள்ளித்தான் போச்சு, இப்போ தனியொரு கலாசாரந்தான்.

சொந்தங்கள், உறவுக்காரர் வீடெல்லாம் "பலகாரங்கள்"
எந்தெந்த வகையிலெல்லாம் இனிக்க நெய்வாசம் வீசும்.
"கந்தவேள்" கோயில் சென்று கைமுழுத்தமும் பெற்றுய்ந்தோம்,
அந்திக்குள் சைவஉண்டி உண்டபின் குடும்பம் சூழும்.

புந்திக்குள் அம்மா சொன்ன இனசன இல்லமெல்லாம்
சென்றுநாம் அன்போடோடி இணைவதே சந்தோஷந்தான்
சிந்தனை மாறத்தக்க செயலெலாம் நிகழும் வேளை,
சந்தித்த நண்பரோடு "விளையாட்டு" "ஊஞ்சலாட்டம்"

உடல் களைக்கின்ற போது குடலொன்று குடலைத்தின்னும்
நடந்துபோய் சிநேகரோடு அவர்களின் இல்லம் சேர்வோம்.
படைப்பார்கள் பட்சணங்கள் பால் பழம் சேர்த் தெமக்கு.
தடையறத் தின்றால் மீளக் "கிளித்தட்டு" "தாயக்கட்டை"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கொட்டைப் பாக்கடித்தலோடு" குழிப்பாக்குப் போடலாலே,
கெட்டிக்காரர்களுக்குப் பாக்குத்தான் மடியில் கூடும்
சுட்டிகள் நாங்கள் மிக்கச் சுறுசுறுப்பாகச் செய்த
"மட்டத்து வெற்றி" கண்டு வாழ்த்துவர் பெற்றாரெல்லாம்

."கிறுக்குஞ்சில்" கிறுகிறுக்கும், கிறீச்சிடுமிசையில் சுற்றும்
பெருநிழற் சிகரமான பேராலை மரத்தின் கொப்பில்
"நெறு நெறு" சத்தத்தோடு நீள் கயிற்றூஞ்சலாடும்
சிறாரொடு பெரியோர் ஏறிப் பாடுவர் ஊஞ்சற்பாடல்

இரண்டுபேர் "பலகை அந்தம்" இரண்டிலும் கயிற்றைப் பற்றி
உரத்தந்த ஊஞ்சலாட உன்னுவார் இருப்போர் பாட்டின்
பொருத்தத்துக் கிசைவாய், பாடற்றருவினைப் பாடுவார்கள்,
திருத்தமாய் எழுந்து வந்து மறுபக்கம் சென்று மீளும்.

"எட்டுநாள்" மட்டிலிந்தக் குதூகலம் தொடர்ந்திருக்கும்
அத்தனை நாளும் வீட்டுப் படுக்கைக்கே வந்துசேர்வோம்.
நித்தியம் நிலத்தில் அன்பு நெருங்கி நின்றுறவு தோய,
எத்தனை சொந்தமுண்டோ அங்கெல்லாம் சென்று மீள்வோம்.

சமூகத்தின் குழுமமொன்றை அடையாளம் காட்டுதற்கு
அமைதியின் பண்பையூட்டும் கலை, கலாசாரம் தேவை.
அமையவே வாழ்த லெங்கள் கருணையை மேன்மை செய்யும்
நமை இன்று "போதை" ஏற்றி வாழ்வதே அழிந்தவாறு

சொந்தத்தை "முறை"யைப்பற்றி அறியாத குழுவாய் மாறி
வந்தெங்கள் கலாசாரத்தை மலினமாய் மாற்றிப்போட்டு.
சிந்தித்தால் சோரம் போன சீர் கெட்ட வாழ்வின் ஓட்டம்
"சந்திப்பு" சந்தியானால் சரித்திரம் என்ன சொல்லும்?

சமாந்தரம் இணைவதென்றால் முடிவிலியாகிப் போகும்.
அமாவாசை இருளில் நின்று கரும்பூனை தேடுகின்றோம்.
சமாதானம் பேசலாம்தான். மனமதை இயக்கவேணும்.
சுமாராகச் சிந்தித்தாலே மானிடம் தளைக்கும், வாழும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கல்விப்புலத்தில் காரேறுமூதூர்

வி.ரி.சகாதேவராஜா (M.Ed)

உதவிக் கல்விப் பணிப்பாளர்

**கல்வி – அறிமுகம்**

கல்வி சமூக மாற்றத்திற்கான ஒரு கருவி. அது மனிதரிடையே பல மாற்றங்களை ஏற்படுத்தக்கூடியது. தேசிய ஒருமைப்பாட்டை *(National Intergration)* ஏற்படுத்த கல்வி ஒரு வலுவான கருவி என்று கூறப்படுகின்றது. அதேவேளை அது சமுதாயத்தில் சமூகப்பெயர்வுகளை *(Social Mobilization)* மற்றும் சமூக வகுப்புக்களை *(Social Classes)* ஏற்படுத்தவும் கூடியது. இம் மாற்றங்களை காரைதீவில் பரவலாகக் காணலாம்.

அறிவையும், சமூகத்தையும் தொடர்ச்சியாக மீள்கட்டமைப்பு செய்ய வேண்டும். கலாசாரத்தில் மாற்றங்கள் ஏற்பட்டு விட்டால் அவ்வினம் அழிந்து போகும் என்று கல்வி அறிஞர்களான *Smith, Stanly, Shores* ஆகியோர் கூறியுள்ளனர்.அக் கலாசாரத்தை பேணும் வண்ணம் சாகித்ய கலாசார விழாக்களை காரைதீவுமண் நடாத்தி வருவது கண்கூடு.

இன்று உலகில் தேசிய இயக்கங்கள் எல்லாம் தம் எதிர்கால அபிவிருத்தியையும், இருப்பையும் உறுதி செய்யும் நோக்கில் கல்வி மனிதவள அபிவிருத்தி தொடர்பான புதிய மாற்றங்களையும் துணிகரமான முடிவுகளையும் மேற்கொண்டு வருகின்றன.

அறிவுப்பிரவாகம் பெருக்கெடுத்து ஓடுகின்ற இக்கால கட்டத்தில் அதனையொட்டிய மாற்றங்கள் பல்வேறு துறைகளிலும் ஏற்பட்டு வருகின்றன. ஒவ்வொரு காலத்திலும் ஏற்படும் மாற்றங்கள் எதிர்பாராத முறையில் அமைந்து விடுவதுடன் மனித வர்க்கத்திற்கு ஆச்சரியத்தையும் தருகின்றன. இவ்வாறான மாற்றங்களுக்கு பதிற்குறிகளை வெளிப்படுத்தும் வகையில் எதிர்கால சந்ததியினை ஆயத்தம் செய்தல் வேண்டும். அனைவரும் தரச்சிறப்பு மிக்ககல்வி (Quality Education) என்ற செயற்பாட்டின் நகர்வு, அறிவொழுக்கம் என்ற எண்ணக்கருவின் மீளாய்வுக்குழு இட்டுச் செல்கிறது.

உலகில் எங்கோ ஒரு மூலையில் ஏற்படக்கூடிய ஓர் எதிர்பாராத நிகழ்வு ஏனைய நாடுகளிலும் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய புதிய உலக ஒழுங்கில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். அறிவுசார் முகாமைத்துவம் *(Knowledge Management)* நாளைய தலைமுறைக்காரரின் தேடலையும் அதன் இருப்பினையும் தீர்மானிக்கும் காரணியாகும். உலகை புரிந்து கொள்ளவும் தன்னைத்தானே உணர்ந்து கொள்ளவும் முடியும். *Rudy Ruggles* என்பவர் கலாசாரம் மற்றும் ஊக்குவிப்பு மூலமாக அறிவு வளர்ச்சிக்கு உதவ முடியுமென கூறியுள்ளார்

**காரைதீவு – அறிமுகம்**

ஈழவள நாட்டின் குணபாலில் மிளிரும் மீன்பாடும் தேனாடாம் மட்டக்களப்பு மாநகரின் தென்பால் 27 மைல் கல் தொலைவில் சிறப்புடன் விளங்குவது காரைதீவு எனும் நற்கிராமமாகும். அதனை காரேறு மூதூர் எனவும் அழைப்பர். கன்னலும், கமுகும், செந்நெல்லும் விளையும் காரைதீவிலே பண்ணும் பரதமும் கல்வியும் பெற்றுச்சீரிய தொண்டுக்குச் சிறந்து விளங்கிய நீண்ட பாரம்பரயத்துடன் கூடிய பரம்பரையினர் வாழ்ந்து வருகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடலும் கடல் சார்ந்த நெய்தல் நிலமும், வயலும் வயல் சார்ந்த மருத நிலமும் ஒருங்கே அமையப்பெற்று இவ்வூர் சுற்றிவர நீர் நிலைகளால் சூழப்பட்டுள்ளது. இதனால் தீவு எனப் பெயர் வரலாயிற்று.

கார் காத்த வேளாளர் வாழ்ந்ததீவு அல்லது காரைமரங்களால் நிரம்பப்பெற்ற தீவு அல்லது மழை (கார்) கூடுதலாகப் பெறும் தீவு அல்லது கரையில் முதலைகள் (முதலையை கார் என்றும் அழைப்பர்) படுத்திருக்கக்கூடிய தீவு என்ற பல்வேறு காரணங்களால் இப்பெயர் பெறலாயிற்று என்று கூறலாம். அம்பாறை மாவட்டத் தமிழ் கிராமங்களுக்கெல்லாம் தாய்க் கிராமம் என்று கருதப்படுகின்றது.

அவனியில் சைவமும், தமிழும் போற்றத்தக்க வண்ணம் வாழ்ந்த முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளையும், சேவையின் சின்னம் சுவாமி நடராஜானந்தா அடிகளையும் ஈன்றெடுத்தது இக் காரைதீவு மண். சித்தருள் சித்தர் ஸ்ரீ சித்தானைக்குட்டி சுவாமிகள் சித்துக்களையும், பல திருவருட்களையும் செய்து சமாதியானதும் இங்கேதான்.

8.94 சதுர கிலோமீற்றர் பரப்பளவைக் கொண்ட காரைதீவு பிரதேச செயலகப் பரிவில் 17 கிராமசேவையாளர் பிரிவுகள் உள்ளன.
இங்கு 5073 குடும்பங்களைச் சேர்ந்த 16656 பேர் வாழ்ந்து வருகிறார்கள். இவற்றில் 8173 ஆண்களும் 8483 பெண்களும் அடங்குகின்றனர். இது முறையே 49% *51%* ஆகும். இங்கு பெரும்பான்மையாக தமிழரும் சிறுபான்மையாக முஸ்லிம்களும் பரஸ்பரம் புரிந்துணர்வுடன் வாழ்ந்து வருகின்றனர்.

## <u>பூர்வீகம்</u>

ஈழமணித் திருநாட்டின் எழில் வளமிக்க மீன்பாடும் தேனாடாம் மட்டுமா நகரின் கண் தென்கோடியிலே ஒருபுறம் நெய்தலும், மறுபுறம் மருதமுமாகிய இரு திணை மயக்கமுற்று செழுமையும், பசுமையும் மிளிரும் காரைதீவு எனும் கிராமம் கற்றோர் உள்ளங்களை கவர்ந்து நிற்கின்றது. கல்வியும் வீரமும் போற்றப்பட்ட இம் மண்ணின் பூர்வீகம் பற்றி சிறிது இங்கு நோக்குவோம்.

பாரம்பரிய தமிழினம் வாழ்ந்த மட்டு மாநிலம் 2500 ஆண்டுகள் பழமையானது. பழந்தமிழ் குடிமக்கள் அன்றே வாழ்ந்த வரலாறு **'மட்டக்களப்பு தமிழகம்'** என்ற நூலினூடாக பண்டிதர் வீ.சீ.கந்தையா அவர்களால் வெளிக்கொணரப்பட்டது.

கி.மு. 540 இல் விஜயன் எனும் மன்னன் பாண்டிய நாட்டிலிருந்து தமிழர்களை கொண்டு வந்து மட்டு மாநகரின் தென்பால் 17மைல் கல்தொலைவில் கதிரகலை எனுமிடத்தில் குடியேற்றியதாக ஒரு வரலாறு உண்டு. கி.பி. 1215 இல் கலிங்கமாகோன் எனும் மன்னன் தென்னிந்தியாவிலிருந்து வன்னியர் வரவழைக்கப்பட்டு ராஜரட்டை உள்ளிட்ட திருமலை மட்டக்களப்பு காரைதீவு திருக்கோவில் போன்ற பகுதிகளில் 40 வருடங்களுக்கு மேல் வன்னிமை ஆட்சிசெய்ததாக வரலாறு கூறுகிறது.

கி.பி 1137 இல் கஜபாகு எனும் சிங்கள மன்னன் சேரநாட்டிலிருந்து பத்தினித் தெய்வமாம் கண்ணகி வழிபாட்டை 'கண்ணகி சிலை' கொணர்ந்ததன் மூலம் தமிழரின் பெண் தெய்வவழிபாடு வேரூன்றியதை சிலப்பதிகாரம் சுட்டி நிற்கின்றது.அக்கால கட்டத்தில் காரைதீவில் வாழ்ந்த மறத்தமிழர்கள் கண்ணகிக்கு கோயில் கட்டி வழிபட்டதாக சரித்திரம் கூறுகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டக்களப்பை இன்னும் **'புளியந்தீவு'** என்று அழைக்கும் அறிவோர் உளர். **'புளியன்'** எனும் வேடகுலத்தலைவன் அப்பகுதியை ஆண்டதனால் இப்பெயர் பெற்றதாக கூறப்படுகின்றது. இதே வேளை சுவாமி விபுலானந்தர் கூறியது போல் பூர்வீகக்குடிகளில் 'புளித்தர்' எனும் சாதியும் இருந்துள்ளது. இதனை மகாவம்சமும் உறுதிப்படுத்தியுள்ளது. இந்த புளித்தர் வாழ்ந்த தீவு என்பதால் "புளியந்தீவு" எனும் கருத்தும் உண்டு.

காரைதீவு எனும் ஊர் அக்காலத்தில் மட்டு, மாவட்டத்தின் கீழ் இருந்தது. 1961களில் காரைதீவு அம்பாறை மாவட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட்டது.
காரைதீவின் வடகோடியிலேயுள்ள மாளிகைக்காடு எனும் முஸ்லிகள் வாழும் கிராமம் முதலில் சுவாமி விபுலானந்தரால் **'மளிகைக்கடை'** என அழைக்கப்பட்டது. காலப்போக்கில் 'மளிகைக்கடை' மருவி 'மாளிகைக்காடு' என பெயர் வரலாயிற்று.

தொலமியின் வரைபடத்தில் (கி.பி. 140) கிழக்கின் மிகமுக்கிய துறைமுகமாக **'அறுகங்குடா'***(Lithus Magnus)*என்ற பெயரில் விளங்கியது. இத்துறைமுகத்தில் பாரிய கட்டுமரங்கள் ஏற்றப்பட்டிருக்கின்றன. மேலும், பாணமை, திருக் கோயில், கோமாரி, காரைதீவு, கல்லாறு, கல்முனை, மட்டக்களப்பு போன்ற கிராமங்களும் மிகப்பிரதானமான கடலோரத்துறை முகங்களாக அக்காலத்தில் விளங்கியது என்று 12ஆம் நூற்றாண்டில் அல்-இத்ரீசி,அல்-பூர்பாணி, அபூசெய்யது என்ற புகழ்மிக்க எழுத்தாளர்கள் எடுத்துக் கூறியுள்ளனர்.

மட்டக்களப்பிற்கு துலுக்கர்களும், பட்டாணியர்களும் வந்த போது அங்கு தமிழர்கள் வாழ்ந்துள்ளனர் என்று கூறும் 'மட்டக்களப்பு **மான்மியம்**' வியாபாரத்திற்காக வந்த அராபிய முஸ்லிம்கள் தமிழரின் முக்குகர் வம்சத்தில் பெண் எடுத்து வாழ்ந்து வந்ததாக கூறுகின்றது. இவை கி.பி 05 இல் இடம் பெற்றிருக்கின்றது.

1887இல் நாடுகாடுப்பற்று, பரவணிக்கல்வெட்டு தப்றோவணியன் என்ற வரலாற்று சஞ்சிகையில் மட்டக்களப்பு பிராந்தியம் ஏழு வன்னிமைகளாகப் பிரிக்கப்பட்டு ஆளப்பட்டது என்று கூறுகின்றது. அதன் ஆசிரியர் *'Hughnevill'* ஆவார். 1854இல் மட்டக்களப்பு என்பது 27574 மக்களையும், 1360 சதுர மைல் பரப்பையும் கொண்டது என காசிச்செட்டியார் நூலில் உள்ளது.

இந்த அடிப்படையில் பார்க்கின்ற போது தமிழர்கள் பாரம்பரியமாக பண்டுதொண்டு வாழ்ந்து வந்துள்ளமையும் கி.பி 1137ஆம் காலப்பகுதியில் இடம்பெற்ற கஜபாகு மன்னனது வருகையின் பின்னர் காரைதீவு எனும் தமிழர் பழம்பதி சரித்திரத்தில் தடம்பதிக்கலாயிற்று.

ஆன்மீகவாதிகளின் ஆசிர்வாதத்தால் காரைதீவு மண் என்றும் ஜொலித்துக் கொண்டேயிருக்கும் என்ற நம்பிக்கை பலரிடமும் இன்றும் நிலைத்து நிற்கின்றது. மட்டக்களப்புத் தமிழகத்தில் கல்விக்குப் பேர் போன ஊராகத்திகழ்வதும் இக்காரைதீவு எனலாம்.

## தேசியக் கல்வி

இலங்கையின் கல்வி நீண்டகால வரலாற்றைக் கொண்டது எனினும் நவீன கல்வி முறைமை சுமார் 130 ஆண்டு கால வரலாற்றைக் கொண்டது எனலாம். 1869இல் பொது போதனா திணைக்களம் அமைக்கப்பட்டமை இந்நாட்டின் நவீன கல்வி முறைமையயின் தோற்றத்தைக் காட்டி நிற்கின்றது.

இது பின்பு கல்வித் திணைக்களமாகவும், சுதந்திரத்திற்குப் பின்பு கல்வி அமைச்சாகவும் பரிணாமம் பெற்றது. வசதி படைத்தோரின் சொத்தாக விளங்கிய கல்வியை சகலருக்குமான கல்வியாக **(Education for All)** மாற்றியமைத்த பெருமை CWW கன்னங்கராவையே சாரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன்பின்பு இந்நாடு பல்வேறு கல்விச்சீர்திருத்தங்களைக் கண்டு வந்துள்ளது. அதனால் ஒப்பீட்டளவில் மிகஉயரிய அடைவு மட்டங்களைக் கண்டுள்ளது. எழுத்தறிவு வீதம், சேர்வு வீதம், ஆசிரியர் நியமன வீதம் ஆகிய கல்வி குறிகாட்டிகள்(Index) இலங்கையின் உயரிய கல்வி அடைவுகளுக்கு சான்று பகர்கின்றன. எனினும் இவை அளவு ரீதியிலுள்ளதே தவிர பண்பு ரீதியான வளர்ச்சிப் பரிணாமத்தைக் காட்டி நிற்கவில்லையென்பதும் சுட்டிக்காட்டத்தக்கது.

சுமார் 20 மில்லியன் மக்களைக் கொண்டுள்ள இந்நாட்டில் சுமால் 4.2 மில்லியன் பிள்ளைகள் பாடசாலையில் கல்வி கற்கின்றனர். சுமார் 02 இலட்சம் ஆசிரியர்கள் கற்பிக்கின்றனர். 6.4 சதுர கிலோ மீற்றர் பரப்பில் ஒரு ஆரம்பப் பாடசாலை காணப்படுகின்றது. 400 பிள்ளைகளுக்கு ஒருபாடசாலை என்ற நிலையும் காணப்படுகின்றது.

14 பல்கலைக்கழகங்களும், 05 பட்டமேற் கல்வி நிறுவகங்களும் உள்ளது. இவற்றில் சுமார் 45000 மாணவர்களும், 3000 விரிவுரையாளர்களும், பேராசிரியர்களும் கற்பிக்கின்றனர். கல்வியில் வளமான பின்புலங்களைக் கொண்டுள்ள போதிலும் அபிவிருத்திக்குச் சாதகமற்ற சூழ்நிலையின் காரணமாக கல்வியில் சமவாய்ப்பு சில இடங்களில் கேள்விக் குறியாகயுள்ளது.

## காரைதீவில் கல்வி

கல்விக்குப் பெயர்போன காரைதீவின் கல்வி நிலை அதன் வளர்ச்சி பற்றி இவ்வண் ஆராய்தல் பொருத்தமாகும்.

நெய்தலும், மருதமும் ஒருங்கே அமையப்பெற்ற காரேறு மூதூரில் விவசாயம் செய்வோரும், கடற்றொழில் செய்வோரும் முற்காலத்தில் கூடுதலாக வாழ்ந்தாலும் மிஷனரி மற்றும் இ.கி.மிஷன் வருகையுடன் கல்வியில் ஆதிக்கம் செலுத்திய சந்ததியினர் கூடுதலாக வாழ்ந்தனர் என்று கூறமுடியும்.

மிஷனரியின் ஒரு பாடசாலை இருந்த காலத்தில் குறிப்பிட்ட சிலர் கல்வியில் புலன்செலுத்த ஏனையோர் அலட்சியமாக இருந்து விட்டனர். ஆனால் இராம கிருஷ்ணமிஷன் பாடசாலையின் வருகையினால் சமூகத்தில் கல்வி விழிப்புணர்ச்சி ஏற்பட்டது. கல்விக்கான வசதிகள் கடுகளவு இருந்த வேளையில் காரைதீவை அகில உலகத்திலும் பிரகாசிக்கச் செய்த வித்தகர் விபுலானந்த அடிகள். கல்வியில் அதீத அக்கறைகாட்டியதுடன் காரைதீவுன் கல்வி ஊற்றுக்கு பிரதான கருவூலமாகத் திகழ்ந்தார்.

அதற்கு அவரது தந்தையார் சாமித்தம்பி விதானையார் அவர்களும் காரணமாவார். கிராம தலைமை என்றால் அந்த காலத்தில் அது விதானையார் தான் . மிஷனரிப்பாடசாலைகளில் கற்ற சுவாமிக்கு இந்து வேட்கை வெருண்டெழுந்தது. அதன்பயனாக இராமகிருஷ்ண மிஷனில் இணைந்து சிவானந்தா வித்தியாலயம் உள்ளிட்ட பல பாடசாலைகளை நிறுவியதுடன் 26 மிஷன் பாடசாலைகளுக்கு முகாமையாளராகவும் செயற்பட்டு கல்வியூட்டினார்.

இதுவே காரைதீவூருக்கான கல்விக்கண் திறக்கச் செய்த வரலாறு எனலாம். காரைதீவின் கல்விக்கு மூலவிசையாக ஆணிவேராகத் திகழ்ந்த இராமகிருஷ்ண மிஷன் ஆண்கள் பாடசாலையுடன் ஆரம்பித்த மிஷன்கல்வி பின்பு பெண்கள் பாடசாலையை சுவாமிகள் ஆரம்பிக்க காரணமாயிற்று. இவ்விரண்டு பாடசாலைகளும் சுமார் 50 வருடகாலம் காரைதீவு, சாய்ந்தமருது, நிந்தவூர் சம்மாந்துறை வாழ்தமிழ் முஸ்லீம் மக்களது கல்விக்கு களமமைத்து கொடுத்தன எனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்விரு பாடசாலைகளிலும் அக்காலத்தில் *'SSC', 'HSC'* வரை படிப்பிருந்தது. 1960 களுக்கு பிற்பாடு அவை *GCE(O/L), (A/L)* என மாறிய போது பலர் மேற்படிப்பிற்காக சிவானந்தா வித்தியாலயம், வந்தாறுமூலை மகா வித்தியாலயம், மைக்கேல் கல்லூரி என பஸ் ஏறிச்சென்று கற்கத் தலைப்பட்டனர்.

காரைதீவை விட்டு உயர்படிப்புக்காக மட்டக்களப்புக்குச் செல்வோர் அக்காலத்தில் *'றங்குப்பெட்டி'* என அழைக்கப்படும் தகரப்பெட்டியோடு செல்வார்கள். பொதுவாக பொருளாதார வளம் படைத்தோர் அப்படிச் சென்றனர். கூடவே சுயமாக இயங்கும் வகையில் தேவையான பற்பொடி முதல் சவர்க்காரம் வரை அத்தனை பொருட்களையும் கொண்டு செல்வர். அப்படிச் சென்ற சிலர் வீட்டுநினைவு(**Home sick**) காரணமாக மறுநாளே ஓடிவந்து வீடு சேர்ந்த சுவாரஸ்யமான வரலாறுகளும் உண்டு.

அதேவேளை காரைதீவுக் கல்விக்கு மூலவிசையாக இருந்தவர் சுவாமி விபுலானந்த அடிகளார் என்றால் அது மிகையாகாது. அவரது வழிகாட்டலில் கல்விமான் க.கணபதிப்பிள்ளை, *FRGS* (முன்னாள் சிவானந்தா வித்தியாலய அதிபர்), பேராசிரியர் இ.பாலசுந்தரம், டாக்டர் க.விவேகானந்தன் கலாநிதி.ந.நடராஜா போன்றோர் உயர்நிலையில் மிளிர்ந்தமை இவ்வண் ஈண்டு குறிப்பிடத்தக்கது..

சுவாமி விபுலானந்தர் சார்ந்திருந்த கிராமகிருஷ்ணமிஷன் காரைதீவில் ஆரம்பப் பாடசாலைகளான இராமகிருஷ்ணமிஷன் ஆண்கள் பாடசாலை என்றும், இராமகிருஷ்ணமிஷன் சாரதா வித்தியாலயம் என்றும் நிறுவி கல்வி அத்தியாயத்திற்கு வழிசமைத்தது.

அன்று ஏற்பட்ட விழிப்புணர்ச்சியால் காரைதீவில் கல்வி மறுமலர்ச்சி ஏற்பட்டு பலரும் படிக்கத்தொடங்கினர். மிஷன் பாடசாலைக்கு மறுதலையாக அரச பாடசாலை ஆரம்பிக்க வேண்டும் என்ற சிந்தனையும் இக்கல்வி அபிவிருத்தியால் எழுந்தது எனக்கூறலாம்.

காரைதீவுக் கல்வியில் மூன்று மிஷன்பாடசாலைகளுக்குப் பின்பு 07 பாடசாலைகள் உருவாகின. சின்னஞ்சிறு ஊரில் 10 பாடசாலைகள் இருப்பது என்பது இங்குள்ள கல்வித்தாகத்தையும், சிறப்பையும் எடுத்துக்காட்டுகின்றன.

## பாடசாலைகளின் தோற்றம்

காரைதீவு வரலாறு கண்ணகை அம்மன் வரலாற்றோடு ஆரம்பித்தாக கூறுவார்கள். முதலில் கத்தோலிக்க மிஷனில் பாடசாலை ஒன்று ஓலைக் கொட்டிலில் இயங்கியதாக சான்றோர் கூறுவர். அப்பாடசாலை காரைதீவு.5 ம் பிரிவில் பிறின்சிப்பல் என அன்று அனைவராலும் அழைக்கப்பட்ட அமரர் மு.சச்சிதானந்தசிவம் வாழ்ந்து தற்போது ச.க.மகேஸ்வரன் வாழ்கின்ற காணியில் அமையப்பெற்றிருந்தது.

திண்ணைப்பள்ளி முறையில் அது இயங்கியது. ஊரில் கல்விப்பசி இல்லாத காலம் ஆதலால் ஒரு சிலரே அதில் கலந்து கொண்டனர். மறுபுறம் அது மிஷனரி ஆரம்பப்பள்ளி என்பதனால் அப்போது வாழ்ந்த இந்து மக்கள் பலர் அதனைத் தவிர்த்துக் கொண்டனர். அங்கு கற்பித்தல் இரு நாட்களென்றால் வைத்தியசேவை இரு நாட்களுக்கு நடைபெறும்.அது மிசனரியை வளர்ப்பதை நோக்காக் கொண்டியங்கியது.

அதன் எதிரொலியாக 1908 களில் தற்காலிகமாக திண்ணைப்பள்ளி அமைப்பில் பாடசாலையொன்று தற்போது ஆண்கள் பாடசாலை இயங்கும் வளாகத்தில் உதயமானது. அங்கு புலோலி வைத்திலிங்க தேசிகர் புராண இதிகாச இலக்கண வகுப்புகளை நடாத்திவந்தார். புலோலி வைத்திலிங்க தேசிகர் என்பார் காரைதீவு பாலையடி வால விக்னேஸ்வரர் ஆலயத்தின் குருவாக அருந்ததுடன் சுவாமி விபுலானந்த அடிகளாருக்கு ஆரம்பக்கல்வியை ஊட்டியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்பு 1912 இல் முதன் முதலில் கல்லால் ஆண்கள் பாடசாலை இராமகிருஷ்ணமிஷன் நிருவாகத்தால் ஆரம்பிக்கப்பட்டது. கிராம மக்களின் பங்களிப்பு கூடுதலாக இருந்தது. கா.வ.மார்க்கண்டன் என்ற பிரபல குத்தகைக்காரர் பாரிய பங்களிப்பைச் செய்தார். மண்டூரைச் சேர்ந்த திரு. ப.பத்தக்குட்டி வாத்தியார் முதல் அதிபராக இருந்தார். திரு ச.சிற்றம்பலம் அவர்களும் உறுதுணையாக விளங்கினார். ஆரம்பத்தில் 20 மாணவர்கள் பயின்றனர்.

1912 இல் அமெரிக்காவிலிருந்து இலங்கைக்கு விஜயம் செய்த சுவாமி விவேகானந்தரின் சிஸ்யையாக விளங்கிய இராமகிருஷ்ணமிஷன் பெண்துறவி சகோதரி அவபாமியா அம்மையார் ஆரைப்பற்றையிலும், காரைதீவிலும் இரு சைவப் பாடசாலைகளை திறந்துள்ளார் என்பது வரலாறு. அதன்படி காரைதீவு இராமகிருஷ்ணமிஷன் ஆண்கள் பாடசாலையை சகோதரி அவபாமியா அம்மையார் திறந்து வைத்தார் என்பது புலனாகிறது.

காரைதீவு மக்களுக்கான முறையான முதல் பாடசாலையான இங்கு காரைதீவு வாழ் தமிழர்கள் மட்டுமல்லாது சாய்ந்தமருது, மாளிகைக்காடு, சம்மாந்துறை, நிந்தவூர் பகுதிகளைச் சேர்ந்த முஸ்லீம் சகோதரர்களும் அன்னியோன்னியமாக கல்வி கற்றனர்.பண்பாடு கலாசாரம் மனிதவிழுமியங்கள் அங்கு பேணப்பட்டன.

சிலேற், பென்சில் சகிதம் செல்லும் மாணவர் கட்டாந்தரையிலிருந்து பாடம் கற்றனர். கெயார் விஸ்கட், பணிஸ் என்பன அப்போது மாணவர்களுக்கு வழங்கப்பட்டன.

கல்விப்பயிர் வளர்த்த அர்ப்பணிப்புள்ள பல தலைமை ஆசான்கள் இங்கு கற்பித்திருக்கின்றனர். இன்றும் மக்களால் பேசப்படுகின்ற திரு.தங்கராசா வாத்தியார், திரு.கணபதிப்பிள்ளை வாத்தியார் போன்றோர் இங்கு கற்பித்திருக்கின்றனர்.

இராமகிருஷ்ணமிஷன் முதலில் கட்டிய பாரிய தூண்களுடன் கூடிய நீண்ட மண்டபம் இன்றும் அங்குள்ளது. அதில் உரோம இலக்கத்துடன் கூடிய பாரிய மணிக்கூடு ஒன்று பொருத்தப்பட்டு இருமருங்கிலும் முக்கியஸ்தர்களின் படங்கள் மாட்டப்பட்டதோடு, மேடையில் இராமகிருஷ்ணமிஷ ஸ்தாபன இராமகிருஷ்ணர், சுவாமி விவேகானந்தர், சாரதாதேவி அம்மையார் ஆகியோரின் படங்களுடன் இந்துக் கடவுளர்களின் படங்களும் வைக்கப்பட்டிருந்தன.

இனஉறவின் மையமாகத் திகழ்ந்த இராமகிருஷ்ணமிஷன் ஆண்கள் பாடசாலை யில் **SSC, HSC** வரை வகுப்புகள் இருந்தன. இப்பிராந்திய தமிழ், முஸ்லிம் மாணவர்கள் கற்கவும் ஒரே ஒரு கல்விக்கூடமாக இப்பாடசாலை திகழ்ந்ததனால் வரலாற்றில் முக்கிய இடத்தை பிடித்துள்ளதில் வியப்பில்லை. டாக்டர் எம்.ஐ.எம்.ஜெமீல் எழுதிய சாய்ந்தமருது வரலாறு என்ற நூலிலும் இவ்விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அங்கு கல்வியோடு நகம் வெட்டுதல், ஸ்ஞானம் செய்தல், தலைக்கு எண்ணெய் பூசுதல், பல் தீட்டுதல் போன்றவைகள் தினமும் பரிசீலிக்கப்படுவதுடன் நல்ல பழக்கவழக்கங்களும் ஊட்டப்பட்டன. தற்போது இங்கு 173 மாணவர்கள் தரம் 1 – தரம் 5 வரையிலான வகுப்புகளில் கல்வி கற்கின்றனர்.

இவ்வேளையில் பெண்களுக்கென தனியானதொரு பாடசாலையொன்றை நிறுவ வேண்டுமென்ற சிந்தனை சுவாமி விபுலானந்தருக்கு ஏற்பட்டது.அதன் பலனாக 1928.11.01 இல் சாரதா வித்தியாலயம் என்ற பெண் பாடசாலை உதயமாகிற்று.இது காரைதீவின் இரண்டாவது பாடசாலையாகும். சுவாமி விபுலானந்தரின் முழுமுயற்சியாலுருவான இப்பாடசாலை அப்போதைய இ.கி.மிசன் முகாமையாளர் அவினாசானந்தா முன்னிலையில் சுவாமி யதீஸ்வரானந்தா ஜீ திறந்துவைத்தார்.ஆரம்பத்தில் திரு.டெனிஸ் வாஸ் திரு. சீ.தங்கராசா போன்ற அதிபர்கள் அர்ப்பணிப்புடன் செயற்பட்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று 11 மாணவிகளுடன் ஆரம்பித்த சாரதா வித்தியாலயம் என்ற பாடசாலை 1975 களில் இ.கி.மி.பெண்கள் பாடசாலை என்ற பெயரைப்பெற்று இன்று 487 மாணவர்கள் 27 ஆசிரியர்களுடன் க.பொ.த(சா.த) வரையான வகுப்புகளுடன் இயங்கிவருகிறது.

அதனை தொடர்ந்து காரைதீவு பிரதேசத்திலுள்ள மாவடிப்பள்ளி கிராமத்தில் ஒரு முஸ்லிம்பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. 1945 இல் மாவடிப்பள்ளி அ.மு.பாடசாலை என ஆரம்பித்து அல் அஸ்ரப் மகா வித்தியாலயம் என இன்று இயங்கி வருகிறது.முஸ்லிம்கள் அங்கு செறிந்து வாழ்கின்றார்கள். இது அந்த ஊரில் உள்ள ஒட்டுமொத்த மாணவர்களுக்குரிய ஒரேயொரு பாடசாலையாகத் திகழ்ந்தது. அப்பாடசாலை 1945இல் தோற்றம் பெற்றது. 1995இல் பொன்விழாவைக் கண்டு *GCE(O/L),* வகுப்புகளுடன் *1 C* பாடசாலையாக இயங்கி வருகிறது.

இந்நிலையில் சுதந்திரத்திற்கு பிறகு 1950களில் மிஷன் பாடசாலையை விட அரச ஆங்கில மொழிமூலப் பாடசாலையை அமைத்தாலென்ன! என்று ஒருசாரார் கருதிச்செயற்பட்டனர். அதன் பலனாக அக்கரையென அழைக்கப்படும் சல்லித்தீவின் கிழக்குப் பாகத்திலே அரசாங்க கனிஷ்ட ஆங்கிலப் பாடசாலையொன்று அப்போதிருந்த வித்யாபதி திரு.அருணந்தி அவாகளால் 1950.01.11 இல் தோற்றுவிக்கப்பட்டது.திரு. என்.தங்கராசா முதல் அதிபராகவிருந்தார்.

பின்பு அது அரசாங்க சிரேஷ்ட ஆங்கிலப்பாடசாலையாக தரமுயர்த்தப்பட்டது. இப்பாடசாலை உயர்வகுப்புக்களைக் கொண்டு சிறந்த அடைவு மட்டத்தையும், சிறந்த நற்பிரஜைகளையும் உருவாக்க வேண்டும் என்ற நோக்கில் இராம கிருஷ்ணமிஷன் ஆண்கள், பெண்கள் பாடசாலையில் தரம் 01 தொடக்கம் தரம் 05 வரை வகுப்புகளை வைப்பதென்றும் அதற்குமேற்பட்ட வகுப்புகளை ஆங்கில சிரேஷ்ட பாடசாலைக்கு அனுப்புவதென்றும் ஊர்கூடி முடிவெடுக்கப்பட்டது. அதன் அடிப்படையில் உயர்வகுப்புகளைக் கொண்டு இயங்கி வந்த மிஷன் பாடசாலைகள் இரண்டும் ஆரம்பர பாடசாலைகளாக மாறியன. விபுலானந்தா மத்திய மகாவித்தியாலயம் அவ்வப் போது பல சாதனைகளை படைக்கத் தவறவில்லை. அதற்கு அப்போதைய அதிபர்களும், ஆசிரியர்களும் காரணகர்த்தாவாக விளங்கினர் எனலாம்.

பாடசாலை வரலாறு பற்றி தனியான பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதனால் இங்கு அதனைத் தவிர்த்து ஏனைய செயற்பாடுகளை குறிப்பிடுகின்றேன்.

அவ்வப்போது வைத்தியபீடம், பொறியியல்பீடம், வர்த்தகபீடம், கலைப்பீடம் என பல மாணவர்கள் பல்கலைக்கழகத்திற்கு சென்று வந்தனர். எனினும் இப்பாடசாலையிலிருந்து இதுவரை வைத்தியர்களும், பொறியியலாளர்களும் உருவாக்கப்பட்டுள்ளனர் என்பதினை சுட்டிக்காட்ட முடியும்.

விபுலானந்த மத்திய கல்லூரியின் உருவாக்கத்தின் பின்பு கரடித்தோட்டத்தில் 1953 இல் ஒரு பாடசாலை உருவாக்கப்பட்டது. காரைதீவு ஈன்றெடுத்த இராமகிருஷ்ண மிஷனின் மற்றுமோர் துறவி சேவையின் சின்னமாம் சுவாமி நடராஜானந்தாஜீ எடுத்த பெரும் முயற்சியின் பயனாக காரைதீவின் மூன்றாவது மிஷன் பாடசாலையாகவும், மிஷனின் 26வதும், இறுதிப் பாடசாலையாகவும் சண்முக வித்தியாலயம் விளங்கியது.கரடித்தோட்டம் என்ற பாரியதொரு நிலப்பரப்பிலுள்ள மக்களுக்கு கல்வியூட்ட வேண்டிய பொறுப்பு சண்முகவித்தியாலயத்திற்கு இருந்தது. மாவடி ஸ்ரீ கந்தசுவாமி ஆலயமருகில் அமைந்த அது பல பரிணாமங்களினூடாக முன்னேறி இன்று *1C* பாடசாலையாக மிளிர்கின்றது. அங்கு *GCE (A/L)* வகுப்பு ஆரம்பிக்கப்பட்ட பிறகு முதல் பரீட்சை 2007 இல் நடைபெற்றது. அங்கிருந்து முதல் தடவையாக 2007 *GCE (A/L)* பரீட்சையில் தோற்றிய மாணவன் செல்வன் ரவிசங்கர் புஸ்பகாந் 03 *'A'*பெற்று பல்கலைக்கழகம் சென்றுள்ளான்.இது வரலாற்றுச் சாதனையாகும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்பு சமகாலத்தில் கண்ணகி இந்து வித்தியாலயம், விஷ்ணு வித்தியாலயம், விக்னேஸ்வரா வித்தியாலயம் என்பன உருவாக்கப்பட்டன. ஆசிரியர், தலைமை ஆசிரியர் என்ற வகிபாகங்களைப் பெறவேண்டி அர்ப்பணிப்புடன் கற்றலை வழங்க ஆர்வத்துடன் கல்வியலாளர்கள் முன்வந்ததன் எதிரொலியாக இப்பாடசாலைகள் உருவாக்கப்பெற்றன.

1961 களில் இலங்கையில் உள்ள அனைத்துப் பாடசாலைகளும் அரச பாடசாலைகளாக சுவீகாரம் செய்தனர். அந்த நிகழ்வுடன் காரைதீவிலுள்ள அத்தனை பாடசாலைகளும் அரசாங்க பாடசாலைகளாயின.

காரைதீவின் வடகோடியிலுள்ள முஸ்லிம்கள் வாழ்கின்ற மாளிகைகாட்டில் சபீனா வித்தியாலயம் என்ற பாடசாலை 1980.06.29 இல் உருவாக்கப்பட்டு கல்வியூட்டி வந்த காலை மாளிகைகாட்டின் கிழக்குப் பகுதியில் வாழ்ந்த மக்களின் அறிவுப்பசியைப் போக்க எண்ணி தற்போதைய அல்-ஹுசைன் வித்தியாலயம் அதிபர் அறிவாளி இப்றாகிம் அவர்களால் 1993 இல் உருவாக்கப்பட்டது.

இவ்விரு பாடசாலைகளும் மாளிகைக்காடு மாணவர்களின் ஆரம்ப கல்வியை புகட்டின. உயர்வகுப்புகளுக்கு அருகிலுள்ள சாய்ந்தமருது, கல்முனைக்கு சென்று வருவதை வழக்கமாக்கிக் கொண்டனர்.

இவ்வகையில் காரைதீவுக் கோட்டத்தில் 07தமிழ் பாடசாலைகளும் 03 முஸ்லிம் பாடசாலைகளும் இயங்கிவருகின்றன.2004 கடற்கோள் அனர்த்தத்தில் விபுலானந்த மத்திய கல்லூரி விக்னேஸ்வரா வித்தியாலயம் அல்-ஹுசைன் வித்தியாலயம் ஆகிய 03 பாடசாலைகள் முற்றாக கபளீகரம் செய்யப்பட்டன. இ.கி.மி.பெண்கள் பாடசாலை பகுதியாக சேதமுற்றது.

அவ் அனர்த்தத்தில் விபுலானந்த மத்திய கல்லூரியைச் சேர்ந்த திருமதி.கஜேந்திரராணி ராஜேந்திரன் சண்முகவித்தியாலயத்தைச் சேர்ந்த திருமதி அங்கயற்கண்ணி ஞானேந்திரன் திருமதி.இந்திராணி கண்ணதாசன் இ.கி.மி.பெண்கள் பாடசாலையைச் சேர்ந்த திருமதி சிவராணி மோகனகுமார் கல்முனை உவெஸ்லி கல்லூரியைச் சேர்ந்த திருமதி .இந்திராணி வெற்றிவேல் ஆகிய ஆசிரியர்கள் காவுகொள்ளப்பட்டனர்.1816 மாணவர்கள் பாதிக்கப்பட்டிருந்தனர். அக்காலகட்டத்தில் சண்முகவித்தியாலயம் இராமகிருஷ்ணமிஷன் ஆண்கள் பாடசாலை சபீனா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் அகதிமுகாம்கள் இயங்கின.

2008 இல் விபுலானந்த மத்திய கல்லூரி விக்னேஸ்வரா வித்தியாலயம் என்பன அதே இடத்திலும் அல்-ஹுசைன் வித்தியாலயம் தோணாவை அண்டிய புது இடத்திலும் மீள நிருமாணிக்கப்பட்டு தற்போது புதுப்பொலிவுடன் இயங்கிவருகின்றன.

## காரைதீவுக் கோட்டம்

காரைதீவுக்கான தனிக் கோட்டம் 1992 இல் ஆரம்பிக்கப்பட்டது.அப்போது 09 பாடசாலைகள் இருந்தன. முதல் கோட்டக்கல்வி அதிகாரியாக கல்முனையைச் சேர்ந்த இ.க.நி.சேவை அதிகாரி திருமதி.சுலோஜனா ஆனந்தராஜா நியமிக்கப்பட்டார்.இவரது அர்ப்பணிப்புமிக்க கல்விப் பணி அக்காலத்தில் பலராலும் வெகுவாகப் பாராட்டப்பட்டது.அவரின் பின்னர் ஜனாப்.எ.எல்.எம்.அமீன் திருமதி.ம.சத்தியதேவா திரு.வெ.ஜெயநாதன் திரு.வே.ஜெயக்குமார் ஆகியோரிருந்து தற்போது திரு.பி.சிவப்பிரகாசம் கோட்டக்கல்வி அதிகாரியாக பணியாற்றி வருகிறார். பத்தாவது பாடசாலையாக மாளிகைக்காடு அல்குசைன் வித்தியாலயம் 1993ல் தோற்றம்பெற்றது. அப்போது கொத்தணிப் பாடசாலை முறைமையும் இருந்தது. கொத்தணிப் பாடசாலை அதிபராக விபுலானந்த மத்திய கல்லூரி அதிபர் திரு.த.சண்முகரெத்தினம் விளங்கினார். காரைதீவுக்கான கோட்டக்கல்வி அலுவலகம் முதலில் சண்முகா வித்தியாலயத்திலும் இ.கி.மி.பெண்கள் பாடசாலையிலும் இயங்கி பின்னர் பிரதான வீதியிலும் இயங்கி தற்போது மீண்டும் சண்முகா வித்தியாலயத்தில் இயங்கிவருகிறது. காரைதீவில் 1946 மாணவர்கள் உள்ளனர்.126 ஆசிரியர்கள் உள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முன்பள்ளிப் பாடசாலைகள்

உலக நாடுகளில் முன்பள்ளிப் பாடசாலைகளின் *(Preschools)* தோற்றம் வளர்ச்சி என்பது நூற்றாண்டைத் தாண்டியுள்ளன. இலங்கையில் இம்முன்பள்ளிகளின் வருகை அதன் தாக்கம் என்பது சற்றுபிந்தியே உணரப்பட்டது. அதற்கு கல்வி, கேள்விகளில் சிறந்து விளங்கிய காரைதீவும் விதிவிலக்கல்ல.

ஆரம்பத்தில் காரைதீவில் சர்வோதயம் போன்ற அமைப்புகள சில முன்பள்ளிகளை நடாத்திவந்தது.தனியார் வீடுகளில் அவை இயங்கின.

முன்பள்ளிப் பாடசாலை முறையாக உருவாக்கப் பெற்றது 1998இல் என்று கூறலாம். அமரர் கே.கிருபேந்திரா அவர்களின் முயற்சியால் விபுலானந்தா மொன்டிசோரி முன்பள்ளிப் பாடசாலை தோற்றம் பெற்றது. செல்வி.சுசீலா செல்வி சுகந்தி ஆசிரியைகளைக்கொண்டுஅது இயங்கத் தொடங்கின.அவரின் பின்பு இன்றுவரை அப்பணியை உதவிக்கல்விப் பணிப்பாளர் திரு.வி.ரி.சகாதேவராஜா அவர்கள் முன்கொண்டு செல்கின்றார்.

விபுலானந்தா மொன்டிசோரிக்குப் பிற்பாடு சாயி பாலர்பாடசாலை உருவாக்கப்பெற்றது. அதன்பின்பு சுவாட், மனித அபிவிருத்தி ஸ்தாபனம், சீ.சீ.எவ். வை.எம்.சி.எ சமாதான அமைப்பு போன்ற பல அமைப்புகள் 16 முன்பள்ளிகளை ஒவ்வொரு பிரிவிலும் ஏற்படுத்தி நடாத்திக் கொண்டு வருகின்றன. காரைதீவு பிரதேச சபை 03 முன்பள்ளிகளை நடாத்திக் கொண்டு வருகின்றது. இவைகளில் 28 முன்பள்ளி ஆசிரியர்கள் குறுகிய கொடுப்பனவில் கற்பித்து வருகின்றனர். 457 மாணவர்கள் பயின்று வருகின்றனர்.

இவர்களுக்கு சீருடை முதல் பாதணி வரை வழங்கப்பட்டுள்ளன. முன்பள்ளிகளின் வருகையின் பின்பு ஆரம்ப கல்வி வகுப்புகள் சக்தியோடு இயங்க ஆரம்பித்தது. இவ்வடித்தளம் புலமைப்பரீட்சைப் பெறுபேறுகளிலும் பிரதிபலிப்பை ஏற்படுத்தி வருகின்றது.

எனினும் சுனாமிக்குப் பின்னர் 10 முன்பள்ளிகளை உருவாக்கி இன்றுவரை வருடாந்தம் விளையாட்டுப் போட்டி, கல்விச் சுற்றுலா, கலை, கலாசாரப் போட்டி, பரிசளிப்பு விழா, சிறுவர் தினவிழா போன்றவற்றை மனித அபிவிருத்தி ஸ்தாபனம் முன்னின்று செய்து வருவதை குறிப்பிடல் பொருந்தும். மனித அபிவிருத்தி ஸ்தாபனம் **(HDO)** என்பது சுனாமிக்குப் பிறகு கண்டியிலிருந்து வந்து காரைதீவில் இன்றுவரை தங்கியிருந்து சேவையாற்றிவரும் ஒரு அரசசார்பற்ற ஸ்தாபனமாகும்.

## கல்விச் சாதனையாளர்கள்

கல்வியூராம் காரைதீவின் கல்விக்கண் திறக்கக் காரணமாய் அமைந்தவர் சுவாமி விபுலானந்த அடிகளார். அவர் ஒரு துறவி மட்டுமல்ல உலகில் முதல் தமிழ் பேராசிரியர் என்ற உயர்கல்விச் சாதனை அந்தஸ்தைப் பெற்றவர். அனைத்து வசதிகளும் அற்றிருந்த காலத்தில் பண்டிதராக விஞ்ஞானப் பட்டதாரியாக, பேராசிரியராக கல்வியில் உயர்ந்தவர் அவர்தான். காரைதீவின் முதல் கல்விச் சாதனையாளர் என்று அவரை ஆணித்தரமாக கூறமுடியும். அதேகாலப் பகுதியில் பட்டம் பெற்று லண்டன் **FRGS'**என்ற உயர்பட்டத்தைப் பெற்றவர் காரைதீவைச் சேர்ந்த திரு.கையாலபிள்ளை கணபதிப்பிள்ளை என்பார். அவர் சிவானந்தா வித்தியாலயத்தின் பொற்காலம் என்று கூறப்படும் காலத்திற்கு காரணமான அதிபராக சீரிய பணியாற்றிய ஒரு கல்விமான். அவரை நடமாடும் பல்கலைக்கழகம் என்றும் கூறுவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிஎச்டி' (PHD) என்ற தத்துவவியல் மேதை என்ற பட்டத்தை அன்று பேராசிரியர் இளையதம்பி பாலசுந்தரம், திரு. கந்தவனம் விவேகானந்தன் ஆகியோர் பெற்று மண்ணுக்கு பெருமை சேர்த்தனர். 'காட்டுராஜா' என்று பெயர் பெற்ற அமரர். விவேகானந்தன் உலகத் தமிழர் பண்பாட்டு மன்றம், கனடா சுவாமி விபுலானந்தர் மன்றத்தின் காப்பாளர் பேராசிரியர்இ.பாலசுந்தரம் போன்றோர் சிறப்புக்குரியவர்கள்.

முதல் *MBBS* வைத்தியராக டாக்டர் செல்லத்துரை பரஞ்சோதி, முதல் நிலஅளவையாளராக அமரர் செல்லத்துரை பத்மநாதன், முதல் கணக்காளராக தங்கராசா பிரகதீஸ்வரன், முதல் பொறியியலாளராக வேலுப்பிள்ளை சிவசுப்ரமணியம் முதல் அரச நிருவாக சேவை அதிகாரியாக அமரர் க. செல்வரெத்தினம், முதல் கல்வி நிருவாக சேவை அதிகாரியாக அமரர் ரி.மயில்வாகனம் முதல் சட்டத்தரணியாக திரு. குணசேகரன் ஆகியோர் சாதனை படைத்துள்ளனர்.

காரைதீவின் வரலாற்றில் க.பொ.த சா.தரப் பரீட்சையில் (1986 ஆம் ஆண்டு) முதல் தடவையாக அனைத்து மாடங்களிலும் அதி விசேட திறமைச் சித்தி பெற்றவர் அமரர் திருநாவுக்கரசு கங்காதரன் ஆவார். அம்பாறை மாவட்ட வரலாற்றில் வைத்தியத்துறைக்கு மாவட்ட நிலை 01 இல் காரைதீவைச் சேர்ந்த செல்வன் நடேசன் அகிலன் 2007 இல் முதற்றடைவையாகத் தெரிவாகி சாதனை படைத்தான்.

அகில இலங்கை ரீதியில் 2008ஆம் ஆண்டு தமிழ் மொழி மூலமாக *GCE(O/L)* பரீட்சையில் தோற்றிய செல்வி சந்திரசேகரன் ஷாலினி 10 பாடங்களிலும் *'A'* சித்தி பெற்று அகில இலங்கையில் தேசிய ரீதியில் முதலிடம் பெற்று பிறந்த மண்ணுக்குப் பெருமை தேடித்தந்துள்ளார். மேற்போன்றோர் காரைதீவு வரலாற்றில் முதன் முதல் அந்த கல்வித்துறைகளில் சாதனை படைத்தவர்கள் என்பதை கருத்திற்கொள்ள வேண்டும்.

## பிரத்தியேக கல்வி

சுமார் 4 தசாப்த காலத்திற்கு முன்பு பிரத்தியேக கல்வி *(Tution)* முறைமை அர்ப்பணிப்புள்ள ஆசிரியர்களால் இலவசமாக அவரவர் வீட்டில் நடாத்தப்பட்டது புலமைப்பரிசில் மாணவர்களுக்கு, மீட்திறன் குறைந்த மாணவர்களுக்கு, விஷேட தேவையுள்ள மாணவர்களுக்கு என பலதரப்பட்ட இப்பிரத்தியேக வகுப்புகளை முற்றிலும் இலவசமாக நடாத்தினர்.

அதனால் ஆசிரியர் மீது மாணவர்களுக்கிருந்த மதிப்பு மரியாதை உன்னதமாக இருந்தது. ஒழுக்கசீலமும் சிறந்து விளங்கியது. 1970களுக்குப் பிற்பட்ட காலத்தில் பிரத்தியேக வகுப்புகள் முக்கியமாக கணிதம், ஆங்கிலம், விஞ்ஞானம் போன்ற பாடங்களுக்கு ஆங்காங்கே பாடசாலைகளிலும், வீடுகளிலும் நடாத்தப்பட்டன. அங்கு சிறு தொகை மாணவர்களிடமிருந்து அறவிடப்பட்டது. பின்புஇது ஒரு பாஷனாக *(Fashion)* மாறி பிரத்தியேக கல்வியகங்களும் உருவாகின. அவை இன்றும் பிரத்தியேக வகுப்புகளை நடாத்தி வருகின்றன. அதே வேளை மட்டக்களப்பு கல்வி அபிவிருத்திச் சபை அனுசரணையுடன் ஆசிரியர் திரு.வே.விஜயரெத்தினம் முற்றிலும் இலவசமாக கல்வியகம் ஒன்றை ஒழுக்கத்துடன் நடாத்தி வருகின்றார். அன்று முக்கிய பாடங்களுக்கென ஆரம்பமான இப்பிரத்தியேக வகுப்புகள் இன்று சமூகக்கல்வி, தமிழ் என்று நீண்டு சகல பாடங்களுக்கும் நடாத்தப்பட்டு வருவதை குறிப்பிடமுடியும்.

காரைதீவு பல்கலைக்கழக மாணவர்ஒன்றியம் வருடாவருடம் தரம் 5 மற்றும் க.பொ.த சா.த உ.த போன்ற பரீட்சைகளுக்கு தோற்றும் மாணவர்க்கு இலவச கருத்தரங்குகளையும் மீட்டல் வகுப்புகளையும் நடாத்தி வருகிறது. மனித அபிவிருத்தி ஸ்தாபனமும் இவ்வாறு நடாத்துவதோடு அனுசரணையும் வழங்கிவருகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சர்வதேச பாடசாலை

காரைதீவில் நீண்ட காலமாக எதிர்பார்க்கப்பட்டு வந்த ஆங்கில மொழி மூலப்பாடசாலை ஒன்று 2009இல் விபுலானந்த சர்வதேச கல்லூரி *(VIC)* என்ற பெயரில் உதவிக்கல்விப் பணிப்பாளர் திரு.வி.ரி.சகாதேவராஜா அவர்களால் ஆரம்பிக்கப்பட்டு முறையாக நடாத்தப்பட்டு வருகின்றது.

காரைதீவு பிரதேச செயலாளர் திரு.எஸ்.இராமகிருஷ்ணன் அக்கல்லூரியை 2009.01.16இல் சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைத்தார். காரைதீவு பிரதேச சபைத் தவிசாளர் ந.ஜீவராசா றோஸ்சரிட்டி பணிப்பாளர் அன்ரனி றிச்சர்ட் ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர்.

*UKC, LKG*, தரம்-01, தரம்-02 ஆகிய வகுப்புகளுடன் ஆரம்பிக்கப்பட்டு 80 மாணவர்கள், ஆங்கில மொழி மூல ஆசிரியைகளான செல்விகள் சு.யசோதா க.தேவதர்சிகா அ.வினோஜினி ஞா.சிவேந்தினி ஆகியோருடன் இயங்கி வருகின்றது. திரு.கோ.கமலநாதன் நிருவாகத்திற்கும் செல்வி சுகந்தி ஆசிரியை கற்பித்தலுக்கும் உதவியாகவுள்ள இப்பாடசாலை திரு.தி.கமலச்சந்திரன் (கனடா) அவரது காணியில் இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது. பிரதி மாதமும் மதிப்பீடு சிறுவர் மன்றம் என்பன நடைபெறும் அப்பாடசாலையின் அரையாண்டு பூர்த்தி விழா 18-08-2009 இல் கொண்டாடப்பட்டது.

### எலோகியுஷன் வகுப்பு

ஆங்கில மொழி மூலம் எலோகியுஷன் வகுப்பு 1998இல் அமரர் கே.கிருபேந்திரா அவர்களால் ஆரம்பிக்கப்பட்டது. காரைதீவில் முதலாவதாக ஆரம்பிக்கப்பட்ட ஏலோகியுஷன் (**Elocution**) வகுப்புகள் இராமகிருஷ்ண மிஷன் பெண்கள் பாடசாலையில் நடாத்தப்பட்டு வருகின்றது.

அன்றிலிருந்து இன்று வரை ஆசிரியை திருமதி.சகுந்தலா சுரேஷ்குமார் தலைமையாக இருந்து நடாத்தி வருகின்றார். பல மாணவர்கள் வருடாந்தம் 100 புள்ளிகளைப் பெற்று பதக்கம் பெற்று வருவதோடு ஆங்கில மொழி மூல அபிவிருத்தியும் ஏற்பட்டு வருகின்றது. இவ்வகுப்பையும் உதவிக்கல்விப் பணிப்பாளர் வி.ரி.சகாதேவராஜா நடாத்தி வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

மேலும் ஆசிரியர் பா.பார்த்தீபன் செல்வி மேரி ஆகியோரும் எலேரகியுஷன் வகுப்புகளை 2008 முதல் நடாத்திவருகிறார்கள்.

### முறைசாராக் கல்வி

காரைதீவில் முறையான கல்வித் திட்டத்திற்கு அப்பால் தொழிற்பயிற்சி சார்ந்த முறைசாராக் கல்வியை பல நிறுவனங்கள் வழங்கி வருகின்றன. சமூக சேவைத்திணைக்களம் நடாத்தி வரும் தொழிற்பயிற்சி நிலையம், விஞ்ஞான தொழில் நுட்ப அமைச்சு நடாத்தும் 'விதாதா' பயிற்சி நிலையம், கிராமிய அபிவிருத்தித் திணைக்களம் நடாத்தும் தையல் பயிற்சி நிலையம், கைத்தொழில் திணைக்களம் நடாத்தும் நெசவு நிலையம், மீள்குடியேற்ற அமைச்சு நடாத்தும் மாளிகைக்காடு தையல் கைவினைப் பயிற்சி நிலையம், *'ICTC'* நடாத்தும் மூன்று 'நெனசல' நிலையங்கள், தேசிய தொழிற்பயிற்சி அதிகார சபை நடாத்தும் தொழிற்பயிற்சி நிலையம் *(VTC)* என்பன இவற்றில் அடங்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வியால் சீர் பெற்ற காரையூரார்

## பேராசிரியர்

01. சுவாமி விபுலானந்த அடிகளார்
    (உலகின் முதல் தமிழ்த்துறைப் பேராசிரியர்)
02. பேராசிரியர் இ.பாலசுந்தரம்

## கலாநிதி *(Ph.D)*

01. டாக்டர் இ.பாலசுந்தரம்.
02. டாக்டர் க.விவேகானந்தன்
03. டாக்டர் சி.இளங்குமரன்
04. டாக்டர் கே.ஜெயசீலன்
05. டாக்டர் எ.எம்.றஸ்மி
06. கலாநிதி .ந.நடராஜா

## *FRGS*

கல்விமான் க.கணபதிப்பிள்ளை

## தத்துவ முதுமாணி *(M.Phil)*

01. சி.அருள்மொழி
02. கே.கணேசராஜா
03. ம.ஜெகநாதன்
04. த.தேவதாஸ்

## கல்வி முதுமாணி *(M.Ed)*

01. திரு.வீ.தியாகராஜா
02. திரு.வி.ரி.சகாதேவராஜா
03. திருமதி.கே.தம்பிராஜா
04. திரு.கே.டேவிட்
05. ம.சுந்தரராஜன்

## கலை முதுமாணி *(M.A)*

01. அமரர்.எம்.சற்குணம்
02. என்.நடராஜா
03. எஸ்.இராமகிருஷ்ணன்
04. எஸ்.சசிகரன்
05. எஸ்.விவேகானந்தராஜா
06. எஸ்.சங்கரலிங்கம்
07. கே.பத்தராஜன்
08. கே.டேவிட்
09. அமரர். ரி.கிருபாகரன்
10. ம.ஜெகநாதன்

## வணிகமுதுமாணி *(M.Com)*

திரு.என்.லோகேஸ்ரன்

## விஞ்ஞானமுதுமாணி *(M.Sc)*

01. கி.இளங்குமுதன்
02. வி.தர்சினிதேவி
03. வி.தாட்சாயினி
04. த.மதிவேந்தன்
05. தி.கோபிரமணன்
06. அமரர்.செ.இளங்கோ
07. ப.பிரதீபன்
08. கே.லோகநாயகம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பல்கலைக்கழக கல்வியியலாளர்கள்

01. பேராசிரியர் சுவாமி விபுலானந்தர்
02. பேராசிரியர் இ.பாலசுந்தரம்
03. என்.லோகேஸ்வரன்
04. சி.இளங்குமரன்
05. செ.அருள்மொழி
06. பி.பிரதீபன்
07. கே.கணேசராஜா
08. வி.தர்சினி
09. திருமதி.பி.தயாமதி
09. த.மதிவேந்தன்

# நிர்வாகத் துறைசார்ந்த அதிகாரிகள்

## இலங்கை நிர்வாக சேவை (SLAS)

01. கே.செல்வரெட்ணம்
02. எஸ்.இராமகிருஷ்ணன்
03. எம்.வை.சலீம்
04. யூ.உதயஸ்ரீதர்
05. எஸ்.ஜெகராஜன்
06. கே.சுதாகரன்
07. ரி.சுதாகரன்
08. என்.சிவலிங்கம்
09. எச்.எல்.தௌபீக்

## இலங்கை திட்டமிடல் சேவை (SLPS)

01. எஸ்.விவேகானந்தராஜா
02. அமரர்.கே.மகேஸ்வரன்

## இலங்கை கணக்காளர் சேவை (SLAcS)

01. த.பிரகதீஸ்வரன் (பட்டயக்கணக்காளர்)
02. எஸ்.சசிகரன்
03. கே.அரசரெத்தினம்
04. எஸ்.கேந்திரமூர்த்தி

## இலங்கை கல்வி நிர்வாக சேவை (SLEAS)

01. ந.நடராஜா
02. அமரர் ரி.மயில்வாகனம்
03. அமரர் கே.பாலசுப்பிரமணியம்
04. செ.அருள்மொழி
05. எம்.சி.ஆதம்பாவா
06. எஸ்.புவனேந்திரன்

## உதவிக் கல்விப் பணிப்பாளர்கள்

01. வெ.ஜெயநாதன்
02. ஆர்.சண்முகநாதன்
03. ரி.சண்முகரெட்ணம்
04. செ.இரத்தினசிங்கம்
05. கே.செல்லத்துரை
06. கே.வி.பரநிருபசிங்கம்
07. வி.ரி.சகாதேவராஜா
08. ஆர்..பாஸ்கரன்
09. கே.பிரேமானந்தா
10. திருமதி.ம.சத்தியதேவா
11. வே.ஜெயக்குமார்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வைத்திய சேவை (MBBS/MD)

01. டாக்டர் எம்.திருக்குமார் (VOG)
02. டாக்டர் ஆபிதா ஏ கையும் (V.P)
03. டாக்டர் ஏ.வரதராசா
04. டாக்டர் என்.தமிழ்வண்ணன்(DER.)
05. டாக்டர் சி.பரஞ்சோதி
06. டாக்டர் கே.பரமானந்தம்
07. டாக்டர் எஸ்.பாஸ்கரநாதன்
08. டாக்டர் ஞா.ரேணுகா
09. டாக்டர் ரி.விஜயகுமாரி
10. டாக்டர் ரி.கௌரிசங்கர்
11. டாக்டர் ரி.கௌரிகாந்தன்
12. டாக்டர் கே.தியாகேசன்
13. டாக்டர் த.பகீரதி
14. டாக்டர் சி.ஜீவராணி
15. டாக்டர் இ.அனுசியா
16. டாக்டர் கே.கிரிசுதன்
17. டாக்டர் ரி.லோகேந்திரராஜ்
18. டாக்டர் உதயகுமார்
19. டாக்டர் ஞானகுமார்
20. டாக்டர் ரி.பிரபாசங்கர்
21. டாக்டர் வி.சுரேஷ்குமார்
22. டாக்டர் எஸ்.இராஜேந்திரன்
23. டாக்டர் ரி.திருச்செல்வம்
24. டாக்டர் எம்.ஏ.அஜந்தா
25. டாக்டர் ரி.ஜதீஷ்
26. டாக்டர் வை.ஏ.ஹமீட்
27. டாக்டர் ஏ.பரீட்
28. டாக்டர் ஏ.பீ.ஜிப்ரி
29. டாக்டர் எம்.எச்.எம்.சறூக்
30. டாக்டர் எம்.எச்.ஏ.றவுப்
31. டாக்டர் ந. அருந்திரன்
32. டாக்டர் வீ.பவித்திரா
33. டாக்டர். ரி.பிரபாசங்கர்

## BDS

01. டாக்டர் ரி.உமாசங்கர்
02. டாக்டர்.சறூக்

## RMP

01. டாக்டர் பி.தம்பிராஜா
02. டாக்டர் ரி.நமசிவாயம்
03. டாக்டர் ரி.நடேசன்
04. டாக்டர் வி.இராஜமோகன்
05. டாக்டர் சி.திருநாவுக்கரசு
06. டாக்டர் ரி.லோகநாதன்
07. டாக்டர் எம்.கதிர்மலர்
08. டாக்டர் ஏ.ஆர்.ஏ.நிஸார்
09. டாக்டர் வி.சாந்தினி

## ஆயுர்வேதம் (சித்தம்)

01. டாக்டர் எம்.பரசுராமன்
02. டாக்டர் கே.பரராஜசிங்கம்
03. டாக்டர் ப.லில்லிமலர்
04. டாக்டர் பி.மோகனசுந்தரி
05. டாக்டர் ஏ.எல்.எம்.றசாக்
06. டாக்டர் ரி.நடேசன்
07. டாக்டர் ரி.தம்பிராசா
08. டாக்டர் எஸ்.கணேசமூர்த்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொறியியலாளர் சேவை (B.Sc.Eng)

01. வி.சிவசுப்பிரமணியம்
02.கே.ஜெயராஜகுமார்
03. எஸ்..திலகராஜா
04. எஸ்.மகேசன்
05. கே.சத்தியமூர்த்தி
06. வி.கலைவாணி
07. கே.இளங்கோ
08. பி.இராஜமோகன்
09. ரி.நேசராமன்
10. சி.கனகானந்தன்
11. ரி.வினாயகமூர்த்தி
12. வ.வடிவா
13. ரி.சிவசுப்பிரமணியம்
14. என்.சசிநந்தன்
15. கே.அமிர்தநாதன்
16. எம்.பிரேமகாந்தன்
17. என்.சிவலிங்கம்
18. ஆர்.ரவிசந்திரன்
19. கே.வரோதயன்
20. கே.சசிகுமார்
21. எம்.சுரேந்திரகுமார்
22. ரி.ஞானவிந்தன்
23. ரி.இராஜகுமார்
24 சண்.ராதிந்
25. ஏ.பி.சாகிர்
26. எம்.நாசர்
27. வி.சுரேஷ்
28. யூ.உதயசுந்தர்
29. க.திருஞானசம்பந்தன்
30. கே.விநோதன்
31. திருமதி கா.எழில்ரஜனி
32. திருமதி. உ.ஸ்ரீசாந்தினி
33. திருமதி. ஜினேந்தினி
34. எஸ்.ஹரிச்சந்திரா
35 எஸ். உருத்திரன்

## கட்டடக்கலை (ARCHITECT)

ஏ.மகேந்திரன்

## சட்டம் (LLB)

என்.குணசேகரம்

## ஆசிரிய ஆலோசகர்கள்

01. எஸ்.கங்காதரன்
02. திருமதி.ஆர்.செல்லத்துரை
03. எஸ்.சங்கரலிங்கம்
04. எஸ்.திருச்செல்வம்
05. அமரர்.ம.சிவபாலன்
06. திருமதி.கே.தம்பிராசா
07. திருமதி.ரி.இராஜேஸ்வரன்
08. திருமதி.ரி.சந்திரமோகன்
09. சி.மெண்டிஸ்அப்பு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிபர்கள்

01. சுவாமி விபுலானந்தர்
02. க.கணபதிப்பிள்ளை
03. சீ.தங்கராசா
04. ந.தங்கராசா
05. க.சின்னத்தம்பி
06. வ.மகாதேவன்
07. சி.கணபதிப்பிள்ளை
08.சு.சிவநாதபிள்ளை
09.சீ.மார்க்கண்டு
10.சீ.பொன்னையா
11.க.கந்தவனம்
12.ந.விநாயகமூர்த்தி
13.க.ஆறுமுகம்
14.க.கணபதிப்பிள்ளை
15.ச.கணபதிப்பிள்ளை
16.க.வெற்றிவேல்
17.கா.வேல்நாயகம்
18.வே.தம்பிராசா
19.பி.சுப்பிரமணியம்
20.கே.தனிநாயகம்
21.திருமதி.அமிர்தலிங்கம் சுமதி
22.என்.நல்லரெத்தினம்
24.க.பொன்னையா
25.சா.கந்தசாமி
26.திருமதி.சாரதா பொன்னையா
27.க.முத்துலிங்கம்
28.கு.பெரியதம்பி
29.க.விநாயகமூர்த்தி
30.பூ.சுந்தரம்பிள்ளை
31.எஸ்.வேதாசலம்
32.சி.தட்சணாமூர்த்தி
33.ஏ.எல்.எம்.எ.நளீர்
34.கு.சித்திரவேல
35.எஸ்.மோகன்
36.இ.விநாயகமூர்த்தி
37.எஸ்.மணிமாறன்
38.மார்கண்டு அரசரெத்தினம்
39.இ.கனகசுந்தரம்
40.ஜ.கமலநாதன்
41.ந.தில்லையம்பலம்
42.வி.கிருஷ்ணபிள்ளை
43.வெ.ஜெயநாதன்
44.பி.பாக்கியராசா
45.வே.ஜெயக்குமார்
46. இ.தங்கராசா
47. இ.வேல்நாயகம்
48. ஆ.கந்தையா
49. என்.செல்லத்துரை
50. வி.ரி.செல்லத்துரை
51. ம.நாகலிங்கம்
52. க.கதிர்காமத்தம்பி
53. பூபாலபிள்ளை
54. க.தெய்வநாயகம்
55. திருமதி.தெய்வநாயகம்
56. வி.நமசிவாயம்
57. க.சண்முகம்பிள்ளை
58. க.பரமலிங்கம்
59. முருகேசபிள்ளை
60. வி.ஆனந்தம்
61. க.சாமிநாதன்
62 ச.வெற்றிவேல்
63. எஸ்.முருகேசு
64. மூ.சிவநாதபிள்ளை
65. க.கணபதிப்பிள்ளை
66. பூ.நேசதுரை
67. த.சண்முகரெட்ணம்
68. க.விஜயரெட்ணம்
69. பூ.சதாசிவம்
70. க.விஜயரெட்ணம்
71. இ.சினேந்திரன்
72. ச.கனகசபை
73. எம்.சச்சிதானந்தசிவம்
74. திருமதி.எம்.சத்தியதேவா
75. எஸ்.பாலசுப்பிரமணியம்
76. த.சிவஞானம்
77. க.வீரக்குட்டி
78. இ.கருணாகரம்பிள்ளை
79. பி.சிவானந்தன்
80. வி.கமலநாதன்
81. க.மயில்வாகனம்
82. கெ.சின்னத்தம்பி
83. திருமதி.எஸ்.சுப்ரமணியம்
84. எஸ்.பொன்னம்பலம்
85. திருமதி.கோ.செல்லத்துரை
86. இரா.கிருஸ்ணபிள்ளை
87. தெ.செல்லத்துரை
88. எம்.சி.ஆதம்பாவா
89. எம்.ஸி.செயின்
90. எ.மொகைடீன் பிச்சை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

91. ஏ.எம்.றசீட்
92. திருமதி.எஸ்.மகேந்திரன்
93. எஸ்.குமாரசாமி
94. எம்.உருத்திரன்
95. வை.்.சம்சுதின்
96. எம்.ஐ.எம்.சைபுதீன்.
98. பி.பாக்கியராசா
99. எஸ்.யோகராசா
100. செ.சந்திரமோகன்
101. பொன்.தவநாயகம்
102. என்.இராசையா
103. கே.மனோகரன்
104. சே.பொன்னம்பலம்
105. க.கனகரெத்தினம்
106. க.குணரெத்தினம்
107. க.வேல்முருகு
108. வ.மார்க்கண்டு
109. க.பொன்னையா
110. எஸ்.பொன்னம்பலம்
111. கே.பொன்னம்பலம்
112. பூபதி வேலுப்பிள்ளை
113. சி.கா.தெய்வநாயகம்
114. திருமதி பரமலிங்கம்
115 .ச.வேலுப்பிள்ளை
116. ச.கோவிந்தசாமி
117. ச.சிவசம்பு
118. க.ஞானமுத்து
116. ச.கோவிந்தசாமி
117. ச.சிவசம்பு
118. க.ஞானமுத்து

## நிலஅளவையாளர் சேவை

01.அமரர் செ.பத்மநாதன்
02.அமரர் க.துரைரெட்ணம்
03.அமரர் எஸ்.ஞானபாஸ்கரன்
04.வி.இராஜேந்திரன்
05.எஸ்.நேசராசா
06.எஸ்.மதியழகன்
07.என்.தேவானந்தன்
08.எம்.நடேசமூர்த்தி
09.தி.கண்ணதாசன்
10.கே.தட்சணாமூர்த்தி

## விவசாய சேவை

01.அமரர்.வே.இராசநாயகம்(SLAgS).
02.ம.ஜெகநாதன்(SLAgS)
03.திருமதி ஜெ.ஜெகநாதன்(SLAgS)
04.மு.நமசிவாயம்
05பொ.கணேசமூர்த்தி
06.கே.கிருபைராசா
07.திருமதி.என்.வீரபாகு
08திருமதி ஜெ.கிருபைராசா
09.ரி.பரமேஸ்வரன்
10.இ.விஜயராகவன்
11.மா.அழகுமலர்
12.எம்.தவநேசன்
13.ச.சுரேஸ்குமார்
14.செல்வி இ.சஜிகலா
15.கே.தேவமலர்
16.எஸ்.குகசோதி
17.பி.பிரதீப்
18.எம்.சிதம்பரநாதன

## வங்கி முகாமையாளர்கள்

01.திருமதி தவமணி நமசிவாயம்
02.ஜே.கே.பிரான்சிஸ்
03.ச.உருத்திரன்
04.எஸ்.கே.வீரவாகு
05.எம்.சிவயோகராசா
06.ச.முருகுப்பிள்ளை
07.சு.யோராஜா
08.க.மகாலிங்கம்
09.ஆ.கமலநாதன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கிராம சபைத் தலைவர்கள் - அக்கிராசனர்கள் (பிரதேசசபைத் தவிசாளர்)**

01.தம்பையா ஓவிசர்
02.எஸ்.சாமித்தம்பி உடையார்
03.க.பொன்னையா ஒவிசர்
04.போடி சாமித்தம்பி
05.க.பரமலிங்கம் விதானை
06.எஸ்.செல்வநாயகம் மனேஜர்
07.இ.வினாயகமூர்த்தி
08.டாக்டர்.மா.பரசுராமன்
09.நடராசா ஜீவராசா **தவிசாளர்**


குறிப்பு: மேற்குறிப்பிடப்பட்டோர் காரைதீவில் பிறந்தவர்கள் அல்லது திருமணபந்தத்தால் காரைதீவில் இணைந்தவர்கள் என்பதனையும் இப் பட்டியல் சேவைமுப்பு அல்லது வயது அடிப்படையில் தயாரிக்கப்பட்டதல்ல என்பதனையும் கவனத்தில் கொள்ளவும்.

## முடிவுரை

ஓட்டுமொத்தமாக நோக்கும்போது காரைதீவிற்கும் கல்விக்கும் நிறையத் தொடர்புகள் இருந்துள்ளன - இருந்து வருகின்றன என்று அறுதியிட்டுக் கூறமுடியும். காரைதீவின் கல்வி சார்விடயங்கள் அனைத்தும் இக் கட்டுரையில் உள்ளடக்கப்பட்டிருக்குமென கூறஇயலாது.எனினும் முடிந்தளவு பழைய புதிய அம்சங்கள் சேர்க்கப்பட்டுள்ளன.எந்தப் பணியையும் முதன்முதலில் செய்யும்போது அதில் குறை காணப்படுவதுண்டு.அதனைப் பண்பான முறையில் விளக்கி குணங்களை ஏற்றவகையில் போற்றுவதே சான்றோரின் கடனாகும்.

## உசாத்துணை நூல்கள்


1.மட்டக்களப்பு மான்மியம்
2.மருதநிலா
3.ஊழியில்ஆழி
4.சான்றோர் நேர்முகம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தமிழ்மகளைப் போற்றிப் பாடுவோம்

எஸ்.நாகராஜன்.

தமிழ் போல இனியமொழி எதுதான் உண்டு!
தமிழுக்கு நிகராக எவைதான் உண்டு!
அமுதென்போம் அழகென்போம் அனைத்தும் சொல்வோம்
அது எங்கள் உயிரென்போம் அழியாதென்போம்

மாமதுரை நகர் பிறந்த தமிழாம் எங்கள்
மண்ணுலகில் மகிமைதனைக் கூட்டும் திங்கள்
தேமதுரத்தமிழ் என்று உலகம் போற்ற
தென்றலைப் போல் மணம் வீசி இனிமை சேர்க்கும்

நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழில் உண்டு
நலமாக வாழ்வதற்கும் நெறிகள் உண்டு
சொலற்கரிய சுவை தமிழில் உண்டு
சுகமான வாசனையும் அதிலே உண்டு

தொன்மையென்று தமிழதனைக் காப்பியங்கூறும்
தூய்மையுள்ள இலக்கணமும் அதில் வந்து சேரும்
மென்மை, வன்மை, இடைகளென்ற இனம் கதைகூறும்
மேன்மைதரும் தமிழ்மொழிக்கு ஆயுசு சேரும்

முத்தமிழ்தான் முருகனுக்குச் தத்துவம் ஆகும்
மூதுரைக்கும், நல்வழிக்கும் வித்தகம் ஆகும்
பத்தரையாம் மாற்றுத்தங்கம் தமிழ் இதுவாகும்
பாடவரும் அனைவருக்கும் பழரசமாகும்

எள்ளுருவில் சிறிதென்றாலும் ஏற்றமுள்ளது
இது போல தமிழ் மொழிக்கும் தோற்றமுள்ளது
வள்ளுவனின் வார்த்தைகளின் அர்த்தமுள்ளது
வடிதமிழோ வரலாற்றுக் கீர்த்தி உள்ளது

ஆழ்கடல் போல் அத்தனையும் தமிழதனில் உண்டு
அள்ளஅள்ளக் குறையாத ஊற்றதில் உண்டு
தேய்வில்லை தமிழுக்கு திமிரதும் இல்லை
தீந்தமிழ்தான் தெய்வத்தாய் மடி எமக்கு

சங்கத்தமிழ் மொழியோ சிந்திடும் சந்தம்
சங்கீதப் பாடலுக்கு வரிகளின் சொந்தம்
அங்கமெல்லாம் அணியணியாய் அழகு காட்டிடும்
தங்கமகள் தமிழ்மகளைப் போற்றிப்பாடுவோம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# புலம் பெயர்ந்து வாழும் தமிழர்களின் பண்பாட்டு நிலை


பேராசிரியர் இளையதம்பி பாலசுந்தரம்

(காப்பாளர், சுவாமி விபுலாநந்தர் மன்றம் கனடா)


இருபதாம் நூற்றாண்டில் தமிழர் பண்பாடு எத்தகைய நிலையில் இருந்தது என்பதை எல்லோரும் அறிவர். 21ஆம் நூற்றாண்டில் கணினியின் ஆதிக்கம் மனித வாழ்க்கையின் சகல துறைகளிலும் மிகுந்து காணப்படும் என்பதைக் கருத்திற் கொள்ளுதல் வேண்டும். தமிழரின் வாழ்வும் வளமும் பண்பாட்டு வாழ்வியல் முறைகளும் பண்பாட்டு வெளிப்பாடுகளும் கணினி யுகத்தில் எவ்வாறு அமையப்போகின்றது என்ற விடயத்தை மிக உன்னிப்பாக நோக்க வேண்டியுள்ளது. 21ஆம் நூற்றாண்டில் தமிழினத்தின் மக்கள்தொகை எட்டுக்கோடி எனக் கணிப்பிடப்பட்டுள்ளது. இத்தொகையில் இந்தியாவிலும் இலங்கையிலும் ஆறுகோடித் தமிழர் வாழ்கிறார்கள். ஏனையோர் பிறநாடுகளுக்குப் புலம்பெயர்ந்து அவ்வந் நாடுகளில் தம் வாழ்க்கையைத் தக்க வைத்துள்ளனர்.

21ஆம் நூற்றாண்டில் ஈழத்திலும் தமிழகத்திலும் வாழப்போகும் மக்களது நிலைப்பாட்டிலிருந்து வெளிநாடுகளில் வாழ்ந்து கொண்டிருக்கும் தமிழர்களின் பண்பாட்டுநிலை நிச்சயம் மிகப்பெரிய வேறுபாட்டினைக் கொண்டதாக அமையும் என்பது உறுதி. 19ஆம் நூற்றாண்டில் தமிழகத்திலிருந்து ஆங்கிலேயரின் கூலிகளாகச் சென்ற தமிழரின் பண்பாட்டுநிலை 20ஆம் நூற்றாண்டில் எவ்வாறு மாற்றம் பெற்றதோ அதைவிடப் பன்மடங்கு மாற்றத்தை, 21ஆம் நூற்றாண்டின் இறுதி தசாப்தங்களில் புலம்பெயர்ந்து பிறநாடுகளில் வாழும் தமிழர்களின் பண்பாட்டுநிலை வெகு வேகமாக மாற்றம் பெற்றுவிடும் எனத் துணியலாம். இத்தகு மாற்றங்களின் ஒளிக்கீற்றுகள் இந்நூற்றாண்டின் தொடக்கத்திலேயே தென்படத்தொடங்கியுள்ளன.

பண்பாட்டின் அடிமரங்களாக விளங்கும் தமிழக, ஈழ மக்கள் பண்பாட்டு விழுமியங்களைப் போற்றி, மதிப்பளித்து, அவற்றைப் பேணிக்காப்பவர்களாகச் செயற்பட்டுக்கொண்டிருப்பார்கள். வெளிநாடுகளில் வாழ்ந்துகொண்டிருக்கும் சந்ததிகள் தமிழ்ப் பண்பாட்டு விழுமியங்களுக்கு மதிப்பளிக்காது, அந்த அந்த நாடுகளின் பண்பாட்டுக் கோலங்களால் கவரப்பட்டு, தமிழ்ப் பண்பாட்டு விழுமியங்களை மறந்து நாமமது தமிழர் எனக்கொண்டு ஆங்காங்கு வாழ்வர் என்பதைப் புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களின் இன்றைய வாழ்வியல்நிலை கோடிட்டுக்காட்டுகிறது.

பண்பாட்டின் உயிர்நாடி மொழி. மொழி அடையாளம் இன்றேல் இனஅடையாளம் தொலைந்து போய்விடும். தாயகத்திலிருந்து வேற்றுநாடுகளுக்குப் புலம்பெயர்ந்து வந்தவர்கள் தமிழ் பேசுகின்றனர். வெளிநாடுகளில் அவர்களுக்கு பிறந்த குழந்தைகளில் 20 வீதமானோர் மட்டுமே பெற்றோரின் கட்டாயத்தின்பேரில் தமிழ் பேசுகின்றனர். மூன்றாந் தலைமுறையினரில் 10 வீதமானோர் மட்டுமே தமிழ் பேசுவர். வெளிநாடுகளில் வாழப்போகும் இச்சிறுதொகையினரால் கூட்டுமொத்தமாகத் தமிழ்ப் பண்பாட்டைக் பேணிப்பாதுகாக்க முடியாதநிலைமை ஏற்படலாம்.

1974இல் யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்ட உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம் கடந்த 35 ஆண்டுகளாக தமிழ்ப் பண்பாட்டை உலக நாடுகளில் பேணிக்காப்பதற்குரிய விழிப்புணர்வை ஏற்படுத்திவருகின்றது. 21ஆம் நூற்றாண்டில் உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் செயற்பாடுகள் நிச்சயம் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தித் தனது செயல்திட்டங்களைப் பண்பாட்டுப் பேணலின் அடிப்படையிற் செயற்படுத்த வேண்டியுள்ளது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல நூற்றாண்டு காலங்களாகத் தமிழ் மக்களது வாழ்க்கைப் பாதையில் இடம்பெற்ற பண்பாட்டு விடயங்களை வரலாற்று அடிப்படையில் நோக்கும்போது, முதலில் நமது எண்ண அலையில் தமிழ் இலக்கியப் பரப்புத் தென்படுகிறது. 2000 ஆண்டுகளுக்கு மேற்பட்ட இலக்கியப் பாரம்பரியம் தமிழ் மக்களுக்குண்டு. சங்க காலம் முதல் இந் நூற்றாண்டுவரை தொடர்ச்சியான இலக்கிய இலக்கண நூல்களின் தோற்றமும் வளர்ச்சியும், அவற்றின் பயன்பாடும் தமிழர் பண்பாட்டு வாழ்க்கையில் இடம்பெற்று வந்துள்ளன. தனிச் செய்யுள் மரபில் ஆரம்பித்து, கவிச்சக்கரவர்த்தி கம்பனின் கவிதை வெள்ளத்திலே பெருக்கெடுத்து, குமரகுருபரர், தாயுமானவர், சித்தர்கள், பாரதி, பாரதிதாசன், கண்ணதாசன், வைரமுத்து, காசிஆனந்தன் புதுவை இரத்தினதுரை முதலியோர்வழி தமிழிலக்கியம் புதுமைநெறியில் வளர்ச்சிபெற்று வருகிறது. மேனாட்டு இலக்கியம் தமிழ்மொழிக்கு அறிமுகப்படுத்திய நாவல், சிறுகதை, புதுக்கவிதை முதலிய நவீன இக்கியத் துறைகளிலும் தமிழ்மொழி கணிசமான வளர்ச்சியைப் பெற்றுள்ளது.

பழந்தமிழ் சங்க இலக்கியங்கள், திருக்குறள், பக்தி இலக்கியங்கள், பாரதியார் கவிதைகள் முதலியனவும், நவீன இலக்கியப் படைப்புக்கள் பலவும் பிறநாட்டவராலும் விரும்பப்பட்டு, அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன என்பதைக் கடந்த நூற்றாண்டு இலக்கியச் சாதனைகள் எனப் பெருமையுடன் கூறிக்கொள்ளலாம். இந்திய மொழிகளில் வங்கமொழி இரவீந்திரநாத்தாகூர் மூலம் நோபல் பரிசைப் பெற்றுக்கொண்டது. 21ஆம் நூற்றாண்டில் தமிழ் செம்மொழி என்ற உயர்தகுதியும் பெற்றுள்ளது. எனவே, இந்நூற்றாண்டிலாவது தமிழ்மொழிக்கு நோபல் பரிசு கிடைக்கும் வகையில் தமிழிலக்கிய ஆக்கம் அமையும் வகையில் படைப்பாளிகள் அயரா முயற்சி எடுக்க வேண்டும்.

கடந்த காலத்தின் இலக்கியங்களிற் பெரும்பாலானவை இப்பொழுது இணையத் தளங்களினூடாக கிடைக்கும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இலக்கிய நூலொன்றைப் பெற, நூலகம் தேடிச் செல்ல வேண்டிய தேவை இருக்காது. இலக்கிய ஆர்வலர் அனைவரும் தாம் விரும்பிய நூலை விரும்பிய நேரத்தில் விரும்பிய இடத்திலிருந்து படிக்கக்கூடிய வாய்ப்பையும் வசதியையும் இந்நூற்றாண்டின் கணினித்துறை வழங்கியுள்ளது. 21ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலே கணினியின் முன்பாக ஒருவர் இருந்து கொண்டு தான் சொல்லச் சொல்ல கணினி அதனை அப்படியே அச்சுப்பதிவு செய்து பிரதிகளாகத் தருவதோடு மட்டுமன்றி, அதனை வாசித்துப் பிழை திருத்தியும் தரும் அளவுக்குக் கணினி விஞ்ஞானம் வளர்ந்துவருகிறது. பண்டை நாளில் **பட்** என்னும் முன்னே இருநூறும் முன்னூறும் கவிதை படைத்தார்கள் என்ற கற்பனைக் கதைகள் கேட்டோம். ஆனால் 21ஆம் நூற்றாண்டிலே அது உண்மையாகப் போகிறது. எனவே தமிழ் இலக்கிய வளத்தின் எல்லைப் பரப்பு எந்த அளவில் பரந்துசெல்லும் என்பதை எவருமே எளிதிற் கூறிவிட முடியாது.

தமிழ்மொழியில் அச்சு வாகனம் முதன் முதலாகப் 18 ஆம் நூற்றாண்டிலேயே அறிமுகமானது. கடந்த இரண்டு நூற்றாண்டுகளின் வளர்ச்சியின் பயனாக கணினியில் தமிழ்மொழி ஏற்றம் கண்டுள்ளது. கணினிக்கு ஏற்ப சென்ற நூற்றாண்டில் எழுத்துச் சீர்திருத்தம் கொண்டு வரப்பட்டமையும், தொடக்கத்தில் எழுத்துச் சீர்திருத்தத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்தமையும், பின்னர் அந்த மாற்றங்களை எல்லோரும் உள்வாங்கி காலத்தின் தேவைக்கும், தொழில் நுட்பத்தின் வசதிக்குமேற்ப இயைந்துசென்றதன் பயனாக இன்று இணையத்தளத்தில் தமிழ்மொழி வீறுநடை பயில்கின்றமையும் யாவரும் அறிந்தனவே. எனவே 21ஆம் நூற்றாண்டில் தமிழ் இலக்கியம் உலக இலக்கியங்களில் ஒன்றாகப் போட்டியிடும் அளவுக்குப் பரந்து வழங்கப்படுவதோடு மட்டுமன்றி, உலகச் செம்மொழிகளின் தரத்தோடும் வளர்நிலை அடையும் வாய்புகளும் தென்படுகின்றன.

21ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்ட காலத்து இலக்கியங்கள் மக்களின் அகப்புற வாழ்க்கை முறைகள், சமயம், தத்துவம், அரசியல், சமூகம், விடுதலைப் போராட்டங்கள் முதலான பல்வேறு விடயங்களைப் பொருள்களாகக் கொண்டே தோற்றம் பெற்றன. 21ஆம் நூற்றாண்டின் இலக்கியங்கள் இந்நூற்றாண்டின் வாழ்வியலுக்கு ஏற்ப, பல்வேறு துறைகளிலும் புதுவாழ்வு காணவுள்ள தமிழர்களது இலக்கியப் பொருளும் புதுமைநெறியும் கொண்டதாக அமையும் என எதிர்பார்க்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்து, தமிழரது வாழ்வியலில் அரசியல் மிக முக்கிய இடத்தைப் பெற்றுவந்துள்ளது. வரலாற்று ஆவணச் சான்றுகளனின் அடிப்படையில் அதன் தொடக்க காலத்தில் முடியுடை மூவேந்தர் தமிழகத்தை ஆண்டனர். 10 ஆம் நூற்றாண்டில் சோழப் பெருமன்னர்கள், தமிழ்ப் பேரரசு ஒன்றை அமைத்து தமிழர் பெருமையைப் பாருக்கு எடுத்துக்காட்டிச் சென்றனர். பின்னாட்களில் தமிழரின் அரசியல் ஆதிக்க எல்லைப் பரப்பு, படிப்படியாகக் குறைவடைவதாயிற்று. 12 ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட இஸ்லாமியப் படைஎடுப்புகளும், 16ஆம் நூற்றாண்டுக்குப் பின்னர் தொடர்ச்சியாக ஏற்பட்ட ஐரோப்பிய வல்லரசுகளின் ஆக்கிரமிப்பும் தமிழகத்திலும் ஈழத்திலும் தமிழர்களின் அரசியலைச் சீர்குலைத்து, அழித்தன. இந்தியா சுதந்திரமடைந்த பின்னர், தமிழர்கள் அமைத்துக்கொண்ட தமிழ்நாடும், அதன் அரசியல் வரலாறும், அதன் செழுமைக்கு திராவிட முன்னேற்றக் கழகத்தின் பங்களிப்பும் தமிழர் அரசியல் வரலாற்றில் நினைவு கொள்ளத்தக்கவை. ஈழத்தமிழர் அரசியல் வரலாற்றிலே கறைபடிந்த கடந்த பல தசாப்தங்களின் நிலைமைகள் மாற்றம் அடைந்து, சமாதானமும், நிலையான அமைதியும் தன் இறைமை கொண்ட அரசியல் சுதந்திரமும் தமிழ் மக்களுக்கு ஏற்படும் சூழ்நிலைகள் தென்படுகின்றன. இதுவே இந்நூற்றாண்டின் தொடக்க காலக்கட்டத்தில் உலகின் பல பாகங்களிலும் வாழ்ந்துகொண்டிருக்கும் எட்டுக் கோடித் தமிழ் மக்களதும் எதிர்பார்ப்பாகும்.

அடுத்ததாகத் தமிழர் பொருண்மியத் துறையின் வரலாறும் வளர்ச்சியும் மிக முக்கியமான விடயங்களாகும். உலகளாவிய நிலையில் பரந்து வாழும் தமிழர்களின் பொருண்மிய வளம் பெருகுவதற்கு அடிப்படைத் தேவையாக அமைவது கல்வியாகும். கனடாவில் ஒன்ராறியோ மாகாணத்தில் வாழும் தமிழ் மாணவர்கள் கல்வியில் பெரும் சாதனைகள் படைத்துவருகின்றனர். கல்வித்துறையில் தமிழர் மேம்படும்போது அவர்களது பொருண்மிய வளர்ச்சிக்குரிய வழிவகைகளை அமைத்துக்கொள்ளும் வாய்ப்புக்கள் தானாகவே அமைந்துவிடும். ஈழத்தமிழர்கள் தம் தாயகங்களிலுள்ள நிலவளத்தையும், கடல்வளங்களையும், தமது மூளைவளத்தையும் பயன்படுத்தி, அவற்றின் முழுப்பயன்பாட்டையும் பெற்றுக்கொள்வார்கள்.

அடுத்ததாகத் தமிழ்மொழிக் கல்வியை எடுத்துக் கொண்டால், தமிழ் அல்லாத மொழிகள் போதனை மொழிகளாகவுள்ள பிறநாடுகளில் வாழும் தமிழ்ப் பிள்ளைகள் படிப்படியாகத் தமிழ்மொழியை மறந்துபோகும் ஓர் அபாயநிலை காணப்படுகிறது. அவர்களுக்குத் தமிழ்மொழியை இலகுவான முறையில் கற்பிப்பதற்குரிய வழிமுறைகள் கண்டுபிடிக்கப்பட வேண்டும். தற்போது கணினி மூலம் கற்பிப்பதற்கு வாய்ப்பான புதிய புதிய செயல்முறைகள் கண்டுபிடிக்கப்பட்டு வருகின்றன. இது தொடர்பாக அண்மையில் பாலர் பாடசாலைக் கல்விக்குரிய கணினி மென்பொறிகள் (Software) சிலவற்றை வட அமெரிக்காவில் தயாரித்துள்ளார்கள். அவை மக்கள் பாவனைக்கு வரும்போது, அவற்றினூடாக வெளிநாடுகளில் வாழும் புதிய தலைமுறையினர் பெரிதும் பயனடைவர். கல்லூரிகளிலும், பல்கலைக்கழகங்களிலும் தமிழ்மொழிக் கல்வி வளர்ச்சியடைய பெரும்முயற்சிகள் எடுக்க வேண்டியநிலை இந்நூற்றாண்டில் ஏற்பட்டும். அத்தகைய முயற்சிகள் இப்போது கனடாவில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவை போன்றே தொடர்புசாதனத்துறை, சமயத்துறை, கவின்கலைத் துறைகள், பெண்கள் மேம்பாட்டுநிலை ஆகிய பல்வேறு துறைகளிலும் பெரும் மாற்றங்களையும் வளர்ச்சியையும் எதிர்கொள்ளும்நிலை எற்படலாம்.

தமிழர் புலம்பெயர்ந்து வாழும் நாடுகளிலே ரொறன்ரோ, பாரிஸ் முதலான நகரங்களிலே தமிழ் மக்கள் மத்தியில் நாடகக் கலையும், திரைப்படக்கலையும் புதிய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி முன்னேற்ற வழியில் வீறுநடை போட்டுக்கொண்டிருக்கிறது என்ற செய்தியுடன், இத்துறை உலக திரைப்படத் துறையுடன் ஒப்பிடும் அளவுக்கு வளர வேண்டும் என்பதே தமிழரின் எதிர்பார்ப்பாகும். ரொறன்ரோவில் தமிழ்த் திரைப்படக் கலையில் பலர் பெருமுயற்சி எடுத்துவருகிறனர். நாடகத்துறையில் கணபதி இரவீந்திரனின் குழுவினர், அரங்காடல் குழுவினர் முதலானோர் பெருந்தேடல்களையும் ஆக்கபூர்வமான முயற்சிகளையும் மேற்கொண்டுவருகின்றனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனடாவில் தமிழர் பண்பாட்டைத் தக்கவைத்துக் கொண்டிருக்கப்போகும் ஊடகங்களில் பரதக்கலை முதன்மையானது. ஒன்ராறியோ மாகாணத்தில் பெருந்தொகை யினராகவும், அல்பேட்டா, பிரிட்டிஷ்கொலம்பியா முதலிய மாகாணங்களில் சிறுதொகை யினராகவும் பரதக்கலையை இளந்தலைமுறையினர் பயில்கின்றனர். நூற்றுக்கும் மேற்பட்ட நடன ஆசிரியர்கள் இங்கு கலைப் பணிபுரிகின்றனர். நிறுவன அடிப்படையிலான நடனப் பள்ளிகள் இயங்குகின்றன. இக்கலையைப் போற்றி வளர்க்கும் முயற்சியில் 'கனடா பரத நாட்டிய ஆசிரியர் சங்கம்' 2003 ஆம் அண்டில் நிறுவப்பட்டு செயற்பட்டுவருகின்றது. பரதக்கலையைப் பொறுத்தமட்டில், நடனம், தமிழ்மொழி, வாய்ப்பாட்டு, தமிழ்ப் பண்பாடு என்ற விடயங்கள் ஈண்டுக் கருத்திற் கொள்ளத்தக்கன. கனடாவில் பெரும்பாலான பரதக்கலை ஆசிரியர்கள் மாணவர்களுக்கு ஆங்கிலம் மூலமாகவே பயிற்சி வழங்கவேண்டிய இக்கட்டானநிலையில் உள்ளனர். பெரும்பாலான மாணவர்கள் நடனப்பயிற்சிப் பாடக் குறிப்புகளை ஆங்கிலத்தில் எழுதிக்கொள்கிறார்கள். பாடற் பொருள், பாடல்கள் வெளிப்படுத்தும் உணர்வுகள், பாவங்கள், மற்றும் தாளங்கள் அனைத்தையும் ஆங்கிலத்தினூடாக விளங்கிக் கொள்கின்றனர். இம் மாணவர்களின் தமிழ்மொழியுணர்வு, பண்பாட்டுணர்வு எப்படி அமையும் என்பதை மதிப்பிடுதல் மிகவும் சிக்கலானது. கலைகள் பண்பாட்டைக் கட்டிக் காக்கும் ஊடகம் என்பதை மட்டும் ஈண்டுக் குறிப்பிடுதல் தகும்.

அடுத்ததாக, இசைக்கலையைப் பற்றி நோக்கும்போது தமிழிசை பயிலும் மாணவர்களுக்கும் மொழிச்சிக்கல் இருப்பதை அவதானிக்கலாம். இசைக்கு மொழி உயிர்நாடியானது. கனடாவிலே தமிழ்ப் பிள்ளைகளுக்குக் கற்கைமொழியாகவும் தொடர்புமொழியாகவும் ஆங்கிலம் விளங்குவதால் தமிழ்மொழியைச் சரளமாகவும் இலாவகமாவும் பேசும் வாய்ப்பு இளந்தலைமுறையினருக்கு இல்லை. இப் பின்னணியும் இசைக்கல்விக்கு ஒரு பின்னடைவைக் கொடுக்கின்றது என்ற உண்மையைப் புறந்தள்ள முடியாது. ஈழத்துப் பிரபல சங்கீத வித்துவான்கள் இங்கே இசைத்தமிழ் போதிக்கின்றனர். ஆனால் அவர்களின் மாணவர்கள் ஆளுமைபெற்ற கலைஞர்களாக வளரவேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பு.

இசைச்கருவிகளைக் கற்பதில் மாணவர்கள் மிக்க ஆர்வம் கொண்டுள்ளனர். மிருதங்கம், வயலின் புல்லாங்குழல், வீணை முதலான இசைக்கருவிகளை இவ்வரிசையில் குறிப்பிடலாம். மிருதங்கம் பயின்று அரங்கேற்றம் கண்ட மாணவர்கள் கலைவிழா மேடைகளிலே சாதனை படைத்துவருகின்றார்கள். இதுபோன்றே பெரும் எண்ணிக்கையிலான மாணவர்கள் கீபோர்ட், பியானோ முதலான இசைக்கருவிகளைக் கற்பதிலும் மிக்க ஆர்வம்கொண்டுள்ளனர். இதற்கான வகுப்புகளை இசைமன்றங்களும், தனியார் கல்லூரிகளும் நடத்திவருவதோடு, இம்மாணவர்களின் திறன்களை வெளிப்படுத்தும் வகையில் ஆண்டுவிழாக்களையும் நிகழ்த்தி வருகின்றன. கீபோர்ட் இசைக்கருவி பயின்ற இளைய தலைமுறையினர் மிகவும் பாராட்டத்தக்க வகையில் ரொறன்ரோ நகரிலே கலைப்பணிகளில் தமது பங்களிப்பைச் செம்மையாகச் செய்து வருகின்றார்கள்.

உலகப் பண்பாட்டுக்குத் தமிழர் சிறந்தமுறையில் பங்களிப்புச் செய்துள்ளனர் என்பதைத் தமிழர்கள் முதலில் அறிந்துகொள்ள வேண்டும். உலகத் தமிழ்ப்பண்பாட்டு இயக்கமும், உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனமும் இத்தகைய முயற்சிகளில் ஆக்கபூர்வமான பணிகளில் தொடர்ந்து ஈடுபட வேண்டும். 21 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்துகொண்டிருக்கும் தமிழர் நிச்சயமாக, ஓர் ஒளிமயமான எதிர்காலத்தை நோக்கிப் பயணித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதே எமது உறுதியான கருத்தாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைகாசிக் குளிர்ச்சிச் சடங்கு பற்றிய பின்னணியும், மரபுகளும்



சா.கங்காதரன் (B.A)
(தர்மகர்த்தா)

"அணியாருங் கற்பிற் கருங்கலமே நல்ல
வணிகர் குலத்துதித்த மாதே – பணிமணியின்
சேய சிலம் பணியும் செல்வியே காரைநகர்த்
தாயே எமைக் காத்தருள்"

சோழ வள நாட்டிலே பிறந்து, பாண்டி நாட்டிலே வழக்குரைத்து, சேரநாட்டிலே தெய்வமானாள் கற்பின் தெய்வம் கண்ணகி. இப்பத்தினித் தெய்வத்திற்கு, 'இமயத்தில் கல்லெடுத்து, 'சேரன் செங்குட்டுவன்' சிலை சமைத்து, சேரத் தலைநகராம் வஞ்சி மாநகரில் அமைக்கப்பட்ட ஆலயத்தில் பிரதிட்டை செய்து பெருவிழா எடுத்தான்' என்பது இளங்கோ அடிகள் இயற்றிய 'சிலப்பதிகாரத்தின்' கூற்று. இப்பெருவிழாவிற்கு சேரமன்னனின் அழைப்பின் பேரில் சென்றான் 'கடல்சூழ் இலங்கை' மன்னன் 'கஜபாகு' என்பது வரலாறு. இது நடைபெற்றது கி.பி 12ஆம் நூற்றாண்டாகும். இப்பெருவிழாவிற்குச் சென்ற கஜபாகு மன்னனின் அழைப்பின் பேரில் சேரன்செங்குட்டுவனின் வழிவந்த சேனாதிராசனின் விதவை மகளான 'தேவந்தி அம்மையார்' தனது மகள் சின்னநாச்சியாருடன் கதிர்காம யாத்திரை மேற்கொண்டு இலங்கை வந்து கண்டி மன்னனின் விருந்தினராக தங்கியிருந்த சில நாட்களில் கதிர்காம யாத்திரையை மேற்கொண்டார். அம்மையார் தான் வரும் பொழுது தன்னுடன் பத்தினித் தெய்வத்தின் மூன்று சிலைகளைக் கொண்டு வந்ததாகவும். அவற்றில் இரு சிலைகள் 'அகோர' வடிவுடையாகவும், ஒன்று 'சாந்த' சொரூபமான சிலையாகவும் இருந்ததாக 'கர்ண பரம்பரைக் கதையும்' வரலாறும் உண்டு.

அம்மையாரின் யாத்திரையின் வழியில் ஏறாவூரில் 'அகோர வடிவுடைய சிலைகளில் ஒன்றினை ஸ்தாபித்து வழிபாடியற்றி பின்னர் மீதி இரு சிலைகளுடன் எமது பழம்பெரும் கிராமமான காரேறு மூதூரில் (காரைதீவு) வந்து தங்கியிருந்தார். யார் செய்த தவப்பயனோ கற்பின் தெய்வம், காவல் தெய்வம் கண்ணகியின் பேரருள் இப்பழம் பெரும் தமிழ் கிராமத்தின் மீது பதிந்த காரணத்தினால் தேவந்தி அம்மையார் இத்தமிழ் கிராமத்தால் ஈர்க்கப்பட்டு நிரந்தரமாகவே தங்கியிருந்து 'வேம்பு' மரநிழலில் தான் கொண்டு வந்த இரு விக்கிரகங்களையும், இங்கு வாழ்ந்து வந்த முக்குகர் எனும் குடிவழியினரின் துணை கொண்டு சிறு ஆலயம் அமைத்து 'பிரதிட்சை' செய்து, பூசை வழிபாடியற்றி வருங்கால் கண்டிய அரசனின் இப்பிரதேசத்திற்கென நியமிக்கப்பட்ட இராஜ பிரதிநிதியும், அவனது மனைவியும் (வன்னிமை) நகர்வலம் வந்து அம்மையாரின் பூசை வழிபாட்டில் கலந்து, மனைவியாரின் கண்ணொளி மங்கப்பெற்று, அம்மையாரின் தெய்வ வேண்டுதலால் மீண்டும் கண்ணொளி பெற்றமையும், இதன் பொருட்டு மன்னனின் ஆணைப்படி புனித ஆலயம் ஸ்தாபிக்கப்பட்டு, அதனை நிறுவகிப்பதற்காக 101 ஏக்கர் நெற்காணிகள் நேர்கடனாக வழங்கப்பட்டதும். இவ்வாலயத்தின் வரலாறாகும்.

இப்பழம் பெரும் தமிழ் கிராமத்தில் தேவந்தி அம்மையாரும், அவரது மகளான சின்னநாச்சியாரும் வாழ்ந்து வருகையில் இங்கு வாழ்ந்து கொண்டிருந்த குடிமக்களின் பிள்ளைப்பேறு குறைந்து கொண்டு சென்றதனால், இதற்கு காரணமாய் அமைந்த பத்தினித் தெய்வத்தின் அகோர வடிவ விக்கிரகத்தை மக்களின் கோரிக்கையின் படி சனசந்தடியற்ற 'பட்டிமேடு' எனும் கிராமத்திலே தேவந்தி அம்மையார் பிரதிட்சை செய்ததாக அறியக்கூடியதாகவுள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதேவேளை அழகு நிறைந்த இளவரசியான சின்னநாச்சியார் மீது மையல் கொண்ட முக்குககுடிவழி இளைஞர்கள் அம்மையாருக்கும், அவரது மகளுக்கும் மிகவும் தொந்தரவாக இருந்த காரணத்தினால் அம்மையார் இம்மக்கள் மீது வெறுப்புற்று தான் வைத்து பூசித்த சாந்தசொருபமான பத்தினித் தெய்வத்தின் விக்கிரகத்துடனும், தனது மகளுடனும் தம்பிலுவில் எனும் கிராமத்திற்கு இடம் பெயர்ந்து அங்கு இவ்விக்கிரகத்தை வைத்து வழிபட்டு வருங்காலம், காரைதீவு கிராம மக்களுக்கு கொள்ளை நோய், அம்மை நோய் என்பன துன்ப துயரங்களைக் கொடுத்தன. இதன் காரணமாக மக்கள் தம்பிலுவில் கிராமத்திற்குச் சென்று தேவந்தி அம்மையாரை மன்றாடி மீண்டும் காரைதீவுப் பகுதிக்கு அழைத்து வந்து பத்தினித் தெய்வத்தை மீண்டும் பிரதிட்சை செய்து அம்மையாரின் வேண்டுகோளின் படி கற்புக்கரசி கண்ணகியைக் குளிர்விக்கும் பொருட்டு பொங்கலிட்டு பெருவிழா எடுத்தனர். இப்பெருவிழா வில் கொம்பு முறித்தல், போர் தேங்காய் உடைத்தல், கொம்புத்தட்டு, வசந்தன் போன்ற நிகழ்வுகள் நிகழ்ந்தன என்பனவும் வரலாறு கூறும் செய்திகளாகும். இப்பெருவிழா வைகாசி விசாகத்தில் (வைகாசித்திங்கள்) வருடாவருடம் கொண்டாடப்படுகிறது.

இவ்விழா வைகாசிப் பொங்கல், திருக்குளிர்ச்சி எனும் நாமங்களால் அழைக்கப் பெற்று வருகின்றது. மேற்படி சம்பவமே இவ்வாலயத்தின் திருக்குளிர்ச்சி விழாவின் தோற்றுவாயாகும்.

## வைகாசிக் குளிர்ச்சிச் சடங்கின் மரபு

ஈழ வள திருநாட்டில் உள்ள கண்ணகி அம்மன் ஆலயங்களில் திருக்குளிர்ச்சி விழா தமிழ் மாத வைகாசிப் பௌர்ணமியில் இடம் பெறும் ஆயினும் காரேறு மூதூரிலும், வற்றாப்பளையிலும் கோயில் கொண்டிருக்கும் பத்தினித்தெய்வத்தின் திருக்குளிரச்சி விழா வைகாசிப்பௌர்ணமி திங்கட்கிழமையாயின் அந்நாளிலும், திங்கட்கிழமை அல்லாத வைகாசிப் பௌர்ணமி ஆயின் பௌர்ணமிக்கு அடுத்து வரும் திங்கட்கிழமையிலும் நடைபெறுவது மரபாகும். 'கண்ணகி வழக்குரையில் கண்ணகி வைகாசித் திங்கள் வருவேன்' என்று கூறும் அடியையொற்றி திங்கள் என்பது பௌர்ணமியையும், திங்கட்கிழமையையும் குறிப்பதால், காரைதீவு கண்ணகியாரின் திருக்குளிர்ச்சி வைபவம் தமிழ் மாத வைகாசித் (விசாகம்) திங்கட்கிழமையிலேயே நடைபெற்று வருவது மரபுவழி வந்ததாகும்.

இவ்வாலயத்தில் திருக்குளிர்ச்சி விழாவானது திருக்குளிர்ச்சி நடைபெறும் திங்கட் கிழமைக்கு முன்வரும் திங்கட்கிழமையன்று சமுத்திர தீர்த்தம் எடுத்தலுடனும் கல்யாணக்கால் நடுவதுடன் ஆரம்பமாகின்றது. இங்கு கல்யாணக்காலாக பூவரச மரமே தெரிவு செய்யப்படுவது இவ்வாலயத்தின் மரபாகும். சமுத்திரத்திலே தீர்த்தம் எடுத்து வரும் பொழுது ஏலவே தெரிவு செய்யப்பட்ட மெய்யன்பர் ஒருவரின் காணியிலுள்ள பூவரசமரத்திலுள்ள நேரான கிளையொன்றை பக்தர்களின் கைகளினால் முறித்து, அதனை சமுத்திர தீர்த்தத்துடன் ஆலயத்திற்கு எடுத்து செல்வார்கள். ஆலயத்திலே பத்தினித் தெய்வத்திற்கு முன்பாக பூவரசு மரக்கிளையை நட்டு கப்புகன்மார்களால் (பூசகர்) கிரியைகள் செய்யப்பட்டு அம்மரக்கிளையை ஆலயத்தினுள் எடுத்துச் சென்று அங்கும் அதற்குப் பூசைகள் செய்து நடுவார்கள். அதன் பின்னர் அக்கல்யாணக்காலுக்கு கப்புகன் மார் பூசை செய்து அன்றைய நிகழ்வுகள் நிறைவடையும். அடுத்த நாள் செவ்வாய்கிழமை பி.ப 07.00 மணிக்கு கல்யாணக்காலுக்கும்,அம்பாளுக்கும் பூசைகள் நடைபெற்று பின்னர் உடுக்கை அடித்து ஊர் சுற்றுக்காவியம் பக்தர்களால் பாடப்பெற்று அன்றைய நிகழ்வுகள் நிறைவு பெறும். அடுத்த நாள் புதன் கிழமை தொடக்கம் ஞாயிறு வரை பகல் 1.00 மணிக்கு அம்மாளுக்கு பூசையும் பி.ப 7.00 மணிக்கு அம்பாளுக்கு தொடர்ந்து உடுக்கை அடித்து ஊர்சுற்றுக்காவியம் பாடுதலுடன் ஐந்து நாட்களின் நிகழ்வுகள் நிறைவு பெறும். இவ்வைந்து நாட்களிலும் பத்தினித் தெய்வத்தின் பகல் பூசையின் போது அம்பாளுக்குச் சோறும் கறியும் படைக்கப்படும். இச்சோறும் கறியும் படைத்தலை பச்சை கட்டுதல் என அழைக்கப்படும். இவ் ஆலயத்தில் அம்பிகை அடியார்களுக்கு வழங்கப்படும் சிறப்பான பிரசாதம் இச்சோறும் கறியுமே ஆகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்த நாளான திங்கட்கிழமை முழுநாளும் பூசைகள் இடம் பெறுவதில்லை. அன்றைய தினம் பக்தர்கள் தங்களின் நேர்த்திக் கடன்களை அம்பாளுக்குக் காணிக்கையாகச் செலுத்துவார்கள். ஆண்கள் ஆலயத்தை சுற்றி அங்கப் பிரதட்சனை செய்தும், பெண்கள் கற்பூரச்சட்டி எடுத்தும் தங்கள் தங்கள் நேர் கடன்களைச் செலுத்துவார்கள் அன்றைய தினம் பக்தர்கள் உபவாசம் இருந்து பத்தினித் தெய்வத்திடம் தங்களின் குறைகளை நிவர்த்தி செய்யுமாறு வேண்டி விரதம் அனுட்டிப்பார்கள். திங்கள் முழுநாளும் பக்தர்களால் சிலப்பதிகாரக்கதை பாடப்படும்.

அடுத்துவரும் செவ்வாய்கிழமை உதயம் 4.00 மணிக்கு அம்பாளின் சிறப்பான விசேட பூசை இடம்பெற்று தொடர்ந்து திருக்குளிர்ச்சிப் பாடல் பாடப்பெற்று பத்தினித் தெய்வமாம் கண்ணகியம்மனை குளிரச் செய்யப்படும் நிகழ்வுகள் இடம் பெறும். இதன்போது வெண்கலக் கலயத்தில் (குளிர்த்திக் குரச்சி) கப்புகனாரால் மந்திரிக்கப்பட்ட தூய நீரில் வெற்றிலை, பாக்கு, வாழைப்பழம், தாமரைப்பூக்கள், சிலம்பு, அம்மானைக்காய் என்பவற்றுடன் அம்பாளின் தல விருட்சத்திலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட வேப்பிலை என்பன இடப்பட்டு, பாடப்படும் குளிர்ச்சிப் பாடல்களின் கருத்துகளுக்கேற்ப கல்யாணக் காலைச்சுற்றி கப்புகன்மாரால் அக்கலயம் எடுத்துச் செல்லப்படும். அவ்வேளையில் எட்டுத்திசைகளிலும் இருந்தும் வழிபடும் அம்பிகை அடியார்கள் மீது கலயத்தில் உள்ள தீர்த்தம் வேப்பிலைக் கொத்தால் தெளிக்கப்படும். இறுதியில் திருக்குளிர்ச்சிப் பாடல்கள் பாடி முடிவுற்றதும் கப்புகனாரால் மங்களகீதம் பாடப்பெற்று திருக்குளிர்ச்சிப் பூசைகள் முடிவு பெறும்.

திருக்குளிர்ச்சிப் பூசைகள் முடிவடைந்ததும் பக்தர்களுக்குத் திருக்குளிர்ச்சித் தீர்த்தம், திருநீறு அம்பாளின் அருமருந்தான வேப்பிலை என்பன பிரசாதமாக வழங்கப்பெற்று திருக்குளிர்ச்சி வைபவம் பத்தினித் தெய்வத்தின் அருளால் இனிதே நிறைவடையும்.

## திருக்குளிர்ச்சி விழாவின் எட்டாம் சடங்கு



வைகாசி குளிர்ச்சி நிறைவடைந்து எட்டாம் நாளான அடுத்து வரும் திங்கட்கிழமை அம்பாளின் எட்டாம் சடங்கு நடை பெறும் இதன் போது கிராமத்து மக்கள் தனித்தனியாக (குடும்பம் குடும்பமாக) பி.ப 03.00 மணியிலிருந்து அம்முறை விளைந்த புதிய நெல்லில் இருந்து பெறப்பட்ட அரிசியைக் கொண்டு அவர்களாகவே அம்பாளுக்கு பொங்கலிட்டு தங்களின் நேர்த்திகளை நிறைவு செய்வார்கள். இந்நிகழ்வு கிழக்கிலங்கையில் இருக்கின்ற கண்ணகி அம்மன் ஆலயங்களிலிருந்து வேறுபடும் ஒரு சிறப்பான நிகழ்வாகும்.


இறுதியாக இலங்கைத் திருநாட்டில் அமையப்பெற்ற பத்தினித் தெய்வத்தின் ஆலயலங்களில் காரைதீவுப் பதியில் அமைந்துள்ள கண்ணகி அம்மன் ஆலயத்திலே தான் ஆகம விதிப்படியும், பத்ததி முறையிலும் (அஃது ஆரிய முறையிலும், திராவிட முறையிலும்) அம்பாளுக்கு பூசை செய்வது இடம் பெறுகின்றன என்பது விஷேட அம்சமாகும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ் நூல் தந்த முத்தமிழ் வித்தகன் விபுலானந்த அடிகளாரையும், அருட்துறவி சுவாமி நடராஜானந்தாஜீயையும் இந்நாட்டிற்கு ஈன்றளித்த கற்பின் தெய்வம் கண்ணகியாளை இத்தமிழ் கிராமம் வாழ் மக்கள் குலதெய்வமாகவும், காவல் தெய்வமாகவும் வழிபட்டு உய்வடைகிறார்கள் என்பது பிரசித்தம்.

“மேருவரை யுற்றதன பாரமா தவிதந்த
மேய்யன்ப தீரவொரு கைமுதலில்லாமல்
பாரமா நூபுரம் தனை விற்க வென்றே
பன்னுதமிழ் மதுரை மன் பதியதனில் வந்து
மாரவேள் ஒத்தவடி வான கோவலன்றன்
மதுரை மன் கொன்று பழி வாங்கி வருகின்ற
காரைதீவிற் கோயில் கொண்டு வாழ்கின்ற
கண்ணகை கமலபதம் கனவிலும் கருதுவனே”




கடல்நீர் எடுத்து வர செல்கையில்...



பாற்குட பவனியின் போது...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கடமை

கலாபூசணம் இரா.கிருஸ்ணபிள்ளை (B.A)

கிழக்கே வங்கக்கடலையும், மேற்கே வயல் வெளியையும்,வடக்கே மாளிகைக் காட்டையும், தெற்கே நிந்தவூரையும் எல்லைகளாக கொண்டமைந்த எளிமையான இனிய ஊர் காரைதீவு. ஆலயங்களும், கல்விச்சாலைகளும் நிறைந்த அமைதியான கிராமம். விடிந்து சாய்ந்தால் கோயில்களின் மணியோசை ஓங்கார ஒலி எழுப்பும். சாதிகள் பேதமின்றி ஒன்றே குலம் ஒருவனே இறைவனாக ஒளி வீசும் மனித நேயமிக்க பிரதேசம். மேற்கிலிருந்து தெற்குப் பக்கமாக ஓடிவரும் களப்பு, வாய்க்கால் நீர் காரைதீவை மையமாக ஊடறுத்து வளைந்து நெளிந்து கரச்சை ஊடாக ஓடி கடலை அடையும் காட்சி ரம்மியமானது.

சுனாமியின் பின்னர் வானோங்கி வளர்ந்த தென்னை மரங்களும், கமுக மரங்களும் ஐதாக காணப்பட்டாலும் கரச்சையின் இரு மருங்கிலும் செழுமையாக காணப்பட்டன. மேலும், மக்கள் இருக்கிறார்களோ இல்லையோ மாடிவீடுகளும், கல்வீடுகளும் நிறையவே எழுந்துள்ளன. ஓலை வீடுகள் பெரும்பாலும் இல்லை என்றே சொல்லலாம்.

தொண்டு நிறுவனங்களின் உதவியினால் வேலைவாய்ப்பு அதிகரிக்க உந்துருளிகளும், கையடக்கத் தொலைபேசிகளும் மலிந்து காணப்பட்டன. இறைவன் அருளாலும் சுனாமியின் உதவியினாலும் வளமான வாழ்வு மக்களுக்கு கிட்டியுள்ளது. இவ் வளத்தை போதைக் களமாக மாற்றுவோரும் காரைதீவில் இல்லாமல் இல்லை. காரைதீவு அரசாங்க ஊழியரை அதிகமாக கொண்டிருந்தாலும் விவசாயிகளையும், மீனவர்களையும் கூடவே கொண்டுள்ளது.

அப்படிப்பட்ட விவசாயக் குடும்பங்களுள் அருளானந்தருடைய குடும்பமும் ஒன்று. அருளானந்தர் பரம்பரை விவசாயி. இருந்த போதிலும் தற்போதைக்கு அவருக்கு சொந்தமாக ஒரு ஏக்கர் வயல் கூடஇல்லை. கூலிக்கே விவசாயம் செய்கிறார். ஒழுக்கமும் கட்டுப்பாடும் உடையவர். நாணயஸ்தர் என்ற நல்ல பெயரை சம்பாதிக்க தெரிந்த அவருக்கு பணத்தை சம்பாதிக்க தெரியவில்லை. உழைப்பில் ஒரு பகுதியை ஏழைகள், அநாதைகள், கோயில்களுக்காக செலவிட்டு விடுவார். நோயாளியான மனைவி கமலம் கேட்டால் ஊரார் பிள்ளைகளை ஊட்டி வளர்த்தால் நம் பிள்ளைகள் தானே வளரும் என தத்துவம் பேசுவார். நல்ல உழைப்பாளி ஊரில் மதிப்பு மிக்கவர். எழில் என்ற பெயருடைய ஆணையும், அருந்ததி, ஆனந்தி என்ற இரு பெண் பிள்ளைகளையும் பிள்ளைகளாக பெற்றவர். மகன் எழில் கிழக்குப் பல்கலைக்கழகத்தில் முதலாம் ஆண்டு முடித்து இரண்டாம் ஆண்டு ஆரம்ப மாணவன் அருந்ததி எழிலுக்கு நேர் இளையவள் உயர் தரம் கணிதம் இரண்டாம் ஆண்டு படிக்கிறாள். கடைக்குட்டி ஆனந்தி ஆண்டு பத்துப் படிக்கிறாள். மனைவி கமலம் ஆஸ்மா நோயாளி இருந்தபோதிலும் பிள்ளைகளின் கல்வியில் கரிசனம் உடையவள் ஒழுக்கத்தை உயிராக மதிப்பவள் இதுதான் அருளானந்தரின் அளவான குடும்பம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு நாள் மதியம் வயலில் இருந்து அருளானந்தர் வீடு திரும்பிய போது திடீரென அவருக்கு இருதய வலி ஏற்பட்டது. கூடவே மயக்கமும் வந்தது. பெண்கள் ஐயோ எனக் கத்தி அலறி அக்கம் பக்கத்திலுள்ளவர்களின் உதவியோடு அவரை வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லும் வழியில் அருளானந்தரின் உயிர் பிரிந்து விட்டது. கமலம் செய்வதறியாது திகைத்த வேளையில் பக்கத்து வீட்டுக்காரர் எழிலுக்கு அறிவிக்குமாறு எடுத்துக் கூறினர்.

நெருங்கிய சொந்தக்காரர் என்று சொல்ல அருளானந்தருக்கோ, கமலத்திற்கோ யாரும் இல்லாத காரணத்தினால் எழில் உடனடியாக வரவழைக்கப்பட்டான். நண்பர்கள் அயலவர் உதவியோடு அமைதியான முறையில் அருளானந்தரின் உடல் அடக்கம் செய்யப்பட்டது. அவரின் பிரிவால் அலறித் துடித்த அவரது குடும்பம் சில நாட்களின் பின்னர் சீரான நிலைக்கு வந்தது.எட்டுச் செலவும் முடிந்து விட்டது. இன்று புதன் கிழமையோடு அருளானந்தர் மறைந்து பதினெட்டு நாட்களாகி விட்டன. பன்னிரெண்டு மணியளவில் தபால்காரர் கேற்றடியில் மணியடித்தார். பெண்கள் பேசியபடி குசினிக்குள் இருந்ததால் அவர்களுக்குக் கேட்கவில்லை போலும், அப்போது கிணற்றடியில் இருந்து வந்த எழில் சத்தம் கேட்டு கேற்றடிக்குப் போக தபால்காரர் ரவி,

“இந்தா எழில் உனக்குத்தான் கடிதம்” கடிதத்தை எழில் கையில் கொடுத்து விட்டு ரவி பைசிக்கிளைத் தள்ளிக் கொண்டு போகிறான். கடிதத்தை வாங்கிய எழில் கடிதம் யாரிடம் இருந்து வந்துள்ளது என்பதை அறிய கடித மேலுறையைப் பார்த்ததும், நளாயினியிடமிருந்து வந்திருப்பதை அறிகிறான். வளவுக்குள் வந்தவன் அவ்விடத்தில் நின்றபடியே,

“நளாயினி இன்னமும் என்னை நன்றாக புரிந்து கொள்ளவில்லை”. என மனதுக்குள் அலுத்துக் கொண்டவன் கடித உறையைக் கிழித்து கடிதத்தை வெளியே எடுத்து வாசிக்கின்றான்.

“அன்புக்குரிய எழிலுக்கு”,

அப்பாவுக்குரிய எட்டாம் நாள் கிரிகைகள் எல்லாம் முடிந்திருக்குமென நம்புகிறேன். அதில் பங்குகொள்ள சந்தர்ப்பம் கிடைக்காமையை இட்டு வருந்துகிறேன். இருந்தாலும், நீங்கள் மிகவும் கண்டிப்பானவர். அன்று அப்பாவின் மரணச் செய்தி கேட்டவுடன் உங்களோடு கூட வரவிரும்பிய என்னைத் தடுத்ததோடு, சக மாணவர்களோடு வந்தவேளை ஒரு நாள் நின்று போவதாகக் கூறிய போதும் மறுத்துவிட்டீர்கள். இப்படி உண்மை நட்பை உதாசீனப்படுத்தலாமா? எதுக்காக ஒதுங்கி ஒதுங்கி உங்களை தனிமைப்படுத்தி கொள்ளுகின்றீர்கள்?”

கடிதம் வாசிப்பதை இடையில் நிறுத்தியவன். ‘வெறும் நட்பாக மட்டுமிருந்திருந்தால் தடுத்திருக்கமாட்டேன். பின்னால் அதுவே காதல், கத்தரிக்காய் என வளர்ந்து விட்டால்....அதுதான்...... அது எனக்கு சரிவராதம்மா உன் மனதில் ஆசையை வளர்க்க நான் விரும்பவில்லை” என எண்ணியவாறு மீண்டும் விட்ட இடத்திலிருந்து வாசிக்க ஆரம்பித்தான்.

“எனது தந்தை உங்களையும் உங்கள் குடும்பத்தையும் பற்றி வெகுவாக விசாரித்தார். அப்பா இல்லையென்று படிப்பை இடையில் நிறுத்தி விடாதீர்கள். எனது தந்தை நல்லவர். உங்களுக்கு வேண்டிய உதவியைச் செய்வார்.‘‘கடிதத்தை மடித்து நாடியில் தட்டியவாறு ‘ஓகோ படிக்க எனக்கு பணம் தரப்போறியா? அப்படியானால் அதன் அர்த்தம் என்ன நளாயினி?‘ மீண்டும் தொடர்ந்து கடிதத்தைப் படிக்கிறான். “அதுக்காக உங்களை தாழ்த்துவதாக நினைக்காதீங்க படிப்பில் கெட்டிக்காரரான நீங்க படிப்பை பாதியில் விட்டிடக் கூடாதே என்ற எண்ணத்தாலேயே இப்படி எழுதுகிறேன். என்னை ஏன் இன்னும் புரிந்துகொள்ள மறுக்கிறீங்க. கண்டிப்பாக நீங்ககல்வியைத் தொடர வேண்டும். ஆகவே விரைவில் பல்கலைக்கழகத்திற்கு வாருங்கள். வருவீர்கள் என்ற நம்புகிறேன். வரவுக்காகக் காத்திருக்கிறேன். கட்டாயம் பதில் போடவும். ஏமாற்றக் கூடாது .

இப்படிக்கு
உங்கள் நளாயினி”


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடிதத்தைப் படித்து முடிந்ததும் அவனுள் இருந்து ஒரு நெடுமூச்சு எழுந்து தணிந்தது. எழில் வெளியாகவே மெதுவாக "நளாயினி உன் நல்ல மனதிற்கு நன்றி. இருந்தாலும், நீ ஏமாந்து விடக்கூடாதேயென்பதற்காகத்தான் நான் ஒதுங்கி இருக்கிறேன் புரிஞ்சுக்கோ".

பல்கலைக்கழக உள்ளக மாணவனாக இனி நான் படிப்பைத் தொடரப் போவதில்லை. பொறுப்புக்கள் என்னைக் காத்திருக்கின்றன. என்னை மறந்துவிடு" கடிதத்தை கிழித்து பக்கத்தில் இருந்த குப்பை மடுவில் போட்டு விட்டு நளாயினியின் எண்ணத்தைத் துடைத்தவனாக வீட்டுக்குள் வருகிறான்.

தபால்காரன் மணிச்சத்தம் கேட்டு எழிலுக்குப் பின்னர் வந்த அருந்ததி மண்டப நிலைப் படியில் நின்றவாறு எழிலின் நடவடிக்கைகளை அவதானித்துக் கொண்டிருந்தவள் எழில் வர சிரித்தவாறு,

"அண்ணா, என்ன கடிதமண்ணா அது? " இது அருந்ததியின் கேள்வி.

திடுக்கிட்ட எழில் "கடிதமா……… எந்தக்………கடிதம்"
"படிப்பதும், தலையாட்டுவதும், தன்னுள் பேசுவதுமாகப் படித்து முடிந்ததும் கிழித்துப் போட்டீர்களே அந்தக் கடிதம்" விளக்கினாள்.

"ஓகோ! அதுவா?" சமாளித்தான் எழில்
"ஆமாம் அதேதான்" விடாமல் பிடித்தாள் அருந்ததி
"அது வேறொன்றுமில்லை வந்து..... வந்து என்னோடு கூடப் படிக்கிற நளாயினியின் கடிதம்" உண்மையை ஒத்துக் கொண்டான்.

"அப்படி வாங்க வழிக்கு, அப்பாவின் மரணச் சடங்குக்கு வந்த பெண்களில் அடிக்கடி உங்களோடு வந்து பேசிய பெண்தானே. ஒல்லியாக இருந்தாலும் வெள்ளை நிறமும், அழகுமுள்ளவளாக இருந்தவள் தானே நளாயினி" கேள்வியை அடுக்கினாள் அருந்ததி.

"ஏன் தங்கச்சி, இவ்வளவு அக்கறையாக கேட்கிறாய்?" மடக்கப்பாக்கிறான் எழில்.

"எல்லாம் காரணமாகத்தான் அந்த நளாயினி பண்புள்ளவள் போல் தெரிகிறது. என்னோடும் அன்பாகப் பேசினாள். நம் குடும்பத்தைப்பற்றியெல்லாம் விசாரித்தாள்"

"அப்படியா?, இவ்வளவு நடந்திருக்கா.எனக்கு தெரியாமல் போயிற்றே"
அங்கலாயித்தான் எழில்.

"உங்களுக்குத்தான் நளாயினியைப் பற்றி தெரியாமல் இருக்கு ஆனால் ……எனக்கு நல்லாத் தெரியும்அண்ணா"விளக்க முற்பட்டாள் அருந்ததி.

"அப்படி என்ன தெரியும் உனக்கு" தெரியாதவன் போல் கேட்டான் எழில்"
ஒரு பெண்ணின் மனதை இன்னொரு பெண்ணால் தான் புரிந்துகொள்ள முடியும். உண்மையைச் சொல்லட்டா அண்ணா கோபிக்கமாட்டீங்களே?" என்று அருந்ததி கேட்க எழில் மௌனமாக வாசலைப் பார்த்தான்.

"நளாயினி உங்களை மனதார விரும்புகிற மாதிரி தெரிகிறதண்ணா அவளது ஒவ்வொரு அசைவிலும் அதைக்காண முடிகிறது." என்றதும் அருந்ததி "அனுபவம் பேசுதோ" எழிலின் குரலில் கோபம் தெரிந்தது.
"உங்கட தங்கச்சியைப் பற்றி நீங்க தப்பா நினைக்கலாமா அண்ணா" அருந்ததியின் கண்களில் கண்ணீர் எட்டிப்பார்த்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“அடி அசடே. நான் அப்படி நினைப்பேனா? திடீரென நீ அப்படிக் கூறியதும் கோபம் வந்தது உண்மைதான்” சமாளித்தான் எழில்.

“உங்களைப் போல தானே அண்ணா ஒழுக்கத்தையும் கட்டுப்பாட்டையும் உரமாகப் போட்டு எங்களையும் அப்பா வளர்த்தார். அந்த நளாயினியைப் பார்க்க பரிதாபமாக இருந்தது. வாய்விட்டு உங்க மேலுள்ள விருப்பத்தை சின்னவள் என்றும் பார்க்காமல் என்னிடம் சொன்னாள்” என்றாள் அருந்ததி.

“ஆனால் அப்படி ஒரு எண்ணம் எனக்கு இல்லையே யம்மா.அதை ஏற்றுக்கொள்ளவும் என்னால் முடியாது. இப்போது என் கண் முன்னால் தெரிவது நம் குடும்பம் ஒன்றுதான். அப்பா இருந்த வரையும் எனக்கு பொறுப்பில்லாமல் இருந்திருக்கலாம் ஆனால் .....” எழில் முடிக்க முன்
“அண்ணா நளாயினி பாவம்” நளாயினிக்காக அருந்ததி பேசினாள்.
“அதற்கு நான் பொறுப்பில்லை தங்கச்சி இப்போதைக்கு உன் படிப்பு, ஆனந்தியின் படிப்பு, அம்மாவின் நோய், குடும்ப பராமரிப்பு இவை தவிர வேறு எதற்குமே இடமில்லை”.

“அதெல்லாம் முடிந்த பிறகாவது.......” விடாப்பிடியாக அருந்ததி கேட்டாள்.

“இல்லையம்மா உங்களுடைய படிப்பிற்குப் பிறகு உங்களுடைய திருமணங்கள் இவை முடியவே பல வருடங்களாகும். உம்! அது நடக்க முடியாத காரியம். இத்தோடு இந்தக் கதையை விட்டிடு” என்று எழில் பேச்சுக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கவும் தாய் கமலம் சேலைத் தலைப்பில் கையைத் துடைத்தபடி அங்கு வரவும் சரியாக இருந்தது.

“என்ன நீண்ட நேரமாக அண்ணனும் தங்கையும் பேசிக் கொண்டிருக்கிறாப் போல” கமலம்.

“ஒன்றுமில்லையம்மா எல்லாம் படிப்பைப் பற்றித்தான்” கதையை மாற்றினான் எழில்.
“இல்லையம்மா அண்ணாவுக்கு கடிதம் வந்திருக்கு” இது அருந்ததி
“சர்வகலாசாலையிலிருந்தா” அம்மா.
“ஆமாமம்மா! அதுவும் அந்த நளாயினி அக்காதான் எழுதியிருக்கிறாள்” அருந்ததி.
“அப்படியா நல்ல அடக்கமான அன்பான பெண், என்னவாம் வகுப்புகள் தொடங்கிற்றாமா?” அம்மா விசாரிக்க வெளிக்கிட்டாள்.

“ஆமாம்மா, அதை பிறகு பேசுவம் முதலில் எனக்குப் பசிக்குது வாங்க சாப்பிடலாம்”. பேச்சுத் தொடர விடாமல் துண்டித்த எழில் குசினியை நோக்கி நடையைக் கட்டினான். கூடவே கமலமும், மறுப்புச் சொல்லாமல் அருந்ததியும், சென்றனர்.

கை, கால் அலம்பிக் கொண்டு பிள்ளைகள் வரிசையாக வந்து அமர்ந்ததும் அவர்களுக்குரிய சாப்பாட்டுக் கோப்பைகளை அவர்கள் முன்னால் வைத்து சோறு, கறிகளை கமலம் பரிமாறினாள்.

“ஏனம்மா நீங்களும் ஒரு கோப்பையை எடுத்து வைத்து சோற்றைப் போடுங்களன்” என்றான் எழில்.

“இல்ல மகன் நான்,பிறகு சாப்பிடுறன். நீங்க சாப்பிடுங்க” என்றாள் பிள்ளைகளுக்கு பார்த்துப் பார்த்து பரிமாறுவதை பாக்கியமாகக் கருதிய கமலம். பிள்ளைகளிடம் வற்புறுத்தி வயிறு நிறைய சாப்பிடவைத்து அதனால் மகிழ்ச்சி அடைந்தாள். அதே நேரம் எழிலிடம் எதையோ கேட்க நினைத்தவள், சாப்பாட்டு நேரங்களில் பலர் பேசியதால் பிரச்சினைகள் உருவானதை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“மகன்! பல்கலைக்கழகத்துக்கு எப்போது போகப் போறீங்க” என எழிலைப் பார்த்து கேட்டாள்.

“இனிமேல் போவதாக உத்தேசம் இல்லையம்மா” என எழில் செம்பை எடுத்து நீர் குடித்தான். அவன் பதிலில் திடுக்கிட்டு தாயும், சகோதரிகளும் கேள்விக் குறியோடு அவனைப் பார்த்தனர்.

“ஆமாம்மா.படித்த படிப்புக்குள்ள ஒரு வேலையைத் தேடப் போகிறேன்”. தொடர்ந்து விளக்கினான் எழில்.
“ஏனண்ணா இப்படியொரு முடிவு” அருந்ததி கேட்டாள்.
“ஏனென்றால் இன்றைய நம் குடும்ப நிலை அப்படி பிறரிடம் கையேந்துவதை விட நாமாக உழைப்பது நல்லது தானே அம்மா” என்றான் எழில்.

“கெட்டிக்காரப்புள்ள நீ, அப்பா எதையும் தேடி வைக்கல்ல என்பதற்காக படிப்பை விட்டு விடாத மகனே! இடியப்பம், அப்பம் சுட்டாவது உன்னையும், தங்கைகளையும் நான் படிப்பிக்கிறன் மகன்” தாய் கமலம்.

“சுயமாகத் தொழில் செய்வதில் தப்பில்லைதானம்மா. இருந்தாலும் நீங்க இப்ப சொன்னீங்களே அதுதான் தப்பு. ஆஸ்மா நோயாளி அதிகாலையில் எழும்பவும் முடியாது, நெருப்புப்புகையில் நிற்கவும் கூடாது” இது எழிலின் வாதம்.

“இல்லையண்ணா நானும் ஆனந்தியும் எல்லா வேலைகளையும் செய்வம். விற்க மட்டும் அம்மாவை விடலாம்” கமலத்திற்கு ஆதரவு தெரிவித்தாள் அருந்ததி.

“ஆமாண்ணா நீங்க படிப்பை விட்டுவிடாதீங்க படிச்சு பெரிய உத்தியோகத்தில் நீங்க இருந்தா எங்களுக்கெல்லாம் பெருமையில்லையாண்ணா” ஆனந்தி அண்ணாவிடம் கேட்டாள்.

“அதுக்காக உங்களையெல்லாம் கஸ்டப்படுத்தி நான் மட்டும் படிக்கோணுமா சொல்லுங்க? என் எதிர்காலமே நீங்கதானம்மா.” என்றான் எழில்.

“சரி நாங்க கஸ்டப்படாம நீ படிக்க ஒரு வழியிருக்கு மகன் அப்பாவின் எட்டுச்செலவில் எனது ஒன்றுவிட்ட அண்ணர் கதிரேசுவை உனக்கு காட்டினேனே ஞாபகம் இருக்கா. அவர் உன் படிப்புச் செலவை பொறுப்பெடுக்கிறாராம். உன்னை படிக்கட்டாம் என்று நேற்று வந்து சொல்லிப் போட்டு போறார்”. இது கமலம்.

“அப்படியானால் தங்கைகளுடைய படிப்புச் செலவு, குடும்பச் செலவு இவைகளுக்கு எங்கே போவீங்க? இல்ல இவைகளையும் அவரே பொறுப்பெடுப்பாரா” எழில் எதிர் கேள்வி கேட்டான். “அப்படி நாம் கேட்பது முறையா மகன்?” சங்கடப்பட்டாள் கமலம்.

“அம்மா இப்ப புரியுதா? யாரிடமும் கை நீட்டக் கூடாதென்ற அப்பாவின் கொள்கையை நாம் மாற்றலாமா? எனக்களிக்கப்படும் புலமைப் பணத்துக்குள்ளேயே என் படிப்புச் செலவை என்னால் கட்டுப்படுத்த முடியும்.

குடும்பச் செலவு, தங்கைகளின் படிப்புச் செலவை உத்தேசித்துத்தான் இப்படியான ஒரு முடிவுக்கு வந்த நான்” எழில் விளக்கினான்.

“ஐயோ! அண்ணா, அதுக்காக உங்க படிப்பை கெடுக்கலாமா?” ஆதங்கப்பட்டாள் அருந்ததி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"யூனிவேசிற்றிக்குப் போகாமலே படிப்பைத் தொடரமுடியுமம்மா. நீங்க கவலைப்படாதீங்க துணைவேந்தரின் உதவியோட என்னால பரீட்சை எழுத முடியும். என்ன அடிக்கடி அங்கு போய் வரவேண்டும் அவ்வளவுதான். இல்லையென்றாலும் வெளிவாரியிலாவது பி.எஸ்.சியை நான் முடிப்பன். பயப்படாதீங்க" எழில் தேற்றினான்.

"என்னவோப்பா, உன்னோடு பேசி வெல்ல முடியாது. உன் தந்தையைப் போலவே நீயும் இருக்கிறாய். தொழிலும் செய்திட்டு படிக்கிறதென்பது எவ்வளவு கஸ்டம்" என்றாள் கமலம்.


"அதைப்பார்த்தா எப்படியம்மா முன்னேற முடியும்? எதிர் நீச்சல் போட்டால் தான் வெற்றியடைய முடியும். எல்லாவற்றையும் கவனிக்க நான் இங்கே இருப்பது மிக மிக அவசியம்" என்றான்.

"அதுக்காக எல்லாப் பொறுப்புக்களையும் நீங்களே சுமக்கப் போறீங்களா" இது தங்கைகள்.

"இது தற்காலிக கஸ்டம் தான் தங்கச்சி நீங்க படித்து உத்தியோகம் எடுத்தீங்கண்ணா கஸ்டம் பஞ்சாப் பறந்திடும்". என்று எழில் சிரித்தான். பார்த்துக் கொண்டிருந்த கமலத்தின் பெற்றமனம் பித்தானது.

"எதற்கும் இன்னொரு தடைவை யோசித்துப்பார் மகனே இப்படியொரு பிள்ளையைப் பெற என்ன தவம் செய்தேனோ இறைவா நீதான் என் பிள்ளையைக் காப்பாற்ற வேண்டும். சரி, எழும்புங்க எல்லாரும். நான் சாப்பிட்டுட்டு வாறன்" என்ற கமலம் சாப்பிட ஆரம்பித்தாள். அருந்ததியும், ஆனந்தியும் குசினியை ஒதுங்க வைத்தனர் மன நிம்மதியோடு எழில் எழுந்து மண்டபத்துள் சென்றான்.

(யாவும் கற்பனை)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# காரைதீவு பிரதேச சடங்குகளும் மரபுகளும்

உலக நாடுகளுக்கிடையேயும், பிரதேசங்களுக்கிடையேயும் சமூகப் பழக்க வழக்கங்களும், சடங்கு மரபுகளும் வேறுபட்டவையாகவே காணப்படுகின்றன. அதே போன்று இனங்களுக்கிடையே காணப்படுகின்ற வழக்காறுகளும், நடைமுறைகளும் வேறுபட்டு திரிவுபட்டதாகவே உள்ளன. மேலும், போக்குவரத்து தொடர்பு காரணமாகவும், கல்வி ஏற்றத்தாழ்வு காரணமாகவும், கிராமத்திற்கு கிராமம் சற்று வித்தியாசமான சடங்கு மரபுகள் பின்பற்றப்படுகின்றன. அந்த வகையில் எமது காரைதீவு பிரதேச பழக்க வழக்கங்களும், சடங்கு முறைகளும் அமைந்துள்ளன. அதிலும், இந்து, கிறிஸ்தவ, இஸ்லாமிய சம்பிரதாயங்கள் ஒன்றுக்கொன்று தொடர்புடையதாக இருந்தாலும், சமய அடிப்படையில் சிறிது திரிவுபட்டதாகவே பின்பற்றப்படுகின்றன. இந்தக்கட்டுரையின் நோக்கம் குறிப்பாக காரைதீவுப் பிரதேச தமிழ் மக்களுடைய சடங்கு மரபுகளைக் கோடி காட்டுவதாகவே அமையும். சடங்குகள், விழாக்கள், கிரியைகள் என்பன எவ்வாறு காரைதீவில் மக்களின் வாழ்க்கை யோடு பின்னிப்பிணைந்துள்ளன என்பதைத் தெளிவுபடுத்த முனைவதே இக்கட்டுரையின் அடிப்படையாகும். பிறப்பு, தாலாட்டு, திருமணம், பூப்பு நீராட்டு, இறப்பு ஆகியவை மேற்படி சம்பிரதாய நடைமுறைகளுள் முக்கியமானவை. அவை பற்றிப் பார்க்கலாம்.

## பிறப்பு

உயிரினங்களின் பிறப்பு உலக விரிவாக்கத்திற்கு மட்டுமல்ல அழிவுகளுக்கும், ஆய்வுகளுக்கும், கண்டு பிடிப்புக்களுக்கும் உதவி புரியவல்லன. அந்த வகையில் பிறப்பு என்பது மனித வரலாற்றில் முக்கியத்துவம் பெறுகின்றது. அந்தப் பிறப்புக்குரிய விழாக்கள் கொண்டாடப்படுகின்றன. காரைதீவைப் பொறுத்த வரையும் அது விதிவிலக்கல்ல. திருமண பந்தத்தின் அடையாளமாக உறவைப் பெருக்கும் இரத்த பந்தமாக பிறப்பு அமைகின்றது. ஒரு பெண்ணுக்கு பிள்ளை உருவாகி விட்டதை அறிந்ததன் பின்னர் அந்த பெண்ணின் மாமி (கணவனின் தாய்) முதலில் கொழுக்கட்டை, பலகாரம் செய்து மருமகளை வாழ்த்தி, மகிழ்ந்ததன் பிற்பாடு ஏனைய உறவினர்களும், சொந்தங்களும் கொழுக்கட்டை, பலகாரங்களைச் செய்து, கொடுத்து மகிழ்வர். முன்பு பிள்ளை உருவாகி பிறக்கும் வரைக்கும் பிள்ளைத்தாச்சியைப் பேண ஊரிலுள்ள நாட்டு மருத்துவச்சி அடிக்கடி வந்து பார்த்து பரிகாரம் செய்வார். தற்போது அரசாங்க உத்தியோகத்தரான குடும்ப நலமாது அவ்வேலையைச் செய்து வருகின்றார். வயிறு நொந்தவுடன் மருத்துவச்சியை அழைத்து வந்து மருத்துவம் வீட்டில் பார்ப்பார். ஆயின் இப்போது வைத்தியசாலைக்கு எடுத்துச்செல்வர். முன்னர் பிள்ளையின் தலை முதலில் வெளிவந்ததும் "பிள்ளையின் சிரசு" என வீட்டுக்குள் சத்தம் கேட்டதும், மணிக்கூடு இல்லாத அக்காலத்தில் வாசலில் நிற்கும் 'குலைபோடாத வாழைக்கன்றை' நடுப்பகுதியால் வெட்டி அதன் குருத்து வளரும் அளவைக் கொண்டு நேரம் கணிப்பர்.

பிறந்தது ஆணா, பெண்ணா என்பதை அறிந்த பின்பு ஆண் என்றால் 'பாலை உலக்கையை' எடுத்து வாசலில் (வீட்டு) நின்று வீட்டின் பின் பக்கம் (கோடி) விழத்தக்கதாக கூரைக்கு மேலால் எறிவர். பெண்ணென்றால் 'வாருகல்' (ஈர்க்குக்கட்டு) எடுத்து அதே மாதிரி எறியப்படும். ஆயினும் தற்போது இவை பின்பற்றப்படுவ தில்லை. பிள்ளை பிறந்து 30ஆம் நாளில் முதலாவது தலைமயிர் வழிக்கும் நிகழ்வு நடைபெறும். இந்நிகழ்வு வீட்டிலோ அல்லது கோயில் தலத்திலோ நடைபெறும். முன்னர் அன்றே இருபால் குழந்தைகளுக்கும் காது குத்தி ஆணுக்கு 'மின்னியும்', பெண்ணுக்கு 'சிறுதோடும்' அணிவிப்பர். இப்பொழுது பெண்களுக்கு மட்டும் வளயத்தோடு அணிவிப்பர். இதேநாளில் "மருங்கை" எனப்படும் உறவுகள் கூடி உண்டு மகிழ்ந்து பரிசளிக்கும் மகிழ்வு விழாவும் நடைபெறுவதுடன், பிள்ளையைத் தொட்டிலில் கிடத்தும் நிகழ்வும் இடம் பெறும். இவற்றின் முன்னால் 12ஆம் நாளில் தாய் மாமனால் 05 நிறங்களில் நூல்கள் எடுத்து முறுக்கி 'முறுக்கு நூல்' போடும் நிகழ்வும் இடம்பெறும். நூல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறுக்கும் போது அரசிப்பொரியும், தேங்காய்க் கட்டியும் சப்பப்படும். அக்காலத்தில் பெண்ணுக்கு 'சாணக்கூறை" போடும் வழக்கமும் இருந்தது. இதுமுறை மச்சான்மாரால் நிகழ்த்தப்படும். குழந்தை வளர்ப்பில் "தாலாட்டுதல்" மிக முக்கியமான தொன்று. இதில் தாயின் பங்களிப்பே முழுவதாகும். இசையோடு கூடிய இன்பமான இரக்கமான தமிழ் மொழி இணைந்து மெல்லெனப் பாயும். உறவு முறைச் சொற்களின் மூலம் "இன்னாரெல்லாம் உனக்கு உதவுவார்கள்" என்று தாலாட்டும் போது அதை இரசித்த படி குழந்தை உறங்கும் "ஆச்சி அடித்தாளோ ஆமணக்கந்தண்டாலே" என்ற வரியில் அடிப்பது கூட மூலிகைத்தண்டுதான், கருணை, அன்பு, உறவு, நல்லிணக்கம் போன்ற இசைவாக்கத்தமிழை தன்பாலோடு சோத்து ஊட்டுபவள் தாய்தான். இதனைப் பெறும் குழந்தை வளர்ந்த பின் அந்த அந்த உணர்வுகளுடன் வாழ வழி சமைக்கப்படுகிறது. தொட்டிலில் போடும் அன்றே பெயர் சூட்டும் நிகழ்வும் சில இடங்களில் இடம்பெறும். இதன்பின்னர் குழந்தைக்கு பல் முளைக்கும் பருவத்தில் 'பல்லுக் கொழுக்கட்டை சொரிதல்' நிகழ்வும் நடைபெறும். குறித்த நன்நாளில் குழந்தையை நீராட்டி புத்தாடை அணிவித்து துப்பரவான வெண்துணியை தலையில் முக்காடு இடுவர். அடுத்து கொழுக்கட்டைப் பெட்டியைத் தூக்கி மென்மையாக குழந்தையின் தலையில் சொரிவர். கொழுக்கட்டையில் ஒன்றை எடுத்து குழந்தை கடித்ததன் பிறகு ஏனையோருக்கும் கொடுத்து பெற்றதாயும் உண்பது மரபாகும்.

மேலும் மிகப்பழைய காலத்தில் காரைதீவில் ஆண்கள் வளர்ந்து வாலிபனாக திருமணம் செய்யும் வரைக்கும் தலைமுடி வெட்டுவதோ, முகமயிர் வழிப்பதோ நடைமுறையில் இருக்கவில்லை. இவ்வாறு பிறப்பு சம்பந்தமான விழாக்களும், சடங்குகளும் அன்றும் இன்றும் நடைபெற்று வருகின்றன.

## பூப்பூ நீராட்டு விழா

பெண்பிள்ளைகள் பருவமெய்தியதும் நடாத்தப்படும் பூப்பூ நீராட்டு விழாச் சடங்கினை எடுத்துப் பார்ப்போமானால்; தமிழர் சமுதாயத்தில் இந்நிகழ்வு பண்டுதொட்டு இடம் பெற்று வருவதைக் காணலாம். ஏனைய சமூகத்தில் இந்நிகழ்வை மறைவாக நிகழ்த்தும் போது தமிழ்ச் சமூகம் வெளிப்படையாகவும், கோலாகலமாகவும் கொண்டாடுவர். ஒரு பெண் வயசுக்கு வரும் சம்பவத்தை முதன்முதலில் சொந்தக்காரர் பார்ப்பதே நல்லதாகும். அவ்வாறின்றி வேறொருவர் பார்க்கும் இடத்தில் மேற்படி பெண்ணுக்கு தண்ணீர் வார்க்கும் போது நிலமண் ஒருபிடி எடுத்து அவரது தலையில் வைத்து நீரை வார்க்கும் வழக்கமும் இருந்து வந்துள்ளது.

பருவமெய்திய சம்பவத்தை முதன்முதலில் மாமி, மச்சாள்மாருக்குச் சொல்லி பின்னர் ஏனையோருக்கும் அறிவிப்பர். அன்று முன்னிரவு நட்சத்திரம் பார்க்க, முன்பு, நிறைமுட்டி வைத்து சாம்பிராணிப் புகையை ஏற்படுத்துவர். அடுத்து மறைப்புக்கட்டி ஈர்க்குத் தடியைக் கீழே கிடத்தி அதன் மேல் பருவப்பெண்ணை நிற்கவைத்து நீர்வார்ப்பர். அதற்கு முன் பெண்ணின் மச்சான் தென்னம்பாளையை வெட்டிக் கொண்டுவர அது நிறைமுட்டியில் வைக்கப்படும். இவ்வேளை கிழக்கு வாசல்முன் கூரையில் பாக்கு, வெற்றிலை, பழமும் நிறைமுட்டியும் கூரைமுடி மேல் பலகையில் வைப்பர். கூரைமுடி பலவர்ணச் சேலைகளால் இருபக்கமும் தொங்கவிடப்படும். நீர்வார்த்து முடிந்ததும் பருவப்பெண் கூரை முடியின் கீழ் போடப்பட்ட பலகையில் நிறுத்தப்படுவார். அவரைச் சுற்றி நான்கு பக்கமும் சீலையால் மறைக்கப்படும். அதைத்தொடர்ந்து குரவை ஒலியும், வெடியோசையும், சப்திக்க மாமி, மச்சாள்மார் ஆராத்தி எடுப்பர். கூடவே தோழிப் பெண்ணாக மச்சாளும் இருப்பர். மச்சாள் இல்லாதவிடத்து குழவியை அருகே வைப்பர். பின்பு கண்ணாடியைக் காட்டியவாறு பெண்ணை அவர் அறைக்கு அழைத்துச் செல்வர். தொடர்ந்து பிள்ளையின் முகம் முதல் எல்லா இடங்களிலும் 'அழகு' கருதி தேங்காய் எண்ணெயில் அரைத்த மஞ்சளைப் பூசுவர். சாம்பிராணிப்புகையில் தலைமயிரை உலர்த்தி மூன்று மஞ்சள் உருண்டைகளை விழுங்கக் கொடுப்பர். பின்னர் நல்லெண்ணெய், வேப்பெண்ணெய் குடிக்கக்கொடுக்கப்படும். அத்துடன், சிவப்பரிசி, கொளியல் அரிசி இடித்து வண்டுப்பிட்டு அவித்து சாப்பிட வழங்குவர். மீதிப்பிட்டை நல்லெண்ணெயில் ஒத்தணம் கொடுத்தபின்பு அதனையும் சாப்பிடக் கொடுப்பர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன் பிற்பாடு அடுத்தநாள் காலை வெறும் வயிற்றில் வேப்பெண்ணெய் அல்லது நல்லெண்ணெய் குடிக்க கொடுப்பதோடு, மஞ்சளும் பூசுவர். இதே நேரம் மச்சான் வெட்டி வந்த பாளையிலுள்ள 'குரும்பட்டிகளை' எண்ணி ஒற்றப்பட வந்தால் ஆண்பிள்ளையும், இரட்டைப்பட வந்தால் பெண்பிள்ளையும் அப்பெண்ணுக்கு முதலில் பிறக்கும் எனக்கூறுவது ஐதீகம். அறைவாசலில் வேப்பிலை, இரும்புப் பொருட்கள் காவலுக்கு வைப்பதும் வழக்கமாகும்.

நான்காம் நாள் நல்லெண்ணெயில் பொரித்த முட்டையும், பிஞ்சி அவரையும் சோற்றுடன் உண்ணக்கொடுப்பர். அதைத்தொடர்ந்து ஐயரிடம் சென்று 'ருது சாதகம்' பார்த்து மறுதண்ணீர் வார்க்கும் நாளும் குறித்து வருவர். பெரும்பாலும் மறுதண்ணீர் ஏழாம் நாளில் வார்ப்பது வழமையாகும். அதன் பிறகு நிறச்சேலை அல்லது சட்டை அணியவைப்பர். ஆயின் 30ஆம் நாள் முடிய முன் அவர் அறையைவிட்டு வெளியே உலாவமுடியாது. அதற்குப் பிற்பாடே தொடக்கும் கழியும். அதற்கு முன்வெளியிலோ, சாமி அறைக்கோ, கிணற்றடிக்கோ செல்ல முடியாது. மங்கள நிகழ்வாக முதலில் மாமி ஆள்கூட்டி (சேர்த்து) பலகாரப் பட்சணங்களுடன் பருவப்பெண் வீட்டுக்கு வந்து ஆள் கூட்டிவரும் செயலை ஆரம்பித்து வைப்பார். அதனைத் தொடர்ந்து ஏனையோரும் ஆள்கூட்டிவருவர். 30ஆம் அல்லது 60ஆம் நாட்களிலோ பூப்பு நீராட்டு விழாவினை வைக்கலாம். இருப்பினும் தற்போது பொருளாதார வசதி கருதி ஒரு வருடத்துள் வைப்பர். மஞ்சள் நீராட்டு விழாவை 'புட்டுக்களி' என்றும் கூறுவர். இவையே பூப்பு நீராட்டு விழாச் சடங்காகுகளாகும்.

## திருமணச் சடங்கு

பூப்பு நீராட்டு விழாவினைத் தொடர்ந்து பருவமடைந்த ஒரு பெண்ணுக்கு அடுத்து நடைபெறவிருப்பது திருமணச் சடங்காகும். வாலிப வயதடைந்த ஆணும், பெண்ணும் இருமனம் கலந்து ஒருமனமாக வாழ்வியலை ஆரம்பிக்கின்ற நன்நாள் திருமண நாளாகும். திருமணம் தொடங்கி வாழ்கின்ற இறுதி வரைக்கும் இல்லறம் நல்லறமாக அமைய, திருமணம் பேசியதும் மணமகன், மணமகள் ஜாதகப்பொருத்தம் (ஜோடிப்பொருத்தம்) பார்ப்பது திருமண நிகழ்வின் ஆரம்பக் கட்டமாகும். திருமணம் பேசுமுன் மணமகன், மணமகள் குணநலன் பெரியோரால் கலந்தாலோசிக்கப்படும்.

ஜோதிடர் இருவரது ஜாதகங்களையும் கணித்து, 14 பொருத்தங்களுள் அரைவாசி பொருந்தினால் திருமணத்திற்கு சம்மதம் அளிப்பார். ஆயினும் அந்த 07 பொருத்தங்களுள் இரட்சிப்பொருத்தம், யோனிப்பொருத்தம், தாலிப்பொருத்தம் உள்ளடக்கப்பட்டதாகும். ஜோதிடத்தை நம்பாதவர்களும், காதலர்களும் சில சமயம் ஜாதகப் பொருத்தத்தை புறக்கணிப்பதுமுண்டு.

பொருத்தம் பொருந்தியதும் சீதனப்பேச்சு வார்த்தை நடைபெறும். அதிலும் இணக்கம் ஏற்பட்டதும் நல்லநாள் பார்த்து பெண் வீட்டார் மாப்பிள்ளை வீட்டிற்கு மஞ்சள், குங்குமம், வெற்றிலை, பாக்கு, பழம், தீன்பண்டங்களுடன் செல்வர். அங்கு திருமணநாளும் நிட்சயிக்கப்படும். மரியாதை நிமித்தம் மணமகன் வீட்டாரும், மணமகள் வீட்டிற்குச் செல்வர். தற்காலத்தில் இவற்றிற்கு முன்னர் மணமகன் மணமகளைப் பார்வையிடுவதற்கு சந்தர்ப்பம் அளிக்கப்படுகின்றது.

இதைத்தொடர்ந்து, மாப்பிள்ளை வீட்டிற்கு மாப்பிள்ளை கொழுக்கட்டையோடு ஏனைய கொழுக்கட்டைகளும் கொண்டு செல்லப்படும். மாப்பிள்ளைக் கொழுக்கட்டை பெரிதாகவும், கூடிய சுவையுடையதாகவும் தயாரிக்கப்படும். அக்காலத்தில் மாப்பிள்ளைக் கொழுக்கட்டையுள் மோதிரம் வைக்கும் வழக்கமும் இருந்தது. இவ்வாறு இனிப்புச்சுவையுடைய கொழுக்கட்டை கொண்டு செல்வது திருமணத்தால் வாழ்வு இனிமையானதாக அமைய வேண்டும் என்பதை எடுத்துக் காட்டுவதற்காக கொழுக்கட்டை கொண்டு சென்றதன் பிற்பாடு தாலிக்கு பொன்னுருக்கும் சம்பவம் இடம்பெறும். பஞ்சாங்கம் பார்த்து நாள் நிட்சயிக்கப் படும். மாப்பிள்ளை வீட்டில் பிள்ளையார் பூசையுடன் பொன்னுருக்கும் நிகழ்வு ஆரம்ப மாகும். பெண் வீட்டாரும் சுமங்கலிப் பெண்களும் சூழ்ந்திருக்க, பொற் கொல்லனால் பொன்னுருக்கல் நடைபெறும். பொன்னுருக்கலில் பெண், மாப்பிள்ளை வீட்டார் சிறிது பொன்னிடும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழக்கமும் உண்டு. பொன்னுருக்கி முடிந்ததும் ஆச்சாரியார் மங்கள வார்த்தைகள் கூறி சூழவிருக்கும் பெரியோர் களுக்கு அதனைக்காட்ட அவர்கள் தட்சணையிட்டு வாழ்த்துவர். பின்பு அது 'தாலி' வார்க்க எடுக்கப்படும். தாலி 'சிவலிங்கம்' 'பிள்ளையார்' அல்லது 'லெட்சுமி' திருவுருவம் காட்டுவதாக அமையப்பெறும். பெரும்பாலும் 'பிள்ளையார் திருவுருவம்' கொண்டமையப் பெறுவதால் அதற்கு பிள்ளையார் என்ற பெயரும் உண்டு.

பொன்னுருக்கல் நிகழ்வினைத் தொடர்ந்து 'கூறைச்சேலை' வாங்கும் நிகழ்வு இடம்பெறும். பெண்வீட்டார் துணையோடு மணப்பெண்ணுக்குரிய முதலாம், மூன்றாம் கூறைச்சேலைகள் மாப்பிள்ளை வீட்டாரால் வாங்கப்படும். அத்தோடு மணமகனுக்கான உடைகளும் வாங்கப்படும். முதலாம் கூறை கல்யாண நாள் அன்று அணியப்படும். மூன்றாம் கூறை மூன்றாம் நாள் கொண்டு செல்லப்பட்டு மணமகளுக்கு அணிவிக்கப்படும்.

பின்னர் திருமணநாளுக்கு மூன்று நாட்களுக்கு முன்னர் கல்யாணத்திற்கான பந்தல்கால் 'முகூர்த்தக்கால்' இரு வீடுகளிலும் நாளுக்கு நாட்டப்பட்டும். அதனைத் தொடர்ந்து சுபவேளை யில் தாச்சியை அடுப்பில் வைத்து கல்யாணத்திற்குரிய இனிப்பு பண்டங்கள் செய்யப்படும்.

இவற்றின் பின்னால் திருமணநாளுக்கு முதல் நாளில் முகவாசலை அலங்கரிப்பதற்காக பெண், மாப்பிள்ளை இரு வீடுகளிலும் கூரைமுடி கட்டுதல் இடம்பெறும். திருமணத்திற்கு முன்பு நடைபெறும் சடங்குகள் இவ்வாறு முடிவடைந்ததும். திருமண நாள் கிரியைகள் இடம்பெறும். இக்கிரியைகள் வீடுகளில் பெரியோர்களாலும், ஆலயங்களில் ஆலயக்குருக்களாலும் நடத்தி வைக்கப்படுகின்றன. முன்பு பெரும்பாலும் வீடுகளிலே திருமணங்கள் நடைபெற்றன.

திருமணநாள் ஆரம்ப நிகழ்வாக 'அரப்பு' வைத்தல் நடைபெறும். மணமகளின் சகோதரர் மணமகனுக்கும் மணமகனின் சகோதரி மணமகளுக்கும் காலையில் சென்று அரப்புக்கலவையை தலையில் வைத்து நீர் வார்த்ததும் நீராட்டுதல் வைபவம் முடிவுறும். மாப்பிள்ளை அழைப்புக்காக உடை அணிந்து மாப்பிள்ளை தயாரானதும் வீட்டு சுவாமி அறையுள் சென்று வணங்கி பெற்றோர், பெரியோரை வணங்கி ஆசி பெறப்படும். அதன் பின்பு மாப்பிள்ளை அழைப்புக்கு வந்த மைத்துனர், உறவுகளோடு ஆலய தரிசனம் செய்து வீட்டுக்கு மீள்வர். பிற்பாடு மணமகனும் உடைமாற்றி தலைப்பாகை அணிய மைத்துனரும் தலைப்பாகை அணிவார். மைத்துனர் வெள்ளைத் துணியால் மூடிய குடையினுள் மணமகனை அழைத்து முன்னே செல்ல, மங்கள வாத்தியங்கள் ஒலிக்க பெற்றோர்களும், உறவுகளும் வட்டா, உடுப்புப்பெட்டி, பலகாரப் பெட்டிகளோடு பின்செல்ல ஊர்வலமாக பெண் வீட்டை அடைவர். மாப்பிள்ளை பெண் வீட்டை அடைந்ததும். மைத்துனரால் பன்னீர் தெளிக்கப்பட்டு, மாலை அணிவிக்கப்படும். திருநீறு, சந்தணம், குங்குமம் இடப்பட்டு அழைத்துச் செல்லப்படுவர். அவ்வேளை பெட்டி மாற்றுதல் சடங்கு இடம்பெறும். மணமகன் வீட்டார் கொண்டு வந்தபெட்டிகளை மணமகள் வீட்டார் இழுக்க, சிறிய இழுபறி நிலைக்குப்பின்னர் பெட்டிகள் பெண் வீட்டாரால் கைப்பற்றப்படும். அடுத்து அங்குரார்ப்பணம் எனும் முளைப்பாலிகை இடுதல் இடம்பெறும். இது சந்ததியை விருத்தி பண்ணும் பொருட்டு மணமகன், மணமகள் இருவருக்கும் நடைபெறும். பின்னர் இரட்சாபந்தனம் "காப்புக்கட்டல்" இடம்பெறும். இதுவும் இருவருக்கும் தனித்தனியாக கட்டப்படும். எடுத்த கருமம் இடையூறு இன்றி முடிவுறவும், பாவங்களை நீக்கவும், தர்மசிந்தனையில் ஈடுபடவுமே 'இரட்சாபந்தனம்' செய்யப்படுகின்றது.

### கன்னிகா தானம்

அடுத்து இடம்பெறுவது 'கன்னிகா தானம்' என்னும் நிகழ்வாகும். தண்ணீர்த்தாரையோடு மகளை தந்தை கொடுப்பதால் இதற்கு 'தாரதத்தம்' என்ற பெயரும் உண்டு. முக்காடிட்டு வந்து நிற்கும் மகளின் இருகைகளையும் முக்காடிட்ட தந்தை தாங்கி மணப்பெண்ணின் இடக்கையை மணமகனின் வலக்கையில் கொடுத்து 'மகளைத்தாரை' வார்த்துக் கொடுப்பார். இதையடுத்து, மணமக்களை சுவாமி அறையினுள் அழைத்து வந்து சுவாமி முன்னிலையில் 'தாலி' கட்டப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாலிகட்டும் நிகழ்வில் ஒரு தட்டில் மணமகனின் பெற்றோர் வெற்றிலை, பாக்கு, மஞ்சள், குங்குமம், தேசிக்காயோடு, கூறை, மாங்கல்யம், மெட்டி என்பவற்றை சுவாமி படத்தின் முன்வைத்தது வணங்குவர். சிவாச்சாரியார், பெரியோர் பூசித்து வணங்கியதும் மணமக்களும் வணங்க, மாங்கல்யம் ஏந்தியதட்டு அவையோர் ஆசிர்வாதத்திற்காக அனுப்பப்படும். மாங்கல்யத்தட்டு வந்ததும் மணமகளை மணமகனின் இடப்பக்கமாக அமர்த்துவர். மணமகளிடம் கூறைச்சேலை கொடுக்கப்பட்டதும், அதை அணிந்து வந்தபின் மங்கள ஒலி முழங்க, சிவாச்சாரியார் ஆசிர்வதித்து மாங்கல்யத்தை மணமகனிடம் கொடுக்க, மணமகன் எழுந்து வலப்பக்கமாக வந்து, தாலியை மணமகளின் கழுத்தில் கட்டுவார். இதனை "மங்களநாண் பூட்டுதல்" என்றும் கூறுவர். முற்காலத்தில் மஞ்சள் கயிற்றிலே தாலியைக் கோர்த்து கட்டப்படும் வழக்கம் இருந்து வந்தது. தமிழ் நாட்டில் சில இடங்களில் இப்பொழுதும் இது இடம்பெறுகின்றது.

இதன்பின்னர் உடலாலும், உள்ளத்தாலும் இருவரும் ஒருவர் என்பதை விளக்குமுகமாக மாலை மாற்றுதல் இடம்பெறும். பெண்ணின் கழுத்தில் இருக்கும் மாலையை முதலில் ஆணுக்கும், ஆண் கழுத்தில் உள்ள மாலை பெண்ணுக்குமாக மூன்று முறை மாலை மாற்றப்படும். அடுத்து வாழ்க்கை இனிதாக அமைய இருவரும் மாறிமாறி பால், பழம் ஊட்டும் நிகழ்ச்சி நடக்கும். அதற்கு அடுத்து மங்கள தரிசனமாக "கா" எனப்படும் கன்னிப்பசுக்கன்று காண்பிப்பதும், அதற்குப் பதிலான 'திருவிளக்கு' தரிசனமும் நடைபெறுவதும் மரபாக இருந்துள்ளது. தொடர்ந்து கணவனை தனக்குப் பிரியமானவனாக இருக்கச் செய்வதற்கான 'ஏழடி நடத்தல்' இடம்பெறும்.

மற்றும் 'அம்மி மிதித்தல்', 'அருந்தி பார்த்தல்' ஆசிய செயல்களும் நடைபெறும். கணவன் அம்மி மீது மனைவியின் வலக்காலைத் தூக்கிவைத்து 'மெட்டியை' பெருவிரலுக்கு பக்க விரலில் போடுவது அம்மி மிதித்தல் இடம் பெறும் நிகழ்வாகும். இதில் மனைவியின் உறுதியான கற்பு நெறியும் கணவன் மேல் உள்ள நீங்காத பாசமும் உணர்த்தப்படுகிறது. கற்பின் நெறியில் சிறந்தவளான 'அருந்ததி' எனும் 'முனிபத்தினி' வானில் நட்சத்திரமாக இன்றும் காட்சியளிக் கின்றாள் என்ற நம்பிக்கையில் அருந்ததி நட்சத்திரம் இருக்கும் திசையைப் பார்த்து வணக்கம் செய்யும் மரபாகும் இந்நிகழ்வு.

திருமணத்தன்று விருந்துபசாரம் நடைபெறும் ஆரம்ப காலங்களில் திருமணத்திற்கு வருகைதந்த மணமகன் சொந்தங்களையும், மற்றவர்களையும் பந்தியாக அமரவைத்து 'வாழையிலை', 'தாமரை' இலையில் உணவு பரிமாறப்படும். மணமகன், மணமகளுக்கு வட்டியில் உணவிட்டு இருவரையும் மாறிமாறி ஊட்ட வைப்பர். தற்போது காலத்திற்கேற்ற வகையில் கதிரைகளில் அமர்த்தி 'பிளேட்டுகளில்' வழங்கப்படுகின்றது.

இவைகளின் பின்னால் மூன்றாம் நாள் மணமகள் வீட்டில் பொங்கல் இடப்படும். மைத்துனரோடு மணமகன் பொங்கல் பொருட்களை எடுத்துக் கொண்டு தன் தாய்வீடு செல்லும் நிகழ்வு இடம் பெறும். அடுத்த கட்டமாகவும் திருமண விழாவின் இறுதிக்கட்டமாகவும் 'கால்மாறுதல்' இடம் பெறும். பெண்வீட்டார் பலகாரப் பெட்டிகளுடன் மணமக்களையும், உறவினர்களையும் அழைத்துக் கொண்டு மணமகனின் தாய் வீட்டுக்குச் செல்லும் நிகழ்வாகும் இது. அங்கும் விருந்துப சாரம் நடக்கும். மணமக்கள் சில நாட்கள் அங்கு தங்கிநிற்க, ஏனையயோர் அவரவர் வீடு திரும்புவர். தங்கி நிற்கும் காலத்தில் மணமகன் உறவினர் வீடுகளுக்கு மணமக்கள் கால்மாறிச் செல்வர். மணமகள் வீடு மீண்டதும் மணமகள் உறவினர் வீடுகளுக்கும் கால்மாறிச் செல்வர். இவ்வாறு நீண்ட நிகழ்வுகளைக் கொண்டதாக திருமணச் சடங்குகள் அமையும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இறப்பு

இறுதியாக ஒரு மனிதனின் வாழ்க்கை பிறப்பில் தொடங்கி இறப்பில் முடிவடைவதைப் போல இக்கட்டுரையும் பிறப்புச்சடங்கு தொடங்கி இறப்புச் சடங்குகளின் முடிவில் முடிய இருப்பது நோக்கற்பாலது.

உடலில் இருந்து உயிர் பிரிந்த பின்பு செய்யப்படும் கிரியை அபரக்கிரியை எனப்படும். உயிரற்ற உடலை சுத்தம் செய்து, உடை மாற்றுவர். சாமூலையான தென்கிழக்குத் திசையில் தலை இருக்கத்தக்கதாக உடலை கட்டிலில் படுக்க வைப்பர். கைகளை நீட்டி கூப்பி வைத்தும், கால்களின் கட்டை விரல்கள் இரண்டையும் சேர்த்தும் வெள்ளை சீலைத்துண்டுகளால் கட்டி வைப்பது வழமையாகும். தலைமாட்டில் குத்து விளக்கும் ஏற்றி வைக்கப்படும். மரண வீடுகளில் பறை ஒலிப்பதும் மரபாக இடம் பெற்றுவருகின்றது. பிணத்தைக் கொண்டு செல்வதற்கு வாழைக்குற்றி, கம்பு, வெள்ளைப்பட்டு கடதாசி கொண்டு கட்டப்படும் பாடையில் நாலுகால் பகுதிகளிலும் இளநீர் கட்டும் வழக்கமும் அப்படியே உள்ளது. தற்காலத்தில் 'பிண ஊர்திகளும்' பயன்படுத்தப்படுகின்றன.

மயானத்திற்குக் கொண்டு செல்வதற்கு முன் உடலுக்கு செய்ய வேண்டிய கிரியைகள் மரபுப்படி நடத்தப்படும். உடலின் மீது மூன்று முறை பன்னீர், தேன், நல்லெண்ணெய் என்பன தெளிக்கப்படும். அவ்வாறே தேசிக்காய், தோடம்பழம் போன்றவையும் பிளிந்து விடப்படும். பின்னர் பூவால் தொட்டு உடலின் தலையில் அரப்பு கலவை உறவினரால் வைக்கப்படும். பின்னர் அறுகு போடப்பட்ட மஞ்சள் கரைத்த நீரால் மரணித்தவரின் கால்கள் உறவினரால் கழுவப்படும். தொடர்ந்து சூடம் எரிக்கப்பட்டு, பஞ்சதோத்திரங்கள் பாடப்பட்டதும் பாடையில் உடலை பாயோடு தூக்கி வளர்த்தாட்டி மஞ்சள் நீரில் தோய்த்த சீலையால் மூடப்பட்டதும் பாடை தூக்கப்படும். பாடை வளவுக்கேற்றடியிலிருந்து வீதிக்குச் செல்லும் முன் நடுக்கும்ப கோளம் பொருத்தப்படும். பின் மூன்று முறை பாடையை முன் பின்னாக நகர்த்தி வீதி வழியேறும். அப்போது மூன்று முறை நெல், மஞ்சள், தேங்காய் சீவல் அடங்கிய நெற்பொரி எறிந்ததும், பாடையை மயானத்தை நோக்கி கொண்டு செல்வர். வசதிபடைத்தவர்கள் வழியில் நடைபாவாடை விரிப்பர்.

பாடை மயானம் வந்தடைந்ததும், புதை குழி வெட்டுவதற்கான இடம் காட்டப்படும். அவ்விடத்தை பாடை மூன்று முறை சுற்றி வந்ததும் புதைகுழி வெட்டப்படும். குழியினுள் சடலத்தை வைத்து நிலத்தை மூடி மேலால் மண்திட்டு அமைக்கப்படும் பின் அதன்மேல் வெற்றுப்பாடையை வைத்து அமுக்கி விடுவர். இறுதிக்கடனாக சூடம் எரிக்க வைத்தும், தாய்க்குத்தலைமகனும், தந்தைக்கு இளைய மகனுமாக இறுதிக்கடன் முடிப்பர். இறுதிக்கடன் செய்பவர் தீப்பந்தத்தை வலக்கையால் பின்நோக்கி பிடித்தவாறும் கடல் நீர் நிறைத்த மண்முட்டியை மறுபுற தோளில் வைத்து இடக்கையால் பிடித்தவாறும் மும்முறை புதைகுழியை சுற்றி வருவார். சுற்றிவரும் ஒவ்வொரு தடவையும் முட்டி கத்தியால் கொத்தப்பட்டு நீர் சிந்தவைக்கப்படும். மூன்றாம் முறையோடு தீப்பந்தத்தையும், நீர் முட்டியையும் கீழே போட்டுவிட்டு திரும்பிப் பாராமல் கால் கழுவ கடமை முடித்தவர் கடலுக்கு அழைத்துச் செல்லப்படுவார். மரணித்தவர் ஆத்மா சாந்தியடைய கற்பூரம், சந்தணக்குச்சி எரித்து, பஞ்சதோத்திரம் பாடப்படும். உடலை பூமாதேவிக்கு ஒப்புக்கொடுத்தன் பின்னர் அவ்விடத்தை விட்டு உறவினர், உற்றார் அகல்வர்.

மயானத்திலிருந்து வீடு வருவதற்குள் மரணவீடு சுத்தப்படுத்தப்பட்டு விடும். கடப்படியில் நீர் நிறைத்து வைப்பார்கள். சுடலையிலிருந்து நேரடியாக வருபவர்கள் தலையில் நீர் தெளித்த பிற்பாடு வளவினுள் வருவர். வருபவர்கள் பழைய விடயங்களை மீட்டு ஆறுதல் கூறிச் செல்வர். உடல் கிடத்தப்பட்ட இடத்திற்கருகில் மண்வெட்டி, தண்ணீர்ச் செம்பு, குத்துவிளக்கு, இறந்தவர் பாவித்த பொருட்கள் என்பன வைத்து, இரவு வேளையில் வைகுந்தமாலை பாடுவர். கடப்படியில் இருபக்கமும் சமனாக வெட்டப்பட்ட இளநீரின் மேல் பக்கத்தில் வெற்றிலை, பாக்கு, பழம், திரிதீபம் என்பன வைத்து முதல் நாள் மாலைப்பொழுதில் வைப்பர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

08ஆம் நாளில் எட்டுச்செலவு இடம் பெறும். மயண்டபட்ட மாலைப்பொழுதில் இறந்தவர் விரும்பி உண்ணும் உணவு வகைகளை தயாரித்து அவ்வேளை பேருணவுப்படையல் படைக்கப்படும். ஈசான மூலையில் பல்லி அடித்ததும் பேருணவுப்படையல் கூடியிருப்பபோருக்கு பகிர்ந்தளிக்கப்படும். மரணித்த ஆத்மா வந்து படையலை அன்று ஏற்றுக்கொள்ளும் என்பது ஐதீகம். எட்டுவரை எண்ணெயில் பொரிக்கும் உணவு வகைகள் தயாரிப்பதில்லை.

ஏரிக்கும் உடலைப் பொருத்தவரை அரப்பு வைத்து கால் கழுவியதன் பிற்பாடு அரிசி மா, மஞ்சள், அபிஷேகக்கூடு, பால், தயிர், பழவகை, இளநீர் கொண்டு கிடத்தப்பட்டுக் கொண்டிருக்கும் உடல்மீது கடமை செய்பவரின் புறங்கையினால் உடலின் காலிலிருந்து சீரசுவரை அபிஷேகம் செய்யப்படும். பெற்றவரை எரிப்பதாயின் குருக்கள் மூலம் கிரியைகள் செய்யப்பட வேண்டும்.

உடலை மயானம் கொண்டு செல்லமுன் வீரை, வேம்புக்கொள்ளிகள் சிதையில் அடுக்கப்பட்டிருக்கும். உடல் மயானம் வந்ததும் சிதையைச் சுற்றி மும்முறை வலம் வந்ததும் உடலை சிதையின் மத்தியில் கிடத்தி வேம்பு நெஞ்சாண் கட்டையை மேல் வைத்து, விறகுகள் அடுக்கப்படும். பின் முட்டி உடைக்கும் நிகழ்வு நடந்ததும், தீயிடும் பாடலைப்பாடி எண்ணெய் ஊற்றி தீ மூட்டப்படும். இவ்வாறு மூட்டிய தீயால் உடல் எரிந்து சாம்பலானதும், ஐந்தாம் நாள் சாம்பல் எடுக்கும் நிகழ்வு இடம் பெறும்.

இந்நிகழ்வுக்காக தென்னம் குருத்தால் சோடிக்கப்பட்ட மாட்டு வண்டியில் நவதானியம், ரொட்டி, இளநீர், பாக்கு, பழம், வெற்றிலை, தீன்பண்டங்கள் மயானத்திற்கு கொண்டு செல்லப்படும். கிரிகையாளரால் கிரியை ஆரம்பிக்கப்படும், எரித்த இடத்தை மூன்றாகப் பிரித்து கொண்டு சென்ற படையல் பொருட்களைப் படைத்து வழிபட்டதும் கிரிகையாளரால் எரிந்த உடலின் தலை, நெஞ்சு, கால் பகுதிகளிலிருந்து சாம்பல் எடுத்து வெள்ளைத்துணியால் சுற்றப்பட்ட பாத்திரத்துள் வைக்கப்படும். மிகுதிச்சாம்பலை ஓலைப்பெட்டியில் அள்ளி கடலில் கொட்டுவர். இதனைத்தொடர்ந்து எரிக்கப்பட்ட இடத்தை கம்பால் உழவி தானியவகைகளை தூவி விதைத்து, நீர் விட்டு மீண்டும் வழிபாடு செய்யப்படும். இறுதியில் பாத்திரத்தில் இட்ட சாம்பலை எடுத்துக்கொண்டு வீடு திரும்புவர். திரும்புகையில் வழியில் நாற்சந்தியில் வைத்து இறந்தவர் பாவித்த பொருட்கள் தானமாக வழங்கிய பின் வீடு வருவர்.

பின்னர் 31ஆம் நாள் நிகழ்வில் இறந்தவர் ஞாபகமாக மதியபோசன விருந்துபசாரம் இடம் பெறும். இவ்வாறு காரைதீவில் பாரம்பரிய சடங்குகளும், விழாக்களும் மரபுவழியாக நடைபெற்று வருகின்றது. எரிக்கப்பட்டவரின் சாம்பல் அந்திரட்டிக்கிரியைகளின் பின்னால் கடலில் கரைக்கப்படும்.

இது காறும் காரைதீவில் இந்து மரபு வழியாக பிறப்புச்சடங்குகள், கிரியைகள் பற்றியும், பூப்பு நீராட்டல் சடங்குகள் சம்பிரதாயங்கள் பற்றியும், திருமணச் சடங்குகள் விழாக்கள் பற்றியும் பார்த்தோம். மேலும், மீன்பிடி, விவசாயம் பற்றிய சம்பிரதாய நடைமுறைகள் சம்பந்தமாகவும் ஓரளவு அறிந்தோம். அத்துடன் இறப்பு நிகழ்வில் இடம்பெறும் சடங்குகளையும், கிரியைகளையும் அவதானித்தோம். இக்கட்டுரை பூரணத்துவமான விடயப் பரப்பினை தரமுடியாவிடினும் இப்பகுதியில் இடம்பெறும் சம்பிரதாயப் பழக்க வழக்கங்களையும், சடங்கு மரபுகளையும் குறிப்பிடத்தக்க வகையில் எடுத்துக்காட்டியுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சித்தானைக்குட்டி சுவாமிகளினது வாழ்க்கைச் சுருக்கம்

அவதாரம் - பாரத நாட்டின் இராமநாதபுரம்

தாய் - பெயர் தெரியாது

தந்தை - பெயர் தெரியாது இராமநாதபுரத்து பொருநாளிராச்சியத்தின் சிற்றரசன்.

இளமை பெயர் - கோவிந்த சாமி.

துறவரம் பூண்டமை - பெருநாளிராச்சியத்தில் ஏற்பட்ட பயங்கரமான மரண கொள்ளை நோய் பரவுவதை கண்ணுற்று மனதில் ஏற்பட்ட மாற்றம் காரணமாக துறவறத்தினை நாடினார்

வழிகாட்டியவர்கள் - நவநாத சித்தர், பெரியானைக்குட்டி சுவாமி

- 1920ஆம் ஆண்டுக்கு முற்பகுதியில் தூத்துக்குடியிலிருந்து கொழும்புத்துறை முகத்தினை அடைந்தார்.

நடமாடிய இடங்கள் - கொழும்பு செட்டியார் தெரு, யாழ்ப்பாணம்,அநுராதபுரம், மன்னார்,திருகோணமலை,ஏறாவூர், மட்டக்களப்பு,கன்னங்கடா, களுவாஞ்சிக்குடி, பட்டிருப்பு, மண்டூர், கல்முனை, வீரமுனை, அக்கரைப்பற்று, கோளாவில், பனங்காடு, திருக்கோயில், உகந்தை, திசமகரம கதிர்காமம் முதலிய இன்னும் பல இடங்களில் நடமாடியுள்ளார்கள்.

நாளாந்த நடைஉடை - முழங்காலுக்கு மேல் வேட்டிகட்டி இருப்பார். பச்சைக்கம்பாயத்தால் போர்த்தி சிலவேளைகளில் கேலி பண்ணுவதற்குரியவராக தனது செய்கைகளையும், கோலங்களையும் மாற்றிக்கொண்டு நடமாடியவர்.

***மக்களை வழிநடத்தியதன்மை***

அருளுரைகள், அற்புதங்கள் மூலம் உள்ளன்புடன் தன்னை நாடிவரும் அன்பர்களின் மனோநிலைக்கு ஏற்ப மற்றவர்களின் துன்பதுயரங்களை தாமே ஏற்றும் அனுபவித்தும் வந்தார்.

***ஆடிய சித்துக்களிற் சில***

- கல்முனைச் சந்தியில் நின்று கதிர்காமத்தில் தீப்பிடித்த திரைச சீலையை அணைத்தவர்,
- மக்களின் கண்நோய் தீர்த்த கருணையாளர்,
- உடைந்த சாராயப்பீப்பா அடைபட்ட அதிசயம்
- பைத்தியத்தை மாற்றிய பக்குவம்,
- ஒரே நேரத்தில் இருநிலை காட்டியமை,
- இறந்த பெண் மீண்டும் உயிர் பெற்றமை,
- கதிர்காமத் திருவிழாவினை தனது உள்ளங்கையில் காண்பித்த மகான்,
- கடலின் மேலால் நடந்தமை, சாண்டோ சங்கரதாஸை இரும்பரசனாக புகழ் பூக்கச் செய்தமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*விபுலானந்தருடனான தொடர்பு*

விபுலானந்த அடிகளார் நோய் வாய்ப்பட்டிருந்த வேளை சுவாமிகள் பக்கத்தே அமர்ந்திருந்து உடபெல்லாம் வருடி நோய் இருந்த இடம் தெரியாது அகற்றியதும் சுவாமி வேடம் பூண்டாலும் நான் என்ற அகந்தை நீங்காவிட்டால் யாதும் பயனில்லை என்பதை விளக்கவே சித்தானை அடிகளாருடன் நாயைக் கட்டாதவன் என்னடா சாமி என்ற சித்தாடலை நடத்திக் காட்டப்பட்டது.

*ஜீவசமாதி வைக்கப்பட்ட இடம்-*

மட்டுமாநகரின் கண்ணாய் மிளிர்கின்ற காரேறு மூதூர் எனும் காரைதீவு 03ஆம் குறிச்சியில் சித்தானைக்குட்டி புரத்தில் ஜீவசமாதி வைக்கப்பட்டது.

*சிவபதமடைந்த நாள்* -

1951ஆம் ஆண்டு தமிழுக்கு ஆடித்திங்கள் சுவாதி நட்சத்திர தினம்.


**இ.எம்.சித்த ஆயுர்வேத வைத்தியசாலை**

**பிரதான வீதி,**
**காரைதீவு-06.**

**முற்றிலும் இயற்கையான மூலிகைகளைக் கொண்டு பரம்பரையாக தயாரிக்கப்பட்ட மருந்துகள் மூலம் குழந்தைகள் முதல் பெரியோர்கள் வரையிலான சகலருக்கும் ஏற்படும் எல்லாவிதமான நோய்களுக்கும் அங்கீகாரம் பெற்ற வைத்தியரால் சிறந்த முறையில் சிகிச்சை அளிப்பதுடன் இலவசமாக வைத்திய ஆலோசனைகளையும் பெற்றுக் கொள்ள முடியும்.**

**தொடர்புகளுக்கு:-**

**டாக்டர்.திருமதி.எம்.பத்மநாதன் (D.A.M),பதிவு**
**இல:- 9139,**
**முருகன் கோயில் முன் வீதி,**
**காரைதீவு-11 (கி.மா).**
☎ 067-2250629
077-9583700

**திரு.மா.ஜெயநாதன்,**
**முருகன் கோயில் வீதி,**
**காரைதீவு-10. (கி.மா).**
☎ 067-2222433
077-7074192





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தமிழ் மொழி வளர்ச்சியிலே புராதன இலக்கிய விழுமியங்களும் மனித வாழ்வும்

கலாநிதி.என்.நடராஜா.
ஓய்வு பெற்ற கல்விப்பணிப்பாளர்

இலக்கியம் எழுதப்படுவதற்கு நோக்கம் இருக்கின்றது. தனக்குத்தெரிந்த விடயங்களை மட்டும் ஒருவர் எழுதி வைத்தால் அது எழுத்தாக்கம். அவரால் எழுதி அமைக்கப்பட்ட அந்த ஆக்கம் மனித சமுதாயத்திற்குத் தேவையான ஆக்கப்பாடுகளைக் கொண்டிருக்குமானால் அது விழுமியம் கொண்ட இலக்கியமாக மலர்ச்சியடையும்.


'விழுமியம்' என்பது பெறுமானம், பெறுமதி எனவும் பொருள்படும். பெறுமதியுள்ள எழுத்தாக்கம், மனித சமுதாயம் பூமியிலுள்ளவரை அவர்களை வழி நடத்துவதனாலும், அவர்களைச் சீராக வாழ வைப்பதனாலும் அந்த இலக்கியத்தினை விழுமியம் கொண்ட காவியம் எனும் பதத்தால் அழைக்கின்றோம்.

எமது தமிழ் மொழி, உலகின் ஆதிமொழி, முதன் மொழியும் கூட. தற்கால உலக அறிஞர்கள் இப்பொழுதுதான், தமிழ் மொழிக்கு 'செம்மொழி' எனும் தகுதியினைக் கொடுத்துள்ளார்கள். தமிழ் மொழியின் தொடக்ககாலம் கி.மு பல்லாயிரம் ஆண்டுகள் பழைமையானது. இது எழுத்தமைப்பு இல்லாத பழந்தமிழர் காலம். பேச்சு வழக்கு அமைந்த காலம். புராதன தமிழர் எண்ணமும், இயற்கையோடு ஒட்டிய வாழ்வும், கூடி வாழ்ந்த சிறப்பும், சனாதன தர்மம் நிரம்பிய உயர்சிந்தனையும் சேர்ந்து, பண்பாடுள்ள வாழ்வாக புராதன தமிழர் வாழ்வு மலர்ந்தது. இவை தான், பிற்காலத்தில், உயர்வான எழுத்தாக்கச் சிந்தனைகளுக்கு மூலகாரணமாக அமைந்தன. ஒழுக்கம், தார்மீகம், பக்தி, கடவுளோடு கொண்ட உயர்உறவு என்பன சிந்தனைகளுக்குக் கூடிய பெறுமானங்களை காலம் கடந்தும் கொடுத்துக் கொண்டிருந்தன. எழுத்தில் வடிப்பதற்குரிய நடவடிக்கை இல்லாததனால், பேச்சு வழக்கிலும், மனத்திலும் நடவடிக்கை முறையிலும் வளர்ந்திருந்தது, பழந்தமிழர் புராதன பண்பாடு.

ஏறக்குறைய பத்து இலட்சம் ஆண்டுகளுக்கு முன் தமிழிலே உருவ எழுத்து தோன்ற ஆரம்பித்தது என்பர் எனினும், கி.மு. ஆறாயிரம் ஆண்டுகளிலிருந்து தமிழ்மொழி, கோல் எழுத்தாகவும், வட்டெழுத்தாகவும், சதுர எழுத்தாகவும் வளர்ச்சியடைந்தது. இவ்வாறு வளர்ச்சியடைந்திருந்த தமிழ் மொழியை, மூதறிஞர் தொல்காப்பியனார் கி.மு.6000ஆம் ஆண்டளவில் உயிர் எழுத்து, மெய்யெழுத்தாக அமைத்து, அம்மொழி எவ்வாறு பயன்படுத்தப்பட வேண்டும் என அதற்கு இலக்கணமும் வகுத்து இலக்கிய எழுத்து அமைப்பு முறைக்கு வழிவகுத்து வைத்தார். பிற்கால இலக்கிய அமைப்புக்கு மொழியின் உயிரையும் உடலையும் சேர்த்து அமைத்துத் தந்தபடியினால் தான் இன்றுவரை தமிழ் இலக்கியங்கள் உருவாக்கப்படுகின்றன. வரலாறுகள் கதைகளாகவும், நாடோடிக் கதைகளாகவும் மக்கள் மத்தியில் பரவின. இவையே பிற்காலத்தில் உள்ள விழுமியங்கலுள்ள இலக்கியங்களாக மலர்ந்தன. இவ்வளவையும் கூறுவதற்குக் காரணம் உண்டு. இலக்கிய விழுமியங்கள் வெறுங்கற்பனை விடயங்களும் அல்ல, வெறுங்கதைகளும் அல்ல. காலத்தை வென்று நின்ற மனித குலத்தின் செயற்பாடுகள், அனுபவ உண்மைகள், இவை என்றும் காலத்தால் அழியாதவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மேற்கூறிய அனுபவ உண்மைகள் அழியாத நிலையில் சமூதாயத்தினிடையே உயர்நிலையினைப் பெற்றுக் கொள்ள முடிந்தது. தமிழ் இலக்கிய விழுமியங்கள் தமிழ்மொழியின் ஆக்கத்திற்கும், தமிழரின் நேரிய நீண்ட வாழ்வுக்கும் உயர்வுக்கும் நெறிகளாகின. "யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல் இனிதாவதெங்கும் காணோம்" என 'மகாகவிபாரதியார்' கூறிய கூற்று இதற்கு இலக்கணமாக உள்ளது. இவ்வாறு நீண்டகால இலக்கிய விழுமியங்களைத் தன்னுள்ளே பொதிந்து கொண்டுள்ளதனால் நாம் இச்செம் மொழிக்குத் தலைதாழ்த்தி நன்றி செலுத்துகின்றோம்.

என்றும் அழியாப் புத்தழகும், பிறமொழி உதவியின்றித் தனித்தியங்கக் கூடிய உள்ளாற்றலும் உள்ளமையினால் கால ஓட்டத்தில் ஆக்கப்பட்ட இலக்கியங்களுள்ளே அழகு, நன்மை, உண்மை ஆகிய மூன்று சிறப்பம்சங்களும் அடங்கியுள்ளன. தோன்றிய தமிழில் இலக்கிய, இலக்கண, தார்மீக, பண்பாடு, நீதி நிரம்பிய ஆத்மீக விழுமியங்கள் இப்பூமியில் அழியாவரம் பெற்றவை. ஆனால் காலத்தின் ஓட்டத்தில் பல பிரளயங்கள் ஏற்பட்ட போதும், அழியாது தப்பி எஞ்சிய ஏட்டிலக்கியங்கள் நம்மை மனஉயர்வு அடைய வைக்கின்றன.

இன்று நாம் வாழும் உலகம், பஞ்சபூதங்களால் பொருத்தி அமைக்கப்பட்ட ஒரு இருப்பிடம். இவ்விருப்பிடத்தில் தோன்றி வாழும் ஜீவராசிகளிடத்தில் மன அமைதியுடன் சீராக வாழும் நிலை ஒன்று வேண்டும். இது தேவையானது. பாடசாலையின் நீண்ட மதிற்சுவர்களில் "நற்பண்பு கொண்ட சமுதாயத்தை உருவாக்குவோம் "என்று ஒரு சீரான வாக்கியத்தை இன்று பல இடங்களிலே எழுதி ஒட்டியுள்ளார்கள். நற்பண்பு மனிதருக்குத் தேவைப்படுகின்றதாம். அதனால் அதனை சமுதாயம் முழுவதற்கும் பயன்பட உருவாக்குவோம் என்கின்றனர். இது ஒரு சாதாரண பெறுமானம். இவ்வளவு காலமும் விளக்கமாகவும், விரிவாகவும் சொல்லிய பண்பாட்டு விழுமியங்களின் சுருங்கிய தன்மை இது. அப்படியானால் முத்தமிழ் மொழியில் எடுத்துரைக்கப்பட்ட விழுமியங்கள் எவை என்று பார்க்கலாம்.

விழுமியங்கள் மனித குலத்தைச் சீராக வாழ வைப்பன என்பது தெளிவாகத் தெரிகின்றது. இதனை வரலாற்று ரீதியாக தமிழிலே எழுதி வைத்துள்ள இலக்கிய, காவிய நூல்களிலிருந்து அறிகின்றோம். கால ரீதியாக சூழலுக்கேற்ப தோற்றம் பெற்றாலும், பொதுவான சீரிய மனித வாழ்விற்கு விழுமியங்கள் துணையாக நிற்கின்றன. தாய், தந்தை, பெருமை, சகோதர பாசம், அன்பின் இறுக்கம், உண்மையின் உயர்வு, ஒழுக்கமாக வாழ்தல், நீதியாக நடத்தல், ஆசிரியருக்குப் பணிந்து நடத்தல், சீராக இல்லறத்தில் வாழ்தல், இல்லற வாழ்க்கையோடு இறையியலையும் சேர்த்து இம்மை, மறுமைத் தொடர்பினை ஏற்படுத்துதல் முதலிய உயர்வு பெற்ற விழுமியங்கள் பல்லாயிரம் வருடங்களைக் கடந்தும் மனிதனோடு இணைந்துள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரமச்சரியம், இல்லறம், வானப்பிரஸ்தம், சன்னியாசம் என்பன மிக நீண்டகாலமாக தமிழர் வாழ்வில் அமைந்திருந்த வாழ்க்கைப் படிமுறை அம்சங்கள். இல்லறம் என்பது உலக வாழ்வில் மிகமுக்கிய அம்சம். சிலப்பதிகாரம் எனும் தமிழிலக்கியம், சீரிய மூன்று விழுமியங்களை சமுதாயத்திற்கு எடுத்துக் காட்டுகின்றது. **'உரைசால் பத்தினியை உலகோர் ஏத்துவதும்', 'ஊழ்வினை உருத்து வந்து ஊட்டுவதும்', 'அரசியல் பிழைத்தோருக்கு அறம் கூற்றாவதும்'** ஆகிய விழுமியங்கள் பொதிக்கப்பட்டு மாபெரும் காவியமாக படைக்கப்பட்டுள்ளது. இளங்கோவடிகள் கண்ணகி, கோவலன் இல்லற வாழ்க்கையை அழகாக எடுத்துக் காட்டும் மாண்பு வியக்கத்தக்கது. அன்பும், பண்பும், கற்பும், பணிவும், அடக்கமும் கொண்ட வாழ்க்கை அமைப்பினை இலக்கிய ரூபத்தில் அமைத்துள்ளார். அதன் தொடர்பாக ஒருவரது கெட்ட செயற்பாட்டால் ஊழ்வினை, பின்வரும் பிறவியிலும் தொடர்ந்து வந்து உறுத்தும் என்பதும் சிலம்பின் கதையூடாக நமக்கு வந்தது. இது பெரும் விழுமியம். அரசிறை பிழைத்த மன்னன் அதற்குரிய தெய்வ தண்டனையை அனுபவித்ததுடன், உரைசால் பத்தினியின் தெய்வீக சக்தி உயர்வினை, உயர்ந்தோர் ஏற்றி வணங்கும் வகையிலே இலக்கியமாகப்படைத்து, சிறந்த மனித விழுமியங்களை மனித குலத்திற்கு ஈந்துள்ளார்.

திருக்குறள் என்பது உலக பொதுமறைப் படைப்பு. விழுமியங்களின் பெட்டகம். **'கருவறை தொடங்கி கல்லறை வரைக்கும் ஒரு மனிதன் எவ்வாறு வாழ வேண்டும்'** எனக்கூறிச் செல்கின்றார் வள்ளுவப் பெருந்தகையார். பத்துப் பத்துப் பாடல்களில் ஒவ்வொரு விடயத்தின் சிறப்பான விழுமியங்களையும் தொகுத்து நடைமுறைக்கு ஏற்பத் தரும் வள்ளுவநாயனாரின் படைப்பு உலகின் சிறந்த படைப்பாகும். மாற்றமடையாத உயரிய விழுமியங்கள் இன்றும் நமது வாழ்க்கையை நடத்திச் செல்கின்றன. "கசடறக் கற்க, அதற்குத்தக நிற்க" இது ஒன்றே போதும் மனித வாழ்வின் நிறைவேற்றுத் தன்மைக்கு வழிகாட்டுவதற்கு. விழுமியம் நிறைந்த நிலைபேறான வாழ்க்கையை கடைப்பிடிப்பது மனித குலத்தின் கடமை.

"அன்புடையார் எல்லாம் உடையார்" எனும் இம்மை மறுமைக்கான மாபெரும் விழுமியத்தைத் தந்தது திருக்குறள். எங்கு சென்றாலும் எப்பொழுதானாலும் அவர் எல்லாம் பெறுவர். அன்பு உண்டாகும் பொழுது அந்த அன்பின் ஊடாக தான் அறியமுடியாத பொருள் எல்லாவற்றையும் அறியக்கூடிய ஆற்றலும், அடையக்கூடிய திறனும் மனிதனுக்குக் கிடைக்கின்றது.

தமிழ் இலக்கிய வரலாற்று ரீதியாக குறிப்பிடத்தக்க மாபெரும் விழுமியங்களை சுருக்கமான முறையிலே அழகுறத்தருவது பதினெண்கீழ்க் கணக்கு அறநூல்கள். நீதி நூல்கள் எல்லாமே மனித விழுமியத்தைத்தான் உயர்த்திக் காட்டுகின்றன. நாலடியார், ஆசாரக்கோவை, ஏலாதி, நான்மணிக்கடிகை, இன்னாநாற்பது, இனியவை நாற்பது குறிப்பிடத்தக்கவை. மூதறிஞ்சர், ஔவையார் எழுதிய அறிவுரைகள் யாவும் சிறுகுழந்தை முதல் பெரியோர் வரை கடைப்பிடித்து இன்பமாக வாழக்கூடியவை. நன்மை, தீமையை உளத்தில் இலகுவாகப் பதிக்க கூடியவை. குழந்தைகளின் உள்ளத்தில் இலகுவாகப் பதியவைக்க வேண்டும் என்பதற்காகவே 'அகர' வரிசைப்படி "அறம் செய்ய விரும்பு", "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" என அறத்தினைக் கூறும் ஔவையாருக்கு உலகு உள்ளவரை எமது நன்றி உரித்தாகும். காரணம் உலகில் கடவுளையும், மனிதரையும் நேரிலே கண்டு அன்பாக அறம் அளவளாவியவர் ஔவையார். மனித வாழ்வு சிறந்த விழுமியத்தோடு அமைவதற்கு பதினெண்கீழ் கணக்கு நூல்கள் அத்திவாரமாக உள்ளன. அதிவீர ராமபாண்டியரின் 'வெற்றிவேற்கை' நடைமுறை அனுபவ நூல் - 2000 ஆண்டுகளுக்கு பின்னும் மேற்படி நீதி நூல்களே மனித சமுதாயத்தை நடத்திச் செல்கின்றன எனக்கூற முடியும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்லவர் காலத்தில் தமிழ் நாட்டிலே பக்தி உணர்வு மிகுந்திருந்தது. ஏராளமான பக்தி பாடல்களைத் தமிழ் இலக்கியத்திற்கு இறை அன்பு, பக்தி ரூபத்தில் வடித்துக் கொடுத்த காலம் பல்லவர் காலம். முக்கியமாக நாயன் மார்களால் பாடப்பட்ட அன்பு, உணர்வு, அற்புதம், இறையியல் அடங்கிய பக்திப்பாடல்கள் தமிழர் சமுதாயத்திற் கிடையே பரவிய காலம் இது. இல்லற வாழ்க்கையோடு இறையியலையும் சேர்த்து இம்மைக்கும் மறுமைக்கும் தொடர்பு ஏற்படுத்துபவை பல்லவர் கால இலக்கியங்கள். இவை விழுமியப் பாதைகள் மனித வாழ்வின் உயரிய விழுமியமான இறை உணர்வு பல்லவர் கால இலக்கியங்களில் உயிராக உள்ளன. மறுமை என்ற இலக்கை வைத்து, எமது வாழ்க்கையை செழுமைப்படுத்துவன, பக்தி விழுமியம் கொண்ட பக்தி இலக்கியங்கள் .

"நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம், நரகத்தில் இடர்படோம்" என்று இறைபக்தியில் வைராக்கியத்தில் ஆழ்ந்து போன அப்பரடிகள் கூறும் பக்தி விழுமியம் உலகத்திலேயே உயர்ந்தது என்றுகூற முடியும். ஞான அறிவின் துணையோடு இருந்த நாயன்மார்கள் தான் யார், எங்கிருந்து வந்தேன், எங்கு செல்லப் போகின்றேன், எங்கு செல்ல வேண்டும், அதற்காக இங்கு என்ன செய்ய வேண்டும் என்ற உயர் விழுமியங்களை மனதிலே இருத்திப் பக்தியின் அதியுயர் செழுமையினை சமுதாயத்திற்கு உணர்த்தினர். தெய்வம் என்பதோர் சித்தம் உண்டாகி, தமக்கு மேல் உள்ள சக்தியின் உயர்வினைச் சாதாரண நாட்டுப்புற இலக்கியங்களில் ஈடுபடுத்தி, படிப்பறிவில்லாத மக்கள் மத்தியில் இறையியல் எனும் விழுமியத்தைக் கொண்டு சென்றவர் மாணிக்கவாசகர். அவர் ஒரு அரசியல் ஞானியும் கூட.

சேக்கிழார் பெரியபுராணம் பக்தி விழுமியத்துடன் அறிவியல் சார்ந்த கருத்துக்களையும் இணைத்துள்ளது. உதாரணமாக கண்ணப்ப நாயனாரின் வாழ்க்கை, அசையாத பக்தி வைராக்கியமும், மேதகு அன்பும் கொண்டதாக இயம்பப்பட்டுள்ளது. சிவலிங்கத்தின் கண்களிலிருந்து இரத்தம் வடிவதனைப் பார்த்து தனது கண்களை எடுத்தகற்றி பொருத்தியவர் கண்ணப்பர். அதீத பக்தியில் ஏற்பட்ட உயர் வைராக்கிய அன்பு இது. வரலாற்றில், முதன்முதல் கண்மாற்று சிகிச்சையை மேற்கொண்ட நிகழ்வாக, அன்பு சான்ற உயர் பக்தியின் வெற்றி வெளிப்பாடாகக் கண்ணப்பரின் செயற்பாட்டை நாம் கருதலாம்.

பிற்காலத்திலே தமிழில் எழுதப்பட்ட இரண்டு இதிகாசங்கள் உயர் இலக்கிய விழுமியங்களைக் கொண்டவை. கம்பராமாயணம் எனும் இதிகாசம், வான்மீகி இராமாயண வரலாற்றைக் கொண்டு தமிழ் மரபுவழிப் பண்பாட்டு ரீதியாக எழுதப்பட்டது. இராமன் கம்பராமாயணத்தில், மகாவிஷ்ணுவின் அம்சம் கொண்ட அவதார புருஷராக சித்தரிக்கப்படுகின்றான். வான்மீகி இராமாயணத்தில் இராமனின் தந்தை தசரத மன்னன் 63ஆயிரம் மனைவியரை மணந்திருந்தான் என்பர். ஆனால் தமிழ் இலக்கிய பண்பாட்டின் அடிப்படையில் கம்பராமாயணத்தில் இராமன் ஏகபத்தினி விரதனாக சித்தரிக்கப் படுகின்றான். சீதை உயர்நிலை பெற்ற தேவியாக கருதப்படுகின்றாள். ஒருவனுக்கு ஒருத்தியெனும் உயர் பண்பு விழுமியம் இங்கு நமக்கு எடுத்துணர்த்தப்படுகிறது. இராமன், இலக்குமணன், பரதன், சத்துருக்கனின் தாய்மார் அன்பு, பாசமுள்ள சிறந்த தாய்மார்களாகச் சித்தரிக்கப்படுகின்றனர். இதேவேளை சிறந்த சகோதர பாசமுள்ளவர் களாக இராமன், இலக்குமணன், பரதன், குகன், வீபீடணன் விளங்குகின்றனர். அறநெறி சார்ந்தவர்களாகி நீதியை நிலைநாட்ட சகோதர பாசத்தையே விட்டுக் கொடுத்தனர். சுக்கீரிவன், வீபிடணன் முதலியோர். இவ்வுயரிய விழுமியங்கள் கம்பராமாயணத்தை உயரிய உலக காவியமாக உயர்த்தி விட்டன.

"மகாபாரதம்" என்னும் 'மகா காவியம்' 'துவாபர யுகத்தின்' சீரியபடைப்பு பந்த பாசங்களைக் கடந்து செயற்பட்டு 'தர்மமே வெல்லும்' எனும் பெரிய விழுமியத்தை மனித குலத்திற்குத் தந்தது இக்காவியம். யுகங்கள் ஊடாக அதர்மத்தை அழித்து தர்மத்தைக் காப்பாற்ற, கண்ணனாகப் பிறந்த கிருஷ்ணர் இக்காவியத்தை நடாத்தும் நாயகன். தனது உறவினரான இரு சகோதர குடும்பத்தினர் மத்தியில் தர்மத்தை நிலைநாட்டுகின்ற தன்மை, தமிழ் இலக்கிய உலகின் உயரிய நீதி விழுமியமாகும். தர்மன், வீமன், அருச்சுணன், நகுலன், சகாதேவன் அடக்கமான சகோதரர்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தர்மம் என்றும் வெல்லும், அதர்மம் என்றும் அழியும்' என்பதும், தாய்ப்பாசம் கூடுதலாக உள்ளதும், தாய்மைக்குப் பணிவான முதல் கௌரவம் அழிப்பதும் பாரத காவியத்தில் உயர்த்தி காட்டப்பட்டுள்ளன. சகோதர பாசத்துடன் மூத்த தமயன் தர்மனின் சொல்லுக்கு அடங்கி நடக்கும் அதேவேளை தர்மம் வெல்ல வேண்டும் என்பதற்காக வீமன் தன் தமயன் தர்மனின் கையையே எரிக்க வேண்டும் என முயல்வதும் சிறந்த எடுத்துக் காட்டாகும். கர்ணனுக்கும், குந்திதேவியாருக்கும் இடையில் அடக்கி வைக்கப்பட்டிருந்த தாய்ப்பாசம் சீரிய ஒரு பண்பாடாக இக்காவியத்தில் காட்டப்படுகின்றது.

தாய்ப்பாசம் கூடுதலாக உள்ள ஒரு இலக்கியம் இது ஆனால், "உண்ட வீட்டுக்கு இரண்டகம் செய்யக் கூடாது" என்னும் உயர்தர்மததைக் காட்டும்வகையில் கர்ணன் என்பவன் தாய்ப்பாசம் சகோதர பாசத்தின் மத்தியில் கட்டுண்டு கிடப்பதும் உயர்மனித விழுமியமே.அதேவேளை மிகுந்த துன்பம் வரும்போது கடவுளை நினைத்துக் கதறி, மனம்விட்டு அழும்பக்தர் களுக்கு, கடவுளே துணை என்பது, அரச சபையில் சேலை களையப்பட்டு அவமானப்படுத்தப்பட்ட திரௌபதிக்கு, கண்ணன் ஆடை அளித்துக் காப்பாற்றியது, வைராக்கிய பக்தியால் சாதிக்க முடியாதது எதுவுமில்லை எனும் உயர் விழுமியத்தை நமக்கு எடுத்துக் காட்டுகின்றது. இவை குறிப்பிட்ட சில இலக்கியங்களின் சாகாவரம்பெற்ற விழுமியங்களே.

இதுவரை கூறிய விடயங்களிலிருந்து சீரிய வாழ்வுக்கான விழுமியம் எனும் உயர்திறன் பற்றி ஓரளவு அறிந்து கொண்டோம். ஓவ்வொரு இலக்கிய நூலையும் கற்கும் பொழுது அதனை எப்படியோ முழுமையாகக்கற்று முடித்தல் வேண்டும். "அவ்வாறு கற்பதன் ஊடாகவே பண்பாட்டிலே போற்றப்பட்ட உயர்விழுமிய நிலைப்பாடுகளை நாம் நமது மனத்தில் இருத்தி வாழ முடியும்". முத்தமிழ்வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளார் இலக்கியம் நயத்தலில் மேற்படி கல்விக்கருத்தினை ஆழமாகத் தருகின்றார். அவர் கூறுகையில் 'எனது தந்தையார், நான் பாடசாலையில் கற்கும் காலத்தில், என்னிடம் இலக்கிய, இலக்கண நூல்களைத் தந்து ஒரு நூலினை முழுமையாக வாசித்தறிந்த பிற்பாடே மற்றைய நூலினை வாசிக்க வேண்டும் எனக்கூறினார். அதன்படியே நானும் கற்றேன். அவரது தூண்டுதலால் நூலின் முழுஅறிவையும் நான் பெற்றேன் எனக்கூறினார் இதற்கு காரணம் என்ன தெரியுமா? ஒருநூலினை தெளிவாக வாசித்து நிறைவுறும் நிலையிலேயே அந்நூலில் கூறப்பட்ட உண்மைத் தத்துவம், அதன் விழுமியம் என்பன சரியாக மனதிலே பதியும். அவ்வாறே நூல்களைத் தெளிவுற முழுமையாக வாசித்து முத்தமிழ் வித்தகர் கண்ட அறிவை நாமும் பெறுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கலங்கரை விளக்கம்

கவிஞர்.பொன்.தவநாயகம்
(ஓய்வு பெற்ற அதிபர்)


பொலிவினின் வாவி சூழும்
புகழ்நிலம் புளியந் தீவு
கலைகளின் கோட்டம் மட்டக்
களப்புமா நகராம் தெற்கில்
தொலைவிலே நான்கே மூகும்
தொடர்மைல் தன்னி லாங்கே
சிலம்புடைத் தெய்வம் காவல்
செய்திடும் காரை தீவு,

மருதமும் நெய்த லோடு
மருவிய உறவி லின்பப்
பெருமையில் பிறந்த மூதூர்
பிணைந்தபல் வளங்க ளாகத்
தருமுயர் புனித மண்ணாய்த்
தவமுடைய பெரியோர் தோன்றத்
தெரிவினில் உயர்வு கூட்டித்
திகழ்ந்திடும் அறிவுப் பூங்கா,

முத்தமிழ் ஞானி யாழ்நூல்
முழுவுலகிக் கீந்த தேவன்
சித்துக்கள் காட்டி வாழ்ந்த
சித்தானைக் குட்டிச் சாமி
உத்தமத் துறவி யாகும்
உயர்நட ராஜா னந்தா
சொத்தெனத் தவழ்ந்த மண்ணாம்
சுடரொளி பரப்பும் தீபம்,

பண்டையப் பெருமை யோடு
பழமையின் அழகி னோடு
எண்டிசைப் புகழி னோடு
இணையிலாக் கலைக ளோடு
அண்டிடும் பிரதே சத்தின்
அணைந்தெழும் விழாவி னூராய்க்
கண்டிடும் காரை தீவு
கலங்கரை விளக்க மம்மா!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விஞ்ஞானத்தை தமிழில் தருவதில் விபுலானந்த அடிகளார் ஆற்றிய பணி

**தம்பியப்பா கோபாலகிருஸ்ணன்**
**"செங்கதிர்" ஆசிரியர்**

ஏறக்குறைய நாலாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இலக்கண இலக்கிய வளம் செறிந்த மொழியாக தமிழ் விளங்கிற்று. இத்தகைய தொன்மை வாய்ந்த தமிழ் மொழி தமிழ் இலக்கிய வரலாற்றாசிரியர்களினால் வகுத்துச் சொல்லப்பட்டுள்ள சங்ககாலம்(கி.பி முதல் மூன்று நூற்றாண்டுகள்), சங்கம் மருவிய காலம் (கி.பி. மூன்றாம் நூற்றாண்டிலிருந்து கி.பி.ஆறாம் நூற்றாண்டின் பிற்பகுதி வரை), பல்லவர் காலம்(கி.பி ஆறாம் நூற்றாண்டிலிருந்து ஒன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதி வரை), சோழர் காலம் (கி.பி ஒன்பதாம் நூற்றாண்டிலிருந்து பதிமூன்றாம் நூற்றாண்டு வரை), நாயகர் காலம் (கி.பி பதினான்காம் நூற்றாண்டிலிருந்து கி.பி பதினெட்டாம் நூற்றாண்டு வரை) ஆகிய காலகட்டங்களில் பலவித வளர்ச்சிகளுக்கு உட்பட்டு கி.பி பதினெட்டாம் நூற்றாண்டில் ஆரம்பித்த ஐரோப்பியர் காலத்தில் பிற நாட்டோரும் நாட்டம் கொள்ளும் அளவிற்கு புகழடைந்தது. தமிழ் நாட்டில் ஐரோப்பியர் ஆட்சி கால்வைக்கத் தொடங்கியதும் குறிப்பாக ஆங்கிலேயர் ஆட்சி ஏற்பட்டதும் தமிழ் நாட்டு மக்களிடையே கிறிஸ்தவ மதப் பிரசாரம் செய்ய வந்த ஐரோப்பிய பாதிரிமாரும், கத்தோலிக்க மதகுருமாரும் தமிழைப் படித்து தமிழ் மொழி வாயிலாக தங்கள் சமய கொள்கைகளை பரப்ப தமிழிலே நூல்களும் எழுதலாயினர். ***அதனால் தமிழ் மொழி செய்யுள் நடையிலிருந்து உரை நடைக்கு வளர்ச்சியுற்றது.*** அச்சியந்திர அறிமுகமும் இதற்கு உதவிற்று.

கி.பி பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமிழ் மக்கள் ஆங்கில மொழியை படிக்கத் தொடங்கிய பின்னர் அம்மொழி வாயிலாக ஐரோப்பிய இலக்கியங்களை தழுவி குறிப்பாக ஆங்கில மொழியைத் தழுவிய மொழி பெயர்ப்புத் தமிழ் நூல்களும், தமிழ் இலக்கிய நூல்களும் உரை நடையில் தோன்றினாலும் விஞ்ஞான சாத்திர நூல்கள் தமிழில் வெளிவரவில்லை. காரணம் அக்காலத்தில் விளங்கிய கத்தோலிக்க மதகுருமார் தமிழிலும், ஐரோப்பிய மொழிகளிலும் பாண்டித்தியம் பெற்றிருந்தரெனினும் அவர்களுக்கு விஞ்ஞான அறிவில் தேர்ச்சி இருக்கவில்லை. அன்றியும் அவர்களது நோக்கம் மதப் பிரச்சாரமே தவிர விஞ்ஞானத்தை தமிழ் மக்களிடம் கொண்டு வருவதல்ல. இதே போல் ஆங்கிலத்திலும் பிற ஐரோப்பிய மொழிகளிலும் பாண்டித்தியம் பெற்றிருந்த தமிழ் அறிஞர்கள் விஞ்ஞானத்தில் புலமையற்றிருந்த காரணத்தால் விஞ்ஞான நூல்களை தமிழில் தரவில்லை.அன்றியும் அக்காலகட்டத்தில் விஞ்ஞானத்தின் முக்கியத்துவம் தமிழ் மக்களிடையே உணரப்பட்டிருக்கவும் இல்லை. அத்துடன் ஐரோப்பியர் தமிழ் நாட்டிற்கு வருகை தந்த கி.பி பதினெட்டாம் நூற்றாண்டின் முற்பகுதியில் தான் தமிழில் உரைநடை ஆரம்பித்த போதும் பத்தொன்பதாம் நூற்றாண்டிலேயே அது வளர்ச்சியுற்றது. இக்கால கட்டத்திலேயே தமிழ் நாட்டில் ஆங்கிலக் கல்வியும் வளர்ச்சியுற்றது. மொழியியலாளர்கள் கூற்றுப்படி பக்திக்குத் தமிழும், சட்டத்திற்கு இலத்தின் மொழியும் பொருத்தமாக விளங்கியது போல் விஞ்ஞானத்திற்குரிய மொழியாக ஆங்கிலமே விளங்கிற்று. ஆங்கிலம் கற்ற தமிழறிஞர்கள் ஆங்கில உரைநடை இலக்கியங்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தழுவி அல்லது மொழி பெயர்த்து தமிழில் உரைநடை இலக்கியங்களை ஆக்க முற்பட்டபோது கூட நாவல்கள், கதைகள், கிறிஸ்தவ மத சம்பந்தமாக நூல்கள் முதலியவற்றில் நாட்டம் செலுத்தினரே அன்றி ஆங்கிலத்தில் விளங்கிய அறிவியல் சார்ந்த நூல்களில் அக்கறை செலுத்தவில்லை.

பின்னர் கி.பி 20ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஆங்கிலக் கல்வியும், ஐரோப்பிய நாகரிகத் தொடர்பும் தமிழ் மக்களிடையே விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தியதை அடுத்து விஞ்ஞானக் கல்வியும், மேற்கத்திய விஞ்ஞான கண்டு பிடிப்புக்களும், தமிழ் நாட்டிற்கு இறக்குமதியாகி அவற்றின் பிரயோகங்கள் மக்களின் சமூக, பொருளாதார, கலை, கலாசாரங்களில் குறிப்பிடத்தக்க மாற்றங்களையும், வளர்ச்சியையும் ஏற்படுத்தியதால், விஞ்ஞானக் கல்வியின் முக்கியத்துவம் உணரப்பட்டது. பெரும்பாலான விஞ்ஞான சாத்திர நூல்களெல்லாம் ஆங்கில மொழியிலேயே பெறவேண்டி இருந்தது. அதனால் குறிப்பிட்ட சிலரே அதாவது ஆங்கிலம் படித்தோர் மட்டுமே விஞ்ஞானக் கல்வியைப் பெற முடிந்தது. விஞ்ஞானமும், நவீன தொழிநுட்பமும் வளர்ந்து மக்களின் வாழ்க்கையிலும் பின்னிப் பிணைந்துவிட்ட நிலையிலும் கூட அத்துறைகள் சார்ந்த கல்வியை ஆங்கிலத்தில் மட்டுமே பெறக்கூடியதாயிற்று. அதனால் நகர்ப்புறங்களில் வாழ்ந்தோரும் வசதி படைத்தோரும்தான் விஞ்ஞான தொழிநுட்ப கல்வியைப் பெற முடிந்தது. கிராமப்புற மக்களையும், வசதி குறைந்தவர்களையும், அக்கல்வி போய்ச்சேராததற்கு தமிழில் விஞ்ஞான நூல்கள் இல்லாததே முக்கிய காரணங்களில் ஒன்றாக விளங்கிற்று. வடமொழி மற்றும் ஐரோப்பிய மொழிகளில் குறிப்பாக ஆங்கிலத்தின் வருகையால் தமிழின் மாண்பு கெடுகின்றது என்று, தனித்தமிழ் இயக்கங்களை நடாத்திய தமிழ் அறிஞர்கள் கூட விஞ்ஞானத்தை தமிழில் கொண்டு வருவதற்கு அக்கறை கொள்ளவில்லை. இதற்கு காரணம் ஐரோப்பியரான ஆங்கிலேயர் ஆட்சியிலிருந்து தமிழ் நாடு உட்பட்ட இந்தியாவும், இலங்கையும் அரசியல் விடுதலை பெறுவதற்கான போராட்டத்தை நடாத்திக் கொண்டிருந்ததே ஆகும். தமிழின் எந்த வளர்ச்சிப் படியும் இந்தியாவின் தமிழ் நாட்டில் அல்லது இலங்கையில் தான் தோன்ற வேண்டியிருந்தது. இந்த இரு பகுதியிலும் தான் தமிழர்கள் குறிப்பிடும்படியான ஒரு தேசிய இனமாக வாழ்ந்து கொண்டிருந்தார்கள் என்பதே அதற்கு காரணம். இந்த இரு பிரதேசங்களும் ஆங்கிலேயரிடமிருந்து அரசியல் விடுதலைக்கு போராடிக் கொண்டிருக்கும் போது விஞ்ஞானத்தை தமிழில் கொண்டு வருவதில் முனைப்புக் காட்டாமல் இருந்தது இயல்பானதே ஆகும். இருந்த போதிலும்கூட இந்திய சுதந்திர விடுதலைப் போராட்டத்தில் தீவிர பங்கு கொண்டிருந்த மகாகவி சுப்பிரமணியபாரதியார் அவர்கள் தேசிய கீதங்களை இயற்றி மக்களுக்கு சுதந்திர வேட்கைளை ஊட்டிக் கொண்டிருந்த காலத்திலும்கூட மேற்கத்தைய நாடுகளில் வளர்ச்சியுற்றிருந்த விஞ்ஞானம் தமிழிலே வரவில்லையே என்று ஏங்கினர். அவரது இந்த ஏக்கம் அன்னாரின்,

"புத்தம் புதிய கலைகள்-பஞ்ச
பூதச் செயல்களின் நுட்பங்கள் கூறும்
மெத்த வளருது மேற்கே-அந்த
மேன்மைக் கலைகள் தமிழில் இல்லை.

சொல்லளவும் கூடுவதில்லை-அவை
சொல்லும் திறமை தமிழ் மொழிக்கில்லை,
மெல்லத் தமிழினிச் சாரும் -அந்த
மேற்கு மொழிகள் புவிமிசையோங்கும்."

என்றந்தப் பேதை உரைத்தான்-ஆ!
இந்தவசையெனச் செய்திடலாமோ?
சென்றிடுவீர் எட்டுத்திக்கும் - கலைச்
செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்

என்ற பாடல் வரிகளிலும்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பிற நாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ் மொழியிற் பெயர்த்தல் வேண்டும்
இறவாத புகழுடைய புது நூல்கள்
தமிழ் மொழியில் இயற்றல் வேண்டும்
மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள்
சொல்வதிலோர் மகிமையில்லை"

என்ற பாடல் வரிகளிலும் வெளிப்பட்டது.

விஞ்ஞானத்தை தமிழில் கொண்டுவர வேண்டும் என்ற சிந்தனையை முதலில் தந்தவர் மகாகவி பாரதியாரே ஆவார். அவரது அந்த சிந்தனைக்கு செயல் வடிவம் கொடுத்த அவரால் முடியாமல் போனதற்கு காரணம் அவர் தமிழிலும், ஆங்கிலத்திலும் தேர்ச்சி பெற்றிருந்ததும், விஞ்ஞானத்தில் புலமையற்றிருந்ததும், அன்னாரின் பெருநாட்டம் இந்திய சுதந்திர விடுதலைப் போராட்டத்தில் பதிந்திருந்ததும் ஆகும். அக்காலத்தில் ஆங்கிலத்தில் விஞ்ஞானத்தைக் கற்ற தமிழர்கள் வசதிபடைத்த மேல்மட்டத்தைச் சேர்ந்தவர்களாய் இருந்தபடியால் அத்தகையோரின் சமூகப் பார்வை விரிவடைந்திருக்க வில்லை. அன்றியும் இத்தகையோர் தமிழ் மொழி மீதும், தமிழினத்தின் மீதும் உணர்வு பூர்வமாக பற்றற்றும் இருந்தார்கள்.

20ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தமிழர்கள் ஆங்கில மோகத்திலேயே மூழ்கிக் கிடந்தார்கள். விஞ்ஞானக் கல்வியை ஆங்கிலத்திலேயே பயின்ற இத்தகைய தமிழர்கள் தமிழைப் புறக்கணித்தனர். தமிழன் தமிழனுடன் தமிழில் பேசுவது கூட அவமானம் எனக் கருதிய எனக்கு தமிழிலே பேச அவ்வளவு வராது என்று ஆணவத்துடன் கூறிய இந்த விஞ்ஞானக் கல்விமான்களால் தமிழிலே விஞ்ஞானத்தை தரமுடியாது போயிற்று. ஆனால் இத்தகையோரின் போலித்தன்மையை உடைத்தெறிந்து பாரதியின் கனவை அதாவது தமிழில் அறிவியல் சார்ந்த எல்லாத்துறைகளையும் பயிற்ற வேண்டும் அதன் பொருட்டு சிறந்த ஆங்கில நூல்களை தமிழாக்க வேண்டும். அடுத்தபடியாக தமிழிலேயே முதன் நூல்களை வெளிக் கொணரவேண்டும் என்பதை நனவாக்க தமிழிலே விஞ்ஞானத்தை தர முடியும் எனத் துணிந்து கூறி, அதற்கான செயற்பாட்டிலும் இறங்கியவர் மதுரைத் தமிழ் சங்கப் பண்டிதராகவும், இலண்டன் பல்கலைக்கழக (*B.S.C*) விஞ்ஞானப் பட்டதாரியாகவும் விளங்கிய ஈழத்தீவின் கிழக்கு மாகாணத்தின் தெற்கே காரைதீவு எனும் கிராமத்தைச் சேர்ந்த மயில்வாகனம் எனும் இயற்பெயர் கொண்ட யாழ் நூல் தந்த 'சுவாமி விபுலானந்தர்' ஆவர். தமிழில் விஞ்ஞானக் கல்வியை கொண்டு வருவதற்கு முன்னோடியாக விளங்கியவர் இவரே. இதற்கு இரு காரணங்கள் உண்டு. ஒன்று தமிழிலும், ஆங்கிலத்திலும் பாண்டித்தியம் பெற்றிருந்த இவர் ஓர் விஞ்ஞானப் பட்டதாரியாகவும் விளங்கினார். மற்றது ஆங்கிலத்தில் கல்வி கற்று விஞ்ஞானப் பட்டதாரியாகிய போதும் தமிழ் மொழி மீதும், தமிழினத்தின் மீதும் பற்றும், பாசமும் கொண்டிருந்தார். தமிழர்கள் ஆங்கில மோகத்தில் மூழ்கியும் விஞ்ஞானக் கலையில் போதிய திறமை கொண்ட தமிழர்கள் இல்லாமலும் இருந்த காலகட்டத்தில் இலங்கையில் விஞ்ஞானத்தை தமிழிலே போதிக்க துணிந்து முன்வந்தவர் சுவாமி விபுலானந்தர் ஆவார்.

விஞ்ஞான அறிவுடன் தமிழிலே பண்டிதராகவும், அதே வேளை ஆங்கிலத்தில் புலமைபெற்றும் விளங்கிய விபுலானந்த அடிகள் விஞ்ஞானக் கல்வியை தமிழிலே சொல்வதற்கு எவரும் முன்வராத நேரத்தில் இனிய செந்தமிழ் நடையில் விஞ்ஞானத்திற்கு விளக்கமளித்தார். அவரது இப்பணி 1920இல் இலங்கையின் யாழ்ப்பாணத்திலுள்ள மானிப்பாய் இந்துக் கல்லூரியின் தலைமை ஆசிரியராக அவர் அமர்ந்த காலத்திலிருந்து ஆரம்பமாகியது. இக்கல்லூரியில் ஆய்வு கூடம் ஒன்றை நிறுவி விஞ்ஞானக் கல்வியை போதித்தார்.

மயில்வாகனம் என்ற இயற்பெயர் கொண்ட இவர் துறவியாவதற்காக இராமகிருஸ்ணமிசன் எனும் அமைப்பில் சேர்ந்து 1922இல் சென்னைக்கு வந்தார்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

.உலகத்தை ஒரு புதிய சகாப்தத்திற்கு இட்டுச் சென்ற விஞ்ஞானம் மக்களிடையே ஒரு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தியிருந்த காலமிது. ஆங்கில மொழியை கற்றவர்களே அதிகமாக விஞ்ஞானத்தைப்பற்றி அறிந்திருந்தார்கள். ஆங்கில மொழியிலே இருந்த விஞ்ஞானப் புதுமைகளை தமிழ் நடையில் படிக்காத மக்களுக்கு கூட விளங்கத்தக்க வகையிலே சொல்ல வேண்டுமென்ற நன்னோக்குடன் அறிஞர்கள் பலர் முயன்று தமிழ் நாட்டின் தலைநகரான சென்னையில் தமிழ் கல்விச் சங்கமொன்றை நிறுவினர். இச் சங்கம் அடிக்கடி விஞ்ஞானப் பொருள்கள் பற்றிய விளக்கங்களும், விரிவுரைகளும் நிகழ்த்திய போது அதில் அதிக விரிவுரைகளை அடிகள் தமிழில் ஆற்றியதுடன் விஞ்ஞானப் பொருள்கள் பற்றிய கட்டுரைகளை தமிழிலே மக்களுக்கு அளித்ததுடன் அமையாது ஆங்கிலத்தில் இருந்த விஞ்ஞானச் சொற்களுக்கேற்ற தமிழ் சொற்களையும் ஆக்கி கலைச் சொற்களாக வெளியிட்டார்.

1931ஆம் ஆண்டு ஆடித்திங்கள் தமிழ் நாட்டில் சிதம்பரத்தில் எழுந்த அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் முதல் தமிழ்ப் பேராசிரியர் பதவியை அடிகளார் ஏற்றுக் கொண்டிருந்தார். அக்காலம் தமிழில் விஞ்ஞானத்தைப் பயிற்ற முடியுமென தமிழ் அறிஞர்களிடையே கூட நம்பிக்கையற்றிருந்த காலம் தமிழ் கலைச் சொற்றொகுதி இல்லாக் காலமது. போதிய விஞ்ஞான நூல்களும் தமிழில் அப்போது வெளிவந்திருக்கவில்லை.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் ஒருநாள் பௌதீக வகுப்பொன்று நடந்து கொண்டிருக்கும் போது, அவ்வழியே சுவாமி அவர்கள் சென்று கொண்டிருந்தார். வகுப்பில் எடுத்துக் கொண்ட விடயம் சிக்கலானது. போதனா மொழி ஆங்கிலமே. விரிவுரையாளரும், மாணவர்களும் இடர்ப்படுவதை புரிந்து கொணட அடிகளார் விரிவுரையாளரின் உத்தரவுடன் வகுப்பறையினுட்சென்று யாதொரு முன்னேற்பாடும் இன்றி பாடத்தை தமிழிலே அரைமணி நேரம் போதித்தார். விரிவுரையாளர் உட்பட மாணவர்கள் எல்லோரும் தெளிவுற்றனர்.

1934ஆம் ஆண்டு சென்னைத் தமிழரின் முதலாவது மகாநாடு சென்னையிலே நடைபெற்றது. விஞ்ஞானக் கலையை தமிழிலே போதிக்க போதிய ஆங்கிலப் பதங்களுக்கேற்ற தமிழ்ச் சொற்கள் இல்லாததால், பலரும் பலவாறான தமிழச் சொறகளை பயன்படுத்தி வந்தனர். கலைச் சொற்கள் ஒரு மணிப்பிரவாளமாக இருந்து வந்த குறைபாட்டை போக்க இம்மகாநாட்டில் கலைச் சொற்களை உருவாக்கி நூலாக வெளியிட வேண்டுமென்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இத்தீர்மானத்தின் படி சென்னையிலே 'சொல்லாக்கக் கழகம்' என்ற நிலையம் ஏற்படுத்தப்பட்டது. 1936இல் சென்னை பச்சையபபன் கல்லூரியில் சொல்லாக்கக் கழகம் உருவாக்கிய கலைச சொற்களை பரிசீலித்து முடிவெடுக்க தமிழ்ச் சொல்லாக்க மாநாடு நடைபெற்றது. விபுலானந்த அடிகளாரின் தலைமையில் கலைச் சொற்கள் தேர்வுக்கு விடப்பட்டு இதன் பயனாக சென்னை மாகாண தமிழ்ச் சங்கம் கலைச் சொற்கள் என்ற நூலை தமிழுக்கு அளித்தது.

அதன் பின்னர் 1942ஆம் ஆண்டு ஆவணித் திங்கள் 01ம் திகதி மதுரை மாநகரில் முத்தமிழ் மாநாடு நடந்தது. அம்மாநாட்டின் இயற்தமிழ் அரங்கிற்கு தலைமை தாங்கி உரை நிகழ்த்திய அடிகளார்,

"கால நீரோட்டம் விரைந்து ஓடுகின்றது. தமிழர் பழங்காலத்துச் சிறப்பினை மாத்திரம் பறையறைந்து கொண்டிருப்பாரெனின், நிகழ்காலத்தையும், எதிர் காலத்தையும் முற்றிலும் இழந்த நீர்மையராதலும் கூடும். சென்ற நூற்றாண்டிலேயே ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலும் விஞ்ஞான நூல் விருத்தியடைந்து விளங்குகின்றது. அந்த அறிவுச் செல்வத்தை தமிழ்மொழி பெறுவதற்கு ஆவன செய்தல் சிறந்த தமிழ்த் தொண்டாகும். இலண்டன் மாநகரிலுள்ள வேத்தவை (*Royal Society*) எனும் அறிவு நூற்புலவர் குழுவானது நமது தமிழ் நாட்டிலேயே பிறந்து தமிழ் நாட்டுக் கலைக் கழகங்களிலே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி பயின்று கணித நூலிலும், விஞ்ஞான நூலிலும் பெரும் புலமைபடைத்த திரு.ராமானுஜம், திரு.இராமன், திரு.கிருஸ்ணன் என்று இன்னோருடைய புலமையைப் பாராட்டி அவையகத்தாராக்கிய செய்தி கேட்டு நாம் எல்லாம் பெரும் மகிழ்வடைந்தோம். கணித, விஞ்ஞான அறிவு நிரம்பி பூவுலகத்துப் பேரறிஞர் குழுவிலே தலையணியி லிருக்கும் ஆற்றல் தமிழனுக்கு உண்டு என்பதை அறிந்து கொண்டோம். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தாரின் சிறந்த முயற்சியினாலேயே தமிழ் மொழியிலே பூதநூல் (*Physics*) ,வேதிநூல் (*Chemistry)*, புதிய தருக்கநூல் (*Logic*)என்று இவை வெளிவந்துவிட்டன. ஆட்சியும், குணமும் காரணமாகக் கலைச்சொற்கள் காரணமாக நாளடைவிலே செம்மையுறும் தன்மையாயின. அங்ஙனமாதலின் வடமொழி, தென்மொழி, மேற்றிசை மொழி என்னும் முந்நீர மொழிகளும் இற்றை நாளிலே அறிவுப் பெருங்கடலிலே கலத்தலை யாமெல்லாம் விருப்போடு ஏற்றுக் கொள்வோமாக. தமிழ் நாடு தனக்குரிய ஆக்கத்தினை பெறுகிற நன்னாளிலே அவ்வறிவுக் கடலிலிருந்து எழப்போகின்ற தமிழ் முகிலானது புன்மையாகிய உவர்த்தன்மையினை முற்றிலும் நீக்கி தூய தமிழ் நீரினை நாடெங்கும் பொழிய காண்போம்.அந்நன்னாள் மிகவும் அணுகி வருவதென்பதற்கு இம்முத்தமிழ் மாநாடே சான்று பகருகின்றது. மூடநம்பிக்கையோடு கூடிய பௌராணிக மனப்பான்மையென்றும் இருள் அகல்கின்றது. அறிவுக் கதிரோனுடைய இளவெயிலானது நம் உள்ளத்துக்கு உவகையையும் உடலத்திற்கு புதிய வலிமையையும் தருகின்றது. புத்தம் புதிய நூல்கள் பலவற்றை புனைந்து தமிழ் அன்னையின் திருவடிகளிலேயே காணிக்கையாக வைப்போமாக என முழங்கினார்.


பின்னர் ராஜாஜியின் தூண்டுதலின் பேரில் சென்னை தமிழ் வளர்ச்சிச் சங்கமும் சென்னை கல்வி அமைச்சராக விளங்கிய திரு.பக்கவத்சலம் அவர்களால் நியமிக்கப்பட்ட குழு ஒன்றும் கலைச் சொற்களை ஆக்கி வெளியிட்டதை தொடர்ந்து பாரதத்தில் தமிழில் விஞ்ஞானப் போதனைகள் இடம்பெறலாயின. 1943ஆம் ஆண்டு இலங்கைப் பல்கலைக்கழக தமிழ்த்துறை பேராசிரியராக பதவியேற்று இலங்கை திரும்பிய அடிகளார் தமிழில் விஞ்ஞானக் கல்விக்கு மீண்டும் இலங்கையில் உரமூட்டினார்.

1960ஆம் ஆண்டுகளின் முற்பகுதியிலிருந்து தமிழில் அறிவியலை கற்பிக்க முடியுமென்ற எண்ணம் வலுவடைந்தது. ஆங்கிலத்தில் அறிவியல் சார்ந்த துறைகளை கற்று நிபுணத்துவம் பெற்ற தமிழறிஞர்களின் மொழிபெயர்புக்கள் மூலமும் நேரடியாக தமிழிலேயே கற்பிக்கப்பட்டும் வளர்ச்சியடைந்தும் என்று பாரதத்திலும், ஈழத்திலும் ஆரம்பநிலைக் கல்வியிலிருந்து பல்கலைக்கழக மட்டம் வரை விஞ்ஞானம் தமிழில் கற்பிக்கப்படுகின்றது. விஞ்ஞான நூல்களும் தமிழில் ஏராளம் வந்துவிட்டன. ஈழமும், பாரதமும் ஒன்றுபட்டு கலைச் சொல்லாக்கம் செய்து அறிவியல் நூல்களை தமிழிலேயே மொழி பெயர்ப்பதற்கு 1968இல் சென்னையில் நடந்த இரண்டாவது உலக தமிழாராய்ச்சி மாநாடு வித்திட்ட பின்னர் கலைச் சொல்லாக்க தொகுதிகளும் விஞ்ஞான நூல்களும் தமிழில் இன்னும் ஏராளமாக வந்துவிட்டன. தாய்மொழிக் கல்வியின் அவசியம் உணரப்பட்டதும் இதற்கொரு உந்து சக்தியாக விளங்கிற்று. தமிழ் நாட்டிலிருந்து வெளிவந்த கலைக்கதிர், அணுக்கதிர் ஆகிய அறிவியல் சஞ்சிகைகளும், ஈழநாட்டி லிருந்து வெளிவந்த கமத்தொழில் விளக்கம் (இலங்கை விவசாயத் திணைக்கள வெளியீடு) வீரகேசரி நிறுவன வெளியீடான நவீன விஞ்ஞானி இலங்கை பேராதனைப் பல்கலைக் கழகத்தின் ஊற்று, இலங்கையின் கிழக்கு மாகாணத்தின் கல்முனை ஸாஹிராக் கல்லூரி வெளியிட்ட 'அம்பு' ஆகிய சஞ்சிகைகளும் தமிழில் விஞ்ஞானத்தை சாதாரண மக்களிடம் பரப்புவதற்கு ஆற்றிய பங்களிப்பு குறிப்பிடப்பட வேண்டியது. அறிவியல் சார்ந்த சஞ்சிகைகளும், பத்திரிகைகளும் தமிழில் ஏராளம் வெளிவரும் அளவிற்கு இன்று தமிழில் விஞ்ஞானக் கல்வி வளர்ச்சியடைந்துள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனினும் வளர்ந்துவரும் விஞ்ஞானத்தை வளர்ந்து வரும் தமிழும் ஏற்றுக் கொள்ளுதல் அவசியம். விஞ்ஞானத்தை மக்களுக்கு இலகுவாக வழங்கும் மொழியே மக்கள் மொழியாக மதிக்கப்படும் நிலை எதிர் காலத்தில் உருவாகலாம். ஆதலினால் இதுவரை ஆக்கப் பெற்ற கலைச் சொற்களும் தமிழில் வெளிவந்துள்ள அறிவியல்சார் ஏடுகளும் போதுமானவையல்ல. புதிய விஞ்ஞான தொழிநுட்ப கண்டுபிடிப்புக்கள் காரணமாக ஆங்கிலத்தில் ஏற்படும் புதிய சொற்களுக்கு பொருத்தமான புதுக்கலைச் சொற்களைதமிழில் ஆக்கும் தேவை மேலும் மேலும் வந்து கொண்டிருக்கும். மேலும் அசுர வேகத்தில் வளர்ந்து வரும் தகவல் தொழிநுட்ப வளர்ச்சி காரணமாக தமிழில் கலைச் சொல்லாக்கத்தேவை மேலும் அதிகரிக்கும். இயல், இசை, நாடகம் எனும் முத்தமிழோடு நான்காவது தமிழாக *"அறிவியல் தமிழ்"* அறிமுகமாகி வரும் இக்கால கட்டத்தில் இத் துறையில் விபுலானந்த அடிகளார் ஆற்றியபணி *"தமிழில் விஞ்ஞானக் கல்வி"*வரலாற்றில் பதிவுக்குரியதோர் முன்னோடிச் செயற்பாடாகும்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# காரைதீவுப் பிரதேசத்தில் நாட்டுப்புறக் கலை

சி.இராமநாதன்

கிராமியக் கலைகளே நாட்டுப்புறக்கலைகள் என வழங்கப்படுகின்றன. இக்கலைகளுள் பரம்பரை பரம்பரையாகப் பின்பற்றப்பட்டு வந்த கலைகளும் அடங்கும். விவசாயிகளும், உழைப்பாளிகளும் தமது ஓய்வு நேரத்தை பயனள்ள வகையில் கழிக்கவும், உழைத்துக் களைத்த பின்னர் மனமகிழ்ச்சி அடைவதற்கும் ஆடல், பாடல்களில் ஈடுபட்டு வந்தனர். இவையே பிற்பாடு கலைகளாக மலர்ச்சியடைந்தன.

வண்டிலோட்டும் போதும், மாவிடிக்கும் போதும், வலை இழுக்கும் போதும், வயல் வேலை செய்யும் போதும் ஆடிப்பாடி வேலை செய்து தம் களைப்பையும், அலுப்பையும் போக்கினர் நம்முன்னோர். நகர்ப்புறக் கலைகளான நாடகம், நாட்டியம், இசைக்கச்சேரி, சினிமா என்பன கிராமங்களுக்கும் பரவியதால், ஒரு சில நாட்டுப்புறக்கலைகள் அருகிப் போனாலும், முற்றாக அழிந்துவிடாமல் பாதுகாத்துப் போற்றப்பட்டு வருகின்றன என்பதை மறுக்க முடியாது. அந்தவகையில் எமது காரைதீவில் பின்பற்றப்பட்டு வரும் நாட்டுப்புறக் கலைகளைப் பற்றி பார்க்கலாம்.

வங்கக் கடலின் மீன் வளமும்
வளைந்த வட்டை வயல் விளைவும்
தங்கும் கல்வி தர மோம்பத்
தலமெனப் பத்து ஆலயமும்
தெங்கு வாழை கமுகினோடு
தேன் கனி மா சூழ் காரைதீவில்
எங்கள் நாட்டுப்புறக் கலைகள்
ஏற்றம் கண்டு மிளிர்கிறதே!

இத்தகைய இயற்கை எழில் ததும்பும் காரைதீவில் வாழ்ந்து வரும் தமிழ் மக்கள் பெரும்பாலும் இந்து மதத்தைச் சேர்ந்தவர்களேயாவர். பிரதேசத்தின் பல பாகங்களிலும் பற்பல இந்து ஆலயங்களை அமைத்து வழிபட்டு வரும் இப்பெருமக்கள் நாட்டுபுறக் கலைகளில் மிகவும் நாட்டமுடையவர்களாகவே விளங்கியிருக்கின்றனர். பண்டைக்காலம் தொட்டு இங்கு பலவகையான நாட்டுக்கலைகள் கையாளப்பட்டு வந்துள்ளன. அவையாவன:

01. கொம்புமுறி
02. நாட்டுப்பாடல்
03. நாட்டுக்கூத்து
04. நாடகம்
05. வில்லுப்பாட்டு
06. நடனம், கும்மி
07. வசந்தன் கூத்து எனப்படும் கோலாட்டம்
08. காவடியாட்டம் என்பனவாகும்.

இவற்றுள் "கொம்புமுறி" என்னும் விளையாட்டுக்கலை கடந்த 1960ஆம் வருடத்திற்கு முற்பட்ட காலத்தில் இப்பிரதேசத்தில் மிகச்சிறப்பாக நடைபெற்று வந்துள்ளதாக அறியக்கிடக்கின்றது. இதன் பிற்பட்டகாலத்தில் இவ்விளையாடால் மக்கள் இருபகுதியாகப் பிரிக்கப்படுவதையும், குரோதமனப்பான்மை உருவாவதையும் கருத்திற் கொண்டு இக்கலை காலப்போக்கில் கைவிடப்பட்டுள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடசேரி, தென்சேரி என இருபிரிவாகப் பிரிக்கப்பட்டு எந்தப்பக்கத்துக் கொம்பு முறிக்கப்படுகின்றது? எந்தப்பகுதி வெற்றியடைகின்றது? எனப்பெரும் போட்டி மனப்பான்மை கொண்டே இக்கலையில் தம்மை ஈடுபடுத்திக் கொள்வர். இதில் இடம்பெற்ற சில பாடல் வரிகளை நோக்குவோமாகில்,

ஆத்தோரம் சிருப்பி கட்டி
அதிலே நின்று படைபொருதி
வேர்த்துவாறான் வட சேரியான்
வெள்ளிமடல் கொண்டு வீசிங்கடி
ஆத்தோரம் சிறாம்பி கட்டி
அதிலே நின்று படைபொருதி
தோற்றுவாறான் தென்சேரியான்
துடைப்பங்கட்டையாலே அடியுங்கடி!

இப்படிக் குரோதத்தை வளரக்கக்கூடிய வகையிலேயே இக்கலை காணப்பட்டது. இதன் காரணமாகவே இவ்விளையாட்டு கைவிடப்பட்டதாக முன்னோர் சொல்லக் கேள்விப்பட்டதுண்டு. இவ்விளையாட்டு பெரும்பாலும் இப்பிரதேசத்தில் முக்கிய சந்தியான டாக்டர் மா.பரசுராமன் அவர்களின் வீட்டிற்கு அருகாமையிலுள்ள சந்தியிலே இடம் பெறுவது வழக்கம். இதனால் இச்சந்தி இன்னும் 'கொம்புச்சந்தி' எனப்பெயர் பெற்று விளங்குவதைக் காண்கின்றோம்.

இதற்கடுத்தபடியாக கையாளப்பட்டு வந்தது நாட்டுப்பாடலாகும். இது ஒரு காலத்தில் மட்டக்களப்பு பிரதேசத்தில் மிகவும் பிரசித்தி பெற்று விளங்கியுள்ளது. வயலிலே வேளாண்மை வெட்டுபவர்கள் கூட இனிய பாடல்களை பாடிக்கொண்டே செயற்படுவர். இங்கு ஒருபாடலை எடுத்தாள்வது பொருத்தமுடையதென நினைக்கின்றேன்.

"வாடையாலே மழையும் இருளுது
வாருங்கோ நண்பர் உப்பட்டி கட்டுவோம்"

இவ்வாறு இனிமையான பாடல்களை அவர்களாகவே இயற்றிப்பாடி வந்துள்ளனர். இது மட்டுமல்ல காரைதீவின் கடல் பிரதேசத்தில் பழங்காலம் தொட்டு வழக்கில் இருந்து வரும் கரைவலை மீன்பிடித் தொழிலைச் செய்பவர்கள் கூட கடலிலே தோணியைத் தள்ளும் போதும், பின்னர் வலைகளை கரைக்கு இழுக்கும் பொழுதும் சிறந்த நாட்டுப்பாடல்களை இயற்றிப் பாடிக்கொண்டு தொழில் புரிவதை இன்று கூட கவனிக்கக் கூடியதாக உள்ளது.

ஏலம் ஏலம்...............ஏலடி ஏலம்
ஏன்னடா தம்பி............மீனைக் கண்டாயா?
சோழகத்துக்க............ பாருடா மச்சான்
சூரைக் கூட்டம்.......... பாாய்ந்து கடிக்குது.
வாடை நீரும் ............ வருகுமெண்டா
வலைப்பாட்டில் ............ வருகும் மச்சான்

இப்படியான பாடல்கள் அவ்வப்போது அவர்களாலேயே உண்டாக்கிப் பாடப்படுகின்றது. இதனைப் பாடிக்கொண்டு செயப்படுவதால் வெயிலின் களைப்புத் தெரியாமலும் அலுப்பில்லாமலும் வேகமாகச் செயப்படக் கூடியதாக உள்ளது. "ஆடிப்பாடி வேலை செய்தால் அலுப்பிருக்காது". என்பது போல இத்தகைய நாட்டார் பாடல்களைப் பாடிக்கொண்டு சந்தோஷமாகத் தொழில் புரியும் பழக்கம் இன்னும் நம்கிராமத்து மீனவர்களிடையே உண்டு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படியான நாட்டார் பாடல்கள் பற்பல மெட்டுக்களில் பாடக்கேட்டதுண்டு. காதல் வசப்பட்ட இருவர் தங்கள் காதல் நிறைவேறுவதற்காக இறைவனை வேண்டி இப்படியும் பாடுகின்றனர்.

"மாவடிக் கந்தா எங்கள்
மனக் கவலை தீர்ப்பாயானால்
சாகும் வரையும் உன்னைச்
சாமி என்றே கைதொழுவோம்"

இதுபோன்று ஒரு மாணவன் பள்ளிப் பருவத்தில் விட்ட தவறை எண்ணி வருந்தும் பின்வரும் பாடல் இன்றைய மாணவர்களைச் சிந்திக்கத் தூண்டும்.

கல்வி கற்கும் காலமதில்
காதல் கொண்டு நானலைந்து
எல்லாம் பெயிலாகி
ஏங்குகின்றேன் என் கிளியே

நாட்டுப் புறக்கலைகளில் "நாட்டுக் கூத்து" சிறப்பம்சம் பொருந்தியதாகும். முன்னைய காலங்களில் விவசாயமே முக்கிய தொழிலாக இப்பிரதேச மக்களிடம் காணப்பட்டது. நீர்ப்பாய்ச்சல் வசதியற்ற மாரியை நம்பி மட்டும் பயிர்செய்யக்கூடியதாக அக்காலம் மாரிப்போகம் மட்டுமே வேளாண்மை செய்யக்கூடியதாக இருந்தது. இவ்வாறு ஒரு போகம் வேளாண்மை செய்து அறுவடை முடிந்தால் ஆறுமாத காலம் வெறுமனே தொழிலின்றிச் சோம்பித்திரிய வேண்டிய காலமாக அமைந்திருந்தது. இக்காலத்தில் கூத்தாடுதலையே பொழுதுபோக்காக கொண்டு மகிழ்ந்தனர். நாட்டுக் கூத்து என்று கூறுமிடத்து அது மூன்று வகைப்படும். அவையாவன.

01. வடமோடி 02. தென் மோடி 03. விலாச மெட்டு

என்பனவாகும். இவற்றுள் தென்மோடி என்பது பாடிக்கொண்டே ஆடுவது. ஊதாரணமாக ஒரு பாடலைக் கவனிப்போம்.

"என்னை மணம் புரிந்த மணவாளா - தனியே
இருக்கக் கடனாச்சுதே கண்ணாளாய்"

இது தென்மோடிக் கூத்தான "வாழப்பீமன்" நாட்டுக்கூத்தில் வரும் ஒரு பாடலாகும். இதே போன்று வடமோடிக் நாட்டுக் கூத்தான "லெட்சுமி கல்யாணம்" என்னும் கூத்தில் வரும் ஒரு பாடலைக் கவனிப்போம்.

பெண்: பொன்னனின் மூத்த மகன்-அழகுள்ள
புத்திரன் அப்புக்காத்தே...........
ஆண்: அப்புக்காத்தாகையினால்-அதிகமாய்
ஆதனம் கேட்பானே...........
இப்படிச் சீதனங்கள் கொடுத்திட
எப்படிக் கட்டும் பெண்ணே!
பெண்: பண்டிதம் பாசிபண்ணி பசறையில்
படிப்பிக்கும் கணபதிக்கே
எண்டிசையும் போற்ற – லெட்சுமியை
ஏற்று நடத்துவமே ..........
ஆண்: பண்டிதம் படிச்சவன் தான் - கணபதி
பாஸ் பெற்ற குடிகாரேன்
கண்டவர் பேசுவாரே – பெண்ணேவள்ளி
காறி உமிழ்வாரே.......


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விலாச மெட்டு நாட்டுக் கூத்தான "அரிச்சந்திரன்" நாட்டுக் கூத்தில் ஒரு பாடலைப் பார்ப்போம்.

"அத்திபுரி யெந்தன் தேசம்
அரிச்சந்திரன் நானிந்த வேசம்
ஆனேன் ஐயன் படுமோசம்
ஆசை நேசமுள்ளவரே நல்யோகம்"........

இப்படி மூன்று வகையான நாட்டுக் கூத்துக்கள் எம்மத்தியில் எடுத்தாளப்பட்டு வந்துள்ளன. நான் அறிந்த வகையில் காரைதீவின் முதலாம் பிரிவின் "அநுபுத்திரன்" நாடகம், "சாம்பேசுரயுத்தம்" மற்றும் கப்புகன் கைலாயர் அவர்களால் ஆடப்பட்ட ஸ்ரீவள்ளி நாட்டுக்கூத்து என்பன அக்காலத்தில் மிகபிரசித்தமாக ஆடப்பட்டு அரங்கேற்றப்பட்டன. காரைதீவு-07ஆம் பிரிவில் "பெருவெள்ளான் நாடகம்", "வாழபீமன்"நாடகம் என்னும் கூத்துக்களும், காரைதீவு–08ஆம்பிரிவில் "லெட்சுமி கல்யாணம்", "பதினான்காம்போர்", "அரிச்சந்திரன்நாடகம்", "பப்பிரவாகன்"நாடகம் என்பனவும் காரைதீவு–11ஆம்பிரிவில் "உருப்பினரி கல்யாணம்" எனும் நாட்டுக்கூத் தும் வெகுவிமர்சையாக ஆடப்பட்டு அரங்கேற்றம் கண்டன. கப்புகன் கைலாயர் வே.தம்பிராசா ஆசிரியர் போன்றோர் இவைகளை வானொலிக்கு பரப்பக்காரணமாயிருந்தனர்.

அக்காலத்தில் கூத்தாடுபவர்களுக்கு நல்ல மதிப்பு காணப்பட்டது. ஒருவரின் வரவு வந்துவிட்டால் அவரது உறவினர்கள் ஒவ்வொருவராக மேடைக்கு வந்து மாலை அணிவித்தல், சால்வை கட்டுதல், பரிசில்கள், சன்மானங்கள் கொடுத்தல், வெடிக் கொழுத்தி ஆரவாரம் செய்தல் வழமை. இது கூத்தாடுபவரை உற்சாகப்படுத்துவதாக அமைகின்றது. அதன்றியும் அக்காலத்தில் பெண்களுக்கு மாப்பிள்ளை தேடும் பொழுது கூத்தாடுபவர்களுக்கே முதலிடம் அளிக்கப்பட்டது. தற்காலத்தில் பட்டதாரிகளைத் தேடுவது போலாகும் என்று கூறலாம்.

இப்பிரதேசத்தில் செல்லத்துரை அண்ணாவியார், கல்முனையில் வசித்து வந்த சின்னையா அண்ணாவியார், முதலாம் பிரிவைச் சேர்ந்த க.வேலுப்பிள்ளை அண்ணாவியார், கரடித்தோட்டத்தில் வசித்து வந்த காளிக்குட்டி வேலுப்பிள்ளை அண்ணாவியார் போன்றோர் நாட்டுக்கூத்துக் கலைக்காக இக்கிராமத்தில் பெரும் ஒத்துழைப்பை நல்கியுள்ளனர். இவர்கள் அனைவரும் இறைபதம் எய்திவிட்டனர். இன்றைய காலகட்டத்தில் மயில்வாகனம் தேவதாசன் என்பவர் மாத்திரமே "அண்ணாவியார்" எனப்படும் மத்தளம் அடிக்கும் கலையில் கைதேர்ந்தவராக உள்ளார்.

நாட்டுப்புறக் கலையில் 'வசந்தன் கூத்து' எனப்படும் "கோலாட்டம்" நிகழ்வும் பழைமை வாய்ந்த கலைகளில் ஒன்றாகும். இக்கலையில் காரைதீவு-01ஆம் பிரிவில் வசித்து வந்து சுனாமியின் போது காலமான திரு.க.வேலுப்பிள்ளை என்பவர் சிறுபிள்ளைகளைக் கொண்டு வசந்தன் கூத்துக்களை பழக்கி, அரங்கேற்றியுள்ளார். இதன் ஒருபாடலைக் கவனிப்பது பொருத்தமுடையதாகும்.

தினதந்தினா தினதந்தினா தினதந்தினா தின்னா
தென்ன தெந்த நாதின்னா
தினதந்தினாத் தின்னா

குண்டிடுக்கிக் குடுகிடுக்கிக் கூடைகையில் ஏந்திக்
குனிந்து நின்று பழம் பொறுக்கும்
குமரனடி அம்மே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு பாடல்களில் மூலம் பல இதிகாச கதைகளை மக்களுக்கு எடுத்துக்காட்டுவது மாத்திரமல்லாமல் இது இளைஞர்களுக்கு ஒரு சிறந்த உடற்பயிற்சியாகவும் காணப்பட்டது. இதேபோன்றே கோலாட்டம், கும்மி, கரகாட்டம் என்பனவும் இப்பிரதேசத்தில் சிறப்புற்று விளங்கியது.

கந்தனை யீன்ற மகமாரி – நல்ல
கண்ணுள்ள பத்தினித் தாயாரே
செந்தமிழக் கம்மி பாடனால்ல
சித்தி வினாயகர் காப்பாயே –

வெள்ளிக் கிழமை உதயத்திலே
விளங்கம் சன்னிதி வாசலிலே
வள்ளிக் கினசந்த வடிவேலர் மண
வாரள் வாளுர் கும்மியடி

இதுவரை கூறிவந்த கலைகளைப் போன்று காவடி ஆட்டமும் இப்பிரதேசத்தில் மிகப்பண்ணெடுங்காலந் தொட்டு இன்றும் வழக்கிலிருந்து வருவது கண்கூடு. இக்கலையில் பெரும்பாலம் காவடிப்பொன்னர் என அழைக்கப்படும் அமரர் பொன்னம்பலம் அவர்களே மிகநீண்ட காலமாக ஈடுபாடு உடையவராகத் திகழ்ந்தார். காவடிகள் மூன்று வகைப்படும். அவை பாற்காவடி, முள்ளுக்காவடி, தூக்குக்காவடி அல்லது பறவைக்காவடியாகும். இப்பிரதேசத்தில் முதல் இருகாவடிகளுமே கூடிய பாகம் செயற்படுத்தப்பட்டு வந்தன. தூக்குக் காவடி அரிதாகவே காணப்பட்டது.

பாற்காவடி சிறுபிள்ளைகளைக் கொண்டு ஆட்டுவிக்கப்பட்டது. இதற்கு எந்தவித முள்ளோ அலகோ பாச்சுவது கிடையாது. இது சிறுவர்களைக் கொண்டு செயற்படுத்தப்பட்டு வந்தமையால் பாற்காவடி எனப்பெயர் பெறலானது. முள்ளுக்காவடி என்பது வாலிபர்களால் அதாவது ஓரளவு வயது வந்தவர்களால் ஆடப்பட்டு வருவது. இதற்கு வாயிலே அலகுபாச்சுவர். சிலர் அலகுபாச்சாமல் ஆடுவதுமுண்டு. இது இறைவன் மேல் குறிப்பாக முருகப்பெருமானுக்கு நேர்த்தி வைத்து ஆடுவதாகும். ஆடி அமாவாசை தீர்த்த உற்சவத்தின் போது இடம் பெறும் முருகப்பெருமானின் வீதி உலாவின் போது நூற்றுக்கணக்கான பக்தர்கள் முள்ளுப்பாச்சி காவடி ஆடி வருவர். இக்காவடி ஆடுபவர்களின் முதுகிலே நான்கு சோடி அல்லது ஆறு சோடி முட்கள் மந்திரத்தால் உருக்கொடுத்து குத்தப்படுவது மரபு.

கழுகு மலை தனிலுறையும் முருகவேளே
கருத்துடனே உன்பாத மலர்தாளே ஓதப்
பழுதொன்றும் வாராமல் காக்க வேணும்
பச்சைமால் தன் மருகா பார்வதியின் மைந்தா
வழுவாமல் அடியேன்முன் நிற்க வேணும்
வரும்பிழைகள் தனை அகற்றி வழியே செய்வாய்
தெளிவாக உன்பாதம் துதிப்பேனையாசுவாமி
தென் காரைதீவிலுறை குமரா போற்றி!

இப்படியான பாடல்களைப் பாடிக்கொண்டே காவடி ஆட்டம் ஆடுவர். இக்காவடிகளைச் செய்யும் கலையில் காவடிப்பொன்னர் அவர்கள் நீண்ட காலமாகச் செயற்பட்டு வந்தார். இது ஒரு தனிப்பெரும் கலையாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“யார்மனிதன்” என்னும் நாடகம் திரு.செல்வதவநாயகம் ஆசிரியரால் தயாரித்து மேடையேற்றப்பட்டது.”அம்பிகாபதி”,”பொற்கிளி”,”கூலிக்குகட்டியதாலி”,”மனமே கோயில்” போன்ற சிறப்புமிகு நாடகங்களும் பலரால் மேடையேற்றப்பட்டன. இவற்றில் நாட்டுக் கூத்து, வசந்தன் கூத்து என்பன அருகிவருவதைக் காணக்கூடியதாய் உள்ளது. போதியகால நேரமின்மையும், கூடிய செலவினங்களுமே ஆகும். அதுமட்டுமன்றி இக்கலைகளைச் செய்து வருபவர்களுக்கு இக்காலத்தில் எவரும் ஊக்கமளிப்பது மிகக்குறைவாக உள்ளதே முக்கிய காரணியாகத் தென்படுகின்றது.

முன்னைய காலங்களை விட நாட்டுப்புறக்கலைகள் மிகவும் வேகமாக அருகிக்கொண்டே வருகின்றன. எனவே இத்துறையில் போதிய ஆக்கமும் ஊக்கமும் அளித்தாலன்றி எதிர்காலத்தில் நாட்டுப்புறக்கலைகளைக்காண முடியாமலே போய்விடும் என்பதில் எந்தவித ஐயப்பாடும் இல்லை. பண்டைய காலத்துடன் ஒப்பு நோக்கி எதிர்காலத்தில் இக்கலைகளை வளர்கக்கூடிய வகையிலே அத்துறை சார்ந்தவர்களுள் போதிய ஊக்கத்தை கொடுப்பதன் மூலம் இப்பிரதேசத்தில்இக்கலைகள் செழிப்புற்றியங்க வழி அமைக்க முடியும் .

*Missing in action*

மேலும், மீன்பிடி சம்பந்தமாகவும், விவசாயம் சம்பந்தமாகவும் மிகச் சுருக்கமாக சில குறிப்புகள் கோடிட்டுக் காட்டுவது பொருத்தமுடையதாக இருக்குமென எண்ணலாம். காரைதீவில் மீன் பிடியைப் பொறுத்தவரை கரைவலை மீன் பிடியே பெரும்பாலும் நடைபெறுகின்றது. அத்தோடு சிறிதளவு மாயவலை மீன்பிடியும், போர்ட் தூண்டில் மீன்பிடியும் இடம் பெறுகின்றது. மற்றும் புதிய நடைமுறைகளோடு பாரம்பரிய விவசாயமும், காரைதீவுக்குரிய கந்தன்வெளி, பரமன்கண்டம் ஆகிய வயல்வெளிகளில் நடைபெறுகின்றன. இவைகளிலும் அன்று தொட்டு இன்றுவரை மரபு ரீதியாக நடைபெறும் நிகழ்வுகளும் உள்ளன.

கரைவலை மீன்பிடியின் போது மீன்படும் பொருட்டு தோணிவலையை மந்திரவாதியால் மந்திரிக்கச் செய்து, தோணியை தள்ளும் பழக்கம் இன்றும் உள்ளது. மேலும், மீன்படுமிடத்து கூக்குரல் இட்டு வலை இழுக்க மக்களை அழைக்கும் மரபும் உள்ளது. மற்றும் வலை இழுப்போர் “ஏலேலோ ஏலக்கா” பாட்டுப்பாடி களைப்பை போக்கி வலை இழுப்பதும் பிடிபடும் மீனின் ஒரு பகுதியை வலை இழுத்தவர்களுக்கு பகிர்ந்தளிப்பதும் நடைமுறையிலுள்ள மரபுகளாகும்.

அதேபோன்று, விவசாயத்துறையில் நவீன முறை புகுத்தப்பட்டாலும், பழைய மரபுகளும் இடம் பெறுகின்றன. ஏர் நாளில் முதன்முதலில் வயலுக்குச் சென்று வேலை ஆரம்பிப்பதும், நீரில் விதை நெல் மூடைகளை ஊறவைத்து முளை ஆரம்பித்ததும், முளை பரப்பி பின் வயலுக்குக் கொண்டு சென்று கைப்பெட்டியில் முளை அள்ளி வீசி விதைப்பதும் மரபு வழியாக நடைபெறுகின்றன. அடுத்து விளைந்ததும் முதல் பழுத்த கதிர்களை அறுத்து வந்து புதிர் உண்பதும், களவெட்டி செதுக்கி கடல் நீர் தெளித்து இரும்பு புதைத்து சூடு போடுவதும் சில இடங்களில் இடம் பெறுகின்றன. வயல் வரம்புகள் முன்பு போலவே மரபு வழியாக வயல்காரர்களால் மண்வெட்டி கொண்டு மண் வெட்டிக்கட்டப்படுவதை காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சீதனம்

திருமதி.அருந்தவவாணி சசிகுமார்
ஆசிரியை

பேயும் இரங்குமாம் பெண்ணைக் கண்டால்
சக ஆண்களுக்குப் புரியவில்லை ஏனோ?

பெண் இன்றேல் உலகில் பிறப்பில்லை
இதைப் புரிந்து கொள்ள இங்கு யாருமில்லை

செல்ல மகளாய்ப் பிறந்து மகிழ்ந்திருப்பாள்
நல்ல மங்கையாய் நாணம் பூத்திருப்பாள்

பெற்றோர் மகிழ உயர் கல்வியில் சிறந்திருப்பாள்
தன் நிலையுயர பதவியில் தலை நிமிர்ந்திருப்பாள்

கனவுகளோடு அகம் நெகிழ வரன் பார்த்தால்
சீதனப் பேச்சில் திகில் பரவும் அவள் நெஞ்சில்

ஆணுக்குப் பெண் சரிநிகர் சமானமாம்
சான்றோன் எவனோ உரைத்துச் சென்றான்

மேளம் முழங்க மாலையிட்டு தாலி பூட்ட
இங்கு தாரை வார்ப்பதோ பல இலட்சங்களை

சில ஆண்கள் உயர நினைத்து தம்மைத் தாமே
தாழ்த்திக் கொள்ளும் வித்தியாசமான வேலி இது

திருமணச் சந்தையில் பெண் வாழ்வு மலர
நிச்சயிக்கப்படும் ஆண்களுக்கான விலை இது

எண்ணிய கணவன் கிடைத்து விட்டால்
இல்லறமென்பது நல்லறமாகும் பெண்ணுக்கு

அதுவே சீதனப் பேச்சில் நிலை தளர்ந்தால்
தாங்கிடுமா அவள் உள்ளம்

ஆணும் பெண்ணும் ஒன்று என்ற நிலை வேண்டும்
அங்கு அன்பு மட்டும் குறையாது இருக்க வேண்டும்

சீதனத்தை வென்று நாங்கள் வாகை சூட
ஆணினமும் தோள் கொடுத்து உதவ வேண்டும்

அன்று மலரும் எங்கள் வாழ்வு இனிதாக
காத்திருப்போம் பெண்கள் நாங்கள் அதற்காக.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளைத்தலைவர்கள்



முன்வரிசை (இடம் இருந்து வலம்)
திருமதி. கே. பாலகிருஷ்ணன், திரு. எஸ். ஜெகராஜன், திரு. எஸ். இராமகிருஷ்ணன், திரு. எம். அரசரெத்தினம்

பின்வரிசை
ஜனாப். எம். ரி. எம். கலீல், திரு. எம். ஜீவராஜ், திரு. இ. தவகுமார், திரு. ஆர். கணேசமூர்த்தி, திருமதி, கே. சச்சிதானந்தம், திருமதி. கே. தவராஜா,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# காரைதீவின் விவசாயப் பாரம்பரியம்



இரா.விஜயராகவன்,
விவசாய போதனாசிரியர்,

மருதமும் நெய்தலும் ஒருங்கே சூழப்பட்ட பழம்பெரும் விவசாயப் பாரம்பரிய கிராமமான காரைதீவு கிழக்கே சமுத்திரத்தையும் மேற்கே செல்வம் செழிக்கும் வயல் நிலங்களையும் அத்துடன் மரக்கறிச் செய்கைக்கான மேட்டு நிலங்களையும் கொண்டமைந்தது.

1952ம் ஆண்டு காலப்பகுதியில் விவசாயமுறையானது ஒரு போகம் மட்டுமே செய்கை பண்ணக்கூடியதாக அதுவும் மழையை நம்பி மானாவாரி செய்கையில் விவசாயிகள் ஈடுபட்டார்கள். மழையின்றி பலர் நட்டமும் அடைந்தனர். பின்னர் விவசாயத்துறைக்கோர் வரப்பிரசாதமாக அக்கால அரசு கல்லோயா குளத்தை அமைத்து (சேனநாயக்கா சமுத்திரம்) நீரை முறையாக விநியோகித்தது அதன் பின்னரே விவசாயக்காணிகள் இரு போக செய்கையாக மாறியதுடன் நெற்செய்கையில் ஒரு விழிப்புணர்வு ஏற்பட்டது.

முற்காலப்பகுதியிலே விவசாயிகள் பழமை விரும்பிகளாகவும், பாரம்பரிய விவசாயமுறைகளை பின்பற்றி இயற்கையோடிணைந்து விவசாயசெய்கையில் ஈடுபட்டார்கள் வயல்நிலங்களை (1960) கிடாமாட்டினைக்கொண்டு அல்லது பிணைத்து நிலங்களை பதப்படுத்தினர், உழுதனர் சுமார் 05 ஏக்கரை உழ ஒரு வார காலமானது. பின்னரான காலத்தில் இது உழவு இயந்திர வருகையின் பின் இவ்வேலை இலகுவானது. அத்துடன் இரசாயண பசளை அறிமுகமாகாத காலப்பகுதி அது கூடுதலாக மாட்டெரு, கோழிஎரு, சாம்பல் என்பனவற்றை வயல் நிலங்களுக்கிட்டு விளைச்சலை படிப்படியாக அதிகரித்தனர். 1960ன் பின் பசுமைப்புரட்சியின் பிற்பட்ட காலத்தில் சேதன உரப்பாவனையானது இரசாயன உரமாக மாற்றமடைந்தது இதன் போதே யூறியா, ரி.எஸ்.பி,ரி.டி.எம் அறிமுகமானது இதனால் விளைச்சலும் பன்மடங்கு அதிகரித்தது.

அப்போதைய காலகட்டத்தில் ஆரம்கால நெல்லினங்களாக பச்சபெருமாள், மொட்டகருப்பன், பறகலையான், உவர் கறுப்பன் என்ற பாரம்பரிய இனங்கள் இருந்தது. இவை சுமார் 40-50 புசல்வரை விளைச்சலை தந்தது இது அக்கால தேவைக்கு போதுமானதாக இருந்தது. அதன் பிற்பட்டகாலத்தில் சனத்தொகைப்பெருக்கத்தின் காரணமாக தேவையும அதிகரிக்க உயர் விளைச்சலை தரும் இனங்களில் நாட்டமும் அதிகரித்தது எனலாம். அதன் பிற்பட்ட காலத்தில் H-4, I.R-8, I.R-20 என்பன 1970களில் விதைக்கப்பட்டன இவை சுமார் 60-75 புசல் விளைச்சலை ஏக்கருக்கு தந்தது.

1990களில் பிற்பகுதியிலே இருந்து இன்று வரை பல பூச்சி புழுக்களுக்கும் நோய்களுக்கும், காலநிலைக்கும் தாக்குப்பிடிக்கும் BG-94/1 பத்தலகொட நெல்லாராட்சி நிலையத்தில் இருந்து அறிமுகமானது. அதனோடுடிணைந்து BG-94/2 அறிமுகமானாலும் அது வழக்கொழிந்தது. இவ்வினம் 100-125 புசல் விளைச்சலை ஏக்கருக்கு தந்தது.

இவ்நெல்லினங்கள் அனைத்தும் ஆரம்ப காலகட்டத்திலே 3-4 மூடைகள் ஒரு ஏக்கருக்கான விதை தேவைக்காக பாவிக்கப்பட்டது. ஆனால் தற்போது 2-3 புசல் ஏக்கர் என்றளவில் விதைத்தேவை குறைந்துள்ளது. ஏனெனில் விதையில் முளைத்திறன் தன்மை விருத்தியடைந்ததே காரணமாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந் நெல்லினங்கள் (BG,BW) இரசாயன பசளைக்கு உறுத்துணர்ச்சியை காட்டக்கூடிய திருந்திய நெல்லினமாக அமைந்தது. இவை உயரமாக வளராது. அத்துடன் குறுகிய காலப்பகுதியில் விளைவை தரக்கூடியதாகவும், பாடத்தில் விழாத்தன்மை அதிகூடிய விளைச்சல் என்பன திருந்திய நெல்லினங்களில் இயல்புகளாய் அமைந்தது.

ஆரம்ப காலகட்டத்தில் காரைதீவுக்கிராமத்திலே விவசாயம்செய்வோரில் அதிகமானோர் ஆசிரியர்களாக இருந்தனர். இவர்கள் வயல் செய்கைக்காரனை நியமித்து அதனோடு இணைந்து வயல் வட்டவிதானைமாரின் உதவியுடன் வயல் செய்கையில் ஈடுபட்டார்கள். வயல் சொந்தக்காரரை "போடியார்" என அழைத்தனர். இவ்வட்டவிதானமாரை போடிமார்களே தெரிவு செய்தார்கள். நெற்செய்கையின் போது பயிரைப்பாதுகாக்க வேலிக்காவல்களுக்கு இவரேபொறுப்பாவார். இவர்களுக்குரிய கூலி அறுவடையின் பின் நெல்லாக போடிமாரினால் வழங்கப்பட்டது. வனவிலங்குகளில் இருந்து பாதுகாக்க வெடிக்காறன் போன்ற நியமனங்களும் இடம்பெற்றிருந்தது. பன்றி, விலங்குகளை கொன்றொழிக்க காலத்துக்கு காலம் குறவர்களின் தேவையும் ஏற்பட்டது.

1960ன் முன் வேலிக்காவல் முறை இருந்துள்ளது. வட்டவிதானை தலமையில் அவரவருக்குரிய பகுதி ஒப்படைக்கப்பட்டது. அவர்கள் இரவில் காவற்பறனில் தங்கியிருந்து தீப்பந்தம் கொளுத்தி வயலைக்காத்தனர். இதனால் பூச்சி புழுக்களும் தீயில் விழுந்து அழிந்தது. அத்துடன் அக்காலப்பகுதியல் பூச்சி புழுக்களை அழிக்க வரம்பு நிறைய நீர்கட்டி கட்ட மிலாறு கொண்டு புழுக்களை ஒரு மூலைக்கு ஒதுக்கி வரம்பில் வெட்டி புதைத்தனர். அதன் பின்னரான காலப்பகுதியிலே விவசாய இரசாயன பூச்சி நாசினிகளின் பாவனை அறிமுகமானது. இதனால் இலகுவில் அழித்தனர். அத்துடன் சுற்று சூழலும் படிப்படியாக மாசடையத் தொடங்கியது. காவற் பரனில் காவல் புரிபவர்கள் தங்களுடன் ஒரு கை வலையையும், அத்தாங்கையும் வைத்திருந்தனர். இதன் மூலம் வயலை அண்டிய குட்டை, வாய்க்கால்களில் நன்னீர் மீனைப்பிடித்து, வயல் வரம்புகளில் வளரும் பொன்னாங்காணியையும் பறித்து சமைத்து தமது உணவுத் தேவையை பூர்த்தி செய்தனர். இவ்வாறான காலப்பகுதியில் இருந்து தற்போது மாறுபாடான பல முறை வழக்கத்துக்கு வந்துள்ளது.

1950ன் முன்னர் வயல் நிலங்கள் மேடும் பள்ளமாக இருந்தது, தற்போது நிலங்கள் மட்டமாக இருப்பதற்கு உழவு முறைகளில் உழவின் திருந்திய தன்மையும் உழவு இயந்திரங்களின் வருகையும் ஆகும். ஒரு போகத்துக்கு ஒருதடவையே செய்கை பண்ணப்படுவதால் நெல்லை அடுத்த போகத்துக்கு விதைக்காக பாவித்தனர். இன் நெற்கள் நேர்த்தியாக பட்டறையில் கட்டி சேமித்து வைக்கப்பட்டது. அக்காலப்பகுயில் இருந்த நேர்த்தியான சேமிப்பு முறைகளே விதையின் தரம் கெடாமல் பாதுகாத்திருந்தது எனலாம்.

ஒரு வாரப்பயிரை ஊசிப்பயிர் எனவும், ஒரு மாதப்பயிரை குஞ்சு வேளாண்மை எனவும் இரு மாதப்பயிரை இசாப்பருவம் எனவும் அழைக்கும் வழக்கமுள்ளது. நெல் அறுவடைக்கு தெரிவு செய்யும் போது பூரணமாக நிரம்பிய தன்மை, நெற்கதிரை கையில் பொத்தும்போது களரும் தன்மை என்பன அறுவடைத்தரமாக கணிக்கப்பெற்றது. இவை வெள்ளாமை வெட்டு குழுக்களின் மூலம் அறுவடை செய்யப்பட்டது. ஒருகுழுவில் 20-25 பேர் இருப்பர் இதன் தலைவர் முகாமையாளர் / முகாமைக்காரன் என அழைக்கப்பட்டனர். அறுவடை செய்த நெல்லை உப்பட்டியாக கட்டி கட்டுக்களாக்கி சூடு வைப்பர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


காரைதீவு கிராமத்திலே அக்கால சூடடிக்கும் முறையிலும் பல பண்டைய பாரம்பரிய வழக்கங்கள் நடைமுறையில் இருந்தது. அநேகமாக இரவிலே சூடடிப்பு நடைபெற்றது. பெற்றோல்மெக்ஸ் ஒளியைக்கொண்டு காளை மாட்டு பிணையலால் சூடடித்தனர், சூடடிக்கும் போது களவெட்டி தயாரித்து அதில் சாக்குப்படங்கு விரித்து மதபிரார்த்தனையின் பின் சூடுதள்ளியடிப்பார்கள் அவற்றுள் நெற்கூளங்களை கூட்ட கட்டை மிலாறு பாவிக்கப்பட்டது. நெல்லை துப்பரவாக தூற்ற கம்புகளிலாலான "அவுரி" (ஏறி உயரத்தில் நின்று தூற்ற) பயன்பட்டன.சூடடிக்கும் முன் இறைவழிபாடு கட்டாயமாக்கப்பட்டிருந்தது. சுமார் இரண்டு மணித்தியாலங்கள் 05 பிணையல் மாடுகளை கொண்டு வட்டமாக சாய்ப்பர் பொலிக்கொடியை (வைக்கோல்) வெளியே வீசி விடுவர் இதற்கு வேலைக்கார கம்புகள் பயன்பட்டன.

நெல்லைக்குவித்து பூதம் பிசாசுகளிலிருந்து பொலியைப்பாதுகாக்க கடற்தண்ணீரை வேப்பமிலையினால் தெளிக்கும் ஐதிகம் வழக்கிலிருந்தது. இவ்வாறு சூடடிக்கும் நடைமுறை வழக்கில் இருந்தது.

அக்காலத்தில் இவ்வாறு பெறப்பட்ட நெல்லை வண்டில் மாட்டின் மூலம் வீடடிற்கு கொண்டு வந்து வைக்கோலால் வேயப்பட்ட "பட்டறை" எனும் விசேட சேமிப்புபகுதியில் வீட்டு முற்றத்தில் சேமித்து வைத்தனர். இது நீண்டகாலம் மழையில் இருந்தும் ஏனைய காரணிகளில் இருந்தும் பாதுகாப்பளிப்பனவாக அமைந்தது. அதன் பின்னராக காலகட்டத்தில் சாக்கினால் அமைக்கப்படும் பட்டறை வழக்கத்தில் இருந்தது. தற்போது சாக்குகள் வழக்கொழிந்து பொலித்தின் பைகளின் ஆதிக்கம் அதிகரித்துள்ளது. கைப்பெட்டிகளுக்கு பதிலாக நைலோனிலான பெட்டிகளும் நெல்லை அளக்க மரைக்காலுக்கு பதிலாக வாளிகளே பயன்படுத்தப்படுகின்றது.

அக்காலப்பகுதியிலே இவ்வாறு வண்டில் மாட்டின் மூலம் நெல்லை ஏற்றி வரும்போது தங்கி தேனீர் அருந்த காரைதீவு தைக்கா சந்தியிலே ஒரு பிரபலமான தேனீர் சாலையும் இருந்துள்ளது மூத்த விவசாயிகளின் ஞாபகத்தில் உள்ளது.

**"சுழன்றும் ஏர் பின்னது உலகம்"**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# களவெட்டி உபகரணங்களுக்கான பெயர்கள்



| பொருட்கள் | பரிபாசையான சொற்கள் |
|---|---|
| நெல் | பொலி |
| வைக்கோல் | பொலிக்கொடி |
| கயிறு | நெடுவாலன் |
| சாக்கு | தோல்வாயன் |
| வேலைக்காரன் கம்பு | பல்லு வாயன் |
| மண்வெட்டி | வெட்டு வாயன் |
| மரைக்கால் | கணக்கன் |
| கைப்பெட்டி | குஞ்சுவாயன் |
| கடகம் | பெருவாயன் |
| மாடு | வாரிக்கலன் |
| பாக்கு | கருங்காயன் |
| புகையிலை | புகைஞான் |
| மீன் | கடற்கரும்பு |
| தண்ணீர் | வெள்ளம் |
| தேங்காய்பாதி | பல்லிளிச்சான் |
| வாழைப்பழம் | கரைச்சான் |
| சூட்டடி நெல் | சங்கு முத்து |
| மாட்டுச்சாணம் | கோல் |
| அள்ளு,தூக்கு | கட்டு |
| சாப்பிடுவோம் | வெள்ளம் பெருகுவோம் |

முன்னைய காலகட்டத்தில் காரைதீவு விவசாயிகள் விதை நெல்லினங்களை அண்மையிலுள்ள மல்வத்தை விதை சுத்திகரிப்பு ஆலையில் இருந்தே பெற்றனர். ஆனால் தற்போது விவசாய திணைக்களமும் சேவாலங்கா ஸ்தாபனமும் இணைந்து காரைதீவு விவசாய கம்பனிக்கு அதே மாதிரியிலானான விதை சுத்திகரிப்பு ஆலையையும், இணைந்து அறுவடைசெய்யும் கருவியையும் (Seed Paddy Processing Machine, *Combine Harvestor)* வழங்கி காரைதீவு விவசாயிகளுக்கு மகத்தான சேவையைபுரிந்துள்ளது. இவ்வியந்திரங்களின் வருகை விவசாய பெருமக்களுக்கோர் வரப்பிரசாதமாகும்.

விவசாயத்திணைக்களத்தின் விஸ்தரிப்பு பிரிவினால் புதிய விவசாய நடைமுறைகளும், செய்து காட்டல்களும், மாதிரி செய்கைத்துண்டங்களும் அமைத்து விவசாயிகளுக்கு பயிற்றுவிக்கிறது. அத்துடன் புதிய ரகவிதைநெல்லினங்கள் பற்றியும் பல வயல்விழாக்களையும், பயிற்சி வகுப்புக்களையும், விவசாயிகளுக்கு சுற்றுலாக்களையும் ஒழுங்கமைத்து விசாயத்துறை விருத்திக்கு மாபெரும் பங்களிப்பை வழங்கியுள்ளது. அத்துடன் கமநலசேவை திணைக்களம் மூலம் காரைதீவு விவசாயிகளுக்கு பல சேவைகள் கிடைக்கப்பெற்றுள்ளது. மானிய அடிப்படையிலான உரவினியோகத்தின் பின்னர் வயல்செய்கை மூலம் கிடைக்கும் விளைச்சல் பல்மடங்கு அதிகரித்துள்ளதெனலாம்.அத்துடன் பலருக்கு வயல்செய்ய நாட்டமேற்பட்டுள்ளதெனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக் காலப்பகுதியிலே காரைதீவில் அனேகமாக தென்னைமரங்களும் பனை மரங்களுமே கடலையண்டிய பகுதியில் அதிகமாகக் வளர்ந்து காணப்பட்டது. ஆனால் சூறாவளியின் பின் அனேகமான தென்னை,பனை மரங்கள் அழிக்கப்பட்டு தேங்காய்காக வெளியூர் லொறிகளை காத்திருக்கும் நிலை ஏற்பட்டது அதன் பின் மர மீள்நடுகை மூலம் தென்னை அதிகமாக நடப்பட்டு ஓரளவு தேவையை பூர்த்தி செய்திருந்தபோது கோரச் சுனாமி தாக்கியதால் அநேகமாக பனைமரங்களே அழிக்கப்பட்டது. தென்னை மரங்கள் அழிவடைந்தது குறைவாக இருந்தது. இதை உணர்ந்த அரசசார்பற்ற நிறுவனங்கள் தென்னைமர நாற்றுக்களை வழங்கி மீள் நடுகைக்கு ஊக்குவித்தது. அத்துடன் மயானத்தை அண்டிய பகுதிகளில் கஜு (Cashew) செய்கையும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

காரைதீவிலே முற் காலப்பகுதியில் வெள்ளரிப்பழத்துக்கு பெயர்போனது பிரதான வீதி எங்கும் வெள்ளரி வியாபாரம் களைகட்டியிருக்கும் இது ஒரு இலாபமீட்டும் தொழிலாக இல்லாதுவிடினும் பொழுது போக்குக்காக இதில் பலர் ஈடுபட்டனர். துற்போது ஒரு சிலர் வெள்ளரி பழச் செய்கையில் ஈடுபட்டுள்ளனர்.

**"இயற்கையோடிணைந்த சேதன விவசாயமே நோயற்ற வாழ்வின் முன்னோடி"**
**"எமதுஉணவை எமது கரங்களால் உற்பத்தி செய்வோம்"**

இக்கிராமத்திலே விவசாயத்துறை வளர்ச்சியடைய வேண்டுமானால் ஓரளவு நிலப்பரப்பில் இருந்து அதிக விளச்சலை பெற விவசாயத்திணைக்களத்தின் பயிராக்கவியல் நடைமுறைகளை பின்பற்றி விவசாயத்துறையில் ஈடுபடவேண்டும் அத்துடன் சில கண்டங்கள் ஒருபோகம்மட்டுமே செய்கை பண்ணப்படுகிறது. இதற்கு முறையான வடிகால் வசதி இல்லாததே காரணமாகும் இதை நிவர்த்திக்க நியாப் (Nearp Phase II) நிறுவனம் வடிகால்திட்டத்தை நடைமுறைப்படுத்தினாலும் இது இன்னும் முற்றுப்பெறவில்லை அத்துடன் விவசாயிகள் ஏக காலத்தில் விவசாயத்துறையில் ஈடுபடுவதன் மூலம் பூச்சி புழுக்களின் தாக்கத்தில் இருந்து வயலைப்பாதுகாப்பதுடன் சிறந்த வயல் சுகாதாரத்தை பேணல் மூலமும் விளைச்சலை அதிகரிக்கமுடியும். மண்வளத்தை கூடுதலாக இயற்கை சேதன உரங்களைக்கொண்டு அதிகரித்தல் சாலச்சிறந்தது.

சுனாமியின் பின்னரான காலப்பகுதியில் மரக்கறிச் செய்கைக்கான இடப்பரப்பு குறைக்கப்பட்டுள்ளது. மேட்டு நிலங்களில் கட்டுமானம், வீடமைப்பு இடம் பெற்றுள்ளதுவே இதற்கு காரணமாகும் மரக்கறி விவசாயிகள் தனது வீட்டையண்டிய சிறிய நிலப்பரப்பிலும் செறிவான முறையில் இயற்கைமுறை மரக்கறிசெய்கையில் ஈடுபடுவதன் மூலமும், கொள்கலன்களில் பயிராக்கவியலை நடைமுறைப்படுத்துவதால்,குறைவான நிலப்பரப்பிலே கூடியளவு விளைச்சலைபெறலாம்.

## காரைதீவு விவசாய நிலங்களின் விபரம்

| கண்டம் | மொத்தம் | சிறுபோகம் (ஏக்கர்) | பெரும்போகம் (ஏக்கர்) | விவசாயக் குடும்பம் |
|---|---|---|---|---|
| 01. வளைந்தவட்டை கிழல் | 423 | 423 | 150 | 170 |
| 02. வளைந்தவட்டை மேல் | 394 | 394 | 285 | 144 |
| 03. பூரான்புரி | 290 | 290 | 290 | 85 |
| 04. வெட்டுக் காடு காரக்கொல்லை | 345 | 345 | 345 | 165 |
| | 1452 | 1452 | 1070 | 564 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அம்பாறை மாவட்ட விவசாயியின் வியத்தகு சாதனை!

காரைதீவு விவசாயி வியத்தகு சாதனை

## காரைதீவு கமநல சேவைப்பிரிவின் கீழுள்ள கமக்காரர் அமைப்புகள்

1. வளைந்தவட்டை மேற்கண்ட கமக்காரர் அமைப்பு.
2. வெட்டுக்காடு காரக்கொல்லை விவசாய அமைப்பு.
3. பூரான்புரி கல்லரிச்சல் கண்ட விவசாய அமைப்பு.
4. வளைந்தவட்டை கிழல் கண்ட விவசாய அமைப்பு.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இசைக் கலையின் ஆதிக்கம் அன்றும் இன்றும்

திருமதி.புவனேஸ்வரி ஜயகணேஸ்.
சங்கீத ஆசிரியை

மனித சமுதாயத்தின் முதல் மொழியே ஒசை என்னும் ஒலியாகும். அதுவே இசையால் மலர்ந்தது. இந்தியப் பண்பாட்டின் வரலாற்றில் இசையளவிற்கு வேறெந்தத் துறையும் தொடர்ச்சியான வளர்ச்சியைக் கண்டதில்லை தமிழகத்தில் சங்ககாலம் முதலே இசை வளர்ச்சியடைந்து வந்துள்ளது. சங்க இலக்கியம், சங்க மருவியகால இலக்கியம் போன்றவற்றிலும், சிற்பங்கள் மற்றும் கல்வெட்டுக்களிலும் இசையின் சிறப்பினை காணமுடிகிறது. இந்தியக் கட்டிடக் கலையின் வரலாற்றிலேயே மிருதங்கம் வாசிக்கும் தட்சணாமூர்த்தி தென்தமிழ் நாட்டில் கழுபு மலையிலுள்ள வெட்டுவான் கோயிலில் மட்டுமே உள்ளது. கோயில்களிலுள்ள சிற்பங்கள் பதினெட்டாம் நூற்றாண்டு வரை கோயிலும், இசையும் ஒன்றோடொன்று கலந்து விட்டிருப்பதை காண முடிகிறது.

சைவசமயக் குரவர்களும் வைணவ ஆழ்வார்களும் அவர்களுக்குப் பின்வந்த சமய தத்துவ ஞானிகளும் இசையை வளர்த்தனர். மன்னரும் அவர்தம் அவையோரும் கூட இசையில் வல்லவராயிருந்தனர். தஞ்சை, மராத்திய மன்னர்கள் இசை ஆர்வம் கொண்டிருந்தனர். சங்கீத மும்மூர்த்திகளான தியாகராஜ சுவாமிகள், முத்து சுவாமி தீட்சிதர், சியாமாசாஸ்திரி ஆகியோர் திருவாரூரில் தோன்றி இக்கால இசைக்கு வழிவகுத்தனர். புல்லாங்குழல், வீணை, கோட்டுவாத்தியம், தவில், மிருதங்கம் போன்ற தொன்மையான இசைக்கருவிகளோடு பின்னாளில் வயலின், சித்தார் மற்றும் தபேலா போன்றவையும் அறிமுகப்படுத்தப்பட்டன. மேற்கத்திய இசைக்கருவியான 'வயலின்' பாலுசுவாமி தீட்சிதர் என்பவரால் அறிமுகப் படுத்தப்பட்டன. சங்கீத மூர்த்திகளுள் ஒருவரான தியாகராஜ சுவாமிகளுக்குப்பின் அவரது பாணி பல கலைஞர்கள் பாடவும், இசைக்கவும் தொடங்கினர். அன்றி லிருந்து இன்று வரையும் ஒவ்வொரு ஆண்டும் தியாகராஜா ஆதாரனை விழா சிறப்பாக நடைபெற்று வருவதை நாம் தொலைக்காட்சி வாயிலான காண முடிகின்றது.

அண்மைக்காலத்தில் கர்நாடக இசை என்பது தமிழிசையே என்ற கருத்து நிலவி வந்தது. 'இசைக்குயில் என்று அழைக்கப்படும் எம்.எஸ்.சுப்புலெட்சுமி தமிழிசையை உலகறியச் செய்தார். வடஇந்தியாவிலும் மேற்கத்திய நாடுகளிலும் முதன் முதலில் கர்நாடக சங்கீதத்தை பரப்பியவர் எம்.எஸ்.சுப்புலெட்சுமி ஆவார். '"சங்கீத கலாநிதி" என்ற பட்டத்தை முதன் முதலில் பெற்ற பெண்மணி இவரே யாவார். இவரது மெய்மறந்த பாடும் இசை ஆன்மாவை வசப்படுத்தி சக்தி படைத்தது.

தெய்வீக இசைத்தென்றல் கே.பி.சுந்தராம்பாள் திரைப்படத்துறையில் தம் இசையைப் பரப்பினார். ஆத்துடன் இன்றுவரை திரைப்படத்தின் மூலம் இசையை வளர்த்தவர்கள் பலர் அவர்களில் "சீர்காழி கோவிந்தராஜன், தியாகராஜ பகவதர் பி.பி.ஸ்ரீனிவாஸ், டி.எம்.சௌந்தரராஜன், மதுரை சோமு, கே.ஜே.ஜேசுதாஸ், எஸ்.பி.பாலசுப்ரமணியம், உன்னிகிருஷ்ணன் போன்ற பலராவர். ஜேசுதாஸ் கர்நாடக இசையையும், திரை இசையிலும் பாடி பெருமை பெற்றுள்ளார். சீர்காழி கோவிந்தராஜன் மகன் சீர்காழி சிவசிதம்பரம் தெய்வீகப் பாடல்களை பாடி பெரும் பெயர் பெற்றுள்ளார். எம்.எஸ்.விஸ்வநாதன், இளையராஜா, ஏ.ஆர்.றஹ்மான் போன்றவர்கள் புதிய இசை யுக்திகளையும், எலக்ரோனிக் கருவிகளையும் பயன்படுத்தினார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

20ஆம் நூற்றாண்டு தமிழிசை இயக்கம் பரவிய காலப்பகுதியாகும். இக்காலப் பகுதியில் சாதாரண மக்களும் விரும்பிப் பாடத்தற்க இசைப்பாடல்கள் பல உருவாயின. மகாகவி சுப்பிரமணிய பாரதியார், கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை போன்றோர் பாடல்களை இயற்றினார்கள்.

இம் மண் ஈன்ற முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்தர் இயற்றிய "யாழ்நூலில்" யாழின் வகை, அதன் தன்மை போன்றவை கூறப்பட்டுள்ளன. இதுவரை காலமும் இசையோடு தொடர்புடைய நூல்கள் யாவும் சமஸ்கிருதம், தெலுங்கு மொழிகளிலே அமைந்திருந்தன. இதனால் சாதாரண மக்கள் இவற்றை அறிந்து கொள்ள முடியாதிருந்தது. இக்குறைபாட்டை பெரிதும் தீர்த்து வைத்தவர் 'பேராசிரியர் பி.சாம்பமூர்த்தி' ஆவார். இவரது பெரும் முயற்சியினால் கல்விப்பாட நெறியில் இசை ஒரு பாடமாக புகுத்தப்பட்டது.

இன்றைய காலகட்டத்தில் வானொலி, இசைநாடா, இசைத்தட்டு, தொலைக்காட்சி, இசைச் சஞ்சிகைகள், இசை மகாநாடுகள், சங்கீத சபாக்கள் மூலம் பெரும்பங்கினை கொண்டுள்ளது. இசைத்துறையில் புதியதோர் மறுமலரச்சியைக் காண முடிகிறது. திரைப்படத் துறையில் கர்நாடக இசையோடு மெல்லிசையும் வளர்ந்து வருகிறது. அண்ணாமலைப் பல்கலைக்கழகம், சென்னை வித்துவச்சபை, யாழ் இராமநாதன் கல்லூரி, கிழக்கில் நுண்கலைக் கல்லூரி போன்றவற்றின் மூலம் இசை வளர்க்கப்படுகின்றது.

இலங்கை தமிழ் மக்களால் நாட்டுக்கூத்துக் கலையும் சிறப்பாகப் பேணி வளர்க்கப்படுகின்றது. இவை உபபாரம்பரிய இசை மரபை சார்ந்ததாக காணப்படுகின்றது. வடஇலங்கையில் இசைக்கலை வளர்ச்சியைப் பேணும் நோக்குடன் 1931இல் வடஇலங்கை சங்கீதசபை உதயமானது. இதன்தோற்றம் இசையார்வலர்களுக்குப் பெரும் மகிழ்வை அளித்தது.

முத்தமிழ் மன்றம், கொழும்பு இசைமன்றம், யாழ் இளம் கலைஞர் மன்றம், திருகோணமலை தட்சணகானசபா, மட்டக்களப்பு சங்கீதசபா,கண்டி நுண்கலைமன்றம் ஆகியன இசை வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றின. இலங்கையில் மெல்லிசையும், துள்ளிசையும் நன்கு வளர்ச்சி அரசவானொலியும் (இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனம்) சூரியன், சக்தி (தனியார் வானொலிகளும் மெல்லிசைப்பாடல்களை பெரிதும் ஒலிபரப்புகின்றது.

**வாழ்க்கையில் இசையின் முக்கியத்துவம்**

இசை என்பது வாழ்க்கையோடு பின்னிப்பிணைக்கப்பட்ட ஒரு தெய்வீகக்கலை. இவ்வாழ்க்கையில் குழந்தை பிறந்தது முதல் இறப்பு வரை இசை இடம் பெற்றிருக்கும். குழந்தையை தூங்க வைக்கும் போது 'நீலாம்பரி' ராகத்தில் இசைக்கப்படும் வாய்மொழியாக வனம் பெற்றுவரும் தாலாட்டுப்பாடல் குழந்தையை சந்தோஷத்தில்ஆழ்த்துகின்றது. அத்துடன் 'யதுகுலகாம்போஜி' 'சஹானா', 'ஆனந்தபைரவி' போன்ற வேறு ராகங்களிலும் இசைக்கப்படுகின்றது.

ஓப்பாரிப்பாடலில் துன்ப உணர்வே பெரிதும் காணப்படும் ஒப்பாரிப்பாடலின் இசை விளம்ப காலமும், மத்திம காலமும் கலந்ததோடு 'லய' அமைப்பில் காண்பபடுகின்றது. இப்பாடலை 'முகாரி', 'ஆகிரி' முதலான இராகங்களில் இசைக்கப்படும்.

சமயச் சடங்குகளில் இடம் பெறும் சில கிராமிய இசைக்கருவிகள் எக்காளம், திருச்சின்னம், கஞ்சிரா, உடுக்கை, தவண்டை, தம்பட்டம், பூசாரிகைச்சிலம்பு போன்றவையும் இடம் பெறுகின்றது. பண்டைக்கால இசையில் 'பண்' எனும் பதமே ராகத்திற்கு ஒப்பானது. இதனை தமிழிசை எனவும் கூறுவார். பண்களின் தொகை 24 ஆகும். இவற்றை அவற்றின் கானகாலத்தை கொண்டு பகல்பண், இராப்பண், பொதுப்பண் என மூன்று வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| பண் | அதற்கு சமனான ராகம் |
|---|---|
| பஞ்சமம் | ஆஹரி |
| சீகாமரம் | நாதநாமக்ரியை |
| புறநீர்மை | பூபாளம் |
| வியாழக்குறிஞ்சி | சௌராஷ்டிரம் |
| கௌசிகம் | பைரவி |
| செந்துருத்தி | மத்தியமளவதி |
| காந்தாரபஞ்சமம் | கேதாரகௌவை |
| அந்தாளிக்குறிஞ்சி | ஸாமா |
| தக்கேசி | காம்போஜி |
| செவ்வழி | யதுகுலகாம்போஜி |
| பழம்பஞ்சம் | சங்கராப்ரணம் |
| கொல்லி | நவரோஜ் |
| மேகராக குறிஞ்சி | நீலாம்பரி |
| நட்டபாடை | நாட்டை |
| ஸாதாரி | பந்துவராளி |





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விபுலானந்தர் எப்போது பிறந்தார் ?

## ஆய்வுக் கட்டுரை

**வேதசகா**

அகிலம் போற்றும் முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளார் காரைதீவு மண்ணில் பிறந்து 117 வருடங்களாகின்றன. கிட்டத்தட்ட நூறு வருடங்களைக் கடந்த ஒரு பெருமகனின் பிறந்த நாளை துல்லியமாக அறியமுடியாத எமது வரலாற்று ஆய்வாளர்கள் எப்படி பல நூறு அல்லது பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட வரலாறுகளை அறிவார்களா?. இது உண்மையுள்ள ஆய்வாள்ர்களின் வினாவாகும். இதற்கு விடையளிப்பதே இதன் நோக்கமாகும்.

சுவாமி விபுலானந்த அடிகளார் பற்றி இதுவரை வந்த நூற்றுக்கணக்கான நூல்களில் அவரது பிறப்பு பற்றி தமிழ் திகதி தொடர்பில் எந்தவொரு மாறுபாடான தகவலும் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

அதாவது சுவாமிகள் **1892 கர வருடம் பங்குனித்திங்கள் 16ஆந் திகதி,** ஞாயிற்றுக்கிழமை உதயத்தில் பூரட்டாதி நட்சத்திரத்தில் பிறந்தார் என்பதில் இருவேறு கருத்துக்கு இடமில்லை

இந்த தமிழ் திகதிக்கான ஆங்கிலத்திகதியை பெறுவதில் பலர் தவறுவிட்டிருக்கின்றார்கள். இம்மண்ணிலிருந்து வெளிவந்த அடிகளார் படிவமலர் கூட தவறு விட்டிருக்கிறது. அதில் அடிகளார் 26,27,28,29ஆந் திகதிகளில் பிறந்ததாக வெவ்வேறு கட்டுரைகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஒருவர் நான்கு தினங்களில் பிறக்க முடியுமா? இல்லை.

சுவாமிகளின் நூற்றாண்டை ஒட்டி என்னால் தொகுக்கப்பட்ட அடிகளார் நினைவாலய மலரில் சரியான திகதி தொடர்ந்து பேணப்பட்டு வந்தமை இவ்வண் சுட்டிக்காட்டப்படுதல் பொருத்தமாகும்.

இலங்கையில் முதன்முதல் வாக்கிய பஞ்சாங்கம் வெளிவந்த ஆண்டு 1892 ஆகும். யாழ்ப்பாணம் கொக்குவிலை சேர்ந்த சந். இரகுநாதையவர்களால் கணிக்கப்பட்டது. அதே ஆண்டிலேதான் சுவாமி விபுலானந்தரும் பிறந்தாா.
எனவே அந்த 1892 கர வருட பஞ்சாங்கத்தை பார்த்தால் பிறந்த நாள் (ஆங்கிலத்தில்) தெரிந்து கொள்ள முடியும். ஆனால் அதை பெறுவதென்பது முயற்கொம்பாக இருந்தது.

ஆதலால் எனது இலக்கிய நண்பர் களுதாவளையைச்சேர்ந்த பிரபல வரலாற்றாய்வாளர் ஓய்வு பெற்ற உதவிக் கல்விக் பணிப்பாளர் கலாபூசணம் திரு. ஆ.அரசரெத்தினம் அவர்களை தொடர்பு கொண்டு அப்பஞ்சாங்கத்தை பெறமுயற்சித்தேன்.அவரும் சுவாமி விபுலானந்தரின் நேரடி அபிமானி. வரலாற்றாய்வாளர் எவ்.எக்ஸ்.சி.நடராஜா அவர்களின் நேரடி சீடர். அவர் பலத்த பிரயத்தனத்தின் மத்தியில் அப்பஞ்சாங்கத்தை யாழ்ப்பாணத்தில் இருக்க கூடிய இலக்கிய ஆய்வாளர்களிடம் இருந்து பெற்றெடுத்து எனக்கும் பிரதியை அனுப்பி இருந்தார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இங்கு அதன் முதற் பிரதியின் முன்பக்கம் தரப்படுகிறது)

A. ARASARETNAM, B.A. (HONS.)
KALUWANCHIKUDY.

# கர வருஷ

வாக்கிய

# பஞ்சாங்கம்.

EST^D 1892.

TRADE MARK.

யாழ்ப்பாணம் கொக்குவில்

ச. இரகுநாதையரவர்கள்

கணித்தது.

Tamil Almanac For 1891-1892.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப் பஞ்சாங்கத்தில் தமிழ் திகதியான கர வருடம் 1892 பங்குனித்திங்கள் 16ஆந் திகதிக்குநேர்ஒத்த ஆங்கிலத்திகதியை பார்த்தோம்.

அ.்.து 27.3.1893 என இருந்தது.
அரபுத்திகதி ஷ.்.பான் 27 . ஆங்கிலத்திகதி மார்ச் 27 . தமிழ்திகதி பங்குனி 16 ஞாயிறு, திதி- சதுர்த்தி, நட்சத்திரம் - பூரட்டாதி, யோகம் - சுப்ரம், கரணம் - விட் எனக்குறிப்பட்டுள்ளது.

(இங்கு அதன் பிரதியும் தரப்படுகிறது)






இப்படியாக சுவாமியின் பிறந்த தினம் 1892.03.27 என வெளிப்படையாக குறிப்பிடப்பட்டுள்ளது. இதில் எந்த சர்ச்சையும் ஏற்பட நியாயம் இல்லை.

சுவாமிகள் பிறந்த திகதியைக் குறிக்கும் தனித்தமிழ் எழுத்துக்களாலான பஞ்சாங்கத்தின் பிரதியையும் இங்கு தருகின்றேன். இலக்கங்களை தமிழ் எழுத்துக்களில் வாசிக்கத் தெரிந்த சான்றோருக்கு இது நன்கு புலப்படும் எனக் கருதுகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பிறப்பு அத்தாட்சி பத்திரம்

அந்த காலத்தில் பிறப்பு சான்றிதழுக்கு பதிவது என்பது காலம் தாழ்த்தியே என்பது அனைவரும் அறிந்ததாகும். இதற்கு சுவாமியும் விதி விலக்கல்ல. காரணம் சுவாமி பிறந்து ஒரு சில தினத்தில் ஜனன ஜோதிடம் பார்க்க ஜோதிடரிடம் சென்ற போது தற்போது ஜாதகம் கணிக்க முடியாது என சூசகமாகக் கூறிவிட்டார் ஜோதிடர்.

விதானையாரான சாமித்தம்பி அவர்கள் பிள்ளைக்கு தத்து (கண்டம்) இருப்பதனை ஊகித்தவராக பிள்ளைக்கு பெயரும் வைக்கவில்லை. இந் நாளில் பிள்ளைக்கு ஒருவித நோய் தொற்றிக்கொண்டது. ஜோதிடர் கூறிய விடயமும் நோயும் தந்தை சாமித்தம்பி விதானையாருக்கு மேலும் பீதியையும், அச்சத்தையும் ஏற்படுத்தியது. உடனே பிள்ளையை தூக்கிக் கொண்டு கதிர்காமத்திற்குச் சென்று அங்கு பிள்ளையை முருகனிடம் ஒப்படைத்து பிள்ளையைக் காப்பாற்று என அங்கேயே பெற்றோர் மண்டாடி விரதமிருந்தனர்.

சில நாளில் பிள்ளையின் நோய் தீர்ந்தது. அந்த இடத்திலேயே பிள்ளைக்கு முருகனின் நாமமான 'மயில்வாகனன்' எனப் பெயரிட்டனர். இந்தத் தருணத்தில்தான் பெயரிடப்பட்டதென்பதை கவனத்தில் கொள்ளவும். முருகப் பெருமானின் வாகனமான மயில்வாகனம் என்று சிலர் இளமைப்பெயரைக் குறிப்பிடுவது பொருத்தமில்லை என்பதையும் கவனத்தில் கொள்க.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்பு பிள்ளையை ஊருக்குக் கொண்டுவந்தார்கள். ஜனன ஜோதிடம் பார்த்தார்கள். இவைகள் எல்லாம் இடம் பெற்று ஓரிரு மாதங்களின் பின்னர் தான் தந்தையார் பிறப்புக்காகப் பதிவு வைத்துள்ளார். இவையனைத்தும் இன்றும் காரைதீவில் வாழும் உதிர உறவுகளால் கூறப்பட்டவை. அந்த பிறப்பத்தாட்சிப்பத்திரமே இன்று ஒரு சாராரின் பிறந்த நாள் விழாவிற்குக் காரணமாயிற்று.

தர்க்க நியாயம்

அப்படி பிறப்புப் பத்திரத்தில் குறிக்கப்பட்டவாறு 1892.05.03 என எடுத்துக் கொண்டால் கர வருடம் பங்குனித் திங்கள் 16ஆந் திகதி ஞாயிற்றுக்கிழமையில் சுவாமி பிறக்கவில்லை என்று அர்த்தப்படுமே? அது சரியா? அது மட்டுமல்ல சாதாரணமாக ஒரு தமிழ் வருடம் ஏப்ரல் மாதம் *13/14* தொடங்கி அடுத்த வருடம் ஏப்ரல் மாதம் *13/*14இல் முடிவடைவது தெரிந்ததே. எனின் தமிழுக்கு கர வருசத்தில் வரும் பங்குனித் திங்கள் 16ஆந் திகதி என்பது கர வருசத்திற்குரியது. பிறப்புப் பத்திரத்தின்படிவரும் ஆங்கிலத் திகதியான 1892.05.03 ஐப் பார்த்தால் அவரது பிறந்த தமிழ் திகதி அடுத்த வருடமான 'நந்தன' வருடமாக கொள்ளப்பட வேண்டுமே/. ஏனெனில் ஆங்கிலத்தில் 5ம் மாதம் என்பது தமிழுக்கு அடுத்த வருடமாகக் (நந்தன)கொள்ளப்படவேண்டும் என்பதனை யாரும் அறிவார்கள்.

60 ஆண்டு கால வருடச்சுழற்சியில் 25ஆவது வருடமான கர வருடம் (1891 - 1892) 1892 ஏப்ரல் 17ஆந் திகதியுடன் முடிவடைய, அதற்கடுத்த 26ஆவது வருடமான நந்தன வருடம் (1892 – 1893) 1893 ஏப்ரல் 14ஆந் திகதியுடன் முடிவடையும்.

பிறப்புப்பத்திர 1892.05.03 ஆங்கிலத் திகதியின்படி பார்த்தால் சுவாமிகள் தமிழுக்கு நந்தன வருடம் சித்திரை மாதம் 22ஆந் திகதி பிறந்ததாக கருதப்படும். அது செவ்வாய்க்கிழமையில் ஏகாதசி திதியில் உத்திரட்டாதி நட்சத்திரத்தில் பிறந்ததாக கொள்ளப்படும். இது சாத்தியமா? அப்படியெனின் இதற்கு முன்பு எழுதப்பட்ட சுவாமிகள் பற்றிய நூற்றுக்கணக்கான நூல்களில் இடப்பட்ட தமிழ்தேதி பிழையென கொள்ளப்படவேண்மே.

எந்தவொரு நூலிலும் சுவாமிகள் கர வருடத்தில் பிறந்ததாகவே சொல்லப்படுகின்றது. இன்னும் இன்றும் காரைதீவில் வாழும் உதிர உறவுகள் சுவாமி கரவருடத்தில் பிறந்ததாகவே கூறுகின்றனர். இந்நிலையில் காலந்தாழ்த்தி வைக்கப்பட்ட பதிவின் அடிப்படையில் பெறப்பட்ட பிறந்த ஆங்கிலத் திகதியான 1892.05.03 சுவாமிகள் பிறந்த திகதியாக கொள்ளமுடியுமா? அத்தினத்தில் பிறந்த தின விழாவை நடாத்துவது பொருத்தமா? இல்லைவே இல்லை.

முடிவுரை

சுவாமிகள் 1892 கர வருடம் பங்குனித்திங்கள் 16ஆந் திகதி, ஞாயிற்றுக்கிழமை உதயத்தில் பூரட்டாதி நட்சத்திரத்தில் பிறந்தார் என்பதில் இருவேறு கருத்துக்கு இடமில்லை இந்த தமிழ் திகதிக்கான ஆங்கிலத்திகதியை உரிய பஞ்சாங்கத்தில் பார்க்குமிடத்து அது 27.03.1892 என வருகின்றது. எனவே. இனிமேலாவது சுவாமிகளது பிறந்த தினத்தில் தேவையற்ற விவாதங்களை விடுத்து தமிழ் கூறுநல்லுலகம் சுவாமிகள் பற்றிய மேலும் பல ஆராய்ச்சிகளை செய்தல் பொருத்தமாகும்.

பிற்குறிப்பு:

இலங்கை கல்வியமைச்சு தரம் 6 தமிழ் பாடநூலில் சுவாமி விபுலானந்தரின் இறைபதம் அடைந்த ஆண்டை 1949 என பிழையாக வெளியிட்டிருந்தது.சுவாமி விபுலானந்தரின் இறைபதம் அடைந்த ஆண்டு 1947 என்பதாகும். இறைபதம் அடைந்த திகதி 19.07.1947 ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிக்கள உத்தியோகத்தர்



முன்வரிசை இடமிருந்து வலம்

திரு.ஆர்.சுந்தரலிற்கம், திரு.ஆர்.ரமேஸ், திரு.எம்.பாலகிருஷ்ணா, திரு.எம்.வரதராஜன், திரு.எஸ்.இராமகிருஷ்ணன், திருமதி.புஸ்பராஜினி செவ்வேட்குமரன், ஜனாப் எஸ்.எல்.கியாஸ், திரு.ரி.சிவகுமார், ஜனாப்.சி.எம்.எம்.றிஸ்லீன், திரு.எம்.கலந்தர், ஜனாப்.எம்.ஜ.எம்.முகர்றப்

பின்வரிசை

திருமதி.கீதாஞ்சலி கனேஸ், திருமதி.தேவலோஜினி கவிதரன், திருமதி.கோமளச்செல்வி குகன், ஜனாபா.அனீசா மஜீத், திருமதி.ந.விக்னேஸ்வரன், திருமதி.குமுதினி சிவநாதன், திருமதி.அனுசியா உமாசுதன், திருமதி.மைதிலி தவராஜா, திரு.ரி.சிவனேசன், ஜனாப்.எ.தால்சுறுன், ஜனாப்.ஏச்.எம்.எ.றகீம், ஜனாப்.ரி.அன்சார், ஜனாப்.எம்.ரி.நயீம், திரு.கே.சுதானந்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சீதனம்

எம்.ஏ.எஸ்.பாமிதா

வருகவே! வருகவே!
மாதர் நல் விடிவு காண வருகவே!
தெரிகவே! தெரிகவே!
மாதர் தம் மகத்துவம் தெரியவே!
ஒழியவே! ஒழியவே!
சீதனமென்னும் அரக்கனே!!


ஆணைப் பெற்றவளும் அவளானால்
சீதனம் கேட்பதும் அவளானால்
மொழிந்திடுவோம் பெண்மைதனை
அழித்திடுவோம் கொள்கைதனை!!

அடக்கிடுவோம் ஆசைதனை
கற்றிடுவோம் கல்விதனை
காளையவன் காதலித்தால்
கேட்டிடுவோம் மஹர்தனை!!

புயல் பெண்ணே!
புயலாய் விழித்திடு!
புவியில் பிறந்ததனால்
புலம்பலை விரட்டிவிடு!
புத்தெழுச்சி பெற்ற உன் இதயத்தில்
தன்மானத்தை காப்பாற்ற
தன் நம்பிக்கையை நிலைநிறுத்திடு – எதற்கும்
கன்னிப்பெண்ணே! – நீ
கலங்காதே பெண்ணே!!

மங்கையவள் மகத்துவமே
மாண்புடனே எண்ணியவன்
மஹருடனே வந்துவிட்டால்
மணவாழக்கை கொண்டிடுவோம்....!!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உகந்தை முருகன் ஆலயத்தில் காரைதீவு பொதுமக்களால் அமைக்கப்பட்ட யாத்திரியர்கள் தங்குமடம்.








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2009 ஆம் ஆண்டின் கலாசார விழாவில் கௌரவிக்கப்படுவோர்

# விபுலபூரணன்

### காரைதீவின் அதிவிசேட துறைக்கான விருது



**இ.விநாயகமூர்த்தி**

காரைதீவு மண்ணில் ஞானமுத்து இளையதம்பி வட்டை விதானைக்கும் தோம்புதோர் மார்க்கண்டு வள்ளியம்மைக்கும் 1929.02.20ஆம் திகதி மகனானப் பிறந்த திரு.இ.விநாயகமூர்த்தி அவர்கள் காரைதீவு இராமகிருஷ்ண சங்க ஆண்கள் பாடசாலையில் பயின்று, பயிற்றப்பட்ட ஆசிரியராக கல்விப்பணியை ஆரம்பித்தார்.

தான் படித்த பாடசாலையிலேயே ஆசிரிய சேவையைத் தொடங்கிய இவர், கல்முனை இ.கி.ச.பாடசாலை, சம்மாந்துறை, கோரக்கர்,அ.த.க.பாடசாலைகளில் ஆசிரியராகவும், 15ஆம் கிராமம் அ.த.க. பாடசாலையில் பதில் அதிபராகவும், பூண்டுலோயா தமிழ் மகாவித்தியாலயத்தில் 01ஆம் தர அதிபராகவும், பின்னர் கல்முனை விவேகானந்த வித்தியாலயத்தின் அதிபராகவும் சேவைபுரிந்த வேளையில் வளர்ந்தோர் கல்வி அதிகாரியாக பதவி உயர்வு பெற்று ஓய்வு பெறும் வரை கல்விப்பணியில் தன்னை அர்ப்பணித்தவர்.

ஆசிரியராக, அதிபராக, வளர்ந்தோர் கல்வி அதிகாரியாக 38 ஆண்டுகள் கல்விச்சேவையாற்றிய இவர், 1952ஆம் ஆண்டு முதல் 1962ஆம் ஆண்டு வரை முகாமைத்துவப் பாடசாலையில் சேவை செய்த காரணத்தால், கிராம அரசியலில் ஈடுபாடு கொண்டு, காரைதீவு கிராமாட்சி மன்றத்தலைவராகவும், மட்டக்களப்பு மாவட்டத்தின் கிராமாட்சி மன்றத் தலைவர்களின் சமாசத்தின் செயலாளராகவும் அரசியற் பணியை 10 ஆண்டுகள் முன்னெடுத்தவர்.

இவை தவிர, மாவட்ட அபிவிருத்திச் சபைகள் உருவாக்கப்பட்ட காலம் முதல், அம்பாறை மாவட்ட சபையின் உறுப்பினராக மாவட்ட சபைகள் செயலிழக்கும் வரை தொடர்ந்து சேவையாற்றியவர்.மேலும், கூட்டுறவுத்துறையில் கல்முனை ப.நோ.கூ.சங்க சமாசத்தின் செயலாளராகப் பல ஆண்டுகள் பணியாற்றியதுடன், காரைதீவு ப.நோ.கூ. சங்கத்தின் தலைவர், செயலாளர் பதவிகளையும் அணிசெய்தவர்.

இவர் ஆசிரியராக பணியாற்றிய காலத்தில், இவரது கல்வி வழிகாட்டலில் கற்ற பலர் மிக உயர்ந்த பதவிகளில் அமர்ந்துள்ளதோடு, அரசியற் துறையிலும், சமூகப்பணியிலும், அபிவிருத்தி பணியிலும் இவர் செய்த அளப்பரிய செயல்கள் இன்றும் மக்களால் நினைவு கூரப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விபுலமாமணி

## காரைதீவின் கலை கலாசார நிருவாக விசேட துறைக்களுக்கான விருதுகள்



## நிருவாகம்



செ.இராமகிருஷ்ணன

திரு.செல்லத்துரை இராமகிருஷ்ணன் அவர்கள் யாழ்ப்பாணத்தில் உள்ள அச்சுவேலியில் 1951.01.16இல் பிறந்தார். இவரது தந்தை மட்டக்களப்பையும், தாய் யாழ்ப்பாணத்தையும் சேர்ந்தவர்கள். தனது இளமைக்கால கல்வியை யாழ் - அச்சுவேலி கிறிஸ்தவ கல்லூரி, நீர்வேலி அரசினர் இந்து கல்லூரி, மட்டக்களப்பு மத்திய கல்லூரி, இந்துக் கல்லூரி, வந்தாறுமூலை மத்திய மகா வித்தியாலயம் போன்ற கல்லூரிகளிலும் உயர் கல்வியினை தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரியிலும் கற்றவர். மேலும், பொது நிர்வாகத்தில் முதுமாணிப் பட்டமும் பெற்றார்.

இவர் அரச சேவையில் 1971ஆம் ஆண்டு முதல் எழுதுவினைஞராகவும், சிறிது காலம் பொறியில் பயிலுனராகவும், புகையிரத நிலையத்தில் வேலை செய்து 1973ஆம் ஆண்டு தொடக்கம் 1991ஆம் ஆண்டு வரை அம்பாரை, யாழ்ப்பாண மாவட்டங்களில் கச்சேரி, உதவி அரச அதிபர் அலுவலகம், பதிவாளர் அலுவலகம் போன்றவற்றில் எழுதுவினைஞராகவும், பிரதம எழுதுவினைஞராகவும் கடமையாற்றினார். 1991ஆம் ஆண்டு நிருவாக சேவையில் இணைந்தவர், தற்போது முதலாம்தர உத்தியோகத்தராக அம்பாரை மாவட்டத்தின் சேவை முகப்பில் முதலாவதாக உள்ள பிரதேச செயலாளராக கடமை புரிகின்றார்.

காரைதீவு பிரதேச செயலகம் 1985, ஏப்ரல் மாதம் ஆரம்பிக்கப்பட்ட காலம் முதல் இன்று வரை 24 வருடங்கள் தொடர்ச்சியாக இந்த அலுவலகத்தில் சேவையாற்றி வரும் இவர் இனநல்லுறவுக்கும், சிறந்த நிர்வாகத்திற்கும் ஓர் எடுத்துக்காட்டாக உள்ளார். சிறுபான்மை சமூகத்திலும், பெரும்பான்மை சமூகத்திலும் அமைச்சர்களாலும், அதிகாரி களாலும் அன்புடன் நேசிக்கப்படுபவராக தனது கடமைகளை ஆற்றி வருவது சிறப்பம்சமாகும். மாகாண அமைச்சிலிருந்து உயர் பதவிக்கான அழைப்புக்கள் பலமுறை வந்த போதும் தனது பிரிவு மக்களுக்கு சேவை செய்ய வேண்டும் என்பதால், அதனை நிராகரித்து மக்களுடனேயே உள்ளார். பிரதேச செயலகத்திற்கென ஒரு இடமில்லாமல் நூலக கட்டிடத்தில் எந்தவித வசதியுமின்றி இயங்கிய செயலகத்தை தனது அயராத முயற்சியின் காரணமாக இன்று மூன்று மாடிகள் கொண்ட ஒரு கட்டிடத்தை அமைப்பித்து சகல வளங்களையும் வழங்கி பூரணமான ஒரு அலுவலகமாக அமைத்தார்.

அச்சுவேலி மத்திய சனசமூக நிலையம், புகையிரதப்பகுதி தொழிற்சங்கத்தின் பத்திரிகை ஆசிரியர், காரைதீவு விளையாட்டுக் கழகத்தின் தலைவர், மற்றும் பல கிராம அபிவிருத்திச் சங்கங்கள், சனச சங்கங்கள், சனசமூக நிலையங்கள், விளையாட்டுக் கழங்களில் தலைமைப் பகுதிகளிலும் போசகராகவும் இருந்து சமூகத் தொண்டாற்றியும் வருகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கவிதை



பொன்.சிவானந்தன்

திரு.பொன்னையா சிவானந்தம் அவர்கள் மண்டூர் 02ஆம் பிரிவில் 1941.08.10இல் பிறந்தார். இவர் அறுவர் கொண்ட குடும்பத்தில் முதலாமவர் ஆவார். தனது கல்வியினை மட்/மண்டூர் இ.கி.ச. ஆண்கள் பாடசாலையில் கற்றார். தனது வாழ்க்கைத் துணையை 1970 இல் இவ்வூரில் இணைத்துக் கொண்ட பின் தனது கலாசாரப் பணியினை ஏறத்தாழ 25 வருடங்கள் தொடருமிருவர் சிறப்பான பங்களிப்பினை மரபுக்கவிதைத் துறைக்கு வழங்கியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

1980களில் மாதாந்தம் இலங்கை வானொலி நிகழ்த்திய பூரணைக் கவியரங்குகளிலும், பாரதி நூற்றாண்டில் வானொலி நிகழ்த்திய ஆய்வுரைகளிலும் பங்கேற்றதுடன் இப் பிரதேசத்தின் பல தமிழ் மொழி சார்ந்த செயற்பாடுகளிலும் தொடர்ந்து ஆற்றல்களை வெளிப்படுத்தி வருவது கற்றோர் அறிந்த விடயங்கள் ஆகும்.

இவர் ஒரு ஆசிரியராக இருந்தமை அவரது இலக்கியப் பணிகளுக்கு வாய்ப்பாக அமைந்திருந்ததுடன், சிறந்த துறைசார் தொடர்புகளுக்கும் வழிசமைத்திருந்தது. தேசிய அளவில் "சபரிமலை சாஸ்தாபீடத்தால் கவிச் செல்வர்" என்ற பட்டத்தை 1993இலும், மாவட்ட மட்டத்தில் **"கலாபூஷணம்"** விருதை 2007இலும் பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும், இவர் 1974 முதல் இது வரை நாடளாவிய ரீதியிலும் மாவட்ட மட்டத்திலும் பன்னிரெண்டுக்கு மேற்பட்ட கவிதைப் போட்டிகளிலும் பங்கு பற்றி அத்தனையிலும் 01ஆம், 02ஆம், 03ஆம், பரிசுகளைப் பெற்றுள்ளார்.

இவர் 1996இல் வெளியிட்டுள்ள "பொன் சிவானந்தன் கவிதைகள்" என்ற கவிதைத்தொகுதி குறிப்பிடத்தக்க அளவிற்கு இலக்கியத் துறையினராலும், கற்றவர்களாலும், அங்கீகரிக்கப்பட்டதாகும். இந்நூல் வெளியீட்டு விழாவிலும், அறிமுக விழாவிலும் இவருக்கு முறையே "மதுரகவிமணி" "கவிமுத்து" ஆகிய பட்டங்கள் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கன.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுகதை



இரா.கிருஷ்ணபிள்ளை

திரு.இரா.கிருஷ்ணபிள்ளை (இராகி) இவர் 1939.09.15ஆந் திகதி பாண்டிருப்பில் பிறந்தார். இவர் நடராஜானந்தா வீதி, காரைதீவு-02யை வாழ்விடமாகக் கொண்டவர். இவர் ஓய்வு பெற்ற ஆசிரியராவார். சிறுகதை, கவிதை, நாடகம், கட்டுரை, வில்லுப்பாட்டு என பலதரப்பட்ட இலக்கியத்துறைகளில் 50 ஆண்டுகளாக ஈடுபாடு உடையவர்.

முதலில் பாண்டிச்சோலை எனும் கையெழுத்துச் சஞ்சிகையை வெளியிட்டார்.1964இல் சரியா தப்பா என்ற முதல் சிறுகதையை வெளியிட்டார். மன்னிப்பு என்ற நாடகத்தின் மூலம் நாடகத்துறையில் பிரவேசித்தார்.

1979 இல் வில்லிசையில் விபுலானந்தர் என்ற முதல் வில்லுப்பாட்டை தயாரித்தளித்தார். பாண்டியூர் இராகி இராகி ஆகிய புனைபெயர்களில் எழுதிவருபவர்.1994 இல் கல்முனைக் கல்வி மாவட்ட ஆசிரியர் தினப் போட்டியில் முதலிடம் பெற்ற இவர் முப்பதுக்கும் மேற்பட்ட நாடகங்களை எழுதி மேடையேற்றியவராவார்.

ஆன்மீக இலக்கியப் பேச்சாளர். மாவட்ட மட்டத்தில் 2008இல் "திகாமடுல்ல அபிமானி" விருதையும், 2008ஆம் ஆண்டு மாகாண மட்டத்தில் 'அதிசிறந்த முதியவர்' விருதையும், 2008இல் தேசிய மட்டத்தில் **'கலாபூஷண'** விருதையும் பெற்றவர்.

நாடக ஆசிரியரான இவர் இளமைக் காலத்தில் நாடகங்களை இயக்கியும், நடித்தும் வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. நிந்தவூர் *'RKM* மிடியாவால்' 'இலக்கிய சிற்பி – *2009'* எனும் பட்டம் அளித்து கௌரவிக்கப்பட்டவர். 'உறவுகள்' சிறுகதை, இராகியின் கவிதைகள் 'பகையாலே உதயமான உறவு' நாடகம், 'ஆன்மீகமும் விழுமியங்களும்'(கட்டுரை) ஆகிய நூல்களை எழுதி வெளியிட்டவர்.

காரைதீவு 2ம் பிரிவு கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவராகவும் சிக்கனக் கடன் கூட்டுறவுச் சங்கத்தின் பொருளாளராகவும் இந்து சமய விருத்திச் சங்கத்தின் போசகராகவும் செயற்பட்டு வருகிறார்.

இவர் ஏறத்தாழ 50 ஆண்டு கால எழுத்துலக அனுபவத்தைக் கொண்டவர்.அம்பாறை மாவட்டசிறுகதைப் போட்டியில் முதலிடம் பெற்ற இவர் கல்முனை நண்பர்கள் கலைஇலக்கிய வட்ட சிறுகதைப் போட்டியில் இரண்டாமிடத்தைக் பெற்றவர்.இவர் சிறந்த ஒரு சமூகசேவையாளருமாவார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஊடகதீபம்



த.சகாதேவராஜா

வேலுப்பிள்ளை தம்பிராஜா சகாதேவராஜா காரைதீவு 1964.09.28ஆம் திகதி அன்று வேலுப்பிள்ளை தம்பிராஜா(இளைப்பாறிய அதிபர்) கைலாயபிள்ளை தங்கநாயகம் தம்பதியினருக்கு கனிஷ்ட புதல்வனாக இவர் பிறந்தார். இவர் ஆரம்பக்கல்வியை இ.கி.ச ஆண்கள் பாடசாலையிலும், உயர் கல்வியை மட்டக்களப்பு கல்லடி சிவானந்தா வித்தியாலயத்திலும் கற்றார்.

1988இல் காரைதீவு விபுலானந்த மத்திய கல்லூரியில் ஆசிரியராக பணியாற்றி விஞ்ஞான துறையில் மட்.ஆசிரியர் கலாசாலையில் ஆசிரியப் பயிற்சி பெற்று மீண்டும் அங்கு பயிற்றப்பட்ட விஞ்ஞான ஆசிரியராகக் கடமையேற்றார். 1999 இருந்து இன்று வரை சம்மாந்துறை கல்வி வலயத்தில் உதவிக்கல்விப் பணிப்பாளராக கடமையாற்றி வருகின்றார். இவர் கடந்த 07 வருடங்களாக சமாதான நீதவானாகவும் சேவையாற்றி வருகின்றார்.

பேராதனை பல்கலைக்கழகத்தில் கலைத்துறையில் பட்டப் படிப்பை **(B.A)** பூர்த்தி செய்த இவர் பட்டப்பின் கல்வி டிப்ளோமா (*DIP.IN.EDUCATION*) **PGDE** படிப்பை பூர்த்தி செய்து அதில் மெரிட் சித்தியையும் பெற்றார். பின்பு முதுகல்வி மாணி (*MASTER OF EDUCATION*) **M.Ed.** பட்டப்பின் படிப்பைப் பூர்த்தி செய்தார். இவர் சிறுவயது முதல் கலைத்துறையில் கூடுதல் நாட்டமிக்கவராகக் காணப்பட்டதால், 1986 இலிருந்து வீரகேசரி காரைதீவு நிருபர் பதவியை கையேற்க முடிந்தது. அன்றிலிருந்து இன்று வரை வீரகேசரி, தினகரன், சுடர் ஒளி, டெய்லிநியூஸ், மெட்ரோ மற்றும் இலங்கை வானொலி, வெளிநாட்டு இணையங்கள் போன்ற பல ஊடகங்களுக்கு எழுதி வருகின்றார். கிழக்கில் முதுமாணிப்பட்டம் பெற்ற ஓரேயொரு தமிழ் ஊடகவியலாளர் இவரென்பது குறிப்பிடத்தக்கது. சிறந்த ஆசிரியராக தொழிற்சங்கவாதியாக, எழுத்தாளராக, பேச்சாளராக, அறிவிப்பாளராக, வர்ணனையாளராக, தலைவராக, நிருவாகியாக பரிணமிக்கிறார்.

பல காத்திரமான கட்டுரைகளை அவ்வப்போது படைத்து வருவதோடு ''ஊழியில் ஆழி'' என்ற சுனாமி வரலாற்று நூலை எழுதி 2005இல் வெளியிட்டிருந்தார். மேலும் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் முத்தமிழ் மன்றத் தலைவராப் பணியாற்றிய வேளை அங்குள்ள "**கலைச்செல்வி**'' என்ற வருடாந்த சிறப்பு நூலுக்கு ஆசிரியராக இருந்துள்ளார். பின்பு காரைதீவு விபுலானந்த பணி மன்றம் சுவாமியின் நூற்றாண்டு விழாவையொட்டி வெளியிட்ட அடிகளார் நினைவாலய மலருக்கும் காரைதீவு சுவாமி நடராஜானந்தா நூற்றாண்டு விழாச்சபையின் செயலாளராக சேவையாற்றிய காலம் சுவாமியின் நூற்றாண்டு விழாவையொட்டி வெளியிட்ட **"சேவையின் சிகரம்"** மலருக்கும் ஆசிரியராக இருந்துள்ளார்.

அம்பாரை மாவட்ட கலாச்சார சாஹித்திய விழாவில் 2007, 2008 ஆகிய ஆண்டுகளில் தொடர்ச்சியாக இரு தடவைகள் ஊடகத்துறை மற்றும் எழுத்துத்துறை சிறப்பான பங்களிப்பிற்காக ''திகாமடுல்ல அபிமானி'' என்ற விருதுகளையும், பாராட்டுகளையும் பெற்றவர். இலங்கையின் அதிஉயர்ந்த ஊடகத்துறை விருதான **"மக்கள் சேவை ஊடக விருது"** 2007இல் வீரகேசரி வாரவெளியீட்டில் வளமின்றி வாழும் வளத்தாப்பிட்டி மக்களின் அவலம் என்ற தலைப்பில் இவரால் எழுதப்பட்ட சிறப்பக்கட்டுரைக்காக கொழும்பு கோல்பேஸ் கொட்டலில் வைத்து வழங்கப்பட்டது. தொடர்ந்து 2008இல் அம்பாரை மாவட்ட சிறப்பு ஊடகவியலாளர் விருது தேசிய பாதுகாப்பு தினத்தில் அனர்த்த முகாமைத்துவம் தொடர்பில் சிறப்பான ஊடகத்துறைப் பங்களிப்பிற்காக இரத்தினபுரியில் வைத்து அமைச்சர் மஹிந்த சமரசிங்கவினால் பாராட்டி விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். அனர்த்த முகாமைத்துவம் தொடர்பில் 'இத்தாலி' மற்றும் 'பாங்கொக்' நாடுகளில் விசேட பயிற்சி பெற்றிருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.காரைதீவு பிரதேச சபை 2007இல் நடாத்திய வித்ய சாஹித்திய விழாவில் ''**வித்ய கலா ஸ்ரீ**'' விருது நிந்தவூர் பிரதேசபை 2000இல் ''**விபுல ஸ்ரீ**'' விருது சுயாதீன தேசிய முன்னனி 2007இல் உலக ஊடக சுதந்திர தினத்தில் விருது மனித அபிவிருத்தி தாபனம் இலங்கை இஸ்லாமிய ஆராய்ச்சி நிலையமும் அம்பாரை மாவட்ட விவசாயத் திணைக்களம் 'கனடா' றோஸ் சிரிட்டி ஸ்தாபனம் போன்றன விருது வழங்கிக் கௌரவித்தன. நாவிதன்வெளி பிரதேச செயலக 2008 சாஹித்திய விழாவில் ''**வாழ்நாள் சாதனையாளர்**'' விருது உட்பட இன்னும் பல விருதுகளும் பட்டங்களும் பொன்னாடைக் கௌரவமும் இவருக்க கிடைத்தன.

இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்கத்தின் பிரசாரச் செயலாளராகவும் அம்பாரை மாவட்ட தமிழர் மகா சங்க உப தலைவராகவும் அம்பாரை மாவட்ட சர்வ சமய சம்மேளன செயலாளராகவும் அம்பாரை மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் தலைவராகவும் அம்பாரை மாவட்டச் சகவாழ்வு மன்ற சமயத்தலைவர்கள் சம்மேளத்தின் உபதலைவராகவும் சேவையாற்றி வரும் இவர் காரைதீவு பிரதேச சக வாழ்வு மன்றம் காரைதீவு 01ஆம் பிரிவு கிராம அபிவிருத்திச் சங்கம் காரைதீவ் காரைதீவு இந்து சமய அபிவிருத்திச்சங்கம் காரைதீவு சுவாமி விபுலானந்த பணிமன்றம் ஆகியவற்றில் தலைவராகவும் பிரதேச வைத்தியசாலை அபிவிருத்திக் குழுவின் உப செயலாளராகவும் காரைதீவு பிரதேச சிவில் பாதுகாப்புக் குழு, காரைதீவு பிரதேச கலாசாரப்பேரவை செயற்குழு காரைதீவு இ.கி.மி பெண்கள் , ஆண்கள் பாடசாலைகளின் அபிவிருத்திக் குழுவின் செயற்குழ் உறுப்பினராகவும் காரைதீவு விபுலானந்தா மத்திய கல்லூரியின் பழைய மாணவர்சங்கச் செயலாளராகவும் காரைதீவு பிரதேச சபையின் திட்டமிடல் குழுவின் கல்விக் குழுத்தலைவராகவும், காரைதீவு விபுலானந்தா மொண்டிசோரி மற்றும் விபுலானந்தா சர்வதேச கல்லூரியின் பணிப்பாளராகவும், காரைதீவு விபுலானந்தா 'எலோகியுசன்' பெற்றோர் குழுத்தலைவராகவும், இருந்து சீரிய சேவையாற்றி வருகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விபுலமணி விருது பெறுவோர்

## காரைதீவின் கலைகலாசாரத்துறைக்கான விருதுகள்



### நாட்டாரியல்

சின்னத்தம்பி இராமநாதன்

திரு.சின்னத்தம்பி இராமநாதன் அவர்கள் காரைதீவு–08ஆம் பிரிவில் பிறந்தார். இவர் தனது இளமைக்கல்வியை கல்/காரைதீவு இ.கி.ச ஆண்கள் பாடசாலையிலும், உயர்கல்வியினை காரைதீவு விபுலானந்தா மத்திய கல்லூரியிலும் கற்றார். 1967ஆம் வருடம் காரைதீவு விவேகானந்தா சனசமூக நிலையத்தால் வெளியிடப்பட்ட 'அறிவாளி' கையெழுத்துப் பத்திரிகையின் ஆசிரியராகச் செயல்படத் தொடங்கிய இவர் 'அம்பிகாபதி', 'பொற்கிளி' போன்ற சிறந்த நாடகங்களையும், 'லெட்சுமி கல்யாணம்' 'அரிச்சந்திரன்' போன்ற நாட்டுக்கூத்துக்களையும் எழுதியதோடு, அரங்கேற்றியும் உள்ளார். 'பட்டினத்தார்', 'ஸ்ரீவள்ளி' வில்லுப்பாட்டுக்களையும் எழுதி மேடையேற்றி வருவதன் மூலம் பொதுமக்களின் பெருமதிப்புக்குரியவராகத் திகழ்கின்றார்.

ஸ்ரீபத்திரகாளி அம்மன் ஆலயத்தின் ஸ்தாபகத் தலைவரான இவர் 'காளியம்மன் காவியம்' என்னும் நூலை எழுதியதோடு, பல பக்திப்பாடல்களை எழுதிச் 'சக்தி ராகம்' என்னும் ஒலிநாடா மூலம் வெளியீட்டும் உள்ளார். 2008ஆம் வருடம் கிழக்கு மாகாண சபையும், சமூக சேவைகள் அமைச்சும் சேர்ந்து நடாத்திய கவிதைப் போட்டியில் மாகாண மட்டத்தில் இரண்டாவது பரிசையும், 2009ஆம் வருடம் கல்முனை கலை, இலக்கிய நண்பர்களால் நடாத்தப்பட்ட கவிதைப் போட்டியில் மாவட்ட மட்டத்தில் முதலாம் பரிசையும் பெற்றுள்ளார். 42 வருடங்களாக கலைப்பணி ஆற்றிவரும் இவர் நாட்டுப்புற கலைக்கு சிறந்த பங்களிப்பு நல்கியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. இப்பணியில் இவர் ஆற்றிவரும் சேவை இலக்கியத் துறையினராலும், கற்றவராலும் அங்கீகரிக்கப்பட்டவை.



### பாடலாக்கம்

எஸ்.நாகராஜா

திரு.எஸ்.நாகராஜா அவர்கள் தற்போதைய காரைதீவு – 10ஆம் பிரிவில் பிறந்தார். இவர் சின்னத்தம்பி கனகம்மா தம்பதியினரின் 03வது புதல்வராவார். தனது ஆரம்பக்கல்வியினை காரைதீவு கமு/சண்முக வித்தியாலயத்திலும், உயர்கல்வியினை கமு/விபுலானந்தா மத்திய கல்லூரியிலும் கற்றார். 1981ஆம் ஆண்டு முதல் எழுத்துத்துறைக்குள் நுழைந்த இவர் இலங்கை வானொலிக்கு கவிதை, கட்டுரை, மெல்லிசைப்பாடல், இசையும் கதையும் எனப் பல்வேறு ஆக்கங்கள் எழுதி பலரது பாராட்டையும் பெற்றார். பத்திரிகைகளிலும் இவரது நிறைய ஆக்கங்கள் வெளிவந்துள்ளன.

கலாசார அலுவல்கள் அமைச்சினால் நடாத்தப்பட்ட ஆக்கத்திறன் போட்டியில் 2005, 2006ஆம் ஆண்டுகளில் சிறந்த பாடலாக்கத்திற்கான விருதுகளையும், 2007ஆம் ஆண்டு சிறுவர் கதைக்கான விருதினையும் பெற்றுள்ளார். 1989ஆம் ஆண்டில் அரச சேவையில் இணைந்து கொண்ட இவர் தற்போது ஆலையடிவேம்பு பிரதேச சபையின் செயலாளராகக் கடமை புரிந்து வருகின்றார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சித்தவைத்தியம்



திருமதி.மோகனசுந்தரி பத்மநாதன்

திருமதி.மோகனசுந்தரி பத்மநாதன் அவர்கள் காரைதீவு - 11ஆம் பிரிவிலுள்ள ஒரு வைத்தியக் குடும்பத்தில் பிறந்தார். அக்குடும்பத்தில் தலைமகளாகப் பிறந்த இவர் தனது ஆரம்பக்கல்வியை கமு/சண்முகா மகா வித்தியாலயத்திலும், உயர்கல்வியை கமு/விபுலானந்தா மத்திய கல்லூரியிலும் பயின்றார். தனது தந்தையாரின் விருப்பத்தை நிறைவேற்ற எண்ணி தனது பரம்பரை வைத்தியமான ஆயுர்வேத வைத்தியத்தை 'யாழ் லங்கா' ஆயுர்வேத மருத்துவக் கல்லூரியில் கற்று, அத்துறையில் ஒரு டிப்ளோமா பட்டதாரியானார். அத்துடன் இலங்கை ஆயுர்வேத வைத்திய சபையினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு வைத்தியராவார். இவர் இத்துறையில் சுமார் 27 வருடங்களாக மக்களுக்கு சேவையாற்றி வருகின்றார். இவர் தனது சிறுவயதிலிருந்து தமிழர் கலாசார நிகழ்ச்சிகளான காவடி, கரகாட்டம், வில்லுப்பாட்டு, மேடை நாடகம் போன்றவற்றில் பங்கேற்று மக்கள் மத்தியில் நன்மதிப்பை பெற்றவர். இவருக்கு 2008ஆம் ஆண்டு அம்பாரை மாவட்ட கலாசாரப் பேரவையினால் நடாத்தப்பட்ட கலாசார விழாவில் "திகாமடுல்ல அபிமானி" என்ற விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது. இவர் ஆயுர்வேத வைத்தியத்துறைக்கு தன்னாலான சிறப்பான பங்களிப்பினை செய்து வருகின்றார் என்பதும் இங்கே குறிப்பிடத்தக்கது.



# இசை



திருமதி புவனேஸ்வரி ஜயகணேஷ்

திருமதி புவனேஸ்வரி ஜயகணேஷ் இவர் காரைதீவு-04ஆம் பிரிவை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்டவர். இவர் ஆறு பேர் கொண்ட குடும்பத்தில் மூன்றாம் நபராவார். இவர் கமு/இ.மி.ச பெண்கள் பாடசாலையில் ஆரம்பக் கல்வியையும், கமு/விபுலானந்தா மத்திய கல்லூரியில் உயர்கல்வியையும் கற்றார். மேலும், தனது இசைத் துறைக்கான 'இசைகலைமாமணி' பட்டப்படிப்பினை கிழக்கு நுண்கலைப் பீடத்தில் 1986ஆம் ஆண்டு பூர்த்தி செய்துள்ளார். அத்துடன் வடஇலங்கை சங்கீத சபை பரீட்சையில் ஆறாந்தரத்திற்கு தோற்றி சித்தியடைந்து 1988இல் 'சங்கீத கலாவித்தகன்' எனும் பட்டத்தையும், 1986இல் இலங்கை மன்றக்கல்லூரியினால் 'சவசங்கீத' புலமைப்பரிசில் சான்றிதழை பெருமதிப்பிற்குரிய முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவிடம் பெற்றார். தனது கலாசார பணியினை ஏறத்தாள 25 வருடங்களாக செய்து வரும் இவர் சிறப்பான பங்களிப்பினை இசைத்துறைக்கு நல்கியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. இவர் ஒரு இசை ஆசிரியராக இருந்தமை அவரது இசைப்பணிகளுக்கு வாய்ப்பாக உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# நாட்டியம்



திருமதி. பாக்கியலெட்சுமி பரமலிங்கம்

திருமதி. பாக்கியலெட்சுமி பரமலிங்கம் அவர்கள் 01ம் பிரிவில் காரைதீவு விவேகானந்தா வீதியில் பிறந்தார். எட்டுப் பேர் கொண்ட குடும்பத்தில் ஆறாவது ஆவார். தமது இளமைக் கல்வியினை காரைதீவு கண்ணகி இந்து வித்தியாலயத்திலும், உயர்கல்வியினை கமு/ காரைதீவு விபுலானந்தா மத்திய கல்லூரியிலும் கற்றார். மேலும் தனது நடனத்துறையை 03 வருடம் இசை நடனக் கல்லூரியில் பயின்று வந்து தனது கலாச்சார பணியினை 19 வருடங்ளாக செய்து சிறப்பான பங்களிப்பினை நடனத்துறைக்கு நல்கியுள்ளார். மேலும், *FCE* (சகவாழ்வு மன்றம்), *Uncicef* (ஐக்கிய நாடு சிறுவர் நிதியம்) ஆகிய நிறுவனங்களில் 2005-2008ஆம் ஆண்டு வரை பகுதி நேர ஆசிரியராக நடனத்தை கற்பித்து கிராம மட்டம், மாவட்ட மட்டம், மாகாண மட்டம், தேசிய மட்டம் வரை முதல் இடத்தை பெற்றுக்கொண்டனர்.



# சோதிடம் மந்திரம்



சிவ ஸ்ரீ மகேஸ்வர குருக்கள்

சிவ ஸ்ரீ சண்முகரெத்தின குருக்கள் மகேஸ்வர குருக்கள் யாழ்ப்பாணம் குருப் பரம்பரையில் உதித்த சண்முகரெத்தினக்குருக்கள் வடிவாம்பிகைக்கு மூத்த மகனாக காரைதீவில் பிறந்தார். இவர் 1972.01.04ஆம் திகதி ஜனனம் ஆனார். இவர் தனது ஆரம்பக்கல்வியை விக்னேஸ்வரர் வித்தியாலயத்திலும், உயர் தரக் கல்வியை விபுலானந்தா மத்திய கல்லாரியிலும் பயின்றார். 07 வயதில் சமய தீட்சை பெற்று சமய ஒழுக்க சீலர் ஆனார். பின் 1997ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 19ஆம் திகதி குருப்பட்டாபிஷேகம் பெற்று சமய சமூகப் பணிகளை மேற்கொண்டார். காரைதீவில் மட்டும் அல்லாது ஏனைய பிரதேசங்களிலும் கும்பாபிஷேகம் மகோற்சவம் போன்ற கிரியைகளை நடாத்தி 2004.05.02இல் காரைதீவு பாலையடி பால விக்னேஸ்வரர் ஆலயத்தில் "சிவாகம வித்தியா பூசணம்" என்ற பட்டமும், 200.12.23இல் காரைதீவு வீரபத்திர சுவாமி ஆலயத்தில் "கிரியா கால" பட்டமும், "கலாமணி" என்ற பட்டமும் 2007.08.31இல் சேனைக்குடியிருப்பு கிட்டங்கி பிள்ளையார் ஆலயத்தில் "சிவாச்சாரியார் திலகம்" என்ற பட்டமும், குறுமம்வெளி பிள்ளையார் ஆலயத்தில் 2003இல் "கிரியா வாழ்பன்னர்" என்ற பட்டமும் பெற்றது மட்டுமல்லாது இன, மத, மொழி பேதமின்றி ஜோதிட துறையிலும் பல சேவைகளை செய்து சமய, சமூக வளர்ச்சியில் ஈடுபட்டதுடன் காரைதீவு பாலையடி பாலவிக்னேஸ்வரர் ஆலயம், மாவடி ஸ்ரீ கந்தசுவாமி ஆலயம், ஸ்ரீ கண்ணகையம்மன் ஆலயம் என்பவற்றின் பிரதமகுருவாகவும் விளங்கி ஆலயங்களின் வளர்ச்சிக்கும், சமய வளர்ச்சிக்கும் தன்னை அர்ப்பணித்து வாழ்கின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நவீன இசைக்குழு

## இளையதம்பி கோபாலசிங்கம்

இளையதம்பி கோபாலசிங்கம் அவர்கள் காரைதீவு – 01ஆம் பிரிவில் பிறந்தார். இவர் 08 பேரில் இளையவராவார். இவர் விபுலானந்தா மத்திய கல்லூரியில் கல்வி கற்றார். பாடசாலைக் காலத்தில் நடைபெற்ற முத்தமிழ் மன்றங்களில் சகமாணவர்களோடு பாடுவதிலும், இசைப்பதிலும் அதிக ஆர்வம் கொண்டவர். சமீப காலத்தில் விபுலானந்தா மத்திய கல்லூரியில் சித்திர பாட ஆசிரியராகவும் கடமையாற்றி, பல நிகழ்ச்சிகளில் பாடி இசையமைத்து பாராட்டுக்கள் பெற்றார்.

இசைத்துறையில் கடந்த 30 ஆண்டுகளுக்கு மேல் சேவையாற்றி வருகிறார். இவர் கலைத்துறைக்கு ஆற்றிய சேவையில் மிகவும் பிரசித்தி பெற்றது காரைதீவு ஸ்ரீ பத்திரகாளியம்மன் ஆலயத்திற்காக 'சக்திராகம்' என்ற பெயரில் தனியாக சில பாடல்களும், குழுவோடு சில பாடல்களும் இசையமைத்து இசை நாடா வடிவில் வெளியிட்டு பல்லாயிரக் கணக்கான ரசிகர்களின் மனதில் இடம் பிடித்தமை அவரது வாழ்க்கையில் அவருக்கு கிடைத்த பாக்கியமாகும். பலரின் வேண்டுகோளுக்கிணங்க மீண்டும் சக்திராகம்-02 என்ற பெயரில் பல குரல் இசை நாடா வெளியிட்டு, அதிலும் வெற்றி கண்டார். காரைதீவு-10 கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தற்போதைய தலைவராகவும் இருந்து வருகின்றார்.

# பாரம்பரிய விவசாயம்





## கணபதிப்பிள்ளை முருகேசு

கணபதிப்பிள்ளை முருகேசு 1920ஆம் ஆண்டு 06 பேர் கொண்ட குடும்பத்தில் 03வதாகப் பிறந்தார். தந்தை கணபதிப்பிள்ளை, தாய் செண்பகப்பிள்ளை. விவசாயக் குடும்பத்தில் பிறந்ததினால் இவரது அடிப்படைத் தொழில் விவசாயமாகப் பின்பற்றப்பட்டது. அவ்வேளையில் பல சமூக சேவை, சமய சேவைகளில் ஈடுபட்டார். மகாவிஸ்ணு ஆலயம் கட்டிட ஆரம்பகாலத்தில் குடிசையால் கோயில் கட்டும் போது கம்பு வெட்டி ஓலை கொய்து உதவி செய்தார். 1950ஆம் ஆண்டில் பிரதேச சபை உறுப்பினர் தேர்வில் வெற்றி பெற்றார். அக்காலங்களில் கடற்கரை குடியேற்ற திட்டத்தின் போது அம்மக்களின் நீருக்காக கிணறுகட்டும் பணியில் ஈடுபட்டு உதவி புரிந்தார். காரைதீவு – 05ஆம் பிரிவில் பழைய வைத்தியசாலை கட்டுமானப்பணியில் ஈடுபட்டார்.

2000ஆம் ஆண்டு மத்தியஸ்தர் குழுவில் இடம் பெற்று சேவை புரிந்தார். வரும் வேளை சமாதான நீதவானாக பதவியேற்றார். இவரது சேவைகளுக்காக 2002ஆம் ஆண்டு சக்தி கல்வி நிலையத்தினால் பழம்பெரும் விவசாயி என்று கௌரவிக்கப்கட்டார். மேலும், விஸ்ணு சனசமூக நிலையத்தினால் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார். *AURDC* அம்பாரை மாவட்ட விவசாய திணைக்களத்தினால் விவசாய பயிர்ச்செய்கைக்காக கௌரவிக்கப்பட்டார். கண்ணகி சனசமூக நிலையத்தினால் முதியோர் தினத்தன்று பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார். தற்போது மகா விஸ்ணு ஆலய தர்மகத்தாராகவும், விஸ்ணு சனசமூக நிலைய உறுப்பினராகவும் இருந்து சேவை புரிந்து வருகின்றார். 1940ஆம் ஆண்டு நெல் சந்தைப்படுத்தும் சங்கத்தின் உறுப்பினர், பலநோக்கு கூட்டுறவுச் சங்க உறுப்பினர், *NEHRP* வீட்டுத்திட்ட பணியில் காரைதீவு-7ஆம் பிரிவில் பணியாற்றியவராவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விபுல இளவல் விருது

## காரைதீவின் இளம் சாதனையாளருக்கான விருதுகள்



### முஹம்மது றஷ்மி

ஆதம்பாவா முஹம்மது றஷ்மி அவர்கள் மாளிகைக்காட்டைச் சேர்ந்த எம்.சி.ஆதம்பாவா சித்தி ஆரிபா தம்பதியினருக்கு இரண்டாமவராக 1972.12.31ஆம் திகதி பிறந்தார். தனது இளமைக்கல்வியினை கமு/மலஹர் ஸம்ஸ் வித்தியாலயத்திலும் உயர்கல்வியினை கமு/ஸாஹிறா தேசிய கல்லூரியிலும் கற்றார்.

1997 ஆம் ஆண்டு இலங்கை பேராதனை பல்கலைக்கழகத்தில் விவசாய பொறியியல் துறையில் சிறப்புச்சித்தியுடன் பட்டத்தை பெற்று கொண்டார். இதே ஆண்டு அதே பல்கலைக்கழகத்தில் உதவி விரிவுரையாளராக நியமனம் பெற்றார். மேலும் தனது புள்ளி விபரவியல் துறை முதுமானி பட்டப்படிப்பினை 2000ஆம் ஆண்டு பேராதனை பல்கலைக்கழகத்தில் பூர்த்தி செய்துள்ளார். இதே ஆண்டு இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழக பிரயோக விஞ்ஞான பீடத்தில் புள்ளிவிபரவியல் துறையில் விரிவுரையாளராக நியமனம் பெற்றார்.

2002ஆம் ஆண்டு சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சிக்கான புலமை பரிசிலை பெற்று சென்று புள்ளி விபரவியல் ஆராய்ச்சி முதுமானிப்பட்டத்தை 2005ஆம் ஆண்டு பூர்த்தி செய்தார்.2005ஆம் ஆண்டு முதல் மீண்டும் தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் தனது சேவையைத் தொடர்ந்தார். இப் பல்கலைக்கழக பிரயோக விஞ்ஞான பீடத்தின் பீடாதிபதியாக 2007ஆம் ஆண்டு தெரிவு செய்யப்பட்டு இன்று வரை சேவையாற்றிக் கொண்டிருக்கிறார்.இவர் இன்று வரை பல ஆராய்ச்சிகளையும், தேசிய சர்வதேச ஆராய்ச்சிக் கட்டுரைகளையும் வெளியீட்டுள்ளார்.



### திருமதி. அருந்தவவாணி சசிகுமார்

திருமதி. அருந்தவவாணி சசிகுமார் அவர்கள் காரைதீவு முதலாம் பிரிவில் 1980.10.19இல் பிறந்தா. மூன்று ஆண் சகோதரர்களுடன், ஒய்வு பெற்ற விவசாயப் போதனாசிரியர்களான பெற்றோருக்கு ஓரே பெண். கணவர் ஒரு பொறியியலாளர். தனது ஆரம்பக் கல்வியை கல்/காரைதீவு இ.மி.ச பெண்கள் பாடசாலையிலும், பின் கல்/கார்மேல் பாத்திமா தேசிய கல்லூரியிலும் கற்றார். மேலும் தனது கலாச்சாரதுறை கலைமாணி பட்டபடிப்பினை 02ஆம் வகுப்பு சித்தியுடன் இலங்கை கிழக்கு பல்கலைக்கழகமத்தில் பூர்த்தி செய்துள்ளார். தனது கல்வி ஆண்டிலே இவர் காட்டிய அதீத திறமைக்காக கிழக்கு பல்கலைக்கழகத்தால் "தம்பி முத்து சொலமன் வேதநாயகம் நினைவு விருதும்" பணப்பரிசிலும் பெற்றுள்ளார். பல கலாச்சார பணிகளை ஏறத்தாழ 18 வருடங்களாக செய்து வரும் இவர் சிறப்பான பங்களிப்பினை மேடைப பேச்சுத் துறைக்கு நல்கியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

இவர் கல்வி கற்ற பாடசாலைச் சூழலும் குடும்ப உறுப்பினர்களின் ஒத்துழைப்பும் இவரை தேசியளவில் மிகச் சிறந்த தமிழ்ப் பேச்சாளராக மாற்றியமைத்துள்ளது. இவர் தேசியளவில் மேடைப் பேச்சுப் போட்டிக்காக இரண்டு தங்கப்பதக்கங்களை 1994,1995ஆம் ஆண்டுகளில் பெற்றுள்ளதுடன், 2006ஆம் அகில இலங்கை ரீதியில் சிறந்த தமிழ் பேச்சாளருக்கான பேச்சுப்போட்டியில் முதலிடம் பெற்று "வீரகேசரி" நிறுவனத்தால் 50,000 ரூபாய் பணப்பரிசுடன் வெற்றிக் கேடயமும் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது. இது வரை இவர் பெற்றுள்ள சான்றிதழ்களின் மொத்த எண்ணிக்கை 63 ஆகும். இவர் காரைதீவு பிரதேச செயலகத்தில் மூன்று வருடங்கள் பொது முகாமைத்துவ உதவியாளராகக் கடமை புரிந்து இன்று ஒரு ஆங்கில ஆசிரியையாக தன்சேவையினைத் தொடர்ந்து கொண்டிருக்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செல்வி.சந்திரசேகரன் சாலினி



செல்வி:சந்திரசேகரன் சாலினி அவர்கள் காரைதீவு-05ஆம் பிரிவில் பிறந்தார். இவர் மூவர் கொண்ட குடும்பத்தில் மூன்றாமவர் ஆவார். தனது இளமைக்காலக் கல்வியினை காரைதீவு இ.கி.ச பெண்கள் பாடசாலையில் கற்றதுடன், உயர் கல்வியினை காரைதீவு விபுலானந்தா மத்திய கல்லூரி யிலும்கற்றுவருகிறார். மேலும் தமிழ்த்தின போட்டி, ஆங்கிலத்தின போட்டி, கணித, விஞ்ஞான போட்டி என்பவற்றில் மாகாண மட்டத்தில் கலந்து சிறந்த பெறுபேறுகளையும் பெற்றுள்ளார். மேலும் 2007 மார்கழி மாதம் நடைபெற்ற க.பொ.த (சா/த) பரீட்சையில் தமிழ் மொழி மூலம் தோற்றி 10 பாடங்களிலும் 10 ஏ சித்திபெற்று அகில இலங்கை ரீதியில் முதலிடம் பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## செல்வன் தம்பிராஜா வினாயகமூர்த்தி



செல்வன் தம்பிராஜா வினாயகமூர்த்தி காரைதீவு 11 ஐச் சேர்ந்த தம்பிராஜா தம்பதியினரின் கனிஸ்ட புதல்வனாவார்.காரரைதீவு ஆண்கள் பாடசாலை விபுலானந்த மத்திய கல்லூரி ஆகியவற்றில் படித்து கிழக்கு பல்கலைக்கழகத்தில் வர்த்தகமாணி பட்டத்தை 2006 இல் பூர்த்தி செய்தார்.

இவர் 2008 முருகனாலய தீர்த்தோற்சவத்தின்போது கடலில் பாய்ந்து உயிரை துச்சமென மதித்து 04 இளைஞர்களை காப்பாற்றினார். இவ்வீரச் செயலுக்காக இவருக்கு 2009 ம் ஆண்டுக்கான தேசிய வீரமானிடர் விருது கிடைக்கப்பெற்றுள்ளது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விபுலநேசன் விருதுகள்

## காரைதீவின் சமூகபொதுத்துறைக்கான விருதுகள்

### பொன்னையா சிவயோகன்

காரைதீவைச் சேர்ந்த பொன்னையா சிவயோகன் 07.01.1940 இல் குடும்பத்தில் 2வது மகனாகப் பிறந்தார். தனது இளமைக் கல்வியினை காரைதீவு இ.மி.ச ஆண்கள் பாடசாலையிலும், உயர் கல்வியினை காரைதீவு விபுலானந்தா மத்திய கல்லூரியிலும் கல்லடி சிவானந்தா வித்தியாலயத்திலும் கற்றார். தசாப்த காலத்திற்கு மேலாக இல்லப்பொறுப்பாளராக இறைபணி ஆற்றிவரும் சிவயோகன் 1968லிருந்து மிஷன் சேவையில் தன்மை இணைத்துக் கொண்டவர். மட்டக்களப்பு உறுகாம விவசாயப் பண்ணை, கதிர்காம மடம் போன்ற மிஷன் ஸ்தாபனங்களில் இறைசேவையாற்றிய அவருக்கு 1991இல் இந்தியா சென்று மிஷன் கிளைகளையும், சுவாமிகளையும் தரிசிக்கும் வாய்ப்பு கிட்டியது.

அதன் பெறுபேறாக 1997.01.17இல் இராமகிருஷ்ணமிஷனின் 13வது தலைவர் ஸ்ரீமத் சுவாமி ரங்கனானந்தஜீ மகராஜியிடம் மந்திர தீட்சை பெற்றார். 1991இல் இருந்து காரைதீவு சாரதா சிறுமியர் இல்லத்தின் பொறுப்பாளராக சீரிய ணியாற்றி வருகின்றார். அவருடைய கண்டிப்பான அன்பான நிர்வாகம் இல்லத்தை மேலும் ஒருபடி உயர்த்திக் காட்டுகின்றது. ஆதரவற்ற சிறுமியர் இல்லத்திற்கு தாரமாகத் திகழ்கிறார்.

### முகம்மது முகைதீன் சுலைகாஉம்மா



முகம்மது முகைதீன் சுலைகாஉம்மா அவர்கள் மாளிகைக்காடு கிழக்கில்பிறந்தார். இவர் பதினொரு பேர் கொண்ட குடும்பத்தில் பத்தாமவர் ஆவார். தனது கல்வியினை கமு/மழஹறுஷ் ஷம்ஸ் மகாவித்தியாலயத்தில் ஐந்தாம் ஆண்டு வரை கற்றார். தனது சமூக சேவைப்பணியினை சுமார் ஒன்பது வருடங்களாக செய்து வரும் இவர் சிறப்பான பங்களிப்பினைப் பெண்களின் சமூக, பொருளாதார உயர்ச்சிக்காகச் செய்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தலைவியாக இருந்து பல வருடங்கள் சேவையாற்றிய இவர் நுண்கடன் திட்டத்தை தனது சங்கத்தின் ஊடாகத் திறமையாகச் செய்து வருகின்றார். இதனைப் பாராட்டி 2007ஆம் ஆண்டு *HDO* நிறுவனம் இவருக்கு பதக்கம் ஒன்றை அணிவித்து கௌரவித்தது.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## செல்லத்துரை மணிமாறன்



திரு.செல்லத்துரை மணிமாறன் அவர்கள் காரைதீவு முதலாம் பிரிவில் 1965.10.28 இல் பிறந்தார். இவர் எண்மர் கொண்ட குடும்பத்தில் நான்காமவர் ஆவார். தனது இளமைக் கல்வியினை கல்/காரைதீவு இ.மி.ச ஆண்கள் பாடசாலையிலும், உயர் கல்வியினை கல்/காரைதீவு விபுலானந்தா மத்திய கல்லூரியிலும் கற்றார். மேலும் பட்டப்படிப்பினை பேராதனை பல்கலைக் கழகத்திலும் பட்டத்தின் பின் கல்வி டிப்ளோமா படிப்பினை தேசிய கல்வி நிறுவகத்திலும் கற்று விசேட சித்தி பெற்றார். தனது கலாசாரப் பணியினை ஏறத்தாழ 25 வருடங்களாக செய்து வரும் இவர் சிறப்பான பங்களிப்பினை சமயத்துறைக்கு நல்கியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

இவர் ஒரு சாதாரண ஆசிரியராக, அதிபராக இருப்பது அவரது இலக்கிய, சமூக பணிகளுக்கு வாய்ப்பாக அமைந்திருந்ததுடன் சிறந்த துறைசார் தொடர்புகளிற்கும் வழிவமைத்திருந்தது. இவர் இரண்டாவது அகில உலக இந்து மநாடு சார்பாக மட்டக்களப்பு பிரதேசக்கிளையால் ஒழுங்கு செய்யப்பட்ட இரண்டாம் நாள் நிகழ்வில் "கண்ணகி வழிபாடு" எனும் தலைப்பில் ஆற்றிய உரையும், "மட்டக்களப்புத் தமிழகத்தில் இந்துப்பண்பாடு" என்ற நூலுக்கு இவர் சமர்ப்பித்த "காரைதீவு கண்ணகையம்மன் கோயில் வழிபாட்டு முறைகள்" எனும் கட்டுரையும் குறிப்பிடத்தக்களவிற்கு இலக்கியத் துறையினராலும், கற்றவராலும் அங்கீகரிக்கப்பட்டவைகள்.

## வேலுப்பிள்ளை கிருஷ்ணபிள்ளை



வேலுப்பிள்ளை கிருஷ்ணபிள்ளை அவர்கள் காரைதீவு 03ஆம் பிரிவில் பிறந்து காரைதீவு 06ஆம் பிரிவில் வதிவிடத்தை அமைத்துக கொண்டவர். இவர் நால்வர் கொண்ட குடும்பத்தில் மூத்தவர். இளமைக்கல்வியை இ.கி.ச.ஆண்கள் பாடசாலையிலும் உயர்கல்வியை (*A/L*) வரை காரைதீவு விபுலானந்த மத்தியகல்லூரியிலும் மேற்கொண்டார்.

முதல் நியமனத்தை காரைதீவு கண்ணகி வித்தியாலயத்தில் மேற்கொண்டு 1964 – 1965இல் மட்டக்களப்பு அரசினர் ஆசிரியர் கலாசாலையில் பயிற்சி பெற்று லுணுகலை தமிழ் மகா வித்தியாலயத்தில் நியமனம் பெற்று 04 வருடங்களின் பின் காரைதீவு சண்முக வித்தியாலயத்தில் உதவி ஆசிரியராகவும், 09 மாதங்கள் பதில் அதிபராகவும் கடமையாற்றிய பின்னர் 1973 தொடக்கம் ஓய்வு பெறும் வரை 29 ஆண்டுகள் கல்முனை கார்மேல் பாத்திமா கல்லூரி தேசிய பாடசாலையில் துணை அதிபராகவும், அதிபராகவும் கடமையாற்றினார். 1974 அதிபர் சேவை 11க்கு பின்னர் 1986இல் அதிபர் சேவை 1 க்கும் தெரிவானார். 1987 யாழ் / கொழும்புத்துறை ஆசிரியர் கலாசாலையில் 01வருடம் இந்து சமய டிப்ளோமா பயிற்சியை முடித்தமை குறிப்பிடத்தக்கது.

2000ஆம் ஆண்டு ஓய்வு பெற்ற இவர் காரைதீவு கண்ணகி அம்மன் ஆலயத்தில் 20 ஆண்டுகளுக்கு மேலாக நிர்வாக சபை உறுப்பினராகவும், செயலாளராகவும் கடமையாற்றி வருவதுடன் காரைதீவு பிரதேச ஓய்வூதிய சங்க தலைவராயும், அம்பாரை மாவட்ட ஓய்வூதிய சங்க தனாதிகாரியாகவும் இற்றைவரை சேவையாற்றி வருகிறார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## முஹம்மது ஹனிபா நாஸர்

முஹம்மது ஹனிபா நாஸர் அவர்கள் ஆதம்பாவா முஹம்மது ஹனிபா, பைக்கீர் முகைதீன் கதீஜாஉம்மா தம்பதிகளின் மூத்த புதல்வராக 1976.07.29ஆம் திகதி மாளிகைக்காடு - கிழக்கில் பிறந்தார்.தனது ஆரம்பக்கல்வியை சாய்ந்தமருது கமு/மல்ஹருஸ் ஸம்ஸ் மகா வித்தியாலயத்திலும், பின்னர் கமு/ஸாஹிறா தேசியக் கல்லூரியிலும் கற்றார். தனது சமூகப்பணியினை ஏறத்தாழ 17 வருடங்களாக செய்து வரும் இவர் சிறப்பான பங்களிப்பினை சமூக சேவைத்துறைக்கு நல்கியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

இவர் மாளிகைக்காடு பிரதேசத்தில் மாளிகைக்காடு - கிழக்கு கிராம அபிவிருத்திச் சங்கம், ஸம்ஸம் சனசமூக நிலையம் ஆகியவற்றின் தலைவராகவும், காரைதீவு பிரதேச சகவாழ்வு குழுவின் பொருளாளராகவும் கடமையாற்றுவதோடு இதன் மூலம் பிரதேச அபிவிருத்தி, சமூக ஒற்றுமை போன்றவற்றுக்கு முக்கிய பங்களிப்பாற்றுகின்றார். இவரது முயற்சியினால் மாளிகைக்காடு பிரதேசத்தில் சனசமூக வாசிகசாலை, கலாச்சார மண்டபம் என்பன நிர்மாணிக்கப்பட்டு திறம்பட சேவையாற்றுகின்றது. இவைகள் இவரது சமூக சேவைக்கு நற்சான்றுகளாகும்..



## சின்னத்தம்பி தங்கவேல்

காரைதீவு-01ம் பிரிவில் சின்னத்தம்பி வண்ணக்கருக்கும் செல்லம்மாவுக்கும் மகனாக திரு. தங்கவேல் பிறந்தார். இவர் ஐந்து பெண் சகோதரிகளுக்கு கடைசி தம்பி ஆவார்.

தனது ஆரம்பக் கல்வியை இ.கி.ச ஆண்கள் பாடசாலையிலும் உயர்கல்வியை கல்லடி சிவானந்த வித்தியாலயத்தில் கற்றார். பின்பு அம்பாரை 'ஹாடி' உயர் தொழில் நுட்பக் கல்லுரியில்சேர்ந்து தேசிய தொழினுட்ப டிப்ளோமா பெற்று வெளியேறினார்.நீர்ப்பாசன இலாகாவில் தொழில் நுட்ப உத்தியோகத்தராக நீண்ட காலம் பணியாற்றி உதவி பொறியியலாளராகக் கடமை புரிந்து பல விவசாயக் குழுக்களை அமைத்து விவசாயக் குடும்பங்களின் மேம்பாட்டுக்கு வழி வகுத்தார்

விபுலானந்த விளையாட்டுக் கழக ஆரம்ப கால உறுப்பினராக, செயலாளராக, தலைவராக செயற்பட்டு இப்பொழுது விவேகானந்த விளையாட்டுக்கழக போஷகராகவும், முகாமையாளராகவும், செயற்பட்டு வருகிறார்.

விபுலானந்த பணிமன்றம் அமைக்கும் போது தொடக்க உறுப்பினர்களில் ஒருவராக இருந்து மணிமண்டப செயற்பாட்டில் பங்களிப்புச் செய்தார். பின்பு மன்ற செயலாளராக பல வருடங்கள் பணியாற்றினார். காரைதீவு பிரதேச சபை அபிவிருத்திக் குழு உறுப்பினராக, காரைதீவு கந்த சுவாமி கோயில் நிர்வாக சபை உறுப்பினராக கல்முனை நகர "லயன் கழக" செயற்குழு உறுப்பினராக பின் செயலாளராக செயற்பட்டு வருகிறார்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## இளையதம்பி தங்கராசா



திரு. இளையதம்பி தங்கராசா காரைதீவு 02ஆம் பிரிவில் இளையதம்பி வட்ட விதானைக்கும் மார்க்கண்டு தோம்புதோர் வள்ளியம்மைக்கும் மூன்றாம் பிள்ளையாகப் பிறந்தவர். தமது இளமைக்கால கல்வியை காரைதீவு இ.கி.ச பாடசாலையில் கற்றார். பின்னர் மட்/ ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் பயிற்சிக் கலாசாலையில் பயிற்சி பெற்று ஆசிரியராக பணியாற்றி 1973இல் அதிபர் போட்டிப்பரீட்சையில் தேறி அதிபரானார். தான் கடமையாற்றிய பாடசாலைகளில் (பசறை, அக்கரப்பத்தனை, வெலிமடை, காரைதீவு) தமிழ் ,சமய, பெரியார், விழாக்களை எடுத்து நன்மதிப்பைப் பெற்றவர்.

சுவாமி விபுலானந்தர் பணிமனை அமைப்பில் உபதலைவராக இருந்து நூற்றாண்டு விழாவின் போதும், மலர் சிலை வெளியீட்டின் போதும் பங்காற்றியதுடன், சுவாமி நடராஜானந்தா நூற்றாண்டு விழா , சிலை நிறுவுதல், மலர் வெளியீடு போன்றவற்றில் உறுப்பினராக இருந்து முன்னின்று உழைத்தவர். தற்போது தனது வம்சத்தாரின் பாலையடி பால விக்னேஸ்வரர் ஆலயத்தின் தலைவர் பொறுப்பை ஏற்று நடாத்தி வருவதுடன், சமாதான நீதிவானாகவும் விளங்கி கிராமத்தின் சமய, சமூக பணிகளில் முன்னின்று உழைத்து வருகிறார்.

## இராசையா குணசிங்கம்



இராசையா குணசிங்கம் அவர்கள் 01ஆம் பிரிவில் விபுலானந்தா வீதி காரைதீவில் பிறந்தார். இவர் ஐவர் கொண்ட குடும்பத்தில் மூன்றாமவர் ஆவார். தனது இளமைக் கல்வியை கமு/காரைதீவு இ.மி.ச ஆண்கள் பாடசாலையிலும், உயர் கல்வியினை, கமு/ காரைதீவு விபுலானந்தா மத்திய கல்லூரியிலும் கற்றார். தனது சமூக கலாச்சார பணிகளில் ஒரு சில ஆண்டு காலம் ஸ்ரீ கண்ணகை அம்மன் ஆலய தர்ம கர்த்தாவாகவும் தற்பொழுது நிர்வாக சபை உறுப்பினராகவும், முருகன் ஐக்கிய சங்க அறநெறிப்பாடசாலை தலைவராகவும் விளங்குகின்றார். வெள்ளிக்கிழமை தோறும் மாவடி ஸ்ரீகந்த சுவாமி ஆலயத்தில் கூட்டுப் பிரார்த்தனைகளையும் நடாத்தி வருகின்றார். மேலும் ஆலயங்கள் தோறும் நடைபெறும் அன்னதான வைபவங்கள்,சிறப்பாக அம்பாரை பிள்ளையார் ஆலயம், உகந்தை முருகன் ஆலயம், போன்ற ஆலயங்களில் காரைதீவு பிரதி நிதியாகவும் நின்று செயற்பட்டார். காரைதீவு பொது நிகழ்ச்சிகளிலும் கலந்து கொள்வதுடன் இணக்க சபை உறுப்பினராகவும், கால்நடை கூட்டுறவுச் சங்க தலைவராகவும் விளங்குகின்றார். அத்துடன் கிராமியப் பாடல்களை பாடுவதிலும் வல்லவராக விளங்குகின்றார். இவ்வாறாக சமயப்பணிகள் மாத்திரமல்லாது சமூகப் பணிகளிலும் ஈடுபட்டிருக்கின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சீனித்தம்பி விஜயரெத்தினம்



சீனித்தம்பி விஜயரெத்தினம் அவர்கள் காரைதீவில் 1940.02.02இல் பிறந்தார். காரைதீவு 10ஆம் பிரிவை நிரந்தர வசிப்பிடமாகக் கொண்ட இவர் ஐவர் கொண்ட குடும்பத்தில் இரண்டாமவர் ஆவார். இவர் தமது இளமைக் கல்வியை கல்/காரைதீவு இ.மி.ச ஆண்கள் பாடசாலையிலும் உயர் கல்வியினை கல்/காரைதீவு விபுலானந்தா மத்திய கல்லூரியிலும் கற்றார். இவர் சிரேஷ்ட கல்வி தராதரப் பரீட்சையிலும் *G.C.E O/L* பரீட்சையிலும் சித்தி பெற்றுள்ளார். தமது கல்வியை முடித்துக்கொண்ட இவர் 1965 சுகாதாரத்துறை அரச சேவையில் சேர்ந்து சுமார் 31 வருடங்கள் சேவையாற்றி ஓய்வு பெற்றுள்ளார். முன்னைய காலங்களில் மாவடி ஸ்ரீ கந்தசுவாமி கோயில் வெள்ளி தோறும் நடைபெறும் கூட்டு பிரார்த்தனைகளில் கலந்து நற்சிந்தனை வழங்கி வந்ததும் குறிப்பிடத்தக்கது. ஸ்ரீ மகா விஷ்ணு ஆலயத்தின் தர்மகத்தாக்களுள் ஒருவராக இருந்து தலைவர், செயலாளர், பொருளாளர், பதவிகளையும் ஏற்று தொண்டாற்றி வந்தமையும் குறிப்பிடத்தக்கது. அனைத்து ஆலய ஒன்றியத்தின் பிரதிநிதியாகவும், இந்து சமய விருத்தி சங்க பிரதிநிதியாகவும், நடராஜானந்தா நூற்றாண்டு விழா பிரதிநிதியாகவும் இருந்து சேவையாற்றியுள்ள இவர் தற்போது காரைதீவு மத்தியஸ்த சபையில் ஓர் அங்கத்தவராக இருந்து பணிபற்றி வருகின்றார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## வெற்றிவேல் ஜெயநாதன்



வெற்றிவேல் ஜெயநாதன் அவர்கள் காரைதீவு இரண்டாம் பிரிவில் 06.10.1943 இல் பிறந்தார். இவர் அறுவர் கொண்ட குடும்பத்தில மூத்தவர் ஆவார். தனது இளமைக் காலத்தில் கல்வியினை கல்/காரைதீவு இ.கி.ச ஆண்கள் பாடசாலையிலும் , உயர் கல்வியினை கல்/காரைதீவு விபுலானந்த மத்திய கல்லூரியிலும் :மட்டக்களப்பு சிவானந்த வித்தியாலயத்திலும் கற்றார். 1968 இல் ஆசிரியப் பணியினை ஏற்றார். 1970 – 1971 இல் மட்டக்களப்பு தமிழ் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் ஆசிரிய பயிற்சி பெற்று நுவ/கந்தப்பளை சென்றார். மட்/சிவானந்தா வித்தியாலயம், பெரிய கல்லாறு மெ.மி பெண்கள் பாடசாலை, காரைதீவு சண்முக வித்தியாலயம் என்பவற்றில் நீண்ட காலங்கள் அதிபராக சேவையாற்றினர். இறுதி ஈராண்டுகள் காரைதீவு கோட்டக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றி 2003இல் இளைப்பாறினார்.

சண்முக வித்தியாலயத்தின் துரித வளர்ச்சி இவர் சேவைக் காலத்தில் இடம் பெற்றது. காரைதீவு பல நோக்கு கூட்டுறவு சங்கத்தில் 06 ஆண்டுகள் தலைவராகக் கடமையாற்றி சங்கத்தின் அபிவிருத்திக்கு உதவினார். காரைதீவு சுவாமி விபுலானந்தர் ஞாபகார்த்தப் பணிமன்றத்தில் அதன் தலைவராகப் பணியாற்றினார். தற்போது இவர் சரீரம் ஸ்ரீ லங்கா தேசிய மன்றத்தில் நெக்டெப் திட்டத்தின் கீழ் மாவட்ட பிரதித் திட்டப் பணிப்பாளராக 17 கிராமங்களில் அபிவிருத்தி வேலைகளில் சேவையாற்றி வருகின்றார். காரைதீவு கண்ணகியம்மன் அம்பாறை மாணிக்கப் பிள்ளையார் ஆலயம் ஆகியவற்றின் நிர்வாகஸ்தராகவும், இராமகிருஷ்ண மிஷன் தொண்டராகவும் இணைந்து செயற்படுகின்றார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இராமக்குட்டி வேல்நாயகம்



திரு இராமக்குட்டி வேல்நாயகம் ஏழுவர் கொண்ட குடும்பத்தில் 1940.02.24ஆம் திகதி திரு.க. இராமக்குட்டிக்கும் திருமதி த.தங்கப்பிள்ளைக்கும் மகனாகப் பிறந்தார். இவர் தற்போது வசிப்பது 12ஆம் பிரிவு, பிறந்தது 01ஆம் பிரிவு. தனது இளமைக்கால கல்வியினை காரைதீவு இ.மி.ச ஆண்கள் பாடசாலை யிலும் மேற்படிப்பை மட்/ சிவானந்தா வித்தியாலயத்திலும் கற்றார். இவர் ஒரு விசேட பயிற்றப்பட்ட ஆங்கில ஆசிரியரும் அதிபருமாவார். காரைதீவு கலைமகள் சனசமூக நிலையத்தில் தலைவராக ஆரம்பிக்கப்பட்ட சமூகப்பணி 11 கோயில்களைக் கொண்ட அறங்காவலர் ஒன்றியத் தலைவர் (தர்மகத்தா சபை) பணியோடு தொடர்கின்றது. காரைதீவில் முதல் விளையாட்டு கழகம் இவருடைய தலைமையில் 'ஆபிரகாம் லிங்கம்' விளையாட்டு கழகம் என்ற பெயரில் ஆரம்பிக்கப்பட்டது. இவர் 1964ஆம் ஆண்டு சந்தான அடிப்படையில் காரைதீவு ஸ்ரீ கண்ணகையம்மன் கோயில் தர்மகத்தாவாக தெரிவு செய்யப்பட்டார இவர் தமிழிலும், ஆங்கிலத்திலும் மேடையில் சிறப்பாக பேசக் கூடியவர்..



## ஆறுமுகம் கிருஷ்ணபிள்ளை

ஆறுமுகம் கிருஷ்ணபிள்ளை அவர்கள் காரைதீவு 07ஆம் பிரிவில் 1948இல் பிறந்தார். இவர் ஜவர் கொண்ட குடும்பத்தில் நான்காமவர் ஆவார்.இவர் தமது இளமைக் கல்வியை இ.கி.ச ஆண்கள் பாடசாலையிலும் பின்னர் கல்முனை பாத்திமா கல்லூரியிலும் க.பொ.த (சா/த) வரை கற்று சித்தி அடைந்தார். பின்னர் வாழ்வை வளம் பெறச் செய்யும் நோக்கில் நீர்ப்பாசன திணைக்களம் அம்பாரை மட்டக்களப்பு கச்சேரி, இறுதியாக நீர்ப்பாசன திணைக்களம் கல்முனை ஆகியவற்றில் அரச முகாமைத்துவ உதவியாளராக சேவையாற்றி தற்போது சேவையில் இருந்து இளைப்பாறியுள்ளார்.

மேலும் இவர் ஒரு சமாதான நீதவான் என்பதுடன், காரைதீவு 09 கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தலைவராகவும் கிராம புனர்வுத்தாபன தலைவராகவும் மத்தியஸ்தர் சபை உறுப்பினராகவும் இருந்து பல சமூக பணிகளை ஆற்றி வருவதுடன் ஆன்மிக ரீதியில் ஸ்ரீ மாவடி கந்த சுவாமி ஆலய முன்னாள் உப செயலாளராகவும், ஸ்ரீ மகா விஷ்ணு பெருமாள் ஆலயத்தின் முன்னாள் தலைவரும் நிர்வாக சபை உறுப்பினராகவும், அம்பாரை ஸ்ரீ மாணிக்க பிள்ளையார் ஆலய நிர்வாக சபை உறுப்பினராகவம் உள்ளகக் கணக்காய்வாளராவும் இருந்து தன் பணிகளை செய்து வருவதும் இங்கு குறிப்பிடத்தக்கது.



## கனகசபை கனகமலர்

கனகசபை கனகமலர் அவர்கள் காரைதீவு – 01ஆம் பிரிவில் 1952.04.02இல் பிறந்தார். இவர் குடும்பத்தில் 02ஆம் பிள்ளையாவார். தனது இளமைக்கல்வியினை இ.கி.ச பெண்கள் பாடசாலையிலும், உயர் கல்வியினை காரைதீவு விபுலானந்தா மத்திய கல்லூரியிலும் கற்றார்.

இசைத்துறையில் பயிற்சி பெற்ற இவர் கல்முனை இ.கி.ச வித்தியாலயத்தில் சங்கீத தொண்டராசிரியராக பணியாற்றிய பின்னர் சமூகப்பணியில் ஆர்வமிக்கவராகி பெண்களின் கல்வி, சமூக மேம்பாட்டிற்காக மாதர் கிராம அபிவிருத்தி சங்கத்தை நிறுவி பல வருடங்களாக பணியாற்றி வருகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அபுபக்கர் முகம்மது சுல்த்தா



அபுபக்கர் முகம்மது சுல்த்தார் 1935ஆம் ஆண்டு உதுமாங்கண்டு அவூவக்கருக்கும் மீராசாய்வு கலந்தரும்மாவுக்கும் மூன்றாவது பிள்ளையாவார். ஆரம்பக் கல்வியை மாவடிப்பள்ளி அரசினர் கலவன் பாடசாலையிலும், பின் இராமகிருஷ்ண ஆண்கள் பாடசாலையிலும கற்று பின்னர் உயர்கல்வியைத் தொடரமுடியாது தொழிலில் ஈடுபட்டு மாவடிப்பள்ளி கிராமத்தில் பொது வேலைகளில் மும்முரமாக இளமையில் ஈடுபட்டவர். காரைதீவு பிரதேச அபிவிருத்தியில் தமிழ்த்தலைவர்களுடன் இணைந்து ஒற்றுமையுடன் மாவடிப்பள்ளி கிராமத்தில் பல செயற்திட்டங்களை செயற்படுத்தியுள்ளார்.

இவர் கிராமத்தின் பல நடவடிக்கைளில் தலைமைப்பொறுப்பை ஏற்று திறம்பட செயற்படுத்தியுள்ளார். கிராம அபிவிருத்தி சங்கம், கிராமமோதய சபைத் தலைவராக பல ஆண்டுகள் கடமையாற்றி அம்பாரை மாவட்டத்தில் ரூபாய் 10,000/- பரிசு பெற்றுள்ளார். மேலும், வீடமைப்புத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு மாவடிப்பள்ளி கிராமத்தில் வீடமைப்பு பணியை திறம்பட செயற்படுத்த அதற்கும் பொறுப்புடன் செயற்பட்டமைக்காக பாராட்டப்பட்டவர். மேலும், பொதுப்பணியில் 35 வருடத்திற்கு மேலாக மாவடிப்பள்ளி ஜும்மாப்பள்ளிவாசலில் சமயத்திற்காகப் பணிபுரிந்து பல நூற்றுக்கணக்கான திருமணங்களை நடாத்தியுள்ளார்.

## ஜனாப் முகம்மது காசீம் ஆதம்பாவா



ஜனாப் முகம்மது காசீம் ஆதம்பாவா அவர்கள் கல்முனை - 05இல் 1937.11.18இல் பிறந்தார்கள். இவரது பெற்றோர் கல்முனையைப் பிறப்பிடமாகக் கொண்டவர்கள். தனது ஆரம்பக் கல்வியை கல்முனை அல்- அஸ்ஹர் வித்தியாலயத்திலும், இடைநிலைக் கல்வி, உயர்கல்வியை கல்முனை ஸாஹிராக் கல்லூரியிலும் பெற்றதுடன், பேராதனை பல்கலைக்கழகத்தில் வெளிவாரி கலைமாணிப்பட்டமும் பெற்றார். 1956இல் அட்டாளைச்சேனை ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சி பெற்று, 1958இல் உதவி ஆசிரியராக முதல் நியமனம் பெற்றார். நிந்தவூர் முஸ்லீம் கலவன் பாடசாலை, நிந்தவூர் அல்-அஸ்ரக் தேசிய- பாடசாலை ஆகியவற்றில் ஆசிரியர் பணியைத் தொடர்ந்த இவர். 1965இல் பலாலி விசேட பயிற்சி கலாசாலையில் கணித பாடத்தில் பயிற்சி பெற்று மீண்டும் நிந்தவூர் அல்-அஸ்ரக் தேசிய பாடசாலை மற்றும் கொழும்பு தெமட்டக்கொடை தமிழ் வித்தியாலயம், கல்முனை ஸாஹிரா தேசிய பாடசாலை ஆகியவற்றிலும் கற்பித்தார். 1975இல் கணித சேவைக்கால ஆலோசகராகவும், 1982இல் இலங்கை கல்விச்சேவை 5ஆம் தரத்திலும், 1985இல் கல்வி நிருவாக சேவை 3ஆம் தரத்திலும் பதவி உயர்வு பெற்று, 1985இல் கல்முனை ஸாஹிரா தேசிய பாடசாலையின் அதிபராகவும், 1989இல் கல்வி அதிகாரியாகவும், 1992இல் கல்வி நிருவாக சேவையில் 2ஆம் தரத்தில் உயர்வு பெற்றதுடன், 1994இல் அம்பாரை பிரதி கல்விப் பணிப்பாளர் பதவியேற்று சேவையாற்றினார். 1997இல் ஒய்வு பெற்று, மீண்டும் ஓராண்டு ஆண்டு சேவை நீடிப்புப்பெற்று 1998இல் ஓய்வு பெற்றார். 1988ஆம் ஆண்டில் இடம் பெற்ற வன்செயலாலும், 2004ஆம் ஆண்டில் இடம் பெற்ற சுனாமியினாலும் அமைக்கப்பட்ட அகதி முகாங்களை சிறப்பாக வழி நடாத்தியதோடு, இனஒற்றுமைக்கும் பாடுபட்டார். சமூக நல அமைப்புக்களிலும், பொது நலன் பேணும் அமைப்புக்களிலும் அங்கம் வகிப்பதோடு, சிவில் பாதுகாப்பு விழிப்புக்குழுவிலும் அங்கம் வகிக்கின்றார். 1970இல் மாளிகைக்காடு மேற்கில் திருமண பந்தத்தில் இணைந்து கொண்டார்.இவர் கொழும்பு சட்டக் கல்லூரியின் இறுதியாண்டு மாணவராகத் தற்போது சட்டத்தை கற்று கொண்டிருப்பதும் சிறப்பம்சமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ஆறுமுகம் பூபாலரெட்ணம்

திரு. ஆறுமுகம் பூபாலரெட்ணம் அவர்கள் காரைதீவு 2ம் பிரிவில் ஆறுமுகம் மரகதவல்லி தம்பதியினருக்கு ஒன்பது பிள்ளைகளில் தலைமகனாகப் 1944.10.24 இல் பிறந்தார். தனது இளமைக்கல்வியை காரைதீவு இ.கி.மி ஆண்கள் பாடசாலையிலும் விபுலானந்த மத்தி கல்லூரிலும் பின்னர் கல்லடிசிவானந்தா வித்தியாலயத்தில் உயர்கல்வியை கொழும்பிலும் கற்றார். தனது தொழிற்கல்வியை (மருந்தாளர்) கொழும்பு மருத்துவக்கல்லூரியிலும் முடித்து நாட்டின் சகல பாகங்களிலும் 30 ஆண்டுகாலம் சேவையாற்றினார்.

அவர் ஒரு மருந்தாளராக கடமையாற்றியதோடு பொதுநலவிரும்பியாகவும் சமயகலாசார ஈடுபாடு கொண்டவராகவும் சித்தானைக்குட்டிகோயில் தலைவராகவும் மற்றும் கூட்டுறவுச்சங்க தலைவராகவும் சமாதானசபை விழிப்புக்குழு பிரசைகள்குழு போன்ற இன்னோரன்ன சேவைகளையாற்றினார்.

தற்போது மத்தியஸ்த சபையிலிருந்து சேவையாற்றிக்கொண்டிக்கிறார் இவர் தனது சமய கலாச்சார பொதுப்பணிகளை கடந்த 20 வருடமாக செய்துவருவதுடன் சமுகத்துக்கு சிறப்பான சேவையை நல்கியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.



## சாயிபுலெப்பை முகம்மட் இஸ்ஹாக்

இப்றாலெப்பை சாயிபுலெப்பை அவர்களின் மகன் சாயிபுலெப்பை முகம்மட் இஸ்ஹாக் மாவடிப்பள்ளி மேற்கு பிரிவு பிறந்தார். இவர் ஐவர் கொண்ட குடும்பத்தில் மூன்றாமவர். இவர் தனது ஆரம்பக் கல்வியினை முஸ்லிம் கலவன் பாடசாலை மாவடிப்பள்ளியிலும் உயர்கல்வியினை முஸ்லிம் மஹாவித்தியாலயம் சம்மாந்துறையில் கற்று கல்வி பொது சாதாரண பரீட்சை வரை எழுதி பின்னர் சமூக சேவையில் ஈடுபட ஆரம்பித்தார்.

இந்த அடிப்படையில் 1991 ஆம் ஆண்டு கிராமோதைய சபை தலைவர், தேசிய வீடமைப்பு அதிகாரசபையின் ஜலால்புரம் மாதிரிக்கிராம தலைவர், வை.எம்.எம்.ஏ.தலைவர் எனபல பதவிகளை ஏற்று சேவையாற்றி உள்ளார்.

தற்பொழுது மாவடிப்பள்ளி ஜும்ஆ பள்ளி வாசல் செயலாளர், காரைதீவு மத்தியஸ்தர் உறுப்பினர் என்பவற்றுடன் இலங்கை போக்குவரத்து சபையில் பாதுகாவலர் சேவையில் ஈடுபட்டு வருகின்றார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இணையமும் பிரதேச வளர்ச்சியில் அதன் பங்களிப்பும்

சோதீஸ்வரன் ஸுரநுதன்


நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் இத் தகவல் தொடர்பாடல் யுகத்தில் இணையமானது உலகம் முழுவதும் நீக்கமற பரவி நிற்கிறது. அபிவிருத்தியடைந்த நாடுகள் முதற்கொண்டு ஆபிரிக்கா, அந்தார்ட்டிக்கா என எல்லா இடங்களிலும் இணையமானது தனது காலடியைப் பதித்துள்ளது. இதற்கு கணணி உட்பட தகவல் தொடல்பாடலுக்குரிய சாதனங்களினதும், அவை சார்ந்த தொழில்நுட்பங்களினதும் அதீத வளர்ச்சியும் அவை ஓரளவு பாவனையாளரின் கொள்வனவு சக்திக்கு உட்பட்ட செலவில் கிடைக்கக்கூடியவாறு இருப்பதுவும் பிரதானமான காரணங்களாகும். மேலும் கம்பியில்லா தகவல் பரிமாற்ற முறைமையானது தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத் துறையில் புதிய பரிணாமத்தினை ஏற்படுத்தியுள்ளது எனலாம். கம்பி வழி மின்சாரம் மற்றும் தொலைபேசி வசதி இல்லாத இடங்களில் கூட சூரிய மின்சாரத்தையும் செய்மதி அல்லது ஏனைய கம்பியில்லாத் தொழில்நுட்பங்கள் (**HSPA, GPRS, 3G**, முதலியன) மூலம் இணைய வசதியினை பெறக்கூடியதாக உள்ளது.

இந்த வகையில் கணணியில் பரீட்சயமற்றவர்களுக்கும், அடிப்படை கணணி அறிவினை குறிப்பிட்ட சில மென்பொருள் தொகுப்புகளில் மாத்திரம் பெற்ற வளர்ந்தோருக்கும் இணையமானது ஒரு புரியாத புதிராகவே உள்ளது. இணையத்தினையும் மின்னஞ்சலையும் ஒரே விடயங்கள் என எண்ணுபவர்கள் இன்றும் உள்ளனர். இதற்கான முக்கிய காரணமாயிருப்பது, இணையம் எனும் மாய உலகமானது பல்வேறு விசித்திரங்களையும் புதிர்களையும் உள்ளடக்கிருப்பதும் அது நாளுக்கு நாள் தொழில்நுட்பரீதியாக மாறிக்கொண்டிருப்பதுவுமாகும். எனினும் ஆர்வத்துடன் முயன்றால் இணையமானது மிக எளிதாக கையாளக்கூடிய ஒரு வளமாகும்.

இணையம் என்பது பல்வேறு தன்னிச்சையான கணணிகளினதும் கணணி வலையப்புகளின் சேர்க்கையாகும். இது உலகளாவியரீதியிலான இலத்திரனியல் தகவல் பரிமாற்றத்துக்குரிய கட்டமைப்பை வழங்குகிறது. இணையம் ஒரு தனிப்பட்ட நபருக்கோ, அரசாங்கத்திற்கோ அல்லது ஒரு அமைப்பிற்கோ சொந்தமானது அல்ல. சர்வதேச தன்னார்வத்தொண்டு நிறுவனமான இணைய சங்கம் அல்லது இணைய சமுதாயம் (Internet Society) எனப்படும் நிறுவனம் இணையத்தினைக் கட்டுப்படுத்துகிறது.

இணையத்தில் பல்வேறு நபர்களாலும், அமைப்புக்களாலும் இணையத்தளங்கள் (Web Sites) நடாத்தப்படுகின்றன. இவ்விணையத்தளங்களில் பிரதானமாக இணையப் பக்கங்களும் (Web Pages), அசையும் படங்கள் (Video & animations) , செயல்நிரல்கள் (Programs) வேறு இணையப்பக்கங்களுக்குரிய இணைப்புகள் (Hyperlinks) போன்றவை காணப்படும். மேலும் குறிப்பிட்ட துறை சம்பந்தமாக தொர்ச்சியாக எம்மை அறிவுறுத்திக்கொண்டிருக்கும் செய்திக்குழுக்களும் (News Groups), இலத்திரனியல் தொடர்பாடலின் அச்சாணியாகவும் இணையத்தின் தாய் என வர்ணிக்கப்படக்கூடியதுமான மின்னஞ்சலும் இணையத்துடன் இரண்டறக்கலந்த ஏனைய சேவைகளாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இணையத்தின் கட்மைப்பை அருகிலுள்ள படம் காட்டுகிறது.

அடிப்படை நிலையில் நிறுவனங்களும், வீட்டுப்பாவனையாளர்களும், இணையத்துடன் இணைந்திருக்கின்றனர். பொதுவாக பாவனையாளர்கள் உள்ளுர் இணைய சேவை வழங்குனர்கள் (Internet Service Providers) மூலமாக இணையத்துடன் இணைகின்றனர். உள்ளூரிலுள்ள இணைய சேவை வழங்குனர்கள் பிராந்திய மற்றும் உலகளாவிய ரீதியிலான இணைய சேவை வழங்குனர்களுடன் தொடர்பினை ஏற்படுத்துகின்றனர்.

ஒரு சமூகத்தின் வளர்ச்சிக்கு இணையமானது காத்திரமான பங்களிப்பினை வழங்க முடியுமெனினும், பெரும்பாலான இணைய பாவனையாளர்கள் வெறுமனே செய்திகளைப் பார்வையிடுவதற்கும், சினிமா, விளையாட்டு மற்றும் நகைச்சுவை போன்ற பொழுதுபோக்கு அம்சங்களுக்கும், நண்பர்களுடனும் சிலவேளைகளில் அறிமுகமற்றவர்களுடனும் அரட்டையடிப்பதற்குமே அதிக நேரத்தினை செலவிடுகின்றனர். எனினும் ஒரு கிராமத்தில் இணையமானது வினைத்திறன்மிக்கதாக பயன்படுத்தப்படும்போது அது மிக நல்ல பயன்களையே ஈட்டித்தரும் என்பது திண்ணமாகும். இந்த அடிப்படையில் கிராமங்களில் இணையம் அல்லது தகவல் தொழில்நுட்பமானது பிரயோகிக்கப்படக்கூடிய சில வழிமுறைகள் இங்கு தரப்பபட்டுள்ளன. இவ்வுத்திகள் எமது பிரதேசத்திலும் யதார்த்தரீதியான அணுகுமுறையில் அரசாங்கம், அரச திணைக்களங்கள், தனியார் நிறுவனங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள், பொது நிறுவனங்கள் மற்றும் பொதுமக்களின் ஒருங்கிணைவுடன் செயல்படுத்தப்படுமாயின் அது ஒரு புத்தெழுச்சியை கிராமங்களில் ஏற்படுத்தமுடியும். மேலும் இணையப்பாவனைக்கு ஆங்கில அறிவும் அடிப்படை கணணி அறிவும் தேவை என்ற எண்ணம் படிப்படையாக இன்று தகர்க்கப்பட்டுக்கொண்டு வருகிறது.

மின்னஞ்சல் என்பது இலத்திரனியல் தொடர்புச் சாதனங்கள் மூலம் செய்திகளை எழுதுதல், அனுப்புதல், மற்றும் பெறுதல் போன்றவற்றைச் செய்யும் முறையாகும். சாதாரணமாக அஞ்சல்கள் அனுப்பும் போது யாரிடமிருந்து யாரிற்கு அனுப்புவதைப் போன்று இங்கு உங்கள் மின்னஞ்சலும், பெறுபவரின் மின்னஞ்சல் முகவரியும் தேவைப்படுகின்றது. உலாவிகள் ஊடாக இலவச சேவையை வழங்குபவர்களில் www.gmail.com, www.yahoomail.com, மற்றும் www.live.com எனும் இணையத்தளங்கள் பிரபலமாக உள்ளன. ஒரு மின்ஞ்சல் முகவரியானது ஒருவருடைய அடையாள அட்டை போன்று செயற்படுகின்றது. வேறு இணையத்தளங்களிலோ அல்லது அமைப்புகளிலோ இலத்திரனியல் ரீதியாக அங்கத்துவம் பெறும்போது மின்னஞ்சல் முகவரி வினவப்படுகிறது. அத்துடன் இணைய அரட்டை (Chat) செய்வதற்கு மின்னஞ்சல் முகவரி இருத்தல் அவசியமாகிறது

தமிழ் மொழியைப் பொறுத்த வரையில், சங்க காலத்தில் ஐந்து திணைகளில் வாழ்ந்ததாக தமிழ் இலக்கிய ஆய்வாளர்களால் குறிப்பிடப்படுகிறது. எனினும் இன்று ஆறாவது திணையாக கருதக்கூடிய இணையத்திலும் தமிழ் மொழி வளர்க்கப்பட்டு கொண்டு வருகிறது. எந்தக் கணணியிலும், எந்த இயங்கு தளத்திலும் எழுத்துக்களை வாசிக்கக்கூடிய யுனிக்கோட் (Unicode) எழுத்துரு வடிவங்கள் மூலம் இணையத்தளங்களில் தகவல்கள், செய்திகள் மற்றும் இலக்கியப்படைப்புகள் வெளியிடப்படுகின்றன. இம்முறை மூலம் உருவாக்கப்படும் ஆவணங்களைப் பார்வையிட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் எழுத்துருக்கள் (Fonts) அவசியமில்லை. அத்துடன் தமிழை மொழி ஊடகமாக கொண்ட கலந்துரையாடல் குழுக்கள் (Dissussion Groups) மூலம் மொழி மற்றும் சமயம் சார்ந்த விடயங்களை பரிமாறிக் கொள்ளக்கூடிதாக உள்ளது. அரியநூல்கள் நூல்கள் மற்றும் இலங்கியங்கள், ஆவணங்களாகவும் (Documents - PDF,HTML) ஒலிவடிவத்திலும் (Audio - MP3, Live Streaming) இணையத்திலிருத்து பெற்றுக் கொள்ளக்கூடியதாக உள்ளது. மேலும் புலம் பெயர் நாடுகளில் உள்ள குழந்தைகள் கல்வி கற்பதற்காக இலவசமாக தமிழ்க் கல்வியை வழங்கும் இணையத்தளங்கள் கூட உள்ளன. தமிழில் யுனிக்கோட் முறையில் தட்டச்சு செய்வதற்கு இ-கலப்பை (E-Kalappai), முரசு போன்ற மென்பொருட்கள், சாதாரண முறையில் (பாமினி எழுத்துரு வடிவம் தட்டச்சு செய்யவும், Google Indic Transliterate (www.google.com/transliterate/indic/Tamil) மூலம் உச்சரிப்பு அடிப்படையில் தட்டச்சு செய்யுவும் வசதிலை வழக்குகின்றன. மேலும் www.googletamil.com எனும் இணையத்தள முகவரி தமிழ் மொழியில் தேடலை வழங்குகிறது. கட்டற்ற தகவல் களஞ்சியமான ta.wikipedia.org தமிழ் மொழியில் பல்வேறு ஆக்கங்களையும் கட்டுரைகளையும் வழங்குகிறது.

தற்போது தகவல் பரிமாற்றத்தில் வலைப்பூக்கள் (Blogs) மற்றும் சமுக வலைப்பின்னல்கள் (Social Networks) போன்றவை பிரபலமாக உள்ளன. வலைப்பூக்கள் மூலம் ஒவ்வொருவரும் தமது கலைத்திறமையை வெளிக்காட்ட வழிசமைக்கிறது. பல்வேறு பிரபலங்களும் அமைப்புக்களும் இன்று வலைப்பூக்களைப் பயன்படுத்தி தமது கருத்துக்களை வெளியிட்டுக்கொண்டிருக்கின்றனர். வலைப்பூக்களை இலவசமாக www.blogger.com, www.blogspot.com போன்ற இணையத்தளங்கள் வழங்குவதாலும் அவற்றில் தகவல் பதிவேற்றம் செய்வது எளிமையாக்கப்பட்டிருப்பதாலும் பலர் இவ் வலைப்பூக்களையே விரும்புகின்றனர். மேலும் www.facebook.com, www.hi5.com போன்ற இணையத்தளங்கள் பழைய உறவுகளை, நட்புக்களை புதுப்பிக்கவும் புதிய நண்பர்களைத் தேடிக்கொள்ளவும் வழியமைக்கின்றன.

ஒரு பிரதேசத்தின், குறிப்பாக ஒரு கிராமத்தின் வளர்ச்சியில் இணையமானது காத்திரமான பங்களிப்பினை வழங்க முடியும். இதில் முக்கியமாக, ஒரு கணணியையோ அல்லது இணைய தொடர்பையோ பெறமுடியாத ஏழை விவசாயிகள், மீனவர்கள் மற்றும் தொழிலாளர்கள் முதலானவர்களுக்கு அவரக்குரிய திணைக்களங்களூடாக இணையத்திலிருந்து தகவல்களை பெற்றுக்கொடுத்து அவர்களின் பொருளாதாரத்தினை உயர்த்துவதற்கான நடவடிக்கைகளை எடுக்கமுடியும். தொழிலாளர்களுக்கும், சிறு தொழில் முயற்சியாளர்களுக்கும் அவர்களின் தொழில் களை மேன்மைப்படுத்தவும் சந்தை வசதிகளை விரிவாக்கவும் இணையமானது பங்களிப்பை வழங்கலாம். பொருத்தமான தொடர்பாடல் வசதிகள் மூலம் பல்வேறு பிரதேச விவசாயிகள், துறைசார்ந்த நிபுணர்கள் மற்றும் வியாபாரிகள் இணையே கலந்துரையாடல்களை ஏற்படுத்த முடியும். மேலும் புதிய பயிரினங்கள், நோய் பீடைத்தாக்கங்கள் மற்றும் அவற்றுக்குரிய தீர்வுகள் போன்றவற்றினை விரைவாக பெற்றுக்கொள்ள முடியும். மேலும் இயற்கைவளம், அழகிய கடற்கரைகள் மற்றும் வரலாற்றுப்பின்னணி போன்றவற்றினைக் கொண்ட கிராமங்களில் உல்லாசப்பிரயாணத்துறையை ஊக்குவிக்கவும் இணையத்தினை பயன்படுத்தமுடியும்.

கல்வி மற்றும் தகவல் துறையில் இணையமானது விசாலமான வீச்சில் உதவமுடியும். பாடசாலை மாணவர்க்கு தமது பாடசாலை பாடவிதானம் முதற்கொண்டு, புதிய பாடத்திட்டத்தினடிப்படையில் அவசியமான ஒப்படைகள், காட்சி விளக்கங்கள் மற்றும் கலந்துரையாடல்களுக்குரிய தகவல்களை இலகுவாக இணையத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம். பல்வேறு தொழில் சார் நிபுணர்கள் கலந்து கொள்ளும் குழுக்களில் (Groups) அங்கத்துவம் பெறுவதன் மூலம் உயர்கல்வி மாணவர்கள் மற்றும் தொழில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரிவோர் தம் துறை சார்ந்த அறிவினைப் பெற்றுக் கொள்ள முடியும். செய்தி மற்றும் தகவல் வலையமைப்புக்களின் வீச்சானது இணையம் மூலம் விரிவாக்கப்பட்டுள்ளதால் மக்கள் பல்வேறு நன்மைகளைப் பெறுகின்றனர். மேலும் தேசிய பத்திரிகைகள், பிராந்திய நாளிதழ்கள், சஞ்சிகைகள் முதலியன இணையத்தில் பிரசுரிக்கப்படுவதன் மூலம் உடனடி செய்திகளை மக்கள் பெற்றுக் கொள்வதுடன் அரசாங்க அறிவித்தல்கள், வர்த்தமானிப்பிரகடனங்கள், அனர்த்த முன்னறிவிப்புகள் மற்றும் தொழில் வாய்ப்புக்களை கிராமத்து மக்கள் உடனடியாக அறிந்து கொள்ள முடியும்.

எமது கிராமத்தைப் பொறுத்தவரையில் தகவல் தொழில்நுட்பத்துறையில் ஏனைய அம்பாறை மாவட்ட தமிழ்க் கிராமங்களை விட குறிப்பிடத்தக்களவு முன்னேற்றம் கண்டுள்ளது எனலாம். பொதுவாக ஒவ்வொரு வீட்டிலும் இன்று ஒரு கணணி ஒரு அத்தியாவசியப் பொருளாக கருதப்படும் நிலை உள்ளது. மேலும் அரசாங்கத்தின் அனுசரணையுடன் நிறுவப்பட்ட நெனசல அறிவகங்கள் மற்றும் தனியார் நிறவனங்கள் குறைந்த செலவில் தகவல் தொழில்நுட்பக்கல்வியையும் அதிவேக இணைய இணைய வசதியையும் வழங்குகின்றன. குறிப்பிடத்தக்க எண்ணிக்கையானவர்கள் சாதாரண தொலைபேசி இணைப்புக்கள் மூலம் இணையவசதியினை வீடுகளில் பெறுகின்றனர். தற்போது அதிவேக இணைய இணைப்புகளைப் (ADSL/HSPA) பயன்படுத்துவோர் தொகையும் படிப்படியாக அதிகரித்துக்கொண்டு வருகிறது.குறிப்பிட்டுச் சொல்லக்கூடியவாறு காரைதீவினைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் தொழில்சார் முறையில் வடிவமைக்கப்பட்டு பேணப்பட்டு வரும் www.karaitivu.com மற்றும் www.karaitivu.org எனும் இரு இணையத்தளங்கள் செயற்படுத்தப்பட்டு வருகின்றன. காரைதீவிலிருந்து புலம்பெயர்ந்து வாழும் காரைதீவு கிராம வளர்ச்சியில் மிகுந்த ஈடுபாடைய அன்பர்களால் www.karaitivu.com இணையத்தளமானது நடாத்தப்பட்டு இவ்வூரில் வசித்துக் கொண்டிருப்பவர்களின் தொடர்பாடலுடன் சிறப்பாக பேணப்பட்டுவருகின்றது. கிராமத்தில் நடைபெறும் சகல விதமான சமய, கலை, கலாசார நிகழ்வுகள் உடனடியாக தன்னார்வ அடிப்படையில் பிரசுரிக்கப்படுவது இவ்விணையத்தளத்தின் சிறப்பம்சமாகும். மேலும் பரீட்சை முடிவுகள், திருமணம் மற்றும் இறப்பு பற்றிய தகவல்களை, புலம் பெயர் மக்களுக்கு மட்டுமன்றி காரைதீவிலிருந்து இலங்கையின் வேறு பாகங்களில் வசிப்பவர்களுக்கும் எடுத்துச் செல்வதில் இவ்விணையத்தளம் பெரும் பங்காற்றுகிறது. மேலும் காரைதீவில் வசித்துக் கொண்டிருப்பவர்களினதும், புலம் பெயர்ந்தவர்களினதும் செய்திகள் மற்றும் புகைப்படங்கள்




*www.karaitivu.com* இன் அமைப்பு

இவ்விணையத்தளத்தில் காணப்படுகின்றன. www.karaitivu.org இணையத்தளமானது தகவல் தொழில் நுட்பத்துறையில் ஈடுபாடுடைய இளைஞர்களால் தாம் சார்ந்த PLUSS ஒன்றியத்தின் சார்பாக நடாத்தப்பட்டுக் கொண்டு வருகிறது. இவ்விணையதளமும் சமய, கலை, கலாசார நிகழ்வுகள் பற்றி அறியத்தருவதுடன் செய்திகளை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உத்தியோக பூர்வமாகவே வெளியிடுகிறது. மேலும் இது ஒரு செய்தித்தளம் என்பதை விட தகவல் தளம் என்றே இணைய ஆசிரியர்களால் குறிப்பிடப்படுகிறது. இவ்விணையத்தளமானது தனது பயனாளர்களுக்கு name@karaitivu.org மின்னஞ்சல் முகவரிகளையும் சில பிரபல நிறுவனங்களுக்கு name.karaitivu.org எனும் வடிவில் துணை இணையத்தள முகவரிகளையும் கூட வழங்கியுள்ளது. மேலும் பொது அறிவு மற்றும் இலக்கியம் சார்ந்த விடயங்கள் பிரசுரிக்கப்படுவது *www.karaitivu.org* இன் அமைப்பு




இவ்விணையத்தின் சிறப்பியல்பாகும். இவ்விரு இணைத்தளங்களும் தனிப்பட்ட விடயங்களுக்கு முக்கியத்தும் கொடுப்பதைக் குறைத்து எமது பிரதேச செய்திகளுக்கும், கலை இலக்கியப் படைப்புகளுக்கும் அதிக முக்கியத்தும் கொடுத்தல் நன்மையாகும்.

மேலும் இவ்விணையத்தளங்களை ஏற்பாட்டாளர்களாக் கொண்டு, தகவல் தொழில் நுட்ப நிலையங்களை அமைத்து அதன் மூலம் பெறும் வருமானத்திலிருந்தும், வெளிநாடுகளிலிருந்து பெறப்படும் உதவிகளிலிருந்தும் கிராமத்தில் தகவல் தொழில்நுட்ப வளர்ச்சிக்கும் பிரதேச உட்கட்டமைப்பு மற்றும் வறுமை ஒழிப்பிற்கும் உதவமுடியும். மாணவர்களுக்கு உயர்கல்வி நடவடிக்கைளை மேற்கொள்வதற்கு புலமைப்பரிசில் திட்டங்களை முன்வைக்க முடியும். இதன் போது பணப்பரிமாற்றங்கள் மற்றும் செலவுகள் பற்றிய விபரங்கள் அங்கத்தவர்களுக்கும் நன்கொடையாளர்களுக்கும் இணையம் மூலம் உடனுக்குடன் தகவல் பரிமாற்றப்படுவதால் இவ்வாறான செயற்பாடுகளில் நம்பகத்தன்மை ஏற்படுத்தப்படும். இணைய கலந்துரையாடல் குழுக்களை ஏற்படுத்தி எமது ஊரைச் சேர்ந்தவர்களும் வெளிநாடுகளில் உள்ளவர்களும் கலந்துரையாடல்களை நேரடியாக மேற்கொள்ளக்கூடியதாக வசதிகள் செய்து கொடுக்கப்படவேண்டும். இறுதியாக இணையம் எனும்போது அது பற்றிய தப்பான அபிப்பிராயமே பொதுவாக நிலவுவதால் இணைய வசதி வழங்கும் நிறுவனங்களிலிருந்து பெண்கள் பயன் பெறுவது குறைவாக உள்ளது. இது எமது பிரதேசத்தில் இணையத்தின் வளர்ச்சிக்கு தடைக்கல்லாக உள்ளது. இவ்வாறான மனப்பான்மையானது நீக்கப்பட்டு அனைவரும் இணையத்தினை பயன்பதுத்தக்கூடிய சூழ்நிலையை ஏற்படுத்த அனைவரும் உழைக்கவேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# காரைதீவு விளையாட்டு துறையின் வரலாறும் வளர்ச்சியும்

எம்.சுந்தரராஜன்
(ஆசிரியர்)

காரைதீவின் விளையாட்டு வரலாறு ஆனது காரைதீவின் காத்தற் கடவுளாகிய கண்ணகி அம்மனைக் குளிர்விக்கும் பொருட்டு நடைபெற்ற பெரு விழாக்களில் இருந்தே ஆரம்பமாகியதாக வரலாறுகள் கூறுகின்றன.

இப்பெருவிழாக்களிலே கொம்பு முறித்தல், போர்த்தேங்காய் உடைத்தல், கொம்புத்தட்டு போன்ற விளையாட்டுக்கள் முக்கிய இடம்பெற்றன. கொம்பு முறித்தல் விளையாட்டு இவற்றில் பிரபல்யமானது. காரைதீவின் வடசேரி தென்சேரி மக்கள் கெம்புச் சந்தியில் கூடி இக்கொம்பு முறித்தல் விளையாட்டில் ஈடுபடுவர். இக் கொம்புகளில் எக்குழுவினது கொம்பு முறிக்கப்படுகின்றதோ அக்குழு தோல்வி அடைந்தவராகக் கருதப்படுவர். வெல்பவர்கள் கொம்புத் தட்டுடன் ஊரை வலம் வருவர். இக்கொம்பு விளையாட்டு நடைபெற்ற சந்தியே இன்றும் "கொம்புச் சந்தி" என்று அழைக்கப்படுகின்றது. இக்கொம்பு விளையாட்டிற்காக வெட்டப்படும் கம்பானது காடுகளுக்குச் சென்று **"காயாம், கரயாக்கன்"** மரத்திலிருந்தும் வேரிலிருந்தும தெரிந்து வெட்டப்படுவது வழமை. கொம்பு கம்புடன் கட்டப்படும் நார் **"ஆத்திநார்"** என்றும் அழைக்கப்படும். அடுத்த பிரபல்யமான விளையாட்டாக போர்த் தேங்காய் உடைக்கும் விளையாட்டு விளங்குகின்றது. அதுவும் வடசேரி தென்சேரி என்ற பிரிவினரிடையே இடம்பெற்றது. இந்த போர்த் தேங்காயை பெற காலி போன்ற வெளிமாவட்டங்களுக்குச் சென்று வருவதாகவும் கூறப்படுகின்றது. ஒரு சாரார் தேங்காயினைப் போட மறுசாரார் போர்த் தேங்காயினால் உடைப்பது வழக்கு.

கொம்புத்தட்டுபோன்று இன்னும் பல கிராமிய விளையாட்டுக்கள் விளையாடப்பட்டுள்ளது. அவற்றுள் ஆனைப்பொல், கிட்டிப்புள், வார் இழுத்தல், குந்தி அடித்தல், வேற்மடடை, கிளித்தட்டு, தாயக்கட்டை, எட்டுக்கோடு, மாங்கொட்டை என்பவற்றைக் குறிப்பிடலாம். இதை வயது பால் வேறுபாடின்றி ஒன்றாக கூடி மகிழ்து விளையாடுவர். ஆனைப்பொல் என்பது ஒரு தடியினை ஒருவர் தனது காலைத் தூக்கி அதனூடாக வீசுவார் இன்னொருவர் அதனை எடுத்துவந்து மற்றவர்கள் ஒளிந்திருக்கும் இடத்தினைக் கண்டு அப்பொல்லினால் தொடுவார் அல்லது மரத்தில் மற்றவர்கள் ஏறியிருப்பின் அவர்களின் பின்னால் ஏறி அவர்களில் ஒருவரைத் தொடுவார் பின் ஆனைப் பொல்லினால் முதலில் தொடுபவர் மீண்டும் மற்றவர்களை தேடிக் கண்டுபிடித்து தொடுவது என்று இவ்விளையாட்டு தொடரும்.வார் இழுத்தல் என்பது ஆடு புலி ஆட்டம் போன்று இரு குழுக்கள் ஒருவரது குழுவில் இருப்பவர் எதிரணி எல்லைக்குள் சென்று ஒருவரை/பலரை தொட்டுவிட்டு அவரது எல்லைக்குள் வந்து விட வேண்டும். அப்போது தொடுபட்டவர் தற்காலிகமாக ஆட்டம் இழந்து விளையாட்டில் இருந்து ஒதுங்குவார். தொடுபவர் தனது எல்லைக்கு வரமுன்னர் எதிரணியால் பிடிக்கப்படும்போது தொடுபவர் ஆட்டமிழந்தவராக கருதப்பட்டு விளையாட்டில் இருந்து ஒதுங்குவார் இவ்வாறு அவ்விளையாட்டுத் தொடரும். இவ்வாறான விளையாட்டுக்கள் காலப்போக்கில் மறைந்து போயிற்று எனலாம்.அடுத்த கால கட்டத்தில் காரைதீவில் குறிப்பிட்ட காலங்கள் வரை "நன்னலசபை" என்கின்ற அமைப்பே பல விளையாட்டு நிகழ்வினை நடாத்தி வந்தது. அவற்றுள் இன்றுவரை தொடர்கின்ற ஒன்றாக கலாச்சார விளையாட்டு விழாவினைக் குறிப்பிடலாம். இன்நன்னல சபையே காரைதீவில் மரபு ரீதியான கலாச்சார விழாவினை முதலில் நடாத்திய பெருமையைப் பெறுகின்றது. இது மக்களிடையே பெரும் செல்வாக்கு பெற்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்காலத்தில் கண்ணகை அம்மன் ஆலயமருகே கரப்பந்து விளையாடுவதில் அன்றைய இளைஞர்களுக்கு அதிகம் ஆர்வமிருந்தது அவர்களில் பலர் இன்றில்லை. அடுத்த காலகட்டத்தில் இதனது தொடர்ச்சியாக கழகம் என்ற கட்டமைப்புப் பெற்று காரைதீவு வரலாற்றிலே முதலாவது கழகமாக தன்னைப் பெயர் பதித்துக் கொண்டது "ஏப்ரகாம்" விளையாட்டுக் கழகமே ஆகும். இது ஆரம்பிக்கப்பட்டு இறுதிக் காலங்கள் வரை சிறப்பாக செயற்பட்டு வந்தது. இக்கழகத்தின் பிரதான விளையாட்டாக பூப்பந்து விளையாட்டு பரிணமித்தது. அடுத்த கால கட்டத்தில் இவ் ஏப்ரகாம் விளையாட்டுக் கழகத்தின் வழித் தோன்றலாக உருவானதே பெருமைக்குரிய விபுலாநந்த விளையாட்டுக் கழகமாகும்.

காரைதீவின் வரலாற்றில் வரலாறு படைத்த கழகமாக விளங்கியதும் இவ் விபுலாநந்த விளையாட்டுக் கழகமாகும். ஆரம்பத்தில் இவ்விளையாட்டுக் கழகத்தினர் கிளித்தட்டு விளையாட்டினையே முதல் முதலில் விளையாடியாத வரலாறு கூறுகின்றது. அதனைத் தொடர்ந்து உதைபந்து, கிறிகட்(மென்பந்து), கரப்பந்து போன்ற விளையாட்டுக்களை விளையாடி வந்தனர். அன்றைய கால கட்டத்தில் மிகவும் பிரபல்லியமான உதைபந்தாட்ட அணியும், கிறிக்கட் அணியும் இருந்ததை இளமைக்கால ஞாபகங்கள் நினைவு கூறுகின்றன.

அதுமட்டுமல்லாது ஆரம்ப காலத்தில் நன்னல சபையினால் நடாத்தப்பட்டு பின்னர் கைவிடப்பட்ட கலாச்சார விளையாட்டு விழாவினை இவ் விபுலாநந்த விளையாட்டுக் கழகமானது தொடர்ச்சியாக பல ஆண்டுகள் நடாத்தி வந்தது. நாட்டுச் சூழ்நிலை விபுலாநந்த விளையாட்டுக் கழக உறுப்பினர்கள் வேலையின் நிமித்தம் வெளியூர்களுக்குச் சென்றமை மற்றும் பல காரணங்களால் இவ்விளையாட்டுக் கழகத்தினது செயற்பாடுகள் மந்த நிலையை அடைந்து, ஈற்றில் முற்றாக செயற்பாடு அற்ற நிலையை அடைந்தது. அக்காலப்பகுதியில் நெப்போலியன், பாடுமீன், உதயதாரகை போன்ற கழகங்கள் தோன்றி மறைந்ததையும் சுட்டிக் காட்ட வேண்டியிருக்கின்றது.

அடுத்த கட்டமாக விபுலாநந்த விளையாட்டுக் கழகத்திலிருந்த ஊருடன் வேலை புரிந்த சிலரும் அன்றைய இளம் தலைமுறையினர் சிலரும் இணைந்து 1983இல் மென்பந்து கிறிக்கட் அணியினை உருவாக்கி அதற்கு காரைதீவு கிறிக்கட் கழகம் *(KCC)* என்ற நாமத்தை வைத்துக் கொண்டு பல போட்டிகளில் ஈடுபட்டு வந்தனர். பின்னர் அதுவே 1987களில் காரைதீவு விளையாட்டுக் கழகம் என பெயர் பெற்றது. அதே வேளை விபுலாநந்த விளையாட்டுக் கழக வாரிசாகவும் உருவாகி விபுலாநந்த விளையாட்டுக் கழகம் விட்ட பணிகளை தொடர்ந்தது. அதன் தொடராகவே கலாச்சார விளையாட்டு விழாவினை இன்றுவரை நடாத்தி வருகின்றது.

காரைதீவு கிறிக்கட் கழகம் காரைதீவு விளையாட்டுக் கழகமாக தனது பெயரினை மாற்றிக் கொண்டாலும்கூட கிறிக்கட் விளையாட்டிற்கே அதிக முக்கியத்துவம் கொடுத்தமையால் அதிலிருந்து பிரிந்த சில இளைஞர்கள் உதைபந்தாட்டத்திற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்பதற்காக விவேகானந்தா விளையாட்டுக் கழகத்தினை உருவாக்கி உதைபந்து விளையாட்டில் மிகவும் பிரபல்யம் பெற்று விளங்கினர். அச்சமகாலத்தில் ஸ்ரீமுருகன் விளையாட்டுக் கழகம், நந்தவனம் விளையாட்டுக் கழகம், லோட்டஸ் விளையாட்டுக் கழகம், மாளிகா விளையாட்டுக் கழகம், நஷனல் விளையாட்டுக் கழகம், *Three Star* விளையாட்டுக் கழகம் போன்ற கழகங்களும் தங்களுக்குப் பொருத்தமான விளையாட்டுக்களோடு காரைதீவுப் பிரதேசத்தில் பிரபல்யம் பெற்று விளங்கின.இன்று காரைதீவு விளையாட்டுக் கழகம் கலாச்சார விளையாட்டு விழாவினை நடாத்தி வருவது போன்று ஸ்ரீமுருகன் விளையாட்டுக் கழகமும் அண்மைக்காலமாக நடாத்தி வருவது குறிப்பிடத்தக்கது. அதில் மரதன், சதுப்பு நில ஓட்டம், தலையணைச் சமர், முட்டி உடைத்தல், தடை தாண்டி ஓட்டம், சறுக்கு மரம் ஏறுதல், சூப்பியில் பால் குடித்தல், மெதுவான மோட்டார் சைக்கிள் ஓட்டம், சோடியாக தயிர் உண்ணுதல், கிடுகு இழைத்தல், தேங்காய துருவுதல் என்பன இடம்பெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனைப் பின்தொடர்ந்த காலகட்டத்தில் உதைபந்தாட்டத்திற்கு முக்கியத்துவம் கொடுத்த விவேகானந்த விளையாட்டுக் கழகத்தைத் தொடர்ந்து புதிய விபுலாநந்தா விளையாட்டுக் கழகம் உருவாகியது. இன்று அது *Reminder* என்ற பெயரில் மீளக்கட்டியெழுப்பப்பட்டு உதைபந்தாட்டத்தினை முக்கிய விளையாட்டாகக் கொண்டு செயற்பட்டு வருகின்றது. சனசமூக நிலையங்களைப் பொறுத்தவரை நேரு சனசமூக நிலையம் மிகவும் பழைமை வாய்ந்தது. இவ்வாண்டு (2009) அது வைர விழாவினை கொண்டாடுகின்றது. அச்சனசமூக நிலையத்தாரும் கரப்பந்து விளையாட்டினை விளையாடி வந்துள்ளனர். அதேபோல் விஷ்ணு, ஸ்ரீமுருகன், கலைமகள், கண்ணகி, நந்தவனம், விபுலாநந்தா சனசமூக நிலையங்களும் காணப்படுகின்றன. அவர்களும் பொழுதுபோக்காக கரப்பந்து, பூப்பந்து போன்ற விளையாட்டினை அன்றிலிருந்து இன்றுவரை விளையாடி வருகின்றனர். இன்று பூப்பந்துக்கென முதன் முதலில் மைதானம் அமைத்து காரைதீவு விளையாட்டுக் கழகம் பூப்பந்து விளையாட்டினையும் விளையாடி வருகின்றது. அதேபோல் இன்னும்பல கழகங்கள் மைதானம் அமைத்து பூப்பந்து விளையாட்டினை விளையாடி வருகின்றன.

காரைதீவு விளையாட்டுத் துறையைப் பொறுத்தவரை 1994ம் ஆண்டு மறக்க முடியாதது காரணம் அந்த ஆண்டிலேயே முதன் முதலாக காரைதீவு விளையாட்டுக் கழகத்தினரால் கடினபந்து கிறிக்கட் துறை ஆரம்பித்து வைக்கப்பட்டு இன்றுவரை தொடர்ந்து விளையாடப்பட்டுக் கொண்டிருக்கின்றது. அதனைத் தொடர்ந்து விவேகானந்தா விளையாட்டுக் கழகமும் கடின பந்து விளையாட்டினை ஆரம்பித்தது இன்றுவரை விளையாடி வருகின்றது.
மேலும் கமு/ விபுலாநந்த மத்திய கல்லூரியும் தனது பாடசாலை கடினபந்து கிறிக்கட் அணியினை அறிமுகம் செய்து பல பாடசாலைக் கிறிக்கட் போட்டிகளில் விளையாடியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. தற்பொழுது சண்முக மகா வித்தியாலயமும் கடின பந்து கிறிக்கட் துறையை ஆரம்பிக்க முயற்சிகள் செய்து வருகின்றது.
குறிப்பிட்டுச் சொல்லவேண்டிய ஒரு விடயம் அம்பாரை மாவட்டத்திலேயே மூன்று தமிழ் கடினபந்து கிறிக்கட் அணிகள் உள்ளன. அவை மூன்றும் காரைதீவிலேயே உள்ளது என்பதாகும். அவற்றில் இரண்டு கழக அணிகள் அவை மிகவும் பிரபல்யம் வாய்ந்தவையாகும். அத்துடன் இன்னும் அனேக மென்பந்து அணிகள் காரைதீவுப் பிரதேசத்தில் விளையாடி வருவதும் குறிப்பிடத்தக்கது. காரைதீவு விளையாட்டுத் துறையினைப் பொறுத்தவரை மென்பந்துக் கிறிக்கட்டில் காரைதீவு விளையாட்டுக் கழகம் சார்பான காரைதீவுப் பிரதேச அணி 1996இல் மாகாண மட்டம் வரை சென்று 2வது இடத்தினை பெற்றதும் குறிப்பிடத்தக்கது. அதேபோல் 1998இல் காரைதீவு விளையாட்டுக் கழக பூப்பந்து அணியும் மாகாண மட்டம் வரை சென்று பல வெற்றிகளை ஈட்டியிருந்ததும் குறிப்பிடத்தக்க விடயம்.

மேலும் விவேகானந்தா விளையாட்டுக்கழக மென்பந்து கிறிக்கட் அணியும் பல மாவட்ட மட்ட விளையாட்டில் கலந்து வெற்றியீட்டியதும் குறிப்பிடப்பட வேண்டிய விடயம். அதுமட்டுமல்லாது *K.S.C., V.S.C.* கடின பந்து கிறிக்கட் அணிகள் இரண்டும் அம்பாரைப் பிரதேசத்தில் கடினபந்து கிறிக்கட் சுற்றுப் போட்டிகளில் கலந்து கொண்டு பல சம்பியன் கிண்ணங்களை பெற்றதும் காரைதீவு விளையாட்டுத்துறையின் உச்சக் கட்டங்களாகும். அதைவிட இரு அணி சார்பான *(KSC, VCC)* சனசமூக நிலையங்கள் விசேட வகுப்புக்கள் மற்றும் சமயம், சமூகம் தொடர்பான நிகழ்வுகளையும் நடாத்தி வருவரும் குறிப்பிடத்தக்கது. காரைதீவுப் பாடசாலைகள் விளையாட்டுத் துறையினைப் பொறுத்தவரை மாணவர்கள் தேசிய மட்டம் வரை சென்று சாதனை படைத்த வரலாறுகளும் உண்டு. அண்மையில்கூட 2009இல் இ.கி.ச. பெண்கள் பாடசாலை வலைப்பந்து அணி மாகாண மட்டம் வரை சென்றது குறிப்பிடத்தக்கது.

விளையாட்டு அரங்கினைப் பொறுத்தவரை ஆரம்ப காலத்தில் மைதானத்தின் வடபுறமாக சிறிய பழைய விளையாட்டு அரங்கு ஒன்று காணப்பட்டது. 1980களில் அமரர் கனகரெட்ணம் அவர்களின் பெயரைத் தாங்கிய விளையாட்டு மைதானமும், மைதானத்தின் தெற்குப் புறமாக அரங்கும் கட்டப்பபட்டது. இதற்கு முன்னர் மைதானமானது பிரதேச சபைக்கு வேறாகவும், பாடசாலைக்கு வேறாகவும் தனித்தனியாக அமைந்திருந்தது. பின்னர் இரண்டும் ஒன்றாக்கப்பட்டு தற்பொழுது காணப்படுவது போல் பெரிய பரப்பினையுடையதாக அமைக்கப்பட்டது.
சுனாமியின்போது சேதமுற்ற மைதானமானது பின்னர் இரட்சண்ய சேனை என்ற *INGO*இன் உதவியுடன் புனரமைக்கப்பட்டு சிறப்பான ஒரு விளையாட்டு அரங்கத்துடன் இன்றும் பொலிவுடன் காணப்படுகிறது.இவைகள் அனைத்தும் காரைதீவு விளையாட்டுத் துறையின் வரலாற்றினையும் வளர்ச்சியினையும் சுட்டிக் காட்டுகின்ற அம்சங்களாக அமைகின்றன என்றால் அது மிகையாகாது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பிரதேச இஸ்லாமியப் பண்புகளும் பாரம்பரியங்களும்


மௌலவி.அபூபக்கர் கலிலுல் ரஹ்மான்

ஷெய்க் அபூஹனான் ஸலபி

விரிவுரையாளர் : தாருத் தவஹீத் அஸ்ஸலபிய்யா கலாபீடம்


இலங்கை நாடு பல்லின சமூகங்கள் ஒன்றிணைந்து வாழும் ஒரு நாடாகும். சுமார் 20 மில்லியன் மக்கள் வாழும் இந்நாட்டில் 7.5 வீதமான முஸ்லிம்கள் வாழ்ந்து வருகின்றனர். இந்நாட்டின் கிழக்குப் பகுதியில் அம்பாறை மாவட்டத்தில், பொத்துவில் தொகுதியில் அமைந்துள்ளது காரைதீவு பிரதேச சபை. காரைதீவு என்ற பெரும் தமிழ்ப்பிரதேசத்தையும், மாவடிப்பள்ளி, மாளிகைக்காடு ஆகிய இரு முஸ்லிம் கிராமங்களையும் உள்ளடக்கியதுதான் காரைதீவு பிரதேச சபையாகும். சுமார் 1250 குடும்பங்கள் வாழும் மூன்று கிராம உத்தியோகத்தர் பிரிவைக் கொண்ட ஒரு சிறிய முஸ்லிம் கிராமமே மாளிகைக்காடாகும். நெடுங்காலந்தொட்டு இன்றுவரை இஸ்லாமியப் பாரம்பரியங்களோடு மக்கள் இங்கு வாழ்ந்து வருகின்றனர்.

மனிதன் தனது வாழ்வைச் சரியான முறையில் சீரமைத்துக்கொள்ள முக்கியமாக இரண்டு விடயங்கள் அவனுக்குத் தேவைப்படுகின்றன.

1. தனிப்பட்ட முறையிலும், சமூக ரீதியிலும் உலக வாழ்வை நடாத்திச் செல்வதற்கான உலகியல் சாதனங்கள்.

2. தனிவாழ்விலும், சமூக வாழ்விலும் நீதியினையும், அமைதியையும் கட்டிக்காக்க அவன் மேற்கொள்ள வேண்டிய கொள்கைகள் பற்றிய தெளிவு அல்லது அறிவு.

மனித வாழ்வுக்குத் தேவையான உலகியல் சாதனம், கொள்கை பற்றிய அறிவு ஆகிய இவ்விரண்டையும் இறைவன் நிறைவாகவே மனிதனுக்கு அருளியுள்ளான். இவை அனைத்தும் இவன் முன்பரந்து விரிந்து கிடக்கின்றன. அவற்றை அவன் விரும்பியவண்ணம் முழுமையாகப் பயன்படுத்திக்கொள்ளலாம்.

மனிதனது ஆன்மீக, சமூக மற்றும் கலாசாரத் துறைகளில் தேவைப்படும் கொள்கைகளை நிறைவு செய்வதற்காக இறைவன் மனிதனிலிருந்து தனது தூதர்களை அனுப்பினான். இத்தூதர்கள் மூலமாக தனது வழிகாட்டுதலை வேதமாக அருளினான். இவ்விறை வழிகாட்டுதல் முழுமையான ஒரு வாழ்க்கைத் திட்டமாகும். இவ்வாழ்க்கைத் திட்டத்தின் பெயர்தான் இஸ்லாம்.

இஸ்லாம் என்ற அறபு மொழிச் சொல்லுக்கு அடிபணிதல், சரணடைதல், அமைதி போன்ற பல அர்த்தங்கள் உள்ளன. ஒரே இறைவனுக்கு முழுமையாக அடிபணிந்து, அவனுக்கே சரணடைந்து, அவன் வேதத்தினூடாகவும், தனது தூதரூடாகவும் சொன்னவைகளுக்கு வழிபட்டு நடப்பதன் மூலம் உலகிலும், மறுமையிலும் அமைதியடையலாம் என்பதை இது அறிவுறுத்துகிறது.

புராணங்கள், கட்டுக்கதைகள் என்பவற்றிலிருந்து அப்பாற்பட்ட இஸ்லாம் மார்க்கம் எல்லாவித மூடநம்பிக்கைகளை விட்டும், பகுத்தறிவுக்கு ஒவ்வாத நம்பிக்கைகளை விட்டும் தூய்மையானதாகும். மதகுருமாரின் ஆதிக்கமோ, பயனற்ற சடங்கு சம்பிரதாயங்களோ இல்லாது மறுத்துரைக்கப்பட்ட இஸ்லாம் காட்டிய மனித, சமூகப் பண்புகள் ஒவ்வொரு தனிமனிதனிடத்திலும், குடும்பத்திலும், சமூகத்திலும் நடைமுறையில் வரவேண்டும் என்பதையே இறைவன் விரும்புகின்றான்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இஸ்லாத்தின் தனித்துவம் வாய்ந்த ஒரு சிறப்பம்சம் என்னவெனில், வாழ்க்கையை உலகாயதம் சார்ந்தது. ஆன்மிகம் சார்ந்தது என இரு வேறுபட்ட கூறுகளாக அது பிரிப்பதில்லை. இவ்வாறு மனித வாழ்க்கை பிரிக்க முடியாத ஒன்று எனக் கருதுகிறது. உலகப் பொருட்களை விட்டு ஒதுங்கி வாழும் துறவு மனப்பான்மையை சரியானது என இஸ்லாம் ஏற்றுக் கொள்ளவில்லை.

மாறாக கரடு முரடான, இன்னல்கள் நிறைந்த, சோதனைமிக்க வாழ்வில் இறையச்சத்துடனும், மனித நேயத்துடனும் இஸ்லாமியப் பண்புகளை அணிகலனாக அணிந்து வாழ்வதன் மூலம் மறுமை வெற்றியை - முக்தியை - அடையலாம் என்று அது வழிகாட்டுகின்றது. பாவங்கள் நிறைந்த உலகில், பாவங்களுக்கு மத்தியில் பாவம் செய்யாது வாழ்வதே உண்மையான தியாகமாகும்.

(நபியே!) நீர் கேட்பீராக: அல்லாஹ் தன் அடியார்களுக்காக வெளிப்படுத்தியுள்ள (ஆடை) அழகையும், உணவு வகைகளில் தூய்மையானவற்றையும் தடுத்தது யார்? இன்னும் கூறும்: அவை இவ்வுலக வாழ்க்கையில் நம்பிக்கையாளர்களுக்கு (அனுமதிக்கப்பட்டவையே, எனினும் மறுமையில்) அவர்களுக்கு மட்டுமே சொந்தமானவையாகவும் இருக்கும். இவ்வாறு நாம் நம் வசனங்களை அறியக்கூடிய மக்களுக்கு விவரிக்கின்றோம்.

என் இறைவன் ஹராம் எனத் தடுத்திருப்பவையெல்லாம், வெளிப்படையான அல்லது அந்தரங்கமான, மானக்கேடான செயல்கள், பாவங்கள், நியாயமின்றி (ஒருவருக்கொருவர்) கொடுமை செய்வது ஆதாரமில்லாமலிருக்கும் போதே நீங்கள் அல்லாஹ்வுக்கு இணைகற்பித்தல், நீங்கள் அறியாதவற்றை அல்லாஹ்வின் மீது (பொய்யாகக்) கூறுவது (ஆகிய இவையே என்று நபியே!) நீர் கூறுவீராக.

ஒவ்வொரு கூட்டத்தாருக்கும் (வாழ்வுக்கும், வீழ்வுக்கும்) ஒரு காலக்கெடு உண்டு, அவர்களுடைய கெடு வந்துவிட்டால் அவர்கள் ஒருகணப் பொழுதேனும் பிந்தவும் மாட்டார்கள், முந்தவும் மாட்டார்கள்." (அல்-குர்ஆன் 7 : 32 - 34)

ஒரு முஸ்லிமின் பண்பாடு, பாரம்பரியம் என்பது அவன் வாழும் நாடு, பிரதேசம் என்பதைப் பொறுத்து மாறுபடமாட்டாது. எத்தேசத்துக்கும், எப்பகுதிக்கும் பொருத்தமானதாகவே இஸ்லாமியப் பண்பாடுகளும், பாரம்பரியங்களும் அமைந்திருப்பது அதற்கான அடிப்படைக் காரணம் எனலாம். மானக்கேடான அனைத்துக் காரியங்களையும் இஸ்லாம் தடுத்துள்ளதையும், அத்தீயபண்பு எந்த மனிதனிடத்திலும் இருக்கக்கூடாது என அது எச்சரித்துள்ளதையும் மேலுள்ள குர்ஆனுடைய வசனங்கள் தெளிவுபடுத்தியிருப்பதைக் காணலாம்.

இஸ்லாம் தனக்கென தனித்துவமான பண்பாட்டுக் கொள்கையைக் கொண்டிருக்கின்றது. மனிதர்களிடையே பூரணமான ஒழுக்க விழுமியங்களைக் கொண்டு வரவே இஸ்லாம் விரும்புகின்றது. இதனையே இறைத்தூதர் முகம்மது (ஸல்) அவர்கள், மனிதர்களிடையே ஒழுக்கத்தைப் பூரணப்படுத்தவே நான் நபியாக அனுப்பப்பட்டுள்ளேன்." என்று கூறினார்கள். (ஆதாரம் : முவத்தா)

ஒழுக்க விழுமியங்களுக்கு சவாலாக இருக்கும் அத்துனை கருமங்களையும் இஸ்லாம் ஆணி வேரோடு பிடுங்கி எறிந்துள்ளது. மட்டுமல்லாது முஸ்லிம்களின் வணக்கவழிபாடுகளைக்கூட ஒழுக்கத்தைக் கட்டியெழுப்பும் ஒரு செயலாகவே இஸ்லாம் காண்கின்றது.

முஸ்லிம் என்று தன்னைப் பிரகடனப்படுத்தும் ஒருவன் தொழுகை என்ற ஒரு வணக்கத்தைக் கண்டிப்பாக ஒரு நாளில் ஐந்து தடவை நிறைவேற்றியேயாக வேண்டும். இந்த வணக்கத்தைப் பற்றித் திருமறை குர்ஆன் கூறுகின்றபோது இந்தத் தொழுகை மனிதர்களிடையே எத்தகைய மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்பதைக் கோடிட்டுக் காட்டத் தவறவில்லை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இஸ்லாத்தின் தனித்துவம் வாய்ந்த ஒரு சிறப்பம்சம் என்னவெனில், வாழ்க்கையை உலகாயதம் சார்ந்தது. ஆன்மிகம் சார்ந்தது என இரு வேறுபட்ட கூறுகளாக அது பிரிப்பதில்லை. இவ்வாறு மனித வாழ்க்கை பிரிக்க முடியாத ஒன்று எனக் கருதுகிறது. உலகப் பொருட்களை விட்டு ஒதுங்கி வாழும் துறவு மனப்பான்மையை சரியானது என இஸ்லாம் ஏற்றுக் கொள்ளவில்லை.

மாறாக கரடு முரடான, இன்னல்கள் நிறைந்த, சோதனைமிக்க வாழ்வில் இறையச்சத்துடனும், மனித நேயத்துடனும் இஸ்லாமியப் பண்புகளை அணிகலனாக அணிந்து வாழ்வதன் மூலம் மறுமை வெற்றியை - முக்தியை - அடையலாம் என்று அது வழிகாட்டுகின்றது. பாவங்கள் நிறைந்த உலகில், பாவங்களுக்கு மத்தியில் பாவம் செய்யாது வாழ்வதே உண்மையான தியாகமாகும்.

(நபியே!) நீர் கேட்பீராக: அல்லாஹ் தன் அடியார்களுக்காக வெளிப்படுத்தியுள்ள (ஆடை) அழகையும், உணவு வகைகளில் தூய்மையானவற்றையும் தடுத்தது யார்? இன்னும் கூறும்: அவை இவ்வுலக வாழ்க்கையில் நம்பிக்கையாளர்களுக்கு (அனுமதிக்கப்பட்டவையே, எனினும் மறுமையில்) அவர்களுக்கு மட்டுமே சொந்தமானவையாகவும் இருக்கும். இவ்வாறு நாம் நம் வசனங்களை அறியக்கூடிய மக்களுக்கு விவரிக்கின்றோம்.

என் இறைவன் ஹராம் எனத் தடுத்திருப்பவையெல்லாம், வெளிப்படையான அல்லது அந்தரங்கமான, மானக்கேடான செயல்கள், பாவங்கள், நியாயமின்றி (ஒருவருக்கொருவர்) கொடுமை செய்வது ஆதாரமில்லாமலிருக்கும் போதே நீங்கள் அல்லாஹ்வுக்கு இணைகற்பித்தல், நீங்கள் அறியாதவற்றை அல்லாஹ்வின் மீது (பொய்யாகக்) கூறுவது (ஆகிய இவையே என்று நபியே!) நீர் கூறுவீராக.

ஒவ்வொரு கூட்டத்தாருக்கும் (வாழ்வுக்கும், வீழ்வுக்கும்) ஒரு காலக்கெடு உண்டு, அவர்களுடைய கெடு வந்துவிட்டால் அவர்கள் ஒருகணப் பொழுதேனும் பிந்தவும் மாட்டார்கள், முந்தவும் மாட்டார்கள்." (அல்-குர்ஆன் 7 : 32 - 34)

ஒரு முஸ்லிமின் பண்பாடு, பாரம்பரியம் என்பது அவன் வாழும் நாடு, பிரதேசம் என்பதைப் பொறுத்து மாறுபடமாட்டாது. எத்தேசத்துக்கும், எப்பகுதிக்கும் பொருத்தமானதாகவே இஸ்லாமியப் பண்பாடுகளும், பாரம்பரியங்களும் அமைந்திருப்பது அதற்கான அடிப்படைக் காரணம் எனலாம். மானக்கேடான அனைத்துக் காரியங்களையும் இஸ்லாம் தடுத்துள்ளதையும், அத்தீயபண்பு எந்த மனிதனிடத்திலும் இருக்கக்கூடாது என அது எச்சரித்துள்ளதையும் மேலுள்ள குர்ஆனுடைய வசனங்கள் தெளிவுபடுத்தியிருப்பதைக் காணலாம்.

இஸ்லாம் தனக்கென தனித்துவமான பண்பாட்டுக் கொள்கையைக் கொண்டிருக்கின்றது. மனிதர்களிடையே பூரணமான ஒழுக்க விழுமியங்களைக் கொண்டு வரவே இஸ்லாம் விரும்புகின்றது. இதனையே இறைத்தூதர் முகம்மது (ஸல்) அவர்கள், மனிதர்களிடையே ஒழுக்கத்தைப் பூரணப்படுத்தவே நான் நபியாக அனுப்பப்பட்டுள்ளேன்." என்று கூறினார்கள். (ஆதாரம் : முவத்தா)

ஒழுக்க விழுமியங்களுக்கு சவாலாக இருக்கும் அத்துனை கருமங்களையும் இஸ்லாம் ஆணி வேரோடு பிடுங்கி எறிந்துள்ளது. மட்டுமல்லாது முஸ்லிம்களின் வணக்கவழிபாடுகளைக்கூட ஒழுக்கத்தைக் கட்டியெழுப்பும் ஒரு செயலாகவே இஸ்லாம் காண்கின்றது.

முஸ்லிம் என்று தன்னைப் பிரகடனப்படுத்தும் ஒருவன் தொழுகை என்ற ஒரு வணக்கத்தைக் கண்டிப்பாக ஒரு நாளில் ஐந்து தடவை நிறைவேற்றியேயாக வேண்டும். இந்த வணக்கத்தைப் பற்றித் திருமறை குர்ஆன் கூறுகின்றபோது இந்தத் தொழுகை மனிதர்களிடையே எத்தகைய மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்பதைக் கோடிட்டுக் காட்டத் தவறவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதற்காகப் பேசினார்? பின்னணி என்ன? எந்தக் கருத்தில் பேசப்பட்டது? என்பன பற்றி சமூகத் தலைவர்கள் இவ்வாறான சந்தர்ப்பங்களில் நிதானத்துடன் ஆராய வேண்டும்.

இவ்வாறு நபருக்கு நபர், வீட்டுக்கு வீடு, தெருவுக்குத் தெரு, கிராமத்துக்குக் கிராமம், நாட்டுக்கு நாடு, தேசத்துக்குத் தேசம் என பிளவுகளையும், பிரிவினைகளையும் ஏற்படுத்துவதில் மனித பேச்சுக்கள் வெளிப்படுத்தப்படலாகாது. அவ்வாறான பேச்சுக்கள் வெளிப்படும் நாவின் சொந்தக்காரன் ஷமுஸ்லிம்' எனத் தன்னைச் சொன்னாலும் இஸ்லாம் அவனை முஸ்லிமாக ஏற்காது என்பதனையே மேலே நாம் எழுதிய நபிமொழி எடுத்துக்கூறுகின்றது.

ஒருவர் தன்னால் கொடுக்கப்படும் வாக்குறுதியை, தனக்கு நிறைவேற்ற முடியும் என்றால் மட்டும்தான் ஒருவருக்கு வாக்குறுதி வழங்க வேண்டும். வழங்கப்பட்ட வாக்குறுதிகளை எக்காரணங்கொண்டும் முறித்துவிட முயலக்கூடாது. ஒரே நேரத்தில் பலருக்கு வாக்குறுதி வழங்குவது சிலரது வாக்குறுதிகளை நிறைவேற்றத் தடையாக அமையுமெனில் அவற்றையெல்லாம் தவிர்த்துக் கொள்ள வேண்டும். இது முக்கியமானதொரு இஸ்லாமியப் பண்பாகும்.

பிற மனிதர்களின் மீது தனக்குள்ள கடமைப்பாடுகள் பற்றி சிந்தித்து நடக்க வேண்டும். நோயுற்றவனை நோய் விசாரித்தல், தேவையுள்ளவனுக்கு உதவுதல், பசித்தவனுக்கு உணவளித்தல், கவலையுள்ளவனுக்கு ஆறுதலளித்தல் போன்ற இஸ்லாமியப் பண்புகள் ஒருவனில் கண்டிப்பாக இருக்க வேண்டும். அதுவே சுவனத்தைப் பெற்றுத்தரும் செயலாகும். தாகித்தலைந்த நாய்க்கு தண்ணீர் புகட்டிய ஒருவளுக்கு சுவனம் கிடைத்ததாகவும், உண்ணவோ பருகவோ விடாமல் ஒரு பூனையைக் கட்டிப்போட்டு நோவினை செய்தவள் நரகம் புகுந்தால் எனவும் நபி (ஸல்) அவர்கள் சொன்ன செய்தி இங்கு ஈர்ந்து கவனிக்கப்பட வேண்டியதாகும்.

மேலும், "நற்குணம் எவனிடம் குடிகொண்டுள்ளதோ அவனுக்கு உயர் அந்தஸ்துள்ள சுவனத்தில் மாளிகை ஒன்று கட்டப்பட நான் உத்தரவாதமளிக்கின்றேன்." என நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

அகம்பாவத்துடன் நடந்து கொள்வதைத் தவிர்த்து தாழ்மையுடன் நடப்பது, எந்நிலையிலும் பொய் பேசாமை, பிறர் குற்றங்களை மன்னித்தல், மாற்றானின் மானத்தோடு விளையாடாதிருத்தல், மாற்றுக்கருத்துக்களை மதித்து நடத்தல், பார்வையைத் தாழ்த்திக்கொள்ளுதல் போன்ற இஸ்லாம் வலியுறுத்தும் ஒவ்வொரு நற்பண்பும் தனித்தனித் தலைப்பாக அலசப்படவேண்டிய விடயங்களாகும்.

இன்றைய உலகம் பல பிரச்சினைகளை எதிர்கொள்கின்றபோதிலும் மனித சமூகத்துக்கு இன்று மிகப் பாரிய அச்சுறுத்தலாக இருப்பது பண்பாட்டு வீழ்ச்சிதான் என்றால் அது மிகையாகாது. இன்றைய உலகு எதிர்கொண்டுள்ள பொருளாதாரப் பிரச்சினையை நோக்கினால்கூட, இலஞ்சம், ஏமாற்று, பெரும் பெரும் நிதி நிறுவனங்களில் இடம்பெற்றுவந்த களவாடல் போன்ற மோசமான பண்பாடுகளையே அதற்கான பிரதான காரணிகளாகக் காண முடிகின்றது.

எனவே, நல்ல அழகிய இஸ்லாமியப் பண்பாடுகளையும், பாரம்பரியங்களையும் உடையவர்களாக எம்மை நாம் வளர்த்துக்கொள்வதோடு, தீய குணங்களை விட்டும் தூரமாகி எமது வாழ்வை அமைத்துக் கொள்வதனூடாக ஈருலகிலும் பயனடைய முயற்சிப்போமாக!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தேசம் பூக்கும் நட்சத்திரங்கள்

எம்.ரி.முகம்மட் நயீம்
அபிவிருத்தி இணைப்பாளர்

தேசம் -
கட்டிய பூமியில்
வானத்து
நட்சத்திரங்களாக
நாம் வாழ்வோம்!

இனங்கள்
பேசும் மொழியில்
சகோதர பூக்கள்
பூக்கின்றன
ஒரு
செடிபோல்!

எல்லாம் சொல்லும்
வேதங்கள்!
எழுச்சி சொல்லி
மகிழ்ச்சி கொள்ளும்!

நாடு,
நாம் பிறந்த மண்
எல்லாம் நமக்காக
நன்றி சொல்லும்!
நம் சகோதரத்தில்

ஒன்று கூடி
ஒற்றுமை பாடி
உள்ளம் சிறக்க
உவகை கொள்வோம்!

இனியும்!
வேண்டாம் வேற்றுமை
வேலிக் கம்பாய்
சேர்ந்து நிற்போம்!

நல்ல மணம் வீசும்
நல்ல குணம் தரும்
ஒரு கோத்திரமாய் இல்லை
சூரிய குடும்பமாய்
வாழ்வோம்!

பாடும்
தேசியகீதம்
சகோதரம் சொல்லும்
தினமும் கேட்கும்
பாங்கொலி
பிரித்
தேவாரம்
எல்லாம்
ஒற்றுமை சொல்லும்
நமது தேசத்தில்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# காரைதீவுப் பிரதேசத்தில் மீன்பிடித்தொழில்



பொ.இராமநாதன் சி.நந்தேஸ்வரன்

காரைதீவுப் பிரதேசம் நீர் வளம் நிரம்பிய ஒரு பிரதேசமாகும். கிழக்குப் புறத்தில் வங்காள விரிகுடாக் கடலும், மேற்குப் புறமாக அமைந்துள்ள வளைந்தவட்டை வயல் வெளியினூடாகப் பாயும் முடக்கன் ஆறு கிளையாகப் பிரிந்து வெட்டாற்றின் ஊடாகக் கடலுடன் சங்கமித்தலாலும் பிரதேசத்தின் மத்தியிலே களப்பு அமைந்துள்ளதாலும் இங்கு மீன் வளம் பல்கிக் காணப்படுகின்றது. கடலிலே உவர் நீருக்குரிய மீன்களையும் களப்பிலும், ஆற்றிலும் நன்னீர் மீன்களையும் பிடிக்கக் கூடியதாய் உள்ளது.கடல் மீன்பிடி பல வகையாக காணப்படுகிறது.

01. ஆழ் கடல் மீன்பிடி
02. கரைவலை மீன்பிடி
03. கும்பிளாவலை :- இவை இரண்டும் கட்டுவலை என்று அழைக்கப்படும்.
04. கீரி வலை :- இதை மாயவலை என்றும் சொல்வது வழக்கம்.
05. தூண்டில் போடுதல்
06. வலை வீசி மீன் பிடித்தல்

ஆழ்கடல் மீன்பிடித் தொழிலை பொறுத்தமட்டில் மாளிகைக்காட்டைச் சேர்ந்த முஸ்லிம் மக்கள் கூடுதலாகச் செய்து வருகின்றனர்.இதற்கு *அலியா வோட்* என்று அழைக்கப்படும். உள்ளிணை இயந்திரம் பொருத்திய பெரியபடகுகளைப் பயன்படுத்துவர்.இவர்கள் பிற்பகல் வேளையில் கடலுக்குச் சென்று மறுநாட் காலை கரை சேர்வர்.இப் படகுகள் கரைக்கு விடமுடியாத காரணத்தால் கரையை அண்மித்த பகுதியில் கடலில் போய்விட்டுச் சிறு தோணிகள் மூலம் பிடித்த மீன்களை கரைக்கு கொண்டு வருவர்.இதன் மூலம் வளையா,கிளவள்ளு,சூரை, தளபத்து,கொப்புறு போன்ற பெரும் மீன்கள் கூடுதலாகப் பிடிக்கப்படுகின்றன.

அடுத்த படியாக அதிகம் மீன்களைப் பிடிக்கக் கூடிய வழி கரைவலை மீன்பிடியாகும்.இத்துறை ஏறக்குறைய இற்றைக்கு நூறு ஆண்டுகளுக்கு முன்னர் கூடி இப் பிரதேசத்தில் செயற்படுத்தப்பட்டுவருவதாக அறியக்கிடக்கின்றது.அதிலும் அம்பாறை மாவட்டத்தில் அதி கூடிய கரைவலைத் தோணி வலைகள் உள்ள இடம் காரைதீவாகும்.இங்கு ஏறத்தாழ நாற்பது மீன்பிடி வள்ளங்கள் தற்பொழுது தொழிலில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றன.அம்பாரை மாவட்டத்தைப் பொறுத்தமட்டில் இது 30% மாகக் காணப்படுகின்றது.இத் தொழில்களில் ஆரம்ப காலத்தில் இரண்டு பதியப்பட்ட மீன்பிடிச் சங்கங்களே இயங்கி வந்தன.ஒன்று திருத்தங்கவேலாயுதபுரவி மீன்பிடி ஐக்கிய சங்கம், மற்றையது வடிவேலன் மீன்பிடி ஐக்கிய சங்கம் என்பதாகும்.ஏறத்தாழ 1965 இன் பிற்பட்ட காலத்தில் தனியார் பலர் சொந்த முதலில் தோணி வலைகளை உண்டாக்கிப் பலர் தொழில் செய்யக்கூடிய வாய்ப்பினை உருவாக்கிவிட்டனர்.

வலைகள் இறக்குமதியற்ற பண்டைய காலத்தில் கயிற்று வலைகளையும் நூல்களை முறுக்கித் தாங்களாகவே முடிக்கும் வலைகளையும் கொண்டுதான் தொழில் செய்து வந்தனர்.காட்டிலிருந்து பாரிய காட்டு மாமரம் அல்லது இளல் வாகை மரம் என்பவற்றைக் குடைந்து தோணி உண்டாக்கி நன்கு மிதக்கும் சக்தியுடைய மல்வேம்பு மரத்தில் கொல்லா செய்துதான் தோணிகளை உண்டாக்கினர்.இதனால் அக் காலத்தில் மிகவும் சிரமப்பட்டே இத் தொழிலைச் செய்ய வேண்டியதாக இருந்தது. காலக்கிரமத்தில் துண்டுக் கண்ணாடி ,இழைப் படகுகள் கண்டுபிடிக்கப்பட்டதாலும் அயல் நாடுகளிலிருந்து தங்கூசி வலைகள்,நைலோன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலைகள், நைலோன் கயிறுகள் என்பன இறக்குமதி செய்யப்பட்டு வருவதாலும் இன்றைய காலம் இத் தொழில் மிகவும் இலகுவாகச் செய்யக்கூடியதாகவும் அதிகம் மீன் பிடிக்கக் கூடியதாகவும் உள்ளது.கார்த்திகை, மார்கழி,தை ஆகிய மூன்று மாதங்களும் இப்பகுதிக் கடலில் வாடைக்காற்று பலமாக வீசுங்காலமாதலால் கடல் கொந்தழிப்பாக காணப்படும்.இக் காலங்களில் கடலில் தோணிகள் செலுத்துவது கஷ்டமாதலால் பெரும்பாலும் தொழில் செய்வது குறைவாகும்.

வாடைக் காற்று மாறிக்கொண்டு பெயரத் தொடங்கியதும் அதாவது மாசி,பங்குனி மாதங்களில் சீலா,பாரக்குட்டி, சதைக்காரல் போன்ற மீனினங்கள் கூடுதலாக பிடிபடும். சித்திரை மாதம் சித்திரைக் கீரி என்றழைக்கப்படும் மாப்பிழைச்சூடை பிடிபடும்.இக் காலம் கீரி மீன் சினை பீச்சும் காலம் என்பர்.இச் சினைகள் குஞ்சாகிக் கீரி மங்கு எனப்படும் சிறு கீரிமீன் பிடிபடத் தொடங்கும்.இத்தோடு நெத்தலி மீனும் இம் மாதங்களில் அதிகளவாக வந்து பிடிபடுவதுண்டு. கச்சான் காற்றுக் காலமாகிய ஆடி மாதம் சூரை பாய்ந்து கடித்து வரும் அல்லது இலைத்து வரும். இலைத்து வரும் பொழுது அந்த மீன் கூட்டம் கறுப்பாகத் திரண்டு காணப்படும். இன்னும் அதிகப்படியான மீன்கள் திரண்டு கூடினால் சிவப்புநிறக் கட்டியாகத் தென்படும் இதை மீன் சிகப்பு அல்லது மீன் பழுப்பு என்றும் சொல்லுவர்.

ஆவணி,புரட்டாதி மாதங்களில் ஊசிக் கணவா என்று சொல்லப்படும் கணவா சிவப்பாக வந்து கூடுதலாகப் படுவதும் உண்டு.இதனிடையே இக் காலத்தில் கருங்கண்ணிப் பாரை ,மாவுருவன் பாரை,வட்டியன் பாரை போன்ற பாரை வகைகளும் கடித்து வரும் அல்லது சிவப்பாக வந்து பிடிபடுவதுண்டு. புரட்டாதி,ஐப்பசி மாதங்களில் கீரி மீன்கள் நன்கு பெருத்து சிவப்படித்து வரும் இவ்வாறு வரும் மீன் சிவப்புகள் வலைகளில் அகப்பட்டால் பெரும்பாடுகள் படும்.

மீனவர்கள் வலையில் முடிந்துள்ள ஒரு கயிற்றை கரையிலே கொடுத்துவிட்டு தொடர்ந்து வலையை விட்டுச் சென்று குறிப்பிட்ட தூரத்தில் நங்கூரமிட்டு நிற்பர்.மீன் கூட்டத்தைக் கண்டதும் நங்கூரத்தை இழுத்து தோணியிலே கட்டிவிட்டு மீனை விரசி வளைவர்.இவர்கள் மீன் கூட்டங்கள் கொசித்து அல்லது கடித்து வருவதைக் கண்டு அல்லது இழுத்து பெரும் சிவப்படித்து வருவதைக் கண்டதும் வலையை வளைப்பர். மீனை வளைத்ததும் ஒரு சிலரை இரண்டு வலைக் கால்களிலும் போட்டு அடிப்பிப்பர்.இதனால் மீன் வெளியேறிவிடாது மடியிலே படுவதற்கு வாய்ப்பாகின்றது.

இரண்டு வலைக்காலையும் ஏறக்குறைய நாற்பது பேர் வரை கூடி இழுப்பர்.மடி கரை சேர்ந்ததும் சிலவேளை கணக்கு இழுக்க முடியாத அளவிற்கு அதிகப்படியான மீன்களும் பிடிபடுவதுண்டு.இப்படியான நிலையில் உடனடியாக மிதப்பு மந்தைக் கிளப்பி உட்சென்று கட்டைகள் மூலம் கரையிலே அள்ளிக் குவிப்பர்.மடி இழுக்கக் கூடிய அளவுக்கு வந்ததும் மடி தாங்கி எனப்படும் கோசியைப் போட்டு கரையில் இழுத்து வைப்பர்.

இவ்வாறு பிடிக்கப்பட்ட மீனை முன்னைய காலங்களில் சிறு சிறு கும்பல்களாகக் கொட்டி ஏலத்தில் விடுவர்.இக்காலம் கூடைகளில் அளர்ந்து ஏலம் விட்டு விற்கின்றனர்.1965ம் வருடம் ஒரு கூடைக் கீரிமீன் ஐம்பது ரூபாய் விற்கப்பட்டதையும் இன்றைய நாட்களில் ஒரு கூடைக் கீரிமீன் முப்பதாயிரம் ரூபாய் விற்பதையும் காணமுடிகின்றது. முன்னைய காலங்களில் ஏறக்குறைய 1980ம் வருடத்திற்கு முற்பட்ட காலம் இங்கு பிடிக்கப்படும் மீன்களை சந்தைப் படுத்துவது மிகவும் கஷ்டமாகக் காணப்பட்டது. ஐஸ் வசதியற்ற அக் காலத்தில் சில்லறை வியாபாரிகளுக்கு குறிப்பிட்ட ஓரளவு மீனை விற்பர் அவர்கள் அதை வாங்கிக்கொண்டு கூடைகாவுகளில் சுமந்து கூறி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விற்றுத்திரிவர்.மிகுதியான மீன்களை மரத்தால் செய்யப்பட்ட பீப்பாக்களில் உப்பு வைத்து கருவாடாக்கி கொழும்பு மற்றும் மலையகப் பகுதிகளுக்கு ஏற்றுமதி செய்வர்.இன்றைய காலத்தில் எவ்வளவு மீன் பிடிபட்டாலும் ஐஸ் போடப்பட்டு ஏற்றப்படுகிறது.

காலையிலே கடற்கரைக்குச் செல்லும் பொது மக்கள் மீனவர்களால் வளைந்து இழுக்கப்படும் வலைகளைப் பிடித்து இழுப்பர்.இதற்காக இவர்களுக்கு பிடிபடும் மீனின் ஒரு பகுதியை எடுத்து பகிர்ந்து கொடுப்பர்.இவ்வாறு வழங்கப்படும் மீனை அடம்பன் கொடியில் கோர்துக் கொண்டு அல்லது சிறு பனங்கன்றுகளின் ஓலைகளை பிய்த்தெடுத்து அதனை "கொட்டுகம்"போன்று கட்டி அதற்குள்ளே மீனை இட்டுக்கொண்டு செல்வர்.இக்காலம் கடற்கரைப் பிரதேசத்தில் அடம்பன் கொடி அருகிவிட்டதாலும் பலவகையான பைகள் கிடைக்கப் பெறுவதாலும் மீனைக் கொண்டு செல்பவர்களும் இலகுவாக கொண்டுசெல்லக் கூடியதாக உள்ளது.

அடுத்தபடியாக அதிகமாகவும் இலகுவாகவும் மீன் பிடிக்கக்கூடிய முறை இன்று நடைமுறையிலுண்டு.அதாவது வெளியினை இயந்திரப் படகுகள் மூலம் அல்லது இயந்திர தோணிகள் மூலம் ஆழ்கடலுக்குச் சென்று வலை கட்டுவது இதை மாயவலை என்றும் அழைப்பதுண்டு. இதன் மூலம் தூண்டில் போட்டு மீன் பிடிப்பதும் வழக்கமாக உள்ளது.இதனால் பாரை,அறுக்குளா,உலமியா,சொண்டன் மற்றும் பலவகை கல்மீன்களும் பிடிக்கப்படுகின்றன.

அடுத்து கும்பிளாவலை ,கீரிவலை என்றழைக்கப்படும் வலைகளை சிறு தோணிகள் மூலம் ஒரு குறிப்பிட்ட தூரத்திற்குச் சென்று இரவு வேளைகளில் கட்டுவர். அதிகாலையில் இவ் வலைகளை எடுத்துக்கொண்டு கரை சேர்வர்.இதன் மூலம் கீரி,கும்பிளா,சீலா போன்ற மீன்கள் மிதமாகப் பிடிக்கப்படுவதை காணக்கூடியதாக உள்ளது.

இது தவிர சிறு தோணிகளில் இருவர் மட்டும் சென்று மீன் கூட்டங்களைக் கண்டதும் வீச்சுவலைகளை வீசுவர்.இதன் மூலம் இலாகன், சாளை என்னும் மீனினங்கள் பிடிக்கப்படுகின்றன.

அடுத்து கரையிலிருந்து தூண்டில் இரையைக் குத்தி எறிகயிறு எறிவர்.இது தங்கூசியால் ஆனது.இதன் மூலம் பாரை,கீரி,கிழக்கன் போன்ற மீன் வகைகள் பிடிக்கப்படுகின்றன.

இப்படி பலவகையான மீன்பிடிகள் இப் பிரதேசத்தில் காணப்படுவதால் இங்கு வாழும் மக்கள் உடன் பிடித்த மீன் உண்டு வாழக் கூடியதாய் உள்ளது மட்டுமல்லாமல் மலிவாகவும் மனம் விரும்பிய மீனை பெறக்கூடியதாயும் உள்ளது.

இங்குள்ள மீன்வளத்தில் இரண்டாவதாக சொல்லக் கூடியது களப்பு மீன்பிடி இதில் வீச்சுவலைகள் மூலமும் அத்தாங்கு கொண்டு வடிப்பதன் ஊடாகவும் கட்டு வலை தூண்டில் போடுதல் மூலமும் மீன் பிடிக்கப்படுகின்றது.இதன் மூலம் கயமீன், செத்தல், இறால், விரால் போன்ற நன்னீர் மீன்கள் அதிகமாக பிடிக்கப்படுகின்றன. இறால் விளையும் காலமாகிய பனி நிரம்பிய மாசி, பங்குனி மாதங்களில் இங்கு மிகவும் அதிகமான இறால் பிடிக்கப்படுவதை காணக்கூடியதாய் உள்ளது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்றாவதாக நாம் குறிப்பிடுவது ஆற்று மீன்பிடியாகும்.புடக்கன் ஆற்றில் வெள்ள காலமாகிய கார்த்திகை,மார்கழி மாதங்களில் மிகவும் அதிகப்படியான நன்னீர் மீன்பிடிக்கக் காணலாம்.வீச்சுவலை,கட்டுவலை,அத்தாங்கு கொண்டு வடித்தல் கொண்டடி இதனோடு கரைவலைத் தோணிகள் 22 காரைதீவில் தொழிலில் ஈடுபடுத்தப்படுவதாலும் பாரிய அளவான மீன்கள் இதன் மூலம் பிடிக்கப்படுகின்றது. எது எவ்வாறாயினும் எதிர்காலத்தில் காரைதீவுப் பிரதேசத்தில் மீன்பிடித் தொழிலை மேலும் விருத்திசெய்யக்கூடிய பல வழிமுறைகள் காணப்படுகின்றது. எமது ஊரை ஊடறுத்துச் செல்கின்ற கரச்சை எனப்படும் நீரோடையை அண்டிக் காணப்படும் வளவுகளில் சிறிய 20'x20' அளவான மடுக்களை அகன்று (6' வரையில் தாழம் உள்ளதாக) இதில் நீரை நிரப்பி தற்பொழுது நன்னீர் மீன் வளப்பிற்காக தருவிக்கப்பட்டுள்ள றோகோ என அழைக்கப்படும் மீன் வகை மற்றும் செப்பலி(திலாப்பியா) போன்ற மீன்களை எமது வீட்டுக்கழிவான தேங்காய்ப்பூ மற்றும் தவிடு போன்றவற்றை இதற்கு உணவாக பயன்படுத்தி சிறியவகையில் மேற்கொண்டு வருமானமீட்டமுடியும்.

இதுமட்டுமன்றி களப்பு பிரதேசத்தில் நீரின் நடுவே கம்பி வலைகள் மூலம் மீன்கள் வெளியேறாமல் எல்லைப்படுத்தி வரையறை செய்து இதற்குள்ளே மீன்வளப்பில் ஈடுபடுவதன் மூலமாக பாரிய பொருளாதாரத்தை ஈட்டக்கூடிய வாய்ப்புக்களும் உண்டு. இவ்வாறு வரையறுத்த நீர்ப்பரப்பில் இறால் வளப்பிலும் ஈடுபடமுடியும்.

இவ்வாறான வளங்கள் மட்டுமன்றி கடற்கரை ஓரமாக தென்னை மரங்கள் செறிந்திருப்பதாலும் எமது பிரதேசம் நீண்ட கடல் ஓரத்தை கொண்டிருப்பதாலும் மேலும் நவீன வகையான மீன்பிடி வள்ளங்களைப் பெற்று நவீன மீன்பிடி முறைகள் பலவற்றையும் பயன்படுத்தி மீன்பிடித்துறை மூலம் பாரிய பொருளாதாரத்தை ஈட்டவும் முடியும். இதனை கருத்திற் கொண்டு முதலீட்டாளர்கள் முன்வரவேண்டும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கார்காத்த வேளாளர் நாமம் வாழ்க!

திருமதி.சத்தியவதி சாந்தலிங்கம்
முகாமைத்துவ உதவியாளர்

மட்டுமா நகரின் தெற்கே இருபத்தேழு மைல் தொலைவில்
கட்டழகுப் பெட்டகமாம் கார்காத்த வேளாளர் தீவதனில்
வெட்டவெளி மேற்கே சிற்றாறிருமருங்கும் பச்சைப்பசேலென வயல் வெளியும்
வெட்டுவாய்க்கால் தெற்கே குளிர் நீரோட மீன்கள் துள்ளும்.

கொட்டும் வெயில் பங்குனியிலிருந்து வைகாசித் திங்கள் வரை தொடரும்,
சுட்டெரிக்கும் சூரியக்கதிர்கள் கிழக்கே வங்கக்கடலில் தங்கத்தட்டுகளாய்த் தெறிக்க,
மொட்டவிழ்ந்த முல்லை நிற அலைகள்விண்தொடுமாற்போல் வீறிட்டுப் பொங்கி
ஆர்ப்பரிக்கும்,வடக்கே மாளிகைக்காடு பள்ளிவாசல்களில் வாங்கோசை ஆங்கங்கே ஒலிக்கும்.

இயற்கை எழில் கொஞ்சும் காரேறு சோலை எல்லைகளாய் இவை விளங்க
கற்புக்கரசி கண்ணகைக்கு முற்பக்கல் பெருங்கோயில் உண்டு
அதற்கெதிரில் அஞ்சல் அலுவலகம் அமைந்து அருஞ்சேவையாற்ற
அதனருகில் மக்கள் நலனோம்பி நாயகமாய் பிரதேச செயலகமும் நிமிர்ந்து நிற்க;

எதிர்பக்கல் மக்கள் வங்கி, சித்த ஆயுர்வேத வைத்தியசாலை சிறந்த சேவையாற்ற,
அதற்கப்பால் அதிரடிப்படை முகாம் அமைந்திருக்க முச்சந்தியில் அரசடிப்பிள்ளையார்
அருள்பாலிக்க வாசகர் விரும்பும் வாசிகசாலை, மறுபக்கல் சிறுதூரம் நோயகற்றும்
வைத்தியசாலை அமைய விஷ்ணு, முருகன், சிவன், பாலையடி பாலவிக்னேஸ்வரர்,
சுடலையில் காளியம்மன்,

வடகோடியில் சித்தானைக்குட்டி, வீரபத்திரர் ஆலயங்களும் அருள்கொடுக்க,
நடுவினிலே நந்நவனப் பிள்ளையார், கலைக்கோட்டத்தில் காரையடிப் பிள்ளையார்,
படமெடுக்கும் பாம்பணையும், நாராயணர் சித்தானைக்குட்டி புரத்தில் பக்தர்களுக்கு
அருள் வழங்க; நெடுதோங்கி நினைவு மணிமண்டபமும் வித்தகர் விபுலானந்தரவதரித்த
இல்லத்தருகேயிருக்க,

அறநெறிகள் ஊட்டும் ஞாயிறு வார அறநெறிப்பாடசாலைகளோடு பாலவிகாஸ்
வகுப்புகளும், சிறுவர்கட்கு சாயி, விபுலானந்தா பாலர்பாடசாலைகளும் சிறந்த
ஆரம்பக்கல்வியறிவையூட்ட அரச கல்விக் கூடங்கள் பத்தில் ஆசிரியப் பெருந்தகைகள்
ஆர்வமாய் அறிவூட்டுவதால்; பொறியியலாளர், வைத்தியர், பேரறிஞர்கள் என பலபேர்
தெரிவாகி, உருவாகி நிறைய.

குடிவழியில் சேனாதிராயர் குடி, அத்தியாகுடி, வச்சினாகுடியுடனே, சீர்பாதகுடி,
கவுத்தன்குடி, செட்டிகுடி, சிங்களக்குடி, முற்குகர் எனப் பல குடிகள் வாழ,
வடசேரி, தென்சேரி என இரு பிரிவாகப் பிரிந்து கொம்பு விளையாட்டு
விளையாடிய கொம்புச்சந்தி மத்தியவீதியில் அமைந்திருப்பதை அறிவோம்.

விளையாட்டு வீரர்கட்கு கனகரெத்தினம் விளையாட்டரங்கு களம் அமைக்க,
விவேகானந்தா, காரைதீவு இன்னும் பல விளையாட்டுக் கழகங்களும் இங்கு உண்டு.
புகைப்படக் கலைஞர், கவிஞர்களோடு கோலாட்டம், கும்மி, காவடி, கூத்துக்களும்
பரதக்கலை, கரகாட்டக் கலைஞர்களும் மேடையேறி பரிசு பெற்று வாழ்ந்ததும் அறிவோம்!

ஏருழவர், மீனவர், மேசன், தச்சருடன், அரச உத்தியோகத்தர்களும் வாழும் ஊரிதனில்
கார்காத்த வேளாளர் வாழ்ந்திட்ட காரணமும், காரைமரங்கள் நிறைந்து வளர்ந்திட்ட
காரணமும், காட்டு ராஜாகள் வாழ்ந்திட்ட காரணமும், காரைதீவென்று பெயர் பெற்றதென்ற,
கர்ண பரம்பரைக் கதைகளும் உண்டு, கார்காத்த வேளாளர்தீவின் நாமம் வாழ்க!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




முருகன் ஆலய தீர்த்தோற்சவத்தின் போது.....


# நிதுஸ் ஒப்செற் அச்சகம்

## இளங்கோ வீதி, காரைதீவு -12

## தொ.பே.067 2250631, 0776051793

உங்களுக்கு தேவையான
ஒப்செற் அச்சு வேலைகள்,
ஸ்கிறீன் பிறிண்டிங் வேலைகள்,
நினைவுச்சின்னங்கள் போன்றவற்றை
செய்து கொள்ள நாடவேண்டிய இடம்

## Nethush offset Printers - Karaitivu




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மதுப்பழக்கமும் சமூக, பொருளாதாரத் தாக்கங்களும்

எம்.உதயசூரியன் (கிராம சேவையாளர்)

மதுவுக்கும் போதைப் பொருட்கள் பாவனைக்கும் உள்ளாகும் நபர்களின் தொகை நாளுக்கு நாள் அதிகரித்து செல்வதாக பலரும் குற்றம் சாட்டி வருகின்றனர். எமது நாட்டுக்கு பல்வேறு வகைகளிலும் போதைப் பொருட்கள் சட்டவிரோதமாக கொண்டு வரப்படுகிறது. இதனை பொலிசாரினாலும் சுங்க பிரிவினராலும் கண்டு பிடிக்கப்பட்டு வருவதை நாம் அவதானிக்க முடிகிறது. எவ்வாறாக இருந்த போதிலும் இலங்கையில் போதைப்பொருள் அச்சுறுத்தலை கட்டுப்படுத்த முடியாமல் இருந்து வருவது மிகவும் கவலைக்குரியதாகும். இதனைப் பாவிப்போர் கொடுமையான குற்றச்செயல்களில் அதிகம் ஈடுபடுவதனை அறிய முடிகிறது. இதே வேளை மற்றொரு பகுதியினர் மதுவுக்கு அடிமையாகி வருகின்றனர். மதுபான பாவனைக்கு உள்ளாகுபவர்கள் சிகரட் பாவனையின் மூலமே அவற்றுக்குள் நுழைகின்றனர். எனவே இங்கு நான் மதுபானத்தால் ஏற்படக்கூடிய தாக்கங்களையும் குறிப்பிடலாம்.

இலங்கை முழுவதும் சிகரட் மற்றும் மதுபான பாவனையை குறைப்பதற்காக அரச மட்டத்திலும் அரச சார்பற்ற நிறுவனங்கள் மூலமாகவும் மற்றும் சமூக சேவை அமைப்புக்களினாலும் பல்வேறு வகையான வேலைத்திட்டங்கள் பல் வேறுபட்ட வழிமுறைகளில் செயற்படுத்தப்படுகின்றன. அவ்வாறு இருந்தும் சிகரட் மற்றும் மதுபான பாவனையில் நினைத்த இலக்கினை அடைய முடியாது உள்ளது. நாங்கள் செய்யும் புகைத்தல் மற்றும் மதுபான பாவனைக்கான கட்டுப்படுத்தல் செயற்பாடுகள் சில வேளைகளில் விளம்பரங்களாக மாறிப் போகின்றன.

சிறுவர்களும் இளைஞர்களுமே சிகரட் மற்றும் மதுபான பாவனையில் அதிகம் உள்வாங்கப்படுகின்றனர். இப்பிரிவினரை பாதுகாக்க வேண்டுமானால் கட்டாயமாக இவர்கள் மத்தியில் வருமுன் காத்தல் செயல் திட்டத்தினை கொண்டு செல்ல வேண்டியது அவசியமாகிறது. புகையிலை மற்றும் மதுசாரம் மீதான தேசிய அதிகாரசபைச் சட்டம் பெயரளவில் அமுல் படுத்தப்பட்டிருந்தபோதும் இச்சட்டமானது பெரியளவில் மாற்றங்களை ஏற்படுத்தப்படவில்லை அதேபோன்று போதைப்பொருள் பாவனைக் கட்டுப்பாட்டுச்சபையின் செயற்பாடும் உள்ளது.இதற்கு ஒவ்வொரு பெற்றோரும் தமது இளம் சந்ததியினரை சிகரட் மற்றும் மதுபாவனையில் இருந்து பாதுகாப்பதில் கூடியகவனம் செலுத்த வேண்டி இருக்கிறது.

எமது குடும்பத்தில் நடக்கும் மங்களகரமான நிகழ்வு மற்றும் அமங்கள விழாக்களில் மகிழ்ச்சியாக அல்லது துக்கத்தை அனுஸ்டிக்க வேண்டுமானால் சிகரட் புகைத்து மதுபானம் குடிக்க வேண்டிய நிலைக்கு மக்கள் ஆளாக்கப்பட்டுள்ளனர். இது மக்கள் தங்களை தாங்களே முட்டாளாக்கும் நிகழ்ச்சியாகும் மதுவுக்கு அடிமையாகியவர்கள் சமூகத்தில் பல்வேறு குற்றச்செயல்களில் ஈடுபடுவதோடு தங்கள் குடும்பங்களை கவனிக்காமல் விட்டுவிடுகின்றனர். இதனால் குடும்பங்கள் வறுமையில் வாடுவதுடன் பாரிய பொருளாதார பிரச்சினைகளுக்கும் முகம் கொடுத்து குடும்பப் பிணக்கு ஏற்படுவதை காணமுடிகிறது. குடும்பத் தலைவர்கள் சிலர் கிடைக்கும் சொற்ப வருமானத்தையும் மதுவுக்கு செலவிட்டு விடுவதனால் அவர்களை நம்பி வாழ்வோர் வறுமையின் கோரப்பிடிக்குள் சிக்குவதுடன் தங்களுடைய அடிப்படை தேவைகளை கூட சிறிதளவேனும் பூர்த்தி செய்ய முடியாத நிலைக்கு தள்ளப்பட்டு மிகுந்த கஷ்டங்களுக்கும் முகம் கொடுத்து வருகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் சிலர் சட்டவிரோத மதுபானங்களை பயன்படுத்துவதன் காரணமாக மிக மோசமான ஆரோக்கிய பிரச்சினைகளுக்கு ஆளாகுவதுடன் இளம் வயதிலேயே மரணத்தை தழுவிவிடுகின்றனர். இதனால் அவர்களின் குடும்பங்கள் யாருமே கவனிக்காத அளவிற்கு நட்டாற்றில் கைவிடப்படுவதுடன் பாரிய பல்வேறுபட்ட நெருக்கடிகளுக்கும் முகம் கொடுக்க வேண்டி உள்ளது. இன்று இந்த நவ உலகிலே ஒரு வகையான மேற்கத்தேய கலாசாரம் கீழைத்தேய இளைஞர்களிடம் பரவிக்கொண்டு வருவதை நாம் காணலாம். அங்கு அவர்கள் குளிர்கால நிலைக்கு தகுந்தாற்போல் திராட்சையில் இருந்து பெறப்பட்ட "வைன்" தரமான மதுவகைகளை உடலை சூடேற்றவும் உடல் ஆரோக்கியத்துக்கும் உணவுக்கு முன் குடும்பமாக சிறிய அளவை பருகுகின்றனர் அது கேடான விடயம் அல்ல. அதற்கு அடியொற்றி நம் சமுதாய இளைஞர்கள் உடலுக்கு கேடுவிளைவிக்கும் தரம் குறைந்த மதுசார வகைகளை நீர்பருகுவதைப்போல் தாராளமாக பருகுகின்றார்கள். இதனால் இளமைப்பருவத்தில் மதுவினால் அதிக பாதிப்பு ஏற்படாதவிடத்திலும் பிற்காலத்தில் மதுவினால் பாதிப்புக்கள் ஏராளம்.

இனிய வாலிபம், இளமை, தனது இனிய குடும்பம், நம்பிக்கையான தொழில், எதிர்காலக் கல்வி, குல ஒழுக்கம், மனித விழுமியம் என்பன சீர்கெட்டு போய்க்கிடக்கின்ற துர்ப்பாக்கிய நிலையை இன்று நாம் காணலாம்.
வாலிப பராயம் வாழ்வில் முன்னேற தனக்கொரு நிலையான இருப்பை கட்டிக்கொள்ள முதுமையை இனிதாய் வாழ உதவும், இப்பருவ இளைஞர்கள் மதுவிற்கு அடிமையாகி உரோமர் காலத்தில் விலைக்கு வாங்கப்பட்ட அடிமைகளைவிட தாழ்வான மட்டத்திலே உலவுகின்றனர்.வாகன விபத்துக்களில் தம் விலைமதிப்பற்ற இந்நுயிரை இழக்கின்றார்கள். சிறுவயதிலே பலநோய்க்கு ஆளாகின்றார்கள் இந்நிலை தேவைதானா? காசைக் கொடுத்து நோயை வாங்குகின்றார்கள். இந்நிலை தொடர்ந்தால் எமது சமுதாயம் உலக வரலாற்றுப் பக்கத்திலிருந்து எடுபட்டுப்போவது திண்ணம்.

விஷமானது கூடியது 24 மணி நேரத்துக்குள் மனித உயிரை குடித்துவிடும். ஆனால் எமது இளைஞர்கள் அருந்தும் மதுவாகிய விஷம் ஒரு 15-20 அல்லது 10 வருடங்களில் பாவனை அளவை பொறுத்து உயிரைக் குடிக்கும். மெல்ல மெல்ல உயிரைக்குடிக்கும் என்றால் அதில் மாற்றுக்கருத்தில்லை. ஒரு கவிஞன் பாடுகிறான் "போதை என்பது அது பாம்பு விசம்தான் சேர்ந்து குடிச்சால் அது சோஷலிசம்தான்" என்று. பருவங்கள் எமது சமகால இளைஞர்களில் சிலர் சோசலிசத்துக்காகத்தான் மதுவை முதலில் பருகுகிறார்கள். அதாவது ஒரு வாலிப குழு மத்தியிலே குடிக்காதவனைப்புறம் தள்ளுகின்ற நிலை காணப்படுகிறது. இதனாலே இளைஞர்கள் இந்த பானத்திலே தன்னையே இழக்கின்ற நிலை காணப்படுகின்றது.

நம் இளைஞர்களை முதலில் குறிப்பிடுவதற்கான காரணம் இவர்கள் எமது சமுகத்தில் முதுகெலும்புகள் இவர்கள் எமது சமூகத்தினை வழிநடத்தி செல்ல வேண்டியவர்கள் எமது நாட்டில் பாரிய மாற்றத்தினை ஏற்படுத்த வேண்டியவர்கள் தன்னையும் அழித்து தன் சமூகத்தினையும் நிர்க்கதியாக்கும் நிலை கட்டாயமானதும், உறுதியானதும், மாற்றப்பட வேண்டிய தேவை உள்ளது எமது இளைஞர்கள் மத்தியில் நிச்சயமாக மாற்றம் ஏற்பட வேண்டும்.

மது உணர்வூட்டும் பொருளல்ல உணர்வையும் உடலையும் அழிக்கும் ஒரு நச்சுப்பொருள் மது அருந்துவதால் சுதந்திர உணர்வு தோன்றுவதாகவும் அதிக சக்தி கிடைப்பதாகவும் களைப்பு நீங்குவதாகவும் பலர் நினைக்கின்றார்கள், இளமை பருவத்தில் மதுவால் அதிக பாதிப்பு ஏற்படுவதில்லை என்றாலும் பிற்காலத்தில் மதுவினால் பாதிப்புக்கள் ஏராளம். இம்மது நேரடியாக இரத்தத்தில் கலந்துவிடுவதால் மது குடித்தவுடன் சிறிது நேரத்திற்கு உற்சாகம் பிறக்கிறது மகிழ்ச்சியளிக்கிறது ஆனால் நாளடைவில் எல்லா நோய்களையும் கொடுத்து சிறிது சிறிதாக நம்மை அழிக்கிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதுவின் தீமைகள் உணர்ந்த உலக சுகாதார நிறுவனம் "மது நீண்ட நாளைய நலக்கேடு என்றும் தீயசெயல்" என்றும் கூறுகிறது மது உடல் நலத்தை கெடுப்பதோடு சமுதாய சீர்கேடுகளையும் ஏற்படுத்துகிறது.


மதுவிற்கு அடிமையாகின்றவர்கள் ஏழைகள், கூலித்தொழிலாளர்கள், கடின உழைப்பாளி, கவலைப்படுகின்றவர்கள், மனநிம்மதி இழந்தவர்கள் போன்றவர்கள் அதிகம் மது அருந்துவதாகப் புள்ளி விபரங்கள் கூறுகிறது.

சந்தோசத்திற்காக குடிக்க ஆரம்பித்தவர்கள் பிறகு மதுவிற்கு அடிமையாகி விடுவதோடு தன் இனிய குடும்பத்தையும் துயரத்தில் ஆழ்த்திவிடுகிறார்கள். குடிப்பழக்கம் உள்ள வீட்டுக் குழந்தைகளும் நாளடைவில் குடிப்பழக்கத்திற்கு ஆளாகி கெட்டுப்போகும் நிலை ஏற்படுகிறது.
மதுவால் சமூகப்பிரச்சினை, மது குடிப்பவரின் உடலில் ஏற்படும் சுகாதாரப் பிரச்சினை, அதிகமாக உள்ளது. மது மூளையையும் நரம்பு மண்டலத்தையும் பாதித்து உடல் நலத்தை சீர் குலைக்கிறது மது குடிப்பதனால் கல்லீரல் பாதிக்கப்பட்டு "கல்லீரல் இறுக்க நோய்" (*Cirrhosis*) ஏற்படுகிறது. பின்னர் கல்லீரல் புற்றுநோய் ஏற்படுவதற்கும் காரணமாகிறது.

மது வயிற்றுக்குள் செல்லும் போது குடல் பாதிக்கப்பட்டு இரைப்பை அலற்சி (*Gastritis*) ஏற்பட்டு குடலில் புண் ஏற்படுகிறது. வாய் தொண்டை உணவு குழாய்களில் புற்றுநோய் ஏற்பட வழிவகுக்கிறது. தோளிலும் காலிலும் தசைநார் இழுப்பு ஏற்படுகிறது உடலில் சக்கரைச் சத்தை சீர்படுத்தும் கணையம் பாதிக்கப்படுகிறது. அடிக்கடி மறதி ஏற்பட்டு சோர்வு ஏற்படுகிறது.கோர்ஸா கா.ஃப்ஸ் சின்ரோம் (*Korsa koffs Syndrome*) என்ற மூளை பாதிப்பு நோய் ஏற்பட வழிவகுக்கிறது. உயிர்ச்சத்து "பி" குறைவால் வெர்னிக் சின்ட்டோம் (*Wernike Syndrome*) என்ற நோய் ஏற்பட்டு நடக்க முடியாத நிலை ஏற்படுகிறது.

மது அருந்துபவர்களுக்கு மன நோய்கள் பல ஏற்பட்டு மன நோயாளிகளாகி விடும் வாய்ப்பு அதிகமுண்டு. மது அருந்தும்போது உடலில் நோய் எதிர்ப்பு தன்மை குறைவதால் தொற்று நோய்கள் வந்தால் எளிதில் தீராது.

இன்னும் எத்தனையோ பிரச்சினைகள் அத்தனையும் மதுவினால் ஏற்படுவதே.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊடகத்துறையில் காரைதீவு

சுதந்திரத்திற்கு முற்பட்ட காலத்தில் காரைதீவுப் பகுதியில் ஊடகம் என்றால் என்னவென்று தெரியாத நிலைஇருந்தது. பத்திரிகையோ, வானொலியோ, தொலைக் காட்சியோ புழக்கத்தில் இல்லை. 1952ஆம் ஆண்டளவில் நேரு சனசமூக முன்றலில் உயர்ந்த மரத்தின் மீது அன்ரனா போன்று வயர் கட்டி பலத்த இரைச்சலுக்கு மத்தியில் றேடியோ கேட்டதாக முன்னோர் கூறுவர். அக்காலத்தில் பிலிப்ஸ், எக்கோ, முல்லாட் வகையிலான வானொலிப்பெட்டி வரத்தொடங்கின. பிரதான வீதியிலுள்ள தேனீர்கடைகளில் அவை பாடத்தொடங்கியதுடன் செய்தியும் கேட்பர். அதற்கு முன்பு தினசரிப் பத்திரிகையின் வரத்து, புழக்கம் இருக்கவில்லை. அதனால் நாட்டுத் தொடர்புகளை அறிந்து கொள்ள முடியாதவர்களாக மக்கள் இருந்தனர்.

முதல் ஊடகவியலாளராக சுவாமி விபுலானந்த அடிகளார் சேவையாற்றியிருந்தார்.இலங்கை இந்தியாவிலிருந்து வெளிவந்த பல பத்திரிகைகளுக்கும் சஞ்சகைகளுக்கும் நிறைய செய்தி கட்டுரைகள் ஆக்கங்களை எழுதியதோடு இ.கி.மிசனின் பிரபுத்த பாரதம் வேதாந்தகேசரி ஆகிய சஞ்சிகைகளுக்கு ஆசிரியராக பல வருடங்கள் பணியாற்றியிருந்தார்.பல நூல்களை எழுதியுள்ளார். காரைதீவுக்கென பத்திரிகை நிருபர்கள் என அப்போது யாரும் இருக்கவில்லை 1980 களில் இலங்கை வானொலியில் திரு.ஏ.சி.மோகனதாஸ் அறிவிப்பாளராக சேர்ந்து சேவையாற்றினர்.. அண்மைக் காலத்தில் மாவடிப்பள்ளியில் இர்பான் மௌலானா வானொலி, தொலைக்காட்சியில் கடமையாற்றினார்.
.

1972ற்கு பின்னர் திரு.எஸ்.அருளானந்தம் தினகரன் பத்திரிகையின் நிருபரானார். சுமார் 08 வருடங்கள் அவர் சீரிய சேவையாற்றி காரைதீவை வெளியுலகிற்கு கொணர்ந்தார். அவருக்கு உதவியாக விளங்கிய திரு.த.சிவானந்தராஜா வீரகேசரிப் பத்திரிகை நிருபராக 1978இல் பதவியேற்றார். திரு.த.சிவானந்தராஜா சிலவருடங்கள் பணியாற்றினார். 1986இல் அவரது தம்பி தற்போதைய சிரேஷ்ட பத்திரிகையாளர் திரு.வி.ரி.சகாதேவராஜா இன்றுவரை பல்துறை ஊடகங்களிலும் கணிசமான பங்களிப்பைச் செய்து வருகின்றார். இலங்கை வானொலி, ஐரிஎன், இணையதளம், வீரகேசரி, தினகரன், சுடர்ஒளி என அவரது ஊடக வலயம் நீண்டிருந்தது. எனினும் வீரகேசரி தாய் ஊடகமாகும். பிரதேச பத்திரிகைகளான தினக்கதிர், விடிவானம், ஈழநாதம் போன்றவற்றிலும் எழுதியிருந்தார்.

இலங்கை வானொலியில் இன்றும் 'நாள்மகிழ் அரங்கம் விடியும் வேளை' போன்ற நிகழ்ச்சியில் நேரடியாக தனது குரலில் பல வகையான செய்திகளை தெள்ளுதமிழில் வழங்கி வருகிறார். அதனால் தேசியவிருதுகள் பலவற்றை பெற்றதுடன் மாவட்டத்தில் இரு தடவைகள் சாஹித்திய விருதுகளையும் பெற்றுள்ளார்.
மாளிகைக்காடு, மாவடிப்பள்ளியில் அஸ்ஹர், மசூத்லெவ்வை ஆகியோர் நிருபர்களாகப் பணியாற்றுகின்றனர். 23.4.2009 முதல் கல்முனையிலிருந்து வெளிவரும் கிழக்கு தினக்குரல் பத்திரிகையின் உதவி ஆசிரியராக திரு.ஆ.ஸ்ரீஸ்கந்தராஜாவும் நிருபராக திரு.செ.சிவராசாவும் செயற்பட்டுவருகின்றனர்.

**அன்று ஊடகம்**

மக்கள் ஊடகங்கள் மூலம் செய்திகளை பெறமுடியாதிருந்த அந்தக்காலத்தில் பிரசித்தம் மூலம் மக்களுக்கு செய்திகளை பரப்புவார்கள். அன்று ஒலிபெருக்கி இல்லை. ஆதலால் இருபக்கமும் தோலால் மூடப்பட்ட மேளத்தை போன்ற உபகரணத்தால் ஒலியெழுப்பப்பட்டு, சந்திகளில் நின்று ஒலியை நிறுத்தி செய்தியை அழகாக ஓசையுடன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறுவர். கோயில், பொலிஸ் உத்தரவு சம்பந்தமான செய்தகள் அபரும்பாலும் இடம்பெறும்.இது இன்னாரின் உத்தரவு எனவும் கூறுவர். பொதுவாக "மூப்பன்" என்னும் வர்க்கத்தினர் இதனை செய்வர். படமாளிகைகளில் புதிய படம் வந்து விட்டால் மாட்டு வண்டிகளில் பல விளம்பரங்களை காட்சிப்படுத்தி வீதி வீதியாக ஒலிபெருக்கி மூலம் திரிவர். பிற்பட்ட காலத்தில் காரின் பின்புறம் கட்டி இச்செயற்பாட்டை செய்வர். இதன்போது குறிப்பிட்ட படம் தொடர்பான கைபிரசுரத்தையும் விநியோகிப்பர். இதனைப்பெற சிறுவர் கூட்டம் காரின் பின்னால் படையெடுப்பது அன்று வழமையான நிகழ்வுகள்..

பின்னர் செய்திகளைக் கடந்து தொலைபேசி, தபால், பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி, மின்னஞ்சல் என பலதரப்பட்ட நவீன உபகரணங்கள் வந்துவிட்டதை அறிவோம். காரைதீவில் பத்திரிகை முகவர்களான அமரர் திரு.போடிசாமி என அழைக்கப்படும் போடியார். சாமித்தம்பி,, திரு.கே.ஆதிநாயகம். திரு.வே.பாலசுந்தரம போன்றோர் செயற்பட்டனர். ஆனந்தவிடகன், குமுதம், கல்கி, கலைக்கதிர், கற்கண்டு போன்ற சஞ்சிகைகள் வீரகேசரி, மித்திரன், தினகரன், தினபதி, தந்தி, தீப்பொறி போன்ற பத்திரிகைகளும் அங்கு விற்கப்பட்டன.

அமரர் கே.ஆதிநாயகம் தேனீர் கடையையும், பத்திரிகையின் முகவராகவும் மிகுந்த கட்டுப்பாட்டுடன் மேற்கொண்டார். அக்காலத்தில் இலக்கமிட்டு பத்திரிகை பெறுபவர்கள் வலுகுறைவு. மாணவர்களுக்கான கற்கண்டு, அம்புலிமாமா, நட்சத்தர மாமா, பூஞ்சோலை, பாலமித்திரன் மற்றும் கொப்பிகள் விற்கப்பட்டன. இன்று திரு.அ.மேகராசா முகவராக பல பத்திரிகைகளை விநியோகித்துவருகிறார்.அன்று திருப்பள்ளிஎழுச்சிக்குப் பதிலாக அதிகாலையில் ஆண்டி என்பார் சிகண்டி, சங்கு ஊதி ஆட்களை எழுப்புவர். பிற்காலத்தில் ஆலயங்களில் ஒலிபெருக்கி ஒலிப்பது கூட செய்தியைத் தருகிறது எனலாம்.

**ஊடகத்தின் எழுத்தாளர்கள்**

அச்சு இலத்திரனியல் ஊடகங்களில் காரைதீவைச் சேர்ந்த பலர் அன்றிலிருந்து இன்று வரை தடம்பதித்து வந்துள்ளனர். முதல் ஊடகஎழுத்தாளராக சுவாமி விபுலானந்த அடிகளார் சேவையாற்றியிருந்தார்.இலங்கை இந்தியாவிலிருந்து வெளிவந்த பல பத்திரிகைகளுக்கும் சஞ்சகைகளுக்கும் நிறைய செய்தி கட்டுரைகள் ஆக்கங்களை எழுதியதோடு இ.கி.மிசனின் பிரபுத்த பாரதம் வேதாந்தகேசரி ஆகிய சஞ்சிகைகளுக்கு ஆசிரியராக பல வருடங்கள் பணியாற்றியிருந்தார்.பல நூல்களை எழுதியுள்ளார்.கல்விமான் க.கணபதிப்பிள்ளை கலாநிதி ந.நடராஜா போன்றோரும் பல நூல்களை எழுதியுள்ளனர். சுவாமி விபுலானந்த அடிகளாா கல்விமான் க.கணபதிப்பிள்ளை ஆகியோர் ஆங்கிலத்தில் பல நூல்களை எழுதியுள்ளனர்.

மூத்த எழுத்தாளரான தம்பியப்பா கோபாலகிருஸ்ணன் பல ஆக்கங்களை இலக்கிய உலகில் தடம் பதித்ததுடன் செங்கதிர் என்ற காலாண்டு இலக்கிய சஞ்சிகையயொன்றையும் நடாத்தி வருகிறார்.தேசிய பத்திரிகைகளுக்கு சிறுகதைகளை கலாபூசணம் இரா.கிருஷ்ணபிள்ளை இன்றும் எழுதி வருகின்றார். மேலும், இவர் கவிதை கட்டுரைகளையும் எழுதியுள்ளார். பல நூல்களுக்கு சொந்தக்காரர் இவர்.

மேலும் கவிதைகளை கவிஞர் பொன்.சிவானந்தன், எஸ்.இராமநாதன், அன்பு சண்முகம், எஸ்.நாகராஜா காரைதீவு சிவம் போன்றோர் எழுதியுள்ளதுடன், எஸ்.நாகராஜா, அன்பு சண்முகம் இலங்கை வானொலியில் இசையும் கதையும் இன்றைய நேயர் போன்ற சில நிகழ்ச்சிகளில் பங்குபற்றியுள்ளனர். கவிஞர் பொன்.சிவானந்தன், எஸ்.இராமநாதன் அமராகா.வேல்நாயகம் இ.வினாயகமூர்த்தி த.கோபாலகிருஸ்ணன் போன்றோர் சொந்த நூல்களை ஆக்கியுள்ளனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுத்தாளரான வி.ரி.சகாதேவராஜா தேசிய பத்திரிகைகளில் பல நூறு கட்டுரைகளை எழுதியுள்ளார். வளத்தாப்பிட்டி மக்கள் படும் அவலம் பற்றி வீரகேசரியில் எழுதிய கட்டுரைக்கு தேசிய மக்கள் விருதும் கிடைத்துள்ளது. ஆலய விழாக்கள், உற்சவங்கள், வரலாறு, பாடல்கள், சுனாமியின் பின்னரான கட்டுரைகள் கல்விசார்ந்த விடயங்களை எழுதியுள்ளார்.தினமும் காரைதீவை பல்வேறு ஊடகங்கள் வாயிலாக வெளியுலகிற்குக் கொண்டுவருவதும் அவரே.வானொலியில் அடிக்கடி தனது குரலில் செய்திகளை வழங்கும் அவர் பல செய்திகளை உடனுக்குடன் ஒலிபரப்பக் காரணமானவர். பல நூல்களை தொகுத்தும், எழுதியும் வெளியிட்டுள்ளார்.

திருமதி. ஸ்ரீப்ரியா சிவபாலன் பத்திரிகையில் சில கட்டுரைகளை அவ்வப்போது எழுதி வருபவர். திருமதி. சத்தியவதி சாந்தலிங்கம், ரோகினி வேதநாயகம் பலகவிதைகளை எழுதியுள்ளனர்.

மேற்குறிப்பிட்டோரில் ஒருசிலரைத்தவிர ஏனையோர் தொடர்ந்து ஆக்கங்களை ஊடகங்களில் பதிக்கவில்லை என்பது கவலைக்குரியது.

காரைதீவில் அச்சகம் ஒன்றை அமைத்து இன்றுவரை நடாத்தி வருபவர் திரு.மா.புஸ்பநாதன் அவர்கள். நிதுஸ் அச்சகம் என்ற பெயரில் இயங்கும் அவ்வச்சகம் இன்று காரைதீவின் தேவையைப் பூர்த்தி செய்யுமளவிற்கு வளர்ந்துள்ளது.

ஓவியத்துறையில் அமரர் கார்த்திகேசு ஆசிரியர். கே.பரசுராமன் கே.வெற்றிவேல் ச.சுரேஸ்குமார் கே.குகன் ஆகியோர் தடம் பதித்துள்ளனர்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிராமசேவை உத்தியோகஸ்தரகள்



முன்வரிசை இடம் இருந்து வலம்
திருமதி.எ.சிறிக்காந்தன், திரு.ரி.உருத்திரன், திரு.எஸ்.ஜெகராஜன் (ADS)
திரு.எஸ்.இராமகிருஷ்ணன் (DS), ஜனாப் ஏ.எம்.ஏ.அலியார், திரு.எம்.பாக்கியராஜா, திரு.எஸ்.ஜெயசுந்தரம்.

பின் வரிசை
திரு.எஸ்.புவனேசராஜா, திரு.எம்.உதயசூரியன், திரு.ரி.இராஜசேகர் ,திரு.எஸ்.சிவேஸ்வரன், ஜனாப்.ஐ.எம்.மன்சூர், ஜனாப்.எ.அப்துல் நஜீம், திரு.ஜீ.கேதீஸ்வரன், திரு.எல்.பகிரதன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# போதையை வெறுப்போம் வாழ்வில்...

அன்பு சண்முகம்

போதைக்கு அடிமையாகிப் பொன்னான வாழ்விழந்து
பாதையே தஞ்சமென்று பட்டினி கிடந்து நொந்து
பேதையாய் வாழ்ந்து வாழ்வில் பெருந்துன்பம் நேர்ந்ததென்று
வாதையால் அல்லலுற்று வாழ்வினை முடிப்போருண்டு

போதையை நாடும்போது புத்திபேதலித்துப் போகும்
பக்குவம் மாறும் நல்ல பண்புகள் மாறிப்போகும்
சாதலும் நெருங்கும் நம்மைத் தரித்திரம் வந்து சூழும்
தாங்கொணாத் துயரத்தாலே சஞ்சலம் வந்து சேரும்

போதையால் எமது வாழ்வில் பாவமும் பழியும் சேரும்
வேதனை சொந்தமாகும் வீழ்ச்சியே வந்து சேரும்
பாதகராகிப் போவோம் பல்வகைத் துன்பஞ் சூழும்
சாதலை நாடும் விட்டில் பூச்சென மாறுவோம் நாம்

போதையை நாடுவோரின் பொன்னான வாழ்க்கையிங்கே
கேடான பாழ்ங் கிணற்றில் வீழ்ந்தது போலேயாகும்
போதையால் மனிதவாழ்வு பொசுங்கியே போகுமப்பா
ஆதலால் வெறுப்போம் நாங்கள் அரக்கனாம் போதைவஸ்தை

போதையை நாடுவோரின் பொன்னான மனைவி மக்கள்
பாதையே தஞ்சமென்று பரிதவித்திடுவர் வாழ்வில்
வாதையே மிஞ்சும் மண்ணில் வறுமைதான் வாழ்க்கையாகும்
சூதையே ஒத்ததப்பா துயர்தரும் போதைவஸ்து

போதைக்கு அடிமையாகிப் புழுவென வாழும் வாழ்க்கை
வேதனை மிக்கதென்று விளங்கி நீ உணர்ந்து கொண்டால்
சாதலைத் தவிர்ப்பாய் இந்தத் தரணியை வெற்றி கொள்வாய்
சாதனை பல படைப்பாய் தலைவனாய் மிளிர்வாய் நீயே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காரைதீவில் அனர்த்தங்கள்

அறிமுகம்.

ஆனர்த்தங்கள் உலகில் பொதுவாக இடம் பெற்று வரும் ஒன்றாகும். அதற்கு காரைதீவும் விதிவிலக்கல்ல. ஒரு சமூகத்தால் தனது சொந்த வளங்களைக் கொண்டு மனித, பொருள், சுற்றுச்சூழல், இழப்புக்களை ஈடுசெய்ய முடியாத அளவிற்கு அதன் தொழிற்பாட்டை வெகுவாக சீரழிக்கும் ஒரு குழப்பத்தை அனர்த்தம் எனலாம்.

2005ஆம் ஆண்டு 13ஆம் இலக்க இலங்கை பேரழிவு சொல்லாட்சி சட்டமூலத்தின்படி இலங்கையில் மண்சரிபு, சூறாவளி, வெள்ளப்பெருக்கு, வரட்சி, தொழிற்சாலை விபத்து, விமான விபத்து, சுனாமி, நிலநடுக்கம், கடல் விபத்து, தீ விபத்து, தொற்று நோய்கள், வெடிப்புகள், விமானத் தாக்குதல்கள், உள்நாட்டு யுத்தம், இரசாயண விபத்துகள், காட்டுத்தீ, கடல் அரிப்பு, கடலில் எண்ணெய்க்கசிவுகள், இடி, மின்னல் தாக்கம் போன்றன அனர்த்தங்களாக குறிப்பிடப்பட்டுள்ளன.

முனித உயிர்களையும், பொது உடைமைகளையும் இயற்கைச் சூழலையும் அனர்த்தப் பாதுகாப்பிலிருந்து பாதுகாக்க அனர்த்த முகாமைத்துவம் (*DISASTER MANAGEMENT*) அவசியமாகின்றது.

காரைதீவில் அனர்த்தம்

காரைதீவுக் கிராமம் அவ்வப்போது பல கோணங்களில் இயற்கை, செயற்கை அனர்த்தங்களை சந்தித்து வந்துள்ளதை நாம் அறிவோம். குறிப்பாக 1956.'.1958 வகுப்புக் கலவரம், 1957இல் பெருவெள்ளம், 1978இல் சுறாவளி, 1985.'.1990இல் இனக்கலவரம், 2004இல் சுனாமி போன்றவற்றை இவ்வண் குறிப்பிட முடியும்.

## 1956/1958 வகுப்புக் கலவரம்

1956இல் சிங்களம் மட்டும் சட்டத்தை அப்போதைய அரசாங்கம் கொண்டு வந்த போது வகுப்புக் கலவரம் இலங்கை பூராக வெடித்தது.

அது அம்பாறை மாவட்டத்திலும் எதிரொலித்தது. அம்பாறை நகரிலுள்ள தமிழர்களின் கடைகள், வீடுகள், உடைமைகள் எரித்து நாசமாக்கப்பட்டன. அதன் மறுதலையாக காரைதீவிலிருந்த சிங்களவர்களின் உடைமைகளும் எரியூட்டப்பட்டன. இதன் போது இரு சமூகங்களும் வெகுவாகப் பாதிக்கப்பட்டன.

1958இலும் இதேபோன்றதொரு வகுப்புக்கலவரம் தலைதூக்கியது. அதிலும் இரு சாராரும் பாதிக்கப்பட்டன.

## 1957 பெருவெள்ளம்

அம்பாறையில் இருக்கக் கூடிய கல்லோயா நீர்த்தேக்கம் உடைப்பெடுத்த போது பெருவெள்ளம் ஏற்பட்டது. அப்பெருவெள்ளம் கரையோரப்பகுதிகளை முழுமையாக தாக்கியது. அது காரைதீவின் வரலாற்றிலும் ஒரு முக்கிய இடத்தை பிடித்தது மட்டுமல்லாமல் இன்று சான்றோர் மத்தியில் பேசப்படும் விடயமாக மாறியுள்ளது.


காரைதீவு ஸ்ரீ கண்ணகி அம்மன் ஆலயத்தடியில் 04அடி வெள்ளம் நின்றதாகவும், காரைதீவின் மத்தியில் மற்றும் கடல் பகுதியைத்தவிர ஏனைய வயல், வயல் சார்ந்த




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதேசங்கள் மற்றும் கரைச்சை, கரைச்சை சார்ந்த பிரதேசங்கள் எல்லாம் வெள்ளத்தில் மூழ்கின.


அவ்வெள்ளத்தில் அப்போதிருந்த சுமார் 512 களிமண் வீடுகள் உடைந்து வீழ்ந்தன. வீதிகளும் சேதமாகின. உயிருக்கு சேதமில்லை. அவ்வெள்ளம் வற்ற 04 தினங்கள் எடுத்ததாக கூறப்பட்டுள்ளது.






## 1978 சூறாவளி

1978இல் கிழக்கை உலுக்கிய சூறாவளிக்கு காரைதீவும் இரையாகியது. பொருளாதார வளத்தில் கணிசமான பங்கை வகித்த 2000 தென்னைமரங்கள் முறித்து, பெயர்த்து எறியப்பட்டன. வீடுகள், கட்டிடங்களில் இருந்த தகரங்கள், சீற்றுகள் தூக்கி வீசப்பட்டன. மரங்கள் முறிந்து வீழ்ந்ததில் அநேக வீடுகள் சேதமாக்கப்பட்டன. மதில்கள் வீழ்ந்தன. மரம் வீழ்ந்ததில் திரு.வீரக்குட்டி என்பவர் மரணமடைந்தார். மேலும் பலர் காயமடைந்தனர். சூறாவளியிலிருந்து மீள பல மாதங்கள் எடுத்தன.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## 985/1990 கலவரங்கள்

காரைதீவு வரலாற்றில் இனமுரண்பாட்டிலான கலவரங்கள் 1985/1990களில் பெரும் பாதிப்பையும், உயிர்ச்சேதங்களையும் ஏற்படுத்தியதோடு மாறாத வடுவையும் ஏற்படுத்திற்று எனலாம்.


1985 சித்திரை மாதம் சித்திரை வருடப்பிறப்பிற்கு மக்கள் தயாராக இருந்த வேளை இனவாதிகள் வன்முறையை கட்டவிழ்த்து பேயாட்டம் ஆடினர். இக்கலவரத்தில் 06 பேர் பழியாகியதோடு, 20000 தமிழ் மக்கள் அகதிகளாக முகாம்களில் தஞ்சமடைய வேண்டியதாயிற்று.

சித்திரை மாதம் 12, 13, 14 ஆகிய மூன்று தினங்களும் காரைதீவு வரலாற்றில் கறைபடிந்த நாட்களாக கழிந்தன. 610 வீடுகள் முழுமையாகவும், 158 வீடுகள் பகுதியளவாகவும் எரித்து சேதமாக்கப்பட்டதுடன் கொள்ளையும் அடிக்கப்பட்டது. இவ்வாறு காரைதீவு எரியூட்டப்பட்ட கறைபடிந்த வரலாறு உலகெங்கும் பரவியது.கலவரத்தின் பின்னர் இ.கி.மிஷன், வை.எம்.சீ.ஏ, எகெட் போன்ற ஸ்தாபனங்கள் வீடு கட்டிக்கொடுத்தன. சில முஸ்லீம், சிங்கள அன்பர்கள் மறுநாளே உணவு, உடைகளைக் கொணர்ந்து கொடுத்து ஆறுதல் சொன்னதையும் இங்கு சுட்டிக்காட்டுதல் பொருத்தமானதாகும்.

இப்பாரிய அனர்த்தத்திலிருந்து மீள பலவருடங்கள் எடுத்தன. இதன் பின்பு 1990களில் கொலகொட்டி என்ற பெயரில் இனவாதக்குழுவுடன் இணைந்து ஆயுதம் தாங்கிய குழு காரைதீவை முற்றாக கபளீகரம் செய்தது.

காரைதீவின் கல்விக்கு உலைவைக்க பல புத்திஜீவிகளை தேடியழித்தார்கள், எரியூட்டினார்கள். இக்கலவரத்தில் சுமார் 57பேர் பரிதாபகரமாக சொல்லப்பட்டார்கள். நியாயமான வீடுகள், வாகனங்கள், உடைமைகள் எரியூட்டப்பட்டன. பொருளாதார வளம் திட்டமிட்டு அழிக்கப்பட்டன. மீண்டும் மீண்டும் மக்கள் பட்டஅடிகள் பாரிய வடுவை ஏற்படுத்தின.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



காரைதீவு முன்னொருபோதும் கண்டிராத துன்பியல் வரலாறு 2004 டிசம்பர் 26இல் ஏற்படுத்தப்பட்டது. ஆம், தெற்காசியாவை தாக்கி இரண்டரை இலட்சம் பேரை பலியெடுத்த ஆழிப்பேரலை காரைதீவிலும் பாரிய அழிவை ஏற்படுத்தியது.

அம்பாறை மாவட்டத்தில் கல்முனை , சாய்ந்தமருதையடுத்து கூடிய பாதிப்பைச் சந்தித்தது காரைதீவுக் கிராமம் என்றால் மிகையாகாது. காரைதீவிலுள்ள 11 கிராம சேவையாளர் பிரிவுகள் சுனாமியால் முற்றாகப்பாதிக்கப்பட்டது. இங்கு 245 ஆண்களும், 578 பெண்களுமாக 823 பேர் சுனாமியால் கொல்லப்பட்டனர். 1869 வீடுகள் முற்றாகவும், 408 வீடுகள் பகுதியாகவும் சேதமடைந்தது. 287 வர்த்தகக்கடைகள் சேதமாகின.

05 கிலோப்பரப்பில் பிரதான வீதிகளும், 40 கிலோமீற்றரில் பிரதேச சபை வீதிகளும் முற்றாக சேதமாக்கப்பட்டன. 03 பாலங்கள் முற்றாகவும், 08 பாலங்கள் பகுதியாகவும், 06 தாம்போதிகள் முற்றாகவும் சேதமாக்கப்பட்டன. 62 ஏக்கர் வயல் நிலம் உப்பு சுனாமிநீர் ஏறி பாதிப்புக்குள்ளானது. 370 மாடுகளும், 114 ஆடுகளும் சுனாமியில் மூழ்கி இறந்தன. இதனால் 1668 குடும்பங்கள் பெரும்பாதிப்புக்குள்ளாகின.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



2134 கிணறுகள் மாசடைந்து பாதிப்புக்குள்ளாகின. 301 கிலோமீற்றர் குழாய்நீர் விநியோகமும் பாதிக்கப்பட்டன. மின்சார மையம், தொலைபேசி இணைப்புகளும் பாதிக்கப்பட்டன.

03 பாடசாலைகள் முற்றாகவும், 01 பாடசாலை பகுதியாகவும் பாதிக்கப்பட்டன. காரைதீவு பிரதான சுற்றயல் கூறு வைத்தியசாலை முற்றாக சேதமாக்கப்பட்டன. மேலும் வைத்திய சுகாதார அதிகாரி அலுவலகம், கிளினிக் நிலையம், பல் சிகிச்சை பிரிவும் சேதமாகின.

வணக்கஸ்தாபனங்கள் 06 முற்றாக சேதமாகின. 55 பொதுக்கட்டிடங்களும் பாதிக்கப்பட்டன. மேலும் கூடுதலான வாகனங்கள் சுனாமியில் அள்ளுண்டன. மக்கள் பலர் படுகாயமடைந்தனர். உடைமைகள் அழிக்கப்பட்டன.

சுனாமிப்பாதிப்பிற்கான மீளுகை என்பது பிரதேச செயலக வழிகாட்டலில் சிறப்பாக முன்னெடுக்கப்பட்டது. சுனாமி பாதித்து 05 வருடங்களாகின்ற வேளையில் நாட்டில் இன்னும் சில பகுதிகளில் உரிய வீடுகள், பாடசாலைகள் கட்டி முடிக்கப்படாத நிலை இருந்து வருகின்றது. ஆனால், காரைதீவில் சுனாமி மீளுகை என்பது துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வந்ததை இவ்வண் குறிப்பிடுதல் பொருத்தமானதாகும்.

இவ்வாறாக பல அனர்த்தங்களை சந்தித்த காரைதீவு மண், ஆத்மசக்தி, இறையாசிகள் மக்களின் தன்னம்பிக்கை, பெருமுயற்சி போன்றவற்றால் இன்றும் தலைநிமிர்ந்து உலகம் போற்றும் வண்ணம் மிளிர்ந்து வருகிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அலுவலக உத்தியோகஸ்தர்கள்



முன்வரிசை (இடம் இருந்து வலம்)

ஜானாப். எம். எப். எம். நதீர், திரு. ஆர். கனேசமூர்த்தி, திருமதி. கே. பாலகிருஷ்ணன், திரு. எம். அரசரெத்தினம், திரு. எஸ். இராமகிருஷ்ணன், திரு. எஸ். ஜெகராஜன், திருமதி. ஜெ. கணேசராஜா, திரு. இ. தவகுமார், திரு. எம். ஜீவராஜ், திரு. எஸ். மயில்வாகனம்,

நடுவரிசை

திருமதி. வை. நவயுகன், திருமதி. எஸ். சிவமகேஸ்வரன், திருமதி. ரீ. ரவீந்திரன், திருமதி. இ. உமாசங்கர், திருமதி. வீ. புலேந்திரன், திருமதி. பீ. விவேகானந்தன், திருமதி. எஸ். கணேசமூர்த்தி திருமதி. எஸ். மனோகரன், திருமதி. கே. சச்சிதானந்தம், திருமதி. ஜெ. நோயல், திருமதி. கே. தவராஜா, திருமதி. எச். வித்தியானந்தன், செல்வீ. கே. ராணி, திரு. கே. பேரின்பராஜா

பின்வரிசை

திரு. வி. அரவிந்தன், திரு. ஏ. ஏ. சீ. எம். நிஸாம், திரு. என். நடராஜா, திரு. கே. ஜெயசுந்தர், ஜனாப். எம். ஏ. எம். ஷீத், திரு. எம். வரதராஜன், திரு. எஸ். அமிர்தலிங்கம், திரு. எஸ். ரவீந்திரன், திரு. ராஜதீபன் திருமதி. எம். சுஜீவன், திருமதி. கே. சாரதாதேவி, திருமதி. ஆர். உதயநாதன், செல்வீ. உ. நிஷாந்தினி, திருமதி. வீ. தச்சிதானந்ம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பாரம்பரிய திருவெம்பாவை ஊர்வலம்

காரைதீவின்கண் பாரம்பரியமாக இடம் பெற்றுவரும் கலாசார அம்சங்களில் திருவெம்பாவை அதிகாலை ஊர்வலமும் ஒன்றாகும். 1967ஆம் ஆண்டில் இந்து சமய விருத்திச் சங்கம் தோற்றம் பெற்றகையோடு, இவ் அதிகாலை ஊர்வலம் உதயமாகியது. அமரர் ச.சரவணமுத்து வண்ணக்கரைத் தலைவராகக் கொண்ட இச்சங்கத்தின் பிரதான செயற்பாடாக இவ்வூர்வலம் விளங்கிற்று எனலாம். முதல், ஊர்வலத்தின் போது 'பிறிஸ்டல்' மட்டையை குழாய் வடிவில் சுருட்டி திருப்பள்ளியெழுச்சி பாட முன்னரே 'ரெட்ணப்பச்சியின்' லாம்பெண்ணெய் கரத்தையில் நடராஜர் படம் கொண்டு செல்லப்பட்டது. அதிகாலை 04.00 மணியளவில் ஆண்களும், பெண்களுமாக சுமார் 200 பேர் சேர்ந்து ஊலர்வலத்தில் ஈடுபடுதல் சந்தோஷமான நிகழ்வாக இருந்தது. சந்திக்குச் சந்தி இசைக்கச்சேரி வைப்பதும், திருப்பள்ளி எழுச்சி பாடல் இடையில் சிகண்டி அடித்து, சங்க ஊதுவதும் வழமையாகும். 'பெற்றோல் மெச்' ஒளி வெளிச்சத்தில் ஊரையே சுற்றிவருவர். சிலவேளை அடைமழைக்கு மத்தியிலும் ஊர்வலம் நடப்பது வியப்புக்குரியதே. நாள் ஒன்றுக்கு ஒரு கோயிலுக்குச் சென்று திருவெம்பாவை பாடி ஊர்வலம் நிறைவுக்கு வரும்.

இரண்டாம் வருடம் கல்முனையிலிருந்து விஜயா ரேடிங் சென்றரின் ஸ்பீக்கர் வரவழைக்கப்பட்டு திருப்பள்ளியெழுச்சி பாடப்பெற்றதும். சித்திர ஆசிரியர் அமரர் கார்த்திகேசு அவர்களால் வரையப்பட்டு பாரிய மட்டையில் வெட்டியெடுக்கப்பட்ட நடராஜர் திருவுருவப்படத்தை சுமந்து செல்வதும் ஊர்வலத்தை மேலும், களைகட்டியது. அமரர் இப்படம் இ.கி.மி ஆண்கள் பாடசாலையின் அருகிலுள்ள 'வேதநாயகம்' அவர்களின் வீட்டில் வைக்கப்படும். அங்கிருந்து ஊர்வலம் ஆரம்பமாகும். பின்பு ஸ்ரீகண்ணகையம்மன் ஆலயத்தில் உருவப்படம் வைக்கப்பட்டதனால் அங்கிருந்து ஊர்வலம் ஆரம்பமாயிற்று. 1998களில் நடராஜர் சிலையும் உருவாக்கப்பட்டு இன்றுவரை கொண்டு செல்லப்படுகிறது. காரைதீவைச் சேர்ந்த மூர்த்தி, ராஜு ஆகியோரின் ஒளிபெருக்கிகள் முற்காலத்தில் பயன்படுத்தப்பட குலசேகரம், குமரன், மகேந்திரன் ஆகியோரின் கரத்தைகள் பயன்படுத்தப்பட்டன. ஊர்வலத்தின் இடையே பரோபகாரிகள் நீராகாரம் வழங்குவர். திருவெம்பாவைக் காலம் என்றால் களைகட்டும் கிராமத்தில் மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. அதிகாலையிலே ஊர் விழித்து விடும். பத்தாம் நாள் திருவாதிரைத் தீர்த்தம் அலாதியானது. ஊரிலுள்ள சகல ஆலயத்தேர்களும் அணி சேர்ந்து தேரோடும் வீதி வழியாக ஊர்வலம் சென்று சமுத்திர தீர்த்தமாடுவது என்பது மறக்க முடியாத பாரம்பரிய கலாசார அம்சமாகி விட்டது.

1985, 1990களில் ஏற்பட்ட வன்செயல் காலங்களின் போது சிலவருடங்கள் இவ்வூர்வலம் தடைப்பட்டிருந்தது. சுனாமியின் பின்னரும் இரு வருடம் தடைப்பட்டது. இந்து சமய விருத்திச் சங்கத்தை பின்னர் டாக்டர் மா.பரசுராமன், எஸ்.அருட்சிவம் ஆகியோர் வழிநடாத்தி வந்து பொன்விழா கொண்டாடப்படும் இவ்வாண்டில் தலைமைத்துவம் திரு.வி.ரி.சகாதேவராஜா அவர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது. இச்சங்கம் முன்னர் வைகாசி குளிர்ச்சிக் காலத்தின் போது சிலப்பதிகார விழாவை நடாத்தி வந்தது. செயலாளராக திரு.அ.மாணிக்கவாசகர் சேவையாற்றி தற்பொழுது திரு.எஸ்.மணிமாறன் சேவையாற்றி வருகிறார். பொருளாளராக நீண்ட காலம் திரு.எஸ்.அம்பாரைக்குட்டி பணியாற்றி வருகிறார். தற்போது ஆட்டோவில் ஒலிபெருக்கி செல்ல, பின்னே சிலையுடன் ஊர்வலம் தொடரும். தற்போது ஆண்களே பெரும்பாலும் ஊர்வலத்தில் ஈடுபடுவதும் சமுத்திர தீர்த்தத்தை தவிர்த்து ஆலயத்திலே தீர்த்தம் இடம் பெறுகிறது. 1999இல் இடம் பெற்ற திருவாதிரை தீர்த்த உற்சவத்தின் போது 07 இளைஞர்கள் பலியானமை தெரிந்ததே. இத்திருவெம்பாவை ஊர்வலம் காரைதீவார் மத்தியில் பசுமரத்தாணி போல் பதிந்து விட்ட கலாசார அம்சமாகி விட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பிரதேச சித்தவைத்திய பாரம்பரியமும் அதன் சிறப்புகளும்



தகவல்கள்:-திரு.கதிரேசபிள்ளை சண்முகம்,
திருமதி.மோகனசுந்தரி பத்மநாதன்.

இப்பிரதேசம் கலை, கலாசார, பண்பாட்டு ரீதியான செயற்பாடுகளில் சிறப்புமிக்க தாக காணப்படுவது போன்றே சுதேச வைத்தியத்திலும் பெயர் பெற்ற வைத்தியர்கள் பண்டுதொட்டு இருந்து வருகின்றனர். ஆயுர்வேத முறைப்படியான மூலிகை வகைகளில் பக்கவிளைவுகளற்ற நோய் எதிர்ப்பு சக்தியும், உடல் ஆரோக்கியத்திற்கான தாதுப்பொருட்களும் அடங்கியுள்ளதால் இவ்வைத்தியம் பன்னெடுங்காலமாக வழக்கத்திலிருந்து வருகின்றது. 'ஆயு' என்றால் வாழ்வையும், 'வேத' அறிவையும் குறித்து நிற்கின்றது. இதன் தத்துவம் வாதம், பித்தம், கபம் என்று எமது உடம்பில் மூன்று வகையுண்டு. இந்த மூன்றும் உடம்பில் சீராக இருந்தால்தான் ஆரோக்கியமானவர்கள் என்றும், இவற்றில் ஏதாவது ஒன்று சீர்குலைந்திருக்குமானால் மனிதனுக்கு உடம்பில் நோய் இருக்கின்றது என்றும் அர்த்தம் கொள்ளலாம்.

இந்நாட்டு வைத்தியத்துறையை எடுத்துப் பார்ப்போமானால் இவ்வூரில் முதலாவது ஆயுர்வேத வைத்தியராக எள்ளுப்போடி மயிலிப்போடி என்பவரே இருந்துள்ளதாக அறியமுடிகின்றது. இவர் இவ்வைத்தியத்தில் கைதேர்ந்தவராகவும், சிறந்த கைராசிக்காரராகவும் விளங்கியுள்ளார். மக்களின் பெருமதிப்பை அக்காலத்தில் இவர் பெற்றிருந்தால், 'மயிலன்பரிகாரி' என அழைக்கப்பட்டு வந்தார். இவர் இக்கிராம மக்களுக்கு மட்டுமன்றி அயற்கிராமங்களான ஒலுவில், பாலமுனை, சாய்ந்தமருது போன்ற கிராம மக்களுக்கும் வைத்தியப் பணிபுரிந்து காரைதீவின் முதுபெரும் ஆயுர்வேத வைத்தியராகத் திகழ்ந்தார்.

இவரின் வைத்தியப் பணியினை இவருக்குப் பின் இவரின் சகோதரியான அன்னம்மாவின் மகனும், அவரது மூத்தபுதல்வின் கணவரான வைரமுத்து கதிரேசபிள்ளையும் தொடர்ந்து செய்து வந்தனர். இவர் இளம் வயது முதலே தனது தாய்மாமன் மயிலன்பரிகாரி அவர்களுடன் வாழ்ந்து வந்ததால், வைத்தியம் தொடர்பான நல்ல அனுபவத்தினைப் பெற்றுக் கொண்டார். தனது மாமனாரின் வழிகாட்டலுடன் தனது தேடலின் மூலமும் ஆயுர்வேத வைத்தியம் தொடர்பான பலம்பெரும் நூல்களான அங்காதி, பாதம், குணவாகடம், பதார்த்த குண சிந்தாமணி, குறுநாடி சாஸ்திரம், புலிப்பாணிமுனிவர் வைத்தியம் வாத, பித்த, சிலேற்பன நிலையறிதல், சுவாச நிலையறிதல் (இடகலை, பின்கலை, சுளுமுனை) தொடர்பான ஞானசரநூல் சாஸ்திரம், உடற்கூற்று வண்ணம் போன்ற பல்வகை நூல்களையும் கற்று பாண்டித்தியம் பெற்றிருந்தார்.

இவர் தன்னிடம் வரும் நோயாளி ஒருவரின் கைபிடித்துப் பார்த்தல் மூலம் அவரது நோயின் அறிகுறிகளைக் கொண்ட சித்தர்களின் பாடலைப் பாடிக்காட்டி அதன் பொருளை அவர்களுக்கு விளக்குவார். அதுமட்டுமல்ல அதற்குறிய வைத்திய மருந்துகளைத் தயாரிக்கும் முறை பற்றிய பாடலையும் பாடிக்காட்டி, அதன் விளக்கத்தையும் எடுத்துக்கூறுவார். இவர் தமிழ் மொழியில் மட்டுமல்ல சிங்கள மொழியிலும் தனது வைத்தியப்பாடலின் பொருளை எடுத்துரைத்து, சிங்கள மக்களினதும் பாராட்டைப் பெற்றிருந்தார். இவர் ஆயுர்வேதக் கல்லூரியில் 'சர்வரோக' வைத்தியத்துறைப் பரீட்சையில் சித்திபெற்றிருந்தார். ஆயுர்வேதத்துடன் சேர்த்து மாந்திரீகத்துடன் கூடிய விஷக்கடி வைத்தியம், சுளுக்குப்பார்த்தல், விஷம் இறக்குதல் போன்றவற்றிலும் வல்லவராக இருந்தார். இவரின் பின்னர் இவரின் வாரிசாக இவரது புதல்வர் ஒருவரை உருவாக்க வேண்டும் என இவர் எண்ணியிருந்த போதும் அது நிறைவேறாமல் போனது அவருக்கு கவலையை அளித்த ஒரு விடயமாக இருந்தது.இப்பிரதேசத்தில் சித்த வைத்தியத் துறையை மேலும் பிரகாசிக்கச் செய்ய இன்னுமொருவர் என்றால் எல்லோராலும் 'சிறுபிள்ளை வைத்தியர்' என்று அழைக்கப்பட்டு வந்த இளையதம்பி வைத்தியராவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுமார் 78 வருடங்களுக்கு முன் ஆரம்பிக்கப்பட்ட இவரது சித்த வைத்திய சேவை தனியான ஒரு வைத்திய நிலையமாக "இ.எம்.சித்த ஆயுர்வேத வைத்தியசாலை" என்ற பெயருடன் சேவையைத் தொடர்வதனைக் காணமுடிகின்றது. தற்போது இவரின் பேரப்பிள்ளைகளான திருமதி.மோகனசுந்தரி பத்மநாதன், திரு.மார்க்கண்டு ஜெயநாதன் இருவராலும் நடத்தப்பட்டு வருகிறது இளையதம்பி வைத்தியர் அவர்கள் சித்தர்களாலும், முனிவர்களும் அருளிச்செய்யப்பட்ட ஏட்டுச் சுவடிகளைக் கொண்டு தனக்கே உரித்தான பாணியில் வைத்தியம் செய்து வந்தார். 1968இல் ஆயுர்வேத வைத்தியசபையில் இவரது வைத்திய சேவை பதிவு செய்யப்பட்டது. குழந்தைகளுக்கு ஏற்படும் சகல நோய்களையும் குணமாக்குவதில் கைதேர்ந்தவர். இதனால் இவரை நாடி வந்து வைத்தியம் பார்க்க எவருமே பின்னின்றதில்லை. தன்னுடைய வைத்தியம் தன்னுடனே மறைந்து விடக்கூடாது என்று தனது மூன்றாவது மகனான மார்கண்டு வைத்தியர் அவர்களை இத்துறைக்குள் இழுத்து அவரை ஊக்கப்படுத்தி அதில் ஈடுபடாடடையச் செய்தார். தந்தையாரின் பாணியிலேயே தானும் வைத்தியத்தை பின்பற்றியதால், பிரபல்லியமடைந்ததுடன், 1974இல் இவரது பெயர் ஆயுர்வேத வைத்திய சபையினால் பதிவு செய்யப்பட்டது. தான் தயாரிக்கும் மருந்துகளில் பிழைகள் ஏற்பட்டுவிடக்கூடாது என்பதற்காக வைத்தியத்துக்கு தேவையான மூலிகை வகைகளை தானே தேடி எடுத்து மருந்துகள் தயாரிப்பார். இவர் எல்லா நோய்களுக்கும் சிகிச்சையளித்தாலும் குழந்தை வைத்தியத்தில் கைராசிக்காரராக திகழ்ந்தார். குழந்தைகளுக்கு ஏற்படும் மாந்தம், சளி, கிரந்தி போன்ற நோய்களுக்கு கைகண்ட மருந்துகளை தானே தயாரித்து வழங்குவார். பல கிராமங்களிலிருந்தும் சகல இனமக்களும் வைத்தியம் பார்க்க இவரை நாடி வருவது ஆங்கில வைத்தியத்தால் குணமாக்க முடியாத சில நோய்களை இவர் குணமாக்கிப் பெயர் எடுத்தவர் என்பதினாலாகும். இவ்வாறு 37 ஆண்டுகள் வைத்திய சேவை செய்த மார்க்கண்டு வைத்தியர் அவர்கள் இதனை அழியாது பாதுகாத்துத் தொடர்ந்தும் முன்கொண்டு செல்லும் நோக்கில் தான் வாழ்ந்த காலத்திலேயே தனது மூத்த புதல்வியான திருமதி மோகனசுந்தரி பத்மநாதன் அவர்களை ஆயுர்வேத மருத்துவக்கல்லூரியில் படிக்க வைத்து, டிப்ளோமா பட்டம் பெற வைத்து, இன்று அவரை ஒரு அங்கீகாரம் பெற்ற வைத்தியராக ஆயுர்வேதத்துறையில் உருவாக்கியுள்ளார். மூலமாக சேவை தொடர்ந்தும் நடைபெறுகிறது.

இக்கிராமத்தில் சித்தவைத்தியத்தில் பெயர்பெற்று விளங்கிய இன்னுமொரு வைத்தியர் என்றால் மாளிகைக்காட்டைச் சேர்ந்த முத்தலிபு வைத்தியராவார். இவரும் சகல மக்களுக்குமான மருந்துகளை மூலிகைகளைக் கொண்டு தயாரித்து வழங்கி மக்கள் மத்தியில் மிகவும் பிரபல்லியம் பெற்ற ஒருவராக விளங்கினார். 'முத்தலிபு வைத்தியசாலை' என்ற பெயரில் வைத்தியசாலை அமைத்து தற்போது அவரது மகனான ஜனாப். றசாக் அவர்கள் இவ்வைத்திய சேவையினை வழங்கி வருகிறார்.இவைதவிர இக்கிராமத்தில் 'விஷ' வைத்தியத்துறையில் காலஞ்சென்றவர்களான திரு.க.கந்தவனம் (மயில்வாகனம் ஆசிரியர்) திரு.சிவசம்பு தட்சணாமூர்த்தி ஆசிரியர், திரு.செல்லப்பா இராசையா போன்றோர் பிரபல்லியம் பெற்று விளங்கியதுடன், சுளுக்கு பார்த்தல், நாவூறு, திருஷ்டி கழித்தல் போன்ற இன்னோரன்ன சேவைகளையும் புரிந்து வந்துள்ளனர். காலஞ்சென்ற கதிகாமத்தம்பி ஆசிரியர் அவர்களும் சிலகாலம் மூலிகை வைத்தியம் தொடர்பாக தன்னாலான பங்களிப்பை இக்கிராம மக்களுக்கு நல்கியிருந்தார். தற்போதுள்ளவர்களில் திரு.அருமைத்துரை அவர்கள் முறிவு வைத்தியமும், திரு.சீனித்தம்பி செல்லத்தம்பி (செல்லப்பா) அவர்கள் விஷ வைத்தியமும், மாவடிப்பள்ளியைச் சேர்ந்த ஜனாப்.மீராசாய்வு யாசீன்பாவா அவர்கள் சித்த வைத்தியமும் செய்து வருகின்றனர். "நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்பது போல நோய் வந்த பின் அதன் குணம் குறிகளை அறிந்து அந்நோய்களை குணமாக்கும் சக்தி படைத்த மனிதர்கள் தொடர்ந்தும் இக்கிராமத்தில் உருவாக வேண்டும். எமது பாரம்பரிய முறை வைத்தியமான சித்த வைத்தியம் 'வாழையடி வாழையாக பாதுகாக்கப்பட வேண்டும்'. 'நல்லதையே செய்வோம் நலமாக வாழ்வோம்'..


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காரைதீவுப் பிரதேசத்தின் நூலக வளர்ச்சி



போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் ஆகிய மேல்நாட்டார் நம்நாட்டைக் கைப்பற்றி அரசாண்ட காலத்தில் அவர்களின் நோக்கம் மொத்தத்தில் இந்நாட்டின் வளங்களைச் சுரண்டுவதும் தங்களுக்குத் தேவையான பயிர் வகைகளை இங்கு உற்பத்தி செய்து தமது நாட்டுக்குக் கொண்டு செல்வதுடன், தத்தமது மதங்களைப் பரப்புவதிலுமே கண்ணுங்கருத்துமாயிருந்தனர். இறுதியாக வந்த ஆங்கிலேயரிடம் மட்டுமே கல்விசார் நடவடிக்கைகளை ஏற்படுத்துகின்ற மனப்பாங்கை ஒரளவு காண முடிகிறது. அவர்கள் சில பாடசாலைகளை அமைத்து ஆங்கில மொழி மூலம் அவர்களின் நிருவாக சேவைகளுக்கான தேவையை நிறைவு செய்வதனர். அவ்வேளை ஆங்கில எழுத்துகளை அழகாக அச்சுருவில் எழுதமுடிந்த புத்தி ஜீவிகளை உருவாக்கினர். இதையடியொற்றியே வாசிப்படன் சம்பந்தப்பட்ட சிந்தனைகள் நாட்டு மக்களிடம் துளிர்விட்டன எனலாம். 1948இல் சுதந்திரம் வழங்கப்பட்டபின் சில வாசிகசாலைகள் உருவாகியுள்ளமை தெளிவானது. முதன் முதலாக இப்பிரதேசத்தில்,

**காரைதீவு "நேரு"வாசிகசாலை:-**

1949இல்பதிவு செய்யப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து வாசிப்பினடிப்படையில் ஏனையவை பரவலாக இப்பிரதேசத்தில் உருவாக்கம் பெற்றதும், இன்றும் வளர் நிலையில் வாசிப்புப் பழக்கத்தின் தொடர்ச்சியை முன்னேடுத்துச் செல்வதையும் காண்கிறோம். திரு.கே.சாமித்தம்பி தலைவராகவும், திரு.கே.சின்னராசா செயலாளராகவும் தொழிற்படு உறுப்பினர்களாக திரு.கே.உலகசேகரம், திரு.கே.துரையப்பா, திரு.எஸ்.ஏ.எம்.அழகையா ஆகியோருடன் 16 உறுப்பினர்களைக் கொண்டதாக நேரு வாசிகசாலை ஆரம்பமானது. இதனை நடாத்துவதற்கான நிதியை வீடுவீடாகச் சென்று 'எண்ணெய்ச்சிந்து' பாடிச் சேகரித்து தினகரன், ஈழகேசரி, நவயுகம், சுதந்திரன் ஆகிய பத்திரிகைகளை வாங்கி வாசிப்பை ஊக்குவித்தனர். அப்போது தபாற்தந்தித் திணைக்களம் வாசிகசாலைகளுக்கு பெரியதொரு வானொலிப்பெட்டி வழங்கிய வழமையில் இதற்கும் ஒரு வானொலிப்பெட்டி கொடுக்கப்பட்டது. அந்நாட்களில் ஊரிலுள்ள படித்தவர்களும், மாணவரும் இங்கே வந்து வாசித்தும், வானொலி கேட்டும் சென்றதுண்டு. இந்த வாசிகசாலைக்கான நிலத்தை பாலையடி ஸ்ரீ பாலவிக்னேஸ்வரர் ஆலய நிருவாகம் ஒரு ஒப்பந்தத்தில் வழங்கியது. சனசமூக நிலையம் இயங்காத பட்சத்தில் ஆலயம் நிலத்தை எடுத்துக் கொள்ளும்'' என்பதே ஒப்பந்தமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடைக்காலத்தில் ஒரு பிரமுகர் நிலையத்தில் இருந்த வானொலிப் பெட்டியைத் தனது வீட்டுக்கு எடுத்துச் சென்றதும் அதை மீண்டும் பெற்றுக்கொள்ள மிகப்பிரயத்தனப்பட வேண்டியிருந்தது. இறுதியில் சட்டரீதியான நடவடிக்கை மூலம் அதனை மீண்டும் நிலையத்துக்கு கொண்டு வந்து வைத்தனர்.1974இல் அப்போதைய ஆலய திருத்த வேலைக்கு பணம் தேவைப்பட்ட காரணத்தால், சனசமூக நிலையத்தை அகற்றி விட்டு வளவைத் தரும்படி ஆலய நிருவாகம் கேட்டது. அதனை அப்போதிருந்த நிருவாகத்தினர் ஒருமித்து நின்று, எதிர்த்ததில் அம்முயற்சி தடுக்கப்பட்டு நிலையம் இயங்கி வந்துள்ளது. 1957ஆம் ஆண்டில் பெருவெள்ளம் 1978ஆம் ஆண்டின் சூறாவளி ஆகிய இயற்கை அனர்த்தங்களோடு அழியாமலும் விடுபடாமலும், செயற்கையான சில செயல்களால் தோய்ந்துபோகாமலும் இன்று அறுபதாமாண்டின் "வைர விழாவை" இச்சனசமூக நிலையம் கொண்டாடுகின்றது.

### காரைதீவு விவேகானந்தா சனசமூக நிலையம்:-

சாமித்தம்பிப் போடியார் திரு.கே.கே.ஆறுமுகம் ஆகிய இருவரையும் முறையே தலைவர், செயலாளர் பதவிகளில் அமர்த்தி நேரு சனசமூக நிலையத்திலிருந்து பிரிந்து வந்த சிலரால் இந்த நிலையம் (தற்போதைய தேசிகர் வீதியில் 08ஆம் பிரிவில்) 1949இல் ஆரம்பிக்கப்பட்டு மிகச்சிறப்புற நடாத்தப்பட்டது. அந்நாளில் அரசினால் வழங்கப்பட்ட சிறுநன்கொடை மூலம் பத்திரிகைகள் வாங்கி வாசகர்களை உருவாக்கி கூட்டுறவுத்தன்மையை வளர்த்துள்ளது. சுதந்தரன், தீப்பொறி, தினகரன், தினபதி, சிந்தாமணி ஆகிய பத்திரிகைகள் வாசிப்புக்கு இருந்தன. இந்நிலையத்தில் மிகஊக்கமும், விவேகமும், கலைஇலக்கியச் சிந்தனையும் இணைந்திருந்த உறுப்பினர் மூலம் சில ஆக்கபூர்வமான செயற்பாடுகள் நிறைவேறி வந்துள்ளன. இந்நிலையத்தின் மூலம் "அறிவாளி", "விவேகி" ஆகிய கையெழுத்துப் பத்திரிகைகளை நடாத்தி இளைஞர் மத்தியில் எழுத்தாக்க உணர்வு ஊட்டப்பட்டது. அத்துடன் நடிப்பாற்றலில் திறமையுள்ள உறுப்பினர்களைக் கொண்டு "பொற்கிளி", "அம்பிகாபதி", "மனமேகோயில்" "கூலிக்குக் கட்டியதாலி" ஆகிய நாடகங்கள் பல இடங்களில் இந்நிலையத்தின் பெயரால் நடிக்கப்பட்டு, பல பரிசில்களும் பெறப்பட்டன. அந்நாளில் பிரபலம் பெற்ற "யூனிக்" றேடியோ கூட இந்நிலையத்திற்கு நாடகப்பரிசிலாய் கிடைத்தமை பெரிய விடயமாகும்.

கால ஓட்டத்தில் புதிய அங்கத்தினரின் இணைவு இல்லாததாலும், நடாத்தி வந்த அங்கத்தினர், தொழில் விடயம் காரணமாக விலகியதாலும், பயங்கரவாத நிகழ்வுகளால் கூட முடியாததாலும் 1974 இல் விவேகானந்தா ச.ச.நிலையம் தூர்ந்து போகக் காரணமாயிற்று.

### விபுலானந்த பொது நூலகம்:-

இந்தப் பிரதேசத்திற்கு நூலகம் ஒன்று இல்லாத குறையை அப்போதிருந்த அறிவறிந்த மொழியார்வம் மிக்க இலக்கிய ஆர்வலர் அனைவரும் கிராமச் சபைத் தலைவரும் கூடி ஆராய்ந்து, கிராமசபையின் அபிவிருத்திக்கான நிதியில் சேகரித்தெடுத்த பணத்தில் கட்டடத்தை கட்டி முடித்தனர். நூல்களை ஊரிலுள்ள கற்றோர் பலரிடமும் சென்று பெற்றனர். இதில் முக்கிய பங்களிப்பைச் செய்தவர் காலஞ்சென்ற ஆசிரியர் சுப்பிரமணியம் ஆவார். குறித்த நூலகத்தின் பெயரையும் தெரிவு செய்த பின் கி.ச.தலைவர் திரு.இ.வினாயகமூர்த்தி அவர்களின் தலைமையில் உள்ளூராட்சி ஆணையாளர் திரு.மாணிக்கவாசகர் மூலம் நூலகம் திறந்து வைக்கப்பட்டது. முதலாவது நூலகராக தி.க.வேல்முருகு நியமிக்கப் பட்டார். இந்த நிகழ்வு 1959.07.26இல் நிகழ்ந்தது. இந்நூலகத்தின் வளர்ச்சி படிப்படியாக வளர்ந்து வந்தது. வாசிப்பில் வாசகர் காட்டி வந்த ஆர்வம் காரணமாக இதனை மேலும் விரிவுபடுத்த வேண்டிய தேவை அவ்வப்போதிருந்த நிருவாகிகளால் ஏற்படுத்தப் பட்டிருந்தன


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னர் இது 'விபுலானந்த மத்திய நூலகம்' எனப்பெயர் சூட்டப்பட்டு ஏராளமான நூற்றொகுதிகளை உள்ளடக்கி வைக்கப்பட்ட நாள் 1969.04.14 ஆகும். அன்று தான் நூலகம் மீண்டுமொரு திறப்பு விழாக்கண்டது. திரு.இ.வினாயகமூர்த்தி கி.ச.தலைவர் அவர்கள் அப்போது உள்ளூராட்சி அமைச்சராக இருந்த திரு.மு.திருச்செல்வம் அவர்களை நூலகம் திறப்பதற்கு அழைத்திருந்தார். மட்டக்களப்புக்கு வருகை தந்திருந்த அமைச்சர் தனது சுகயீனம் காரணமாக இங்கு வரமுடியாதெனக் கூறி அவரது நிறைவேற்றுப் பொறுப்பாளர் அவர்கள் மூலம் நூலகம் திறந்து வைக்கப்பட்டது. நூலகத்தின் வளர்ச்சியும், தேவையும் அதிகரிக்க நூல்களின் தொகையும் நிரப்பப்பட்டன. பழைய இலக்கியங்கள், இந்து சமய நூல்கள், விஞ்ஞான ஆய்வு நூல்கள், உள்நாட்டு, இந்திய நாட்டுப்பத்திரிகை, சஞ்சிகைகள் வாசிப்புக்கு இருந்தன. இவற்றை இங்கே வாழ்கின்ற மூத்த தலைமுறையினர் கூடுதலாக அனுபவித்தனர்.

வளர்ந்தோருக்கான நூல்கள் மட்டுமே இங்கு இருந்ததால் இதன் வடபுறத்தில் இருந்த நிலப்பகுதியில் ஒரு புதிய கட்டடம் அமைத்து 'சிறுவர் நூலகம்' ஒன்றை அதில் திறக்க ஏற்பாடுகள் நிகழ்ந்தன. இது 23.12.1975இல் உள்ளூராட்சி பிரதி ஆணையாளர் திரு.ஜீ.எல்.பீ.சில்வா அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. அங்கே சிறுவர், மாணவர், குழந்தைகளுக்கான கதை நூல்கள், மொழிநூல், கல்விசார் நூல்கள் போன்றவற்றுடன் அவர்களுக்குத் தேவையான வாசிப்பறிவைப்பெற அனைத்து வயதினரும் இங்கு வந்து போயினர். 1978.11.24ஆந் திகதி ஏற்பட்ட சூறாவளி அழிவின் பின்னரும் கூட இந்நூலகத் தொகுதி பிரதான வீதியில் அரசமர நிழலில் பின்னே விழ நிமிர்ந்து நின்று மேன்மை குலையாமல் சேவை தொடர்ந்ததை அனைவரது மனங்களிலும் இன்னமும் பதிவுபட்டுள்ளது.

1985ஆம் ஆண்டு காரைதீவுக்கு ஏற்பட்ட பயங்கரவாதத்தை மையமாகக் கொண்டு சமூகங்களுக்கிடையே தூண்டப்பட்ட அழிமதியிற்கூட இந்நூலகம் எவ்வித பாதிப்பும் ஏற்படுத்தப்படாமல் இருந்தது. பின்னர் 1990இல் ஏற்பட்ட இரண்டாவது தாக்குதலில் 1990.06.21இல் இது மிகக்கடுமையான சேதத்திற்குள்ளாக்கப்பட்டது. நூலக நூல்கள், சஞ்சிகைகள் பிரதான வீதியில் கூட அள்ளிவீசப்பட்டுக் கிடந்தன. அந்தளவுக்கு கல்வியிற்கூட கோபப்படும் ஒரு வெறிச்செயலாக அது காணப்பட்டது. புத்திஜீவிகளை அன்று இயக்கங்கள் கொன்றது போன்ற செயலை அது ஞாபகப்படுத்தியது. 1990.09.05ஆந் திகதி வரை அந்நூலகம் பாவிக்கப்படவில்லை. பின்னர் அங்கு மீதம் கிடந்த நூல்களை இந்த நாளில் எடுத்துவந்து முதலாம் பிரிவு ப.நோ.கூ.ச கட்டிடத்தில் வைத்துப் பாதுகாத்தனர். அதன்பின்னர் 1994.05.05இல் பழைய வைத்தியசாலைக் கட்டிடத்திற்கு (இப்போது ஆயுர்வேத வைத்தியசாலை) மாற்றப்பட்டு ஓரளவு உயிரூட்டம் கொடுக்கப்பட்டு, அதனை எவ்விதம் வேறு ஒரு கட்டிடம் கட்டி மேல்நிலைக்கு கொண்டுவரலாம்? என நூலகரும், நூலகக்குழுவினரும் சிந்தித்த வேளையில் சுனாமி வந்து அந்த சிந்தனை தடைப்பட்டது. ஆனால் நூலகம் இருந்தது. சுனாமிக்குப்பின் வந்த வெளிநாட்டு நிறுவனங்கள் பல தேவைகளை நிறைவேற்ற முன்வந்ததன் பேரில் அமெரிக்க மக்களின் நன்கொடை*(USAID)* என்ற நிறுவனம் செய்து கொடுத்த மிகப்பெரிய இருமாடிக்கட்டிடத்தில் 2008.01.23இல் பொதுநூலகத்தில் இந்நூல்கள் குடிபுகுந்தன. அவை பெற்ற பிள்ளைகளாக இன்று பல்லாயிரம் நூல்கள் பெருகி படிப்பகமாக பரிணமிப்பதைக் காண வேதனை குறைகிறது. நெஞ்சங்கள் சலிக்காமல் வாசிப்புத் தேவையை நிறைவேற்றுகின்றது.தற்போது இக்கட்டிடத்தொகுதியின் நிருவாகம் காரைதீவு பரிமாணத்தின் ஒருபகுதியை நிறைவு செய்துள்ளமை தெளிவு. இங்கே தற்போது உசாத்துணைப்பகுதி, சிறுவர் பகுதி, இரவல் பகுதி, வாசிப்பு பகுதி, கேட்போர் கூடம், கணணிப்பகுதி, களஞ்சியப்பகுதி எனப்பரந்து காணப்பட நூலகர் இருவர், உதவி நூலகர் ஒருவர், பதில் நூலக உதவியாளர் ஒருவர், நூலகத்தொழிலாளர் ஒருவர், காவலாளி ஒருவர் என நிறைந்த சேவையுடன் நிமிர்ந்துள்ளது. "அன்றைய நூலகம் இன்றைய (1990 பின்) அதிரடிப்படை முகாமின் ஒருபகுதி)யாக எவரும் போகமுடியாத சிறைக்குள் அமர்ந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விஷ்ணு சனசமூக நிலையம்:-

காரைதீவு 07இல் 1980 ஆம் ஆண்டு க.கந்தசாமி அவர்களின் வளவில் எவ்வித நிபந்தனையும் இன்றி இச்சனசமூக நிலையம் திரு.இ.ஏகாம்பரம், திரு.குமார்-அருமைத்துரை, திரு.சண்முகம் ஆகியோர் முறையே தலைவர், செயலாளர், பொருளாளர் பதவிகளில் இருந்து 30 அங்கத்தினருடன் இயங்க ஆரம்பித்தது. அப்போது ஒவ்வொரு உறுப்பினரும் சுற்றுவட்டத்தில் பத்திரிகைகளை வாங்கி வழங்கி வாசிப்பை ஊக்கப்படுத்தினர்.

இக்காலகட்டத்தில் செயலாளரின நெறியாளுகையில் "முத்தமிழ்மன்றம்" நிலயத்தில் ஏற்படுத்தப்பட்டு அதன் மூலம் "புயலுக்குப்பின்", "முத்தழகி", "கலையும்கண்ணீரும்", "அனார்கலி", "குமணன்", "சிங்கப்பூர் சுப்பன்" ஆகிய 06 நாடகங்கள் ஊரின் பல இடங்களில் மேடையேற்றப்பட்டன. இடைக்காலம் ஐந்தாண்டுகள் இது இயங்காமல் இருந்தது. அதன்பின் மில் உரிமையாளர் சுந்தரலிங்கத்திடம் ஒரு அறையைப்பெற்று நிலையம் இயங்கி வந்தது. தற்போது அதே இடத்தில் ஒரு மாடிக்கட்டிடம் கட்டப்பட்டு அங்கே செயற்பட்டு வருகிறது..

## விபுலானந்தா சனசமூக நிலையம்

இளைஞர்களிடையே வாசிப்புத் திறனை விருத்தி செய்து பொது விடயங்களை மக்களிடையே கொண்டு செல்லும் நோக்கில் இச்சனசமூக நிலையம் காரைதீவு விளையாட்டுக் கழக உறுப்பினர்களால் ஏற்படுத்தப்பட்டது. கிராம உத்தியோகத்தர் காணி உத்தியோகத்தர் ஊடாக பிரதேச செயலாளரின் அனுமதியுடன் கரைச்சையின் ஒரு பகுதி நிரப்பப்பட்டது. 1996ஆம் ஆண்டு வைகாசி மாதம் கல்யாணக்கால் நாட்டும் நாளில் இதன் ஆரம்பம் நிகழ்ந்தது. பழைய கட்டிடங்கள், உடைந்த கற்சிதைவுகளும், களிமண் என்பவற்றால் நிரப்பிய இடத்தில் கிடுகுகள் நாணற்புட்கள், மட்டைகளால் சிறு குடிசையில் இது ஆரம்பத்தில் காட்சியளித்தது. புதிய கட்டிட அடிக்கல் நாட்டு விழா 1997.09.27ஆந் திகதி நிகழ்ந்தது. 1997ஆம் ஆண்டில் புதிய கட்டிடத்திறப்பு விழாவின் பின் விபுலானந்த சனசமூக நிலையம் நிமிர்ந்து நிற்கின்றது. இக்கட்டிட நிதி நன்கொடையாக பிரதேச செயலகம் 250000.ரூ வழங்கியது பெருமைக்குரிய விடயமாகும். இதன் ஆரம்பத்தலைவர் திரு. வி.ரி.சகாதேவராஜா, செயலாளர் திரு. கே.ரவிச்சந்திரா, பொருளாளர் திரு.ரி.புவனராஜா என்போர் பொறுப்புடன் உயர்வுக்குப் பாடுபட்டனர். காரைதீவு விளையாட்டுக் கழகத்திலிருந்து தனிப்பட்ட நிருவாகச் செயலணி ஒன்று இதனை நிருவகித்து அமர்த்தப்பட்டாலும், அதன் கண்காணிப்பு தொடர்வது சிறப்பம்சமாக உள்ளது. இது ஆரம்பமான பொழுதில் விளையாட்டுக் கழகத்தலைவர் திரு.வி.ரி.சகாதேவராஜா அவர்கள் கூடிய முயற்சி எடுத்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. இந்நிலையம்நமது கலை, கலாசாரங்களுக்கும், கல்விக்கும், சமூகத்தேவைகளுக்கும், விஷேட தினக் கொண்டாட்டங்களுக்கும் தன்னை அர்ப்பணித்துள்ளமை தெளிவானது. இதற்கான பத்திரிகைகளை பிரதேசசபையின் பொது நூலகமும், வேறு சில பத்திரிகைகளை ஊரின் நல்லெண்ண அன்பர்களும் விபுலானந்தா கல்வி அகமும் வழங்கின. அத்துடன் சுமார் நூற்றுக்குமேற்பட்ட நூல்களும் இங்கு வாசிப்புக்கு இருந்தன. சுனாமிப் பேரலையால் இங்கிருந்த நூல்கள், ஆவணங்கள் அழிவுற்றன. பின்னர் காரைதீவு விளையாட்டுக்கழக உறுப்பினர் அரசசார்பற்ற நிறுவனங்கள் மூலம் நிலையம்புத்துயிர் பெற்றது. பத்திரிகைகள், நூல்கள் தவிர, கரம், டாம், செஸ் போன்ற உள்ளக விளையாட்டுக்களும் இந்நிலையத்தில் பயிற்றுவிக்கப்பட்டு சுற்றுப்போட்டிகளும் நடாத்தி பரிசில்களும் வழங்கப்பட்டுள்ளன. சிரமதானங்கள், தீர்த்த உற்சவத்தின் போது நீராகாரம், வருடாந்த சரஸ்வதிப்பூசை ஆகிய நன்நோக்கு விடயங்கள் நிலையத்தால் வழங்கப்பட்டுவருகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புளோட் அமைப்பு, தமிழர் விடுதலைக் கூட்டணி, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, தேசிய பேரவை உறுப்பினர் திரு.க.பத்மநாதன் ஆகியோர் தத்தமது நிலைமைக்கமைய இந்நிலையத்திற்கு நிதியுதவிகள் வழங்கி ஊக்குவித்துள்ளனர்.போஷகர்களாக திருவாளர்கள் வி.ராஜேந்திரன், ஆர்.சண்முகநாதன், எஸ்.இராமகிருஷ்ணன் ( பி.செ) ஆகியோர் அமர்ந்து வழிகாட்டியுள்ளனர். தற்போது இதில் உறுப்பினர்களாக 180 பேர் அங்கம் வகித்து இந்நிலையத்தின் தொழிற்பாட்டுக்கு உறுதுணையாக இருக்கின்றனர்.

## காரைதீவு கண்ணகி சனசமூக நிலையம்

காரைதீவு விவேகானந்தா விளையாட்டுக்கழக உறுப்பினர்களின் ஒன்றுபட்ட கருத்துக்களில் ஒன்றாக இந்நிலையம் உருவாக்கம் பெற்றது. நிலத்தை காரைதீவு ஸ்ரீகண்ணகையம்மன் ஆலய தர்மகர்த்தாக்களும் நிருவாகத்தினரும் வழங்கினர். இது 1996.07.06ஆம் நாள் அடிக்கல் நாட்டப்பட்டு ஓலைக் கொட்டிலில் பிறப்பெடுத்தது. இதிலிணைந்த உறுப்பினர்களின் துடிப்பான முயற்சியால் இன்று வரை வளர்ச்சி கண்டுள்ளது. ஆரம்பத்திலிருந்தே பிரதேச சபையின் பத்திரிகைகளும், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் உபயமாக இந்தியப்பத்திரிகைகளும், இராமகிருஷ்ண சங்கத்தின் அறநூல்களும் பிரதேச சபை உறுப்பினர்களான திரு.கு.மகாலிங்கசிவம், திரு.பி.ரி.தர்மலிங்கம் ஆகியோர் முறையே சுற்றுமதிலும், தளபாடங்களும் வழங்கி இதன் பெறுமதியை உயர்த்தினர். 60க்கும் மேற்பட்ட அன்பர்கள் நிதியுதவியும் வழங்கியுள்ளனர். முதலாவது தலைமையை திரு.வி.ஜெயசுந்தரம் ஏற்க, திரு. து.யோகநாதன் செயலாளராக இணைந்து நின்று இதன் முயற்சிக்குப் பாடுபட்டனர்.விவேகானந்தா விளையாட்டுக் கழகத்திலிருந்து தனிப்பட்ட நிருவாகச் செயலணி ஒன்று இதனை நிருவகித்து அமர்த்தப்பட்டாலும், அதன் கண்காணிப்பு தொடர்வது சிறப்பம்சமாக உள்ளது. இது ஆரம்பமான பொழுதில் விளையாட்டுக் கழகத்தலைவர் திரு.சு.மதியழகன் அவர்கள் கூடிய முயற்சி எடுத்துள்ளார் . இந்நிலையம் நமது கலை, கலாசாரங்களுக்கும், கல்விக்கும், சமூகத்தேவைகளுக்கும், விஷேட தினக் கொண்டாட்டங்களுக்கும் தன்னை அர்ப்பணித்துள்ளமை தெளிவானது.

தற்போது எழுந்து நிற்கின்ற இந்நிலையக் கட்டட உதவிகளை கௌரவ தேசிய பேரவை உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, அமரர் நீலன் திருச்செல்வம், கே.என்.டக்ளஸ் தேவானந்தா, பி.தயாரெத்ன, கே.பத்மநாதன், அமரர் ஏ.சந்திரநேரு, மா.க.ஈழவேந்தன் ஆகியோர் உயர்மனச் செம்மல்கள் தங்கள் ஒதுக்கீட்டு நிதியிலிருந்து வழங்கினார்கள். இந்நிலையத்தில் முன்பள்ளி வகுப்புகள், அறநெறி வகுப்புகள், வைத்திய முகாங்கள், நாயன்மார் குரு பூசைகள், சுனாமி நிவாரணப்பணிகள் போன்ற பல பொதுப்பணிகள் இங்கு நிறைவேறியும், நிறைவேற்றப்படவும் ஓர் இடமாக இது அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். இங்கு நடைபெறும் அறநெறிப் பாடசாலையை மையமாகக் கொண்டு இந்து கலாசார அமைச்சு ஏராளமான நூல்களை இந்நிலையத்திற்கு வழங்கியுள்ளது. இதனால் இளைஞரிடையே வாசிப்பு நேசிக்கப்படுகின்றது. 1997இல் "முதலாம் ஆண்டு சிறப்பு மலரையும்", 2006இல் "10ஆவது ஆண்டுச் சிறப்பு மலரையும்" வெளியீட்டுள்ளனர். முதலாம் மலர் ஆறுதாள்களில் 'றோணியோ' வடிவிலும் "பத்தாம் மலர் நூல் வடிவிலும் 24பக்கங்களில் விவேகானந்தரின் படப்பின்னணியில் சனசமூக நிலையத்தின் செயற்பாட்டுப் படங்கள் ஒன்றுடன் அட்டைப்படமும் காணப்படுகின்றன. இந்நூல் நிலையம் பற்றி முழுதாக அறியவிரும்பின் இம்மலர்களைப் பார்வையிடலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'கலைமகள்' சனசமூக நிலையம்:-

இச்சனசமூக நிலையமானது 1996 இல் 3ஆம் பிரிவு கடற்கரையை அண்டிய ஒரு இடத்தில் அரசாங்க உதவி மூலம் பெறப்பட்ட அழகிய ஒரு கலைக்கூடமாய் இது அமைந்திருந்தது. வாசிப்புப் பத்திரிகைகளுடன் பல நூல்களும் இருந்தன. (இதற்கு பல ஆண்டுகளுக்கு முன் இராசையா நல்லையா என்பவர் தலைமையில் இது சனசமூக நிலையம் தற்காலிக கொட்டிலில் இயங்கியதாக தகவலறிந்த சிலர் கூறினார்) சுனாமித்தாக்கத்தில் குறித்த கட்டடம் அடியோடு இல்லாமற் போனதால் தற்போதுள்ள நிருவாகத்தினர் (எஸ்.நடராஜா, எஸ்.சத்தியமோகன்) இங்குள்ள விஷ்ணு ஆலயத்தின் ஒரு பகுதி நிலத்தில் இளைஞர்களின் வாசிப்புக்கு உந்து சத்தியாய் அமையக் கூடிய விதத்தில் நிறுவன உதவியால் நல்லதொரு கட்டிடத்தில் இயங்குவதை காணமுடிகிறது.

## மாவடிப்பள்ளி பொது நூலகம்:-

பழைய மாவடிப்பள்ளியில் சுமார் 50 வருடங்களுக்கு முன் களிமண் கட்டிடமொன்றில் இது ஆரம்பிக்கப்பட்டது. ஜனாப். கே.எம்.சீனிமுகம்மட், ஜனாப்.எம்.ஏ.எம்.ஹனீபா ஆகியோர் தலைவர், செயலாளராக இணைந்து தொடங்கி வைத்தனர். அக்காலத்தே தினகரன், நவயுகம் ஆகிய பத்திரிகைகள் வாசிப்புக்கு இருந்தன. மக்களிடம் சிறுதொகைப்பணம் பெற்று செலவை ஈடுசெய்தனர். காலவோட்டத்தில் 1983ஆம் ஆண்டு இப்போது கட்டிடம் அமைந்துள்ள நிலத்தை கிராம அபிவிருத்திச் சங்கத்தின் மூலம் பெற்று தேசிய வீடமைப்பு அதிகார சபையினால் நிரந்தரமான வசதியுள்ள இக்கட்டிடம் கட்டித்தரப்பட்டது. 2003இல் பிரதேச சபையினால் நூல்கள் வழங்கப்பட்டு மாணவர் இங்கு வந்து பரீட்சைகளுக்குத் தங்களை தயார்படுத்த வாசித்தனர். நிறுவனம், இஸ்லாமிய கலாசார அமைச்சு ஆகியனவும் பல நூல்களை அன்பளிப்புச் செய்தன. இதன்பின்னர் 'பொது நூலகம்' எனப்பெயர் மாற்றம் பெற்றது. இதற்கு சம்பளமற்ற சேவையில் நூலகர் ஒருவர் (பெண்) நியமிக்கப்பட்டுள்ளார். இங்கு அனைத்து வகைகளிலும் சுமார் 700 மேற்பட்ட தொகையில் நூல்கள் வாசிப்புக்கு உள்ளதைக் காணமுடிகிறது.

## ஸ்ரீ முருகன் சன சமூக நிலையம்:-

மாவடி ஸ்ரீ கந்தசாமி ஆலயத்திற்குச் சொந்தமான ஆலய எதிர்வளவில் ஒரு துண்டு நன்கொடையாக வழங்கப்பட்டது. சனசமூக நிலையம் இயங்காதபட்சத்தில் வளவு ஆலயத்திற்கே சொந்தம் என்ற நிபந்தனைப்படி இது பெறப்பட்டது. 1997இல் இது பதியப்பட்ட பொழுது தற்காலிக கட்டிடமொன்றில் இயங்கியது. திரு.ச.மனோகரன், திரு.ஆர்.வசிகரன், திரு.வே.நமச்சிவாயம் ஆகிய மூவரும் முறையே தலைவர், செயலாளர், பொருளாளர் ஆகிய பதவிகளிலிருந்து இதனை வழிநடாத்தினார். இதன்பின்னர் சுனாமிப் பாதிப்பு நிவர்த்திக்க வந்த நிறுவனமொன்று இச்சனசமூக நிலையத்திற்கு நிலையான வசதியுள்ள கட்டிடமொன்றை கட்டிக்கொடுத்துள்ளது. இதன்மூலம் இப்பகுதி இளைஞர்கள் தங்கள் வாசிப்பை நடாத்தி வருகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாளிகைக்காடு ஸம்ஸம் சனசமூக நிலையம்:-

இச்சனசமூக நிலையம் 1984ல் ஆரம்பிக்கப்பட்டு, 1985 பதிவு செய்யப்பட்டது. இதன் ஆரம்ப கால ஆலோசகர் ஜனாப்.எம்.எம்.உதுமாலெவ்வை (மு.தே.பே.உ). ஆரம்ப நிருவாகம் தலைவர் ஏ.அபூபக்கர், செயலாளர் ஏ.ஏ.மஜீட் தொடக்க கால உறுப்பினர்களாக பதினைந்துபேரைக் கொண்டு கடற்கரையில் ஆரம்பிக்கப்பட்ட போது, கடற்றொழிலாளர்களே அனைவருமாவர். இங்கு வீரகேசரி, தினகரன், தினபதி, சிந்தாமணி பத்திரிகைகள் வாசிப்புக்கு இருந்தன.

இதில் நூலகப்பிரிவொன்றும் இருக்கின்றது. திணைக்களங்கள் வழங்கிய நூல்கள் இரவல் கொடுக்கப்பட்டன. இதன் உறுப்பினர்களே இதையும் செய்கின்றனர். சுனாமிக்குமுன் 650 நூல்கள் இருந்தன. இப்போது இதை அநேகர் கவனிப்பதில்லை. முன்பெல்லாம் மாளிகைக்காட்டுப் பொது நிகழ்வுகள் அனைத்தும் இச்சனசமூக நிலையத்தின் பொறுப்பிலேயே நிகழ்ந்துவந்தன. பல கொந்தராத்துக்கள் இச்சனசமூக நிலையத்தின் பெயரில் பெறப்பட்டு நன்கு நிறைவேற்றப்பட்டன. இதன் மூலம் காரைதீவு மாளிகைக்காடு இனஉறவு மேம்படுத்தப்பட்டு வருகின்றது. இங்கே சிங்களம், ஆங்கில மொழிப்பயிற்சி வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டு அதன்மூலம் பல பயனடைந்துள்ளனர். தற்பொழுது ஒரு நிலையான கட்டிடத்தில் கடற்கரையில் மிகச்சாதாரணமாக இயங்கி வருகின்றது.

*- பொன் .சிவானந்தன் -*







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காரைதீவில் உள்ள ஆலயங்களின் வரலாறு

## ஸ்ரீ கண்ணகை அம்மன் ஆலயம்



மீன்பாடும் தேனாடாம் மட்டு மாநகரின் தெற்கே 27 மைல் தொலைவில் வடக்கு, தெற்கே முஸ்லிம் கிராமங்களையும், கிழக்கு, மேற்கே முறையே நெய்தல், மருத நிலங்களையும் எல்லைகளாகக் கொண்டு பல துறைகளிலும் சிறந்து விளங்கும் பழம்பெரும் சைவப்பதியாம் காரைதீவு. இற்றைக்கு 800 ஆண்டுகளுக்கு முன்பே காரேறு மூதூர் என விளங்கிய தற்போதைய காரைதீவு சிறுசிறு காடுகளைக் கொண்டு விளங்கியது. கதிர்காம யாத்திரைக்குச் செல்லும் யாத்திரியர்கள் இவ்வூரில் தரித்து நின்று செல்வது வழக்கம் அவ்வாறே ஒரு முறை சேனாதிராஜனின் விதவை மகள் தேவந்தி அம்மையார் தனது ஒரே மகளான சின்ன நாச்சியாருடன் இலங்கை மன்னன் கஜபாகுவின் அழைப்பை ஏற்று கதிர்காம யாத்திரைக்கு வந்து கொண்டிருக்கும் போது உபசரிப்பிலும், விருந்தோம்பலிலும் சிறந்து விளங்கிய காராளர்கள் வாழும் காரைதீவை வந்தடைந்தனர். காராளர்களின் உபசரிப்பிலும், ஆதரவிலும் கவரப்பட்ட அம்மையாரும், மகளும் இவ்வூரை புகலிடமாகக் கொண்டு தற்பொழுது கண்ணகி அம்மன் ஆலயம் அமைந்திருக்கும் இடத்தில் குடிசையமைத்து வாழ்ந்து வந்தனர். இவர்கள் வரும்போது தாம்கொண்டுவந்த கண்ணகி விக்கிரகத்தை இற்றைக்கு 500 வருடங்கள் தாண்டி விருட்சமாகப் படர்ந்திருக்கும் வேம்புமரத்தினருகே சிறுகோயில் அமைத்து பூசைசெய்துவந்தனர்

ஒரு நாள் இப்பகுதியை ஆட்சி செய்து வந்த வன்னிமை அரசன் தனது குடி மக்களையும் விளை நிலங்களையும் பார்வையிட்டுக் கொண்டு தனது மாளிகைக்கு (மாளிகைக்காடு) செல்லும் வழியில் தான் வந்து கொண்டிருந்த யானை நடக்க முடியாமல் கீழே விழுந்தது. செய்வதறியாது தவித்து நின்ற அரசனும், குடிமக்களும் கோயில் மணியோசை கேட்பதை உணர்ந்து அங்கு சென்று பரிகாரம் தேட விரும்பினர். அவர்கள் இக்கோயிலை வந்தடைந்து நடந்ததைக் கூறினர். தேவந்தி அம்மையார் கோயில் தீர்த்தம், வேப்பிலையில் அரைத்த குளிசை போன்றவற்றை யானைக்கு கொடுத்து கண்ணகியின் சக்தி யால் யானையை எழுப்பி, அரசனின் பயணத்தைத் தொடர வைத்தார். இதனால் மகிழ்வுற்ற மன்னன் இதற்கு காணிக்கை யாக கோயில் கட்டித்தருகின்றேன். அத்தோடு நீங்களும் இவ்விடத்தை விட்டு செல்லக்கூடாது என வேண்டினான். கோயில் கட்டி முடிந்ததும் அம்பாளுக்கு பொங்கல் பெருவிழா எடுப்பதற்கு தனது இருதுணைவிமாருடன் சிங்காரத்தோப்பு எனும் ஊரிலிருந்து வந்து கலந்து கொண்டான். அப்போது அம்மனுடைய திரை விலக்கப்படாது பூசைசெய்வதை விரும்பாத அரசனின் இரண்டாவது மனைவி சிறியபூங்கோதை கவலையை மன்னனிடம் முறையிட்டார். பின் திரைவிலக்கி பூசை நடைபெறும் போது சிலையை உற்றுப்பார்த்த சிறிய பூங்கோதை தனது கண்களின் ஒளியை இழந்தார். பின் கண்ணகியின் அருளால்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவருக்கு கண்ணொளி கிடைத்தது. இதனால் மகிழ்ச்சியடைந்த மன்னன் காணிக்கையாக தனது காணிகளை இக்கோயிலுக்கு மானியமாக வழங்கினான் எழுதிக் கொடுத்தான். இக்காணிகளே "கண்கண் வெளி" என அழைக்கப்படுகின்றது.

தேவந்தி அம்மையாரின் மகள் சின்ன நாச்சியாருக்கு இவ்வூரில் உயர்குலத்தில் மணம் முடித்துக் கொடுத்து அவர்களுக்குப் பிறந்த பெண் மகவுகளான மாணிக்க நாச்சியார், கதிர நாச்சியார், வள்ளி நாச்சியார் ஆகிய மூவரினதும் பெண் சந்ததியினருக்கே இவ்வாலயமும், அதன் சொத்துக்களும் உரிமையாகக்கப்பட்டன.


இவ்வாறு கஜபாகு மன்னனால் வரவழைக்கப்பட்ட தேவந்தி அம்மையாரும் அவர் மகள் சின்னநாச்சியாராலும் காரைதீவில் கண்ணகி அம்மன் ஆலயம் அமைய அடித்தளம் இடப் பட்டது. பின்னர் சின்னநாச்சியாரின் மூன்று பெண்களாலும் அவர்கள் பெண் வழிச்சந்ததி யாராலும் இவ்வாலயக் கிரிகைகளும் விழாக்களும் நடாத்தப்பட்டு வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கதாகும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ வீரபத்திரர் ஆலயம்



காரைதீவில் வாழ்ந்து வந்த தமிழ் பழம் பெரும் குடிகள் பல. அவற்றுள் " கவுத்தன்" குடியும் ஒன்றாகும். இசை பற்றி ஆராய்ந்து யாழ்நூலை அமைத்த சுவாமி விபுலானந்தரும் இக் குடியைச் சேர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. இக்குடியைச் சேர்ந்தவர்களும் தங்கள் சந்தானத்தாரும் தனியானதொரு ஆலயத்தை அமைப்பதற்கு முற்பட்டனர். கந்தப்பர் கண்ணப்பர் என்பவரால் நன்கொடையளிக்கப்பட்ட காணியில் 1889ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் பத்தாந் திகதி (1889.10.10) அதே தினத்தில்,

திரு க.தோ.கதிரமலை, திரு.க.கண்ணப்பர், திரு.க.வேலாயுதம்.என்பவர்களால் ஓலைக் கொட்டில் அமைக்கப்பட்டு, வழிபாடு பூசை புனற்காரங்கள் செய்யப்பட்டு வந்தன. காலக்கிரமத்தில் சந்தானத்தாரின் ஒத்துழைப்புடன் நிரந்தர ஆலயம் அமைக்கும் பணிகள் ஆரம்பமாயின. 1900ஆம் ஆண்டு ஆவணி மாதம் இவ்வாலயம் நிரந்தர கட்டிட ஆலயமாக்கப்பட்டு வழிபாடுகள் தொடர்ச்சியாக நடைபெற்று வந்தன. சீரான நடை முறை நிருவாகஞ் செய்வதற்கு நிதி தேவைப்பட்டது. சந்தானத்தார் இதற்கு உதவ முன்வந்தனர். இவ்வண்ணம் உதவிக்கு முன்வந்தவர்களில்,

காதிராகிப்பிள்ளை மயிலாத்தை. பெரியனாச்சி கண்ணாச்சி பாரியாத்தைஆகிய 05 பெண்களும் தங்களுக்குரியதும் செங்கற்படையிலுள்ளதும் துறையவெளியென்னும் 22 ¾ ஏக்கர் பரப்புள்ள நெற்காணியை 1901.01.24ஆந் திகதியிட்டு 794 இலக்க உறுதி மூலம் இவ்வாலயத்திற்கு நன்கொடையாக அளித்தனர். இதன் பின்னர் இவ்வாலய நிருவாகம்

1. கதிராயிப்பிள்ளை பாகை
2. மயிலாத்தை பாகை
3. பெரியானாச்சி பாகை
4. கண்ணாச்சி பாகை
5. பாரியாத்தை பாகை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகிய 05 பாகைகளாகப் பிரிவாகப் பிரிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. இப்பாகைகளுக்கு முகாமைக்காரர்களாக கந்தப்பர், கண்ணப்பர், பொ.த.கதிரமலை,தம்பிமுத்து காத்தான்பிள்ளை, வைத்தியநாதர் சிவகுரு என்போர் செயற்பட்டு வந்தனர். மேற்கூறப்பட்ட ஐந்து சந்தானத்தார்களிலும் தலைக்கொருவராக மூத்தவரும், அனுபவமிக்க வருமான ஐவர் வண்ணக்கர்களாக தெரிவு செய்யப்பட்டு அவர்களே நிருவாகத்தை நடாத்தி வந்தனர்.

1901ஆம் ஆண்டு ஒரு உடன்படிக்கை மூலம் ஐயாத்துரை பரமசாமிப்பிள்ளை ஐயர் என்பவரை ஆலயப்பூசகராக ரூபா 36/- வருட வேதனத்தில் நியமிக்கப்பட்டார். இவர் பிள்ளையார் கோயில் பூசகராகவும் இருந்தபடியால் வேதாகம முறைப்படி பூசைகளை இங்கும் செய்து கொண்டு வந்தார். இவரது காலத்தின் பின்னர் 1915ஆந் ஆண்டு முதல் இப்பூசை முறையில் மாற்றங்கள் ஏற்பட்டது. புரட்டாதி பூரணையை மையமாக வைத்து ஊர் சுற்றல், தெய்வமாடல் சடங்குகள், பலியிடல் முதலியன ஆரம்பிக்கப்பட்டு 1957 முதல் பலியிடுதல் நிறுத்தப்பட்டு சடங்குப் பூசைகள் மட்டும் நடைபெற்று வந்தன. இது திரு.கந்தையா கட்புகன் என்பவரால் செய்யப்பட்டு வந்தது. ஆண்டு தோறும் விஷேட பூசைகளான தைப்பொங்கல், மகாசிவராத்திரி, சித்திரை வருடப்பிறப்பு, ஆடி மாதப்பூரணை ஆகியவைகளுடன் புரட்டாதிச் சடங்கு,கார்த்திகை விளக்கீடு, திருவெம்பாவை, திருவாதிரை என்பன நடைமுறைப்படுத்தப்பட்டு வந்தன.

இவற்றில் புரட்டாதி சடங்கே விஷேடமாக கடைப்பிடிக்கப்பட்டு வந்தது. இது பூரணைத் தினத்திற்கு நான்கு நாட்களுக்கு முன் கடல் நீர் எடுத்து வருவதோடு ஆரம்பமாகி, கும்பம் வைத்து நான்கு நாட்கள் பகல், இரவு பூசைகளுடன் ஐந்தாம் நாள் விஷேட ஊர்வலமும் அன்றிரவு பெரிய பூசை பள்ளையத்துடன் முடிவுற்று எட்டாம் நாள் சடங்குப்பூசையும் நடை பெற்று வந்தது. இப்பூசைகள் யாவும் ஆலய வருமானத்திலிருந்தே நடைபெற்று வந்தது.

1985ஆம் தொடக்கம் 1990ஆம் ஆண்டுகளில் நாட்டிலேட்பட்ட இனக்கலவரங்கள் காரணமாக அழிவுற்று மிகவும் பாதிக்கப்பட்டது. எனினும் மக்களின் ஒத்துழைப்பாலும், நிருவாகத்தின் செயற்திறனாலும் 2000ஆம் ஆண்டு இவ்வாலயம் புனர்நிர்மாணம் செய்யப்பட்டு, மிகுந்த செலவில் 08.11.2000ஆம் ஆண்டு மகாகும்பாபிஷேகம் நடைபெற்று ஒருமண்டல மண்டலாபிஷேகம் நடைபெற்று, ஈற்றில் சங்காபிஷேகமும் நடைபெற்றது.

இதனைத்தொடர்ந்து சகல பூசைகளும் ஆகம முறைப்படி தினமும் மூன்று நேரப்பூசைகள் குருக்கள் மூலம் நடைபெற்று வந்தன. 26.12.2004இல் ஏற்பட்ட சுனாமிப்பேரலையின் தாக்கத்தினால் இவ்வாலயம் பேரழிவுக்குள்ளானது.

அதன்பின் பாதிக்கப்பட்ட இவ்வாலயம் புனரமைப்புக்காக 2006.06.29ஆந் திகதி வாலத்தாபனம் செய்யப்பட்டு நித்தியபூசைகள் நடைபெற்று வருவதோடு, திருத்த வேலைகளும் தொடர்கின்றன.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ பாலையடி வால விக்னேஸ்வரர் ஆலயம்



காரைதீவு எட்டாம் பிரிவில் எழில் கொஞ்சும் கடற்கரையினை அண்டியதாகக் கிழக்கு, தெற்கு இராஜகோபுரங்களைக் கொண்டு ஸ்ரீபாலையடி வாலவிக்கினேஸ்வர் ஆலயம் அமையப்பெற்றுள்ளது. இவ்வாலயத்தின் வரலாறு, இவ்வாலயத்தை தோற்றுவித்த வம்சத்தாரின் வரலாற்றுடன் பின்னிப் பிணைந்த ஒன்றாகக் காணப்படுகின்றது.

1815ஆம் ஆண்டு ஆங்கிலேயர் இலங்கை முழுவதையும் தம் ஆட்சியின் கீழ் கொண்டு வந்த காலப்பகுதியில் ஆங்கில நாட்டு 'ஒகிறேடி' என்பவர் தன்னாட்டிற்கு வருமானத்தை தேடிக்கொள்ளும் பொருட்டு தென்னையைப் பயிரிட்டு அதன் மூலம் வருமானம் தேட விரும்பினார். இவர் தென்பகுதியில் அமைந்துள்ள 250 ஏக்கர் காடாக கிடந்த காணியை துப்பரவு செய்து தென்னை நாட்ட விரும்பினார். தற்போது ஸ்ரீ பாலையடி வாலவிக்கினேஸ்வரர் ஆலயம் அமைந்துள்ள இடமும் காடழிப்பிற்கு உள்ளாக்கப்பட்டது. அக்காட்டிலே மிகப்பழமையான பெரிய பாலைமரத்தை வெட்டியவர்கள் உடலியல் ரீதியாக பல உபாதைகளை அவ்விடத்திலேயே அனுபவித்தனர். இருந்தாலும் மரம் வெட்டப்பட்டது. அதன் பொந்தில் செதுக்கப்படாத பிள்ளையார் அமைப்பைக் கொண்ட விக்கிரகம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது. இவ்விடயம் அறிந்த 'ஒகிறேடி' தனது பெரிய கங்காணியான பொன்னம்பலத்திடம் இவ்விடத்தில் ஆலயம் அமைத்து வழிபாடு செய்யலாமெனத் தெரிவித்தார். அதன் பின்னர் பொன்னம்பலக் கங்காணியார் ஆலயத்தை பராமரிக்கும் பணியிலும் ஈடுபட்டார். பாலைமரப் பொந்தில் பிள்ளையார் அமைந்திருந்ததால் 'பாலையடி' என்ற அடைப்பெயரும், மூல மூர்த்தியாக பிள்ளையார் அமைந்ததனால் 'வாலவிக்கினேஸ்வரர்', என்ற பெயர் பெற்று விளங்குகின்றது.

இவ்வாலயத்தின் முதலாவது மஹாகும்பாபிஷேகம் 1904ஆம்ஆண்டு நடைபெற்றது. அதனைத்தொடர்ந்து 1944ஆம் ஆண்டு கிரகக்கோயில்கள் கட்டப்பட்டு கும்பாபிஷேகம் நடைபெற்றது. மூன்றாவது கும்பாபிஷேகம் 1972ஆம் ஆண்டும், நான்காம் கும்பாபிஷேகம் 1994ஆம் ஆண்டும், ஐந்தாவது கும்பாபிஷேகம் 2004ஆம் ஆண்டும் நடைபெற்றது. இவ்வாலயம் 1978ஆம் ஆண்டு சூறாவளியாலும், 1985ஆம் ஆண்டு இனக்கலவரத்தாலும், 2004ஆம் ஆண்டு சுனாமியாலும் தாக்கப்பட்டது. இருப்பினும் சந்தானத்தாரின் உதவியோடும், அரசாங்கத்தின் உதவியோடும் திருத்தியமைக்கப்பட்டு வழிபாட்டுத் தலமாகக் கொள்ளப்பட்டது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


19ஆம் நூற்றாண்டின் ஆரம்பப்பகுதியில் (1810) இந்தியாவில் கொங்குநாட்டைச் சேர்ந்த வைசீய குலத்தைச் சார்ந்த "தாதன்" என்பான் இலங்கைக்கு வந்தான் என்றும், அக்காலத்தில் வாழ்ந்தவர்கள் அவனது நல்லொழுக்கத்தையும், ஜீவகாருண்ணியத்தையும் கண்டு அவனோடு உறவு கொண்டாடினார்கள். இவன் யாழ்ப்பாணத்திலிருந்து கரையோர வழியாக கதிர்காம யாத்திரை செய்வது வழக்கம் இவ்வாறு யாத்திரை செய்ய இலங்கையின் பல பாகங்களிலிருந்தும் பக்தர்கள் இணைவது வழக்கம். இவ்வாறு யாத்திரை செய்பவர்களில் கைதடி பெருமதுரை வேளாளர்குல மாசாத்தார் வள்ளியம்மையும், தங்கையான மாசாத்தார் சின்னாச்சியும் அடங்குவர். இவர்களோடு யாத்திரை தன்மையாலும், பழகிக் கொண்ட தன்மையாலும், விதியின் வசத்தாலும் கண்ணகி அம்மன் ஆலய பிரபுவான சாஸ்திரி சிற்றம்பலத்திற்கும் அவரது தம்பிக்கும் முறையே வள்ளிம்மையும் சின்னாச்சியும் வாழ்க்கைப்பட்டனர். இந்திய வம்சப்படி மணவாளனோடு பெண் தங்கியிருக்கும் பரம்பரைப்பழக்கத்தால் இல்லத்தரசிகள் இரண்டும் காரைதீவை நிரந்தர வதிவிடமாகக் கொண்டனர். இவர்களுடைய திருமணத்தை 'தாதன் நடத்தி வைத்தார்' இவர்களது பரம்பரையினரை தாதர் குடி என்று பெயர் பெற்றதென்பார்கள். சாஸ்திரி சிற்றம்பலத்திற்கும் வள்ளியம்மைக்கும், சாஸ்திரி சிற்றம்பலத்தின் தம்பிக்கும் சின்னாச்சிக்கும் பிறந்த பிள்ளைகளே ஸ்ரீ பாலையடி வாலவிக்கினேஸ்வரர் ஆலய வம்சாவழியினர் ஆவார்கள். 'ஓ கிறேடி' வழங்கிய அனுமதியின் பேரில் பொன்னம்பலக் கண்காணியார் ஆலயத்தை பராமரித்து வந்தார். இவரின் ஆண் மக்கள் ஆலய பராமரிப்பு எங்களுக்கு சொந்தமானதென வழக்குத்தொடுத்தார்கள். வழக்கின் தீர்ப்பின்படி ஆலய பராமரிப்பு உரிமை மருமக்கள் வயிற்றுப் பெண்ணடிக்கே உரியதென்று தீர்ப்பானது. மேலும், ஐந்து பெண் பிள்ளைகளின் பரம்பரையினருக்கே சொந்தமானதென்றும் இதை மாற்றவோ, அழிக்கவோ முடியாதென உறுதியளிக்கப்பட்டது.

ஸ்ரீ பாலையடி வாலவிக்கினேஸ்வரர் ஆலய வம்சத்தவர்களான தம்பையா ஒவசியர் மாவடி ஸ்ரீ கந்தசுவாமி ஆலயத்தை ஸ்தாபிப்பதில் முன்னின்றவர் என்ற காரணத்தினால் மாவடி கந்தசுவாமி ஆலய திருவிழாவில் முதல் திருவிழா பாலையடி வாலவிக்கினேஸ்வரர் ஆலயத்திற்கு வழங்கப்பட்டது. அத்தோடு ஆலயக்கொடி இவ்வாலயத்திலிருந்து கொண்டு சென்று ஏற்றப்படுவது வழக்கம்.

இவ்வாலயத்தில் விநாயகர் காப்பு, சிவராத்திரி விரதம், சதுர்த்தி விரதம், கௌரி விரதம், விஷேடகாலப் பூசைகள் யாவும் நடைபெற்று வருகின்றன. இவ்வாலயத்தில் நாவலரின் மாணவரான புலோலியூர் வைத்திலிங்க தேசிகர் ஆரம்ப கால பூசகராக இருந்து செயற்பட்டு கந்தபுராணக் காவிய வகுப்புக்களை நடாத்தியவர். அதன் தொடர்ச்சியாக தற்போதும் கந்தபுராண வகுப்புக்கள் நடைபெற்று வருகின்றன. அறநெறிப்பாடசாலைகள் நடைபெறுகின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ நந்தவன சித்தி விநாயகர் ஆலயம்



இவ்வாலயம் 1832ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 11ஆந் திகதி மட்டக்களப்பு கரைவாகுப்பற்று காரைதீவு சக்கரச்செட்டி சேனாபதி என்பவரால் தமது ஆத்ம திருப்திக்காகவும், தன் மனைவி முத்துப்பிள்ளை என்பவரின் ஆன்ம ஈடேற்றத்திற்காகவும் கட்டி முடித்தார். இவ்வாலயத்தை அமைத்த சக்கரச்செட்டி சேனாபதி என்பவர் தனதும், தன் மனைவியினதும் சீவியப்பிரபந்தம் ஆலயத்தை நடப்பிப்பதெனவும், தங்கள் சீவியத்தின் பின் தனது புத்திரர்களான இவ்வூர் சேனாபதி பாட்டுவாழியையும், சேனாபதி மாணிக்கச் செட்டியையும், தனது மருமகன் சின்னத்தம்பி கண்ணப்பனையும் இவ்வாலய பராமரிப்புக்காரர்களாக நியமிக்கின்றேன் என குறிப்பிட்டுள்ளார்.


இக்கோயில் என்றென்றும் நிலைபெற்று நடந்து வரும் பொருட்டு 1878ஆம் வருடம் ஐப்பசி மாதம் 26ஆந் திகதி அசைவற்ற சில ஆதனங்களையும் அதற்கு தருமசாதனம் செய்து அச்சாதனத்தில் தனது மரணத்தின் பின் தனது மகள் வயிற்றுச் சந்தானத்தில் (செட்டி வேளாளர் சந்தானம்) முதன்மையான ஓர் ஆண் பிள்ளையையும், தனது சகோதரிகள் வயிற்றுச் சந்தானத்தில் (சிங்களக்குடி வேளாளர்) முதன்மையான ஓர் ஆண் பிள்ளையையும் சேர்த்து கோயிலை நடத்த வேண்டும் எனவும் கூறியுள்ளார். அத்துடன் கோயிலை பராமரிப்பதற்கு ஆணடியில்லாத பட்சத்தில் பெண்ணடி நியமிக்கப்பட்டு பரிபாலனம் செய்யப்பட வேண்டும் எனவும் விதந்துரைக்கப்பட்டுள்ளது.

இவ்வாலயம் கட்டும் போது தனக்கு உதவி செய்தவருக்கும், அவரது சந்ததிக்கும் திருவிழா வழங்கப்பட்டுள்ளது. தற்சமயம் இத்திருவிழா ஒவ்வொரு வருடமும் ஆடி அமாவாசை திதி முன் பத்து நாட்கள் வெகுவிமர்சையாக திருவிழா நடைபெற்று ஆடி அமாவாசை அன்று தீர்த்தம் நடைபெறுகின்றது. அத்துடன் இவ்வாலயத்தின் வருடப்பிறப்பு, சித்திரா பௌர்ணமி, விநாயகர் சதுர்த்தி, நவராத்திரி, கௌரி விரதம், கந்தசஷ்ஷ விரதம், விநாயகர் விரதம், சர்வாலய, குமாராலயத் தீபம், வருடாந்த சங்காபிஷேகம், திருவெம்பாவை, தைப்பொங்கல், தைப்பூசம், சிவராத்திரி, வரலெட்சுமி விரதம், ஆனி உத்தரம், பங்குனி உத்தரம் என்பனவும் நடைபெறுகின்றது. 2004.12.26இல் ஏற்பட்ட சுனாமி அனர்த்தம் காரணமாக வீடிழந்த மக்களுக்கு குடியிருப்புக்காக இவ்வாலய வயற்காணியில் 05 ஏக்கர் காணி வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் பிறிதொரு இடத்தில் இருந்த ஆலயத்திற்கு சொந்தமான காணி பொது நூலகம், பொதுச் சந்தை அமைப்பதற்கு சுவீகரிக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ மஹா விஷ்ணு பெருமான் ஆலயம்



'போத்துகீசர்' வருவதற்கு முன்பு 'காளகங்கை'(மட்டக்களப்பு குகன்குல முற்குகர் வரலாறும், மரபுகளும் - ஞா.சிவசண்முகம், பக்கம் 55) எனப்பெயர் பெற்றிருந்த காரைதீவில் நெடுங்காலமாக இந்துக்கள் வாழ்ந்து வருகின்றனர். போத்துகீசர் காலத்தில் மட்டக்களப்பு பிரதேசத்திலிருந்த கோயில்கள் அழிக்கப்பட்டதாகவும், பிற்காலத்தில் அவை சந்தான ரீதியாக கட்டப்பட்டதாக சரித்திரம் கூறுகின்றது.


இதன் பிரகாரம் 1937ஆம் ஆண்டு காரைதீவின் வாழ்ந்து 14 பேர்கொண்ட முற்குக பெருந்தகைகள் ஒன்றுகூடி மாணிக்கப்போடி அழகிப்போடி தலைமையில் காடு சென்று கம்பு வெட்டி ஓலைக்குடிசையில் ஆலயம் அமைத்து, குலதெய்வமான ஸ்ரீ மகா விஷ்ணுப் பெருமானை வைத்து கும்பாபிஷேகம் செய்து, வழிபட்டு வந்தனர். 1951ஆம் ஆண்டு கணபதிப்போடி கற்பகப்பிள்ளையும், மக்கள் கணபதிப்பிள்ளை சாமித்தம்பியும், கணபதிப்பிள்ளை மாமாங்கப்பிள்ளையும் தங்களுக்கு சொந்தமான ஆலயம் இருந்த வளவை தர்மசாசனமாக வழங்கியுள்ளனர். அன்றிலிருந்து தம்பாப்பிள்ளை செல்லப்பிள்ளை தலைமையில் இருந்த முக்குக சந்தானம் ஆலயத்தை நிர்வகித்து வந்துள்ளனர்.

1961ஆம் ஆண்டு சின்னத்தம்பி வேலுப்பிள்ளை தலைமையில் இருந்த முற்குக சந்தானம் ஆலயத்தை கல்லால் கட்டி கும்பாபிஷேகம் செய்துள்ளனர். இக்காலத்தில் சிறிது காலம் கணபதிப்பிள்ளை சாமித்தம்பியும், தலைமை நிர்வாகியாக இருந்துள்ளார். 1963ஆம் ஆண்டு தொடக்கம் 1978ஆம் ஆண்டு வரை இளையதம்பி வீரக்குட்டி தலைமையில் இருந்த முற்குகசந்தானம் ஆலயத்தை நிர்வகித் துள்ளனர். 1978ஆம் ஆண்டு தொடக்கம் 1998ஆம் ஆண்டு வரை வீரக்குட்டி நமசிவாயம் தலைமையில் இருந்தவர்கள் ஆலயத்தை நிர்வகித்துள்ளனர். 1992ஆம் ஆண்டு மட்டக்களப்பைச் சேர்ந்த மகேஸ்வரி தர்மலிங்கம் என்பவர் 13 ஏக்கர் நெற்காணியை ஆலயத்திற்கு தர்மசாசனமாக வழங்கியுள்ளார். 1998ஆம் ஆண்டு தொடக்கம் 2000ஆம் ஆண்டு வரை கல்முனை மாவட்ட நீதிமன்றில் வழக்கிலக்கம்: 191 நானாவிதம் பேரில் ஆலய உரிமைபற்றி வழக்கு நடைபெற்றுள்ளது. 2000.09.27இல் இவ்வழக்குத் தீர்ப்பின் படி இவ்வாலயம் உலகநாச்சி முற்குக சந்தானத்திற்கு உரிமை உடையதென கூறப்பட்டு நிர்வாக முறைக்கு ஒரு யாப்பும் வழங்கப்பட்டுள்ளது. இத்தீர்வுத் திட்டத்தின்படி நிர்வாகம் அமைக்கப்பட்டு 2007.09.16இல் எஸ்.கணேசமூர்த்தி தலைமையில் இருந்த நிர்வாகம் கும்பாபிஷேகம் செய்து பூசை புனர்த்தாரணங்களுடன் நடைபெற்று வருகிறது. ஆவணி ஓண திருவிழாவும், தீர்த்த உற்சவமும், அதன் முன்பு நடைபெறும் அலங்காரத்திருவிழா ஆலயத்தின் சிறப்பாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவடி ஸ்ரீ கந்தசுவாமி ஆலயம்



முருக பக்தரான முறண்டப்போடியார் தம்பையாப்பிள்ளை அவர்களுக்கு நிகழ்ந்த அதிசய நிகழ்வாலும், அருள்கொடையாலும் முருகன் கோயில் ஒன்றைக் கட்டி பரிபாலித்து வந்தார். ஆலயத்தை பல வருடங்களாக பராமரித்து வந்தவராகிய முறண்டப்போடியார் தம்பையாப்பிள்ளை அவர்கள் தனது தள்ளாப்பராயத்தில் தொடர்ந்து ஆலயத்தை நடாத்த முடியாமை காரணமாக இவ்வாலயம் என்றென்றும் நிலைபெற்று பிரசித்தமாகி அதில் நடைபெற வேண்டிய சகல பூசை கருமங்கள் ஒரு குறையுமின்றி நடைபெற்று வரவேண்டும் என்ற நன்னோக்கம் கருதி குறித்த கந்த சுவாமி ஆலயத்தையும் அதற்குரிய சகல பண்டங்களையும் மட்டக்களப்பு காரைதீவு சைவநன்மக்கள் வசம் ஒப்புவிக்க வேண்டியிருப்பதனாலும் அவர்கள் அதை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற தனது விருப்பத்தை காரைதீவு கண்ணகையம்மன் ஆலய வீதியில் த.பொன்னையா அவர்களின் தலைமையில் 1945 மார்கழி 25ஆந் திகதி கூட்டப்பட்ட மகாசன சபைக் கூட்டத்தில் (காரைதீவிலுள்ள சகல வம்சப் பிரதிநிதிகள் அடங்கிய) கேட்டுக் கொண்டதற்கிணங்க சபையிலுள்ளோர் அனைவரும் ஏகோபித்த சம்மத்துடன் காரைதீவு ஊரார்களின் ஊர் பொது உடமையாக ஏற்றுக் கொண்டதுடன் கோயில் கட்டிடம், திருப்பணிப் பொருட்கள், வளவு ஆகியவைகளை பொறுப்பேற்று நடாத்துவதற்காக பஞ்சாயத்தாரராக திருவாளர்கள் இ.பெரியதம்பி, வ.வி. நல்லரெத்தினம், கதிரமலை கந்தப்பன், நல்லரெத்தினம் தங்கராசா, கதிரேசபிள்ளை ஆறுமுகம், கணபதிப்பிள்ளை ஆறுமுகம் ஆசாரி, பொன்னையப்பர் தெய்வநாயகம், முருகேசபிள்ளை கணபதிப்பிள்ளை, கந்தவனம் பெரியதம்பி, கதிர்காமத்தம்பி அழகுரெட்ணம் என்பவர்கள் தெரிவு செய்யப்பட்டு ஆலயத்தை பராமரித்து வந்தனர். *(9057/31.12.1945)*

1946ஆம் ஆண்டு தை மாதம் 20ஆம் திகதி கண்ணகை அம்மன் கோயில் வீதியில் திரு.த.பொன்னையா அவர்கள் தலைமையில் பொதுக்கூட்டமொன்று ஊரார்கள் சமூகத்தில் கூடியது. சகல அங்கத்தவர்களது விருப்பத்துக்கு இணங்க பரிபாலன சபையொன்று தெரிவு செய்யப்பட்டது. அச்சபையில் தலைவராக திரு.க.கந்தப்பன் அவர்களும், உபதலைவராக க.அழகரெத்தினம் அவர்களும், செயலாளராக வ.வி.நல்லரெட்ணம் அவர்களும், உப செயலாளராக திரு.க.ஆறுமுகம் ஆசிரியர் அவர்களும், பொருளாளராக மொ.தெய்வநாயகம் ஆசிரியர் அவர்களும் பஞ்சாயத்தார்களாக திரு.ஞா.கந்தையா, திரு.அ.வைத்திலிங்கம், திரு.ந.தங்கராசா ஆசிரியர், திரு.கா.சின்னத்தம்பி, திரு.மு. கணபதிப்பிள்ளை ஆகியோருடன் ஓர் நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டு ஆலயம் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டு வந்தது. இவ்வாறு தொடர்ந்தும் வருடந்தோறும் பொதுக்கூட்டங்கள் மூலம் பரிபாலன சபை தேர்ந்தெடுக்கப்பட்டு ஆலயம் சிறப்புற நடைபெற்று வந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாலயத்தின் விசேட உற்சவமகிய வருடாந்த ஆடி மகோற்சவத்துக்காக 15 திருவிழாக்களும் பகிர்நதளிக்கும் போது கோயில் வளவையும் சகல பொறுப்புக்களையும் ஊரார் பொறுப்பில் ஒப்படைத்த திரு.மு.தம்பையா அவர்கள் ஞாபகார்த்தமாக, அவர் தாய்வழிச் சந்ததியினருக்கு முதல் திருவிழாவும், அவரது மனைவி சந்தானத்தாருக்கு 2ஆம் திருவிழாவும், பின்னர் ஆலயங்களுக்கும் தொடர்ந்து சகல வம்சத்தாருக்கும் விழா கொடுபட்டு, சிறப்பாக நடைபெற்றுக் கொண்டு வருகிறது. மேலும் பலவருடங்களின் பின்னர்15 திருவிழாக்களுக்கும் உரித்தான வம்சப்பிரதிநிதிகள் நிர்வாகத்தில் பங்கேற்க வேண்டுமென்ற நல்லெண்ணத்துடன் யாப்பு ஒன்று உருவாக்கப்பட்டு, வம்சத்தாரின் தலைவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட அந்தந்த சந்தானப் பிரதிநிதியிலிருந்து பரிபாலன சபை தெரிவு நடைபெறுவது குறிப்பிடத்தக்கதொன்றாகும். ஆத்துடன் மு.தம்பையாப்பிள்ளையின் மனைவி சந்தானத்திற்கு விஷேட பிரதிநிதித்துசம் ஒன்றும் வழங்கப்பட்டுள்ளது.


ஆலயத்தில் மாதாந்த பரிபாலன சபைக்கூட்டம், சந்தானத் தலைவர்கள் கூட்டம், பொதுக்கூட்டம் என்பன உரிய காலத்தில் அழைப்புகள் விடுக்கப்பட்டு நடைபெற்று வருகின்றது. ஆலயத்தில் தினந்தோறும் காலை, பகல் நேரப்பூசைகளும், வெள்ளி மாலைப் பூசைகள், மாதந்தோறும் கார்த்திகை நட்சத்திரத் திருவிழா, மகாசிவராத்திரி, சித்திரா பூரணை, நவராத்திரி பூசை, கௌரிவிரதம், கந்தசஷ்டி விரத விசேட பூசைகள், திருவெம்பாவை, திருவாதிரை, விநாயக சதுர்த்தி போன்ற உற்சவங்களுடன் விசேடமாக ஆடி மகோற்சவமும் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டு வருகிறது. திருவிழாக்காலங்களில் பக்தர்கள் வெள்ளம் போல் வந்து முருகனது அருளாட்சியை பெற்றுக் கொண்டு செல்வதோடு, வேண்டிய வரங்களை அவன் வழங்கி வருவது விசேட அம்சமாகும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காரையடி அம்பாரைப் பிள்ளையார் ஆலயம்



கிழக்கிலங்கையில் புகழ்பூத்த தொன்மைமிக்க சைவத்தமிழ் கிராமமான காரைதீவுக் கிராமத்தில் வடக்கே ஸ்ரீ வீரபத்திரர் சுவாமி கோயிலும், அதனருகே சித்தானைக்குட்டி சுவாமிகள் மனையும், தெற்கே பாலையடிப் பிள்ளையார் கோயிலும், மேற்கே கரைச்சை என அழைக்கப்படும் களப்பும், கிழக்கே கடலுமாக அமைந்த இடத்தை சல்லித்தீவு என அழைக்கப்பட்டது. இப்போது இது 'கலைக்கோட்டம்' என அழைக்கப்படுகின்றது.

இந்த இடத்தில் சின்னத்தம்பி ஞானமுத்து கந்தையாவின் தாய், தந்தைக்கு கிழக்கே கடல் முதல் கரைச்சை வரை நீளமாகவும், 20 பாகம் கொண்ட அகலமான சொந்தப்பூமி இருந்தது. இந்தப்பூமியின் நடுவில் வீடு கட்டி வாழ்ந்து வந்தார்கள். அக்காலத்தில் கந்தையா அவர்களே தாயாரையும் சகோதரர்களையும் பராமரித்து வந்தார். கந்தையாவின் தாயார் கண்ணம்மை தனது மனைக்கருகில் இருந்த காரை மரக்கன்றுகளின் கீழ் ஓர் கல்லை வைத்து வணங்கி வந்தார். இது இன்றைக்கு 125 வருடங்களுக்கு முந்திய நிகழ்வாகும்.

கந்தையா அவர்களின் தாயாரின் காலத்திலேயே இப்போது கோயிலுக்கு முன்னால் இருக்கும் வீதிக்கும், கடற்கரைக்கும் இடைப்பட்ட பூமியை இலவசமாகவும், கிரயமாகவும் கொடுத்து விட்டார்கள். கந்தையாவின் தாயார் காலமாகியதும் திரு.கந்தையா அவர்கள் தனது சகோதரர், சகோதரிகள் காலம் சென்ற சகோதரர்களின் பிள்ளைகளுக்கு காணியை பிரித்து உறுதி எழுதிக் கொடுத்தார். இதன் படி தனக்குரிய பங்கான காரையடித்துண்டை தனது மகன் சாம்பசிவத்தின் பராமரிப்பில் ஒதுக்கியுள்ளார்.


இதன் பின் சகலரும் தங்களுக்கு கிடைக்கப்பெற்ற பூமிக்கு எல்லை போட்டு வேலியும் கட்டியுள்ளார்கள். கந்தையாவின் பங்கு காரையடி மட்டும் வேலி போடாமல் திறந்த வெளியாக இருந்தது. இருப்பினும் கந்தையாவின் சகோதரி மயிலாத்தை வழமை போல் காரையடி கல்லுப்பிள்ளையார் வணக்கம் செய்து வந்தார்கள் இவருடன் கந்தையாவின் மூத்த தமக்கையின் மகள் வள்ளியம்மையாரின் மகன் பொ.விநாயகமூர்த்தியும் சேர்ந்து வணங்கி வந்ததுடன் விஷேட தினங்களில் பொங்கல் செய்து பூசைகளும் செய்து வந்தார். இக்கால கட்டத்தில் இப்பகுதி பொது மக்களும் விசேட தினங்களில் பொங்கல் செய்து வணங்கி வந்தனர். விநாயகமூர்த்தி மடத்தடியில் இருந்து ஓர் பிள்ளையார் கற்சிலையும் கொண்டு வந்து பிரதி வெள்ளி கிழமை தோறும் பூசை செய்து வந்தார். பொது மக்களும் கலந்து கொண்டார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இச்சமயம் நிருவாக சபையாக திரு.மயில்வாகனம், திரு.கோபாலகிருஷ்ணன், திரு.விநாயகமூர்த்தி ஆகியவர்கள் நியமிக்கப்பட்டார்கள். பின்னர் 1997.04.16ஆந் திகதியில் காரைதீவுப் பெரியார்கள் சிலரை அழைத்து திரு.ஜீ.கே.சாம்பசிவம் தனது சகோதரர்களின் அனுசரணையுடன் காரைதீவுப் பொது மக்களுக்கு இக்கோயிலை நன்கொடையாக உறுதி எழுதிக் கொடுத்துள்ளார். உறுதி எழுதிய நொத்தாரிஸ் நாகமனி இராசையா உறுதி இலக்கம்: 1686. இதே தினம் புதிய நிருவாகம் தெரிவு செய்யப்பட்டது.
இவர்கள் காலத்தில் பொ. விநாயகமூர்த்தி தினப்பூசை செய்து வந்தார். ஊரவர்கள் நேர்த்திக்கடனாக முருகன் கோயில், நாகதம்பிரான் கோயில், மணிக் கோபுரம் போன்றவைகளை கட்டி முடித்தார்கள். இதன் பின்னர் கும்பாபிஷேகம் நடை பெற்று குருக்கள் நியமிக்கப்பட்டு தினப்பூசை, திருவிழாக்கள், விஷேட பூசைகள் இடம் பெற்று வந்தது. புதிய நிர்வாகம் தெரிவு செய்யப்பட்டது. 2004ல் ஏற்பட்ட சுனாமி அனர்த்தத்தினால் ஆலயம் சேதமடைந்தது. தலைவர், செயலாளர் எல்லாம் காலமாகி விட்டார்கள். புதிய நிர்வாகம் தெரிவு செய்யப்பட்டு ஆலய புனர்நிர்மாண வேலைகள் நடைபெற்று கும்பாபிஷேகம் செய்வதற்கும் நாள் குறிப்பிட்டு அவ்வேலைகள் நடைபெறுகின்றது.

# ஆதிசிவன் ஆலயம்




காரைதீவு 12 ம் பிரிவில் தென்புற எல்லையில் வெட்டுவாய்கால் ஓரமாக பல குடும்பங்கள் வசித்து வருகிறார். அதில் அமரர் முருகேசு குடும்பமும் ஒன்றாகும். தங்கள் குடும்ப வழிபாட்டுக்காக வீட்டில் உள்ள வேப்ப மரத்தடியில் ஒரு சூலாயுதத்தையும் லிங்கவடிவான ஒரு கருங்கல் விக்கிரகம் ஒன்றையும் வைத்து வழிபட்டுவந்தனர். பின்னர் வீதி அபிவிருத்தி காரணமாக வேப்பமரம் அகற்றப்பட்ட போது ஆற்றங்கரை ஓரமாக இருந்த பனை மரத்தடியில் ஓலக்குடிசை அமைத்து அந்த சூலாயுதத்தையும், லிங்கத்தையும் வைத்து வழிபட்டு வந்தனர். காலப் போக்கில் அந்த பகுதி மக்கள் வெள்ளிக்கிழமை மாலையில் அபிபாகம் வைத்து பலரும் வழி பட்டுவந்தனர் அதன்போது அவ்மக்களுக்கு பல அற்புதங்கள் நிகழ்தன வாழ்கையில் முன்னேற்றம் அடைந்தனர்.

ஓலைக் குடிசையை அகற்றிவிட்டு பலரது பண உதவி, சரீர உதவிகள் மூலம் சிறு கட்டிடம் அமைத்து ஆலயத்துக்கு நிருவாகசபை அமைத்து பூசகரையும் வரவழைத்து வெள்ளிகிழமை மலையில் பூசைகள் சிறப்பாக நடைபெற்று வந்தன காலப்போக்கில் புனர்வாழ்வு அமைச்சியினால் ஒரு நிரந்தர கட்டிட் ஆலயத்துக்கு கிடைக்கப் பெற்றது. அதன் பின் வவுனியாவிலிருந்து சிவலிங்கம் வரவழைக்கப்பட்டு கும்பாவிஷேகம் நடைபெற்றது மாசிமக 10 நாட்கள் உற்சவம், சிவன்ராத்திரி, திருவென்பாவை, நவராத்திரி, கார்த்திகை விளக்கீடு புதுவருடப்பூசைகள் என்பன சிறப்பாக நடைபெற்று வருகின்றன

கடந்த 2004 ஆண்டு சுனாமி அனார்த்தத்தின்போது ஆலயத்தின் சுற்றுமதில் ஆலய உபகரணங்கள் என்பன முற்றாக அழிந்து போன போது ஆலயமும் மூல மூர்த்தியும் எந்தவித சேதமும் இன்றி இருந்து ஓர் அதிசயம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ பத்திரகாளி அம்மன் ஆலயம்



காரைதீவு கிராமத்தின் பல பாகங்களிலும் பல வகையான இந்துக் கோயில்கள் அமைத்து எம் முன்னோர் வழிபட்டுவந்துள்ளனர். எனினும் காளி கோயில் இங்கு எவராலும் கட்டப்படவில்லை.பழமையான முறையில் தெய்வமாடுதல், கட்டுச்சொல்லுதல், நோய் பிணி அகற்றுதல் போன்ற செயற்பாடுகள் நிறைந்த காளி அம்மன் வழிபாடு இக் கிராமத்தில் இல்லாமல் இருந்ததனால் இக் கிராமத்து மக்கள் சம்மாந்துறை,புன்னைச்சோலை,பழுகாமம் போன்ற கிராமங்களுக்குச் சென்றுதான் வழிபாடு செய்து வந்தனர்.

1992ம் வருடம் ஆடித்திங்கள் 11ம் நாள் குமாரன் பூசாரியார் என அழைக்கப்படும் திரு.க.திசவீரசிங்கம், திரு.பெ.கணபதிப்பிள்ளை, திரு.சி.இராமநாதன் என்பவர்களின் கனவிலே தோன்றிய காளி அம்மன் காரைதீவின் தென் பகுதியில் மயானத்தை அண்டிய பிரதேசத்தில் ஒரு காளி கோயில் கட்டும்படி பணித்தருளினார்.இதன்படி 1992ம் வருடம் ஆவணி மாதம் 5ம் நாள் திங்கட்கிழமை இவ்வாலயத்திற்கான கால் நாட்டப்பட்டு ஓலைக்குடிசையாக ஆலயம் உருவாக்கப்பட்டது .ஆரம்ப காலம் முதல் இக் கோயிலின் பூசகர்களாக திரு.இராசையா பூசாரியார், திரு.க.திசவீரசிங்கம் பூசாரியார், திரு.பெ.கணபதிப்பிள்ளை பூசாரியார் ஆகியோர் வழிபாடுகளைச் திறம்பட செய்து வந்தனர்.முதுமை காரணமாக இவர்கள் மூவரும் இறைபதம் அடைந்ததைத் தொடர்ந்து 2000ம் வருடம் முதல் இவ்வாலயத்தின்பூசகர்களாக திரு.சி.சதாசிவம்,திரு.மு.சிவப்பிரகாசம்,திரு.சி.ரமேஸ்,திரு.கி.சரவண பவா ஆகியோர் மிகச் சிறப்புடன் செயலாற்றி வருகின்றனர்.

ஆலயம் உருவாகிய 1992ம் வருடம் அதற்கான மூல விக்கிரகம் வவுனியாவிலிருந்து எடுத்துவரப்பட்டது.இதன் போது இந்த விக்கிரகத்தோடு இணைந்ததாக இருந்த பித்தளையிலான வாள் காணாமல் போய்விட்டது.சிலை நிறுத்த ஏற்பாடாகிக் கொண்டிருக்கும் வேளையில் குறிப்பிட்ட வாள் கோயிலின் எதிரிலுள்ள கடலில் வந்து கரையொதுங்கியதாக ஒரு அன்பர் கொண்டு வந்து தந்தார்.இது காளி தேவியின் பேரருளேயாம்.

முதல் வருடமே உற்சவம் நடாத்தப்பட்டு தீ மிதிப்பு நடைபெற்றது.தொடர்ந்து கல்லாலான கோயில் கட்டப்பட்டு இரண்டு தங்கு மடங்களும் அமைக்கப்பட்டு 2001ம் ஆண்டு மகா கும்பாபிஷேகம் செய்து வைக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2004ம் வருடம் ஏற்பட்ட சுனாமியின் போது இவ்வாலயம் முற்றாக அழிக்கப்பட்டதும் சுனாமியின் போது காளி அம்மன் இழுத்துச் செல்லப்பட்டு கோயிலின் பின்புறம் உள்ள வளவில் வீற்றிருக்கக் காணப்பட்டார்.அந்த இடத்திலேயே தற்போது ஆலயம் அமைக்கப்பட்டுள்ளது. இந்து சமய கலாச்சார அமைச்சினால் வழங்கப்பட்ட ரூபா மூன்று இலட்சத்தோடு சகவாழ்வு மன்றத்தால் வழங்கப்பட்ட ரூபா பதினேழரை இலட்சம் ரூபாவையும் கொண்டு இக் கிராமம்வாழ் சைவப் பெருமக்களின் ஒத்துழைப்போடு இவ்வாலயம் சிறப்புற அமைக்கப்பட்டு 03.07.2009ல் மகாகும்பாபிஷேகம் செய்து வைக்க திருவருள் கூடியுள்ளது.பல அற்புதங்கள் நிகழ்ந்துள்ள இவ்வாலயத்தில் ஒன்றை மட்டும் குறிப்பிட விரும்புகின்றோம்.அதாவது சுனாமியின் போது காளியம்மனுக்குச் சொந்தமான ஏறக்குறைய இரண்டரை இலட்சம் ரூபா பெறுமதியான தங்க நகைகள் காணாமல் போய் விட்டன.இது நடந்து ஒரு மாதத்தின் பின் தலைவா கனவிலே காட்சி கொடுத்த காளி தேவி, நகைகள் இருக்கும் இடத்தைக் காட்டி மறைந்தார்.அதன்படி நான்கு அடி ஆழமான மண் கும்பத்தின் கீழிருந்து பொருட்கள் பெறப்பட்டன.


இவ்வாலயத்தில் அபிவிருத்தியில் முன்னாள் வளந்தோர் கல்வியதிகாரி திரு.இ.விநாயகமூர்த்தி மற்றும் காரைதீவு 05ம் பிரிவில் வதியும் திரு.வி.முத்துலிங்கம் (சி.க) ஆகியோர் சிறந்த பங்காற்றியுள்ளனர்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்தானைக்குட்டி சுவாமி ஆலயம்



சித்தானைக்குட்டி அவர்கள் இந்தியாவின் இராமநாதபுரத்தின் சிற்றரசரின் மகனாக அவதரித்தார். இவரது இளமைப் பெயர் 'கோவிந்தசாமி' ஆகும். இவ்ராச்சியத்தில் ஏற்பட்ட பயங்கரத் தொற்று நோயினால் தனியாகவும், குடும்பத்துடனும் பலர் மாண்டனர். இக்கால கட்டத்தில் இரு மகான்கள் நோயினை தாமே ஏற்று பணியாற்றலாயினர். இப்புதுமையினை அறிந்த சிற்றரசன் மகான்களை அழைத்து உபசாரம் செய்ய எண்ணம் கொண்டு, தனது மகனிடம் மகான்களை அழைத்து வருமாறு பணித்தான். தந்தையின் பணிப்பினை ஏற்று உடன் புறப்பட்ட கோவிந்தசாமி இல்லமெல்லாம் தேடி அலைந்து ஓர் குடிசையில் கண்டு இருவரின் பாதங்களில் வீழ்ந்து வணங்கி நின்றார்.

மகான்கள் கோவிந்தசாமியை கட்டியணைத்து ஆசி வழங்கினர். உள்ளம் துறவறத்தினை நாடியதால் மகான்களுடன் இணைந்து நோயுற்ற மக்களுக்கு பணியாற்றலானார். பூர்வீகத்தொடர்பு ஈழம் நோக்கி ஈர்ந்திழுக்க தூத்துக்குடி சென்று கப்பலில் வருவதற்கான சீட்டினைப் பெறுவதற்கு அன்பர் ஒருவரை அனுப்பி வைத்தனர். இருவருக்கு மட்டுமே பிரயாணச் சீட்டு கிடைத்ததினால் கோவிந்தசாமியை அக்கரையில் விட்டுவிட்டு இரு மகான்களும் கப்பல் ஏறி கொழும்பு துறைமுகத்தை சென்றடைந்த போது கூடிநின்ற மக்கள் கூட்டத்தினுள் கோவிந்தசாமி நிற்பதை கண்ணுற்று தங்கள் சீடனிடம் பொதிந்திருந்த பக்குவ நிலையினை முன்னரே உணர்ந்திருந்ததினால் ஆச்சரியத்தினை காட்டிக் கொள்ளவில்லை. இச்செய்கை மூலம் சித்தராக பரிணமித்தார்கள்.

1920இன் முற்பகுதியிலிருந்து ஈழத்தின் மூலை முடுக்கெல்லாம் நடமாடித்திருந்து பித்தனாகவும், பேயனாகவும், கேலி பண்ணுவதற்குரியவராகவும் தன்னை வெளிக்காட்டி, உள்ளன்புடன் தன்னை நாடிவரும் அன்பர்களின் மனோநிலைக் கேற்ப அருளுரைகள், அற்புதங்கள் மூலம் மக்களை வழி நடத்தியவர் ஜீவ சித்தர் சித்தானைக்குட்டி சுவாமிகள் ஆகும். சுவாமிகள் காரைதீவில் தனக்கென ஆச்சிரமம் அமைத்து தங்கியிருந்தார்கள். நடையாகவும், மாட்டு வண்டிகளிலும் சுவாமிகளை தரிசிப்பதற்கு வருபவர்கள் 'காவு'களில் உணவுப் பொருட்களையும், பிரியமான பண்டங்களையும் காணிக் கையாக வழங்குவார்கள். அவை அனைத்தும் தன்னை நாடிவரும் அடியார்கக்கு பகிர்ந்தளிப்பார்கள்.

ச்வாமி அவர்கள் ஆடாதசித்தே இல்லை என்கின்ற அளவிற்கு பல இடங்களில் தனது சித்து விளையாட்டை ஆடியிருக்கின்றார்கள். அவற்றுள் சில 'கதிர்காமத்தில் முருகப்பெருமானல் அமிர்தத்துளி கிடைக்கப் பெற்றமை, சாண்டோ சங்கரதாஸை இரும்பரசனாக புகழ் பூக்கச்செய்தமை, கடலின் மேலால் நடந்த அதிசயம், கல்முனை சந்தியிலிருந்து கதிர்காமத்தில் தீப்பிடித்த திரைச்சீலையை அணைத்த பெருந்தகை, கதிர்காமத் திருவிழாக் காட்சியை தனது உள்ளங்கையில் காண்பித்த மகான்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நஞ்சு ஊட்டப்பட்டும், தீயிட்டு எரித்த போதும் மீண்டும் எழுந்து நின்று சித்தாடிய சித்தர் அவர்கள் '1951ஆம் ஆண்டு ஆடித்திங்கள் சுவாதி நட்சத்திர தினத்தன்று சமாதி நிலையை எய்தினார்கள்'. இச்செய்தியினை கேள்வியுற்ற பக்த அடியார்கள் நாலா திசைகளிலிருந்தும் காரைதீவு ஆச்சிரமத்தில் ஒன்று கூடினர். 'சித்தர் சேவா சங்கம்' அமைக்கப்பட்டு சமாதி வைப்பதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டது.

தான் சமாதியான பின் 'தனது அடி வயிற்றிலிருந்து இரத்தம் பெருகு'மென்றும் அதன் பின்னரே சமாதி வைக்க வேண்டும் என்று ஏற்கனவே சுவாமி அவர்கள் கூறியிருந்தார்கள். சுவாமி அவர்கள் கூறியிருந்ததிற்கமைய மூன்றாம் நாள் அடி வயிற்றிலிருந்து இரத்தம் பெருகியது. ஒரு யார் கன பரிமாணத்தில் குழியமைத்து நான்காம் நாள் பக்தர்களின் ஆராதனையுடன் சுவாமி அவர்கள் 'சமாதி' வைக்கப்பட்டார்.

பொது மக்களால் தெரிவு செய்யப்பட்ட நிருவாக சபையினரால் சமாதி ஆலயம் வழிநடத்தப்பட்டு வருகின்றது. இச்சபை வருடாவருடம் மீளமைக்கப்படுவது வழமையாகும். 1985, 1987, 1990 காலப்பகுதியில் ஏற்பட்ட வன்செயல் காரணமாக இவ்வாலயம் சேதமாக்கப்பட்டது. 2004ஆம் ஆண்டு ஏற்பட்ட ஆழிப்பேரலை அனர்த்தால் அன்னதானமடம், காளியம்மன், முருகன், பிள்ளையார் ஆலயங்கள் உட்பட சுற்றுமதில், அசைவுள்ள அனைத்து உடமைகளும் முற்றாக அழிக்கப்பட்டது. தற்பொழுது இவ்வாலயம் பொதுமக்களின் பங்களிப்புடனும், இந்து கலாசார அமைச்சின் உதவியுடனும் புனரமைக்கப்பட்டு வருகின்றது.


ஜீவ சித்தர் சித்தானைக்குட்டி சுவாமி அவர்களின் குரு பூசையும், அன்னதானமும் வருடந்தோறும் தமிழுக்கு ஆடித்திங்கள் சுவாதி நட்சத்தர தினத்தன்று பயபக்தியுடன் குருவருளால் சிறப்பாக நடைபெறுகின்றது. உள்ளூர், வெளியூர் அன்பர்கள் இத்தினத்தில் நிறைந்து காணப்படுவர். இவ்வாலயத்தில் அறநெறி வகுப்பு, வெள்ளி கிழமை தோறும் கூட்டுப் பிரார்த்தனை, விசேட தினங்களில் பூசைகளும் நடைபெற்று வருகின்றது. சுவாமிகள் சமாதி அடைவதற்கு முன்னர் ஆடிய சித்துக்கள் போல் சமாதிநிலை அடைந்த பின்னரும் இவ்விடத்தில் சித்துக்கள் தோன்றிக்கொண்டே இருக்கின்றது.

"மூர்த்தி சிறிதானாலும் கீர்த்தி பெரிது"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீமத் நாராயணன் ஆலயம்




இவ்வாலயம் 1800ஆம் ஆண்டு காரைதீவு 03ஆம் பிரிவில் ஒரு சிறிய கோயிலாக ஆரம்பிக்கப்பட்டு மக்களுக்கு அருள்பாலித்துக் கொண்டிருக்கின்றது. இது முரண்டப்போடி என்பவர் தனது தென்னந்தோட்டத்தில் வேலை செய்து கொண்டிருந்த பொழுது கருங்கல்லால் செய்யப்பட்ட ஒரு சிறிய விஸ்ணு சிலை அவர் கண்களுக்குத் தென்படவே, இதை அவர் உறவினர்களுக்கும், அயலவர்களுக்கும் காண்பித்தார். பின்னர் சகலரும் சேர்ந்து இச்சிலையை வைத்து ஒரு விஸ்ணு ஆலயம் அமைத்து வழிபட்டு வந்தனர்.

அவரது மறைவுக்குப் பின்னர் அவரது மகன் சின்னத்தம்பி என்பவரால் பரிபாலிக்கப்பட்டு வந்தது. அவருக்குப்பின் அவரது மனைவி வள்ளியம்மை என்பவரால் பரிபாலிக்கப்பட்டு வந்தது. வள்ளியம்மையின் மறைவுக்குப் பின் வள்ளியம்மையின் உறவினர்களும், ஊர் மக்களும் சேர்ந்து பரிபாலித்தனர். தற்போது பொது மக்களால் ஒரு நிருவாக சபை அமைக்கப்பட்டு புனர்நிர்மாணம் செய்யப்பட்டு ஆலய வழிபாடு நடைபெறுகின்றது. ஐப்பசி மாதத்தில் வரும் ஐப்பசித் திங்களில் இதன் உற்சவம் வெகுவிமர்சையாக கொண்டாடப்பட்டு வருகின்றது. அத்துடன் விஷேட தினப்பூசைகளும் நடைபெற்று வருகின்றது.

கடந்த சில வருடங்களுக்கு (2004 இல்) முன் ஏற்பட்ட கடல்கோள் அனர்த்ததினால் இவ்வாலயம் பாதிக்கப்பட்ட போதும் இதன் மூலஸ்தானமும், அதற்குத் தேவையான தளபாடங்களும் எவ்வித பாதிப்புமின்றி இருந்தது இவ்வாலயத்தின் சிறப்பம்சமாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்நூர் ஜூம்ஆ பள்ளிவாசல்



மாளிகைக்காடு கிராமத்தின் பழம்பெரும் பள்ளிவாசல்களில் ஒன்றாகவும், மார்க்கத்தளமாகவும் இருந்து வரும் அந்நூர் ஜூம்ஆம் பள்ளிவாசல் இப்பகுதியில் நிரந்தரமாக வசித்து வந்த ஊர் பிரமுகர்கள், தச்சுத்தொழிலாளர்கள் மற்றும் மீனவத்தொழிலாளர்களின் அயராத முயற்சிகளின் விளைவாக 1960ஆம் ஆண்டுகளின் ஒரு சாதாரண ஓலைக்குடிசை அமைப்பில் நிர்மாணிக்கப்பட்டது.

இப்பள்ளிவாசலை நிர்மாணிப்பதற்காக அக்கால கட்டத்தில் இப்பகுதியில் வசித்து வந்த ஒரு பெண் தனக்கு சொந்தமான காணியில் ஒரு பகுதியினை இதற்காக அன்பளிப்புச் செய்து உதவியிருந்தார். அன்று ஒரு சாதாரண ஓலைக்குடிசை அமைப்பில் தோற்றுவிக்கப்பட்ட இப்பள்ளிவாசலில் இன்றுள்ளது போன்ற எந்தவொரு அடிப்படை வசதிகளும் அமையப் பெற்றிருக்கவில்லை.

இங்கு மார்க்க கடமையை நிறைவேற்றுவதற்கு பெருமளவான மக்கள் வருகை தராதிருந்த போதிலும், அந்நேரத்தில் இப்பள்ளிவாசல் சூழலில் குடியிருந்தோரும், மீனவத்தொழிலில் ஈடுபட்டு வந்தோரும் சிறந்த முறையில் பள்ளிவாசலை பராமரித்து வந்தனர்.

காலப்போக்கில் குடியிருப்புக்களும் சனநெரிசல்களும் அதிகரித்து வருகையில் இப்பள்ளி வாசலும் கொஞ்சம் கொஞ்சமாக அபிவிருத்தி காணத்தொடங்கியது. பிரதேசத்தின் பல தரப் பட்ட மக்களினதும் பங்களிப்புடன் வளர்ச்சிகாணத் தொடங்கிய இப்பள்ளிவாசலின் பராமரிப்பின் கீழ் மிக நீண்ட காலமாக முஸ்லிம் மையவாடி மற்றும் குர்ஆன் மத்ரஸாவும் பராமரிக்கப்பட்டு வந்தன. இப்பள்ளிவாசல் பராமரிப்பில் உள்ள மையவாடி மாளிகைக்காடுப் பிரதேச மக்களின் பயன்பாட்டிற்கு மட்டுமல்லாது பக்கத்துப் பிரதேசமான சாய்ந்தமருதுப் பிரதேசத்தின் சில பிரிவுகளிலிருந்து கொண்டு வரப்படும் ஜனாஸாக்களையும் நல்லடக்கம் செய்வதற்கும் இன்று வரை பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இது இவ்விரு பிரதேசங்களுக்கு மிடையிலான சகோதரத்துவத் தன்மையையும் மனிதாபிமான வெளிப்பாடுகளாக உணரப்பட்டு வருகின்றது.

சாதாரண தைக்கா பள்ளிவாசல் என்ற அமைப்பில் இருந்த இப்பள்ளிவாசல் கால மாற்றத்தின் விளைவாக சகல பொதுமக்களின் அபரிதமான உதவிகளுடன் கடந்த 2004.05.14ஆந் திகதி முதல் வெள்ளிக்கிழமைகளில் 'குத்பா' பிரசங்கம் செய்யப்படும் ஒரு ஜூம்ஆப்பள்ளி வாசலாக மெருகு பெற்று இயங்கி வருகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் பின்னர் இப்பள்ளிவாசல் நிருவாக சபையின் அதீதமுயற்சிகளின் பயனாக கடந்த 2007.10.21ஆந் திகதி முஸ்லிம் கலாசார அலுவல்கள் திணைக்களத்தில் உத்தியோக பூர்வமாகப் பதிவு செய்யப்பட்டு 20 பேர் கொண்ட நம்பிக்கையாளர் சபையொன்றும் நியமிக் கப்பட்டு இக்கிராமத்தின் சமூக சமய கலாசார நடவடிக்கைகளை தலைமை தாங்கி நடத்துகின்ற ஜும்ஆப் பெரிய பள்ளிவாசலாக இயங்கிக் கொண்டு வருகின்றது.

முஸ்லிம் சமய கலாசார திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஒருபள்ளிவாசலாக இயங்கி வருகின்றமையும், தனித்துவமான வகையில் நம்பிக்கையாளர் சபையின் மூலமாக பரிபாலிக்கப்பட்டு வருகின்றமையும், மாளிகைக்காடு கிராமத்தின் வரலாற்றின் மிகப்பிரமாண்ட மான சரித்திரப்பதிவு என பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. ஏனெனில் இப்பள்ளி வாசலும் சாய்ந்தமருது ஜும்ஆப் பள்ளிவாசலின் நிருவாகத்தின் கீழ் கடந்த காலங்களில் ஓரளவு பராமரிக்கப்பட்டு வந்தமையும், அந்த நிருவாகத்திலிருந்து பிரிந்து யதார்த்த பூர்வமான உட்கட்டமைப்புடன் சுதந்திரமாக இயங்குவதற்காக சந்தர்ப்பம் கிடைத்தமையுமாகும்.


காரைதீவு பிரதேச செயலகப்பிரிவு மற்றும் பிரதேச சபை பிரிவு என்ற உட்கட்டமைப்பிற்குட் பட்ட இப்பள்ளிவாசல் தமிழ் – முஸ்லின் மக்களிடையேயான சகோதரத்துவத்திற்கும், ஒற்று மைக்கும் ஒரு சிறந்த உதாரணமாகத் திகழ்வதுடன், இப்பள்ளிவாசல் தமிழ் மக்களாலும் ஒரு கௌரவத்திற்குரிய இடமாக மதிக்கப்பட்டும் வருகின்றது. இப்பள்ளிவாசலின் இன உறவு களுக்கான எல்லாவித நடவடிக்கைகளும் சிறப்பாக மேற்கொள்ளப்படுகின்றமை குறிப்பிடத்தக்க சிறப்பம்சமாகும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவடிப்பள்ளி ஜும்மாப்பள்ளி வாசல்



இலங்கையின் கிழக்கு மாகாணம் அம்பாரை மாவட்டம் காரைதீவு பிரதேச செயலகப் பிரிவுக் குட்பட்ட மாவடிப்பள்ளி கிராமம் பழம் பெரும் முஸ்லிம் கிராமம். முழுமையாக வயல் நிலங்களால் சூழப்பட்டாலும் கிழக்கே காரைதீவு தமிழ் கிராமம். மேற்கே சம்மாந்துறை முஸ்லிம் கிராமம் இதன் எல்லையாகும். இக்கிராமம் அம்பாரை கல்முனை பிரதான வீதியின் இரு மருங்கிலும் ஒரு குறிப்பிட்ட நிலப்பரப்புக்குட்பட்டுள்ளது.

ஆரம்ப காலத்தில் கிழக்கு புறமாக செல்லும் பிரதான ஆற்றையண்டிய பிரதேசத்தில் (50) குடும்பங்கள் வசித்து வந்தனர். இவர்களோடு இஸ்லாத்தில் வழித்தோன்றலான மௌலானா குடும்பங்களும் வாழ்ந்தனர். மௌலானா வம்சத்தைச் சேர்ந்தவர்கள் தமக்குரித்தான சிறப்பியல்புகளுடன் 'ஹயாத்து நபி' ஸியாத்தை அமைத்து தேசிய மட்டத்தில் சமூகத்திற்கு சேவை செய்தனர். முதன்முதலில் எல்லோருக்குமாக 'முஹைதீன் ஜும்மாப்பள்ளி' ஒன்றை நிறுவி மார்க்க கடமைகளை மேற்கொண்டனர். இதில் ஜனாஸாக்களும் அடக்கம் செய்யப்பட்டன.


வெள்ள அபாயம், குடும்ப அதிகரிப்பு, விவசாய நோக்கம் காரணமாக அரசு நடாத்தி வந்த சரிப் விவசாயப் பண்ணைகளில் சாய்ந்தமருது, கல்முனைப் பிரதேசத்தைச் சேர்ந்த மக்கள் குடியேறினர். 1978இல் அரசின் வீடமைப்புத் திட்டம் காரணமாக வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டதால், 450 குடும்பங்கள் அதிகரிக்கப்பட்டது.

மாவடிப்பள்ளி 'பாம்' என அழைக்கப்படும் பிரிவில் மேலும் ஒரு பள்ளி மக்களின் தேவைக்காக உருவாக்கப்பட்டது. இப்பள்ளி 1989இல் 'மர்க்கஸ்' என மாற்றப்பட்டு உலக முஸ்லீம்கள் கூடும் மாநாடும் நடாத்தப்பட்டு உலகில் பிரபல்யமானது. இன்றும் உலகிலுள்ள முஸ்லீம்கள் வாராந்தம் வந்து செல்கின்றனர். இதன் நிர்வாகம் கொழும்பு மர்க்கஸின் கீழ் நிர்வாகிக்கப்படுகின்றது.

மக்களின் அதிகரிப்பையடுத்து மூன்றாவது பள்ளிவாசல் (மையவாடி) பள்ளிவாசல் உருவாக்கப்பட்டு இதில் ஜனாஸா நல்லடக்கம் (மையத்து அடக்கம்) பள்ளியாகத் திகழ்கின்றது. மக்கள் தொகையும் குடியேறுதலும் அதிகரிக்கப்பட்டு தற்போது 950 குடும்பங்கள் வசித்து வருவதுடன் இரு கிராம சேவகர் பிரிவுகளும் செயற்படுகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மஸ்ஜிதுல் ஸாலிஹீன் ஜும்ஆ பள்ளிவாசல்



காரைதீவுப் பிரதேசத்தில் முஸ்லிங்களின் பள்ளிவாசல்கள், ஸியாரம்கள் (அடக்கஸ்தலங்கள்), சமய பாடசாலைகள் என்பன 19ஆம் நூற்றாண்டிற்கு முன்பிருந்தே காணப்படுகின்றன. இவை அனைத்தும் சாய்ந்தமருது பெரிய பள்ளிவாசல் நிருவாகத்திற்கு உட்பட்டதாகவே இருந்தன.

இவற்றுள் மாளிகைக்காட்டில் உள்ள பள்ளிவாசல்கள், ஸியாரம்கள், மதரஸாக்கள் என்பனவும் காரைதீவு முச்சந்தி தைக்கா, பக்கீர் சேனைத்தைக்கா என்பனவும், மாவடிப்பள்ளியிலுள்ள பள்ளிவாசல்கள், ஸியாரம்கள், மதரஸாக்கள் என்பனவும் அடங்கும்.

முஸ்ஜிதுல் ஸாலிஹீன் ஜும்மாப்பள்ளிவாசலானது 1925ஆம் ஆண்டு அகமது சாலஹ் ஆலிம் அவர்கள் அன்பளிப்புச் செய்த (80'x 65') காணியில் அன்னாரின் தலைமையில் இயங்கிய ஒரு குழுவினரால் சாய்ந்தமருது பெரிய பள்ளிவாசல் நிருவாகத்தின் உதவியுடன் ஆரம்பிக்கப்பட்டது. 2004 நவம்பர் மாதத்தில் இந்த வளவின் தென்மேற்குப்புறமாக (60' x 24') விஸ்தீரணமுள்ள ஒருவளவும், 2007 ஜனவரி மாதத்தில் மேற்குப்புறமாக (40' x 24') விஸ்தீரணமுள்ள ஒரு வளவுஒன்றும் இப்பள்ளிவாசலின் பாவனைக்க வாங்கப்பட்டது. தற்போது அல்-ஹாஜ் எம்.எம்.பளீல் அவர்களின் தலைமையிலான நிருவாகக்குழு இயங்கிக் கொண்டிருக்கின்றது. இங்கு 2007.11.16ஆந் திகதி தொடக்கம் ஜும்மாத் தொழுகை ஆரம்பிக்கப்பட்டு தொடர்ந்தும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. அத்துடன் பெருநாள் தொழுகை நிகழ்வுகளும் நடைபெறுகின்றது.

<u>மாளிகைக்காட்டில் மதரஸாக்கள்</u>

1. அல் – மத்ரசதுல் இர்சாதியா – மாளிகைக்காடு கிழக்கு
2. அல் - மத்ரசதுல் அஹமது ஸாலிஹ் - மாளிகைக்காடு மத்தி
3. அல் - மத்ரசதுல் இப்னு தாபித் - மாளிகைக்காடு மேற்கு

<u>மாளிகைக்காட்டிலுள்ள ஸியாரம்கள்</u>

1. (வெள்ளைக்குட்டி ஆலிம்) அஹமது ஸாலிஹ் ஆலிம் ஸியாரம்
   இது அஹமது ஸாலிஹ் ஆலிம் அடக்கம் செய்யப்பட்ட இடம்.
   இதனை அவரது குடும்பத்தினர் பராமரித்து வருகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காரைதீவு முச்சந்தி ஸியாரம்

1830.10.18ஆந் திகதிய உறுதிப்படி சாய்ந்தமருது பெரியபள்ளிவாசலுக்கு சொந்தமான காரைதீவு முச்சந்தி உள்ள காணியில் இச்சியாரம் இருந்தது. இங்கு ஆரம்பத்தில் இந்தியாவிலிருந்து வந்த மெகஹர்பான் அலிசா கலீபா கலாபத் வலியுல்லாஹ் அவர்கள் குடிசையமைத்து வாழ்ந்து வந்துள்ளார்கள். இவர் மரணமானபின் இவரின் ஜனாஸா இவ்வளவில் அடக்கம் செய்யப்பட்டு, ஸியாரம் அமைக்கப்பட்டது. இதை வைத்து பாராமரிக்க பக்கீர்மார்கள் சாய்ந்தமருது பெரிய பள்ளிவாசலினால் நியமிக்கப்பட்டனர். தற்போது இக்கட்டிடங்கள் யாவும் அழிந்து சில தென்னைமரங்கள் மட்டும் காணப்படுகின்றன.

## பக்கீர் சேனை ஸியாரம்

1983.10.18ஆந் திகதிய உறுதிப்படி சாய்ந்தமருது பெரியபள்ளிவாசலுக்குச் சொந்தமான காரைதீவு பக்கீர் சேனை என்னும் இடத்தில் உள்ள காணியில் ஸியாரம் இருந்தது. இங்கு இந்தியாவைச்சேர்ந்த நூறு கலீபா வலியுல்லாஹ் அவர்களும், அவரது சிசியர் ஞானிமலக்கு அவர்களும் சிறு குடிசையமைத்து வாழ்ந்து வந்துள்ளனர். இவர்களின் ஜனாஸா ஏறாவூரிலிருந்து வந்த போது காரைதீவின் மக்களின் உதவியுடன் இங்கு அடக்கம் செய்யப்பட்டது. சாய்ந்தமருது பெரிய பள்ளிவாசலினால் நியமிக்கப்பட்ட பக்கீர்மார்கள் ஸியாரத்தை பராமரித்து வந்தனர். தற்போது இங்கு கட்டிடங்கள் யாவும் அழிந்து விட்டனர். இந்நிலத்தில் வேளாண்மை செய்யப்படுகின்றது. இரண்டு ஸியாரங்களிலும் நடைபெறும் கொடியேற்றம் கந்தூரி வைபவங்களில் சாய்ந்தமருது, காரைதீவு, நிந்தவூர் பிரமுகர்கள் கலந்து சிறப்பிப்பர்.


ஜெமீல் தளபாட காட்சியறை
&
டிம்பர் டிப்போ

இங்கே உங்களுக்குத் தேவையான அறுவை மரங்களையும், உங்கள் வீட்டிற்குத் தேவையான ஆடம்பரக் கதிரைகள், சோபா செட், குஸன்செட், அலுமாரி, மேசைகள், கட்டில்கள் மற்றும் ஏனைய தளபாடங்களையும் ஒரே கூரையின் பெற்றுக்கொள்ளலாம்.

இல: 36, பிரதான வீதி,
மாளிகைக்காடு.

தொடர்புக்கு:- 067-2223409 / 067-2220243 / 077-3158243





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாளிகைக்காடு மேற்கு பிரதான வீதியில் பிரபல வர்த்தகராகிய அல்ஹாஜ் ஏ.எல்.ஆதம்வாவா அவர்களால் 1999ஆம் ஆண்டு ஆவணி மாதம் 31ஆந் திகதி பள்ளிவாசல் குர்ஆன் பாடசாலை அமைப்பதற்கு 33.54 பேர்ச்சஸ் விஸ்தீரணம் கொண்ட வளவு அன்பளிப்புச் செய்யப்பட்டது. இதன்போது இவ்வளவில் குடியிருந்த அல்ஹாஜ் ஏ.எல்.ஆதம்பாவாவின் சுவிகாரப்புத்திரரின் குடும்பத்தினருக்கு சாய்ந்தமருது ஜும்ஆப் பெரிய பள்ளிவாசல் நிதியிலிருந்து ரூபா 500000/= கொடுத்து வேறோர் இடத்தில் குடியிருக்க ஒழுங்கு செய்யப்பட்டது.

மர்ஹூம் மௌலவி ஏ.எல்.அப்துல் மஜீட் இஸ்லாம், அரபு உதவிக் கல்விப் பணிப்பாளர் அவர்களின் முயற்சியால் 2000ஆம் ஆண்டு ஆவணி மாதம் 28ஆம் திகதி மத்ரஸது ஸைத் பின் தாபித் என்ற பெயரில் குர்ஆன் பாடசாலை அமைக்கப்பட்டு மௌலவி ஏ.எம்.நவாஸ் முஅல்லிமாக நியமிக்கப்பட்டு கடமையாற்றிக் கொண்டிருக்கின்றார்.

மௌலவி அலஹாஜ் எஸ்.எச்.ஆதம்வாவா (மதனி) அவர்களின் முயற்சியால் சவூதி அரேபியாவிலுள்ள உலக இஸ்லாமிய உதவி செய்யும் அமைப்பின் மூலம் இலங்கையில் 227வது பள்ளிவாசலாக மர்ஹூம் நூறா பின்து சாலிஹித் தாஹில் என்ற பெண்மணியின் பெயரால் பணம் அன்பளிப்புச் செய்யப்பட்டு கட்டடப் பொறுப்பாளராக அல்ஹாஜ் எ.செயினுலாப்தீன் மரைக்காயர் தலைமையில் நிருவாகக்குழு அமைக்கப்பட்டு மஸ்ஜிதின் கீழ்மாடி வேலைகள் பூர்த்தியடைந்து 2007ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 14ஆந் திகதி சாய்ந்தமருது - மாளிகைக்காடு ஜும்ஆ பெரிய பள்ளிவாசல் முன்னாள் தலைவர் மௌலவி அல்ஹாஜ் ஏ.ஏ.றசாக் அவர்களால் ஐங்காலத் தொழுகை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

அத்தோடு விசேடமாக ஒவ்வொரு வருடமும் நோன்பு திறப்பித்தல், தராவிஹ் தொழுகை, லைலத்துல் கத்ர் இரவு, நோன்பு,ஹஜ்ஜுப் பெருநாள் தொழுகைகள் மௌலவி மு.வா.இத்ரீஸ் (கதீப்) அவர்களால் மிகச்சிறப்பான முறையில் நடைபெற்றுக் கொண்டு வருகின்றன.

அல்ஹம்துலில்லாஹ்


ஜெமீல் தளபாட காட்சியறை

&

டிம்பர் டிப்போ

இங்கே உங்களுக்குத் தேவையான அறுவை மரங்களையும், உங்கள் வீட்டிற்குத் தேவையான ஆடம்பரக் கதிரைகள், சோபா செட், குஸன்செட், அலுமாரி, மேசைகள், கட்டில்கள் மற்றும் ஏனைய தளபாடங்களையும் ஒரே கூரையின் பெற்றுக்கொள்ளலாம்.

இல: 36, பிரதான வீதி,
மாளிகைக்காடு.

தொடர்புக்கு:- 067-2223409 / 067-2220243 / 077-3158243






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காரைதீவிலுள்ள கல்விக்கூடங்களின் வரலாறு

## விபுலானந்த மத்திய கல்லூரி



முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்தர் அவதரித்ததும், சித்துக்கள் பல புரிந்த சித்தானைக்குட்டி சமாதி கொண்டதும், பத்தினித் தெய்வம் கண்ணகி அம்மனுடன் பல தெய்வக்கோயில்களின் இறைபக்தியைக் கொண்டதுமான எமது கிராமத்தின் கல்விக்கான உயர்கல்விக்கூடம் கமு/விபுலானந்த மத்திய கல்லூரியாகும்.

மூத்ததும் முன்னோடியுமான புனிதமான பாடசாலை கமு/இராமகிருஷ்ண சங்க பாடசாலை அவ்வேளையில் தமிழ்மொழி மூலக்கல்வியே வழங்கிக் கொண்டிருந்த் போது எமது கிராமத்து மக்கள் ஆங்கிலமொழி மூலக்கல்வியைப் பெறுவதற்கு கல்முனை, மட்டுநகருக்கு நகர வேண்டியேற்பட்டது. இதை நிவர்த்தி செய்வதற்காக ஊர்பிரமுகர்கள் மற்றும் கல்விமான்களின் முயற்சியினால் 1950.01.11இல் கடற்கரை வெட்டவெளியிலே அரசாங்க கனிஷ்ட ஆங்கிலப் பாடசாலை *(Govt. Juniors English School)* ஓலைக்கொட்டகையில் கொழும்பிலிருந்து வருகை தந்த 'வித்தியாபதி' திரு.அருணந்தி அவர்களால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. திரு.என்.தங்கராசா அதிபர் உட்பட திருமதி.அ. கருணாகரன் பிள்ளை, திரு.வி.வடிவேல் ஆகிய நான்கு ஆசிரியர்களும் கடமையாற்றினர். திரு.சண்முகம், சச்சிதானந்தமும், ஓய்வு பெற்ற வலையக்கல்விப் பணிப்பாளர் திரு.ரி.மயில்வாகனம் அவர்களும் முதல் மாணவர் தொகுதியில் அடங்குவர். இரண்டாவது அதிபராக களுவாஞ்சிக்குடி திரு.பி.இராஜரெட்ணம் நியமிக்கப்பட்டார். தனது மனைவி ஆசிரியராக கடமை புரிந்ததால், இருவரும் விடுதியில் தங்கியிருந்து செயற்பட ஆங்கில மொழிக் கல்வி சிறப்படைந்தது. தொடர்ந்து 03வது அதிபராக திரு.கந்தப்பு (யாழ்ப்பாணம்) நியமிக்கப்பட்டார். இக்காலத்தில் அரசினர் பயிற்சி கலாசாலை புதுமுகப்பரீட்சைக்காக *(Govt.Training College External Exam)* மாணவர் தயார்படுத்தப்பட்டு சித்தியடைந்தனர். இவ்வேளையில் பொத்துவில் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் ஜனாப்.மேர்சா அவர் களின் உதவியால் ஓலைக்கொட்டில் அகற்றப்பட்டு, கல்லாலான கட்டிடம் கட்டப்பட்டது மாத்திரமல்லாது, பாடசாலையின் பெயர் *Govt. Senior English School*லாகத் தரமு யர்த்தப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ந்து 1960இல் மட்டக்களப்பு திரு.செபமாலை அவர்கள் அதிபராக நியமிக்கப்பட்டார். 1961இல் திரு.எம்.சச்சிதானந்தசிவம் சர்மா அவர்கள் அதிபராக நியமிக்கப்பட்டு இவருக்குத் துணையாக பிரதிஅதிபர் திரு.வே.தம்பிராசா, திரு.எஸ்.சிவசம்பு அவர்களும் இருந்து செயற்பட்டனர். விளையாட்டு மைதானம் அமைக்கப்பட்டது, இரண்டு நேரப்பாடசாலையான அவ்வேளை மாலை நேரப்பாடசாலை முடிந்தபின்னர் ஆசிரியர்களும், மாணவர்களும் கரைச்சைக்குச் சென்று புல்லுக்கற்றை வெட்டி வந்துமைதானம் அமைத்தனர். அக்காலத்தில் ஊரின் பொது நோக்குகருதி கல்விமான்கள், அதிகாரிகள், புத்திஜீவிகள், பொதுமக்கள் கூடி எமது பாடசாலையின் நன்மையும், முயற்ச்சியும் கருதி எடுக்கப்பட்ட முடிவின் பிரகாரம் தரம் 06 தொடக்கம் உயர்வகுப்பு வரை வகுப்புகள் இருக்க வேண்டும் என்றும், காரைதீவின் ஏனைய பாடசாலைகள் ஆரம்பப் பாடசாலையாக அதன் ஊட்டப் பாடசாலைகளாக இருத்தல் வேண்டும் எனவும் முடிவெடுத்தனர்.

1968இல் திரு.யோகம் வேலுப்பிள்ளை அவர்கள் அதிபராக நியமிக்கப்பட்டார். அன்னாரின் ஆளுமையின் நிமித்தம் கற்றல், கற்பித்தல் சிறப்பாக அமைந்தன. அதைத்தொடர்ந்து 1970.04.06இல் திரு.இக்னேஸியஸ் கோயிற்பரம்பில் நியமிக்கப்பட்டார். பிரதி அதிபராக திரு.எஸ்.சிவசம்பு அவர்களுடன் சேர்ந்து பல வழிகளிலும் பாடசாலையை முன்னேற்றினர். சில மாதங்கள் திரு.வே.தம்பிராசா அவர்கள் அதிபராக கடமையாற்றி இருந்தார்.

இக்காலத்தில் வகுப்பறைப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யப்பட்டன. ஆசிரியர்கள், மாணவர்கள், நலன்விரும்பிகள், கழக உறுப்பினர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து வியர்வை சிந்தி, *120'X20'* அளவான ஓர் கட்டிடத்தை கட்டுவித்தனர். மேலும், திரு.கார்த்திகேசு சித்திர ஆசிரியர் அவர்களும் அதிபர் இக்னேஸியஸ் அவர்களும் தம் கைவண்ணங்களால் கட்டிடத்தூண்களில் உலகத்தில் பிரசித்தி பெற்றவர்களின் படங்களை ஓவியங்களாகத் தீட்டி அழகுபடுத்தினர். இச்செயற்பாடு அக்காலத்தில் இலங்கையின் எந்த பாடசாலைகளிலும் இடம் பெறவில்லை எனலாம்.

தொடர்ந்து இக்கல்லூரியின் முதல் மாணவர் குழுவிலுள்ள பழையமாணவரான வலயக்கல்விப் பணிப்பாளராகவும் கடமையாற்றிய திரு.ரி.மயில்வாகனம் 1975இல் அதிபராக நியமிக்கப்பட்டார். இக்காலத்தில் திரு.இ.வினாயகமூர்த்தி அவர்கள், பாராளு மன்ற உறுப்பினர் எம்.சி.கனகரெத்தினம் அவர்களின் அனுசரணையுடன் பாடசாலை மத்திய மகாவித்தியாலயமாக தரமுயர்த்தப்பட்டது. இதைத்தொடர்ந்து திரு.வி.ரி. செல்லத்துரை சைவப்புலவர் அவர்கள் அதிபராகக் கடமைபுரிந்தார். அதன்பின் திரு.சி.நடராஜா அதிபர் அவர்கள் அதிபராகக் கடமைபுரிந்தார். இவ்வேளையில் விஞ்ஞானக்கல்வி முன்னேற்றம் கண்டு பல் வைத்தியத்துறைக்கு எஸ்.புஸ்பராணியும், வைத்தியத்துறைக்கு திரு.ரி.கௌரிகாந்தன் அவர்களும் பல்கலைக் கழகம் சென்றனர். பல மாணவர்கள் பல்வேறுபட்ட துறைக்கும் பல்கலைக் கழகம் சென்றனர்.


பின்னர் திரு.மகாலிங்கம் அவர்கள் அதிபராக நியமிக்கப்பட்டார். இவரின் சிறந்த சேவையின் பின்னர் திரு.பி.பாக்கியராஜா அதிபர் அவர்கள் நியமிக்கப் பட்டார். கொத்தணி அதிபராக இவர் கற்றல், கற்பித்தலுக்கு முன்னுரிமை கொடுத்தார். இவரின் பின்னர் திரு.ரி.சண்முகரெத்தினம் அதிபராக நியமிக்கப் பட்டார். இவரின் காலத்தில் கல்வி புறக்கிருத்தியம், கட்டிடம், நிதி, சமூகத்தொடர்பு போன்ற செயற்பாட்டில் முன்னேற்றம் கண்டது. இவருக்கு திரு.இரா.கிருஷ்ணபிள்ளை, திரு.என்.மனோகரன், திரு.கே.முத்துலிங்கம், திரு.எஸ். கந்தசாமி என்போர் பிரதி, உதவி அதிபர்களாக இருந்தனர். திரு.ரி. சண்முக ரெத்தினம் அதிபரினால் கொண்டு வரப்பட்ட விஞ்ஞானக் கல்வியின் முக்கியத்துவமான தாவரம், மண்டுப்பனை(சைக்கஸ்) இன்றும் எமது கல்லூரியில் உண்டு. தொடர்ந்து திருமதி.எம்..சத்தியதேவா அதிபராக நியமிக்கப்பட்டார். இவருக்கு பிரதி அதிபராக இருந்த திரு.எஸ்.கங்காதரன் அவர்களும்,திரு.கே.முத்துலிங்கம் அவர்களும் செயற்பட்டனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னர் திரு.சீ.அருள்மொழி (*SLEAS*-11)அவர்கள் அதிபராக நியமிக்கப்பட்டார் இவர் ஓர் மறுமலர்ச்சியை பாடசாலைக்கு பல்வேறு வழிகளில் புரிந்தார். பொன்விழாவும் கொண்டாடப்பட்டது. தொடர்ந்து திரு,வி.ஜெயக்குமார் அவர் கள் அதிபராக சேவையாற்றியுள்ளார். அவர் பதவியுயர்வு பெற்றுச் சென்றபின் திரு.கே.முத்துலிங்கம் அதிபர் அவர்கள் நியமிக்கப்பட்டு சேவையாற்றி வரும் போது சுனாமி எமது கிராமத்தில் தாக்கத்தை ஏற்படுத்தியது.

செல்வி சந்திரசேகரம் ஷாலினி என்ற மாணவி அகில இலங்கை ரீதியில் *GCE(O/L) – 2007* பரீட்சையில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்று கல்லூரிக்கு புகழ் ஏற்றி வைத்தார். மேலும், சமகால சாதனையாக தேசிய மட்டத்தில் தமிழ்தினப் போட்டியில் இராசையா யுகேனிதா சாதனை படைத்தார்.

தற்போது அதிபராக 2009.01.03 முதல் திரு.சா.கந்தசாமியும், பிரதி அதிபராக திரு.தி.வித்தியாராஜன் (*SLPS-11*) அவர்களும் சேவை புரிகின்றனர். எமது பாடசாலை 1979இல் சுறாவளியினாலும், 1985-1990இல் இனக்கலவரங்களாலும், 2004இல் சுனாமியாலும் பாதிக்கப்பட்டாலும் தற்போதைய கட்டிட வளர்ச்சிக்கு இத்தாலிய அரசே புகழுக்குரியதாகும்.




*கல்லூரிக்குச் அருகில் அமைக்கப்பட்டுள்ள அனர்த்த முன்னறிவிப்புக் கோபுரம்.....*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராமகிருஷ்ண மிசன் ஆண்கள் பாடசாலை



இப்பாடசாலையானது காரைதீவின் பழம்பெரும் பாடசாலையாகும். இது ஊர் மக்கள் சேர்ந்து கட்டிய 20 மாணவர்களைக் கொண்ட கலவன் பாடசாலையாக இருந்தது. அப்போது இதன் நிர்வாகம் தமிழர் மகா சங்கத்திடம் இருந்தது. ஆசிரியர் வேதனம் மக்கள் பிடியரிசி கொடுத்தல், எண்ணெய்ச் சிந்து பாடுதல் போன்றவற்றால் வழங்கப்பட்டது.

1907இல் புயல் வீசியது. 1908இல் வைத்திலிங்கம் தேசியர் (ஐயர்) தலைமையின் கீழ் புதுப்பிக்கப்பட்டு புராண இதிகாசம், இலக்கணம் கற்பிக்கப்பட்டது.

1915இல் 'அற்வற்கேற' சின்னையாவிடம் ஒப்படைக்கப்பட்டது. மார்கண்டு முதலாளி பங்களிப்புடன் சிரமதானம் மூலம் கட்டடம் கட்டப்பட்டது. சாரதா வித்தியாலயம் கட்டப்பட்டது.

1930இல் ஆர்.கே.எம் நிர்வாகத்திற்கு மாற்றப்பட்டு சுவாமி.ஜீவானந்தா, சுவாமி. நிஸ்கமானந்தா இருவரும் நிர்வாகத்தைப் பொறுப்பேற்றனர்.

1962.12.15இல் அரச பொறுப்பேற்றது.

**இப் பாடசாலையின் அதிபர்கள் பின்வருவோர் கடமையாற்றியிருந்தனர்:-**

| | |
|---|---|
| திரு. அகத்தியர் (தேசிகர் ஐயர்) – திண்ணைப்பள்ளி | |
| திரு. பத்தக்குட்டி (ஆசிரியர்) மண்டூர். | |
| திரு. குஞ்சித்தம்பி | |
| திரு. வேலுப்பிள்ளை (மட்டக்களப்பு) | |
| திரு. கே.கோபாலப்பிள்ளை (முனைக்காடு) | (1935 - 1938) |
| திரு. கே.கணபதிப்பிள்ளை | (1949.07.07 – 1952.04.30) |
| திரு. சீ.தங்கராசா | (1953.02.02 – 1956.09.30) |
| திரு. க.ஆறுமுகம் | (1968.01.01 - 1970.12.31) |
| திரு. க.கந்தவனம் | (1971.01.01 – 1973.07.16) |
| திரு. நமசிவாயம் | (1973.07.23 – 1974.10.07) |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| திரு. எஸ்.சாமிநாதன் | (1974.10.07 – 1978.01.20) |
| திரு. வி.ஆனந்தம் | (1978.01.26 – 1987.08.31) |
| திரு. கு.சித்திரவேல் | (1987.09.01 – 1996.12.23) |
| திரு. சா.கந்தசாமி | (1997.01.01 - 2004.09.30) |
| திரு. க.விநாயகமூர்த்தி | (2004.10.01 - இன்று வரை) |

இப்பாடசாலையில் வருடாவருடம் சிறந்த பெறுபேறு புலமைப்பரிசில் பரீட்சையில் (தரம் 05) கிடைத்து வருகின்றது. அத்தோடு 2007ஆம் ஆண்டு 35 மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றி 11 மாணவர்கள் சித்திபெற்றனர். அம்மாணவர்களுள் செல்வன்.புண்ணியநேசன் சஜிந் என்ற மாணவன் 173புள்ளியைப் பெற்று அம்பாரை மாவட்டத்தில் முதல் மாணவனாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளான் என்பது குறிப்படத்தக்கது. இதேபோல் தமிழ் தினப்போட்டி, ஆங்கில தினப்போட்டி போன்றவற்றிலும் தேசிய மட்டத்திற்கு தெரிவாகி மாணவர்கள் சென்றிருக்கின்றார்கள்.

தற்பொழுது தரம் 01 இருந்து தரம் 05 வரை வகுப்புக்கள் நடைபெறுகின்றதுடன் 173 மாணவர்கள் கல்வி கற்கின்றனர். மாணவர் கற்றல் செற்பாடுகளிலும் புறக்கிருத்திய செயற்பாடுகளிலும் ஈடுபடுகின்றனர். காரைதீவின் முன்னோடியும், மூத்ததுமான இப்பாடசாலை சமுதாயத்திற்கு நற்பிரஜைகளை உருவாக்கியுள்ளது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராமகிருஷ்ண மிஷன் பெண்கள் வித்தியாலயம்



காரைதீவில் பெண்களுக்கென ஒரு தனியான இராமகிருஷ்ண மிஷன் பெண்கள் பாடசாலை இது. ஆரம்பிப்பதற்கான காணியை இராமநாதபிள்ளை, தங்கச்சிப்பிள்ளை தம்பதியினர் சுவாமியிடம் ஒப்படைத்தனர். சுவாமியை முகாமையாளராகக் கொண்ட குழு 1928.11.01ஆந் திகதி கூரையினால் வேயப்பட்டு "சாரதா வித்தியாலயம்" என்ற பெயரில் சிறு பாடசாலையாக ஆரம்பிக்கப்பட்டதுடன், இப்பாடசாலையின் முதல் அதிபராக திரு.டெனிஸ்வாஸ் என்பவர் கடமையேற்றார்.

இப்பாடசாலை முதலில் 11 மாணவகளைக் கொண்டு ஆரம்பிக்கப் பட்டது. பாடங்கள் யாவும் ஓலையில் எழுத்தாணியால் எழுதி பாட ஒப்புதல் செய்யப்பட்டதாக கூறப்படுகின்றது. இவரின் பின் 1930.11.20ஆந் திகதி திரு.சீ.தங்கராசா அவர்கள் இப்பாடசாலை முன்னேற்றத்திற்காக உதவியதுடன், கிராமப் பெரியார்களும் இப்பாடசாலையை வளர்க்க பெரும்பாடுபட்டனர். 1940.10.02ஆந் திகதியில் கடமையேற்ற செல்வி.க.பூபதி என்பவரால் இப்பாடசாலை முகாமையாளரிடம் பொறுப்பளிக்கப்பட்டதால் இப்பாடசாலை சிரேஷ்ட பாடசாலையாக தரம் உயர்த்தப்பட்டு S.S.C பரீட்சைகளும் நடைபெற்றன. அதன் பின்னர் ஆண்களுக்கு வேறாகவும், பெண்களுக்கு வேறாகவும் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. 1947.12.23இல் இப்பாடசாலையின் அதிபராக கடமையேற்ற திருமதி.வி.சாரதாதேவி அவர்களுடைய காலத்தில் ஆங்கிலம் ஒரு பாடமாகவும், நெசவு, ஓலை வேலை என்பவற்றுக்கு தனித்தனி ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டனர். இப்பாடசாலையின் ஒன்று கூடலுக்காக பாடசாலைக்காணியில் அன்னை சாரதாமணி அம்மையாரின் ஆலயம் ஒன்று அமைக்கப்பட்டது.

அதிபர்களான திருமதி.தெய்வநாயகம், திருமதி.கோ.செல்லத்துரை, திரு.பூ.நேசதுரை, திருமதி.செ.பரமலிங்கம் என்போர் மாணவர்களுடைய முன்னேற்றத்திற்கு அரும்பாடுபட்டனர். சிரேஷ்ட பாடசாலையாக 'விபுலானந்தா மகாவித்தி யாலயம்' தரமுயர்த்தப்பட்ட காரணத்தினால், இப்பாடசாலை 'ஆரம்ப நெறிப் பாடசாலையாக' மாற்றப் பட்டது. 01.10.1991இல் இப்பாடசாலையை பொறுப்பேற்ற திரு.ம.சத்தியதேவா அவர்கள் இப்பாடசாலை நலன்கருதி செயலாற்றியமையால் 1993இல் புதிய கட்டிடமும், தண்ணீர் தாங்கியும் அமைக்கப்பட்டது. 1996.11.06இல்கடமையேற்ற திரு.வே.ஜெயக்குமார் அதிபரின் காலப்பகுதியில் பாடசாலை பல முன்னேற்றங்களை அடைந்தமையால் 1998.10.18இல் 'உயர்திரு.சுந்தரம்டிவகலா' என்பவரால் விஷேட செயற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திட்டத்தின் கீழ் ஆரம்ப வகுப்பறைத் தொகுதி கொண்ட பாடசாலையாக அமைக்கப் பட்டது. 2002.03.01இல் அதிபராக நியமனம் பெற்ற திரு.க.முத்துலிங்கம் அவர்களின் காலப்பகுதியில் மாணவர் தொகை 400ஆகவும், ஆசிரியர் தொகை 16ஆகவும் காணப்பட்டதுடன், போட்டிகளிலும், பரீட்சைகளிலும் அதிக மாணவர்கள் சித்தியடைந்தனர்.

முதன் முறையாக 2003இல் தரம் 09ஆம் வகுப்பு ஆரம்பிக்கப்பட்டு மாகாண மட்டப்பரீட்சையில் 22 மாணவர்கள் தோற்றி சிறப்பாக சித்தியடைந்ததுடன், சமூகக்கல்வி போட்டி, தமிழ் மொழித்தினப் போட்டி, ஆங்கிலப்போட்டி என்பவற்றில் மாகாண மட்டத்திலான வெற்றியைப் பெற்றுக்கொண்டனர். இ.கி.ம மாணவர் இல்ல பவளவிழாக் குழுவினரால் இப்பாடசாலையில் 100'X75' அளவான விளையாட்டுமைதானம் அமைக்கப் பட்டு 'சுவாமி ஜீவானந்தாஜீ' அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. 2004.10.01 அன்று சிரேஷ்ட ஆசிரியையான திருமதி.க.செல்லத்துரை ஆசிரியையிடம் அதிபர் பதவி ஒப்படைக்கப்பட்டு சிறப்பாக வடிவமைக் கப்பட்டதன் பின்னர் தற்போது திரு.கே.யோகராஜா அதிபராக 12.09.2005 கடமை யேற்று பாடசாலையை சிறப்பாக நடாத்தி வருகின்றார்.

2009இல் தரம் 10,11 வகுப்புக்களை ஆரம்பிப்பதற்கான அனுமதி கல்வி அமைச்சினால் வழங்கப்பட்டது. இப்பாடசாலையில் தற்போது 487 மாணவர்களும் 27 ஆசிரியர்களும் 02 கல்வி சாரா ஊழியர்களும் கடமையாற்றப்படுவதுடன் கணனிப் பிரிவும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. 2008ஆம் ஆண்டில் 10 மாணவர்கள் மாகாண மட்ட சமூகக்கல்விப் போட்டியில் சித்தி பெற்றதுடன் தேசிய மட்டத்திற்கு முதல் மாணவியாக செல்வி.விநாயகமுர்த்தி சதுட்ஷா என்பவரும் தெரிவு செய்யப்பட்டுள்ளார். கணித விஞ்ஞான போட்டிகளிலும் மாகாண மட்ட போட்டிகளிலும் மாணவிகள் சித்தி பெற்றுள்ளனர். புலமைப்பரீட்சையிலும் 12 மாணவிகள் சித்தியடைந்துள்ளனர். அதில் கல்முனை வலயத்தில் செல்வி.சகாதேவராஜா மைத்ரி அதிகூடிய புள்ளிகளை பெற்றுள்ளார். 2009 ஆண்டில் வலைப்பந்தாட்டக் குழுவினர் வலய மட்டத்தில் வெற்றியைப் பெற்றுக் கொண்டனர். அவர் ஒலிம்பியா போட்டியில் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

2008 டிசம்பர் மாதம் நடைபெற்ற க.பொ.த சா/தா பரீட்சையில் அகில இலங்கை ரீதியாக அதிக புள்ளிகளை பெற்ற முதல் மாணவி செல்வி. ச.சாலினியை கல்வியில் அடித்தளமிட்டு தரம் 09 வரை வழிநடத்திய ஒரு பாடசாலையாக இன்று திகழ்வது இதற்கு சான்றாக அமைகிறது என்றால் மிகையாகாது. எதிர்காலத்தில் இவ்வித்தியாலயம் பெண்களுக்கான ஒரு கல்லூரியாக மாற வேண்டும்.



*திருவெம்பாவை நிகழ்வொன்றின் போது....*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சண்முக மகா வித்தியாலயம்




காரைதீவின் தென்புறத்தே முருகன் கோயில் சுற்றாடலில் வாழ்ந்த மக்களின் கல்வி வேட்கையைத் தீர்க்க சண்முகானந்தா சபையினரின் பெருமுயற்சியால் 1953.04.20இல் உதயமானது. அதன் ஆரம்பப் பெயர் கரடித்தோட்ட தமிழ்க் கலவன் பாடசாலை என்பதாகும்.

இதன் முதல் அதிபராக திருவாளர் க.செல்லையா அவர்களும், அசிரியராக திருமதி.மங்கையற்கரசி சுந்தரம்பிள்ளை அவர்களும் கடமையாற்றினர். தரம் 01 இல் இணைந்து கொண்ட 20 மாணவர்களில் முதல் பதிவாக செல்வன் பெ.வினாயகமூர்த்தி என்பது குறிப்பிடத்தக்கது. அக்கால கட்டத்தில் இராமகிருஷ்ண மிஷன் பல்வேறு இடங்களிலும் தங்கள் நிர்வாகத்தின் கீழ் பல பாடசாலைகளை அமைத்து பராமரித்து வந்தமையால் எமது கிராமத்தைச் சேர்ந்த சுவாமி நடராஜானந்தாஜீ அவர்களின் துணை யோடு சண்முகானந்த சபையிடமிருந்து இப்பாடசாலையையும் தங்களது 26வது பாடசாலையாகப் பொறுப்பேற்று பராமரிக்கப்பட்டு வந்தது. அப்போது தான் கரடித்தோட்ட இராமகிருஷ்ணமிஷன் வித்தியாலயம் என அழைக்கப்பட்டது.

அரசின் இலவசக் கல்வித் திட்டத்தின் அமுலாக்கலின் விருத்தி காரணமாக 1961 முதல் கமு/சண்முகா வித்தியாலயம் என்ற பெயரில் அரசின் நிர்வாகத்தின் கீழ் பொறுப்பேற்கப்பட்டது. அரசு பொறுப்பேற்ற பின்னர் திரு.க.ஆறுமுகம் (அதிபர்), திரு.க.வெற்றிவேல் (அதிபர்), திரு.க.வயிரமுத்து (அதிபர்), திரு. பொன்னம்பலம் (அதிபர்) அவர்கள் தரம் 01 முதல் 08 வரை மாணவர்கள் கற்க வாய்ப்பை உருவாக்கி நடாத்தி வந்தனர். 1991இல் திரு.வெ.ஜெயநாதன் அதிபர் அவர்கள் கடமை யேற்ற போது இரு கட்டிடங்கள் மாத்திரமே காணப்பட்டது.அவர் பாடசாலை பௌதீக வள அபிவிருத்திக்கு வழிசமைத்தார். 2005இல் இப் பரீட்சைக்குத் தோற்றிய செல்வன்.ரி.சுமன் (02 'C',01 'S') சித்தியடைந்தார். 2005இல் திரு.சோமசுந்தரம், அதிபர் அவர்களும் இங்கு கடமையாற்றினார். 2006இல் க.பொ.த(உ/த) பரீட்சைக்குத் தோற்றிய செல்வன் ஆர்.புஸ்பகாந்(03 'A') சித்தி பெற்று சாதனை படைத்தான். 2006 முதல் அதிபர் கே.முத்துலிங்கம் அவர்கள் இப்பாடசாலை பௌதீக மனித வளங்களைப் பயன்படுத்தி மாணவர் கல்வி அபிவிருத்தியில் முன்னேற்றத்தை ஏற்படுத்த அரும்பாடுபட்டு வருகின்றார். இவரது சேவைக் காலத்தில் கணனிப் பிரிவுடன் கூடிய நிருவாகக் கட்டிடம் பெறப்பட்டது குறிப்படத்தக்கதொன்றாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஷ்ணு வித்தியாலயம்




சைவமும் தமிழும் தழைத்தோங்கி முத்தமிழ் முனியான வித்தகன் விபுலானந்த அடிகளை ஈன்றெடுத்த காரைதீவின் தென்கோடியில் காத்தல் கடவுளாகிய மகா விஷ்ணு ஆலயத்தின் அருளொளியில் 1960.09.16இல் விஷ்ணுவித்தியாலயம் என்ற நாமத்துடன் இப்பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. இப்பாடசாலையை அமைப்பதற்குத்தேவையான காணியினை (120′×90′=1800) திருவாளர் வேலுப்பிள்ளை கந்தப்பன் என்பவர் இலவசமாக வழங்கியுள்ளமை பெருமைக்குரியது.இக்காணியில் திரு.ந.தில்லையம்பலம், திருமதி.கணேஸ்வரி. கிருஷ்ணபிள்ளை, திரு.ச. அருணாசலம், திரு.வே.கிருஷ்ணபிள்ளை ஆகியோரின் அனுசரணையுடனும், பாடசாலைச் சூழலில் உள்ள பெற்றோர்கள், நலன்விரும்பிகளின் ஆதரவுடனும் வகுப்பறைக் கொட்டில்கள் அமைக்கப்பட்டு கற்றல், கற்பித்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இப்பாடசாலையின் முதன் மாணாக்கராக செல்வன்.பரமலிங்கம் பாலசுந்தரம் 1960.09.01இல் பதிவு செய்யப்பட்டுள்ளார்.

மேற்படி பாடசாலை சமூகத்தின் கல்வித்தேவை கருதி 1961.05.02 இல் 1527 இலக்கத்தில் பதிவு செய்யப்பட்டு அரசாங்கம் பொறுப்பேற்றதுடன் 72′×15′ வகுப்பறைக் கட்டடம் ஒன்றையும் நிர்மாணிக்க ஆவன செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.இப்பாடசாலைக்கு முதல் தலைமை ஆசிரியராக திரு.சே.பொன்னம்பலம் அவர்கள் கடமையாற்றியுள்ளார். மாணவர் தொகை அதிகரிப்பு பாடசாலையின் கல்வி வளர்ச்சி என்பனவற்றின் அடிப்படையில் பாடசாலைக்குத் தேவையான மேலும் ஒரு வகுப்பறைக்கட்டடம்,கிணறு, மலசல கூடம் என்பனவும் உரிய காலங்களில் கிடைக்கப் பெற்றுள்ளன. 1965ஆம் ஆண்டு முதல் 1991 வரையிலான காலப்பகுதியில் திருவாளர்கள் வி.சிவநிருபசிங்கம், கே.முருகேசபிள்ளை, கே.வேல்நாயகம், பூ.சுந்தரபிள்ளை, இ.தங்கராசா ஆகிய அதிபர்கள் தொடர்ந்து பாடசாலையின் கல்வி அபிவிருத்திக்கு அளப்பெரிய சேவை செய்துள்ளமையை அறிய முடிகின்றது. 1992ஆம் ஆண்டு முதல் 2000ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் திரு.ந.தில்லையம்பலம் அவர்கள் அதிபராக இருந்த காலப்பகுதியில் சுற்றுமதில், அதிபர் காரியாலயம், வகுப்பறைக்கட்டடம் போன்ற பௌதீக வளங்கள் கிடைக்கப் பெற்றுள்ளன.

2000ஆம் ஆணடுக்குப் பின்னர் திரு.தெ.செல்லத்தரை அவர்கள் அதிபராக இருந்த காலத்தில் பாடசாலையின் கலை, கலாச்சாரம் என்பன பிரபல்லியம் பெற்று விளங்கியதுடன் பாடசாலைக்கீதம், பாடசாலைச் சின்னம் என்பன இவரது சேவைக் காலத்திலே அறிமுகப்படுத்தப்பட்டன. 2003ஆம் ஆண்டு முதல் திரு.சா.வேதாசலம் அவர்கள் அதிபராக கடமையேற்று இன்றுவரை கடமையாற்றி வருகின்றார். இக் காலப்பகுதியில் மாணவர்களின் கல்வி அபிவிருத்தியின் அடைவுமட்டம், பௌதிகவள விருத்தி, இணைப்பாடவிதான செயற்பாடுகள் என்பன முன்னேற்றம் அடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. தரம்-05 வரையான வகுப்புகளைக் கொண்ட இப்பாடசாலையில் கூடுதலான மாணவர்கள் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்றமையுடன், இங்கு ஆரம்பக்கல்வியை மேற்கொண்ட பல மாணவர்கள் சமூகத்தில் உயர் நிலையில் உள்ளமையும் இப்பாடசாலையின் வரலாற்றுப்பதிவாகக் கொள்ள முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணகி இந்து வித்தியாலயம்



கண்ணகி இந்து வித்தியாலயம் காரைதீவின் வடக்கு எல்லையில் அமைந்துள்ளது. இப்பகுதி மக்களின் கல்வித் தாகத்தினால் 1960.11.01ஆந் திகதி இப்பாடசாலை ஸ்தாபிக்கப்பட்டது இப்பாடசாலைக்கான காணியை திரு.க.மகேஸ்வரன் விதானை அவர்களால் நன்கொடையாக வழங்கப்பட்டது. அன்றைய நிலமைகளுக்கேற்ப மூன்று தொண்டராசிரியைகளும், ஒரு ஆண் தொண்டராசிரியரும் கடமையாற்றினர். இதன் தலைமையாசிரியராக திரு.க.பொன்னையா அவர்கள் நியமிக்கப்பட்டார். 1962.10.01இல் இப்பாடசாலை அரசாங்கத்தால் பதியப்பட்டு அன்றிலிருந்து காரைதீவு அரசினர் தமிழ் கலவன் பாடசாலையாக இயங்கி வந்தது. அதனைத் தொடர்ந்து பாடசாலையின் பெற்றார் ஆசிரியர் சங்கத்தின் தீர்மானத்திற்கமைய கண்ணகி இந்து வித்தியாலயம் என பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

திரு.க.பொன்னையா தலைமை ஆசிரியர் அவர்களின் தூரநோக்காலும், பெருமுயற்சியினாலும் 1967.07.12இல் காவல் தெய்வமாம் கண்ணகி அம்மன் ஆலயத்திலிருந்து பெறப்பட்ட அடையலுடன் நிரந்தரக் கட்டிடம் ஒன்று அமைக்கப்பட்டது. திரு.க.பொன்னையா அவர்கள் இப்பாடசாலையில் தொடர்ந்து 12 வருடங்கள் திருப்திகரமான சேவை புரிந்துஇளைப்பாறினார். அவரைத் தொடர்ந்து திரு.ந.தில்லையம்பலம் இப்பாடசாலையில் அதிபராக நியமிக்கப்பட்டார். இவர் சொற்ப காலம் சீரிய பணியாற்றினார். அவரைத் தொடர்ந்து திருமதி. செ.தங்கராசா அவர்கள் இப்பாடசாலையின் பொறுப்பை ஏற்றுக் கொண்டார். இவரும் இவரது காலத்தில் சீரிய பணியாற்றினார். 1980ஆம் ஆண்டு திரு.ச.கணபதிப்பிள்ளை இப்பாடசாலையின் தலைமை யாசிரியர் பொறுப்பை ஏற்றுக் கொண்டார். இவரது காலத்தில் பாடசாலையில் விவசாயத் தோட்டங்கள் உருவாக்கப்பட்டன. இதனால் பாடசாலை சூழல் பசுமை சார்ந்ததாக காணப்பட் டது. 1985ஆம் ஆண்டு நடைபெற்ற இனவன்செயலின் போது பாடசாலையின் காரியாலயம் முற்றாக எரியுண்டதுடன், பாடசாலையும் வெகுவாகப் பாதிக்கப்பட்டது. இதனால் மாணவர்கள் விலகல் அதிகமாக காணப்பட்டது. இருந்த போதிலும் தனது பெருமுயற்சியால் இவற்றை யெல்லாம் சீர்செய்து 1986ஆம் ஆண்டு இப்பாடசாலைக்கு புதிய கட்டிடம் ஒன்று அமைக்கப் பட்டு வகுப்பறைத் தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டது. மேலும் இரும்பினாலான பாடசாலை வெளிக்கதவு ஒன்றும் போடப்பட்டது. இக்காலத்தில்புறக்கிருத்திய செயற்பாடுகளில் பாடசாலை வளர்ச்சி கண்டிருந்தது. தமிழ்த்தினவிழாவில் மாவட்டத்தில் முதலிடம் பெற்று, யாழ்பாணத்தில் நடைபெற்ற போட்டியில் கலந்து சிறப்பித்தமை குறிப்பிடத்தக்க ஒரு அம்சமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1986ஆம்ஆண்டு திரு.ச.கணபதிப்பிள்ளை இளைப்பாறியதைத் தொடர்ந்து திருமதி. ஞா.பெரியதம்பி, திருமதி.ம.கணபதிப்பிள்ளை ஆகியோர் பாடசாலைக்கு பொறுப்பாக இருந் தனர். இவர்களும் பாடசாலை வளர்ச்சிக்கு பங்களிப்புச் செய்தனர். 1987.09.01இல் திரு. க.அரசரெத்தினம் அவர்கள் அதிபராக நியமிக்கப்பட்டார். 1991.01.01இல் திரு.பொ.சிவானந்தம் அவர்கள் அதிபராக நியமிக்கப்பட்டார். இவரது காலத்தில் கலை இலக்கிய வளர்ச்சியில் பாடசாலை வளர்ச்சி கண்டது. 1991.10.01இல் அதிபராக திரு.வே.ஜெயக்குமார் அவர்கள் நியமிக்கப்பட்டார். இவரது முயற்சியால் இப்பாடசாலை பல துறைகளிலும் சீரான முன்னேற்றம் அடைந்து வந்தது. இவருக்கு பக்கபலமாக பாடசாலை அபிவிருத்திச் சபை முன்னின்று உழைத்தது. இவரது காலப்பகுதியில் 1992இல் முதன் முதலாக தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சையில் மாணவனொருவன் சித்தியடைந்தமை குறிப்பிடத்தக்கது. அதனைத்தொடர்ந்து கல்வியில் முன்னேற்றம் அடைந்து கொண்டு வந்தது. நீண்டகாலமாக ஆங்கில ஆசிரியர் இல்லாதிருந்த குறைபாட்டை அப்போதிருந்த கோட்டக்கல்விப் பணிப்பாளர் திருமதி.எஸ்.கே.ஆனந்தராஜா அவர்கள் நீக்கி வைத்தார். இவ்வாறாக கல்வியிலும் புறக்கிருத்திய செயற்பாட்டிலும் வளர்ச்சி கண்டு வந்தது.

1996.11.05இல் புதிய அதிபராக திரு.க.முத்துலிங்கம் அவர்கள் நியமிக்கப்பட்டார். இவரது காலத்தில் பல புலமையாளர்கள் உருவாகியதுடன், பாடசாலை பலதுறைகளிலும் வளர்ச்சி கண்டது. அதனைத் தொடர்ந்து 1999.01.20இல் புதிய அதிபராக திரு.க.வினாயகமூர்த்தி பொறுப்பேற்றுக் கொண்டார். அதனைத் தொடர்ந்து 2003.09.02இல் அதிபராக திரு.ச.மணிமாறன் அவர்கள் நியமிக்கப்பட்டார்.

இவரது காலத்தில் பாடசாலை சகல துறைகளிலும் வளர்ச்சி கண்டு வருகின்றது. புறகிருத்திய செயற்பாடுகளில் வலயம், மாவட்டம் என்று முன்னேறிக் கொண்டிருப்பதோடு இவரது காலத்தில் தொடர்ச்சியாக புலமையாளர்கள் உருவாகிக் கொண்டு வருகின்றார்கள். சமூகத்தின் ஒத்துழைப்போடும், கல்வி அதிகாரிகளின் ஒத்துழைப்போடும், பாராளுமன்ற உறுப்பினர்களின் ஒத்தாசையுடனும் பாடசாலை பௌதீக வளங்கள் பெருக்கமடைந்து கஸ்டப் பிரதேச பாடசாலையாக இந்த இப்பாடசாலை வசதியான பாடசாலையாக கணிக்கப்பட்டுள்ளது. மேலும், பாடசாலையின் அழகுத்தோற்றமும், அமைதியான சூழலும், கண்கவர் காட்சிகளும், வியக்க வைக்கும் சிந்தனைத் துளிகளும், கண்ணைக் கவரும் மூலிகைத் தோட்டம் என்பன இப்பாடசாலைக்கு பெருமை சேர்ப்பதால், இப்பாடசாலை ஓர் பிள்ளைநேயப் பாடசாலையாக தேர்ந்தெடுக்கப்பட்டு இப்பிரதேசத்தில் முன்மாதிரியான பாடசாலையாக திகழ்ந்து கொண்டிருக்கின்றது.



*சுனாமியின் பின் அமைக்கப்பட்டுள்ள மிருக வைத்தியர் காரியாலயம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விக்னேஸ்வரா வித்தியாலயம்




1962ஆம் ஆண்டு 15 மாணவர்களுடன் ஒரு ஓலைக்குடிசையில் ஆரம்பிக்கப் பட்டதுதான் எமது வித்தியாலயமாகும். இதை ஆரம்பித்தவர் திரு.சா.குமாரநாயகம் அதிபர் அவர்கள் இங்கு கற்ற மாணவர்களும், கற்பித்த ஆசிரியர்களும் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளில் கூடிய அக்கறை உள்ளவர்களாகவே அன்றிலிருந்து இன்றுவரை செயற்பட்டுக் கொண்டு வருகிறார்கள். அன்றிலிருந்து இன்று வரை 2000ற்கும் மேற்பட்ட மாணவர்கள் தரம் 05 வரை எமது பாடசாலையில் பயின்று இடைநிலைக் கல்வியை கற்பதற்காக வேறு பாடசாலைக்குச் சென்றிருக்கிறார்கள். இவ்வாறு சென்றவர்களுள் பலர் அரச, அரசசார்பற்ற நிறுவனங்களில் உயர்பதவிகளில் தொழில் புரிகின்றார்கள். ஒரு சில மாணவர்கள் கல்விப் பொது சாதாரணப்பரீட்சை, கல்விப் பொது உயர்தரப் பரீட்சைகளில் சாதனைகள் கூட புரிந்திருக்கிறார்கள். இவற்றிற்கெல்லாம் மூலகாரணம் இங்கு வழங்கப்படுகின்ற ஆரம்பக் கல்வி மிகவும் உறுதியானதாக அமைந்திருந்தமையே என்பதில் எந்நவித ஐயமுமில்லை.

இவ்வாறான படிப்படியான வளர்ச்சியுடன் முன்னேற்றமடைந்து வந்த எமது பாடசாலை 2004 டிசம்பர் 26ஆம் திகதி ஏற்பட்ட சுனாமிப் பேரலையால் முற்றாக அழிந்ததுடன், எமது பாடசாலையில் கல்வி பயின்ற 27 மாணவச் செல்வங்களின் உயிர்களையும் பலியெடுத்து எமது பாடசாலைச் சமுகத்தை தாங்கமுடியாத சோகத்தில் ஆழ்த்தியது. முற்றாக அழிந்த எமது பாடசாலையை கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் ஜனாப்.எம்.ரி.ஏ.நிஷாம் அவர்களின் சிறந்த ஆலோசனை, மற்றும் சிபார்சுகளின் அடிப்படையிலும் கௌரவ அமைச்சர் திருமதி. பேரியல் அஷ்ரப் அம்மணி அவர்களின் அரசியல் பலனாகவும், இன்று எமது நாட்டின் வரலாற்றில் ஆரம்பக் கல்விப் பாடசாலைக்கென்று எந்தவொரு மாகாணத்திலும் நிர்மாணிக்கப்படாத 120X30 நீள அகலத்தில் ஒரு நாலு மாடிக்கட்டிடம் சகல வசதிகளுடனும், எமது காரைதீவு மண்ணில் வரலாற்றுப் பெருமையுடன் ஜப்பானிய மக்களினதும் அந்நாட்டு அரசாங்கத்தினதும் அனுசரணையுடன் அமைக்கப்பட்டிருக்கிறது. இது வறுமை மாணவர்கள் கற்கும் எமது சமுகத்திற்கு கிடைத்த மாபெரும் பாக்கியமென்றே கருதவேண்டியுள்ளது. மேலும் 1962ஆம் ஆண்டு தொடக்கம் 2002.06.09 வரை 14 அதிபர்களும், 50ற்கும் மேற்பட்ட ஆசிரியர்களும் இப்பாடசாலையில் கடமையாற்றியுள்ளனர். 2002.06.10இல் இருந்து இன்று வரை திரு.சி.மோகன் அதிபராகவும், தற்போது 10 ஆசிரியர்களும் இப்பாடசாலையில் கடமையாற்றிக் கொண்டிருக்கின்றனர். இவ்வாறு பல்வேறு இயற்கை அனர்த்தங்களுக்கு முகம் கொடுத்து வளர்ச்சியடைந்து வருகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அல்-ஹுஸைன் வித்தியாலயம்



காரைதீவு பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட மாளிகைக்காடு கிழக்கு ஓய்வுபெற்ற அதிபர் அலஹாஜ் ஏ.எம்இப்றாஹீம் அவர்களது அயராத முயற்சியினால் இடைவிலகிய 03 மாணவர்களுடன் 1993ஆம் ஆண்டு ஜூலை 16ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. இப் பாடசாலை அமைப்பதற்கான காணி சாய்ந்தமருது ஜும்மாப் பள்ளிவாசல் நிருவாகத்தினரால் வழங்கப் பட்டது. ஆரம்பத்தில் கமு/மாளிகைக்காடு கிழக்கு அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலை என்ற பெயருடன் இயங்கிய இப்பாடசாலை பின்னர் கமு/ அல்ஹுஸைன் வித்தியாலயம் எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. இப்பாடசாலையின் முதலாவது ஆசிரியராக 1993ஆம் ஆண்டு ஒக்டோபர் 01ஆந் திகதி முதல் கடமையேற்ற அல்ஹாஜ் ஏ.எல்.எம்.எ.நழீர் அவர்கள் 2004.02.10ஆந் திகதி முதல் அதிபராக கடமையாற்றுகின்றார்.

தரம் 01 முதல் தரம் 09 வரையிலான வகுப்புக்கள் உள்ள இப்பாடசாலையில் தற்போது 542 மாணவர்கள் கல்வி கற்கின்றனர். 34 ஆசிரியர்கள் கற்பித்தல் செயற்பாடுகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றனர். இது ஓர் கஷ்டப் பிரதேசப் பாடசாலையாகும். காரைதீவுக் கோட்டத்திலுள்ள 10 பாடசாலை களில் மாணவர் தொகைக்கேற்ப இப்பாடசாலை 04வது இடத்தை வகிக்கும் *Type 02* பாடசாலையாகும். கற்றல், கற்பித்தல் செயற்பாடுகட்கு மேலதிகமாக புறக்கிருத்தியச் செயற்பாடுகளிலும் முன்னிலை வகிக்கின்றது. கடற்கரையிலிருந்து 15 மீற்றர் தூரத்தில் அமையப் பெற்ற இப்பாடசாலை சுனாமி அனர்த்தம் காரணமாக பாதிக்கப்பட்டு உடமைகளும், சொத்துக்களும் முற்றாக அழிந்தன. மாணவர்களின் கல்வி நிலை பாதிக்காத வகையில் கமு/சபீனா முஸ்லிம் வித்தியாலயத்தில் மாலை நேரப்பாடசாலையாக இயங்கி, இலங்கை சகவாழ்வு மன்றத்தின் நிதியீட்டத்தினால் பகுதி நிரந்தரக் கட்டிடம் அமைத்து சுமார் 03 மாதத்திற்குள் பாடசாலை முழுநேரப் பாடசாலையாக மாற்றப்பட்டது.மாளிகைக்காடு மத்தியில் விரிந்து சேறும் சகதியுமாகக் கிடந்த தோணாவின் ஓதுக்குக் காணியில் சுமார் ஐந்து மில்லியன் ரூபா அளவிற்கு செலவு செய்து கல், மண் போட்டு நிரப்பியுள்ளதுடன், சுமார் ஐம்பது மில்லியன் செலவில் கட்டிடமும் அமைத்துக் கொடுத்துள்ளனர் சர்வதேச அரசசார்பற்ற நிறுவனமான *GOAL IRLAND* நிறுவனத்தினர்.

அத்துடன் இப்பாடசாலைக்கு தேவையான தளபாடங்கள், ஒலிபெருக்கி வசதிகள், நூலகப்புத்தகங்கள், பத்து கணணிகள் உட்பட வேறு பல வசதிகளையும் இந்நிறுவனத்தினர் ஏற்படுத்தி தந்துள்ளனர். இப்பாடசாலையின் வளர்ச்சிக்காக வீடமைப்பு பொது வசதிகள் அமைச்சர் பேரியல் அஷ்ரப் அவர்களினதும், வலயக்கல்விப் பணிப்பாளர் அல்ஹாஜ் எம்.ரி.ஏ.நிஸாம் அவர்களினதும் முழு ஒத்துழைப்பே இப்பாடசாலை அமையக்காரணமாகும் தற்போது *CIDA* நிறுவனத்தினர் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் ஊடாக இப்பாடசாலைக்கு பல உதவிகளை செய்து வருகின்றனர். சிறுவர் விளையாட்டு முற்றம், *Photo copy machine,* நூலகப்புத்தகங்கள் போன்ற பொருட்களை பாடசாலைக்கு தந்துள்ளதுடன், பாடசாலைச் சுற்றாடலை அழகுபடுத்தல், நீண்ட கால மரங்களை நடுதல் போன்ற பணிகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சபீனா முஸ்லிம் வித்தியாலயம்



காரைதீவு பிரதேச செயலகத்தைச் சேர்ந்த மாளிகைக்காடு கிராமத்தின் முதலாவது பாடசாலை சபீனா முஸ்லிம் வித்தியாலயமாகும். இப்பாடசாலை அமைவதற்கு முன்னர் இக்கிராம மாணவர்கள் அயற்கிராமமான சாய்ந்தமருதுக்குச் சென்றே கல்வி கற்று வந்தனர். அப்பொழுது காரைதீவு கிராம சங்க அங்கத்தவராக இருந்த மாளிகைக்காட்டைச் சேர்ந்த அலஹாஜ் மு.கா.அப்துல் மஜீத் இக்கிராமத்தின் ஓர் ஆரம்பப் பாடசாலையை நிறுவ முயன்றுள்ளார் என அறிய முடிகின்றது. அதனைத் தொடர்ந்து இவ்வூர்ப்பிரமுகர்களான டாக்டர் ஏ.எல்.ஏ.றஸாக் மற்றும் ஜனாப். ஏ.எம்.ஹனீபா ஆகியோர் அப்போதைய பொத்துவில் தொகுதி முதலாவது பாராளுமன்ற உறுப்பினர் டாக்டர் எம்.ஏ.ஜலால்தீன் அவர்களின் உதவியுடன் இம்முயற்சியில் தீவிரமாக இறங்கியுள்ளனர். அவர்களின் தீவிர முயற்சி, உடல் உழைப்பு, சொந்த பணச் செலவு என்பனவற்றால் சபீனா முஸ்லிம் வித்தியாலயம் 1980.06.29 ஆந் திகதி பொத்துவில் முதல்வர் டாக்டர் எம்.ஏ.ஜலால்தீன் அவர்களினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.


இதன் முதலாவது அதிபராக நிந்தவூரைச் சேர்ந்த ஜனாப் எம்.எம். ஹனீபா கடமை யாற்றியுள்ளார். இவரே தனியொருவராக அதிபராகவும், ஆசிரியாராகவும் பல சிரமங்களுக்கு மத்தியில் கடமையாற்றியுள்ளார். அவ்வாண்டு முழுவதும் 41 மாணவர்கள் சேர்ந்துள்ளனர். சிறப்பாக கல்விப் பணியாற்றிய இவரின் காலத்தில் 60' x 20' முதலாவது நிரந்தரக் கட்டடம் ஒன்றை இப் பாடசாலை பெற்றுள்ளது. இரண்டாவது அதிபராக சாய்ந்தமருதைச் சேர்ந்த ஜனாப் அலியார் முஸம்மில் கடமையாற்றியுள்ளார். மூன்றாவது அதிபராக சாய்ந்தமருதைச் சேர்ந்த ஜனாப் ஐ. எல். பாவா பொறுப்பேற்றுள்ளார் இவருடைய காலத்தில் கல்வி முன்னேற்றத்துடன் பல போட்டி நிகழ்சிகளிலும் பாடசாலை பங்குபற்றி வெற்றியும் பெற்றுள்ளது. பாடசாலை தரமுயர்ந்து தரம் 06 ஆம் வகுப்பு வைப்பதற்கான அனுமதி கிடைத்ததும் இவரின் சாதனையாகும். பின்புசிரேஷ்ட ஆசிரியாராக கடமையாற்றிய சாய்ந்த மருதைச் சேர்ந்த ஜனாப். யூ.எம்.இப்றாகீம் சிறிது காலம் கடமை நிறைவேற்று அதிபராக கடமையாற்றியுள்ளார்.

நான்காவது அதிபராக மாளிகைக்காட்டைச் சேர்ந்த ஜனாப் எம். சி. செயின் நியமிக்கப்பட்டார். இவரின் காலத்தில் பாடசாலை தரமுயர்ந்ததுடன் தரம் 09 வரை வகுப்புக்கள் வைக்கப்பட்டுள்ளது மாணவர்களுக்கான குடி நீர் வசதி, மின்னிணைப்பு, நூலக வசதி, வகுப்பறை மேம்பாட்டுத் திட்டம், விஞ்ஞான அறை, நவீன நூலகம், எல்லை மதில் சுவர், மூன்று மாடிக் கட்டிடம், தென்புற எல்லை வளவு சுவீகரிப்பு என்பன இவருடைய காலத்தில் நிகழ்ந்த அபிவிருத்திகள் ஆகும். இவர் இப்பாடசாலையில் இருந்து ஓய்வுபெற்றதைத் தொடர்ந்து இங்கு சிரேஷ்ட ஆசிரியராகக் கடமையாற்றிய மாளிகைக்காட்டைச் சேர்ந்த ஜனாப் எ. எம். றசீட் சிறிது காலம் அதிபர் பொறுப்பை ஏற்று நடாத்தியுள்ளார் இவரின் குறுகிய காலத்தினுள் மாணவர்களுக்கு Unicef உதவியுடன் பூரணமான குழாய் குடிநீர் வசதிகளைச் செய்து கொடுத்துள்ளார். ஐந்தாவது அதிபராக சாய்ந்தமருதைச் சேர்ந்த ஏ.கே.எம். நியாஸ் நியமிக்கப்பட்டு இன்றுவரை அதிபராக கடமையாற்றி வருகின்றார். தற்போது தரம் 01 – 09 வரையுள்ள வகுப்புக்களில் 147 மாணவர்கள் கல்வி கற்கின்றனர். 16 ஆசிரியர்கள் கற்பித்தல் பணியில் ஈடுபட்டுள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அல்-அஷ்ரஃப் மகா வித்தியாலயம்



1945ஆம் ஆண்டு ஜுன் மாதம் 25ஆம் திகதி கேற் முதலியார் எம்.எஸ்.காரியப்பர் அவர்களினால் அந்திமாலைப் பொழுதில் 'அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலை' என்ற பெயரினைத் தாங்க திறந்து வைக்கப்பட்டது. தரம் ஒன்று தொடக்கம் ஐந்து வரை வகுப்புக்கள் கொண்டதாக 25 மாணவர்களைக் கொண்டு சிறியதொரு ஓலைக் கொட்டிலினுள் ஆரம்பமானது. அதன் அதிபராக ஜனாப் எம்.ஏ.ஐயூப் அவர்கள் கடமையாற்ற, முதன்மை ஆசிரியராக திருமதி எஸ்.கதிரேசப்பிள்ளை தொண்டாற்றினார். சாய்ந்தமருதைச் சேர்ந்த ஜனாப்.ஏ.எம்.காசிம் அவர்கள் அதிபர் பதவி ஏற்ற 1956.07.09 அன்றிலிருந்து, இப்பாடசாலை புதுமெருகு பெறுகிறது.இப்பாடசாலையின் முதல் மாணவராக ஜனாப்.வை.இஸ்மாலெவ்வை ஐந்தாம் தர அரசாங்க புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்று பாடசாலைக்கும், ஊருக்கும் புகழை ஈட்டித்தந்தார்.

1962.06.01ஆம் திகதியன்று ஜனாப்.எம்.எம்.எஸ்.அகமட்லெவ்வை அதிபராகப் பதவியேற்றார்.˙. 1963.01.01இல் சாய்ந்தமருதைச் சேர்ந்த ஜனாப். ஏம்.ஐ.அபுசாலி அவர்கள் தலைமை ஆசிரியர் பொறுப்பினை கையேற்றார். இவரின் பின் 1968ஆம் ஆண்டில் ஜனாப். எம்.வை.எம்.ஏ.லத்தீப் அவர்கள் தலைமை ஆசிரியர் பொறுப்பை கையேற்றார். 1972ம் ஆண்டில் ஜனாப்.ஏ.சி.மொகிதின் பாவா அவர்கள் இப்பாடசாலையின் தலைமை ஆசிரியராகினார். 1976ம் ஆண்டில் ஜனாப்.எம்.ஏ.மஜீட் அவர்கள் தலைமை ஆசிரியர் பொறுப்பை அதன்பின் ஜனாப். எம்.ஐ.எம்.இஸ்மாயில் அவர்கள் தலைமை ஆசிரியராக பதவியேற்று, இப்பாடசாலையின் சுமுகமான வளர்ச்சிக்கு உதவினார்கள். இவருடைய காலத்தில்தான் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசிய தலைவர் கௌரவ 'எம்.எச்.எம்.அஷ்ர.˙.ப்' அவர்களின் தந்தை மர்ஹூம் 'முஹம்மட் ஹுசைன் விதானை' அவர்கள் பாடசாலைக்கு வடகிழக்கிலுள்ள தமக்குச் சொந்தமான காணியை இப்பாடசாலைக்கு வழங்குவதற்கு சம்மதம் தெரிவித்தார்.

இவர்களின் பின் தலைமை ஆசிரியரதக பதவி ஏற்ற ஜனாப் கே.ஏ.மஜீட் அவர்களின் காலத்தில் ஒரே நாளில் இதே பாடசாலையில் கற்ற இவ்வூரைச் சேர்ந்த 06 ஆசிரியர்கள் நியமனம் பெற்று கல்விப் புரட்சியொன்று ஏற்படுத்தப்பட்டது. இவர்களில் 'எம்.வை.சலீம்' ஆசிரியர், உள்ளூராட்சி உதவி ஆணையாளராகப் பதவி உயர்வு பெற்ற கிராமத்தின் முதல் நிருவாக சேவை உத்தியோகத்தர் என்பதும், இவர் இப்பாடசாலையின் அன்றைய ஆசிரியர் குழாத்திலிருந்து சென்றமையும் குறிப்பிடத்தக்கது. 1989.07.15ஆம் திகதி ஜனாப்.இஸட்.ஏ.முகைதீன்பிச்சை அவர்கள் இப்பாடசாலையின் அதிபராக பதவி ஏற்றார். இவரின் இக்காலத்திலேயே ஆண்டு 09 வரை வகுப்புக்கள் வைப்பதற்கான அதி உன்னத முயற்சி மேற்கொள்ளப்பட்டு அதில் வெற்றியும் பெறப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ந்து பிரதி அதிபராக இருந்த ஜனாப். வை.சம்சுதீன் 1994.09.28இல் அதிபராக தெரிவு செய்யப்பட்டார். இப்பாடசாலையில் 1995ஆம் ஆண்டு க.பொ.த.(சா/த) வகுப்புக்களை முதன் முதலில் ஏற்படுத்த அரியமுயற்சி மேற்கொண்டார்.

இதுவரை காலமும் 'மாவடிப்பள்ளி அ.மு.க.பாடசாலை' என அழைக்கப்பட்டு வந்த இப்பாடசாலையை 'அல்-அஷ்ர.்.ப் மகா வித்தியாலயம்' எனஇப்பாடசாலைக்குச் சூட்டி 1995ம் ஆண்டு பெயர் மாற்றத்தினை ஏற்படுத்தினார். வை.சம்சுதீன் அதிபர் சேவையிலிருக்கும் போதே மரணமடைந்ததைத் தொடர்ந்து பிரதி அதிபர் பதவியினை வகித்த ஜனாப் எம்.ஐ.எம்.சைபுதீன் அவர்கள் அதிபர் பதவியினை 2005.01.19ஆம் திகதி பொறுப்பேற்றார். பாடசாலையில் இதுவரை பெறப்படாத க.பொ.த.(சா/த)பரீட்சைப் பெறுபேறு செல்வி ஐ.ஹஸ்னி பானு என்ற மாணவியினால் 2006ஆம் ஆண்டு 07ஏ சித்திகளைப் பெற்றதும், 2007ஆம் ஆண்டில் ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சையில் ஒரே தடவையில் 04 மாணவர்கள் சித்தியடைந்ததும், 2007ஆம் ஆண்டு இலங்கைப் பரீட்சைத் திணைக்கள அகில இலங்கை ரீதியிலான தரப்படுத்தலில் 54.4 புள்ளிகளைப் பெற்று கல்முனைக் கல்வி வலயத்தில் முதல் தர 10 பாடசாலைகள் வரிசையில் தன்னையும் உட்படுத்தியமை இதன் வளர்ச்சிக்கு தக்கசான்றாகும்.




*மாவடிப்பள்ளித் தாம்போதியில்..........*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காரைதீவிலுள்ள பொது நிறுவனங்களின் வரலாறு

## காரைதீவு பிரதேச வைத்தியசாலை



காரைதீவுப் பிரதேசத்தில் பிரதேச வைத்தியசாலை மற்றும் 04 கிராமிய சுகாதார பராமரிப்பு நிலையங்களும், ஆயுர்வேத வைத்தியசாலை, மருந்தகம், வைத்தியசாலை என்பனவும் இயங்கி வருகின்றன பிரதான சுகாதார சேவையை வழங்குவது பிரதேச வைத்தியசாலை ஆகும்.

காரைதீவுக்கான நிரந்தர வைத்தியசாலை 1954இல் கிராம சபைக்கட்டடத்தில் இயங்க முன்பு வாரமொருமுறை நிந்தவூரிலிருந்து ஒரு டாக்டர் வருகை தருவது வழக்கமாகும். உடையாரின் வீட்டில் இந்த மருந்தகம் இயங்கியது .இதற்கு முன்னர் நாட்டு வைத்தியமே பிரபலமாக இருந்தது.நாட்டு வைத்தியம் செய்தவர்களில் மயிலம்பரியாரியார், இளையதம்பி பரியாரியார், சண்முகம் பரியாரியார் போன்றவர்களைக் குறிப்பிடலாம்

1954 இல் கிராமசபைத் தலைவர் திரு.இ. வினாயகமூர்த்தி கிராமசபைக் கட்டிடத்தில் கிளை மருந்தகத்தை உருவாக்கினார். கிழமையில் 3 நாட்கள் இது இயங்கியது. டாக்டர் பி. பேரின்பராஜா முதல் வைத்தியராக இயங்கினார். 1968 களில் சந்தைக்கட்டிடத்தில் மத்திய மருந்தகம் ஸ்தாபிக்கப்பட்டது. தேக்கரண்டி வைத்தியர் நாகமணி முதல் டாக்டராக இயங்கினார்.

1978இல் அமரர் எம்.சி. கனகரெட்ணம் (எம்.பி) மத்திய மருந்தகத்தையும் மகப்பேற்று மருத்துவமனையையும் ஸ்தாபித்தார் பின்னர் மாவட்ட அமைச்சர் ரங்கநாயகி பத்மநாதன் அவர்களின் முயற்சியால் அது சுற்றயல் கூறாக (PU )தரமுயத்தப்பட்டது. இவ் வைத்தியசாலை காலத்தில் டாக்டர்களான எஸ். இரகுநாதன், ரி.நமசிவாயம்,வ.தெய்வீககுமாரன், பி.டயஸ், எஸ்.ரமேஸ், செல்வி.ஆர்.வடிவேல்,பிரசாத் பிரேமவர்த்தன, திருமதி.கே.மகேசன், திருமதி.பி.தமிழ்வண்ணன் ஆகியோர் பொறுப்பு வைத்திய அதிகாரிகளாக சேவையாற்றியுள்ளனர்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடந்த 26.12.2004 இல் ஏற்பட்ட சுனாமியால் காரைதீவு வைத்தியசாலை முற்றாக சேதமாக்கப்பட்டிருந்தது. கடமையிலிருந்த தாதிய உத்தியோகஸ்தர் திருமதி.வதனி அருட்குமரன் பலியானார் பலர் காயப்பட்டனர் ஆமுர் அலுவலகமும் பாதிப்புக்குள்ளாகியது. அன்று வைத்தியப் பொறுப்பதிகாரியாகவிருந்த டாக்டர் பிரசாத் பிரேமவர்த்தனவின் குடும்பம் முற்றாகப் பாதிப்புக்குள்ளானது. அம்புலன்ஸ் சாரதி திரு.ரி. மோகனகுமாரின் சாதுரியத்தினால் அது காப்பாற்றப்பட்டது.

பின்னர் அவ்வாஸ்பத்திரி தற்காலிகமாக பிரதான வீதியிலுள்ள கமநல கேந்திர நிலையத்தில் இயங்கி வந்தது. யாரும் உதவியளிக்கமுன்வராத இவ் வைத்தியசாலைக்கு கண்டி மனித அபிவிருத்தி ஸ்தாபனம் ஒரு விடுதியையும் அன்பியூலன்ஸ் தரிப்பிடத்தையும் பல லட்சரூபா செலவில் அமைத்துக் கொடுத்தது.அமைப்பின் ஆலோசகர் திரு.விரி.சகாதேவராஜா அவர்கள் தாபனப் பணிப்பாளர் பி.பி.சிவப்பிரகாசம் மாவட்ட இணைப்பாளர் பி.ஸ்ரீகாந் ஆகியோரிடம் விடுத்த வேண்டுகோளுக்கமைவாக இவை கிடைக்கப்பெற்றன. தற்போது டாக்டர்.(திருமதி)அஜந்தா சுரேஸ் (MBBS) மாவட்டவைத்திய அதிகாரியாக கடமையாற்றிவருகின்றார். இவரது காலத்தில் பிரதேசவைத்தியசாலை என்ற தரமுயர்வு கிடைக்க பெற்றது.மத்திய மருந்தகமாக ஆரம்பித்த காரைதீவுக்கான வைத்தியசாலை இன்று பிரதேசவைத்தியசாலையாக(*Divisional Hospital*) தரமுயர்த்தப் பட்டுள்ளது. கல்முனை பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளர் டாக்டர் எஸ்.எம். இப்றாலெப்வை அவர்களின் நேரடி கண்காணிப்பின் கீழ் இவ் வைத்திய சாலை புது பொலிவு பெற்று வருவது இவ்வண் ஈண்டு குறிப்பிடதக்கது புதிதாக வைத்தியசாலை அமைப்பதற்கு புதிய காணி தேடி அலையவேண்டி ஏற்பட்டது

அவ்வேளையில் கிழக்கு பல்கலைக்கழக வேந்தர் பேராசிரியர் Dr. தம்பிப்பிள்ளை வரகுணம் அவர்களின் காணி சண்முகவித்தியாலத்துக்கு அருகாமையில் இருப்பது தெரிய வந்தது. இவ்விடயத்தில் வைத்திய சாலை அபிவிருத்திக் குழு முழுமையாக ஈடுபட்டு கண்டிக்கும் மட்டக்களப்பிக்கும் சென்று பேரசிரியர் வரகுணம் அவர்களை சந்தித்து காணியை பெற்றெடுத்தது.

இவ் வேளையில் மேர்லின் ஸ்தாபனம் புதிய வைத்தியசலையை அமைக்க முன்வந்து கட்டுமானத்தை ஆரம்பித்தது 8.42 கோடி ரூபா செலவில் அக்காணியில் வெளிநோயாளர் பிரிவு ஆண்கள் பெண்கள் வீடுதி, மகப் பெற்றுஅறை, சமையலறை, விடுதிகள், வாகன தரிப்பிடம் உள்ளிட்ட பல வசதிகள் ஏற்படுத்தி தரப்பட்டுள்ளன




*புதிய வைத்தியசாலைத் திறப்பு விழாவின் போது...*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அஞ்சல் அலுவலகம்



காரைதீவுக்கான அஞ்சல் அலுவலகம் ஆனது 1950ஆம் ஆண்டிற்கு பிற்பட்ட பகுதியில் காரைதீவு அக்கரைப்பற்று பிரதான வீதியிலுள்ள உடையார் வளவில் உபஅஞ்சல் அலுவலகமாக ஆரம்பிக்கப்பட்டது. இதன் முதல் உபஅஞ்சல் அலுவலராக திரு.கே.அழகரெத்தினம் என்பவர் உபஅஞ்சலதிபராக நியமிக்கப்பட்டார். இவருக்கு 'குயின்ஸ் எலிசபத் மகாராணியின் விருது அவரது பிரதிநிதியால் வழங்கப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது. இதனைத் தொடர்ந்து அஞ்சலராக திரு.ரி.இராசையா, திரு.வி.கனகசபை (பீற்றர்) திரு.ஏ.ஞானரெத்தினம் என்பவர்கள் நியமிக்கப்பட்டனர்.இதன்பின் 1975.12.15 இல் உபஅஞ்சல் அலுவலகம் இரண்டாம் தர அஞ்சல் அலுவலகமாக தரமுயர்த்தப்பட்டது. இது காரைதீவு கண்ணகை அம்மன் ஆலயத்திற்கு சொந்தமான பூம்புகார் கட்டிடத்தில் கடமையை மேற்கொண்டது. இதன் இரண்டாம் தர முதல் அஞ்சல் அலுவலராக திரு.ரி.கனகநாதன் நியமிக்கப்பட்டார். இதனைத் தொடர்ந்து 1995வரை பல தரப்பட்ட இரண்டாம் தர அஞ்சல் அதிபர்கள் கடமையாற்றினர். இக்கால கட்டத்தில் மேலும் மூன்று அஞ்சல் சேவையர்கள் பணிக்கு அமர்த்தப்பட்டனர். திரு.எம்.ஆனந்தசாமி, திரு.எஸ்.மகாதேவன், திரு.கே.தியாகராஜா. இதன்பின் 1995ஆம் ஆண்டு இக்காரியாலயம் முதலாம் தர அஞ்சல் அலுவலகமாக தரமுயர்த்தப்பட்டது. இதன் முதல் அஞ்சல் அதிபராக திரு.என்.சபாரெத்தினம் முதலாம் தர அஞ்சல் அதிபராக நியமிக்கப்பட்டார்.


இதனைத்தொடர்ந்து திரு.எம்.தம்பிஐயா அவர்கள் முதலாம்தர அஞ்சல் அதிபராக கடமையைத்தொடர்ந்தார். இவரது காலத்தில் கண்ணகை அம்மன் ஆலய தர்மகத்தா டாக்டர்.எம்.பரசுராமன் அவர்களும் அவர்களின் தலைமையிலான அறங்காவலர் குழுவினர்களின் ஒத்தாசையும் தற்பொழுது காரியாலயம் அமைந்திருக்கும் காணியைப் பெற்றுக்கொடுத்தனர். இக்காணியில் புதிய கட்டிடத்திற்கான மேற்கொள்ளப்பட்டது. இதன் பயனாக 1999.06.26ஆந் திகதி கௌரவ பாராளுமன்ற உறுப்பினரும், கப்பல் போக்குவரத்து அமைச்சரும், புனர்வாழ்வு அமைச்சருமான எம்.எச்.எம்.அஷ்ரப் அவர்களின் நிதி ஒதுக்கீட்டில் இக்கட்டிடத்திற்கான முதல் கல் கௌரவ அமைச்சர் அவர்களினால் நாட்டப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கட்டிட வேலை தொடர்ந்தும் ஒருசில குறைபாடுகளினால் தாமதமடைந்தது. இதனை கௌரவ நீர்வழங்கல் அமைச்சரும், அம்பாறை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினருமான ஏ.எல்.அதாவுல்லா அவர்களினால் இதன் பற்றாகுறை நிதி வழங்கி கட்டிட புனரமைப்பு செய்யப்பட்டது.

அதன்பின் இங்கு கடமையாற்ற வருகை தந்த எம்.எச்.எம்.பாறூக் பொறுப்பு அஞ்சல் அதிபர் அவர்களின் காலத்தில் 2006.01.23இல் திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரான திரு.கே.பத்மநாதன் அவர்களால் புதிய கட்டிடம் திறந்து வைக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து 2008ஆம் ஆண்டு முதலாம் தர அஞ்சல் அதிபராக பொறுப்பேற்ற திரு.ரி.பாஸ்கரன் தலைமையிலான சகல காரியாலய உத்தியோகத்தர்களின் பங்களிப்பிலும் இக்காரியாலய விநியோகத்திற்கு உட்பட்ட பொது மக்களின் பங்களிப்பிலும் பெற்று நல்ல தபால் சேவையாற்றிவருகிறது.



*அஞ்சல் அலுவலகத்தினையொட்டிய பிரதான பாதையினூடாக....*



*காரைதீவு மைதானத்தின் புதிய அரங்கத் திறப்பு விழாவின் போது....*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவாமி விபுலானந்தர் ஞாபகார்த்தப் பணிமன்றம்



பார் போற்றும் காரேறு மூதூர் ஈன்ற பெருமகன் சுவாமி விபுலானந்த அடிகளார் நினைவாக பிறந்த ஊரில் இயன்ற பணிசெய்ய வேண்டுமெனக் கருதி பல அமைப்புகள் அவரது நாமத்திலே இயங்கி வருகின்றன. அவற்றில், அவரது பணிகளை பூரணமாக முன்னெடுக்க வேண்டும் என்ற உயரிய நோக்கில் 1967இல் சுவாமி விபுலானந்தர் ஞாபகார்த்த பணிமன்றம் உதயமானது. முன்னாள் கிராமத் தலைவர் டாக்டர் மா.பரசுராமன் முதல் தலைவராக நியமிக்கப்பட்டார். அம்மன்றத்தின் முதற்பணியாக 1969இல் அடிகளாருக்கு சிலை எடுக்கப்பட்டது. அச்சிலை பிரதான வீதியிலுள்ள பொது நூலகத்திற்கு முன்னால் (தற்போது *STF* முகாம்) தவத்திரு குன்றக்குடி அடிகளாரால் திறந்து வைக்கப்பட்டது. 1990இல் ஏற்பட்ட இனவன்முறையில் அது சிதைக்கப்பட்டது. சிலை நிறுவிய அன்று அடிகளாரின் வாழ்க்கையினையும், பணியினையும் நினைவுகூற 'அடிகளார் படிவமலர்' என்ற நூல் அமரர் ம.சற்குணத்தினால் தொகுக்கப்பட்டு, வெளியிடப்பட்டது. பின்பு சில காலம் ஸ்தம்பித நிலையிலிருந்த பணிமன்ற செயற்பாடுகள் 1991இல் பிறந்த இல்லத்தை நினைவாலயமாக கட்டியெழுப்பும் முயற்சியுடன் மீண்டும் உயிர்பெற்றது.

அப்போதும் தலைவராக டாக்டர்மா.பரசுமாமன் நியமிக்கப்பட்டார். அப்போதைய நிருவாகம் எடுத்த பெரு முயற்சியின்பேரில் அடிகளாருக்கு மணிமண்டபம் எழுப்ப 1991.11.23இல்அடிக்கல் நடப்பட்டது. இராமகிருஷ்ண மிஷன் இலங்கைத் தலைவர் சுவாமிஆத்மானந்தாஜீ அவர்களின் ஆசீர்வாத்துடன் இது நடைபெற்றது.

அமைச்சர்களான திரு.பி.பி.தேவராஜ், ஜனாப்.ஏ.ஆர்.மன்சூர், ஜனாப்.எம்.ஏ.அப்துல்மஜீட், பாராளுமன்ற உறுப்பினர்களான திரு.ஜெ.திவ்வியநாதன், திரு.சுரேஸ் பிரேமச்சந்திரன், திரு.மாவை சேனாதிராஜா, கலாநிதி நீலன் திருச்செல்வம், திரு.பி.ஸ்ரீனிவாசன், கோ.கருணாகரன், முன்னாள் ஜனாதிபதி ஆர்.பிரேமதாச ஆகியோரின் நிதியுதவினாலும், இறுதியில் அமைச்சர் அஷ்ரப் அவர்களின் 04 இலட்சம் ரூபா நிதியிலும் கட்டியெழுப்பப்பட்டது. 1997இல் திரு.வெ.ஜெயநாதன் தலைவராகவும், திரு.எஸ்.தங்கவேல் செயலாளராகவும் திரு.க.கணேசமூர்த்தி பொருளாளராகவும் நியமிக்கப்பட்டனர். இம்மணிமண்டபத் திறப்பு விழா 1999.06.26இல் நடைபெற்றது. அவ்வமயம் 'அடிகளார் நினைவாலயமலர்' என்ற நூல் திரு.வி.ரி.சகாதேவராஜா அவர்களினால் தொகுக்கப்பட்டு வெளியிடப்பட்டது. அடுத்து சுவாமி நினைவாக மணிமண்டபம் முன்பு சிலை நிறுவப்பட்டது. புல்லுமலை நல்லரெத்தினம் இச்சிலையை வடிவமைத்திருந்தார். சுவாமி ஆத்மானந்தாஜீ சிலையைத் திறந்து வைத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாமி பிறந்த மனை புனித பிரதேசமாக்கப்பட்டு வேறாக்கப்பட்டது. அதன்பின்பு மணிமண்டபத்தின் கீழ்தளத்தை பிரதேச செயலகம் வாடகைக்கு பெற்றிருந்தது. அந்த இடத்தில் தற்போது காரைதீவின் கன்னி பிரதேசசபை 2004ஆம் ஆண்டிலிருந்து இயங்கி வருகின்றது. சுனாமியை அடுத்து மணிமண்டபம் இருவருட காலம் அகதி முகமாகவும் இயங்கியது. தொடர்ந்து மணிமண்டபத்தில் கலைகலாசார நிகழ்ச்சிகளுடன்பல கருத்தரங்குகள், செயலமர்வுகள் நடைபெற்று வந்தன. 'நெனசல'அறிவகமும் இங்கு திறந்து வைக்கப்பட்டது.

இத்துடன் 2009.05.30ஆந் திகதி நடைபெற்ற வருடாந்த பொதுக்கூட்டத்தில் உதவிக்கல்விப் பணிப்பாளர் திரு.வி.ரி.சகாதேவராஜா தலைவராகவும், செயலாளராக திரு.எஸ்.மணிமாறனும் பொருளாளராக மு.ரமணிதரனும் தெரிவு செய்யப்பட்டு மன்ற செயற்பாடுகள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன.

சுவாமி விபுலானந்தன் நாமத்தில் வேறு அமைப்புகள் ஞாபகார்த்த மணி மன்றத்திற்கு அப்பால் விபுலானந்த விளையாட்டுக் கழகம், விபுலானந்தா பொது நூலகம், விபுலானந்த மத்திய கல்லூரி, விபுலானந்தா சனசமூக நிலையம், விபுலானந்தா மொன்டிசூரி, விபுலானந்தா சர்வதேச கல்லூரி என்ற பல நிறுவனங்கள் காரைதீவில் இயங்கி வருகின்றன.




*மணிமண்டப முன்றலில் பிரதேச சபைக்கான வாகனமொன்று கையளிக்கப்படும் நிகழ்வு*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# இராமகிருஷ்ண சாரதா மகளிர் இல்லம்



ஈழமணித் திருநாட்டின் எழில் வளமிக்க மீன்பாடும் தேனாடாம் மட்டுமா நகரின் கண் தென்கோடியிலே ஒருபுறம் நெய்தலும், மறுபுறம் மருதமுமாகிய இரு திணை மயக்கமுற்று செழுமையும், பசுமையும் மிளிரும் காரைதீவு எனும் கிராமம் கற்றோர் உள்ளங்களை கவர்ந்து நிற்கின்றது. அங்கு அகிலம் போற்று முத்தமிழ் வித்தகனாம் மோனத்தவ முனி சுவாமி "விபுலானந்தன்" எனும் நிலவும், சேவையின் சின்னமாம் சுவாமி "நடராஜானந்தர்" எனும் விடிவெள்ளியும் தோன்றி தமிழ் கூறும் நல்லுலகெங்கணும் பிரகாசித்தது. காரைதீவின் இரு முத்துக்களாக போற்றப்படும் இவ்விரு மகான்களின் துறவுப்பிரவேசமே ஜீவசேவை புரிந்து வரும் இராமகிருஷ்ண மிஷனை ஊருக்குள் ஆகர்சித்தது எனலாம். காரைதீவிற்கும் இராமகிருஷ்ண மிஷனுக்கும் பாரம்பரிய வலுத்த உறவு இன்றும் மிளிர்ந்து ஒளிவிடுவதற்கு பத்தினித் தெய்வமாம் கண்ணகி அம்மனின் அருட்பார்வையும் சான்றாக அமைகின்றது.

## மிஷன் பணிகள்

வங்கத்தின் சிங்கம் எனப்போற்றப்படும் வீரத்துறவி விவேகானந்தரால் (1863-1902) தமது குருவான ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சரின் அரியபோதனைகளை உலகிற்கு எடுத்து இயம்பும் முகமாக 1897 இராமகிருஷ்ணமிஷன் ஆரம்பிக்கப்பட்டது. உலகெங்கும் 154 மேற்பட்ட கிளைகளுடன் மக்கள் பணிபுரிந்து வரும் இராமகிருஷ்ண மிஷன் 1890இல் சுவாமி விவேகானந்தரின் வருகையுடன் இலங்கையில் ஆரம்பமானது.கொழும்பில் சுவாமியின் "அல்மோரா" உரையில் கவரப்பட்ட இலங்கை மக்கள் அதனை உருவாக்கி 'வெள்ளவத்தையில்' தலைமையகத்தை அமைத்து, மட்டக்களப்பில் கிளையையும் ஸ்தாபித்தனர். மட்டக்களப்பு கிளையானது இராமகிருஷ்ணபுரம் சிறுவர் மற்றும் மகளிர் இல்லங்களையும் காரைதீவு சாராதா மகளிர் இல்லத்தினையும் பராமரித்து வருகின்றது. இம்மூன்று இல்லங்களினலும் 220 அனாதைச்சிறுவர்கள் பரிபாலிக்கப்பட்டு வருகிறார்கள்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாரதா சிறுமியர் இல்லம்

காரைதீவு ஈன்றெடுத்த தவப்புதல்வன் சுவாமி விபுலானந்தரின் நற்பெரும் சேவையினால் காரைதீவில் ஓர் இல்லம் ஸ்தாபிக்கப்பட்டது. இதுவே இலங்கையின் முதலாவது அனாதைச் சிறுமியர் இல்லமாகும். இதற்கான காணியினை இராசகோபாலபிள்ளை இராமநாதபிள்ளை எனும் "கொஸ்தாபல்" வழங்கியிருந்தார். சுவாமி விபுலானந்தரால் 1936.03.14ஆந்திகதி அடிக்கல் நாட்டப்பட்ட இவ்வில்லம் 1937.01.31இல் அரசாங்க சபைத்தலைவர் சேர்.வைத்திலிங்கம் துரை சுவாமி அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. இது காரைதீவின் காத்தல் தெய்வமாம் ஸ்ரீகண்ணகி அம்மன் ஆலய வீதியிலிருந்து 400 மீற்றர் தொலைவில் நெய்தல் நிலப்படுக்கையில் தென்னை மற்றும் கரும்புச் சோலைகளால் சூழப்பட்ட மனோரம்மியமான இயற்கை செழிப்பு மிக்க சூழலிலே அமையப்பெற்றுள்ளது.

அன்று தொட்டு இன்று வரை மட்டக்களப்பு இராமகிருஷ்ணமிஷன் நிருவாகத்தின் கீழேயே இயங்கி வருவதால், பல சுவாமிகளின் அருட்பார்வை இங்கு கிடைக்கப்பெற்றுள்ளது.

ஆரம்ப கால கட்டத்தில் சுவாமி விபுலானந்தாவும், தொடர்ந்து சுவாமிகளான கேதாரேஸ்வரானந்தா, அபினாஸானந்தா, அவ்வையானந்தா, சர்வாதிதானந்தா, கூடஸ்தானந்தா, நிஸ்கமானந்தா, ரிசிகேசானாந்தா, நிற்கராஜானந்தா, நடராஜானந்தா போன்றோர் இல்லத்தை கண்காணித்து வந்திருந்தனர். அது கிழக்கிற்கு அரும்பணியாற்றிய சுவாமி ஜீவானந்தாஜீயின் கீழ் இருந்து வந்தது. அதேபோன்று அருகில் உள்ள இராமகிருஷ்ண மிஷன் பெண்கள் பாடசாலை அதிபர்களே இல்லத்தை மேற்பார்வை செய்தும் வந்தனர். பின்பு 1960இல் அரசாங்கம் மிஷன் பாடசாலைகளை பொறுப்பேற்ற பின்னர் ஊர்ப்பிரமுகர்களே இல்லத்தை கண்காணித்து வந்தனர். ஆரம்ப கால இல்ல மேற்பார்வையாளர்களாக திருமதி.வெற்றிவேல் தங்கம்மா, நாகரெத்தினம், பி.சாரதாதேவி, பூபதி வேலுப்பிள்ளை(கனகம்மா), சீ.தங்கராசா, சீ.பொன்னையா, வே.தம்பிராசா போன்றோர் நிர்வகித்து வந்தனர். தற்போது மிஷனில் நீண்ட காலம் உழைத்துவரும் பொன்னையா சிவயோகன் மேற்பார்வையிலும் பராமரிப்பிலும் இவ்வில்லம் இயங்கி வருகின்றது.

புதிய கட்டிடம் உருவாக 1992.08.22அன்று மு.பகல் 08.00 மணியளவில் இலங்கிய சுபவேளையில் இலங்கைக்கான இராமகிருஷ்ண மிஷன் உபதலைவர் சுவாமி ஆத்மகனாந்தாஜீயினால் அடிக்கல் நட்டு வைக்கப்பட்டது.

உலகில் மானுட சேவையாற்றும் மகத்தான நிறுவனங்களுள் ஸ்ரீஇராமகிருஷ்ண மிஷனும் ஒன்று "மக்கள் சேவை மகேசன் சேவை என்ற உன்னத இலக்கோடு 1897ஆம் ஆண்டு மே மாதம் 01ஆந் திகதி சுவாமி விவேகானந்தர் ஸ்ரீஇராமகிருஷ்ண மிஷனைத் தோற்றுவித்தார். இன்று அந்நிறுவனத்திற்கு வயது 112, அது உலகின் 154 நாடுகளில் கிளைகளைக்கொண்டு கல்வி, சமூக ஆன்மீகப் பணிகளை ஆற்றிவருகிறது.

## இராமகிருஷ்ணமிஷன் தோற்றம்

அன்னை சாரதாதேவியின் பிரார்த்தனையும், அவரது சீடர் சுவாமி விவேகானந்தரின் ஆர்வத்துடிப்புமே இராமகிருஷ்ண இயக்கத்தின் அத்திவாரக்கற்களாயின. இலங்கையில் கொழும்பில் இவ்வியக்கம் 1930களில் வேரூன்ற முதல் 1925களில் திருமலையிலும், மட்டுநகரிலும் ஆச்சிரமம் உருவானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையைப் பொறுத்தவரை கொழும்பு விவேகானந்த சபை 1902ஆம் ஆண்டு 17ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டதன் மூலம் இராமகிருஷ்ணமிஷனின் பணிகள் கால்கோள்ளிடப்பட்டன எனலாம்.பின்பு நாட்டின் பலபாகங்களிலும் மிஷனின் பணிகள் வியாபிக்கத்தொடங்கிற்று இதற்கு கிழக்கின் புகழ் பூத்த காரைதீவு தமிழ் மண் பெற்றெடுத்த முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளாரும், சேவையின் சுவாமி நடராஜானந்தாஜீயும் பிரதான காரணமாகத் திகழ்ந்தார்கள் என்பதை மறந்துவிட முடியாது.

காரைதீவில் இ.கி.மிஷன்

சுவாமி விபுலானந்தர் கல்விக்கூடங்களையும், இல்லங்களையும் பிரஸ்தாபித்து ஏழை அனாதைச் சிறுவர்களின் வாழ்வில் ஒளியூட்டினார். அவரது பணியை சுவாமி நடராஜானந்தர் அடியொற்றி 26 மிஷன் பாடசாலைகளின் முகாமையாளராக பணியாற்றி இறைசேவை புரிந்தார்.சுவாமிகள் பிறந்த காரைதீவு மண்ணில் மூன்று மிஷன் பாடசாலைகளும், ஒரு சிறுவர் இல்லமும் உள்ளன. 1912இல் காரைதீவு இராமகிருஷ்ணமிஷன் ஆண்கள் பாடசாலை, மிஷன் சகோதரி 'அவபாமியா' அம்மையாராலும், 1928முதல் காரைதீவு இராமகிருஷ்ணமிஷன் பெண்கள் பாடசாலை (சாரதா வித்தியாலயம்) சுவாமி விபுலானந்தராலும் 1953இல் காரைதீவு சண்முகா வித்தியாலயம் சுவாமி நடராஜானந்தராலும் ஆரம்பித்து வைக்கப்பட்டன. சாரதா சிறுமியர் இல்லம் 1937.01.31இல் சேர்.வைத்திலிங்கம் துரைசாமியால் திறக்கப்பட்டது.

இவ்வில்லம் இன்று 39 சிறுமியருடன் மட்டு.இராமகிஷ்ண மிஷன் சுவாமி அஜராத்மானந்தாஜீ சீரிய வழிகாட்டலிலும், இல்லப்பொறுப்பாளர் பொன்னையா சிவயோகனின் மேற்பார்வையிலும் சிறப்பாக இயங்கி வருகின்றது. அங்குள்ள சிறுமியர்கள் நாட்டில் நிலவிய போர்ச்சூழல், வறுமை போன்ற காரணிகளால் அனாதரவானவர்கள். அவர்களை அன்போடு அரவணைத்து, கல்வி ஊட்டி, பராமரித்து வாழ்க்கைக்கு சிறப்பான வழிகாட்டுகின்றது இவ்வில்லம். இன்று 72வருடங்கள் கடந்து விட்டபோதிலும் இன்றும் மாணவர்கள் நேர அட்டவணைப்படியே கருமங்களில் ஈடுபடுவது சிறப்பானதாகும்.

அங்கு நடைபெறுகின்ற உடற்பயிற்சி, காலைப்படிப்பு உணவு உண்ணல், தோட்ட வேலை, பிரார்த்தனை போன்ற அனைத்து செயற்பாடுகிலும் ஒரு கிரமமான ஒழுங்கு நடைமுறைப்படுத்தப்படுகின்றது. உணவு உண்ணுதல், தரையிலிருந்து தேவாரத்துடன் ஆரம்பமாகி தேவாரத்துடன் நிறைவடையும் அண்ணத்திற்குரிய மதிப்பு, கௌரவம் வழங்கப்படுகிறது. சிறுமியர் நெற்றில் எந்நேரமும் திருநீற்றுப் பூச்சி "நீறில்லா நெற்றி பாழ்" என்பார்கள். திருநீறும், சந்தணமும் சதாநெற்றில் துலங்கும். பாடசாலைக்கு மட்டும் சீருடை அல்ல. விடுதியிலும் சீருடைதான் அணிவார்கள். வெளிநிகழ்ச்சிக்கு செல்லும் போது "மிஷன் சிறுமிகள்" என்று குறிப்பிட்டுச் சொல்லும் அளவிற்கு நடந்து கொள்வார்கள்.

ஒரு தசாப்த காலத்திற்கு மேலாக இல்லப்பொறுப்பாளராக இறைபணி ஆற்றிவரும் காரைதீவைச் சேர்ந்த பொன்னையா சிவயோகன் 1968லிருந்து மிஷன் சேவையில் தன்மை இணைத்துக் கொண்டவர். மட்டக்களப்பு உறுகாம விவசாயப் பண்ணை, கதிர்காம மடம் போன்ற மிஷன் ஸ்தாபனங்களில் இறைசேவையாற்றிய அவருக்கு 1991இல் இந்தியா சென்று மிஷன் கிளைகளையும், சுவாமிகளையும் தரிசிக்கும் வாய்ப்பு கிட்டியது.

அதன் பெறுபேறாக 1997.01.17இல் இராமகிருஷ்ணமிஷனின் 13வது தலைவர் ஸ்ரீமத் சுவாமி ரங்கனானந்தஜீ மகராஜியிடம் மந்திர தீட்சை பெற்றார். 1991இல் இருந்து காரைதீவு சாரதா சிறுமியர் இல்லத்தின் பொறுப்பாளராக சீரிய பணியாற்றி வருகின்றார். அவருடைய கண்டிப்பான அன்பான நிர்வாகம் இல்லத்தை மேலும் ஒருபடி உயர்த்திக் காட்டுகின்றது. ஆதரவற்ற சிறுமியர் இல்லத்திற்கு நம்மவர் உதவவேண்டியது தார்மீகக் கடமை. 'பிறருக்கு உதவி செய்யும் போது அது வெளிக்காட்டப்படுகின்றது' என்று சுவாமி விவேகானந்தர் கூறுகிறார்.எனவே, சாரதா அன்னையின் அருளால் அவரது பெயரிலுள்ள இல்லம் மேலும் சிறப்பாக ஒளிவீச நாமும் வாழ்த்துவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்




முன்வரிசை இடமிருந்து வலம்

திருமதி. ஜெயவதனி, திருமதி. செல்வரதி அருள்வரதன், திரு. எம். உதயகுமார், ஜனாப். ஏம். எம். உவைஸ், திரு. கே. இராஜேஸ்வரன், திருமதி. இந்திரா செல்வநாயகம், திருமதி. சந்திரகுமாரி, ஜனாப். வி. தாஹீர், திரு. வி. சிறிநாதன், எஸ். இராமகிருஷ்ணன், ஜனாபா. மரிஸ்பானா, ஜனாபா. சஹீதா, திருமதி. சுகந்தினி திருக்குமரன், திருமதி. நர்நிதா லோகேஸ்வரன், திருமதி. யோகராணி ஜெயராஜ்.

பின்வரிசை

செல்வி. எம். மனோன்மணி, திரு. இ. பாக்கியநாதன், திரு. வி. மோகனதாஸ், திரு. வி. சுதர்சன், ஜனாப். எம். எஸ். கலீல், ஜனாப். யூ. எல. எம். அமீன், திருமதி. மலர்விழி தயாபரன், திருமதி. ஜ. சபாபதி, திரு. எஸ். நாகேந்திரன், திரு. எஸ். நமச்சிவாயம், ஜனாப். எம். ஜ. எம். ரமீஸ், ஜனாப். ஏம். ஜ. எம். பாயீஸ், திருமதி. சிவகௌரி கண்ணதாசன், திருமதி. ஜெயநந்தினி பிரபாகரன், திருமதி. ஜெயந்திமலர் ராகவன், திரு. இ. யோகராஜன், திரு. எ. திருச்செல்வம், ஜனாப். ஏ. எல. எம். பைறுஸ், ஜனாப். யு. எல். எம். ஹமீட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பலநோக்கு கூட்டுறவுச் சங்கம்



1943ஆம் ஆண்டு எமது கிராமத்தின் மக்களுடைய தேவைகளை பூர்த்தி செய்யும் முகமாக, 03 கிராம சேவகர் பிரிவுகளுக்கும், 03 பண்டகசாலைகள் முதன் முதலில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இது இரண்டாம் உலகமகாயுத்தத்தின் உணவுத் தட்டுப்பாட்டை நீக்கும் முகமாக பங்கீட்டு முறையை அறிமுகப்படுத்தியது. இப்பண்டகசாலை முறையே சரஸ்வதி பண்டகசாலை, பரமேஸ்வரி பண்டகசாலை, இலட்சுமி பண்டகசாலை என அரசாங்க அதிபர் ஊடாக பதிவு செய்யப்பட்டன. இப்பண்டகசாலைகள் 10ரூபா பங்குப் பணத்துடன் ஒவ்வொன்றும் சுமார் 100பேர் அங்கத்தவர்களாகக் கொண்ட பண்டகசாலையாக உருவாக்கப்பட்டது. இது மக்களுடைய உணவு முத்திரைக்கான பொருட்களை பங்கீட்டு வழங்குவதுடன் அவர்களுடைய ஏனைய தேவ்வகளையும் பூர்த்தி செய்யும் அமைப்பாக காணப்பட்டது. அந்தக் காலப்பகுதியில் வட-கிழக்கு பதிவாளராக திரு-குக் எனபவர் இருந்தார்.

இவ்வாறு செயற்பட்ட பண்டகசாலை 1950ஆம் ஆண்டு விளைபொருள் உற்பத்திச் சங்கமாக இம் மூன்றும் இணைக்கப்பட்டது. இது மக்களுடைய உணவு முத்திரைகளுக்கு பொருட்களைப் பங்கீடு செய்வதுடன் எமதுபகுதியில் உற்பத்தி செய்யப்படும் நெல், ஏனைய தானியங்கள் போன்றவற்றைக் கொள்வனவு செய்து அவற்றை சந்தைப்படுத்தி அதனூடு இலாபம் பெற்று வளர்ச்சி அடைந்தது.

அதன் பின்பு 1957ஆம் ஆண்டு கௌரவ அமைச்சர் பிலிப்குணவர்த்தன அவர்களால் மாவட்ட ரீதியாக(பல.நோ.கூட்) சங்கங்கள் உருவாக்கப்பட்டது. இவ்வியாபாரம் நெல் சந்தைப்படுத்தல் ஏனைய பல வேலைகளைச் செய்தது. இது கல்முனையை மையமாகக்கொண்டு பிரதேச ரீதியாகவே ஏற்படுத்தப்பட்டது. இதற்கு ஒவ்வொரு கிராமங்களில் இருந்தும் இருவர் தெரிவு செய்யப்பட்டனர். எமது கிராமத்தில் இருந்த முதன் முதலாக திரு.ச.சாமிநாதன் ஆசிரியர் அவர்கள் தலைவராகவும், திரு.ந.கணேசன் அவர்கள் செயலாளராகவும் இருந்தனர்.

1970ஆம் ஆண்டு கல்முனை, சாய்ந்தமருது, காரைதீவு ஆகிய இம் மூன்று பிரதேசங்களும் இணைந்த கரவாகுப்பற்று பல.நோ.கூ.சங்கம் என்ற பெயரில் பிரதேச ரீதியாக செயற்படத் தொடங்கியது. இதில் கல்முனை, கரவாகு வடக்கு, கல்முனை தெற்கு, சாய்ந்தமருது, காரைதீவு என்பன இணைந்திருந்தன. இதற்கு தலைவராக திரு.எம்.சி.அகமட் அவர்கள் கடமையாற்றினார். செயலாளராக எமது கிராமத்தை சேர்ந்த திரு.இ.வினாயகமூர்த்தி அவர்கள் கடமையாற்றினார்.

1972ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட இல:05 கூட்டுறவுச்சட்டப்படி காரைதீவு ப.நோ.கூ.சங்கம் கல்/148 எனும் பதிவிலக்கத்தோடு 1975ஆம்ஆண்டு 02ஆம்மாதம் 28ஆம்திகதி தனியான சங்கமாக பதிவு செய்யப்பட்டு செயற்படத் தொடங்கியது. அப்பொழுது 06 கிளைகள் உருவாக்கப்பட்டன. இவை காரைதீவு பிரதேசத்திற்கு 04எனவும், மாளிகைக்காடு, மாவடிப்பள்ளி என்பனவற்றிக்கு தலா 01 ரீதியாகவும் ஏற்படுத்தப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு உருவாக்கப்பட்ட காரைதீவு ப.நோ.கூ சங்கத்திற்கு டாக்டர் எம்.பரசுராமன் அவர்களை தலைவராக கொண்ட இயக்குனர் மன்றம் உருவாக்கப்பட்டது. அதில் 04 பேர் தமிழர்களும், இருவர் முஸ்லிம்களும் (01.டாக்டர்.எம்.பரசுராமன் (தலைவர்), 02. திரு.க.கிருஷ்ணபிள்ளை, 03.திரு.இ.வடிவேல்(*T.A*),04.திரு.யோ.பொன்னையா,05.ஜனாப்.*I. M*கூசைன்,06.ஜனாப்.எம்.ஆதம்பாவா) தெரிவு செய்யப்பட்டனர். பொது முகாமையாளராக திரு.*P.*பத்மநாதன் அவர்களும், முதலாவது கூட்டுறவு பரிசோதகராக திரு.*K.*சுந்தரமூர்த்தி அவர்களும் இருந்தனர். இந்த புதிய முதலாவது இயக்குனர் மன்றம் சங்கத்திற்கு புதிய லொறி ஒன்றை கொள்வனவு செய்தது. அதனைத் தொடர்ந்து 1978-1979 காலப்பகுதியில் திரு.இ.விநாயகமூர்த்தி தலைவராகக் கொண்ட இயக்குனர் மன்றம் தெரிவு செய்யப்பட்டது. 1980-1981 காலப்பகுதில் திரு.*K.*சண்முகம்பிள்ளை தலைவராகவும், 1982-1983 காலப்பகுதியில் திரு.அ.பூபாலபிள்ளை, ஜனாப்.எ.எம்.சரீப். ஜனாப்.எ.எம்.மீராசாய்வு ஆகியமூவரும் இடைக்கால நியமன இயக்குனர்மன்ற உறுப்பினர்களாகவும் தெரிவு செய்யப்பட்டனர்.அத்துடன் 1983–1984, 1985-1986 காலப்பகுதிகளில் திரு.*A.*பூபாலரெட்ணம் தலைவராகவும், 1987–1988 காலப்பகுதியல் திரு.*K.*வேலுப்பிள்ளை தலைவராகவும், 1989–1993 காலப்பகுதியல் திரு.விஜெகநாதன் தலைவராகவும், 1993-1997 காலப்பகுதியல்திரு.*N.*தில்லையம்பலம்தலைவராகவும், 1997-1998 இயக்குனர்மன்ற உறுப்பினர்கள் (06மாத காலம் இடைக்கால நிர்வாகம்) திரு.எஸ்.இராமகிருஷ்ணன் (பிரதேச செயலாளர்,காரைதீவு),திரு.கே.தாமோதரம்,திரு.கே.தட்சணாமூர்த்தி, ஜனாப்.எ.எல்எம்.எ.நளீர்,1998-2002 காலப்பகுதியில் திரு.கே.தட்சணாமூர்த்தி தலைவராகவும், 2002.10.04 - 2003.05.02 ஆணையாளர் அவர்களால் நியமனம் செய்யப்பட்ட இடைக்கால நிர்வாகம் திரு.ச.மனோகரன் (தலைவர்), திரு.கே.தட்சணாமூர்த்தி, திரு.இரா.கிருஸ்ணபிள்ளை அவர்களும், 2003.05.03 – 2006.09.09 காலப்பகுதியில் திரு.என்.லோகராஜ" தலைவராகவும், 2006.09.09 தொடக்கம் இன்று வரை திரு.எல்.எ.ரமேஸ்குமார் தலைவராகவும், பொது முகாமையாளர்களாக, திரு.*P.*பத்மநாதன், திரு.*S.*இன்பசிவம், திரு.*P.*பொற்குணம், திரு.*T.*கோபாலன் திரு.*E.*கோபாலசுவாமி ஆகியோர் கடமையாற்றி வந்துள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் வங்கி




கிழக்கில் எழிமிகு கடற்கரை வளம் ஜொலிக்கவும், மேற்குப் பக்க மருத நிலம் செல்வத்தை அள்ளி வழங்கும் காரைதீவில் இனமத பேதமின்றி மக்கள் வாழ்ந்து வருகின்றனர். இவர்களின் செல்வத்தையும், வளங்களையும் மேன்மை படுத்தவும், அவர்களின் வாழ்வாதாரத்தை கட்டியெழுப்பவும் வங்கியொன்று கிராமத்திற்குத் தேவையென உணரப்பட்ட சந்தர்ப்பத்திலே மக்கள் வங்கியானது. தனது ஒரு கிளையை காரைதீவிலே நிறுவுவதற்கு தீர்மானித்தது. இதன் பயனாக மக்கள் வங்கியானது முதன்முறையாக காரைதீவில் பரிணமித்தது என்பது காரைதீவு வரலாற்றில் குறிப்பிடத்தக்கதொன்றாகும்.

1979ஆம் ஆண்டு முதன்முறையாக காரைதீவில் நிறுவப்பட்ட போதிலும், சில காரணங்களினால் 1983ஆம் ஆண்டு மீண்டும் கல்முனைக் கிளையுடன் இணைக் கப்பட்டது. இதனைப் பொறுத்தவரையில் காரைதீவு வங்கி வரலாற்றில் கசப்பான ஒரு சம்பவமாகவே காணப்பட்டது எனக்கூறலாம். எனினும் பலரது முயற்சிகளின் பயனாக மீண்டும் காரைதீவிலேயே மக்கள் வங்கிக்கிளை 1994ஆம் ஆண்டு மாசி மாதம் 07ஆந் திகதி பிராந்திய முகாமையாளராக பி.வீ.பத்திரன இருந்த காலத்தில் மீள ஆரம்பிக்கப்பட்டது. இதற்கு திரு.எஸ்.ஞானநாயகம் அவர்கள் முகாமையாளராக இருந்து வங்கி நடவடிக்கைகளை செவ்வனே வழிநடத்தி வந்தார். இக்கால கட்டத்தில் பல்வேறு துறைகளிலும் படிப்படியாக வளர்ச்சிகானத் தொடங்கி வங்கி திரு.எஸ்.பொன்னுத்துரை அவர்களால் 02வதாக நிர்வகிக்கப்பட்டது. இவரது காலத்திலும் குறிப்பிடத்தக்க வளர்ச்சிகளை கண்டது எனக்கூறலாம். 03வதாக திரு.ஜே.கே.பிரான்ஸிஸ் முகாமையாளராகப் பதவியேற்று வங்கியை துரிதமாக முன்னேற்றினார் எனக்கூறுவது பொருத்தமானதே.


2000ஆம் ஆண்டு காரைதீவு வங்கிக்கு ஒரு மைல்கல் என்றே கூறக்கூடியதாக உள்ளது. ஏனெனில் தற்போது இயங்கி வரும் புதிய மக்கள் வங்கிக்கட்டிடத்திற்கு வங்கி நடவடிக்கைகள் மாற்றப்பட்டு புதிய வடிவில் உருப்பெற்றது இவ்வாண்டிலே தான். இதனை உதவி பொது முகாமையாளராக இருந்த ஜனாப்.எம்.எம்.□னீபா அவர்கள் உத்தியோகபூர்வமாகத் திறந்து வைத்தார். இவை தவிர 2000ஆம் ஆண்டு அம்பாறைப் பிராந்தியத்தில் காரைதீவுக்கிளை பல்வேறு விதத்திலும் வீறுநடைபோட்டு வெற்றிநடை கொண்டது எனக்கூறலாம். அதாவது, *Short Term Action Plan* எனும் நிகழ்ச்சித் திட்டத்தில் விருதை வென்றெடுத்தது. அத்தோடு *Short Term Deposit Mobilation*இல் அம்பாறைப் பிராந்தியத்தில் 02ஆம் இடத்தைப் பெற்று அனைவரது பாராட்டுக்கும் உள்ளானது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதுதவிர, *Monthly Deposit Mobilation Scheme* இலும் சேமிப்புக் கணக்குகளை அதிகரித்ததால், 2000ஆம் ஆண்டு வங்கிக்கிளையானது விருதுகளைப் பெற்றது என்பது குறிப்பிட்டுக் கூறக்கூடியதாக உள்ளது. பின்னர் 04வது முகாமையாளராக திரு.எம்.சிவயோகராஜா அவர்களிடம் வங்கி கையளிக்கப்பட்டது. திருப்திகரமான முறையில் வங்கிச்சேவை மக்களுக்கு வழங்கப்பட்டு கொண்டிருந்தன. இவ்வேளை 05வது முகாமையாளராக திரு.எஸ்.உருத்திரன் வங்கியைப் பொறுப்பேற்று சிறந்த முறையில் சேவையை மக்களுக்காக வழங்கிக் கொண்டிருந்தர். தற்போது திரு.ஏ.ஜெயசித் அவர்கள் வங்கிப் பொறுப்பேற்று சிறந்த முறையில் நிருவகித்து வருகின்றமை யாவருமறிந்ததே.

மக்கள் வங்கியானது பொதுவான பல நிகழ்காலத் திட்டங்களை கிளை ரீதியாக நடைமுறைப்படுத்தி வருகின்றது. அந்த வகையில் மகளிர் தினத்தை முன்னிட்டு 'வனிதா வாசனா' அதிஸ்டலாப சீட்டிழுப்பை ஒவ்வொரு ஆண்டும் சித்திரைப் புதுவருட தினத்தன்று நடத்தி வருகின்றது. ஒவ்வொரு மாதமும் வாடிக்கையாளரின் சேமிப்புத்திறமை ஊக்குவிக்கும் வகையில் 'ஜெயஸ்ரீ' திட்டத்தின் மூலம் ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு அதிஸ்டசாலியைத் தெரிந்தெடுத்து பரிசுகளை வழங்கி வருகின்றது. சிறுவர்களுக்கான சேமிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்கும் வகையில் பிறந்த குழந்தைகளுக்கு தாமே இலவசமாக 'இசுறு உதான' கணக்கை ஆரம்பித்துக் கொடுக்கின்றது. இதுதவிர *'Freedom of Birth'* என்ற திட்டத்தின் கீழ் சுதந்திர தினத்தன்று பிறக்கும் குழந்தைகளுக்கு இலவசமாக கணக்கொன்றை ஆரம்பித்து கொடுப்பதுடன் பரிசுப் பொருட்களையும் வழங்குகின்றது. *"First Day First Lesson"* எனும் திட்டத்தின் மூலம் புதிதாக பாடசாலைகளுக்குச் செல்லும் சிறார்களுக்கு புதிய 'சிசுதான கணக்கை' ஆரம்பிப்பதுடன், அவர்கள் வைப்பிலிடும் அதேயளவு பணத்தொகைக்கு சமமான அதேயளவு தொகையை இலவசமாக அக்கணக்கு வைப்பிலிட்டு கொடுக்கின்றது. இது அல்லாமல் மக்கள் வங்கி சாதனையாளர்களை கௌரவிப்பதை விட்டு வைக்கவில்லை. தேசிய மட்டத்தால் க.பொ.த(சா/த) பரீட்சையில் முதலாமிடத்தைப் பெற்ற செல்வி எஸ்.ஷாலினிக்கு பரிசில்கள் வழங்கி, பராட்டு தெரிவிக்கப்பட்டது. 2003ஆம் ஆண்டு புலமைப்பரீட்சை பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டது. இவைதவிர மக்களின் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்யும் நோக்கில் பலவகையான கடன்களை வழங்கியிருக்கின்றது என்பதும் வங்கிச் சேவையில் நாம் குறிப்பிட்டுச் சொல்லக்கூடியதாக உள்ளது.

இவ்வாறாக காரைதீவிலே மக்கள் வங்கியானது பல பிரச்சினைகளையும், சவால்களையும் தாண்டி ஒரு முன்னேற்றப் பாதையில் சென்று கொண்டிருக்கின்றது. அந்தந்தக் காலங்களில் சேவையாற்றிய முகாமையாளர்களும், ஊழியர்களும் அர்ப்பணிப்புடன் சேவையாற்றினர் என்று கூறுவதில் எவ்வித ஐயமுமில்லை. இனிவரும் காலங்களில் மக்களுக்கான உன்னத சேவையை வழங்குவதில் மக்கள் வங்கியானது என்றைக்குமே பின்னிற்காது. அத்துடன் அனைத்து மக்களது ஒத்துழைப்பும், ஆதரவும் இனிவரும் காலங்களில் தொடர்ந்தும் கிடைக்கும் என்ற எதிர்பார்ப்புடன் இன்றும் இது பரிணமித்து வீறுநடைபோடுகின்றது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதவிப்பணியாளர்கள்



இருப்பவர்கள் (இடமிருந்து வலம்)
திரு. எஸ். ஜெகராஜன், திரு. எஸ். இராமகிருஷ்ணன்
நிற்பவர்கள் (இடமிருந்த வலம்)
திரு. மை. ஜோ. செ. கிறிஸ்ரன் செலர், திருமதி. ஜெ. செ. பிறிசில்டர் செலர், செல்வி. ந. நளினி, செல்வன். த. சுரேஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நன்றி நவிலல்...

காரைதீவு பிரதேச செயலகமும் காரைதீவு பிரதேச கலாச்சார பேரவையும் இணைந்து காரைதீவு பிரதேசசெயலகத்தில் முதல் தடவையாக நடாத்தும் பிரதேச இலக்கிய விழா 2009 ஆனது சிறப்பாக நடைபெறும் முகமாக சிரமம் பாராது பலரும் பல வழிகளிலும் எமக்கு தம்மால் இயன்ற உதவிகளை முழு மனதுடன் அள்ளி வழங்கியுள்ளனர். அவர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியினை கூறிக்கொள்கின்றோம்.விசேடமாக,இந்த விழாவானது சிறப்பாக நடைபெறுவதற்கு ஏதுவாக எங்கள் அனைவரையும் வழிநடத்திச் சென்ற பிரதேச செயலாளரும் பிரதேச கலாச்சார பேரவை தலைவருமாகிய திரு.எஸ்.இராமகிருஷ்ணன் ஐயா அவர்கள்,

இவ்விழாவின் சகல பொறுப்புக்களையும் சிரமம்பாராது செய்ததுடன் கவனத்துடன் செயலாற்றுவதற்கு எம்மைவழி நடத்திச் சென்ற உதவி பிரதேச செயலாளர் திரு.எஸ்.ஜெகராஜன் ஐயா அவர்கள், இலக்கிய விழா சிறப்பு மலர் சிறப்பாக வெளிவருவதற்கு எம்முடன் அயராது உழைத்த மலர் வெளியீட்டுக்குழு இணைப்பாளர் திரு.வி.ரி.சகாதேவராஜா, உதவிக்கல்விப் பணிப்பாளர், சம்மாந்துறை அவர்கள்.

சிறப்பு மலரானது சிறந்த முறையில் வெளிவர கணினி வேலைகள் புரிந்த அலுவலக பொதுமுகாமைத்துவ உதவியாளர் திருமதி.அகிலா விஜயகுமார் அவர்கள், அவருக்கு உதவியாக இருந்து செயற்பட்ட செல்வி.உ.நிசாந்தினி அவர்கள், கணனி தரவுப் பதியுனர் திருமதி.ஹேமலதா வித்தியானந்தன், பொதுமுகாமைத்துவ உதவியாளர், திருமதி.விஜிதா தட்சிதானந்தன் அவர்கள்,விழாச்சிறப்பு மலருக்கு ஆசிச்செய்திகளையும் வாழ்த்துக்களையும் அன்புடன் வழங்கிய பெருந்தகைகள், பிரதேச கலாச்சார கீதம் ஆக்கித்தந்த திரு.இரா.கிருஷ்ணபிள்ளை ஐயா அவர்கள், பல்வேறு பயன் உள்ள ஆக்கங்களை சிறப்பு மலருக்கு ஆக்கித்தந்த புத்திஜீவிகள், ஆலய, பள்ளி வாசல் வரலாறுகளை தந்து உதவிய நிறுவன தலைவர்கள், பாடசாலை வரலாறுகளை திரட்டி தந்த அதிபர்கள், பல்வேறு சுவையான கவிதைகளை ஆக்கி தந்த கவிஞர்கள், புத்தகத்தினை சிறப்பான வகையில் வடிவமைத்துத் தந்த நிதுஸ் அச்சகத்தினர் பிரதேச செயலக சணச ஸ்தாபனத்தினர் பிரதேச கலாச்சார விழாவானது சிறப்புற அமைவதற்கு தேவையான நிதியினை வழங்கிய கிராம அபிவிருத்தி சங்கங்கள், மாதர் கிராம அபிவிருத்தி சங்கங்கள், காரைதீவு வாழ் பொதுமக்கள் ,வியாபார நிறுவனங்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், வெளிநாட்டு நண்பர்கள் அனைவருக்கும்,

விழா மேடையை அலங்கரித்த கலை நிகழ்ச்சிகளை ஒழுங்கமைத்து தந்த நிகழ்ச்சி ஒழுங்கமைப்பாளர்கள், நிகழ்ச்சிகளில் பங்குபற்றிய மாணவர்கள், இலக்கிய போட்டி நிகழ்வுகளில் பங்கு பற்றிய மாணவர்கள், ஆக்கங்களை திருத்தி தந்த ஆசிரியர்கள் அனைவருக்கும்,

இவ்விழாவின் வெற்றிக்கு அயராது உழைத்த நிதி அறவீட்டு குழுவினர், மலர் வெளியீட்டு குழுவினர், போட்டி வெளியீட்டு குழுவினர், விழா ஒழுங்கமைப்பு குழுவினர் அனைவருக்கும்,

இவ்விழாவானது சிறப்பாக நடைபெறுவதற்கு எம்மோடு நின்று அயராது உழைத்த அலுவலக உத்தியோகத்தர்கள், பிரதேச கலாச்சார பேரவை உறுப்பினர்கள், அனைவருக்கம் இதய பூர்வமான நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி.நகுலநாயகி விக்னேஸ்வரன்
கலாசார உத்தியோகத்தர்/ செயலாளர், கலாசாரப் பேரவை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2009 இல் காரைதீவு பிரதேச செயலக உத்தியோகத்தர்கள்.

| தொ.இல | பெயர் | பதவி |
|---|---|---|
| 01 | திரு.எஸ்.இராமகிருஷ்ணன் | பிரதேசசெயலாளர் |
| 02 | திரு.எஸ்.ஜெகராஜன் | உதவி பிரதேசசெயலாளர் |
| 03 | திரு.எம்.அரசரெத்தினம் | கணக்காளர் |
| 04 | திருமதி.கலாமணிதேவி பாலகிருஷ்ணன் | நிருவாக உத்தியோகத்தர் |
| 05 | திரு.இ.தவக்குமார் | பதவி நிலை உதவியாளர் |
| 06 | திருமதி.கமலாம்பிகை சச்சிதானந்தன் | பிரதமபொதுமுகாமைத்துவஉதவியாளர் |
| 07 | செல்வி.கே.சாரதாதேவி | பொது முகாமைத்துவ உதவியாளர் |
| 08 | திரு.எம்.ரி.எம்.கலீல் | மேலதிக மாவட்ட பதிவாளர் |
| 09 | திருமதி.சந்திரகலா சிவமகேஸ்வரன் | பொது முகாமைத்துவ உதவியாளர் |
| 10 | திரு.எஸ்.மயில்வாகனம் | பொது முகாமைத்துவ உதவியாளர் |
| 11 | திரு.திருமதி.கணேசமூர்த்தி | பொது முகாமைத்துவ உதவியாளர் |
| 12 | திருமதி.ஜெயதேவி ஜீவராஜ் | பொது முகாமைத்துவ உதவியாளர் |
| 13 | திருமதி.புஸ்பாம்பிகை விவேகானந்தம் | பொது முகாமைத்துவ உதவியாளர் |
| 14 | திருமதி.அகிலா விஜயகுமார் | பொது முகாமைத்துவ உதவியாளர் |
| 15 | திருமதி.விசாலாட்சி புலேந்திரன் | பொது முகாமைத்துவ உதவியாளர் |
| 16 | திருமதி.சத்தியவதி மனோகரன் | பொது முகாமைத்துவ உதவியாளர் |
| 17 | திரு.எ.எ.சி.எம்.நிசாம் | பொது முகாமைத்துவ உதவியாளர் |
| 18 | திருமதி.கார்த்திகேஸ்வரி தவராஜா | பொது முகாமைத்துவ உதவியாளர் |
| 19 | திருமதி இராஜநந்தினி உதயநாதன் | பொது முகாமைத்துவ உதவியாளர் |
| 20 | திருமதி.தேவகௌரி ரவீந்திரன் | பொது முகாமைத்துவ உதவியாளர் |
| 21 | திருமதி.ஜெயந்தி நோயல் | பொது முகாமைத்துவ உதவியாளர் |
| 22 | திரு.எம்.வரதராஜன் | பொது முகாமைத்துவ உதவியாளர் |
| 23 | திருமதி.யோகராணி நவயுகன் | பொது முகாமைத்துவ உதவியாளர் |
| 24 | திருமதி.கே.ராணி | பொது முகாமைத்துவ உதவியாளர் |
| 25 | திருமதி.சத்தியவதி சாந்தலிங்கம் | பொது முகாமைத்துவ உதவியாளர் |
| 26 | திருமதி.விஜிதா தச்சிதானந்தன் | பொது முகாமைத்துவ உதவியாளர் |
| 27 | திருமதி.மெடோனா சஜீவன் | பொது முகாமைத்துவ உதவியாளர் |
| 28 | திருமதி.இந்துமதி உமாசங்கர் | பொது முகாமைத்துவ உதவியாளர் |
| 29 | திரு.ஜெ.ஜெயசுந்தர் | பொது முகாமைத்துவ உதவியாளர் |
| 30 | திரு.வி.அரவிந்தன் | பொது முகாமைத்துவ உதவியாளர் |
| 31 | திருமதி.கேமலதா வித்தியானந்தம் | கணனி தரவுப் பதிவினர் |
| 32 | திருமதி.எம்.எஸ் அஜ்மியா | பொது முகாமைத்துவ உதவியாளர் |
| 33 | செல்வி.எ.எல்.யுசம்கனா | பொது முகாமைத்துவ உதவியாளர் |
| 34 | திரு.என்.நடராஜா | கே.கே.எஸ் |
| 35 | திரு.கே.சந்தணம் | காவலாளி |
| 36 | திரு.வி.இராஜதீபன் | கே.கே.எஸ் |
| 37 | திரு.எஸ்.ரவீந்திரன் | கே.கே.எஸ் |
| 38 | திரு.என்.சதானந்தன் | காவலாளி |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிராம சேவை உத்தியோகத்தர்கள்

| தொ.இல | பெயர் | பதவி |
|---|---|---|
| 39 | திருமதி.கி.எஸ்தராணி சிறிகாந்தன் | கிராமசேவை உத்தியோகத்தர் |
| 40 | திரு.எம்.பாக்கியராஜா | கிராமசேவை உத்தியோகத்தர் |
| 41 | திரு.ரி.உருத்திரன் | கிராமசேவை உத்தியோகத்தர் |
| 42 | திரு.எஸ்.சிவேஸ்வரன் | கிராமசேவை உத்தியோகத்தர் |
| 43 | திரு.எஸ்.ஜெயசுந்தரம் | கிராமசேவை உத்தியோகத்தர் |
| 44 | திரு.எஸ்.புவனேஸ்வரன் | கிராமசேவை உத்தியோகத்தர் |
| 45 | திரு.எம்.உதயசூரியன் | கிராமசேவை உத்தியோகத்தர் |
| 46 | திரு.ஜ.எம்.மன்சூர் | கிராமசேவை உத்தியோகத்தர் |
| 47 | திரு.எ.அப்துல் நஜீம் | கிராமசேவை உத்தியோகத்தர் |
| 48 | திரு.எ.எம்.அலியார் | கிராமசேவை உத்தியோகத்தர் |
| 49 | திரு.ரி.இராஜசேகர் | கிராமசேவை உத்தியோகத்தர் |
| 50 | திரு.எல்.பகீரதன் | கிராமசேவை உத்தியோகத்தர் |
| 51 | திரு.ஜீ.கேதீஸ்வரன் | கிராமசேவை உத்தியோகத்தர் |

வெளிக்கள உத்தியோகத்தர்

| தொ.இல | பெயர் | பதவி |
|---|---|---|
| 52 | திரு.எம்.ஜ.எம்.முகர்றப் | கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| 53 | திரு.ரி.சிவநேசன் | நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் |
| 54 | திரு.எம்.கலந்தர் | சமூக சேவை உத்தியோகத்தர் |
| 55 | திரு.ரி.அன்சார் | சமூக சேவை உத்தியோகத்தர் |
| 56 | திருமதி.நகுலநாயகி விக்னேஸ்வரன் | கலாச்சார உத்தியோகத்தர் |
| 57 | திரு.எம்.ரி.நயீம் | அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| 58 | திருமதி.குமுதினி சிவநாதன் | அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| 59 | திரு.ரி.சிவகுமார் | அபிவிருத்தி உதவியாளர் |
| 60 | திரு.ஏச்.எம்.எ.றகீம் | அபிவிருத்தி உதவியாளர் |
| 61 | திரு.சி.எம்.எம்.றிஸ்லீன் | விளையாட்டு உத்தியோகத்தர் |
| 62 | திருமதி.மைதிலி தவராஜா | தையல் போதனாசிரியர் |
| 63 | திரு.ஆர்.சுந்தரலிங்கம் | தொழில் நுட்ப உத்தியோகத்தர் |
| 64 | திருமதி.அனுசியா உமாசுதன் | தொழில் நுட்ப உத்தியோகத்தர் |
| 65 | திரு.ஆர்.ரமேஸ் | குடியேற்ற உத்தியோகத்தர் |
| 66 | திரு.எம்.எ.முகம்மட் சீத் | குடியேற்ற உத்தியோகத்தர் |
| 67 | திருமதி.தேவலோஜினி கவிதரன் | வெளிக்கள போதனாசிரியர் |
| 68 | திரு.எவ்.எம்.நதீர் | நிகழ்ச்சி திட்ட உதவியாளர் |
| 69 | திருமதி.புஸ்பராஜினி செவ்வேட் குமரன் | சுற்றாடல் உத்தியோகத்தர் |
| 70 | திரு.எம்.வரதராஜன் | புள்ளி விபர உத்தியோகத்தர் |
| 71 | திரு.எ.தால்சறுன் | அபிவிருத்தி உதவியாளர் |
| 72 | திருமதி.கீதாஞ்சலி கணேஸ் | நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் |
| 73 | திரு.கே.சுதானந்தன் | நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் |
| 74 | திருமதி.அனிசா மஜீத் | நிவாரண சகோதரி |
| 75 | திரு.எஸ்.அமிர்தலிங்கம் | நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் |
| 76 | திரு.ஜ.எல்.கியாஸ் | விஞ்ஞான தொ.நு.உத்தியோகத்தர் |
| 77 | திரு.எஸ்.நடேசகுமார் | இளைஞர் சேவை உத்தியோகத்தர் |
| 78 | திருமதி.கோமளச்செல்வி குகன் | நெசவு போதனாசிரியை |
| 79 | திரு.எம்.கோகுலராஜ் | விவசாய உத்தியோகத்தர் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூர்த்தி உத்தியோகத்தர்

| தொ.இல | பெயர் | பதவி |
|---|---|---|
| 80 | திரு.வி.சிறிநாதன் | சமூர்த்தி உத்தியோகத்தர் |
| 81 | திரு.வி.தாஹீர் | சமூர்த்தி முகாமையாளர் |
| 83 | திரு.வி.சுதர்சன் | சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| 84 | திரு.கே.இராஜேஸ்வரன் | சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| 85 | திரு.எம்.எஸ்.கலீல் | சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| 86 | செல்வி.இஸ்.தமயந்தி | சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| 87 | திரு.எ.திருச்செல்வம் | சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| 88 | திரு.ஏம்.ஐ.எம்.அமீர் அலீ | சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| 89 | திரு.கே.மஜுடீன் | சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| 90 | திரு.ஏம்.ஐ.எம்.பாயீஸ் | சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| 91 | திருமதி.செல்வரதி அருள்வரதன் | சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| 92 | திருமதி.சந்திரகுமாரி | சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| 93 | திருமதி.மலர்விழி தயாபரன் | சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| 94 | திருமதி.சஹீதா | சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| 95 | திரு.எம்.ஐ.எம்.ரமீஸ் | சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| 96 | திருமதி.மரிஸ் பானா | சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| 97 | திரு.எ.எம்.பௌமி | சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| 98 | திருமதி.யோகராணி ஜெயராஜா | சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| 99 | திருமதி.ஐ.சபாபதி | சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| 100 | திருமதி.ஜெயந்தினி பிரபாகரன் | சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| 101 | திருமதி.சிவகௌரி கண்ணதாசன் | சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| 102 | திருமதி.ஜெயராணி சீதரன் | சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| 103 | திருமதி.நர்நிதா லோகேஸ்வரன் | சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| 104 | திருமதி.இந்திரா செல்வநாயகம் | சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| 105 | திருமதி.ஜெயவதனி | சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| 106 | திரு.எஸ்.நமச்சிவாயம் | சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| 107 | திரு.எஸ்.நாகேந்திரன் | சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| 108 | திரு.ஏம்.எம்.உவைஸ் | சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| 109 | திரு.இ.யோகராஜன் | சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| 110 | திருமதி.ஜெயந்திமலர் ராகவன் | சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| 111 | திருமதி.எ.சிவசக்தி | சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| 112 | செல்வி.எம்.மனோன்மணி | சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| 113 | திரு.இ.பாக்கியநாதன் | சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| 114 | திரு.எம்.உதயகுமார் | சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| 115 | திரு.யு.எல்.எம்.ஹமீட் | சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| 116 | திரு.ஏ.எல்.எம்.பைறுஸ் | சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| 117 | திரு.வி.மோகனதாஸ் | சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| 118 | திருமதி.சுகந்தினி திருக்குமார் | சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| 119 | திரு.யூ.எல்.எம்.அமீன் | சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் |

சாரதிகள்

| தொ.இல | பெயர் | பதவி |
|---|---|---|
| 120 | திரு.கே.பேரின்பராஜா | சாரதி |
| 121 | திரு.ஏஸ்.அமிர்தலிங்கம் | சாரதி |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அஸ்கி எம்போரியம்

## பிரதான வீதி, சாய்ந்தமருது.

உங்களுக்குத் தேவையான திருமண பட்டுச் சேலைகள், பாம்பே சல்வார் சூட், சேட், டீசேட், சாரம், லாஷாசோலி, பிளவ்ஸ் துணிகள் மற்றும் அனைத்துலக ஆடைகளையும், மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ள நம்பிக்கையான ஸ்தாபனம்.

நன்றி மீண்டும் வருக.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# SEDO Sri Lanka

## Social Economic Development Organization

**Regd. No: DS/KT/12/SS/V/2006/16**

தூரநோக்கு [*Vision*] : அமைப்பின் சேவைப்பரப்பெல்லைக்குட்பட்ட மக்களின் சமூக, பொருளாதார வலுப்படுத்தல் ஊடாக நிலைத்திருக்கக் கூடிய அபிவிருத்தி

தற்போது நிறுவன அங்கத்துவம் : எமது நிறுவனத்தில் தற்போது 400 அங்கத்தவர்கள் உள்ளார்கள்

சேவைகள் :

1. **சேமிப்பத்திட்டம்**

- கட்டாய சேமிப்புத் திட்டம்.
- சாதாரண சேமிப்புத் திட்டம்.
- சிறுவர் அபிவிருத்தி சேமிப்புத் திட்டம்.

2. **கடன் திட்டம்**

- அவரசக் கடன்.
- சாதாரண கடன்( பயனாளி தனது எந்த நோக்கத்திற்கும் பயன்படுத்தலாம்)
- சிறுவர் அபிவிருத்திக் கடன் (பிள்ளைகளின் கல்வி மற்றும் ஏனையதேவைகளுக்கும் பயன்படுத்திக்கொள்ளலாம்.)
- சுயதொழில் முயற்ச்சிகான கடன் (இது கண்டிப்பாக தனது சுயதொழில் முயச்சிக்கு மட்டும் பயன்படுத்தலாம், கடன் உச்ச எல்லை வரையறுக்கப்படவில்லை)

*"வழங்கும் கடன் ஆண்டுக்கு 18% வட்டியில் நம்பிக்கை நாணயத்தை பிணையாக கொண்டே எமது நிறுவனத்தின் கடன் சேவை நடைபெறுகின்றது"*

3. **அறிவகம் - Nanasala**

Internet Browsing

- Certificate in Computer Application (CCA) – 04 மாதப் பாடநெறி

**➢காரைதீவு கலாச்சார பேரவையும், காரைதீவு பிரதேச செயலகமும் இணைந்து நடாத்தும் இக்கலாச்சார விழாவிற்கு எமது நிறுவனத்தினால் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.**

Internet & E- Mail Application - 01 மாதப் பாடநெறி

**தொடர்புகளுக்கு**

இணைப்பாளர்,
(திரு.ம.உதயசூரியன்)
**SEDO – Karaitivu,**
தேசிகர் வீதி,
காரைதீவு – 12.
*Tel* : 0772906199
**E mail : sooriiyaa@gmail.com**

**Web : http://sedo.karaitivu.org**
**E mail : sdsedo@gmail.com**

*"For Sustainable Social Economic Development"*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# HNB

# HNB சிறுவர் சேமிப்புத் திட்டம்.

சிறுவர்களிடையே சேமிப்பு பழக்கத்தை ஊக்குவிக்கவும் எதிர்கால சந்ததியினரை சேமிப்பு பாதையில் இட்டுச் செல்லவும்,சின்னஞ் சிறாருக்கு நல்வழி காட்ட இதோ **Hatton National Bank** அறிமுகப்படுத்தும்

- Singiithi Kiriketiyo
- Singithi Lama
- HNB Teen

**HNB Teen :**

13-18 வயது சிறுவர்களுக்கு என ஆரம்பிக்கப்பட்ட HNB இன் சிறுவர் சேமிப்புக்கணக்கினை இன்றே நீங்கள் ஆரம்பிக்கலாம்.

## இதற்கு நீங்கள் செய்ய வேண்டியது..........

- உங்கள் வயது 13-18 இற்கு இடையில் இருக்க வேண்டும்.
- ஆரம்ப தொகையை 500/= வைப்பில் இட்டு 10,000/= மீகுதியாக பேண வேண்டும்.
- ஏற்கனவே HNB Singithi வைத்திருப்போரும் தகுதி உடையவர்.
- பாடசாலைகள் மூலமாகவும் நீங்கள் இணைந்து கொள்ளலாம்.

## நன்மைகளும் பல, அவற்றில் சில .....

சாதாரண சேமிப்பு கணக்கிற்குரிய வட்டி வீதத்தை விட 3% அதிகமாகும்.

HNB Pathum Vimana மகத்தான சீட்டிலுப்பில் வெற்றி பெறும் வாய்ப்பு.

- இலவச Loyality Card பெற்று கொள்ளும் வசதி
- இலவச இணைய வங்கிச்சேவை (Internet Banking)
- இலவச கைத்தொலை பேசி இணைப்பு வசதி
- இலவச Teen Bag/Pen Drive பெற்று கொள்ளும் வசதி
- இலவச Cash Line Card பெறும் வசதி
- இலவச "HOT SHOT" Credit Card பெறும் வசதி






**மேலதிக விபரங்களுக்கு HNB Kalmunai கிளையை நாடவும் இல:24, பொலிஸ் நிலைய வீதி, கல்முனை.**


**உங்கள் முன்னேற்றத்தின் பங்காளி**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2009 கலாசார விழாவின் பதிவுகள்
## (20.08.2009 அன்று)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Best Compliments

# MUBARAK Textiles

# முபாறக் டெக்ஸ்டைல்ஸ்

The world of Tommorrow



MUBARAK TEXTILES




*Main Street,*
*Sainthamaruthu,*
*Tel:067-2229194*
*Fax:067-2222915*
*E-mail: mubaraktex@hotmail.com*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## VISION

**The Vision of the HDO will be, Establishment of socially Just equitable and peace civil society through sustainable development**

## MISSION

**HDO Seeks to fulfill its mission through, people centered participatory sustainable development with the concern of**

**Environment**
**Human Rights**
**Gender Balance**
**For a social Change**

HDO

**HUMAN DEVELOPMENT ORGANIZATION**
**02, PILLAYAR KOVIL ROAD**
**KARAITIVU, SRI LANKA. 067 2220142,**
**hdo.srilanka @ gmail.com**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிதுஸ் அச்சகம்-காரைதீவு
077 6051793